# உயர் கணக்கியல்

## (இரண்டாம் பகுதி)

(இரண்டாம் புத்தகம்)

[ADVANCED ACCOUNTANCY - VOL. II]

(BOOK II)

அ. குமாரராசு

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவ

# உயர் கணக்கியல்

## (இரண்டாம் பகுதி — இரண்டாம் புத்தகம்)

அ. குமாரராசு

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—July, 1975

T.N.T.B.S. (C.P.) No. 636

© Government of Tamilnadu

# ADVANCED ACCOUNTANCY—Part II (Book II)

A. KUMARA RAJ

Price Rs. 13-35

Published by the Tamilnadu Text-book Society under the Centrally sponsored scheme of production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture) New Delhi.

*Printed by*
Nathan & Company,
Velachery, Main Road,
Madras—600042

# அணிந்துரை

## திரு. இரா. நெடுஞ்செழியன்

*(தமிழகக் கல்வி அமைச்சர்)*

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினைந் தாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பட்டப் படிப்பு வகுப்புவரை மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தை யும் தமிழிலேயே கற்று வருகின்றனர். 1969ஆம் ஆண்டிலிருந்து அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய் துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளில் தொண்டு செய்வோர் இதற்கென்த் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ்வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்களுக்குத் தமிழிலேயே பயிற்று விப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக் கழகமும், சென்னைப் பல்கலைக் கழகமும் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், மெய்ப் பொருளியல், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், சட்டம் ஆகிய எல்லாத் துறைகளிலும் மூல நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான **'உயர் கணக்கியல்' (இரண்டாம் பகுதி— இரண்டாம் புத்தகம்)** என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் **636**ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான **35** நூல்களையும் சேர்த்து இதுவரை **671** நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக் கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும், கலையியற் பாடங்களை யும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங்களை யும் பயிலுகின்ற மாணவர்கள், அவற்றைத் தமிழில் பயிலவேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளர வேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளி தாக, விரைவாக வளரவேண்டும் என்பதுதான். 'எதிலும் தமிழ், எங்கும் தமிழ்' என்ற குறிக்கோளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு, தமிழகத்து ஆசிரியப் பெருமக்களையும் மாணவர்களை யும் சார்ந்ததாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம்கலந்த நன்றி உரியதாகுக.

**இரா. நெடுஞ்செழியன்**

# பொருளடக்கம்


பக்கம்

**10. ஒதுக்கும் காப்பும் ... 1**

ஒதுக்கு அல்லது ஏற்பாடு—ஐயக் கடன் ஒதுக்கு —கடனீந்தோர் மீதான தள்ளுபடி ஒதுக்கு— பொதுக்காப்பு — முதல் காப்பு — மேம்பாட்டுத் தள்ளுபடிக் காப்பு — நிலைச்சொத்துகள் மறு மதிப்பீட்டுக் காப்பு — நிலைச்சொத்துகள் மறு அமர்த்திட்டுக் காப்பு — முதல் மீட்புக் காப்புக் கணக்கு — வருவாய்க் காப்பு — பங்காதாயச் சமன்செய் காப்பு — கடனீட்டுப் பத்திர மீட்புக் காப்பு—முதலீடுகள் மதிப்பு ஏற்ற இறக்கக் காப்பு அல்லது முதலீடுகள் தேய்மானக் காப்பு — மறை காப்பு — பங்காதாயம் — இலாபத்திலிருந்து பங்காதாயம் வழங்கல்—தேய்மானம்—மேம்பாட்டுத் தள்ளுபடி — கடந்தகால நட்டம் — முதலின இலாபம்—முதலிலிருந்து பங்காதாயம் செலுத்தல் —முதல் தொகையிலிருந்து வட்டி செலுத்தல்— பங்காதாயம் வழங்குவதற்கான விதிமுறைகள்— இடைக்காலப் பங்காதாயம் — முன்னுரிமைப் பங்குகள் மீது பங்காதாயம் — உரிமைகோரா்ப் பங்காதாயம் — இலாபப் பகிர்வைப் பதிதல் — பங்காதாயம் பற்றிய குறிப்பேட்டுப் பதிவுகள் — பங்குச் சான்றுச்சீட்டுப் பங்காதாயம் — ரொக்க மேலூதியம் — மேலூதியப் பங்குகள் — பின்னப் பங்குகள்—வினாக்கள்—பயிற்சிகள்.

**11. வாணிக நற்பெயரையும் பங்குகளையும் மதிப்பிடல் ... 77**

வாணிக நற்பெயர் — இலக்கணம் — அதனை ஏற்படுத்தும் சூழ்நிலைகள் — மதிப்பிடும் முறை —

பக்கம்

விழுக்காட்டு இலாபம்—எடையேறிய விழுக்காடு—மிகை இலாப முறை—வருவாய் இயல்பு விகிதம்—இயல்பு விகிதத்தைக் கணக்கிடல்—பயன்படுத்தியுள்ள முதல்—இயல்பு இலாபம்—மிகை இலாபம்—மிகை இலாபத்தை வாங்கும் முறை—மிகை இலாபத்தை முதற்படுத்துகை—பங்குகளை மதிப்பிடல்—நிகர சொத்து மதிப்பு முறை—வருவாய் முறை—ஈட்டுத்திறன் முறை—பயன்படுத்திய முதல்—ஈட்டிய இலாபம்—வினாக்கள்—பயிற்சி.

12. முதல் சீரமைப்பும் அக மறுஅமைப்புத் திட்டமும் ... 118

பங்குமுதலை மாற்றுதல்—குறைத்தல், கூடுதலாக்கல், தொகுத்தல், பகுத்தல்—காப்பு முதல் அல்லது காப்புப் பொறுப்பு—முதலைக் குறைத்தல்—முதல் குறைப்பில் பின்பற்றவேண்டிய முறை—முதல் குறைப்புத் திட்டம்—முதல் குறைப்புத் திட்டத்தை வகுத்தல்—வினாக்கள்—பயிற்சிகள்.

13. ஒன்றிணைப்பு, ஈர்ப்பமைப்பு, புற மறுவமைப்பு ... 220

ஒன்றிணைப்பு—வாணிகப் பொறுப்புகள்—சேர்த்துவைக்கப்பட்ட இலாபம்—காப்பீட்டு நிதி—விபத்து நிதி—தொழிலர் நட்ட ஈட்டு நிதி—கொள்முதல் மறுபயன்—நிகர சொத்து முறை—பின்னப் பங்குகள்—பதிவுகள்—கம்பெனிகட்கிடையே கொடுக்க வேண்டியவை—கம்பெனிகட்கிடையே பங்கு வைத்திருத்தல்—புற மறு அமைப்பு முறை—புற மறு அமைப்புத் திட்டம்—வினாக்கள்—பயிற்சிகள்.

14. இரட்டைக் கணக்குமுறை ... 404

விளக்கம்—வேறுபாடுகள்—மின் வழங்கும் கம்பெனிகள்—இரட்டைக் கணக்கு முறையின் பயனும் குறைபாடுகளும்—பலவகைப் படிவங்கள், அறிக்கைகள்—வினாக்கள்—பயிற்சிகள்.

பக்கம்

**15. மேலாண்மைக் கணக்கியலும் பொறிமயக் கணக்கியலும்** ... 505

மேலாண்மைக் கணக்கியல்—இலக்கணம், விளக்கம்—நோக்கங்கள்—பயன்கள் — மேலாண்மைக் கணக்கியலின் பணிகள்—பல்வகை வரவு-செலவுத் திட்டங்கள்—பொறிமயக் கணக்கியலின் நோக்கங்கள்—பயன்கள்—குறைபாடுகள்—பொறிமயக் கணக்கியலுக்கு ஏற்ற பணி—வினுக்கள்.

**மேற்கோள் நூற்பட்டியல்** ... 531

**கலைச்சொற்கள்** ... 532

# உயர் கணக்கியல் - II

(இரண்டாம் புத்தகம்)

# 10. ஒதுக்கும் காப்பும்
## (Provisions and Reserves)

பங்காதாயம் வழங்கத் தக்க இலாபத்தை ஒதுக்கியிருப்பினும், தேய்மானம், வராக்கடன் போன்ற குறிப்பிட்ட நோக்கங்கட்காக இலாபத்தை ஒதுக்கியிருப்பினும் 'காப்பு' (Reserve) என்றே அழைக்கப்பட்டு வந்தது. ஆனால், 1956ஆம் ஆண்டைய கம்பெனிச் சட்டம் இவ் விரண்டிற்குமுள்ள வேறுபாட்டினைத் தெளிவாக்கியிருக்கிறது.

**ஒதுக்கு அல்லது ஏற்பாடு** (Provision) : சொத்தொன்றின் மதிப்புக் குறைவதன்பொருட்டோ, புதுப்பித்தலுக்காகவோ, தேய்மானத்திற்கு வகைசெய்யவோ நீக்கப்படும் தொகையை அல்லது ஒதுக்கி வைக்கப்படும் தொகையை 'ஒதுக்கு' அல்லது 'ஏற்பாடு' என்னும் சொல் குறிக்கும். அதனுடன், துல்லியமாகக் கணக்கிட முடியாத, ஆனால், உணரக்கூடிய பொறுப்புக்காகக் கணக்கிடப்படும் தொகையையும் இச் சொல் உணர்த்தும். ஏற்கப்பட்ட செலவுக்கான பொறுப்பையும், நிகழ்வடை பொறுப்புகளையும் (contingent liability), வழக்கிலுள்ள பொறுப்புகளையும் 'பொறுப்பு' (liability) என்னும் சொல் குறிக்கும். எனவே, பின்னர் நிகழும் நட்டத்திற்காகவோ, துல்லியமாகக் கணக்கிடக் கூடிய பொறுப்புக்காகவோ ஒதுக்கி வைக்கப்படும் தொகையை இச் சொல் குறிக்காது என்பதை முதலில் உணர வேண்டும். இருக்கும் பொறுப்பின் அளவைச் செவ்வனே அறிய முடியுமெனில், அதனைப் பொறுப்பாகவே கொள்ளவேண்டுமேயன்றி, ஒதுக்காகக் கருதக்கூடாது.

இவ்வகையாக ஏற்படுத்தப்படும் ஒதுக்கு, 'குறிப்பிட்ட காப்பு' (Specific Reserve) என்றும் அழைக்கப்படுவதுண்டு. இலாபம் ஏற்பட்டாலும், இல்லாவிட்டாலும் இதற்குத் தொகை

ஒதுக்கப்படவேண்டும். நட்டம் ஏற்பட்ட ஆண்டிற்குங்கூட இதற்கு வகை செய்யவேண்டும்.

மேற்சொன்னவற்றிலிருந்து நாம் தெரிந்து கொள்வது : **ஒதுக்கு என்பது இலாபம் வழங்கப்படுமுன் ஏற்படுத்தப்படுவது.** கீழ்க்கண்டவை போன்ற நோக்கத்திற்காக இது ஏற்படுத்தப் படுகின்றது.

அ. தெரிந்த ஒரு நட்டத்திற்கு வகைசெய்ய. எடுத்துக் காட்டு : தேய்மானம், பழுதுபார்க்கும் செலவு, புதுப்பிக்கும் செலவு.

ஆ. எதிர்பார்க்கின்ற ஒரு நிகழ்வடை பொறுப்பிற்கு வகைசெய்ய. எடுத்துக்காட்டு : ஐயக்கடன், தள்ளுபடிக் காப்பு, வழக்கிலுள்ள பொறுப்புப் போன்றவற்றிற்கு வகைசெய்தல்.

இ. முன்னரே ஏற்ற செலவினங்கள் மீது ஏற்கவேண்டிய பொறுப்பு. எடுத்துக்காட்டு : கொடுபடவேண்டிய ஊதியம், கொடுபடவேண்டிய கழிவு, வாடகை முதலியவை.

இக் குறிப்பிட்ட காப்பு அல்லது ஒதுக்கு என்பது இலாபமன்று. எனவே, இதனைப் பங்குநர்க்கு வழங்கப் பயன்படுத்திக் கொள்ளமுடியாது. ஆனால், தேவையான தொகைக்கும் அதிகமாக இக் காப்புகளில் ஒதுக்கி வைக்கப்படுமெனில், இவ்வாறு அதிகமாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள தொகையைப் பங்காதாயம் வழங்கப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

ஒதுக்கிற்கும் காப்பிற்குமுள்ள வேறுபாட்டை இப்போது காண்போம்.

1. தெரிந்த ஒரு பொறுப்பினை மீட்பதற்காக அல்லது கம்பெனியின் நிதி வசதியைப் பெருக்கிக் கொள்வதற்காக அல்லது பங்காதாயத்தைச் சமப்படுத்துவதற்காக ஒதுக்கப்படும் தொகை காப்பாகும். குறிப்பிட்ட நிகழ்வடை பொறுப்பிற்கு அல்லது எதிர்பார்க்கும் நட்டத்திற்கு வகைசெய்யும் நோக்குடன் ஒதுக்கப் படும் தொகை ஒதுக்கு எனப்படும்.

2. **இலாப—நட்டப் பகிர்வுக் கணக்கில்** பற்று வைத்துக் காப்பு ஏற்படுத்தப்படுகிறது. **இலாப—நட்டக் கணக்கில்** பற்று வைத்து ஒதுக்கு ஏற்படுத்தப்படுகிறது.

3. காப்புக் கணக்குக் காட்டும் இருப்பினைப் பங்குநர்க்கு வழங்கமுடியும். ஆனால், ஒதுக்குக் கணக்கை இவ்வாறு பயன் படுத்திக்கொள்ள முடியாது.

4. காப்பு, பொதுவாக இருப்புநிலைக் குறிப்பின் பொறுப்புப் பகுதியில் காண்பிக்கப்படுகிறது. ஆனால், ஒதுக்குப் பொதுவாக இருப்புநிலைக் குறிப்பில் சொத்துகள் பகுதியில் குறிப்பிட்ட சொத்தினின்றும் கழித்துக் காண்பிக்கப்படுகிறது.

5. காப்பினை ஏற்படுத்துவது கட்டாயமன்று (கம் பெனியின் செயல்முறை விதிகள் குறிப்பிட்டிருப்பினும் அல்லது கடனீட்டுப் பத்திர வெளியீட்டு நிபந்தனைகள் கடனீட்டுப் பத்திர மீட்புநிதி ஏற்படுத்தப்படும் என்று குறிப்பிட்டிருப்பினும், கட்டாய மாகக் காப்பு ஏற்படுத்தவேண்டும்). ஆனால், ஒதுக்குக் கட்டாய மாக எப்போதும் ஏற்படுத்தியாக வேண்டும்.

6. காப்பிற்கு எடுத்துச்செல்ல வேண்டியிருக்கும் தொகை பொதுவாக இலாபத்தைப் பொறுத்திருக்கிறது. இலாபம் ஏற் படவில்லையெனில், காப்பு ஏற்படுத்த வேண்டியதில்லை. ஆனால், ஒதுக்கு ஏற்படுத்தத் தேவையான தொகை இலாபத்தைப் பொறுத்ததன்று. நட்டம் ஏற்படினும், இதற்காகத் தொகை ஒதுக்கப்படவேண்டும்.

இப்போது சில ஒதுக்குக் கணக்குகளையும், காப்புக் கணக்கு களையும் காண்போம் :

## ஐயக்கடன் ஒதுக்கு (Provision for Doubtful Debts)

கடனாளிகள் தரவேண்டிய தொகையைத் தராமற்போனால் ஏற்படும் நட்டத்தை ஈடுகட்டச் செய்யும் ஏற்பாடு 'ஐயக்கடன் ஒதுக்கு' எனப்படும். இவ்வாறு வசூலாகாமல் போகும் தொகைக்கு ஒவ்வோராண்டும் வகை செய்யவில்லையெனில், இலாப-நட்டக் கணக்கும், இருப்புநிலைக் குறிப்பும் உண்மை நிலையை உணர்த் தாது. கடந்தகாலப் பட்டறிவின் பயனாக, வராக்கடன் தொகை எவ்வளவிருக்கலாம் என்பதை ஆய்ந்து, தொகையை ஒதுக்க வேண்டும். பின்னர், வராக்கடன் ஏற்படும்போழ்து இவ் வொதுக்குக் கணக்கில் சரிக்கட்டிக்கொள்ளவேண்டும்.

ஐயக்கடன் எனக் கருதும் தொகையினும் அதிகமாக இதற்கு ஒதுக்கப்படுமாயின், தேவைக்கதிகமாக ஒதுக்கப்படும் தொகையை

'ஐயக்கடன் காப்பு' எனலாம். இக் காப்பினை இருப்புநிலைக் குறிப்பில் பொறுப்புகள் பகுதியில் 'காப்பும் மிகுதியும்' என்னும் தலைப்பில் காட்டவேண்டும்.

தேய்மானத்திற்காகவோ அல்லது வேறு பொறுப்புக் காகவோ ஒதுக்கும் தொகை தேவையான அளவிற்கும் கூடுதலாக இருப்பதாக இயக்குநர்கள் கருதுவராயின், அக் கூடுதல் ஒதுக்குத் தொகையைக் காப்பாகத்தான் இருப்புநிலைக் குறிப்பில் காட்ட வேண்டும் என்று கம்பெனிச் சட்டத்தின் இணைப்பு VI பகுதி III தெளிவாகக் குறிப்பிடுகிறது. கூடுதல் தேய்மானம் ஒதுக்குவதன் மூலமாகவும், பொறுப்புகளை மிகவும் உயர்த்திக் காட்டுவது மூலமாகவும் மறை காப்பு (Secret Reserve) ஏற்படுத்துவதைத் தடுப்பதே சட்டத்தின் நோக்கமாகும்.

**கடனீந்தோர் மீதான தள்ளுபடி ஒதுக்கு** (Provision for Discount on Creditors)

கடனாளிகள் குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் தொகை செலுத்திவிடின், தள்ளுபடி அளிக்கப்படுவது வழக்கம் என்று கண்டிருக்கிறோம். எனவே, ஆண்டுக் கணக்குகளை முடிக்கும் பொழுது, கடனாளிகள் தொகையை அவ்வாறே காட்டக்கூடாது. அவர்களிடமிருந்து வசூலாகக் கூடிய தொகையைத்தான் குறிப் பிடவேண்டும். இவ்வாறு செய்யவில்லையெனில், இருப்புநிலைக் குறிப்பு உண்மை நிலையை உணர்த்தாமற்போகும். எனவே, அளிக்கவிருக்கும் தள்ளுபடித் தொகையைக் கடனாளிகள் தொகை யில் கழித்துக் காட்டவேண்டும் என்பது புலனாகும்.

கடனாளிகள் மீது கணக்கிட வேண்டிய தள்ளுபடித் தொகை, ஐயக்கடன் ஒதுக்குக் கழிக்கப்பெற்ற பின்னுள்ள தொகையில்தான் கணக்கிட வேண்டுமென்பதை நாம் முன்னரே அறிவோம்.

இவ்வாறே, கடனீந்தோர் மீதும் தள்ளுபடி கணக்கிடலாம். கடனாளிகள் தொகையில் தள்ளுபடிக்கான தொகை ஒதுக்கப் பட்டால் மட்டுமே கடனீந்தோர் மீது தள்ளுபடிக்குத் தொகை ஒதுக்கலாம்.

**பொதுக்காப்பு** (General Reserve)

இருப்புநிலைப் பகிர்வுக்கணக்கில் பற்று வைத்து இது ஏற் படுத்தப்படுகின்றது. இவ்வாறு ஒதுக்கப்படும் தொகை தொழிலி லேயே பயன்படுத்தப்பட்டு வருமாயின், கம்பெனியின் பல்வகைச்

சொத்துகளில் அத் தொகை இணைந்திருக்கிறது என்பதை ஊகிக்கலாம். இது பொதுக் காப்பாகும். ஆனால், இவ்வாறு ஏற்படுத்தப்படும் காப்புத் தொகை கம்பெனிக்கு வெளியே முதலீடு செய்யப்படுமாயின், அது காப்புநிதி (Reserve Fund) என்று அழைக்கப்படுகிறது. காப்புத் தொகையானது விரைவில் பணமாக்கக் கூடிய சொத்துகளில் முதலீடு செய்யப்பட்டிருப்பின் மட்டுமே 'காப்பு நிதி' என்றழைக்கப்படவேண்டும் என்று இங்கிலாந்து நாட்டின் பட்டயக் கணக்காயர் நிறுவனம் (The Institute of Chartered Accountants of England) கூறியிருக்கின்றது. நமது கம்பெனிச் சட்டம் வகுத்துள்ள இருப்புநிலைக் குறிப்பிலும் இவ்வாறே விளக்கம் காணப்படுகிறது. குறிப்பிட்ட முதலீடுகளில் காப்பு ஈடுபடுத்தப்பட்டிருப்பின் மட்டுமே, 'நிதி' என்னும் சொல்லைக் காப்புடன் பயன்படுத்தவேண்டும் என்று இவ் விளக்கம் கூறுகிறது.

**முதல் காப்பு** (Capital Reserve)

முதல் காப்புப் பற்றிய இலக்கணங்கள் குறித்துக் கணக்காயர்கள் ஒருமித்த கருத்தினை கொண்டிருக்கவில்லை — 'பங்குநர்கட்குச் சட்டப்படி வழங்கமுடியா எக் காப்பும் முதல் காப்பாகும்' என்று கூறப்படுகிறது. ஆனால், இதனையே முழுவதும் சரியென ஒப்புக் கொள்வதற்கில்லை. காரணம், இத்தகைய காப்பையும் சில சூழ்நிலைகளில் பங்குநர்கட்கு வழங்கப் பயன்படுத்திக் கொள்ளலாம். முதல் காப்பும், பொதுக்காப்புப் போன்றதேதான். ஆனால், இது **பொதுவாகப்** பங்குநர்கட்கு வழங்கப்படுவதில்லை. இதனுடன் இருப்புநிலைப் பகிர்வுக் கணக்கில் பற்றுவைத்து இது ஏற்படுத்தப்படுவதில்லை. முதல் காப்புக் கீழ்க்கண்டவாறு ஏற்படுத்தப்படுகிறது:

1. நிலைச் சொத்து ஒன்றின் மதிப்பு உயர்ந்திருக்கும் போழ்து ஏட்டு மதிப்பிற்கும், உயர்ந்துள்ள மதிப்பிற்குமுள்ள வேறுபாட்டுத் தொகை முதல் காப்புக் கணக்கிற்கு எடுத்துச் செல்லப்படும் (இவ்வாறுதான் பிற சொத்துகளையும் மறுமதிப்பீடு செய்து, தேவையான சரிக்கட்டுதல் செய்யவேண்டும்).

2. அடக்க மதிப்பினும் கூடுதல் விலைக்கு நிலைச் சொத்தை விற்றிருப்பின், அவ் வாதாயத் தொகையை முதல்காப்புக் கணக்கிற்கு எடுத்துச் செல்லவேண்டும். இது வருவாய் அன்று. ஆதலால், இவ் வாதாயத்தை இலாப-நட்டக் கணக்கிற்கு எடுத்துச் செல்லக்கூடாது.

3. பங்கு அல்லது கடனீட்டுப் பத்திர வெளியீட்டின் போழ்து பெற்ற முனைமத் தொகை.

4. கடனீட்டுப் பத்திர மீட்பின்போழ்து அல்லது மாற்றத் தின்போழ்து ஏற்பட்ட ஆதாயம்.

5. கம்பெனி அமைப்புக்கு முன் ஏற்பட்ட ஆதாயம்.

6. ஒறுப்பிழப்புச் செய்யப்பட்ட (forfeited) பங்குகளை மீண்டும் வெளியிட்ட பின்னர் பங்கு ஒறுப்பிழப்புக் கணக்குக் காட்டும் வரவிருப்பு.

7. தொழில் ஒன்றை வாங்கும்பொழுது ஏற்படும் ஆதா யம் — கொள்முதல் மறுபயன் வாங்கிய சொத்துகளின் நிகர மதிப்பினும் குறைவாக இருப்பதால் ஏற்படும் ஆதாயம்.

8. கம்பெனிச் சட்டத்தின்படி, கம்பெனியின் முதல் குறைக்கப்படும்பொழுது, முதல் குறைப்புக் கணக்குக் காட்டும் இருப்பு.

9. சாதாரணமாகத் தொழில் நடத்துவதில் அல்லாமல் வேறு வகையில் ஏற்படும் அசாதாரண ஆதாயம்.

10. கம்பெனியின் செயல்முறை விதிகளின்படி, பங்குநர் களிடம் வழங்க முடியாத இலாபம்.

மேற்சொல்லப்பெற்ற ஆதாயங்கள் அனைத்தும் தொழில் நடத்துவதில் வழக்கமாக ஏற்படும் ஆதாயமன்று. முதலின (Capital) நட்டங்களைச் சரிக்கட்டிக்கொள்ள அவற்றைப் பயன் படுத்திக்கொள்ளலாம்; அல்லது கம்பெனியின் நிதிநிலையைச் சீராக்கிக்கொள்ளவும் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம். தொழிலிலேயே அத்தகைய ஆதாயங்கள் பயன்படுத்தப் பெறுமாயின், அவற்றை முதல்காப்புக் கணக்கிற்கும், அவ்வா றின்றி அவை தொழிலுக்கப்பால் முதலீடு செய்யப்படு மாயின், முதல்காப்பு நிதிக் கணக்கிற்கும் எடுத்துச் செல்லப்படு கின்றன.

முதல் காப்பினைக் கீழ்க்கண்டவற்றிற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

1. கம்பெனியின் செயல்முறை விதிகள் இசைவு அளிக்கு மாயின், மேலூதியப் பங்குகள் வெளியிடுதல்.

2. வாணிக நற்பெயர், தொடக்கச் செலவுகள் போன்ற புலனாகாச் சொத்துகளை நீக்க.

முதல் காப்பு இருப்புநிலைக் குறிப்பில் தெளிவாகக் காட்டப் படவேண்டும். பிற வருவாய்க் காப்பினின்றும் (Revenue Reserve) அது வேறுபடுத்திக் காட்டப்படவேண்டும். கடந்த இருப்புநிலைக் குறிப்புக்குப் பின் அதில் சேர்ந்த தொகையையும், அதனின்றும் எடுத்த தொகையையும் தெளிவாகக் குறிப்பிடவேண்டும்.

## கீழ்க்கண்ட காப்புகள் முதல் காப்புகளாகும்

**பங்கு முனைமக் கணக்கு** (Share Premium Account) : பங்கு வெளியீட்டில் பெற்ற முனைமத் தொகையை முதல் காப்புக் கணக்கிற்கு எடுத்துச் சென்றாலுங்கூட, கம்பெனிச் சட்டம் 78ஆவது பிரிவில் கூறப்பட்டுள்ள நோக்கங்கட்காக மட்டுமே அதைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும். அதாவது :

அ. கம்பெனியின் வெளியிடாப் பங்குகளை முழுவதும் செலுத்தப்பெற்ற பங்குகளாக பங்குநர்கட்கு வெளியிட.

ஆ. தொடக்கச் செலவுகளை நீக்க.

இ. கடனீட்டுப் பத்திரங்களையோ, பங்குகளையோ வெளியிடுவதில் கொடுத்த தரகு தொகை, ஏற்ற செலவுகள் அல்லது அளித்த தள்ளுபடி முதலியவற்றை நீக்க.

ஈ. மீள்தகு முன்னுரிமைப் பங்குகளையோ, கடனீட்டுப் பத்திரங்களையோ மீட்கும்போது செலுத்தவேண்டிய முனைமத் தொகைக்கு வகைசெய்ய.

**மேம்பாட்டுத் தள்ளுபடிக் காப்பு** (Development Rebate Reserve)

வருமான வரிச் சட்டத்தின்படி மேம்பாட்டுத் தள்ளுபடி பெறவேண்டுமாயின், ஒரு நிபந்தனையுண்டு. அதாவது, வழங்கப் படும் மேம்பாட்டுத் தள்ளுபடியில் 75 சதவீதம் அளவிற்கு (கப்பலாயின் 50 சதவீதம் அளவிற்கு), இலாப-நட்டக் கணக்கில் பற்று வைத்து, 'மேம்பாட்டுத் தள்ளுபடிக் காப்பு' என்னும் கணக்கில் வரவு வைக்கவேண்டும். இதனைச் 'சட்ட முறை மேம்பாட்டுத் தள்ளுபடிக் காப்பு' (Statutory Development Rebate Reserve) என்றும் அழைப்பதுண்டு. அடுத்த எட்டு ஆண்டுகள் வரை, தொழிலுக்காக இத் தொகையைக் கம்பெனி பயன்படுத்திக் கொள்ளலாம். அதாவது இக் காலக் கெடுவரை பங்காதாயம் வழங்க இதனைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது.

வெளிநாட்டுக்கு அனுப்பவோ, வெளிநாட்டில் சொத்து வாங்கவோ இதனைப் பயன்படுத்தக் கூடாது.

எட்டு ஆண்டுகள் வரை இக் காப்பிற்குப் பங்காதாயம் வழங்கப் பயன்படுத்திக்கொள்ள முடியாததலால், இக் காலம் வரை முதல் காப்பாக இதனைக் கருதுவதில் தவறில்லை.

புதிய கப்பல் ஒன்றைக் கம்பெனி வாங்கினாலும் (பழைய கப்பலாயின் முன்னர் வேறெவரும் இந்தியாவில் அதன் உரிமையாளராக இருந்திருக்கக் கூடாது), புதிய பொறியொன்றை நிறுவினாலும் (பழைய பொறியாக இருப்பின், இந்தியாவில் முன்னர் அது பயன்படுத்தப்பட்டிருக்கக் கூடாது) இம் மேம்பாட்டுத் தள்ளுபடிக் காப்பு உண்டு. இதன் வீதம் :

அ. கப்பல்: (i) புதிய கப்பலாயின், அதன் அடக்க விலையில் (வருமானவரி செலுத்தும் கம்பெனியின் அடக்க விலையில்) 40 சதவீதம்.

(ii) கப்பல் கட்டிய 7 ஆண்டுகட்குள் வாங்கப்பட்டிருப்பின், அதன் அடக்க விலையில் 30 சதவீதம்.

(iii) இது கட்டப்பெற்ற 7 ஆண்டுகட்குப் பின்னர் வாங்கப்பட்டிருப்பின், அதன் அடக்க விலையில் 20 சதவீதம்.

ஆ. பொறிவகை : (i) புதியதாயின், அதன் அடக்க விலையில் (நிறுவும்வரை ஆன செலவு) 35 சதவீதம்.

(ii) பழையதாயின், அதனை நிறுவிய செலவில் 10 சதவீதம்.

இலாபத்திலிருந்து மேம்பாட்டுத் தள்ளுபடிக் காப்புக் கணக்கிற்கு மாற்ற, முதலில் அளிக்கப்படும் மேம்பாட்டுத் தள்ளுபடியைக் கணக்கிடவேண்டும். அதாவது, புதிய கப்பலாயின், அதன் அடக்கவிலையில் 40 சதவீதத்தைக் கணக்கிடவேண்டும். பின்னர் இந்த 40 சதவீதத்தொகையில் 75 சதவீதம் கணக்கிட்டு, அத் தொகையைத்தான் இலாப-நட்டக் கணக்கிலிருந்து மேம்பாட்டுத் தள்ளுபடிக் காப்புக் கணக்கிற்கு மாற்றவேண்டும்.

**நிலைச் சொத்துகள் மறுமதிப்பீட்டுக் காப்பு** (Fixed Assets Revaluation Reserve)

சொத்துகளை மறு மதிப்பீடு செய்வதன் காரணமாக நிலைச் சொத்துகளின் மதிப்பு உயர்த்தப்படுமாயின், அவ்வாறு உயர்த்தப்

படும் தொகையை முதல் காப்புக் கணக்கிற்கு எடுத்துச் செல்வது வழக்கம். இதனை 'நிலைச் சொத்துகள் மறுமதிப்பீட்டுக் காப்பு' எனும் கணக்கிலும் வரவு வைக்கலாம். விற்கப்படாமல், நிலைச் சொத்துகளின் மதிப்பினைக் கூட்டுவதால் ஏற்படும் ஆதாயத்தினைப் பங்காதாயம் வழங்கப் பயன்படுத்தக் கூடாதாதலால், இதுவும் முதல் காப்பேயாகும்.

**நிலைச் சொத்துகள் மறு அமர்த்தீட்டுக் காப்பு** (Fixed Assets Replacement Reserve)

சீராக விலை நிலவுகிற காலங்களில் நிலைச் சொத்து வாங்கிய விலையின் அடிப்படையில் தேய்மானம் ஒதுக்குவது ஏற்ற முறையாகும். ஆனால், விலை ஏறிக்கொண்டே செல்லும் இற்றை நாள்களில் அம் முறை ஏற்புடைத்தன்று. பழைய சொத்துப் பயன்படா நிலையில், புதிய சொத்தினை வாங்கத் தேவையான நிதி வசதியை இம் முறை தருவதில்லை. எனவே, நிலைச் சொத்து வாங்கிய விலையினும் கூடிய மதிப்பில் தேய்மானம் நீக்குவது ஒரு முறையாகக் கருதப்படுகிறது. ஆனால், இவ்வாறு அதிகமான தேய்மானம் நீக்குவது மறை காப்பு ஏற்படுத்துவதற்கொப்பாகும். எனவே, இதனையும் முழுவதும் சரியான முறையாக ஏற்றுக் கொள்வதற்கில்லை. சொத்தின் அடக்கவிலை மதிப்பில் தேய்மானம் ஒதுக்கி வருவதுடன், அச் சொத்தினைப் புதுப்பிக்கும்போது அல்லது மறு அமர்த்தீடு செய்யும்போழ்து, கூடுதலாகக் கொடுக்க வேண்டிய விலைக்காகத் தேவையான தொகையை ஒவ்வோராண்டும் 'மறு அமர்த்தீட்டுக் காப்பு' (Replacement Reserve) எனும் கணக்கில் ஒதுக்கி வருதல் சிறந்த முறையாகக் கருதப்படுகிறது.

சிறப்புத் தேய்மானக் காப்பு (Special Depreciation Reserve), மேம்பாட்டுக் காப்பு (Development Reserve) போன்ற வேறு பெயர்களும் இதற்குண்டு.

இக் காப்பினை நிலைச் சொத்துகளைப் புதுப்பித்தலுக்கு அல்லது மறு அமர்த்தீடு செய்வதற்கு மட்டுமே பயன்படுத்தவேண்டும். பங்காதாயம் வழங்கப் பயன்படுத்தக் கூடாதாதலால், இதனை முதல் காப்பாகக் கொள்ளுதலே சிறந்ததாகும்.

**முதல் மீட்புக் காப்புக் கணக்கு** (Capital Redemption Reserve Account)

இது குறித்து முன்னரே விளக்கியிருப்பினும், மீண்டும் நினைவுகூர்தல் நலம். புதுப் பங்குகளை வெளியிட்டுப் பெற்ற

தொகையிலிருந்து மீள்தகு முன்னுரிமைப் பங்குகளை மீட்கலாம்; அல்லது பங்காதாயம் வழங்கக்கூடிய இலாபத்திலிருந்தும் மீட்கலாம் என்று கூறியிருக்கிறோம். அதாவது, புதுப் பங்குகளை வெளியிட்டுப் பெற்ற தொகையில்லாமல் இலாபத்திலிருந்து மீட்கும் பொழுது, அத் தொகையளவிற்கு முதல் மீட்புக் காப்புக் கணக்கில் வரவு வைக்கவேண்டும். கம்பெனிச் சட்டம் 80ஆவது பிரிவின்படி கம்பெனியின் வெளியிடப்படாப் பங்குகளை முழுதும் செலுத்தப் பெற்ற பங்குகளாக உறுப்பினர்கட்கு வெளியிட மட்டுமே இக் கணக்கினைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும். எனவே, இக் காப்புக் கணக்கும் ஒரு முதல் காப்பாகக் கருதப்படுகிறது.

**வருவாய்க் காப்பு** (Revenue Reserves)

பங்காதாயம் வழங்கப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய காப்பு வருவாய்க் காப்பாகும். தொழிலில் வழக்கமாக ஏற்படும் ஆதாயங்களினின்றும் இக் காப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டுகள் : பொதுக்காப்பு, பங்காதாயச் சமன்செய் காப்பு (Dividend Equalisation Reserve), அலுவலர் நலக்காப்பு, நிகழ்வடை பொறுப்புக் காப்பு (Contingent Liability Reserve), வரிக் காப்பு (Taxation Reserve), ஊழியர் பணிக்கொடைக் காப்புப் (Staff Gratuity Reserve), கடனீட்டுப்பத்திர மீட்புக் காப்புப் போன்றவை.

பங்காதாயம் வழங்க மேற்சொன்ன காப்புகளைப் பயன் படுத்துவதில் கருத்து வேறுபாடுகள் உள. பங்காதாயம் வழங்க முடியாக் காப்பு அனைத்தும் முதல் காப்பு எனக் கருதப்படுகிறது. சில காப்புகளைச் சட்டப்படி பங்காதாயம் வழங்கப் பயன்படுத்தக் கூடாது. அதாவது, வருவாய்க் காப்புத் தொழிலில் பயன் படுத்தப்பட்டிருப்பின், பல்வகைச் சொத்துகளாக அவை உருப் பெற்றிருக்கும். அவற்றைப் பங்காதாயம் வழங்கப் பயன்படுத்திக் கொள்ள முடியாது. எனவே, இவ்வகைக் காப்புகளைச் சில கம்பெனிகள் முதல் காப்புகளாக வகைப்படுத்துகின்றன.

கீழ்க்கண்ட காப்புகள் வருவாய்க் காப்புகளாகப் பொதுவாக வகைப்படுத்தப்படுகின்றன :

**1. பொதுக் காப்பு** (General Reserve)

இலாபத்திலிருந்து ஏற்படுத்தப்படும் காப்பு இது. இது பொதுவாகக் கம்பெனியின் நிதி நிலையைச் சீராக்கும் நோக்குடன் உண்டாக்கப்படுகிறது. நடைமுறை முதலை (Working Capital)

அதிகப்படுத்தவும், சீரான பங்காதாயம் வழங்கவும், எதிர்பாராத நிகழ்ச்சிகளைச் சமாளிக்கவும் இது ஏற்படுத்தப்படுகிறது.

**2. பங்காதாயச் சமன்செய் காப்பு** (Dividend Equalisation Reserve)

ஒரே அளவான பங்காதாயத்தை ஒவ்வோராண்டும் வழங்கும் நோக்குடன் அது ஏற்படுத்தப்படுகிறது. ஈட்டும் இலாபம் ஒவ்வோராண்டும் மாறக்கூடிய நிலைகளில் கம்பெனிகள் பொதுவாக இவ்வகைக் காப்பினை ஏற்படுத்தும். ஆதாயம் அதிகம் கிட்டும் ஆண்டுகளில் இக் காப்பிற்குத் தொகை எடுத்துச் செல்லப்படுகிறது. இலாபம் குன்றும் ஆண்டுகளிலும், நட்டம் ஏற்படும் காலத்திலும் இக் காப்பினைப் பயன்படுத்திச் சீரான பங்காதாயம் வழங்கப்படுகிறது. இவ்வகைக் காப்பு இல்லையெனில், பொதுக் காப்பினைக் கம்பெனிகள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

**3. பங்காதாயக் காப்பு** (Dividend Reserve)

திட்டமிட்ட பங்காதாயம் (Proposed dividend) வழங்கத் தேவையான தொகையை இலாப-நட்டப் பகிர்வுக் கணக்கிலிருந்து பங்காதாயக் காப்புக் கணக்கிற்கு முதலில் சில கம்பெனிகள் எடுத்துச் செல்கின்றன (இலாப-நட்டப் பகிர்வுக் கணக்கில் பற்றும், பங்காதாயக் காப்புக் கணக்கில் வரவும் வைக்கப்படுகின்றன). ஆண்டுக் கூட்டத்தில் திட்டமிட்ட பங்காதாயத்திற்குப் பங்குநர்கள் ஒப்புதலளித்த பின்னர், இக் காப்பிலிருந்து பங்காதாயம் வழங்கப்படும்.

இவ்வகைக் காப்பு ஏற்படுத்தும் நிலையில், திட்டமிட்டுள்ள பங்காதாயக் கணக்கு இலாப-நட்டப் பகிர்வுக் கணக்கில் பற்று வைக்கப்படுவதில்லை என்பதை மறத்தலாகாது.

**4. நிகழ்வடை காப்பு** (Contingent Reserve)

எதிர்பாராது ஏற்படும் நட்டம் அல்லது பொறுப்பு முதலியவற்றிற்கு வகைசெய்யும் நோக்குடன் இலாபத்திலிருந்து ஏற்படுத்தப்படுவது இக் காப்பு. இது இல்லா நிலையில், பொதுக் காப்புப் பயன்படுத்தப்படும்.

**கடனீட்டுப் பத்திர மீட்புக் காப்பு** (Debenture Redemption Reserve)

இது குறித்துக் கடனீட்டுப் பத்திரங்கள் எனும் தலைப்பின்கீழ் விவரமாக விளக்கப்பட்டிருக்கிறது. கடனீட்டுப் பத்திரங்களை

மீட்கும்போழ்து போதிய நிதி வசதியைப் பெறும் நோக்குடன், ஒவ்வோராண்டு இலாப-நட்டப் பகிர்வுக் கணக்கிலிருந்து குறிப் பிட்ட தொகையை இக் காப்புக் கணக்கிற்கு மாற்றி, அத் தொகை யைக் கொண்டு முதலீடுகள் வாங்கப்படும். முதலீடுகளிலிருந்து பெறும் வட்டித் தொகையையும் ஒவ்வோராண்டும் ஒதுக்க வேண்டிய தொகையையும் சேர்த்துக் 'காப்புக்' கணக்கிற்கு எடுத்துச் செல்வதும், அக் கூட்டுத் தொகையை முதலீடு செய் வதும் வழக்கம் என்று கூறியிருக்கிறோம். கடனீட்டுப் பத்திரங்களை மீட்க வேண்டிய நேரத்தில், ஒவ்வோராண்டும் வாங்கிச் சேர்த்து வைத்திருக்கும் மொத்த முதலீடுகளையும் விற்றுக் கிடைக்கும் தொகையைக் கொண்டு மீட்டல் எளிதாகிறது என்றும் கண்டி ருக்கிறோம். இவ்வாறு கடனீட்டுப் பத்திரங்களை மீட்டபின், கடனீட்டுப் பத்திரக் காப்பு நிதிக் கணக்கைப் பங்குதார்கட்கு வழங்கப் பயன்படுத்திக் கொள்ளலாம். அல்லது பொதுக் காப்புக் கணக்கிற்கு மாற்றிக் கொள்ளலாம்.

### முதலீடுகள் மதிப்பு ஏற்றவிறக்கக் காப்பு அல்லது முதலீடுகள் தேய்மானக் காப்பு (Investments Fluctuation Reserve)

ஒரு கம்பெனி தனது பணத்தை நிலைச் சொத்தாகவோ நடப்புச் சொத்தாகவோ முதலீடுகளில் முதலீடு செய்யலாம். முதலீடுகளின் விலை சந்தையில் அடிக்கடி மாறிக்கொண்டே இருக்கும். விலை வீழ்ச்சியின் காரணமாக உண்டாகக்கூடிய நட்டத்திற்கு வகைசெய்யும் நோக்குடன் இத்தகைய காப்பு ஏற்படுத்தப்படுகிறது.

ஒரு குறிப்பிட்ட நிதிக்காக முதலீடு செய்யும்போழ்து இக் காப்பு ஏற்படுத்த வேண்டுவதில்லை. எடுத்துக்காட்டாக, கட னீட்டுப் பத்திரங்களை மீட்கும் நோக்குடன் முதலீடு செய்து வருவது வழக்கம் என்று கண்டிருக்கிறோம். இக் கடனீட்டுப் பத்திர மீட்பு நிதி முதலீடுகட்குக் காப்பு ஏற்படுத்தத் தேவை யில்லை. காரணம், முதலீடுகளை விற்கும்போழ்து ஏற்படும் இலாப-நட்டத்தைக் கடனீட்டுப் பத்திர மீட்பு நிதிக் கணக்கிற்கு எடுத்துச் சென்று விடுகிறோம்.

### பின்வரும் வரிக்காப்பு (Deferred Taxation Reserve)

ஒரு கம்பெனி தனது பொறிவகைகளையும், தளவாடங்களை யும் புதுப்பிக்கும்பொழுதும், மாற்றியமைக்கும்பொழுதும் பல் வகை வரிச் சலுகைகள் தரப்படுகின்றன. மேம்பாட்டுத் தள்ளு படி, கூடுதல் தேய்மானம் போன்றவற்றிற்குக் கம்பெனி தனது

வருமானத்திலிருந்து கழித்துக் கொள்ளலாம். இதனுல் வரிப் பளு மிகவும் குறைந்திருக்கும். ஆனுல், ஆண்டுகள் செல்லச் செல்ல குறைந்துசெல் இருப்புமுறையில் சொத்துகள் மீது கணக்கிடப்படும் தேய்மானம் ஒவ்வோராண்டும் குறைந்து செல்லும். எனவே, வரிச்சுமை கூடிக்கொண்டே போகும். ஒவ்வோராண்டும் சீரான வரிச்சுமையை ஏற்கும் நோக்குடன் இக் காப்பு ஏற்படுத்தப்படுகிறது. ஒவ்வோராண்டும் இலாப-நட்டக் கணக்கிலிருந்து ஒரே தொகை இக் காப்புக் கணக்கிற்கு முதலில் மாற்றப்படுகிறது. பின்வரும் வரிக்கான பொறுப்பு, இக் காப்பிலிருந்து தீர்க்கப்படுகிறது. இக் காப்பிற்கு எதிர்கால வரிக்காப்பு (Future Taxation Reserve) என்றும், வரிச் சமன்பாட்டுக் காப்பு (Taxation Equalisation Reserve), வரிச் சலுகைச் சமன்பாட்டுக் காப்பு (Tax Allowances Equalisation Reserve) என்றும் வேறு பெயர்கள் உண்டு.

இவ்வாறு வருவாய்க் காப்பு என்பது சேர்த்து வைத்திருக்கும் ஆதாயமாகும்; ஏற்பட்ட இலாபம் முழுவதையும் பங்குநர்கட்கு வழங்கிடாமல் தொழிலிலேயே பயன்படுத்தப்படுகிறது. பங்கு முதல், பொறுப்புகள் — இவற்றினும் கூடுதலாக உள்ள சொத்துகளின் மதிப்பையே இலாபம் உணர்த்துகிறது. தொடர்ந்து வருவாய்க் காப்பு இருப்புநிலைக் குறிப்பில் காணப்படுவது பொறுப்புகளினும் கூடுதலாகச் சொத்துகள் உள்ளனவென்ற உண்மையையே உணர்த்தும். எனவே, ஓராண்டில் நட்டம் ஏற்பட்டால், கூடுதலாகவுள்ள சொத்துகளின் மதிப்புக் குறைந்துவிடுகிறது. இலாப-நட்டக் கணக்கின் பற்றிருப்பை வருவாய்க் காப்பினின்றும் கழித்துக் காட்டவேண்டும் என்று கம்பெனிச் சட்டம் கூறுகிறது.

**மறை காப்பு** (Secret Reserves)

'இருப்புநிலைக் குறிப்பு வெளிப்படையாக உணர்த்தாத எக் காப்பும் மறை காப்பாகும்' என்று கூறப்படுகிறது. இது 'ஒளித்து வைக்கப்பட்டுள்ள காப்பு' (Hidden Reserve) என்றும், 'உள் காப்பு' (Inner Reserve) என்றும் வேறு பெயர்களால் அழைக்கப்படுவதுண்டு. சுருக்கமாகக் கூறப்போனுல், சொத்துகளைக் குறைத்துக் கூறுதலும், பொறுப்புகளைக் கூட்டிக் கூறுதலும் மறை காப்பாகும். பங்கு முதல், பொறுப்புகள் முதலியவற்றைவிடச் சொத்துகளின் மதிப்புக் கூடுதலாக இருப்பினும், வெளிப்படையாக இதனை இருப்புநிலைக் குறிப்பு உணர்த்தாது. ஆழ்ந்து ஆய்ந்து பார்த்தால் மட்டுமே மறை காப்பிருப்பதை உணரலாம். ஆயினும், அதன் மதிப்பை அளக்க முடியாது. பின்கண்ட நோக்கங்கட்காக அது ஏற்படுத்தப்படலாம்.

1. எதிர்காலத்தில் எதிர்பாராது ஏற்படும் பெருநட்டத்தை வெளி உலகுக்கோ, பங்குநர்கட்கோ காட்டாமலிருக்க இக் காப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இத்தகைய காப்பில்லை யென்றால், நட்டம் ஏற்படும் ஆண்டுகளில் பங்காதாயம் வழங்க முடியாமற்போகும். இதனால் கம்பெனியின் பங்கு மதிப்பும் குன்றும். அதுவே வங்கிக் கம்பெனியாயிருப்பின், ஏற்படும் தொல்லைக்கு அளவில்லை. பணம் போட்டு வைத்திருப்போர் அனைவரும் அச்ச உணர்வால் உந்தப்பட்டுப் பணத்தை எடுத்துக் கொள்ள முயல்வர்; வங்கி சொல்லொணா இடர்ப்பாட்டில் சிக்கித் தவிக்க நேரிடும்.

2. ஏதேனும் ஓர் ஆண்டில் மிக அதிகமாக இலாபம் ஏற்படும்போழ்து இலாபம் முழுவதையும் பங்குநர்கட்கு வழங்காமல் மறை காப்பு ஏற்படுத்தின், இலாபம் குறையும் ஆண்டுகளில் அதைப் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு ஏற் படும். இதனால் சீரான பங்காதாயம் ஒவ்வோராண்டும் வழங்கக் கம்பெனியால் இயலும்.

3. ஈட்டிய ஆதாயம் முழுவதையும் பங்குநர்களிடம் வழங் காத காரணத்தால், அது தொழிலிலேயே பயன்படுத்தப்படு கிறது. இதனால் நடைமுறை முதல் பெருகி, நிதிநிலை சீர்பெறும்.

4. கம்பெனியின் நல் வளர்ச்சியைப் பிற கம்பெனிகள் உணராமலிருக்கும் நோக்குடனும் மறை காப்பு ஏற்படுத்தப் படலாம். கம்பெனி ஈட்டும் முழு இலாபத்தையும் பிறர் உணர நேரிடின், போட்டிக் கம்பெனிகள் பல தோன்றலாம். பலத்த போட்டியால் பின் வருமாண்டுகளில் பெரும் ஆதாயம் கிட்டாமற் போகும். இக் காரணம் பற்றியும் மறை காப்பு ஏற்படுத்தப் படுகிறது.

### மறை காப்பு ஏற்படுத்தும் முறை

1. அடக்கவிலையினும் அல்லது சந்தை விலையினும் மிகவும் குறைத்துச் சொத்துகளை மதிப்பிடுதல். எடுத்துக்காட்டாக, முதலீடுகள், சரக்கிருப்பு, பொறிவகை — போன்றவற்றைக் குறைத்து மதிப்பிடலாம்.

2. சொத்தொன்றின் மதிப்பு நிரந்தரமாகக் கூடியுள்ள போழ்தும், சொத்தின் மதிப்பை உயர்த்தாதிருத்தல்.

3. ஐயக் கடன், கடனாளிகள் மீது தள்ளுபடி — ஆகிய வற்றிற்குத் தேவைக்குமதிகமாகக் காப்பு ஏற்படுத்தல்.

4. நிலைச் சொத்துகளின் மீது மிகவும் அதிகமாகத் தேய்மானம் நீக்குதல்.

5. சில சொத்துகளின் மதிப்பை முற்றிலும் குறைத்து விட்டு இருப்புநிலைக் குறிப்பில் காட்டாமலேயே விட்டுவிடுதல்.

6. முதலினச் செலவினை (Capital expenditure) வருவாய்ச் செலவாகக் (Revenue expenditure) காட்டுவதன்மூலமாகச் சொத்துகளின் உண்மை மதிப்பைக் குறைத்துக் காட்டுதல்.

7. பொறுப்புகளைக் கூட்டிக் காட்டுதல்.

8. நிகழ்வடை பொறுப்புகளை உண்மையான பொறுப்புகளாகக் காட்டுதல்.

இவ்வாறு மறை காப்பு ஏற்படுத்துவதால், கம்பெனியின் உண்மையான நிதி நிலையை உணரமுடியாமற் போகிறது. குறிப்பிட்ட நாளில் ஒரு கம்பெனியின் நிதி நிலையை உணர்த்துதல் இருப்புநிலைக் குறிப்பின் தலையாய நோக்கம் என்று கூறியிருக்கிறோம். மறை காப்பால் இந் நோக்கு ஈடேறாமற்போகும். எனவே, கம்பெனிச் சட்டத்திற்கு இது முரணானது ஆகும்.

மறை காப்பு ஏற்படுத்தலால், பங்குநர்கள் தங்கட்குச் சேர வேண்டிய பங்காதாயத்தைப் பெறாமற் போகின்றனர்.

மறை காப்பு ஏற்படுத்தலால், உண்மை நிதிநிலையை வெளி உலகினரும், பங்குநர்களும் உணர முடிவதில்லை. இதனால் பங்கின் சந்தை மதிப்புக் குறைகிறது. குறைந்த விலையில் விற்கப்படும் கம்பெனியின் பங்குகளை அதன் உண்மை நிலையை உணர்ந்துள்ள இயக்குநர்கள் வாங்கி ஆதாயம் பெறுவர்.

கம்பெனியின் நிலைச் சொத்துகள் மறை காப்பு ஏற்படுத்தும் நோக்கத்தால் குறைத்து மதிப்பிடப்படுகின்றன. தீ விபத்து ஏற்படின், காப்பீட்டுக் கம்பெனியிடம் அவற்றின் உண்மை மதிப்பைக் கோரமுடியாமற்போகும்.

மறை காப்பினைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலமாக, இயக்குநர்கள் தங்கள் திறமைக் குறைவாலும், கவனம் செலுத்தாததாலும் கம்பெனிக்கு ஏற்படும் நட்டத்தை மறைக்க வழி ஏற்படுகிறது. திறமையற்ற நிர்வாகத்தினைத் திரையிட்டு மறைக்க

மறை காப்புத் துணை செய்கிறது. இக் காரணத்தால்தான், (ராயல் மெயில் வழக்கில் – In Royal Mail Case) நீதிபதி ரைட் என்பார் கீழ்க்கண்டவாறு கூறியிருக்கிறார் :

'இலாபம் ஈட்டா ஆண்டுகளில் மறை காப்பைப் பயன் படுத்திப் பங்காதாயம் வழங்கப்படுமாயின், இவ்வாறு இது வழங்கப்படுகிறது என்ற உண்மையைத் தங்கள் தணிக்கை அறிக்கையில் தணிக்கையாளர்கள் உணர்த்தவேண்டும்.' ஆனால், இவ்வாறு செய்யப்படுமாயின், மறைகாப்பு ஏற்படுத்தும் நோக்கம் நிறைவேறுதொழிகிறது என்று சில கணக்காயர்கள் கருதுகின்றனர்.

கம்பெனிச் சட்டத்தின்படி, வங்கி, நிதி நிறுவனங்கள், காப்பீட்டுக் கம்பெனிகள் போன்றவற்றைத் தவிரப் பிற கம்பெனிகள் மறை காப்பு ஏற்படுத்துவது தடை செய்யப்பட்டிருக்கிறது. ஒதுக்கு, காப்புகளைப் பற்றிய முழு விவரங்களையும் கம்பெனி வெளியிடவேண்டும் என்று சட்டம் கூறுகிறது. அடுத்து இலாப-நட்டக் கணக்கு, கம்பெனி ஈட்டும் உண்மையான இலாபத்தை உணர்த்தவேண்டும் என்றும், இருப்புநிலைக் குறிப்பு உண்மை நிலையைப் படம்பிடித்துக் காட்டவேண்டும் என்றும் கம்பெனிச் சட்டம் தெளிவாகக் கூறியிருப்பதால் மறை காப்பு ஏற்படுத்தக்கூடாது. ஆயினும், பொதுமக்கள் நலனை முன்னிட்டுக் காப்புப் பற்றிய முழுத் தகவலையும் வெளியிட வேண்டுவதில்லை என்று கருதினும், அவ்வாறு வெளியிடுதல் கம்பெனியின் நலனுக்கு உகந்ததன்று என்று கருதினும் இயக்குநர்களின் வேண்டுகோளின்பேரில் பல்வகையாக ஒதுக்கப்பெற்ற தொகைகளின் விவரத்தைக் கம்பெனி காட்டவேண்டுவதில்லை என்று ஆணையிட மைய அரசுக்கு அதிகாரம் இருக்கிறது.

## கம்பெனியின் இலாபத்தைப் பயன்படுத்தல் (Disposal of Company Profits)

தனியாள் வணிகத்திலும், கூட்டு நிறுவனத்திலும் இலாப முழுவதையும் உரிமையாளர்கள் எடுத்துக் கொள்ளலாம். ஆனால், அவ்வாறு கூட்டுப் பங்குக் கம்பெனியில் அதன் உறுப்பினர்களான பங்குநர்கள், கம்பெனி ஈட்டும் இலாப முழுவதையும் எடுத்துக் கொள்ள முடியாது. இலாபத்தை எவ்வாறு பகிர்வது, எவ்வாறு பயன்படுத்துவது என்பதற்கான அதிகாரத்தைக் கம்பெனியின் செயல்முறை விதிகள் இயக்குநரவைக்கு வழங்குகின்றன.

பொதுவாக இலாபம் கீழ்க்கண்டவாறு பிரிக்கப்படுகிறது :

1. காப்பு (Reserve) : பல்வகைக் காப்புகளைப் பற்றி விளக்கியிருக்கிறோம். இலாபத்திலிருந்து தொகை ஒதுக்கப் படலாம்.

2. ஒதுக்கு (Provision) : ஐயக்கடன் காப்பு, வரிக் காப்பு போன்றவற்றிற்கு வகை செய்யலாம்.

3. பங்காதாயம் (Dividend) : பங்குநர்கட்குப் பங் காதாயம் வழங்கத் தொகை ஒதுக்கலாம்.

4. மேலூதியம் (Bonus) : ரொக்க வடிவிலோ பங் காகவோ இலாபத்தைப் பிரித்துப் பங்குநர்கட்கு வழங்கலாம்.

**பங்காதாயம்** (Dividend)

ஏற்படும் இலாப முழுவதையும் பங்காதயமாக வழங்கப் பயன்படுத்திக்கொள்ள முடியாது. சட்டப்படி கம்பெனியின் பங்குநர்கட்குப் பங்காதாயமாக வழங்கக்கூடிய இலாபத்தைப் 'பகிர்தகு இலாபம்' (divisible profit) என்கிறோம். 1956ஆம் ஆண்டைய கம்பெனிச் சட்டம் (1960-ல் திருத்தப்பெற்றது) பிரிக்கத்தக்க இலாபத்தைப் பற்றித் தெளிவாகக் கூறியிருக்கிறது. எனவே, பிரிட்டன் நீதி மன்றத்தார்களின் தீர்ப்புகள் இதைப் பொருத்தவரை இனிச் செல்லாததாகி விட்டன.

**இலாபத்திலிருந்து பங்காதாயம் வழங்கல்** (Dividend out of Profits)

1. குறிப்பிட்ட ஆண்டில் ஏற்பட்ட இலாபத்திலிருந்து பங்காதாயம் வழங்கலாம்.

2. கடந்த ஆண்டில் அல்லது ஆண்டுகளில் ஏற்பட்ட இலாபம் இன்னும் வழங்கப்பெறாதிருக்குமாயின், அதிலிருந்து பங்காதாயம் வழங்கலாம்.

3. மேற்கண்ட இருவகையிலும் சேர்த்த இலாபத்தி லிருந்து வழங்கலாம்.

4. சில வேளைகளில், பங்காதாயம் வழங்குதல் குறித்து அரசு ஒப்புறுதி தந்திருக்கலாம். அந் நிலையில் மைய அரசோ மாநில அரசோ வழங்கும் பணத்திலிருந்து இலாபம் வழங்கலாம்.

இவ்வாறு அரசு அளித்திருக்கும் ஒப்புறுதியினைத் தொடர்ந்து தரும் பணத்திலிருந்து பங்காதாயம் வழங்குவதைத் தவிர, எப்போதும் கம்பெனி ஈட்டும் இலாபத்திலிருந்து மட்டுமே பங்காதாயம் வழங்கமுடியும் என்பதை உணரவேண்டும். இலாபம் வருவாய் இலாபமாகவும் (Revenue Profit) இருக்கலாம்; முதலின இலாபமாகவும் (Capital Profit) இருக்கலாம். ஆனால், 208-வது பிரிவின்படி இதற்கு ஒரு விதி விலக்குண்டு. இலாபம் ஏற்படா ஆண்டுகளிலும் முதல் மீது வட்டி வழங்க இது அதிகாரம் வழங்குகிறது. பின்னர், இது குறித்து விளக்குவோம்.

**தேய்மானம்**

நடப்பாண்டில் நிலைச் சொத்துகளின் மீதான தேய்மானம் ஒதுக்குவதுடன், கடந்த ஆண்டுகளின் தேய்மானம் நீக்கப் பெறவில்லையாயின், அதற்கும் வகைசெய்த பின்னரே பங்காதாயம் வழங்கத்தக்க இலாபத்தை அறியமுடியும். இது குறித்துக் கம்பெனிச் சட்டத்தில் கண்டுள்ளவை :

1. 1960 திசம்பர் 28-ற்கு முன்னல் ஈட்டிய இலாபத்தைத் தேய்மானம் நீக்காமலேயே பங்காதாயம் வழங்கப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

2. 1960 திசம்பர் 28-ற்குப் பிறகு, மைய அரசு ஒப்புதல் அளிக்குமாயின், 1960 திசம்பர் 28-ற்குப் பிறகு ஏற்படும் இலாபத்தையும், தேய்மானம் நீக்குமுன்னரே பங்காதாயம் வழங்கப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

3. 1960 திசம்பர் 28-ற்குப் பிறகு ஏதேனும் ஓர் ஆண்டில், தேய்மானம் நீக்கிய பிறகு நட்டமேற்பட்டிருக்குமாயின், அடுத்துவரும் ஆண்டுகளில் ஏற்படும் இலாபத்தில் இந் நட்டம் அல்லது கடந்த ஆண்டில் தேய்மானம் இதில் எது குறைவாக இருக்கின்றதோ அதைச் சரி செய்த பின்னர், மீதியுள்ள இலாபத்தைப் பங்காதாயம் வழங்கப் பயன்படுத்தலாம்.

**மேம்பாட்டுத் தள்ளுபடி**

வருமானவரிச் சட்டத்தின் 34(3)-வது பிரிவின்படி, பங்காதாயம் வழங்கத்தக்க இலாபத்தைக் கணக்கிடுமுன் வருமான வரியில் அளிக்கப்படும் மேம்பாட்டுத் தள்ளுபடியில் 75 சதவீதம் அளவுத் தொகையை இலாபத்திலிருந்து மேம்பாட்டுத் தள்ளுபடிக் கணக்கிற்கு மாற்றவேண்டும் என்றும், அதை அடுத்த எட்டு

ஆண்டுகட்குப் பங்காதாயம் வழங்கப் பயன்படுத்தக் கூடா தென்றும் கூறியிருப்பதை இவண் நினைவு கூர்தல் நலம்.

### கடந்த கால நட்டம்

VI-வது அட்டவணைப்படி, இலாப-நட்டக் கணக்கின் பற்றிருப்பு, கம்பெனியின் வருவாய்க் காப்பு ஏதேனுமிருப்பின் அதில் சரிசெய்யப்படவேண்டும். அதாவது, ஓராண்டில் ஏற்படும் நட்டத்தைக் கடந்த காலத்தில் ஏற்பட்டு வழங்கப்பெறாதிருக்கும் இலாபத்தில் சரிக்கட்டவேண்டும்.

நடப்பாண்டில் ஏற்படும் இலாபத்தினைக் கடந்த காலத்தில் ஏற்பட்டுள்ள நட்டத்தைச் சரிசெய்யாது, பங்காதாயம் வழங்கப் பயன்படுத்தக் கூடாதா என்ற வினா எழலாம். சட்டப்படி நடப்பாண்டு இலாபத்தைப் பங்குநர்கட்கு வழங்கப் பயன்படுத்திக் கொள்ளலாம். கடந்த கால நட்டத்தை இதில் சரிக்கட்ட வேண்டுவதில்லை. ஆயினும், **1960 திசம்பர் 28-ற்குப் பிறகு தேய்மானம் ஒதுக்கியதன் காரணமாக ஏற்பட்டுள்ள நட்டத்தை நடப்பாண்டு இலாபத்தில் சரி செய்த பின்னரே கம்பெனி இலாப ஈவு வழங்கமுடியும்.**

### முதலின இலாபம் (Capital Profit)

முதலின மதிப்பேற்றத்திற்கும் (Capital Appreciation) முதலின இலாபத்திற்கும் (Capital Profit) வேறுபாடுண்டு. மறு மதிப்பீட்டின் விளைவாக நிலைச் சொத்தொன்றின் மதிப்பு உயர்த்தப்படுமாயின், அது முதலின மதிப்பேற்றமாகும். இதனைக் கொண்டு பங்காதாயம் வழங்க இயலாது. ஆனால், அம் மதிப்பேற்றத்தால் ஏற்படும் ஆதாயத்தினை முதல் காப்பிற்கு எடுத்துச் செல்லலாம். முதலின இலாபம் என்பதோ நிலைச் சொத்தொன்றை விற்பதில் கிடைக்கும் ஆதாயமாகும். அவ்வாறே பங்குகளையோ, கடனீட்டுப் பத்திரங்களையோ வெளியிடும் போழ்து பெறும் முனைமத் தொகையும் ஒரு முதலின இலாபமாகும். இதிலிருந்து நாம் தெரிந்துகொள்வது : இது செய்யும் தொழிலிலிருந்து வழக்கமாகப் பெறுவது போன்றமைவதில்லை. எடுத்துக்காட்டாக, கீழ்க்கண்டவற்றைக் கூறலாம்.

1. கம்பெனி கூட்டுருவாக்கத்திற்கு முன் ஏற்பட்ட ஆதாயம்.

2. பங்குகள் வெளியீட்டில் பெறும் முனைமத்தொகை.

3. ஒறுப்பிழப்புச் செய்யப்பட்ட பங்குகளை மீண்டும் வெளியிடும்போழ்து கிடைக்கும் ஆதாயம்.

4. வெளிச் சந்தையில் கடனீட்டுப் பத்திரங்களைத் தள்ளுபடியில் மீட்பதால் கிடைக்கும் இலாபம்.

5. நிலைச் சொத்தொன்றை விற்பதால் கிடைக்கும் ஆதாயம்.

சாதாரணமாக, முதலின இலாபத்தைப் பங்காதாயம் வழங்கப் பயன்படுத்துவதில்லையாயினும், கீழ்க்கண்ட நிபந்தனைகளைக் கம்பெனி நிறைவு செய்யின், இவ்வாறு வழங்கலாம்.

1. கம்பெனியின் செயல்முறை விதிகள் முதலீட்டு இலாபத்தினின்றும் பங்காதாயம் வழங்குவதைத் தடை செய்திருக்கக் கூடாது. எடுத்துக்காட்டாக, கம்பெனியின் செயல்முறை விதிகள் கடனீட்டுப் பத்திர வெளியீட்டில் பெறும் முனைமத் தொகையை இவ்வாறு பயன்படுத்தக்கூடாது என்று தடை விதிக்கலாம். முதலின இலாபத்தை வழங்குவதற்குக் கம்பெனியின் செயல்முறை விதிகள் ஒப்புதல் அளிக்கவேண்டும் என்பது அவ்வளவு சரியன்று. காரணம், சட்டத்தின் 205-வது பிரிவு இதற்கு இசைவளிக்கிறது. இவ்வாறு பங்குநர்கட்கு வழங்குவதைச் **செயல்முறை விதிகள் தடை செய்யக்கூடாது என்பதே** சாலப் பொருந்தும்.

2. முதலின இலாபத்தை வழங்கிய பிறகு கம்பெனிச் சொத்துகளின் நிகர மதிப்பு அவற்றின் ஏட்டு மதிப்பினும் குறைந்திருக்கக் கூடாது.

3. பங்கு முனைமக் கணக்கையும், முதல் மீட்புக் காப்புக் கணக்கையும் பங்காதாயம் வழங்க எந் நிலையிலும் பயன்படுத்தக் கூடாது.

முழுதும் செலுத்தப்பெற்ற மேலூதியப் பங்குகளை வெளியிடவே அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

4. வேறு முதலீட்டு இலாபத்தையும் முதல் காப்புக் கணக்கிற்கு மாற்றிவிட்டால் பின்னர், இலாப ஈவு வழங்க அதைப் பயன்படுத்த முடியாது.

**முதலிலிருந்து பங்காதாயம் செலுத்துதல்** (Payment of Dividend out of Capital).

கம்பெனி ஈட்டும் இலாபத்திலிருந்தோ அல்லது இதற்கென மைய அல்லது மாநில அரசு வழங்கும் தொகையிலிருந்தோதான் பங்காதாயம் தரப்படவேண்டும் என்று கம்பெனிச் சட்டம் 205-வது பிரிவு தெளிவாகக் கூறுகிறது. முதலிலிருந்து பங்காதாயம் வழங்குதல் என்பது கம்பெனியின் செலுத்தப்பெற்ற பங்குமுதல் தொகையினுல் வாங்கப்பெற்றுள்ள சொத்துகளினின்றும் பங்காதாயம் வழங்குவதாகப் பொருள். கம்பெனி கலேக்கப்படும்போழ்து கடனீந்தோர்க்குச் செலுத்த இருப்பது கம்பெனியின் யின் பங்கு முதலாகும். எனவேதான், உறுப்பினர் செலுத்திய பங்கு முதல் தொகையை அவர்களுக்குத் திருப்பித் தரக்கூடாது எனச் சட்டம் ஆணித்தரமாகக் கூறுகிறது. தொழில் நடத்தி வருவதில் ஏற்படும் நட்டத்தின் காரணமாக முதல் குறைந்து போகலாம். ஆனுல், கடனீந்தோர் எதிர்நோக்கியிருக்கும் இம் முதல் தொகையை உறுப்பினர்கட்குத் திருப்பித் தருதல் சட்டத்திற்கு முற்றிலும் முரணுனதாகும்.

முதலிலிருந்து பங்காதாயம் வழங்குவது முதல்தொகையைக் குறைப்பதற்கொப்பாகும். நீதிமன்றத்தின் இசைவைப் பெருது முதலேக் குறைத்தல் 100-வது பிரிவின்படி சட்டத்துக்குப் புறம்பானதாகும்.

இக் காரணங்களால் முதல் தொகையிலிருந்து பங்காதாயம் வழங்குதல் தடை செய்யப்பட்டிருக்கிறது. இதனே உணர்ந்தும் முதலிலிருந்து பங்காதாயம் வழங்கும் இயக்குநர்கள் அவ்வாறு வழங்கிய தொகையைத் திருப்பித்தர கடமைப்பட்டவர்கள். கம்பெனியின் சொத்துகளே உண்மையாகவே மதிப்பிட்ட பின் பங்காதாயம் வழங்குவதாகக் கொள்வோம். அவ்வாறு சொத்துகளே மதிப்பிடுவதில் தவறு ஏற்பட்டதன் காரணமாக முதலிலிருந்து பங்காதாயம் வழங்கப்பட்டதாகக் கொண்டால், இயக்குநர்கள் பொறுப்பாக மாட்டார்கள். ஐயங்கொள்ளத்தக்க சூழ்நிலேகளில்லாவிட்டால், கம்பெனியின் நம்பிக்கைக்குரிய அலுவலர்கள், தயார் செய்யும் கணக்குகளின் அடிப்படையில் பங்காதாயம் வழங்க இயக்குநர்கட்கு உரிமையுண்டு. அவ்வாறு தயாரிக்கப்பட்ட கணக்குகள் தவருனவை என்று பின்னர் கண்டுபிடிக்கப்படினும், இயக்குநர்கள் பொறுப்பேதும் ஏற்க வேண்டுவதில்லே.

முதல் தொகையிலிருந்து பங்காதாயம் வழங்குவதைப் பங்குநர்கள் உணர்ந்திருப்பின், அவ்வாறு செலுத்தப்பெற்றத் தொகையைப் பங்குகளிடமிருந்து திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

**முதல் தொகையிலிருந்து வட்டி செலுத்தல்** (Payment of interest out of Capital)

முதலிலிருந்து பங்காதாயம் வழங்க முடியாதெனினும், வட்டி வழங்கச் சில சூழ்நிலைகளில் மைய அரசு கம்பெனிக்கு அதிகாரம் வழங்கலாம்.

கம்பெனியின் அமைப்பு வேலைகள் — தொழில் உற்பத்தி தொடங்கி வருவாய்க் காண—ஆண்டுகள் பல செல்லவேண்டியிருக்கும் தொழில்களில் ஈடுபட்டிருக்கும் கம்பெனிகள் இவ்வாறு வட்டி வழங்கும். பல ஆண்டுகள் வரை தாங்கள் வழங்கியுள்ள பங்குகள் மீது வருவாய் ஏதும் கிட்டவில்லையெனில், பங்கு மதிப்பு குறையலாம்; பங்குநர்களும் குறைபடத் தொடங்கலாம். பங்கு முதலில்லாமல், கடன் வாங்கி இத் தகு தொழிலை நடத்தின் வட்டி வழங்குவது இயல்புதானே? எனவே, வருவாய் பெற ஆண்டுகள் சில செல்லவேண்டியிருப்பின், அத்தகைய கம்பெனிகட்குச் செலுத்தப்பெற்ற முதல் மீது வட்டி தரும் உரிமையை மைய அரசு கீழ்க்கண்ட நிபந்தனைகளில் வழங்கும்.

1. கம்பெனியின் செயல்முறை விதிகள் அல்லது நிறைவேற்றப்பட்ட சிறப்புத் தீர்மானம் இதற்கான அதிகாரத்தைக் கம்பெனிக்கு வழங்கவேண்டும்.

2. மைய அரசின் இதற்கான முன் ஒப்புதலைப் பெற்றிருக்க வேண்டும்.

3. பணி அமைப்புக்காக அல்லது கட்டடம் கட்டுவதற்காக அல்லது நீண்ட காலத்திற்கு இலாப நிலையில் இயங்கமுடியா ஆலைகளை நிறுவுவதற்காக நிதி திரட்டும் நோக்குடன் பங்குகள் வெளியிடப்பட்டிருக்கவேண்டும்.

4. மைய அரசு முடிவுசெய்யும் காலத்திற்கு மட்டுமே வட்டி தரப்படும்.

பணி அல்லது கட்டடம் முடிவுற்ற அல்லது ஆலை நிறுவப்பட்ட அரையாண்டிற்கு அடுத்த அரையாண்டு முடிவுக்குமேல்

இக் காலவரையறை செல்லக்கூடாது. எடுத்துக்காட்டாக, 1973 ஏப்ரல் 25-ல் பணி முடிவுற்றதாகக் கொண்டால், 1973 திசம்பர் 31-ற்குப் பிறகு வட்டி தரக்கூடாது.

5. ஆண்டுவட்டி 4 சதவீதத்திற்கு மிகக்கூடாது. அல்லது மைய அரசு அறிவிக்கும் வட்டி வீதத்திற்கு மிகாமலிருக்கவேண்டும்.

கம்பெனி வழங்கும் அவ் வட்டியை அமைப்புச் செலவாகக் கொள்ளலாம். அதாவது இவ் வட்டி ஒரு முதலீட்டுச் செலவாகும்.

இவ்வாறு பங்குமுதல் மீது 208-வது பிரிவின்கீழ்த் தரப்படும் வட்டி முதல் தொகையிலிருந்து வழங்கும் பங்காதாயமாகக் கருதப்படமாட்டாது. **இலாபம் ஏற்பட முடியாக் காலங்களில், பங்காதாயம் வழங்க முடியா நிலையில் இவ்வட்டி தரப்படுகிறது என்பதை மறத்தலாகாது.**

**பங்காதாயம் வழங்கல் பற்றிய விதிமுறைகள்**

கம்பெனிச் சட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை 'அ' (Table A) பங்காதாயம் பற்றிய பல விதிமுறைகளை உள்ளடக்கியிருக்கிறது. தனக்கென்று செயல்முறை விதிகளை வகுத்துக் கொள்ளாக் கூட்டுப் பங்குக் கம்பெனி அனைத்தும் இதில் கண்டுள்ள விதிமுறைகளைப் பின்பற்றியாக வேண்டும். அவை கீழே சுருக்கமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன :

1. இயக்குநரவை பரிந்துரை செய்த அளவிற்கு மிகாமல் கம்பெனி தனது ஆண்டுக் கூட்டத்தில் பங்காதாயம் வழங்க அறிவிக்கலாம்.

2. இயக்குநரவை பங்காதாயம் சதவீதத்தைப் பரிந்துரை செய்யுமுன்னர் பல சூழ்நிலைகளையும் ஆயும். காப்புகள் எதற்கும் கம்பெனியின் இலாபத்தை ஒதுக்கவிரும்பின், அதற்கு முதலில் வகை செய்யலாம். எதிர்பாராச் சூழ்நிலைகட்காகவோ, சீரான பங்காதாயம் ஒவ்வோராண்டும் வழங்கவோ கம்பெனியின் இலாபத்தை ஒதுக்கலாம். அல்லது ஒதுக்கப்படும் தொகையை அதன் தொழிலிலேயே பயன்படுத்திக் கொள்ளலாம். அல்லது இயக்குநரவை சரியென நினைக்கும் வகையில் வேறு முதலீடுகளில் பயன்படுத்தலாம். ஈட்டிய இலாப முழுவதையும் பங்குநர்கட்குப் பிரித்துக்கொடுக்க வேண்டுவதில்லை.

பங்குகள் மீது முன்கூட்டிச் செலுத்தப்பெற்ற தொகையைப் பங்குகள் மீது முன்கூட்டிச் செலுத்தப்பெற்ற தொகையாகக் கொள்ளக்கூடாது (அல்லது, பங்காதாயம் வழங்க முன்கூட்டிச் செலுத்தப்பெற்ற பங்குத் தொகையைக் கணக்கிலெடுத்துக் கொள்ளக்கூடாது).

பங்குகள் மீது செலுத்தப்பட்டிருக்கும் அல்லது செலுத்தப் பட்டதாக வரவு வைக்கப்பட்டிருக்கும் தொகையின்பேரில் பங் காதாயம் வழங்கப்படவேண்டும். ஆனால், கம்பெனி விரும்பின், எவ்வளவு குறைவாகப் பங்குகள் மீது தொகை செலுத்தப்பட் டிருப்பினும், பங்கின் பெயரளவு மதிப்பின் அடிப்படையிலும் பங்காதாயம் வழங்கலாம்.

பங்குகள் மீது தொகை நிலுவையிலிருக்குமேயானால், செலுத்தப்பட்ட தொகை மீதுதான் பங்காதாயம் கணக்கிட வேண்டும். அழைப்புத் தொகை நிலுவையிலிருக்கும் பங்குகள் மீது பங்காதாயம் வழங்கக்கூடாது என்று கம்பெனியின் செயல் முறை விதிகளில் கண்டிருப்பின், அத்தகைய பங்குகள் மீது பங்காதாயம் வழங்குவதைத் தடை செய்யலாம்.

வேறு நிபந்தனைகள் பேரில் வெளியிட்டிருந்தாலொழிய பங் காதாயம் வழங்குவதில் காலத்தையும் கணக்கிலெடுத்துக்கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, ரூ. 20 மதிப்புள்ள 10,000 பங்குகள் 1972 சூலை 1-ல் இருந்தன. பங்கொன்றுக்கு ரூ. 15 வரை அந் நாளில் செலுத்தப்பட்டிருந்தது. சனவரி 1-ல் இறுதி அழைப்புத்தொகை ரூ. 5 செலுத்தப்பட்டது. 1973 சூன் 30ஆம் நாளில் முடியும் ஆண்டுக்கு 10 சதவீதம் பங்காதா யம் வழங்கப்படும் என்றால் கீழ்க்கண்டவாறு அது கணக்கிடப் படும்.

| | ரூ. |
|---|---|
| ரூ. 1,50,000 மீது 1 ஆண்டுக்கு 10 சதவீதம் | 15,000 |
| ரூ. 50,000 மீது 6 திங்கட்கு 10 சதவீதம் | 2,500 |
| ரூ. | 17,500 |

குறிப்பிட்ட நாளிலிருந்து பங்காதாயம் வழங்கத்தக்கவை என்று பங்கு வெளியீட்டு நிபந்தனை குறிப்பிட்டிருந்தால், அந் நாளிலிருந்து பங்காதாயம் வழங்கலாம்.

அழைப்புத் தொகையையோ அல்லது பங்குகள் மீதான வேறு தொகையையோ அந் நாளில் உறுப்பினர் கம்பெனிக்குத் தரவேண்டியிருப்பின், அத் தொகையை அவர்கட்குச் சேரவேண்டிய இலாப ஈவிலிருந்து இயக்குநரவை கழித்துக் கொள்ளலாம்.

பங்காதாயம் ரொக்கமாகவே வழங்கப்படவேண்டும். இதைக் காசோலை விடுத்தோ, பங்காதாய ஆணை (Dividend Warrant) வழங்கியோ செலுத்தலாம்.

பங்காதாயம் வழங்குமுன் போதிய பணவசதி (நடைமுறை முதல்) இருக்கிறதா என்பதையும் கவனிக்கவேண்டும். காரணம், பங்காதாயம் வழங்கிய 42 நாள்களுக்குள் அதனைச் செலுத்தியாக வேண்டும்.

கட்டாயமாகக் காப்புக்குத் தொகை ஒதுக்கவேண்டுமென்று கூறியிருப்பின், அதனையும் இயக்குநரவை கவனத்தில் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, வங்கிக் கம்பெனியாயின் அதன் இலாபத்தில் 20 சதவீதத்தை ஒவ்வோராண்டும் காப்புக்கு எடுத்துச் செல்லவேண்டும்.

இயக்குநரவைதான் பங்காதாயம் வழங்கப் பரிந்துரை செய்வதுடன், எவ்வளவு வழங்குவது என்பதையும் முடிவு செய்கின்றது. செயல்முறை விதிகளில் கூறப்பட்டுள்ளவற்றைப் பின்பற்றியும், கம்பெனியின் எதிர்கால நிதி வசதி, நிதித் தேவை போன்றவற்றை ஆய்ந்தும், காப்புக்கு ஒதுக்கவேண்டிய தொகையைக் கணக்கிலெடுத்துக்கொண்டும் பங்காதாயச் சதவீதத்தைப் பரிந்துரை செய்கின்றனர். எனவே, அவர்கள் பரிந்துரை செய்த தொகையைவிட கூடுதலாகக் கொடுக்குமாறு பங்குநர்கள் கட்டாயப்படுத்த முடியாது. பாண்டு—பேரே ஹேமேடைட் ஸ்டீல் கம்பெனி வழக்கில் (Bond *Vs.* Barrow Haematite Steel Ltd.) நீதிபதி 'இயக்குநர்கள் சரியெனத் தீர்மானித்த தொகையைவிட கூடுதலாகக் கொடுக்குமாறு அவருக்காகக் கட்டாயப்படுத்த நீதிமன்றம் விரும்பவில்லை. ஓராண்டு இலாபத்தின் ஒரு பகுதியை அடுத்த ஆண்டு இருப்புநிலைக் கணக்கிற்கு எடுத்துச் செல்வது சட்டத்திற்குட்பட்டது; சரியானது என அவர்கள் கருதுவதால், முழு இலாபத் தொகையையும் பிரித்துக் கொடுக்குமாறு அவர்களை நீதிமன்றம் கட்டாயப்படுத்தாது'. என்று கூறியிருப்பதை இவண் நோக்குதல் நலம்.

ஆண்டுக் கூட்டத்தில் இலாபம் வழங்கப்பட்டவுடன் 42 நாள்களுக்குள் அதனைச் செலுத்தும் பணியில் கம்பெனி ஈடுபட

வேண்டும். இதற்காகப் பங்காதாயப் பட்டியல் ஒன்று உறுப்பினர் பதிவேட்டிலிருந்து தயார் செய்யப்படுகிறது. ஒவ்வொரு பங்குநரின் பெயர், முகவரி, அவர் வைத்துள்ள பங்குகளின் எண்ணிக்கை பங்குகள் மீது செலுத்தப்பெற்றுள்ள தொகை, அவற்றின் மீது மொத்தம் தரவேண்டிய பங்காதாயம், அவற்றிலிருந்து கழிக்கப்படவேண்டிய வருமானவரி, செலுத்தவேண்டிய நிகர தொகை, அவர்க்கு அதைச் செலுத்தவேண்டுமா அல்லது அவர்களின் வங்கிக்கு அனுப்பவேண்டுமா போன்ற விவரங்கள் அப் பட்டியலில் கொடுக்கப்பட்டிருக்கும்.

பங்காதாய ஆணை பின்னர் தயாரிக்கப்பட்டு, பதிவு செய்துள்ள பங்குநர்கட்கு அனுப்பப்படுகிறது. இதனைக் காட்டிப் பங்குநர்கள் தங்கட்குச் சேரவேண்டிய தொகையைப் பெற்றுக் கொள்ளலாம். கம்பெனியின் வங்கியே அவற்றின்மீது பங்காதாயத் தொகையைச் செலுத்தலாம்; அல்லது காசோலை விடுத்து கம்பெனியே பங்காதாயத்தைச் செலுத்தலாம்.

பங்காதாய ஆணைமீது வங்கி பணம் செலுத்தவேண்டியிருப்பின், ஒவ்வொரு முறையும் பங்காதாயத்திற்குத் தனி வங்கிக் கணக்கு தொடங்குவது வழக்கம். மொத்தம் செலுத்தவேண்டிய தொகைக்குக் கம்பெனி தனது பொதுவான வங்கிக் கணக்கின்மீது காசோலை விடுத்து வங்கியில் தொடங்கியுள்ள குறிப்பிட்ட பங்காதாயக் கணக்கில் அதனைச் செலுத்தும். பங்காதாய ஆணைகளின் பாதி நகலும், பங்காதாயப் பட்டியலும் வங்கிக்கு அனுப்பப்படுகின்றன. பங்காதாயம் செலுத்தப்பெற்றதும் இறுதியில் இன்னும் செலுத்தப்பெறாதிருக்கும் பங்காதாயம் பற்றிய பட்டியலை வங்கி தயாரித்துக் கம்பெனியிடம் அனுப்பும்.

பங்காதாய ஆணைகட்குப் பணம் கம்பெனியின் பதிவலுவலகத்தில் தரப்படுமாயின், பங்காதாயப் பட்டியலில் இதுபற்றிக் குறிக்கப்படும்.

வருமானவரிச் சட்டப்படி, குறிப்பிட்ட வீதத்தில் ஒவ்வொரு பங்குநர்க்கும் சேரவேண்டிய பங்காதாயத் தொகையிலிருந்து வருமானவரி கழிக்கப்படவேண்டும். ஓராண்டில் குறிப்பிட்ட தொகைக்குமேல் பங்காதாயம் வழங்கப்பட்டுள்ள பங்குநர்களின் பெயர், முகவரி முதலிய விவரங்கள் அடங்கியுள்ள பட்டியலை வருமானவரி அலுவலருக்குக் கம்பெனி அனுப்பவேண்டும்.

### இடைக்காலப் பங்காதாயம் (Interim Dividend)

இரு ஆண்டுப் பொதுக்கூட்டங்கட்கிடையே வழங்கப்படும் பங்காதாயம் இடைக்காலப் பங்காதாயம் எனப்படும். அட்டவணை 'அ' 86-வது விதி, கம்பெனியின் இலாபத்தைப் பொருத்துத் தக்க இடைக்காலப் பங்காதாயம் வழங்கும் அதிகாரத்தை இயக்குநரவைக்கு அளிக்கிறது. வழக்கமாகக் கம்பெனியின் செயல்முறை விதிகள் இடைக்காலப் பங்காதாயம் வழங்குவதற்கு இசைவு தருகின்றன. இடைக்காலப் பங்காதாயம் வழங்குவது குறித்துக் கம்பெனியின் செயல்முறை விதிகளில் ஏதும் கூறப்படவில்லையெனில், இதுகுறித்து இயக்குநர்கள் செயல் மேற்கொள்ளும் வகையில் முதலில் அவற்றைத் திருத்தவேண்டும்.

இடைக்காலப் பங்காதாயத்தை இயக்குநரவை வழங்குவதால், பங்குநர்களின் கூட்டம் நடைபெற வேண்டுவதில்லை. எனவே, இதை வழங்குமுன் இயக்குநர்கள் கம்பெனியின் நிலையினை ஆழ்ந்து ஆயவேண்டும்.

ஏற்பட்ட இலாபத்தை அறிய இடைக்காலக் கணக்குகளைத் தயாரிக்கவேண்டும்.

கடந்த சில ஆண்டுகளில் விற்பனையும், விற்பனையில் மொத்த இலாபத்தின் சதவீதமும் ஏறத்தாழ சீராக இருந்து வந்தாலும், நடப்பாண்டில் இலாபத்தைப் பாதிக்கும் எச் சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கவில்லையென்றாலும் சரக்கிருப்பைக் கணக்கெடுத்துச் கணக்குகளை முடிவுசெய்ய வேண்டுவதில்லை. இவ்வாறு அறியும் மொத்த இலாபத்திலிருந்து பிற செலவுக்காகக் கழித்துத் தேய்மானம், ஐயக்கடன் காப்பு போன்றவற்றிற்கு வகை செய்து, நிகர இலாபத்தை உணரவேண்டும்.

தொழில் நிலையையும் கருத்திக்கொள்ள வேண்டும். தொழில் நிலை மந்தமாகும் போக்கு தென்படுமாயின், முதல் அரையாண்டில் ஏற்பட்ட ஆதாயம் பின்வரும் அரையாண்டில் மறைந்து நட்டத்தில் முடியலாம். அந் நிலை ஏற்படின் பங்கு முதலிலிருந்து இடைக்காலப் பங்காதாயம் வழங்கப்பட்டதாகக் கொள்ளப்படும்.

இறுதியாக வழங்கவுள்ள இலாப ஈவினும் இடைக்காலப் பங்காதாயம் குறைந்த சதவீதத்தில் இருக்கவேண்டும். இல்லையெனின் பங்கின் மதிப்பு குறைந்துபோகும்.

கம்பெனியின் நிதி நிலையையும் கணக்கிலெடுத்துக்கொள்ள வேண்டும். இலாபம் அதிகம் ஈட்டியிருப்பினும், போதிய ரொக்க மில்லையெனில், இடைக்காலப் பங்காதாயம் வழங்குதல் விவேக மன்று. அடுத்து வருங்காலங்களில் முதலினச் செலவுகளைக் கம்பெனி மேற்கொள்ளும் திட்டம் ஏதேனுமுள்ளதா என்பதை யும் சிந்தித்து இயக்குநர்கள் செயல்படவேண்டும்.

**முன்னுரிமைப் பங்குகள் மீது பங்காதாயம்**

நேர்மைப் பங்குநர்கள் பங்காதாயம் பெறுமுன்னர், பங்கா தாயத்தினைப் பெறும் உரிமை முன்னுரிமைப் பங்குநர்கட்கு உண்டு. குவிவு முன்னுரிமைப் பங்குகளைப் பற்றி முன்னரே விளக்கியிருக்கிறோம். இலாபம் ஏற்படா ஆண்டுகளில் தரப் படாத பங்காதாயத்தையும் பின்னர் போதிய இலாபம் ஈட்டும் ஆண்டில் சேர்த்துப் பெறும் உரிமை இப் பங்குகட்குண்டு என்று கூறியிருக்கிறோம். பின்னர் ஈட்டும் இலாபத்திலிருந்துதான் பங் காதாய நிலுவையும் வழங்கப்படுமாதலால், நிலுவையிலுள்ள பங்காதாயத்தை ஒரு பொறுப்பாகக் கருதக்கூடாது. பின்வரும் ஆண்டில் கம்பெனி போதிய இலாபம் பெற்றாலும், தீர்மானம் நிறைவேற்றி வழங்கினால்தான் அத் தொகையைப் பங்குநர்கள் பெறமுடியும்.

நிலுவையிலுள்ள பங்காதாயத்தினைக் கணக்கேடுகளில் பதிய வேண்டியதில்லையெனினும், இருப்புநிலைக் குறிப்பில் பொறுப்புகள் பகுதியில் நிகழ்வடைப் பொறுப்பாக (Contingent liability) காட்டவேண்டும். அத்துடன் எத்துணை ஆண்டுகட்குப் பங்கா தாயம் நிலுவையில் உள்ளது என்ற விவரத்தையும் வெளிப்படுத்த வேண்டும்.

முன்னுரிமைப் பங்குநர்கட்கு வழங்கும் பங்காதாயத்தி லிருந்து வருமான வரியைக் கழிக்கவேண்டும்.

**உரிமை கோராப் பங்காதாயம் (Unclaimed Dividend)**

பங்காதாயம் அறிவிக்கப்பட்ட பின்னர் சில பங்குநர்கள் அதனைக் கோராதிருக்கலாம். இவ்வாறு பங்குகள் மீது செலுத்தப் பெறாதுள்ள இலாப ஈவினை 'உரிமை கோராப் பங்காதாயம்' (Unclaimed Dividend) எனும் கணக்கிற்கு எடுத்துச்செல்வது வழக்கம். இது இருப்புநிலைக் குறிப்பில் பொறுப்புகள் பகுதியில் 'நடப்புப் பொறுப்புகள்' எனும் தலைப்பின் கீழ்க் காண்பிக்கப் பெறும். பின்னர், பங்குநர்கள் இதனைக் கோரி பணம் பெறும்

போழ்து இக் கணக்கில் பற்று வைக்கப்படும். சில வேளைகளில், குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் பங்காதாயம் கோரப்படவில்லையானால், அதனை ஒறுப்பிழப்புச் செய்துகொள்ளும் உரிமையை இயக்குநர்கட்குக் கம்பெனியின் செயல்முறை விதிகள் வழங்கலாம். அவ்வாறாயின், அவ்வாறு ஒறுப்பிழப்புச் செய்யப்பட்ட பங்காதாயத்தினை அவ்வாண்டின் இலாப-நட்டக் கணக்கிற்கு எடுத்துச் செல்லாமல், **பொதுக் காப்புக் கணக்கில் வரவு வைக்க வேண்டும்.**

உரிமைகோராப் பங்காதாயத்தைப் பறிமுதல் செய்தல் குறித்துக் கம்பெனியின் செயல்முறை விதிகள் ஏதும் கூறாதிருப்பின் அது காலாவதியாவதற்குள் (அறிவிக்கப்பட்ட ஆறு ஆண்டுகள்) உறுப்பினர்கள் அதனைப் பெற்றுக்கொள்ளும் உரிமையுண்டு.

இவ்வாறு உரிமை கோரப்பெறாப் பங்காதாயம் காலாவதியாகும் வரை இருப்புநிலைக் குறிப்பில் பொறுப்புகள் பகுதியில் காட்டப்பட வேண்டும்.

## இலாபப் பகிர்வைப் பதிதல்

தேய்மானத்திற்கும், வருமான வரிக்கும் இயக்குநர்களே வகை செய்கின்றனர். எனவே, பகிர்தகு பங்காதாயத்தை அறியு முன்னர் இவை இலாப-நட்டக் கணக்கில் பற்று வைக்கப்படுகின்றன. இருப்புநிலைக் குறிப்பில் குறிப்பிட்ட நிலைச் சொத்துகளினின்றும் தேய்மானம் கழித்துக் காண்பிக்கப்பெறும். பிற ஒதுக்குகள், பொறுப்புகள் பகுதியில் 'நடப்புப் பொறுப்புகளும், ஒதுக்குகளும்' எனும் தலைப்பின் கீழ்க் காட்டப்படும்.

பங்குநர்களின் இசைவைப் பெறாமலேயே காப்புகட்கு இலாபத்தை ஒதுக்கும் அதிகாரம் இயக்குநர்கட்கு உண்டெனில், இலாப-நட்டக் கணக்கின் பகிர்வுப் பகுதியில், அதாவது இலாப-நட்டப் பகிர்வுக் கணக்கில் பற்று வைக்கப்படும். பின்னர் இருப்புநிலைக் குறிப்பில் பொறுப்புகள் பகுதியில் 'காப்புகளும் மிகுதியும்' எனும் தலைப்பின்கீழ் இவ்வாண்டில் கூட்டப்பட்ட தொகைகளாகக் காட்டப்பெறும்.

பங்குநர்கள் ஒப்புதலுக்காகக் காப்புகட்கு இலாபத்தை ஒதுக்க இயக்குநர்கள் பரிந்துரை மட்டில் செய்யும்போழ்து, இலாப-நட்டப் பகிர்வுக் கணக்கில் 'திட்டமிட்ட காப்பு' (Proposed Reserve) என்று பற்று வைக்கவேண்டும். பின்னர், இவ்வகையான திட்டமிட்ட காப்புகளை இருப்புநிலைக் குறிப்பில் 'காப்புகளும் மிகுதியும்'

எனும் தலைப்பின்கீழ்க் காப்புகளுடன் கூட்டிக் காட்டாமல், தனியே 'திட்டமிட்ட காப்புக் கணக்கைக்' காட்டவேண்டும்.

அவ்வாறே பங்குநர்கள் ஒப்புதலுக்காக இயக்குநரவை பரிந்துரை செய்யும் பங்காதாயத்தையும், இலாப-நட்டப் பகிர்வுக் கணக்கின் பற்றுப் பகுதியில் 'திட்டமிட்ட இலாப ஈவு' (Proposed Dividend) என்று காட்டவேண்டும். இருப்புநிலைக் குறிப்பில் 'நடப்புப் பொறுப்புகளும் ஒதுக்குகளும்' எனும் தலைப்பின் கீழ்த் 'திட்டமிட்ட பங்காதாயம்' என்று காட்டவேண்டும்.

இயக்குநர்கள் பரிந்துரை செய்த பங்காதாயத்திற்கு அடுத்த கணக்காண்டில் நடைபெறும் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் உறுப்பினர்கள் ஒப்புதலளிக்கின்றனர். அதன் பிறகே, பங்காதாயம் செலுத்தப்படவேண்டும். அப்பொழுது திட்டமிட்ட பங்காதாயக் கணக்கிலிருந்து அத் தொகை பங்காதாயக் கணக்கிற்கு மாற்றப்படும். எக் கணக்காண்டில் பங்காதாயம் அறிவிக்கப்படுகிறதோ, அவ்வாண்டு இலாப-நட்டப் பகிர்வுக் கணக்கில் அதனைப் பற்று வைக்கக் கூடாது என்பதை உணரவேண்டும்.

இலாப-நட்டப் பகிர்வுக் கணக்கில் பற்று வைக்கவேண்டிய பங்காதாயத்தொகையானது, வருமானவரி கழிக்கப்படுமுன்னுள்ள மொத்த பங்காதாயத் தொகையாகும். பங்காதாயத்தைக் கம்பெனி செலுத்தும்போழ்துதான், குறிப்பிட்ட வீதத்தில் வருமான வரியைக் கழித்துப் பங்குநர்கட்கு மீதித் தொகையை வழங்கும். அவ்வாறு கழித்த வருமான வரித்தொகையைப் பின்னர் அரசுக்குச் செலுத்திடவேண்டும்.

தற்பொழுது பங்காதாயம் மீது கணக்கிட்டுக் கழிக்க வேண்டிய வருமானவரி வீதம் 22 சதவீதம் ஆகும். ஒவ்வொரு பங்குநர்க்கும் வழங்கும் பங்காதாயம் அத் தொகையினின்றும் கழிக்கப் பெற்ற வருமானவரித் தொகை ஆகிய விவரங்களை உள்ளடக்கிய அறிக்கையொன்றைக் கம்பெனி வருமான வரி அதிகாரிகட்கு அனுப்பும். அத்துடன் பங்குநர்கட்கும், அவர்கள் சார்பில் செலுத்தப்பெற்ற வருமானவரிக்கான சான்றிதழையும் அனுப்பும். இச் சான்றிதழின் துணைகொண்டு பங்குநர்கள் வருமான வரியைத் திரும்பப் பெற்றுக்கொள்ளவோ அல்லது தங்கள் வருமானவரி விதிப்பில் சரிசெய்து கொள்ளவோ இயலும்.

இப்பொழுது வருமானவரி நீங்கிய பங்காதாயத்தைக் கம்பெனி வழங்கலாம். அந் நிலையில், பங்காதாயத்தின் மீது பங்கு

நர்கள் செலுத்தவேண்டிய வருமான வரியைக் கம்பெனியே செலுத்துவதாகப் பொருள். ரூ. 6,00,000 பங்கு முதல் மீது கம்பெனியொன்று 13 சதவீதம் வரி நீங்கிய பங்காதாயம் அளிப்ப தாகக் கொண்டால், கம்பெனி பங்குநர்கட்குத் தரவேண்டிய மொத்த பங்காதாயம் ரூ. 78,000 ஆகும். இப்பொழுது இதன் மீது வருமானவரி அலுவலகத்திற்குக் கம்பெனி செலுத்தவேண் டிய வருமானவரி கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படும்.

செலுத்தவேண்டிய வருமானவரி வீதம் 22 சதவீதம்.

மொத்தப் பங்காதாயம் ரூ. 100 எனில் செலுத்த வேண்டிய வரி ரூ. 22 போக பங்குநர் பெறுவது ரூ. 78.

எனவே ரூ. 78 வரி நீங்கிய பங்காதாயம் எனில், செலுத்த வேண்டிய வரி ரூ. 22. ரூ. 78,000 வரி நீங்கிய பங்காதாயத் துக்குச் செலுத்தவேண்டிய வரி.

$$= 78,000 \times \frac{22}{78} = \text{ரூ. } 22,000$$

இலாப-நட்டக் கணக்கில் பற்று வைக்கவேண்டிய மொத்தத் தொகை ரூ. 1,00,000 ஆகும். (ரூ. 78,000+ரூ. 22,000)

**பங்காதாயம் பற்றிய குறிப்பேட்டுப் பதிவுகள்**

பங்காதாயம் வழங்கும்பொருட்டுத் தனி வங்கிக் கணக்கைக் கம்பெனி தொடங்குமென்று முன்னரே கூறியிருக்கிறோம். முதலில் மொத்தம் செலுத்தவேண்டிய பங்காதாயத் தொகை அளவிற்கு வருமானவரி நீங்கிய பங்காதாயத் தொகைக்கு பொதுவங்கிக் கணக்கிலிருந்து எடுத்துத் தனிக் கணக்கொன்றைத் தொடங்கும். இதிலிருந்துதான் பங்காதாயம் ஆணைகட்கான பணம் வழங்கப் படும். இக் கணக்கில் மீதியுள்ள தொகை உரிமை கோராப் பங்காதாயமாகும்.

1. முதலில் பங்காதாயத்தினை இயக்குநர்கள் பரிந்துரை செய்யும்போழ்து, இலாப-நட்டப் பகிர்வுக் கணக்கில் பற்றும், திட்டமிட்ட பங்காதாயக் கணக்கில் வரவும் வைக்கப்படும்.

இலாப-நட்டப் பகிர்வுக் கணக்கில் போதிய இருப்பு இல்லா நிலையில், பங்காதாயச் சமன்செய் காப்புக் கணக்கிலிருந்து அல்லது

பொதுக் காப்பிலிருந்து எடுத்துக் கொள்ளலாம் என்று கூறி யிருக்கிறோமல்லவா? இதற்குப் பங்காதாயச் சமன்செய் காப்புக் கணக்கில் அல்லது பொதுக்காப்புக் கணக்கில் பற்றும், இலாப-நட்டப் பகிர்வுக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

.2 பின்னர், கம்பெனி ஆண்டுக் கூட்டத்தில் பங்காதாயத் தினை அறிவித்ததும், அத் தொகையைப் பங்குநர்கட்கு வழங்கியாக வேண்டும். இப்பொழுது வருமானவரி எவ்வளவு கழிக்கவேண்டும், பங்குநர்கட்கு நிகர தொகை எவ்வளவு தரவேண்டும் என்பதைக் கணக்கிட்டுப் பதிவு செய்யவேண்டும். இதற்குத் திட்டமிட்ட பங்காதாயக் கணக்கில் மொத்தத் தொகைக்கும் பற்றுவைத்து, எவ்வளவு பங்குநர்கட்குச் செலுத்தவேண்டுமோ அத் தொகை அளவிற்குச் 'செலுத்தவேண்டிய பங்காதாயம்' எனும் கணக்கில் (Dividend Payable Account) வரவும், கழிக்கவேண்டிய வருமானவரித் தொகை அளவிற்கு, வருமானவரிக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும். கீழ்க்கண்டவாறு பதிவு இருக்கும் :

திட்டமிட்டப் பங்காதாயக் க/கு ப
செலுத்தவேண்டிய பங்காதாயக் க/கு
வருமானவரிக் க/கு

மேற்சொன்ன இரு பதிவுகளுக்கு மாறாக, இரண்டையும் சேர்த்துக் கீழ்க்கண்டவாறும் ஒரே பதிவாகச் செய்வது வழக்கம்.

இலாப-நட்டப் பகிர்வுக் க/கு ப
செலுத்தவேண்டிய பங்காதாயக் க/கு
வருமானவரிக் க/கு

3. பங்காதாயத் தொகையை வழங்கும் நோக்குடன் தனி வங்கிக் கணக்கு தொடங்கும்போழ்து 'பங்காதாய வங்கிக் கணக்கில்' (Dividend Bank Account) பற்றும், வங்கிக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும் (வரி நீங்கிய பங்காதாய அளவிற்குத்தான் தனி வங்கிக் கணக்கில் தொகை ஒதுக்கப்பெறும் என்பதை மறத்தலாகாது).

4. பங்காதாயத் தொகையைப் பங்குநர்கட்கு வழங்கும் போழ்து, செலுத்தவேண்டிய பங்காதாயக் கணக்கில் பற்றும், பங்காதாய வங்கிக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

எல்லாப் பங்குநர்கட்கும் உடனடியாகப் பங்காதாயத்தினை வசூல் செய்வதில்லை; ஆண்டிறுதியில் அவ்வாறு பங்குநர்கள் கம்பெனியிடமிருந்து பெற்றுக்கொள்ளாத பங்காதாயத்தினை 'உரிமை கோராப் பங்காதாயம்' (Unclaimed dividend) எனும் கணக்கிற்கு மாற்றுவது வழக்கம். இதற்குச் செலுத்தவேண்டிய பங்காதாயக் கணக்கில் பற்றும், உரிமைகோராப் பங்காதாயக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

உரிமை கோராப் பங்காதாயக் கணக்கு இருப்புநிலைக் குறிப்பில் பொறுப்புகள் பகுதியில் 'நடப்புப் பொறுப்புகளும் ஒதுக்குகளும்' எனும் தலைப்பின்கீழ்க் காட்டப்பெறும்.

இவ்வுரிமை கோராப் பங்காதாயத் தொகை பங்காதாய வங்கிக் கணக்கில் இருக்குமல்லவா? இதனை மீண்டும் பொதுவங்கிக் கணக்கிற்கு மாற்றிக்கொள்ளலாம். பொதுவங்கிக் கணக்கில் பற்றும், பங்காதாய வங்கிக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும். அல்லது இதனைத் தனியே முதலீடு செய்யலாம்; அல்லது தனி வைப்புக் கணக்கில் போட்டு வைக்கலாம். எப்படி இத் தொகை ஒதுக்கி வைக்கப்படுகிறதோ, அதற்கேற்றாற்போல், உரிமைகோராப் பங்காதாயம் முதலீட்டுக் கணக்கில் அல்லது உரிமைகோராப் பங்காதாய வைப்புக் கணக்கில் பற்று வைக்கவேண்டும்.

குறிப்பிட்ட காலக்கெடுவிற்குப்பின் உரிமைகோராப் பங்காதாயத்தினைக் கம்பெனி ஒறுப்பிழப்புச் (பறிமுதல் – forfeiture) செய்வது வழக்கம் என்று கூறியிருக்கிறோம். இதற்கான உரிமையை அது பெற்றிருக்கவேண்டும். ஒறுப்பிழப்புச் செய்யப்படும் இத் தொகையைப் பொதுக்காப்புக் கணக்கிற்கு எடுத்துச் செல்வது வழக்கம். எனவே, உரிமை கோராப் பங்காதாயக் கணக்கில் பற்றும், பொதுக்காப்புக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

## எடுத்துக்காட்டு 82

*1972* சனவரி *1*-ல் ஒரு கம்பெனியின் இலாப-நட்டக் கணக்கில் ரூ. *25,000* வரவிருப்பும், பொதுக்காப்பில் ரூ. *80,000*-மும் இருந்தன. *1972*ஆம் ஆண்டில் அது ஈட்டிய இலாபம் ரூ. *2,40,000* (வரிக்கும் தேய்மானத்திற்கும் ஒதுக்கியபின்னர்). இயக்குநரவை கீழ்க்கண்டவாறு இலாபத்தைப் பகிரத் தீர்மானித்தது.

*1.* பங்காதாயச் சமன்செய் காப்புக்கு ரூ. *25,000* ஒதுக்குதல்.

2. ஒன்று ரூ. 100 மதிப்புடைய 5,000 முன்னுரிமைப் பங்குகள் மீது 8 சதவீதம் வரி நீங்கிய (free of tax) பங்காதாயம் வழங்கல்.

3. ஒன்று ரூ. 100 மதிப்புடைய 10,000 நேர்மைப் பங்குகள் மீது 12 சதவீதம் பங்காதாயம் வழங்குதல்.

4. பொதுக்காப்பிற்கு ரூ. 25,000 ஒதுக்குதல்.

5. மேம்பாட்டுத் தள்ளுபடிக் காப்புக்கு ரூ. 30,000 வழங்குதல்.

வருமான வரி 20% வீதத்தில் கழிக்கப்படுகிறது என்றுகொண்டு, வேண்டிய குறிப்பேட்டுப் பதிவுகளையும், இலாப-நட்டப் பகிர்வுக் கணக்கையும் தயாரித்து, இருப்புநிலைக் குறிப்பில் இவை எவ்வாறு தோன்றும் என்பதையும் காட்டுக.

**விடை :**

இப்பொழுதுள்ள வருமானவரிச் சட்டத்தின்படி வரி கழிக்காமல் பங்காதாயம் வழங்கக்கூடாது. வரி நீங்கிய இலாப ஈவு 8 சதவீதமாக இருக்கவேண்டும் என்று கணக்கில் கொடுக்கப் பட்டிருப்பதால், வரி கழிக்குமுன்னுள்ள பங்காதாய விகிதத் தொகையைக் கண்டுபிடிக்க வேண்டும்.

வரி நீங்கிய பங்காதாயம் $= 5,00,000 \times \frac{8}{100} =$ ரூ. 40,000

கழிக்கப்படும் வருமானவரி 20 சதவீதம்

ரூ. 80 வருமான வரி நீங்கிய இலாப ஈவு எனில் மொத்தபங்காதாயம் ரூ. 100

ரூ. 40,000 வருமான வரி நீங்கிய பங்காதாயம் எனில் மொத்தப்

பங்காதாயம் $= 40,000 \times \frac{100}{80} =$ ரூ. 50,000

முன்னுரிமைப் பங்குகளுக்கான பங்காதாயத்தில் கழிக்கப்பட்ட வருமானவரி = ரூ. 10,000

இப்பொழுது குறிப்பேட்டுப் பதிவுகளைச் செய்யலாம் :

## குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே. ப. எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| | இலாப-நட்டப் பகிர்வுக் க/கு ப | | 2,50,000 | |
| | பங்காதாயச் சமன்செய் காப்பு | | | 25,000 |
| | பொதுக்காப்பு | | | 25,000 |
| | மேம்பாட்டுத் தள்ளுபடிக் காப்பு | | | 30,000 |
| | திட்டமிட்ட நேர்மைப் பங்காதாயம் | | | 1,20,000 |
| | திட்டமிட்ட முன்னுரிமைப் பங்காதாயம் | | | 50,000 |
| | (இயக்குநரவை தீர்மானித்தவாறு இலாபத்தைப் பகிர்ந்தது.) | | | |
| | திட்டமிட்ட நேர்மைப் பங்காதாயம் ப | | 1,20,000 | |
| | செலுத்தவேண்டிய நேர்மைப் பங்காதாயம் | | | 96,000 |
| | வருமானவரிக் க/கு | | | 24,000 |
| | (பங்காதாயத்தை அறிவித்ததும், வருமானவரி நீங்கிய தொகையைப் பங்குநர்கட்குச் செலுத்த.) | | | |
| | திட்டமிட்ட முன்னுரிமைப் பங்காதாயம் ப | | 50,000 | |
| | செலுத்தவேண்டிய முன்னுரிமைப் பங்காதாயம் | | | 40,000 |
| | வருமானவரிக் க/கு | | | 10,000 |
| | (பங்காதாயத்தை அறிவித்ததும் வருமானவரி நீங்கிய தொகையைப் பங்குநர்கட்குச் செலுத்த.) | | | |

## குறிப்பேட்டுப் பதிவுகள்—(தொடர்ச்சி)

| நாள் | விவரம் | பே. ப. எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| | பங்காதாய வங்கிக் க/கு ப<br>வங்கிக் க/கு<br>(மொத்தம் வரி நீங்கி செலுத்தவேண்டிய பங்காதாயத் தொகைக்காகத் தனி வங்கிக் கணக்குத் தொடங்க.) | | 1,36,000 | 1,36,000 |
| | வருமானவரிக் க/கு ப<br>வங்கிக் க/கு<br>(வழங்கிய பங்காதாயத்திலிருந்து கழித்த வருமான வரியைச் செலுத்தியது.) | | 34,000 | 34,000 |
| | செலுத்தவேண்டிய நேர்மைப் பங்காதாயக் க/கு ப<br>செலுத்தவேண்டிய முன்னுரிமைப் பங்காதாயக் க/கு ப<br>பங்காதாய வங்கிக் க/கு<br>(பங்காதாயத்தைப் பங்குநர்கட்குச் செலுத்தியது.) | | 96,000<br>40,000 | 1,36,000 |

### 1972 திசம்பர் 31-ல் முடியும் ஆண்டுக்கான இலாப-நட்டப் பகிர்வு கணக்கு

பற்று | வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | பங்காதாயச் சமன்செய் காப்பு .. | | 25,000 | | இருப்பு கீ/கொ .. | | 25,000 |
| | பொதுக்காப்பு .. | | 25,000 | | இவ்வாண்டைய இலாபம் .. | | 2.40,000 |
| | மேம்பாட்டுத் தள்ளுபடிக் காப்பு .. | | 30,000 | | | | |
| | திட்டமிட்ட நேர்மைப் பங்காதாயம் .. | | 1,20,000 | | | | |
| | திட்டமிட்ட முன்னுரிமைப் பங்காதாயம் .. | | 50,000 | | | | |
| | இருப்பு கீ/இ .. | | 15,000 | | | | |
| | | | 2,65,000 | | | | 2,65,000 |

## 1972 திசம்பர் 31-ற்கான இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புகள் | | | சொத்துகள் |
|---|---|---|---|
| | | ரூ. | |
| **காப்பும் மிகுதியும் :** | | | |
| மேம்பாட்டுத் தள்ளுபடிக் காப்பு .. | | 30,000 | |
| பொதுக்காப்பு : | | | |
| கடந்த இருப்புநிலைக் குறிப் பின்படி இருப்பு ரூ. | 80,000 | | |
| இவ்வாண்டில் கூட்டியது ரூ. | 25,000 | | |
| | | 1,05,000 | |
| பங்காதாயச் சமன்செய் காப்பு .. | | 25,000 | |
| இலாப-நட்டக் க/கு .. | | 15,000 | |
| **நடப்புப் பொறுப்புகளும் ஒதுக்குகளும் :** | | | |
| ஒதுக்குகள் : | | | |
| திட்டமிட்ட பங்காதாயம் : | | | |
| நேர்மைப் பங்குகள் ரூ. | 1,20,000 | | |
| முன்னுரிமைப் பங்குகள் ரூ. | 50,000 | | |
| | | 1,70,000 | |

## எடுத்துக்காட்டு 83

W. D. Ltd. என்னும் கம்பெனி பங்கொன்று ரூ. 100 வீதம் 10,000 பங்குகளை உடையது. திசம்பர் 31-ல் கணக்குகள் முடிக்கப்பெறுகின்றன. 1972 திசம்பர் 31-ல் கணக்குகள் கீழ்க்கண்ட இருப்புகளைக் காட்டின :

| | | ரூ. |
|---|---|---|
| இலாப-நட்டக் கணக்கு | .. | 2,00,000 |
| பங்காதாயம் எண் 15 | .. | 4,500 |
| பங்காதாயம் எண் 16 | .. | 8,400 |
| உரிமைகோராப் பங்காதாயம் | .. | 3,700 |
| பங்காதாய வங்கிக் கணக்கு (எண் 15, 16-ற்குரியது) | .. | 12,900 |
| வைப்புக் கணக்கு (உரிமை கோராப் பங்காதாயம்) | .. | 3,700 |

1973 மார்ச் 10-ல் நடைபெற்ற ஆண்டுக் கூட்டத்தில் 1972ஆம் ஆண்டுக்காக 15 சதவீதம் பங்காதாயம் (எண் 17) வழங்க அறிவிக்கப்பட்டது. 1973 ஆகஸ்டு, 18-ல் இயக்குநர்கள் 1973 சூன் 30-ல் முடியும் அரையாண்டிற்கான இடைக்காலப் பங்காதாயம் (எண் 18) ஆண்டுக்கு 10% வீதம் வழங்கினர்.

1973 திசம்பர் 31 வரை கீழ்க்கண்டவாறு பங்காதாய ஆணைகட்குப் பணம் செலுத்தப்பட்டிருந்தது.

| | | ரூ. |
|---|---|---|
| பங்காதாயம் எண் 15 | .. | 3,200 |
| பங்காதாயம் எண் 16 | .. | 5,300 |
| பங்காதாயம் எண் 17 | .. | 1,05,000 |
| பங்காதாயம் எண் 18 | .. | 32,000 |

இத்துடன் உரிமைகோராப் பங்காதாயத்திலிருந்து 1973-ல் ரூ. 2,000 செலுத்தப்பட்டது. 1973 திசம்பர் 31-ல் பங்காதாய எண்கள் 15,16 ஆகியன காட்டும் இருப்புகள் உரிமைகோராப் பங்காதாயக் கணக்கிற்கு மாற்றப்படுகின்றன.

**தேவையான பேரேட்டுக் கணக்குகளைத் தயாரிக்கவும்.**

**விடை :**

வழங்கும் இலாப ஈவிலிருந்து 22 சதவீதம் வருமானவரி கழிக்கப்படுவதாகக் கொள்ளவேண்டும்.

**பங்காதாயம் எண் 15 கணக்கு**

பற்று வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1973 திச. 31 | பங்காதாய வங்கிக் க/கு .. | | 3,200 | 1973 சன. 1 | இருப்பு கீ/கொ .. | | 4,500 |
| ,, | உரிமைகோராப் பங்காதாயக் க/கு— மாற்றம் .. | | 1,300 | | | | |
| | | | 4,500 | | | | 4,500 |

**பங்காதாயம் எண் 16 கணக்கு**

பற்று வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1973 டிச. 31 | பங்காதாய வங்கிக் க/கு .. | | 5,300 | 1973 சன. 1 | இருப்பு கீ/கொ .. | | 8,400 |
| | உரிமைகோராப் பங்காதாயக் க/கு— மாற்றம் .. | | 3,100 | | | | |
| | | | 8,400 | | | | 8,400 |

### பங்காதாயம் எண் 17 கணக்கு

பற்று — வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1973 திச. 31 | பங்காதாய வங்கிக் க/கு .. | | 1,05,000 | 1973 மார்ச் 10 | திட்டமிட்ட பங்காதாயக் க/கு .. (1,50,000—33,000 வருமான வரி) | | 1,17,000 |
| ,, | இருப்பு கீ/இ .. | | 12,000 | | | | |
| | | | 1,17,000 | | | | 1,17,000 |
| | | | | 1974 சன. 1 | இருப்பு கீ/கொ .. | | 12,000 |

### பங்காதாயம் எண் 18 கணக்கு

பற்று | வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1973 திச. 31 | பங்காதாய வங்கிக் க/கு .. | | 32,000 | 1973 அக். 18 | இலாப-நட்டப் பகிர்வுக் பகிர்வுக் க/கு .. (அரையாண்டிற்கு வரி நீங்க) (50,000—11,000 வருமான வரி) | | 39,000 |
| ,, | இருப்பு கீ/இ .. | | 7,000 | | | | |
| | | | 39,000 | | | | 39,000 |
| | | | | 1974 சன. 1 | இருப்பு கீ/கொ .. | | 7,000 |

## உரிமை கோராப் பங்காதாயக் கணக்கு

பற்று | வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1973 | | | | 1973 | | | |
| திச. 31 | வைப்புக் க/கு .. | | 2,000 | சன. 1 | இருப்பு கீ/கொ .. | | 3,700 |
| ,, | இருப்பு கீ/இ .. | | 6,100 | திச. 31 | பங்காதாய எண் 15-க்கு மாற்றம் .. | | 1,300 |
| | | | | ,, | பங்காதாய எண் 16-க்கு மாற்றம் .. | | 3,100 |
| | | | 8,100 | | | | 8,100 |
| | | | | 1974 | | | |
| | | | | சன. 1 | இருப்பு கீ/கொ .. | | 6,100 |

## பங்காதாய வங்கிக் கணக்கு

பற்று | வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1973 | | | | 1973 | | | |
| சன. 1 | இருப்பு கீ/கொ .. | | 12,900 | திச. 31 | பங்காதாயம் எண் 15 க/கு .. | | 3,200 |
| மார்ச் 10 | வங்கிக் க/கு .. (பங்காதாய எண் 17-ற்காக) | | 1,17,000 | ,, | பங்காதாயம் எண் 16 க/கு .. | | 5,300 |
| | | | | ,, | பங்காதாயம் எண் 17 க/கு .. | | 1,05,000 |
| அக். 18 | வங்கிக் க/கு .. (இடைக்காலப் பங்கா தாய எண் 18-ற்காக) | | 39,000 | ,, | பங்காதாயம் எண் 18 க/கு ... | | 32,000 |
| | | | | ,, | வைப்புக் க/கு— மாற்றம் .. | | 4,400 |
| | | | | ,, | இருப்பு கீ/இ .. | | 19,000 |
| | | | 1,68,900 | | | | 1,68,900 |
| 1974 | | | | | | | |
| சன. 1 | இருப்பு கீ/கொ .. | | 19,000 | | | | |

வைப்புக் கணக்கு

பற்று | வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1973 | | | | 1973 | | | |
| சன. 1 | இருப்பு கீ/கொ .. | | 3,700 | திச. 31 | உரிமைகோராப் பங்காதாயம் க/கு .. | | 2,000 |
| திச. 31 | பங்காதாயம் வங்கிக் க/கு—மாற்றம் .. | | 4,400 | ,, | இருப்பு கீ/இ .. | | 6,100 |
| | | | 8,100 | | | | 8,100 |
| 1974 | | | | | | | |
| சன. 1 | இருப்பு கீ/கொ .. | | 6,100 | | | | |

**விளக்கக் குறிப்பு :**

1. 1973 திசம்பர் 31-ல் பங்காதாயம் எண் 15 கணக்குக் காட்டும் வரவிருப்பு ரூ. 1,300-ம், பங்காதாயம் எண் 16 கணக்குக் காட்டும் வரவிருப்பு ரூ. 3,100-ம் உரிமைகோராப் பங்காதாயக் கணக்குக்கு மாற்றப்படுவதால், ரூ. 4,400 பங்காதாய வங்கிக் கணக்கிலிருந்து வைப்புக் கணக்கிற்கு மாற்றப்படுகிறது. இதற்கு வைப்புக் கணக்கில் பற்றும், பங்காதாய வங்கிக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும். உரிமைகோராப் பங்காதாயத் தொகை வைப்புக் கணக்கில்தான் போட்டு வைக்கப் பட்டுள்ளது என்பதை மறத்தலாகாது.

2. 1972ஆம் ஆண்டுக்கான பங்காதாயம் ரூ. 1,50,000 ஆகும். $(10,00,000 \times \frac{15}{100})$, இதில் 22 சதவீதம் வருமான வரி கழிக்கப்படவேண்டும். எனவே, இறுதியாகப் பங்குநர்கட்கு வழங்கப்படவேண்டிய தொகை ரூ. 1,17,000தான் (1,50,000 — 33,000) பொது வங்கிக் கணக்கிலிருந்து, பங்காதாய வங்கிக் கணக்கிற்கு மாற்றப்படுகிறது.

1972 திசம்பர் 31-ல் முடியும் ஆண்டுக்கான இலாப-நட்டப் பகிர்வுக் கணக்கில் திட்டமிட்ட பங்காதாயம் என்று மொத்த தொகையான ரூ. 1,50,000-ற்கும் பற்று வைக்கப்பட்டு, இருப்புநிலைக் குறிப்பில் பொறுப்புகள் பகுதியில் 'நடப்புப் பொறுப்புகளும் ஒதுக்குகளும்' எனும் தலைப்பின்கீழ்த் திட்டமிட்ட பங்காதாயம் என்று இதனைக் காட்டியிருப்பர்.

1973 மார்ச் 10-ல் நடைபெற்ற 1972ஆம் ஆண்டுக்குரிய கம்பெனியின் ஆண்டுக் கூட்டம் இந்தப் பங்காதாயம் வழங்குவது குறித்துத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கும். அப்போழ்து திட்டமிட்ட பங்காதாயக் கணக்கிலிருந்து செலுத்தவேண்டிய பங்காதாயக் கணக்கிற்கும் வருமானவரிக் கணக்கிற்கும் மாற்றப் படும். எனவே, பங்காதாயம் 17 எனும் கணக்கில் வரவுப் பகுதியில் திட்டமிட்ட பங்காதாயக் கணக்கு என்று கொடுக்கப் பட்டிருக்கிறது. அதாவது, திட்டமிட்ட பங்காதாயக் கணக்கில் பற்று வைக்கப்படுவதாகப் பொருள்.

ஆனல், இடைக்காலப் பங்காதாயத்தினைப் பொருத்தவரை பங்குநர்களின் இசைவினைப் பெறத் தேவையில்லை. எனவே, நேரிடையாக இலாப-நட்டப் பகிர்வுக் கணக்கில் பற்று வைக்கப்

படும். ஆகவேதான், இடைக்காலப் பங்காதாயம் எண் 18 என்னும் கணக்கில் வரவுப் பகுதியில் இலாப-நட்டப் பகிர்வுக் கணக்கென்று எழுதப்பட்டுள்ளது.

வருமானவரிச் சட்டம் 1961-ன் 84-வது பிரிவு புதிய தொழிற்சாலைக்கும், புதிய உணவு விடுதிக்கும் (hotels) வரிச் சலுகைகளைத் தருகிறது. குறிப்பிட்ட காலம்வரை ஈடுபடுத்திய முதல் தொகையில் ஆண்டுக்கு 6 சதவீதம் அளவிற்கு வருமானவரிச் சலுகையை அளித்திருக்கிறது. இச் சட்டத்தின் 85-வது பிரிவின்படி, அவ்வாறு விலக்களிக்கப்பட்ட இலாபத்திலிருந்து வழங்கும் பங்காதாயத்தின் மீது பங்குநர்கள் வருமானவரி செலுத்தத் தேவையில்லை.

இதன் காரணமாக வருமானவரிச் சட்டத்தின் 84-வது பிரிவின்படி வருமானவரி விலக்களிக்கப்படும் இலாபத்தினை 'வரி விலக்கு இலாபக் காப்பு' (Tax Exempt Profit Reserve) எனும் கணக்கிற்குச் சில கம்பெனிகள் மாற்றுகின்றன. '84-வது பிரிவு இலாபக் காப்பு' என்ற வேறுபெயரும் இதற்குண்டு.

கம்பெனி வழங்கும் பங்காதாயத்திலிருந்து வருமானவரி கழிக்கும்போழ்து மாணவர்கள் இத்தகைய காப்பிலிருந்து பங்காதாயம் வழங்கப்படுகிறதா என்பதை நோக்கவேண்டும். காரணம், அவ்வாறாயின், அத்தகைய பங்காதாயத்தின் மீது வருமான வரி கழிக்கக்கூடாது.

**பங்குச் சான்றுச் சீட்டுப் பங்காதாயம்** (Scrip Dividend)

கம்பெனிகள் பங்காதாயத்தினைப் பணமாக வழங்குகின்றன. 1960ஆம் ஆண்டைய கம்பெனிச் (திருத்தச்) சட்டத்தின் முன்னர் கம்பெனிகள் தாங்கள் வைத்திருக்கும் பிற கம்பெனிகளின் பங்குகளையும் கடனீட்டுப் பத்திரங்களையும், பணத்திற்கு மாறாகப் பங்காதாயமாக வழங்குவதும் வழக்கம். இவ்வாறு பங்குகளையோ கடனீட்டுப் பத்திரங்களையோ பங்காதாயமாக வழங்குவது 'பங்குச் சான்றுச் சீட்டுப் பங்காதாயம்' (Scrip Dividend) எனப்படும். இதனால், பங்குநர்கட்குப் பெரும் இழப்பு ஏற்படுவதும் உண்டு. காரணம், மதிப்பிழந்த பங்குகளையே பங்காதாயமாக இயக்குநர்கள் வழங்குவர். இம் முறைகேட்டிற்கு ஒரு முடிவு கட்டியது கம்பெனித் திருத்தச் சட்டம். எனவே, 1960ஆம் ஆண்டிற்குப் பிறகு கம்பெனிகள் இத்தகைய பங்காதாயம் வழங்க முடியாது.

**ரொக்க மேலூதியம் (Cash Bonus)**

இயக்குநர்கள் பின்பற்றும் பங்காதாயக் கொள்கை ஆண்டுக்காண்டு மாருமல், சீரானதாக இருக்கவேண்டும். ஒவ்வோராண்டும் வழங்கும் பங்காதாயம் மாறிக்கொண்டேயிருக்குமாயின், அக் கம்பெனியின் பங்கு மதிப்பும் பங்குச் சந்தையில் மாறிக்கொண்டேயிருக்கும். இது கம்பெனிக்கோ, பங்குநர்களின் நலனுக்கோ உகந்ததன்று. நிலையான பங்காதாயம் வழங்க வேண்டுமாயின், தொடக்கத்தில் குறைந்த அளவு பங்காதாயம் வழங்குதலே விழுமியது. பின்வரும் ஆண்டுகளில் கம்பெனி சிறப்பான வளர்ச்சியடைந்து, மிகுதியான இலாபத்தை ஈட்ட முற்பட்டவுடன் வழக்கமாக வழங்கும் பங்காதாயத்துடன் கூடுதல் இலாபத்தை மேலூதியமாகப் (bonus) பங்குநர்கட்கு வழங்குதல் ஏற்றது. எல்லா ஆண்டுகளிலும் கூடுதல் தொகையைத் தர இயலாது என்பதாலேயே இது மேலூதியமாகத் தரப்படுகிறது. இம் மேலூதியம் ரொக்கமாகவும் இருக்கலாம்; வேறு வடிவத்திலும் அமையலாம். கம்பெனியின் நிதி நிலை நன்ருக இருப்பின், மேலூதியத்தை ரொக்கமாகவே கம்பெனி வழங்கும். இது ரொக்க மேலூதியம் (Cash bonus) எனப்படும்.

இயக்குநர்கள் பரிந்துரை செய்யும் பங்காதாயத்தைப் பதிவதில் **வேருெரு முறையும்** பின்பற்றப்படுகிறது. இதன்படி, திட்டமிட்ட பங்காதாயம் இயக்குநர்களின் அறிக்கையில்தான் இடம் பெறுகிறது. இலாப-நட்டப் பகிர்வுக் கணக்கில் திட்டமிட்ட பங்காதாயம் பற்றிய பதிவு செய்யப்படுவதில்லை. அதற்கு மாருக, அதே தொகையளவிற்குப் 'பங்காதாயக் காப்பு' (Dividend Reserve) எனும் கணக்கிற்கு அல்லது பொதுக் காப்பிற்கு மாற்றப்படுகிறது.

திட்டமிட்ட பங்காதாயத்திற்குப் பங்குநர்கள் ஒப்புதல் அளித்தவுடன், பங்காதாயக் காப்பிலிருந்து அல்லது பொதுக் காப்பிலிருந்து பங்காதாயம் வழங்கப்படுகிறது. அந் நிலையில் கீழ்க்கண்டவாறு இயக்குநர்கள் அறிக்கையில் குறிப்பு தரப்படும்.

'வருமான வரி கழிக்கப்படுவதற்குட்பட்டு ரூ..... பங்காதாயத்தினை வழங்க இயக்குநர்கள் பரிந்துரை செய்கின்றனர். ....நாளில் நடைபெறவுள்ள ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பங்குநர்கள் இந்தப் பங்காதாயத்திற்கு ஒப்புதல் அளித்தவுடன் பங்காதாயக் காப்பிலிருந்தோ, பொதுக் காப்பிலிருந்தோ இது வழங்கப்பெறும். இதற்கெனத் தனியாக ஒதுக்கு ஏற்படுத்தவில்லை.'

இம் முறையே முன்னதிலும் ஏற்றதென்றும், எனவேதான் பல கம்பெனிகள் இற்றைய நாள்களில் இம் முறையைப் பின் பற்றுகின்றன என்றும் ரூப்ராம் குப்தா அவர்கள் கருத்து தெரி விக்கின்றார்கள்.

**எடுத்துக்காட்டு 84**

1970 ஜூலை 1-ல் ஒரு கம்பெனியின் இலாப-நட்டக் கணக்கு ரூ. 15,850 வரவிருப்புக் காட்டியது. 1970–71ஆம் ஆண்டில் (வருமானவரி, தேய்மானம் ஆகியவற்றை ஒதுக்கிய பின்னர்) ஈட்டிய இலாபம் ரூ. 1,37,450. இதிலிருந்து கீழ்க்கண்டவாறு இயக்குநரவை தொகை ஒதுக்கியது.

| | ரூ. |
|---|---|
| மேம்பாட்டுத் தள்ளுபடிக் காப்பு | 20,000 |
| பொதுக் காப்பு | 25,000 |
| பங்காதாயக் காப்பு | 1,00,000 |

வருமான வரி கழிக்கப்படுவதற்குட்பட்டுக் கீழ்க்கண்டவாறு இயக்குநரவை பங்காதாயம் பரிந்துரை செய்தது.

1. பங்கொன்றுக்கு ரூ. 6 வீதம் 5,000 – 6 சதவீதம் முன்னுரிமைப் பங்குகள் மீது பங்காதாயம்.

2. பங்கொன்றுக்கு ரூ. 8 வீதம் 7,500 நேர்மைப் பங்குகள் மீது பங்காதாயம்.

கம்பெனியின் இலாப-நட்டப் பகிர்வுக் கணக்கினைத் தயார் செய்க.

**விடை :**

1971 ஜூன் 30-ல் முடியும் ஆண்டுக்கான இலாப-நட்டப் பகிர்வுக் கணக்கு :

| | | | |
|---|---|---|---|
| மேம்பாட்டுத் தள்ளுபடிக் காப்பு | 20,000 | இருப்பு கீ/கொ | 15,850 |
| பொதுக்காப்பு | 25,000 | நடப்பாண்டு இலாபம் | 1,37,450 |
| பங்காதாயக் காப்பு | 1,00,000 | | |
| இருப்பு கீ/இ | 8,300 | | |
| | 1,53,300 | | 1,53,300 |

குறிப்பு: 'வருமான வரி கழிக்கப்படுவதற்குட்பட்டு மொத்தம் ரூ. 90,000-ற்கான பங்காதாயத்தை இயக்குநர்கள் பரிந்துரை செய்கின்றனர்.

......நாளில் நடைபெறவிருக்கும் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பங்குதாரர்கள் இதற்கு ஒப்புதலளிப்பார்களாயின், வருமான வரி கழிக்கப்பட்ட பங்காதாயம், வருமான வரி ஆகியவை பங்காதாயக் காப்பிலிருந்து செலுத்தப்பெறும்; இதற்கெனத் தனி ஒதுக்கேதும் ஏற்படுத்தவில்லை.'

## மேலூதியப் பங்குகள் (Bonus Shares)

ஒரு கம்பெனி மிகவும் அதிகமான முதலீட்டுக் காப்பினையோ, வருவாய் இலாபத்தினையோ சேர்த்து வைத்திருக்கும்பொழுது மேலூதியப் பங்குகளைத் தன் பங்குநர்கட்கு வழங்க விழையலாம். இதனைப் பயன்படுத்திக் கூடுதல் பங்காதாயத்தை வழங்கின், தன் நிதி நிலை சீர்குலையலாம். இதனால் ஏற்படும் பணத் தட்டுப்பாட்டைத் தவிர்க்கும் நோக்குடன் பங்காதாயத்தைப் பங்குகளாக வழங்குவது வழக்கம். பகுதி செலுத்தப்பெற்ற பங்குகளை முழுதும் செலுத்தப்பெற்ற பங்குகளாக மாற்றுவது இதில் ஒரு முறை. எடுத்துக்காட்டாக, ரூ. 100 பெயரளவு மதிப்புடைய ஒரு கம்பெனியின் பங்குகள் ரூ. 80 செலுத்தப்பெற்றிருப்பதாகக் கொள்வோம். இப்பொழுது இவற்றை முழுதும் செலுத்தப்பெற்றதாகக் கம்பெனி மாற்றுவதாகக் கொண்டால், பங்குநர்கள் இனி ஒவ்வொரு பங்கு மீதும் ரூ. 20 செலுத்த வேண்டுவதில்லை. கம்பெனியே பங்கின் மீது செலுத்தவேண்டிய முழுத் தொகையையும் செலுத்தியதாகப் பொருள்; அல்லது முழுதும் செலுத்தப்பெற்ற பங்குகளாகவே, பங்குநர்களிடம் கம்பெனி வெளியிடுவதும் வழக்கம். பங்குநர்கள் தொகை ஏதும் செலுத்தாமலேயே கம்பெனியிடமிருந்து மீதிப் பங்குகளைப் பெறுகின்றனர். இவை 'மேலூதியப் பங்குகள்' எனப்படும். இவ்வாறு இலாபத்தினைக் கம்பெனி வழங்குவதால், தனது பங்கு முதலின் ஒரு பகுதியாகவே அது மாறிவிடுகிறது. இக் முறைக்கு 'இலாபத்தினை முதற்படுத்துகை' (Capitalisation of profits) என்று பெயர்.

பங்காதாயம் வழங்குவதற்கு மாறாக மேலூதியப் பங்குகளை வழங்குவதில் சில பயன்கள் விளைகின்றன. தனது பணவசதி குறைவதில்லை; இதனால் வளர்ந்துவரும் தொழிலுக்குத் தேவையான கூடுதல் நடைமுறை முதல் கிடைக்கிறது.

கம்பெனியின் பணநிலேக்குப் பழுது வராமலேயே பங்குநர்கள் கூடுதல் ஆதாயத்தினைப் பெறுகின்றனர். வேண்டிய பங்குச் சந்தையில் இப் பங்குகளே விற்று, அவற்றைப் பணமாக்கிக் கொள்ளலாம்.

ஆனல், ஒருண்மையை இவண் நாம் மறத்தலாகாது. இவ்வாறு மேலூதியப் பங்குகளே வெளியிடுவது மூலமாக, பங்காதாயம் பெறக்கூடிய பங்குகளின் எண்ணிக்கையைக் கம்பெனி அதிகரிக்கிறது. இதனுல் முன்னர் கொடுத்துள்ள அதே அளவு பங்காதாயத்தினைத் தொடர்ந்து கொடுக்கவேண்டுமாயின், ஈட்டும் இலாபம் பன்மடங்காய்ப் பெருக வேண்டுவது இன்றியமையாதது. பங்கு முதல் அதிகரித்த காரணத்தால், எதிர்காலத்தில் வழங்கும் இலாப ஈவு குறைந்துவிடின், பங்குநர்கள் மனக்கசப்பு அடைவதுடன், பங்கின் மதிப்பும் குறைந்துவிடும்.

புதியதாக வெளியிடப்படும் மேலூதியப் பங்குகள் நேர்மைப் பங்குகளாகவுமிருக்கலாம்; அல்லது முன்னுரிமைப் பங்குகளாகவுமிருக்கலாம். மேலும், முன்னுரிமைப் பங்குகள் மீள்தகு முன்னுரிமைப் பங்குகளாகவோ அமையலாம்.

கம்பெனியின் வெளியீட்டுப் பங்குகள் ஒரே வகையினதாக இருக்குமாயின், எல்லாப் பங்குநர்கட்கும் மேலூதியப் பங்குகள் வழங்கப்படும். ஆனல், நேர்மைப் பங்குகளும், முன்னுரிமைப் பங்குகளும் இருக்குமாயின், மேலூதியப் பங்குகள் நேர்மைப் பங்குநர்கட்கு மட்டுமே வழங்கப்படும் என்பதை மறத்தலாகாது.

கீழ்க்கண்டவற்றிலிருந்து மேலூதியப் பங்குகளே வெளியிடலாம் :

1. முதல் மீட்புக் காப்புக் கணக்கு.

2. பங்கு முனேமக் கணக்கு.

3. மேம்பாட்டுத் தள்ளுபடிக் காப்பு.

4. முதலின இலாபங்கள்.

5. வருவாய் ஆதாயங்களின் இலாபங்களேயும் காப்புகளேயும் இது உள்ளடக்கும்.

ஆனல், மேற்சொன்னவற்றின், முதல் மீட்புக் கணக்கையும், பங்கு முனேமக் கணக்கையும் முழுதும் செலுத்தப்பெற்ற

மேலூதியப் பங்குகளை வெளியிடவே பயன்படுத்த முடியும். கம்பெனிச் சட்டம் 78,80-வது பிரிவுகளின்படி பகுதி செலுத்தப் பெற்ற பங்குகளை முழுதும் செலுத்தப்பெற்றவையாக மாற்ற இவை பயன்படுத்த முடியாது என்பதை இவண் நினைவு கூர்தல் நலம்.

சாதாரணமாகப் பங்காதாயம் ரொக்கமாக கொடுக்கப்பட வேண்டும். இலாபத்தை முதலாக்கும் உரிமை கம்பெனிகட்கு இயல்பாகவே இல்லை. எனவே, கம்பெனியின் செயல்முறை விதிகள் மேலூதியப் பங்குகள் வெளியிடுவதற்கும் பகுதி செலுத்தப் பெற்ற பங்குகளை முழுதும் செலுத்தப் பெற்றதாக மாற்றுவதற்கும் உரிமை நல்கவேண்டும். செயல்முறை விதியில் இவ்வதிகாரம் இல்லையெனில், இவ்வதிகாரத்தைப் பெறும் வகையில் அவற்றை முதலில் திருத்தவேண்டுவது இன்றியமையாதது.

எவ்வளவு தொகைக்காக இருப்பினும், மேலூதியப் பங்குகளை வெளியிட, முதல் வெளியீட்டுக் கட்டுப்பாடு அலுவலரின் (Controller of Capital Issues) இசைவினைப் பெறவேண்டும்.

இயக்குநர்களின் பரிந்துரைமேல் பொதுக்கூட்டத்தில் கம்பெனி மேலூதியப் பங்குகளை வெளியிடுவது குறித்த சாதாரண தீர்மானத்தை நிறைவேற்றவேண்டும். கீழ்க்கண்டவை பற்றித் தீர்மானம் குறிப்பிடவேண்டும்.

அ. முதற்படுத்தப்படும் முனைமக் கணக்கின் தொகை, முதல் மீட்புக் கணக்கின் தொகை அல்லது பிற காப்புக் கணக்குகளின் தொகை.

ஆ. எவ்வகைப் பங்குநர்கள் இதனால் பயன் பெறுவர்.

இ. வெளியிடப்படும் பங்குகள் முழுதும் செலுத்தப்பட்டவையா அல்லது பகுதி செலுத்தப்பட்டவையா.

ஈ. எந்நாளிலிருந்து இம் மேலூதியப் பங்குகள் பங்காதாயம் பெறத் தகுதியுடையவை.

உ. எவ் வீதத்தில் இவை வழங்கப்படும்.

ஊ. பின்னப் பங்குகளை (fractional shares) தீர்க்கும் முறை.

பங்கு ஒதுக்கீட்டு அறிக்கையையும், மேலூதியப் பங்குகள் ஒதுக்கீடு பெற்றவர்களின் உரிமையை வெளிப்படுத்தும் ஒப்பந்தத்தின் நகலையும், பங்கொதுக்கிய 30 நாள்களுக்குள் கம்பெனி பதிவாளரிடத்தில் தாக்கல் செய்யவேண்டும். கம்பெனியின் உறுப்பினர் பதிவேட்டிலும் பிற நிதியேடுகளிலும் வேண்டிய பதிவினைச் செய்யவேண்டும்.

மேலூதியப் பங்குகளை வெளியிடுமுன் கம்பெனியிடம் வேண்டிய அளவிற்கு வெளியிடப்படாத பங்கு முதல் இருக்கவேண்டும். இல்லையெனில், அதிகாரம் பெற்ற பங்குமுதலை அதிகரிக்கத் தேவையான முயற்சிகளை முதலில் மேற்கொள்ளவேண்டும்.

**கணக்குப் பதிவுகள்**

இவை குறித்து மீள்தகு முன்னுரிமைப் பங்குகளை மீட்டல் என்னும் தலைப்பின் கீழ்க் கண்டுள்ளோம். இங்கே மேலும் விரிவாகக் காண்போம்.

1. இலாப-நட்டப் பகிர்வுக் கணக்கில் அல்லது காப்புக் கணக்கில் அல்லது பங்கு முனைமக் கணக்கில் அல்லது முதல் மீட்புக் காப்புக் கணக்கில் பற்றும், பங்குநர்கள் மேலூதியக் கணக்கில் (Bonus to shareholders Account) வரவும் வைக்கவேண்டும். அதாவது எக் கணக்கிலிருந்து மேலூதியப் பங்குகள் வெளியிடப்படுகின்றனவோ அக் கணக்கில் பற்று வைக்கவேண்டும் என்பதை உணரவேண்டும்.

2. முழுதும் செலுத்தப்பெற்ற மேலூதியப் பங்குகளைக் கம்பெனி வெளியிடுமாயின் பங்குநர்கள் மேலூதியக் கணக்கில் பற்றும், பங்கு முதல் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

மேலூதியப் பங்குகள் முனைமத்தில் வெளியிடப்படுமாயின், வழக்கம்போன்றே முனைமத் தொகையைப் பங்கு முனைமக் கணக்கில் வரவு வைக்கவேண்டும். அப்போழ்து குறிப்பேட்டின் பதிவு கீழ்க்காட்டியவாறிருக்கும்.

பங்குநர்கள் மேலூதியக் க/கு ப (முழுத்தொகை)
 பங்குமுதல் க/கு
 பங்கு முனைமக் க/கு

இப் பதிவுகளுடன், மேலூதியப் பங்குப் பட்டியல் ஒன்று தயாரிக்கப்படவேண்டும். இதில் ஒவ்வொரு உறுப்பினருக்கும்

எவ்வளவு மேலூதியப் பங்குகள் சேரவேண்டும் என்று விவரம் கொடுக்கப்பட்டிருக்கும்.

### பின்னப் பங்குகள் (Fractional Shares)

எடுத்துக்காட்டாக, ஒவ்வொரு 3 பங்குகட்கும் ஒரு பங்கு என்று மேலூதியப் பங்கு வழங்கப்படுவதாகவும், 10 பங்குகளை ஒருவர் வைத்திருப்பதாகவும் கொண்டால், அவர்கட்குச் சேர வேண்டிய மேலூதியப் பங்குகள் $3\frac{1}{3}$ பங்குகள். ஆனால், இவ்வாறு பங்கினைப் பகுதிகளாகப் பிரித்து வெளியிட முடியாது. பொது வாகப் பின்னப் பங்குகட்கான சீட்டுகள் வழங்கப்படும். மேற் சொன்ன எடுத்துக்காட்டில் அவருக்கு 3 மேலூதியப் பங்கு களும், ஒரு $\frac{1}{3}$ பங்கிற்கான சீட்டும் தரப்படும். இதனை அவர் விற்றுப் பணமாக்கிக் கொள்ளலாம்; அல்லது பிறரிடமிருந்து $\frac{2}{3}$ பங்கிற்கான சீட்டினை வாங்கி, கம்பெனிக்கனுப்பி, முழுப் பங்கு ஒன்றைப் பெறலாம்.

### எடுத்துக்காட்டு 85

ஒரு கம்பெனி பங்கொன்றுக்கு ரூ. 50 வீதம் 12,000 பங்குகளை வெளியிட்டிருந்தது. அதன் பங்கு முனைமக் கணக்கு ரூ. 75,000-த்தையும், முதல் மீட்புக் காப்புக் கணக்கு ரூ. 60,000-த் தையும் இலாப-நட்டக் கணக்கு ரூ. 1,25,000-த்தையும் வர விருப்புகளாகக் காட்டின. பங்கொன்று ரூ. 50 மதிப்புடைய மேலூதியப் பங்குகளை முழுதும் செலுத்தப்பெற்றவையாக ஒவ் வொரு மூன்று பங்குகட்கும் ஒரு பங்கு வீதம் வெளியிட கம்பெனி தீர்மானித்தது. இலாப-நட்டக் கணக்கைக் குறைந்தளவு பயன் படுத்தி மேலூதியப் பங்குகள் வெளியிடப்பட்டன என்றுகொண்டு வேண்டிய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தயாரிக்கவும்.

**விடை :**

**குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | | பே. ப. எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|---|
| | | | | ரூ. | ரூ. |
| | இலாப-நட்டப் பகிர்வுக் க/கு | ப | | 65,000 | |
| | பங்கு முனைமக் க/கு | ப | | 75,000 | |
| | முதல் மீட்புக் காப்புக் க/கு | ப | | 60,000 | |

குறிப்பேட்டுப் பதிவுகள்—(தொடர்ச்சி)

| நாள் | விவரம் | பே. ப. எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| | பங்குநர் மேலூதியக் க/கு (மூன்று பங்குகட்கு ஒன்று வீதம் 4,000 மேலூதியப் பங்குகளை வழங்கியது.) | | | 2,00,000 |
| | பங்குநர் மேலூதியக் க/கு ப<br>பங்குமுதல் க/கு (ஒன்று ரூ. 50 வீதம் 4,000 மேலூதியப் பங்குகளை முழுதும் செலுத்தப்பெற்றவையாக ஒதுக்கியது.) | | 2,00,000 | 2,00,000 |

பகுதி செலுத்தப்பெற்ற பங்குகளை முழுவதும் செலுத்தப் பெற்றவையாக மாற்றியும் இலாபத்தினை முதற்படுத்தலாம் (capitalised) என்று கூறியிருக்கிறோம்.

இவ்வாறாயின் பங்கு இறுதியழைப்புக் கணக்கில் பற்றும் பங்கு முதல் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

## எடுத்துக்காட்டு 86

பங்கொன்று ரூ. 10 மதிப்புடைய 1,00,000 நேர்மைப் பங்குகளை ஒரு கம்பெனி வெளியிட்டிருந்தது. பங்கொன்றுக்கு ரூ. 7.50 வரை செலுத்தப்பெற்றிருந்தது.

பொதுக்காப்பிலிருந்து மேற்சொன்ன பங்குகளை முழுவதும் செலுத்தப்பெற்ற பங்குகளாக மாற்றக் கம்பெனி தீர்மானித்தது. அத்துடன் பங்கொன்று ரூ. 10 மதிப்புடைய 20,000 புதிய பங்குகளை 20 சதவீதம் முனைமத்தில் வெளியிடவும் தீர்மானித்தது. இப் பங்குகள் ஒவ்வொரு ஐந்து பங்கிற்கும் ஒரு பங்கு வீதம் கம்பெனியின் பங்குநர்களுக்கு வெளியிட வேண்டியது. பங்குகள் உரிய முறையில் ஒதுக்கப்பெற்று பணம் பெறப்பட்டது என்று கொண்டு, கம்பெனியின் ஏட்டில் வேண்டிய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

**விடை :**

## குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே. ப. எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| | பொதுக்காப்பு ப | | 2,50,000 | |
| | பங்குநர் மேலூதியக் க/கு | | | 2,50,000 |
| | (பங்கொன்றுக்கு ரூ. 2.50 வீதம் 1,00,000 பங்குகள் மீது மேலூதியம் வழங்கி இலாபத்தை முதலாக்குதல்.) | | | |
| | பங்கு இறுதி அழைப்புக் க/கு ப | | 2,50,000 | |
| | பங்குமுதல் கணக்கு | | | 2,50,000 |
| | (பங்கொன்று ரூ. 2.50வீதம் 1,00,000 பங்குகள் மீதான இறுதியழைப்புத் தொகை.) | | | |
| | பங்குநர் மேலூதியக் க/கு ப | | 2,50,000 | |
| | பங்கு இறுதியழைப்புக் க/கு | | | 2,50,000 |
| | (பங்குநர்கட்கு வழங்கிய மேலூதியத்திற்குப் பங்கு இறுதியழைப்புத் தொகையைச் சரிக்கட்ட.) | | | |
| | வங்கிக் க/கு ப | | 2,40,000 | |
| | பங்குமுதல் க/கு | | | 2,00,000 |
| | பங்கு முனைமக் க/கு | | | 40,000 |
| | (ஒன்று ரூ. 10 வீதம் 20 சதவீதம் முனைமத்தில் 20,000 பங்குகளை வெளியிட்டுப் பெற்ற ரொக்கம்.) | | | |

## எடுத்துக்காட்டு 87

1971 திசம்பர் 31-ல் கீழ்க்கண்ட கணக்குகள் அந்நாளுக்குரிய இருப்புநிலைக் குறிப்பில் காணப்பட்டன.

**பங்கு முதல்**

அதிகாரம் பெற்றது :

| | ரூ. |
|---|---|
| ஒன்று ரூ. 100 வீதம் 20,000 நேர்மைப் பங்குகள் | 20,00,000 |

வெளியிட்டதும், செலுத்தப்பெற்றதும் :

| | | |
|---|---|---|
| ஒன்று ரூ. 100 வீதம் 15,000 நேர்மைப் பங்குகள், முழுதும் செலுத்தப் பெற்றது | .. | 15,00,000 |
| பொதுக்காப்பு | .. | 2,00,000 |
| கச்சாப் பொருள் தேய்மானக் காப்பு (Raw Materials Depreciation Reserve) | .. | 2,50,000 |

ஆகஸ்டு 31-ல் கச்சாப் பொருள் தேய்மானக் காப்பில் உள்ள தொகை முழுவதையும் சூன் 30-ல் முடியும் அரையாண்டில் பொதுக்காப்பிற்கு மாற்ற முடிவு செய்யப்பட்டது.

1972 திசம்பர் 12-ல் நடைபெற்ற அசாதாரணக் கூட்டத்தில் (Extra ordinary meeting) பங்கொன்று ரூ. 100 மதிப்புடைய 5,000 மேலூதியப் பங்குகளை முழுதும் செலுத்தப்பெற்றவையாக வெளியிடத் தீர்மானிக்கப்பட்டது. பொதுக்காப்பினை முதலாக்குவதுமூலம் இதை நிறைவேற்றவும், 1973ஆம் ஆண்டு இலாபத்திலிருந்து இப் பங்குகள் இலாப ஈவு பெறத்தக்கவை என்றும் தீர்மானம் செய்யப்பட்டது. 1973 சனவரி 16-ல் மேலூதியப் பங்குகள் ஒதுக்கப்பட்டன.

1972-ல் கம்பெனி ஈட்டிய இலாபம் ரூ. 1,50,000. இதிலிருந்து ரூ. 25,000 மேம்பாட்டுத் தள்ளுபடிக் காப்புக்கும், ரூ. 1,00,000 பொதுக்காப்புக்கும் 1972 திசம்பர் 31-ல் இயக்குநர்கள் மாற்றினர்.

1973ஆம் ஆண்டில் ரூ. 2,25,000 இலாபம் ஏற்பட்டது. இதிலிருந்து ரூ. 20,000-ஐ மேம்பாட்டுத் தள்ளுபடிக் காப்பிற்கு ஒதுக்கவும், இலாப-நட்டக் கணக்கிலிருந்த மீதித் தொகை முழுவதையும் பொதுக் காப்புக்கு 1973 திசம்பர் 31-ல் மாற்றவும் இயக்குநரவை தீர்மானித்தது. 1973ஆம் ஆண்டிற்காக வரி

கழிக்கப்படுவதற்குட்பட்ட 10 சதவீதம் பங்காதாயத்தினை வழங்கவும் 1974-ல் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பங்குநர்கள் இதற்கு ஒப்புதலளித்தபின் பொதுக்காப்பிலிருந்து இதனைச் செலுத்தவும் இயக்குநர்கள் பரிந்துரை செய்தனர்:

1972, 1973 ஆகிய ஆண்டுகட்குக் கம்பெனியின் பேரேட்டுக் கணக்குகளைத் தயாரித்து, இவ்விரு ஆண்டு இருப்புநிலைக் குறிப்புகளிலும் இவை எவ்வாறு இடம்பெறுமென்பதையும் காட்டுக.

**விடை:**

**1972ஆம் ஆண்டு பங்கு முதல் கணக்கு**

பற்று வர்வு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1972 திச. 31 | இருப்பு கீ/இ .. | | 15,00,000 | 1972 சன. 1 | இருப்பு கீ/கொ .. | | 15,00,000 |

**கச்சாப் பொருள் தேய்மானக் காப்பு**

பற்று வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே, ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1972 ஆக. 31 | பொதுக் காப்பு— மாற்றம் .. | | 2,50,000 | 1972 சன. 1 | இருப்பு கீ/கொ .. | | 2,50,000 |

## பொதுக் காப்பு

பற்று | வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1972 | | | | 1972 | | | |
| திச. 12 | பங்குநர் மேலூதியம் .. | | 5,00,000 | சன. 1 | இருப்பு கீ/கொ .. | | 2,00,000 |
| | | | | சூன் 30 | கச்சாப் பொருள் | | |
| திச. 31 | இருப்பு கீ/கொ .. | | 50,000 | | தேய்மானக் காப்பு— | | |
| | | | | | மாற்றம் .. | | 2,50,000 |
| | | | | ,, | இலாப-நட்டப் | | |
| | | | | | பகிர்வுக் க/கு .. | | 1,00,000 |
| | | | 5,50,000 | | | | 5,50,000 |

## மேம்பாட்டுத் தள்ளுபடிக் காப்பு

பற்று | வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1972 | | | | 1972 | | | |
| திச. 31 | இருப்பு கீ/கொ .. | | 25,000 | திச. 31 | இலாப-நட்டப் பகிர்வுக் | | |
| | | | | | க/கு .. | | 25,000 |

### இலாப-நட்டப் பகிர்வுக் கணக்கு

பற்று | வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | பொதுக் காப்பு .. | | 1,00,000 | | இருப்பு கீ/கொ .. | | — |
| | மேம்பாட்டுத் தள்ளுபடிக் காப்பு .. | | 25,000 | | 1972 ஆம் ஆண்டு இலாபம் .. | | 1,50,000 |
| | இருப்பு கீ/இ .. | | 25,000 | | | | |
| | | | 1,50,000 | | | | 1,50,000 |

## 1972 திசம்பர் 31-ற்கான இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் |
|---|---|---|
| **பங்கு முதல்:** | | |
| அதிகாரம் பெற்றது : | | |
| ஒன்று ரூ. 100 வீதம் 20,000 | | |
| நேர்மைப் பங்குகள் .. | 20,00,000 | |
| **வெளியிட்டதும் ஒப்புக் கொண்டதும்:** | | |
| ஒன்று ரூ. 100 வீதம் 15,000 | | |
| நேர்மைப் பங்குகள், முழுதும் | | |
| செலுத்தப்பெற்றவை .. | 15,00,000 | |
| **பங்குதாரர் மேலூதியம்:** | | |
| ஒன்று ரூ. 100 வீதம் 5,000 | | |
| நேர்மைப் பங்குகள் முழுதும் | | |
| செலுத்தப் பெற்றவையாக | | |
| வெளியிடவேண்டியது .. | 5,00,000 | |

| | | |
|---|---|---|
| **காப்புகளும் மிகுதியும்:** | | |
| பொதுக்காப்பு : | | |
| கடந்த இருப்பு நிலைக் குறிப்புப்படி .. | ரூ. 2,00,000 | |
| இவ்வாண்டில் கூட்டியது .. | ரூ. 3,50,000 | |
| | 5,50,000 | |
| **கழி** : முதற்படுத்தப் பட்டது .. | ரூ. 5,00,000 | |
| | | 50,000 |
| மேம்பாட்டுத் தள்ளுபடிக் காப்பு .. | | 25,000 |
| இலாப-நட்டக் கணக்கு .. | | 25,000 |

## 1973ஆம் ஆண்டு பங்கு முதல் கணக்கு

பற்று — வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1973 | | | | 1973 | | | |
| திச. 31 | இருப்பு கீ/இ .. | | 20,00,000 | சன. 1 | இருப்பு கீ/கொ .. | | 15,00,000 |
| | | | | ,, 16 | பங்குநர் மேலூதியக் க/கு .. | | 5,00,000 |
| | | | 20,00,000 | | | | 20,00,000 |
| | | | | 1974 | | | |
| | | | | சன. 1 | இருப்பு கீ/கொ .. | | 20,00,000 |

பற்று **பொதுக் காப்பு** வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1973 | | | | 1973 | | | |
| திச. 31 | இருப்பு கீ/இ .. | | 2,80,000 | சன. 1 | இருப்பு கீ/கொ .. | | 50,000 |
| | | | | திச. 31 | இலாப-நட்டக் பகிர்வுக் க/கு .. | | 2,30,000 |
| | | | 2,80,000 | | | | 2,80,000 |
| | | | | 1974 | | | |
| | | | | சன. 1 | இருப்பு கீ/கொ .. | | 2,80,000 |

பற்று **பங்குநர் மேலூதியக் கணக்கு** வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ |
|---|---|---|---|---|---|---|---|
| 1973 | | | | 1973 | | | |
| சன. 16 | பங்குமுதல் கணக்கு .. | | 5,00,000 | சன. 1 | இருப்பு கீ/கொ .. | | 5,00,000 |

## மேம்பாட்டுத் தள்ளுபடிக் காப்பு

பற்று | வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1973 | | | | 1973 | | | |
| திச. 31 | இருப்பு கீ/இ .. | | 45,000 | சன. 1 | இருப்பு கீ/கொ .. | | 25,000 |
| | | | | திச. 31 | இலாப-நட்டப் பகிர்வுக் க/கு .. | | 20,000 |
| | | | 45,000 | | | | 45,000 |
| | | | | 1974 | | | |
| | | | | சன. 1 | இருப்பு கீ/கொ .. | | 45,000 |

## 1973 திசம்பர் 31-ல் முடியும் ஆண்டுக்கான இலாப-நட்டப் பகிர்வுக் கணக்கு

பற்று | வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | மேம்பாட்டுத் தள்ளுபடிக் காப்பு .. | | 20,000 | | இருப்பு கீ/கொ .. | | 25,000 |
| | பொதுக்காப்பு .. | | 2,30,000 | | 1973-ற்கான இலாபம் .. | | 2,25,000 |
| | | | 2,50,000 | | | | 2,50,000 |

**குறிப்பு :** 1973ஆம் ஆண்டிற்கு 10 சதவீதம் பங்காதாயம் (வருமான வரிக்குட்பட்டது) வழங்கப் பரிந்துரை செய்துள்ளனர். இதற்கு 1974ஆம் ஆண்டு ........நாளில் நடைபெறவிருக்கும் ஆண்டுக் கூட்டத்தில் உறுப்பினர்கள் ஒப்புதலளித்த பிறகு இதற்காகும் ரூ. 2,00,000-மும் பொதுக்காப்பிலிருந்து செலுத்தப்படும்.

**1973 திசம்பர் 31-ற்கான இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் |
|---|---|---|
| **பங்கு முதல்:** | | |
| அதிகாரம் பெற்றது : | | |
| ஒன்று ரூ. 100 வீதம் 20,000 | | |
| நேர்மைப் பங்குகள் .. | 20,00,000 | |
| வெளியிட்டதும் ஒப்புக்கொண்டதும் : | | |
| ஒன்று ரூ. 100 வீதம் 20,000 | | |
| நேர்மைப் பங்குகள் முழுதும் | | |
| செலுத்தப்பெற்றவை .. | 20,00,000 | |
| (மேற்சொன்னதில் ஒன்று | | |
| ரூ. 100 வீதம் 5,000 | | |
| சாதாரணப் பங்குகள் முழு | | |
| தும் செலுத்தப்பெற்ற | | |
| மேலூதியப் பங்குகளாக | | |
| பொதுக் காப்பை முதலாக்கி | | |
| வெளியிடப்பட்டிருக்கின்றன). | | |

**1973 திசம்பர் 31-ற்கான இருப்புநிலைக் குறிப்பு—(தொடர்ச்சி)**

| பொறுப்புகள் | | ரூ. | சொத்துகள் |
|---|---|---|---|
| **காப்புகளும் மிகுதியும் :** | | | |
| பொதுக்காப்பு : | | | |
| கடந்த இருப்புநிலைக் குறிப்பின்படி | ரூ. 50,000 | | |
| **கூட்டு :** இவ்வாண்டில் கூட்டியது | ரூ. 2,30,000 | | |
| | | 2,80,000 | |
| **மேம்பாட்டுத் தள்ளுபடிக் காப்பு :** | | | |
| கடந்த இருப்புநிலைக் குறிப்பின் படி | ரூ. 25,000 | | |
| **கூட்டு :** இவ்வாண்டில் கூட்டியது : | ரூ. 20,000 | | |
| | | 45,000 | |

## வினுக்கள்

1. 'குறிப்பிட்ட காப்பு' (Specific Reserve) என்ருல் என்ன? எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

2. ஒதுக்கிற்கும் காப்பிற்கும் உள்ள வேறுபாடுகளைக் கூறுக.

3. முதல் காப்பு என்ருல் என்ன? அது எவ்வாறு ஏற்படுத்தப்படுகிறது?

4. வருவாய்க் காப்புகட்கு எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக.

5. மறை காப்பு (Secret Reserve) என்ருல் என்ன? அது எவ்வாறு ஏற்படுத்தப்படுகின்றது?

6. மறை காப்பு ஏற்படுத்துவதினுல் உறும் பயன்களையும், குறைகளையும் ஆய்க.

7. பங்குமுதலில் இருந்து இலாபம் வழங்குதல் குறித்துக் கருத்துத் தெரிவிக்க.

8. இடைக்காலப் பங்காதாயம் வழங்குதல் குறித்து ஆய்க.

9. மேலூதியப் பங்குகள் வெளியிடுவது பற்றிக் கம்பெனிச் சட்டத்தின் விதிகளைத் தொகுத்துக் கூறுக.

10. சிறு குறிப்பு வரைக :

    அ. மேம்பாட்டுத் தள்ளுபடிக் காப்பு

    ஆ. முதலீட்டுக் காப்புக் கணக்கு

    இ. பங்காதாயச் சமன்செய்காப்பு

    ஈ. முதலினின்றும் வட்டி செலுத்தல்

    உ. உரிமைகோராப் பங்காதாயம்.

## பயிற்சி

(1) 'முதற்படுத்துகை' (Capitalisation) என்ருல் என்ன? அதன் வகைகள் யாவை? கணக்கேடுகளில் அதை எவ்வாறு பதிவது?

ஒரு கம்பெனியின் 1962 திசம்பர் 31-ற்கான இருப்புநிலைக் குறிப்பில் கீழ்க்கண்டவை காணப்பட்டன.

| | | ரூ. |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற முதல் ஒன்று ரூ. 1 வீதம் 1,00,000 நேர்மைப் பங்குகள் | .. | 1,00,000 |
| வெளியீட்டு முதலும் எடுத்துக் கொண்ட முதலும் (ஒன்று ரூ. 1 வீதம் 50,000 நேர்மைப் பங்குகள் முழுவதும் கோரப்பட்டது.) | .. | 50,000 |
| காப்பு நிதி | .. | 30,000 |
| இலாப-நட்டக் கணக்கு | .. | 15,000 |

காப்பு நிதியிலிருந்து ரூ. 6,000-மும், இலாப-நட்டக் கணக்கிலிருந்து மீதித் தொகையையும் எடுத்து நேர்மைப் பங்குகள் மீது 20 சதவீதம் மேலூதியம் வழங்க வகைசெய்யவேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. தற்பொழுது வைத்திருக்கும் ஒவ்வொரு ஐந்து நேர்மைப் பங்குகட்கும் முழுதும் செலுத்தப்பட்ட பங்கு ஒன்று வீதம் வழங்கி இம் மேலூதியத்தைத் தீர்ப்பது. மேற்கண்ட தீர்மானத்தைச் செயல்படுத்தத் தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக. இருப்புநிலைக் குறிப்பை எவ்வாறு அது பாதிக்கும் என்பதையும் காட்டுக.

(C. A. Inter, May, 1962)

(2) வரையறு பொறுப்புடைய ஒரு கம்பெனியின் மூலதனம் ஒன்று ரூ. 10 மதிப்புடைய 5 சதவீதம், 12,500 முன்னுரிமைப் பங்குகளாகவும், ஒன்று ரூ. 10 மதிப்புடைய 25,000 நேர்மைப் பங்குகளாகவும் இருந்தது. இலாபத்திலிருந்து கம்பெனி சேர்த்து வைத்திருந்த காப்பு நிதி ரூ. 1,00,000 ஆகும். நடப்பாண்டில் 5,000 நேர்மைப் பங்குகளைப் பங்கொன்றுக்கு ரூ. 15 முனைமத்தில் 5,000 நேர்மைப் பங்குகளை வெளியிட்டது. அதற்கான முழுத் தொகையையும் பெற்றது.

ஆண்டிறுதியில் சொத்துகளை மறு மதிப்பீடு செய்ததில் கீழ்க்கண்டவாறு மதிப்பு அதிகரித்தது.

கட்டடம் ரூ. 3,25,000; பொறிவகை ரூ. 1,50,000; நிலைவழி (Permanent Way) ரூ. 1,25,000.

கீழ்க்கண்டவாறு மறு மதிப்பீடு சிலவற்றின் மதிப்புகளைக் குறைத்தது. வாணிக நற்பெயர் ரூ. 75,000; சலுகை உரிமைகள் (Concession rights) ரூ. 50,000.

ஒன்று ரூ. 100 மதிப்புடைய 15,000 கடனீட்டுப் பத்திரங்களை 5 சதவீதம் முனைமத்தில் மீட்கவும், வைத்திருக்கும் ஒவ்வொரு நேர்மைப் பங்குக்கும் ஒன்று ரூ. 10 மதிப்புடைய முழுதும் செலுத்தப்பட்ட ஒரு மேலூதியப் பங்கு வீதம் ஒதுக்கவும் புதிய மறு மதிப்பீட்டினை ஏற்றுக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

குறிப்பேட்டுப் பதிவுகளை தந்து, இத் திட்டம் குறித்து ஆய்க. —(C. A. Final, Nov. 1957)

(3) ஒரு கம்பெனியின் முதல் ரூ. 10,00,000 ஆகும். இது ஒன்று ரூ. 10 வீதம் 1,00,000 பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவற்றில் 50,000 பங்குகளைக் கம்பெனி வெளியிட்டிருந்தது. இவற்றிற்கான தொகை முழுவதும் 1957 திசம்பர் 31-ல் செலுத்தப்பட்டது. 1958 திசம்பர் 31-ல் வருவாய்க் காப்புக் கணக்கு ரூ. 50,000-த்தைக் காட்டியது.

இயக்குநரவை தீர்மானித்தவாறே, 1958 மார்ச் 1-ல் வைத்திருக்கும் ஒவ்வொரு ஐந்து பங்குகட்கும் இரண்டு புதிய பங்குகள் வீதம் இருக்கின்ற பங்குநர்களிடம் வெளியிட்டது. பங்கொன்று ரூ. 12 வீதம் புதிய பங்குகள் வெளியிடப்பட்டன. விண்ணப்பத்துடன் ரூ. 6-ம், ஒதுக்கீட்டின்போழ்து ரூ. 6-ம் செலுத்தவேண்டும். தங்கட்குச் சேரவேண்டிய பங்குகள் அனைத்தையும் பங்குநர்கள் ஏற்றுக் கொண்டனர். 1958 மார்ச் 20-ல் பங்குகள் ஒதுக்கப்பட்டன. 1958 ஆகஸ்டில் அப்பொழுதுள்ள பங்குநர்கட்கு, அப்பொழுது வைத்துள்ள ஒவ்வொரு 10 பங்குகட்கும் ஒரு மேலூதியப் பங்கென, காப்புகளை முதற்படுத்துவதன்மூலம் வெளியிட்டது. பங்கு வெளியீட்டுச் செலவு ரூ. 3,000 ஆகியது. இது 1958 ஆகஸ்டு 30-ல் செலுத்தப்பட்டது. பங்கு முனைமக் கணக்கைக் கம்பெனிச் சட்டம் இசைவு அளிக்கும் முழு அளவு வரை பயன்படுத்த இயக்குநர்கள் முடிவு செய்தனர்.

மேற்கண்ட பதிவுகள் அனைத்தையும் (ரொக்க நடவடிக்கைகள் உள்பட) பதிவு செய்வதற்குத் தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

(C. A. Inter, Nov, 1958)

(4) ஒரு கம்பெனியின் செயல்முறை விதிகளில் கீழ்க் கொடுக்கப்பட்டவை காணப்பட்டன :

1. ஒவ்வோராண்டு இலாபத்திலும் 10 சதவீதம் காப்பு நிதிக்கு மாற்றவேண்டும்.

2. நேர்மைப் பங்காதாயம் 10 சதவீதம் அளவில் அலு வலர்கட்கு மேலூதியம் வழங்க ஒதுக்கப்பட வேண்டும்.

3. மீதியிருக்கும் இலாபத்தைக் கீழ்க்கண்டவாறு பயன் படுத்தவேண்டும் :

அ. குவிவுச் சலுகைப் பங்குகளின் மீது 7 சதவீதம் பங் காதாயம் செலுத்தல்.

ஆ. நேர்மைப் பங்குகளின் மீது 10 சதவீதம் பங்காதாயம் செலுத்தல்.

இ. மீதியுள்ளதில் மூன்றில் ஒரு பங்கை முன்னுரிமைப் பங்குகளின் மீது கூடுதல் பங்காதாயமாகவும், மூன்றில் இரண்டு பங்கை நேர்மைப் பங்குகளின் மீது கூடுதல் பங்காதாயமாகவும் வழங்குதல்.

வேறொரு நிபந்தனையும் விதிக்கப்பட்டது. முன்னுரிமைப் பங்கு முதலில் 6 சதவீதத்திற்கும் குறைவாக அடுத்த ஆண்டிற்கு எடுத்துச் செல்லும் தொகை இருக்கக்கூடாது.

ஒன்று ரூ. 100 மதிப்புடைய முழுதும் செலுத்தப்பெற்ற 7 சதவீதம் 26,000 குவிவு முன்னுரிமைப் பங்குகளையும் (எஞ்சிய இலாபத்தில் பங்குபெறத்தக்கவை) ஒன்று ரூ. 10 மதிப்புடைய (முழுதும் செலுத்தப்பட்டவை) 1,30,000 நேர்மைப் பங்குகளை யும் கம்பெனி வெளியிட்டிருக்கிறது. 1966ஆம் ஆண்டில் ஏற் பட்ட இலாபம் ரூ. 10,00,000 ஆகும். சென்ற ஆண்டி லிருந்து இவ்வாண்டிற்குக் கொண்டுவரப்பட்ட இருப்பு ரூ. 1,57,170. தேய்மானத்திற்காக ரூ. 66,200-ம், வரி விதிப்பிற்காக ரூ. 2,50,000-மும் பிறவற்றிற்குப் பகிருமுன் ஒதுக்குக.

இலாப-நட்டப் பகிர்வுக் கணக்கைத் தயாரிக்க.

(C. A. Final–ஐத் தழுவியது)

(5) 'H Ltd. என்பது ஒரு பொதுக் கம்பெனியாகும். அது அட்டவணை 'அ'-வைத் (Table A) *தனது செயல்முறை விதிகளாக ஏற்றுக்கொண்டுள்ளது. 1966 திசம்பர் 31-ற்கான கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்புக் கீழ்க் கொடுக்கப்பட்டிருக் கிறது.

## இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புகள் | | | சொத்துகள் | |
|---|---|---|---|---|
| | | ரூ. | | ரூ. |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 2,000-9 சதவீதம் மீள்தகு முன்னுரிமைப் பங்குகள் முழுதும் செலுத்தப் பெற்றவை | | 2,00,000 | நிலைச் சொத்துகள் (தேய்மானம் போக) | 3,00,000 |
| | | | துணைக் கம்பெனியில் பங்குகள் (1,000 பங்குகள்) | 4,00,000 |
| ஒன்று ரூ. 1,000 மதிப்புடைய 100 நேர்மைப் பங்குகள், பங்கொன்றுக்கு ரூ. 700 கோரப்பட்டிருக்கிறது ரூ. | 70,000 | | மிதப்புச் சொத்துகள் (Floating Assets) | 5,20,000 |
| **கழி :** அழைப்பு நிலுவை ஒன்றுக்கு ரூ. 200 வீதம் 20 பங்குகள் மீது | 4,000 | 66,000 | ரொக்க, வங்கியிருப்பு | 1,80,000 |

இருப்புநிலைக் குறிப்பு—(தொடர்ச்சி)

| பொறுப்புகள் | | சொத்துகள் | |
|---|---|---|---|
| | ரூ. | | ரூ. |
| ஒன்றுக்கு ரூ. 300 வீதம் 80 பங்குகள் மீது செலுத்தப் பட்ட அழைப்பு முன்பணம் | 24,000 | | |
| பொதுக்காப்பு | 5,00,000 | | |
| இலாப-நட்ட பகிர்வுக் கணக்கு | 2,50,000 | | |
| வரி ஒதுக்கு உள்பட் பொறுப்புகள் | 3,60,000 | | |
| | 14,00,000 | | 14,00,000 |

1966 சூலை 1-லிருந்து அழைப்புத் தொகை நிலுவையி லிருக்கிறது. அழைப்பு முன்பணம் அதே நாளில் பெறப்பட்டது.

கம்பெனியின் இயக்குநரவை கீழ்க்கண்டவாறு பரிந்துரை செய்யத் திட்டமிட்டுள்ளனர்.

1. 1966 திசம்பர் 31-ல் முடியும் ஆண்டிற்கு முன் னுரிமை, நேர்மைப் பங்குகள் மீது முறையே 9 சதவீதம், 10 சத வீதம் பங்காதாயம் வழங்கல்.

2. அழைப்பு முன்பணத்தைத் திருப்பித் தந்துவிடுதல்.

3. பங்குநர்கட்குச் செலுத்தவேண்டிய பங்காதாயத் தொகையை, அவர்கள் செலுத்தவேண்டிய அழைப்பு நிலுவைத் தொகைக்குப் பயன்படுத்திக் கொள்ளல்.

4. இரு திங்கள் அறிவிப்பிற்குப் பின் எப்பொழுது வேண்டு மானாலும் 10 சதவீதம் முனைமத்தில் மீட்கக் கூடிய முன்னுரிமைப் பங்குகளை மீட்பது, இதற்காக ஒன்று ரூ. 100 மதிப்புள்ள 6 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்களைப் பெயரளவு மதிப்பில் ரூ. 20,000-ற்கு வெளியிடுதல்.

சட்டமுறைகளனைத்தும் பின்பற்றப்பட்டன என்றுகொண்டு மேற்கண்ட நடவடிக்கைகளை நிறைவேற்றத் தேவையான குறிப் பேட்டுப் பதிவுகளைத் தருக. வருமான வரியையும் கணக்கி லெடுத்துக் கொள்க. வருமான வாயிலில் கழிக்கவேண்டிய வருமானவரி 30 சதவீதம் (deduction of Income Tax at source) என்று கொள்க. இருப்புநிலைக் குறிப்பைத் திருத்தித் தயாரிக்க.

(C. A. Final–ஐத் தழுவியது)

(6) கம்பெனியின் வெளியீட்டு முதல் ஒன்று ரூ. 10 வீதம் ரூ. 2,00,000-மாக இருந்தது. ஒவ்வோராண்டும் கணக்கு கள் திசம்பர் 31-ல் முடிக்கப்படுகின்றன. 1965 திசம்பர் 31-ல் கீழ்க்கண்ட இருப்புகளைக் கணக்குகள் காட்டின :

| | | ரூ. |
|---|---|---|
| இலாப-நட்டக் கணக்கு | .. | 3,70,000 |
| பங்காதாயம் எண் 20 | .. | 5,400 |

| | | ரூ. |
|---|---|---|
| பங்காதாயம் எண் 21 | .. | 8,600 |
| உரிமைகோராப் பங்காதாயம் | .. | 6,000 |
| பங்காதாய வங்கிக் கணக்கு (பங்காதாயம் எண் 20, 21-ற்கானவை) | .. | 14,000 |
| வைப்புக் கணக்கு (உரிமை கோராப் பங்காதாயம்) | .. | 6,000 |

1966 மார்ச் 15-ல் நடைபெற்ற கூட்டத்தில் 1965ஆம் ஆண்டிற்கான பங்காதாயம் (எண் 22) 10 சதவீதம் எனக் கம்பெனி அறிவித்தது. ஆகஸ்டு 1-ல், 1966 சூன் 30-ல் முடியும் ஆறு திங்கள்கட்கு ஆண்டுக்கு 4% வீதம் இடைக்காலப் பங்காதாயம் (எண் 23) இயக்குநர்கள் அறிவித்தனர். கம்பெனி யின் வங்கியில் கீழ்க்கண்டவாறு பங்காதாய ஆணைகள் கொடுக்கப் பட்டு 1966 திசம்பர் 31வரை பணம் செலுத்தப்பட்டன.

| | | ரூ. |
|---|---|---|
| பங்காதாயம் எண் 20 | .. | 4,600 |
| பங்காதாயம் எண் 21 | .. | 7,200 |
| பங்காதாயம் எண் 22 | .. | 1,24,200 |
| பங்காதாயம் எண் 23 | .. | 23,000 |

இத்துடன் உரிமைகோராப் பங்காதாயத்திலிருந்து ரூ.2,500 பங்குநர்கட்குச் செலுத்தப்பட்டிருக்கிறது.

பங்காதாயம் எண் 20, 21 ஆகிய கணக்குகளில் செலுத்தப் பெறுதிருக்கும் தொகைகளை உரிமைகோராப் பங்காதாயத்திற்கு மாற்றப்பட்டதாகக் கொண்டு தேவையான பேரேட்டுக் கணக்கு களைத் தயாரிக்க.

(C. A. First–ஐத் தழுவியது)

# 11. வாணிக நற்பெயரையும் பங்குகளையும் மதிப்பிடல்

## (Valuation of Goodwill and Shares)

## வாணிக நற்பெயர் (Goodwill)

**இலக்கணம்**

வாணிக நற்பெயர் என்றால் என்ன? இதன் விடையை விவரித்துக் கூறலாமேயன்றி இலக்கணமாகத் தொகுத்து இயம்புதல் இயலாது. அது ஒரு கண்ணுக்குப் புலனாகாச் சொத்து; ஆனால், அது கற்பனைச் சொத்து அன்று. சில வேளைகளில், கண்ணுக்குப் புலனாகும் சொத்தின் மதிப்பினைவிட, வாணிக நற்பெயரின் மதிப்பும் பயனும் போற்றிப் பாதுகாத்தற்குரியதாக இருக்கும். எனவேதான், அதற்குக் கொடுத்திருக்கின்ற இலக்கணம் பல்வகைப்பட்டதாக இருக்கின்றது. அதனை மதிப்பிடும் முறைகளும் பல்வகையானவை. கருத்து வேற்றுமைகளும், கடும் விவாதங்களும் வாணிக நற்பெயர் என்னும் சொத்தினை மதிப்பிடுவதில் எழுகின்றன.

'பழைய இடத்திலேயே பழைய வாடிக்கையாளர்கள் தொடர்ந்து வாங்குவது என்ற நம்பிக்கையே வாணிக நற்பெயர் ஆகும்' என்று எல்டன் பிரபு அவர்கள் கூறுகிறார்கள்.

'தொடர்பின் காரணமாகவும், நற்பெயரின் காரணமாகவும், கிடைக்கக்கூடிய பயனைக் குறிக்கும் சொல் வாணிக நற்பெயராகும். அத் தொடர்பினைத் தொடர்ந்து வைத்துக் கொள்வதாலும், அதிகப்படுத்திக் கொள்வதாலும் விளையக்கூடிய பயனே அதன் மதிப்பாகும். நன்கு அமையப்பெற்ற ஒரு வியாபாரத்தை விற்கும்பொழுது வாணிக நற்பெயருக்கு மதிப்பு ஏற்படுகிறது.

இவ் வியாபாரத்தை முன்னுல் நடத்தி வந்தவர், அதனை விற்ற பிறகு அத்துடன் போட்டியாக அதே வகையான வாணிக அமைப்பை நடத்தாமலிருந்தால் மட்டுமே பெரும்பாலும் வாணிக நற்பெயரின் மதிப்பு அமையும்' என்று லின்லே பிரபு அவர்கள் கூறியுள்ளார்.

மேக்னெட்டன் பிரபு என்பவர் கீழ்க்கண்டவாறு இதனை விளக்குகின்றுர்.

'ஒரு வியாபாரத்தின் தொடர்பாலும், நற்பெயராலும், புகழாலும் விளையக்கூடிய பயனே வாணிக நற்பெய்ராகும். வாடிக்கையைக் கொண்டுவரும் கவர்ச்சிமிக்க சக்தியை அது குறிக்கும். புதிதாகத் தொடங்கப்பெற்ற வியாபார அமைப்பையும் நன்கு அமையப்பெற்ற பழைய நிறுவனத்தையும் வேறுபடுத்திக் காட்டுவதும் இதுவே.'

வாடிக்கையாளர்களின் கால்களை வாடிக்கையான இடம் நோக்கி இட்டுச் செல்லும் சக்தியே வாணிக நற்பெயர் எனில் மிகையாகாது. தொழிலைத் தொடங்குவதில் தொல்லைகள் பல ஏற்படும். வியாபாரத் தொடர்புகளை ஏற்படுத்துவதில் காலத்தையும், பணத்தையும் வீணுக்க நேரிடும். பழைய அல்லது நடந்து வரும் ஒரு வியாபாரத்தினை வாங்குவதின் காரணமாகக் காலத்தையும், கடும் முயற்சியையும், மன அலைச்சலையும் தவிர்க்கிறேம். இதற்கென கூடுதல் பணம் செலவிடுதல் தகும். நடந்துவரும் வியாபாரத்திற்கு மேற்சொன்னவற்றின் காரணமாகக் கூடுதலாகக் கொடுக்கப்படும் தொகையை வாணிக நற்பெயர் எனும் சொல் குறிக்கும்.

எதிர்பார்க்கும் கூடுதல் இலாபத்தின் தற்பொழுதைய மதிப்பே வாணிக நற்பெயர் என்ற கருத்தும் பரவலாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அதாவது, சாதாரணமாகக் கிடைக்கக்கூடிய இலாபத்தைவிட, கூடுதலாகக் கிடைக்கும் தொகைக்குரிய வாய்ப்பை வாணிக நற்பெயர் என்கிறேம்.

வாணிக நற்பெயருக்காக ஒருவர் பணம் தருகிறுர். பிறர் துணை ஏதுமின்றித் தன் முயற்சியால் ஈட்டும் இலாபத்தைவிட அதிகமாக ஆதாயம் கிட்டக்கூடிய நிலையில் அவரை வாணிக நற்பெயர் வைப்பதின் காரணமாகத்தான், அவர் அவ்வாறு கூடுதல் பணம் செலுத்துகிறுர் என்று பேராசிரியர் டிக்சி அவர்கள் கூறுகிறுர்.

மேற்சொன்ன பல்வகை விளக்கங்களிலிருந்தும் வாணிக நற்பெயரைப் பற்றிச் சுருக்கிக் கூறலாம்.

1. புதியதாகத் தொழில் தொடங்கி நடத்துவதைவிட நடந்துவரும் ஒரு வாணிகத்தை வாங்கி நடத்துவது எளிது. இவ்வாறு தொல்லைகளைத் தவிர்த்தலுக்குத் தரப்படும் கூடுதல் தொகை வாணிக நற்பெயராகும்.

2. நிகர சொத்துகளின் உள் மதிப்பைவிட ஒரு தொழிலை வாங்கும்பொழுது கூடுதலாகக் கொடுக்கவேண்டியிருப்பின், அவ்வாறு கூடுதலாகக் கொடுக்கப்படும் தொகை வாணிக நற்பெயருக்குரிய விலை ஆகும்.

இவ்வாறு வாணிக நற்பெயரின் மதிப்பைக் கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் மதிப்பிட வேண்டியிருக்கிறது.

1. கூட்டாண்மையில் (Partnership) கூட்டாளிகள், தங்கள் இலாப-நட்ட வீதத்தை மாற்றிக் கொள்ளும்பொழுது;

2. புதிய கூட்டாளி ஒருவரைச் சேர்க்கும்பொழுது;

3. ஒரு கூட்டாளி நிறுவனத்திலிருந்து விலகும்பொழுது அல்லது இறக்கும்பொழுது;

4. ஒரு நிறுவனம் தனது தொழிலைக் கம்பெனியிடம் விற்கும்பொழுது அல்லது வேறொரு கூட்டு நிறுவனத்துடன் இணையும்யும்பொழுது.

ஒரு கூட்டுப் பங்குக் கம்பெனியைப் பொருத்தவரை, கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் வாணிக நற்பெயரை மதிப்பிடவேண்டிய தேவை எழலாம்.

1. ஒரு கம்பெனி தனது தொழிலை வேறொரு கம்பெனியிடம் விற்கும்பொழுது;

2. ஒரு கம்பெனி வேறொரு கம்பெனியிடம் ஒன்றிணையும்பொழுது;

3. பங்குமாற்றுச் சந்தையில் பங்கின் விலை குறிக்கப்படாதபோழ்து பங்குகளின் மதிப்பை உணரவேண்டியிருக்கும். அந்

நிலையில் கம்பெனியில் தனது ஆதிக்கத்தைச் செலுத்துமளவிற்குத் தேவையான நிறைய பங்குகளை வாங்கும்போழ்து அல்லது விற்கும் போழ்து.

## வாணிக நற்பெயரின் மதிப்பினை ஏற்படுத்தும் சூழ்நிலைகள்

### 1. இடம்

ஒரு நகரத்தின் சில குறிப்பிட்ட பகுதிகளில் வாணிகம் செய்தால், பயன் மிக விளையலாம். கடைத்தெரு, பேருந்து நிலையங்கள், புகைவண்டி நிலையங்கள், நகரத்தின் நடுப்பகுதிகள் போன்ற இடங்களில் அமையப்பெற்றிருக்கும் நிறுவனத்தின் மதிப்பு அதிகமாக இருப்பதற்குக் காரணம் இதுவே. இப் பகுதிகளில் புதிய தொழிலைத் தொடங்குவது என்றால், இடம் கிடைப்பது அருமை. எனவே, இப்பொழுது வாணிகஞ்செய்து வருவோர், தங்களது நிறுவனங்களை விற்கும்பொழுது இடத்தின் சூழ்நிலையின் காரணமாக எழுகின்ற வாணிக நற்பெயருக்காகக் கூடுதல் பணம் கேட்பர். புதிதாகத் தொழில் தொடங்க முனைவோருக்கு எளி தாக இடம் கிடைக்குமென்றால், வாாணிக நற்பெயர் இல்லை யென்று பொருள். இவ்வாறு சொந்தத்திற்கோ வாடகைக்கோ இடம் எளிதாகக் கிடைக்காத காரணத்தினால்தான், வாணிக நற்பெயரின் மதிப்பு கூடுகிறது.

### 2. தொழிலின் தன்மை

தொழிலின் தன்மையைப் பொருத்தும் வாணிக நற்பெயரின் மதிப்பு அமையும். அன்றாடம் வேண்டப்படும் பொருள்களில் விபாயாரம் செய்யின் அதற்கான தேவை எப்போழ்தும் சீராக இருக்கும். அத்தகைய வியாபாரங்களில் நிலையான இலாபம் கிடைக்கும். இதனால் வாணிக நற்பெயரின் மதிப்புக் கூடும். அவ்வாறின்றி, மக்களின் அந்தந்த நேர விருப்பத்தை நிறை வேற்றும் பொருள்களை அல்லது பகட்டுப் பொருள்களை அல்லது கவர்ச்சிப் பொருள்களை உற்பத்தி செய்யினும் அல்லது அவற்றில் வியாபாரம் செய்யினும், நிலையான இலாபம் ஈட்டுவது கடினம். காரணம், வாணிகம் செய்து வரும் பொருள்கள் வழக்கொழிந்து போயினும் அல்லது மக்களின் விருப்பத்தில் மாற்றம் ஏற்படினும் அல்லது மக்கள் பின்பற்றும் பாணி மாறிவிடினும், அப் பொரு ளுக்கான தேவை குறைந்துவிடும். அத்துடன், இடர்ப்பாடுகள் அதிகமுள்ள வியாபாரங்களிலும் வாணிக நற்பெயர் அதிகம் எழாது. காரணம், எத்தகைய இடர்ப்பாட்டினையும் ஏற்றுச் சமாளிக்க வல்லவர்கள் மிகச் சிலரே. அவ்வாறின்றி, போட்டி

யின்றி நடைபெறும் தொழிலின் வாணிக நற்பெயரின் மதிப்பு மிகவும் கூடுதலாக இருக்கும்.

முற்றுரிமைத் தொழிலில் போட்டியேதும் இல்லாத் காரணத்தால், ஈட்டும் இலாபம் மிகவும் கூடுதலாக இருக்கும். எனவே, முற்றுரிமைத் தன்மையுடைய தொழிலில், வாணிக நற்பெயரின் மதிப்புக் கூடுதலாக இருக்கும். இவ்வாறு வியாபாரம் செய்யும் பொருள் இன்றியமையாப் பொருளா, அல்லவா என்பதைப் பொருத்தும், செய்யும் தொழிலில் ஏற்கவேண்டிய இடர்ப்பாடுகள் கூடுதலா, குறைவா என்பதைப் பொருத்தும் முற்றுரிமைத் தொழிலா அல்லது கடும் போட்டி நிலவும் தொழிலா என்ற தன்மைகளையெல்லாம் பொருத்தும் வாணிக நற்பெயரின் மதிப்பு அமையும் என்பதை உணரவேண்டும்.

### 3. வாடிக்கையாளர்களின் தன்மை

வாடிக்கையாளர்களைத் தொடர்ந்து வரவழைக்கும் கவர்ச்சிமிக்க சக்திதான் வாணிக நற்பெயர் என்றும் கூறியிருக்கிறோம். ஆனல், வாடிக்கையாளர்களின் வகையினைப் பொருத்தே இவ்வழியான வாணிக நற்பெயர் எழும். பல்வகைப்பட்டவர்கள் மனப்போக்கில் ஒருவர்க்கொருவர் மாறுபட்டவர்கள். பூனைகளாகவும், நாய்களாகவும், எலிகளாகவும், முயல்களாகவும், அவர்கள் விலங்கின முறையில் வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

பூனையானது தன்னை வளர்ப்பவரிடம் காட்டும் பற்றினைவிட தான் பழகிய இடத்தில்தான் அதிகப் பற்றுடையதாக இருக்கிறது. அதனை வளர்ப்பவர் வேறு இடத்திற்கு மாற்றிச் சென்றாலும், பூனை அவருடன் செல்லாமல், அது பழகிய பழைய இடத்திலேயே தங்கிவிடுகிறது. அவ்வாறே, வாடிக்கையாளர்களில் சிலர் தாங்கள் வழக்கமாக வாங்கும் இடத்திற்கே செல்கின்றனர். அதாவது கடையின் உரிமையாளர் மாறியிருப்பினும், அது பற்றி ஏதுங் கருதாமல் தாம் வாங்கும் கடைக்கே செல்கின்றனர். இவ்வகை வாடிக்கையாளர்களைப் பூனைக்கு ஒப்பிடலாம். இவர்கள் அதிகம் நிறைந்திருப்பின், வாணிக நற்பெயர் மிகுதியாக இருக்கும்.

நாயைப் பொருத்தவரை, அது மிகவும் நன்றியுடையது. தன்னை வளர்த்தவர் செல்லுமிடத்திற்கே தொடர்ந்து செல்ல முயல்கிறது. அதேபோன்று, வாடிக்கையாளர்களில் சிலர் தாங்கள் வாங்கும் கடையின் உரிமையாளர் மாறியிருப்பின், பழைய இடத்திற்கே சென்று பொருளை வாங்காது, பழைய உரிமை

யாளர் இடம் நோக்கிச் செல்வர். இவ்வகை வாடிக்கையாளர்களால் வாணிக நற்பெயர் எழுவதில்லை. காரணம், உரிமை மாற்றத்தின் காரணமாகப் பழைய வாடிக்கை கிடைக்காமல் போகும்.

எலிக்கு எவ்விதப் பற்றும் இருப்பதில்லை. இவ்வகைப்பட்டவர் பழகிய இடம், உரிமையாளர் இவை பற்றி ஏதும் கருதாது, தாங்கள் விரும்பியவாறு விரும்பிய இடத்தில் சென்று வாங்குவர். இவர்களாலும் வாணிக நற்பெயர் ஏற்படுவதில்லை.

முயலைப் பொருத்தவரை, அருகில் உள்ள இடத்தின் மீது பற்றுக் கொண்டிருக்கிறது. தொலைவான இடத்திற்குச் செல்ல விரும்பாததால், நெருங்கிய தனது சுற்றுப்புறங்களிலேயே அது சூழ்ந்து இருக்கும். இத்தகைய வாடிக்கையாளர்களும் உளர். இவர்கள் தாங்கள் இருக்குமிடத்திற்கு அண்மையில் உள்ள கடையை நோக்கிச் செல்வர். தாங்கள் பழகிய இடம் என்ற காரணமோ, தங்கட்கு உள நிறைவை அளிக்கும் உரிமையாளரிடம் கொண்டுள்ள மதிப்போ இவர்கள் அக் கடைக்குச் செல்வதற்குக் காரணமல்ல. இவர்கள் வேறு கடைகளுக்குச் செல்லாததின் காரணம், அவை தொலைவில் இருப்பதுதான். இவ்வண்மைக் காரணம் பற்றியும் வாணிக நற்பெயர் எழுவதுண்டு. மக்கள் வாழும் பகுதியில் அமைந்திருக்கும் நிறுவனங்களின் விற்பனை பெருகுவதற்குக் காரணம் இதுவே.

## 4. தேவைப்படும் முதல்

பெரும் முதல் தொகை தேவைப்படாத தொழில்களை நடத்தப் பலர் முன்வருவர். எனவே, அத்தகைய தொழில்களின் வாணிக நற்பெயரின் மதிப்புக் கூடுதலாக இருக்கும். இலாபம் கூடுதலாகக் கிடைக்கும் ஒரு தொழிலில் முதலீடு செய்யவேண்டிய தொகையும் மிகவும் அதிகமாகத் தேவைப்படுமாயின், அதனை வாங்க முன்வருவோர் ஒரு சிலரே இருப்பார்கள். எனவே, பெருமுதல் வேண்டப்படும் தொழில்களுக்கு வாணிக நற்பெயரின் மதிப்புக் குறைவாக இருக்கும்.

## 5. நிர்வாகத் திறமை

ஆழ்ந்த வாணிக நோக்கும், சிறந்த நிர்வாகத் திறமையும் வியாபாரத்தின் கூடுதல் இலாபத்திற்கு வழிவகுக்கும். இதனால் வாணிக நற்பெயரின் மதிப்பு உயரும். ஆனால், நிறுவனத்தை வாங்கியவர் இதன் மதிப்பைக் கணக்கிடுமுன், அதே திறமை

யான நிர்வாகம் தொடர்ந்து கிடைக்குமா என்பதை உறுதிப் படுத்திக் கொள்ளவேண்டும். தொழிலின் உரிமை மாறுவதால், நிர்வாகத்தில் மாற்றம் ஏற்பட்டு அதன் விளைவாகத் திறமையான நிர்வாகம் தொழிலுக்கும் தொடர்ந்து கிட்டாமற் போகுமாயின், வாணிக நற்பெயரின் மதிப்பு இல்லாமற்போகும்.

ஊதியம் பெறும் ஊழியர்களின் திறமையும், நம்பிக்கைக் குரிய அலுவலர்களின் பணியும் ஒரு நிறுவனத்தின் பெயருக்குக் காரணமாக இருப்பின், உரிமையில் மாற்றம் ஏற்பட்ட பிறகு அவர்களின் பணி தொடர்ந்து கிடைக்குமானுல்தான், வாணிக நற்பெயரின் மதிப்புக் கூடுதலாக இருக்கும். எடுத்துக்காட்டாக, ஒரு செய்தித்தாள் ஆசிரியரின் சீரிய எழுத்தாற்றலின் காரணமாக அச் செய்தித்தாளின் விற்பனை பன்மடங்காய்ப் பெருகி இருக்க லாம். அந் நிறுவனத்தை வேறெருவர் வாங்கி விட்டால், அச் செய்தித்தாளின் ஆசிரியர் புதிய உரிமையாளரின் கீழ்ப் பணிபுரிய மறுக்கலாம். இந் நிலையில் செய்தித்தாளின் விற்பனை குறைந்து, இலாபமும் குன்றத் தொடங்கும்.

இவ்வாறு செம்மையான செயலாண்மையின் காரணமாக ஏற்படும் வாணிக நற்பெயரின் மதிப்பு, தொடர்ந்து அதே திறமையான நிர்வாகம் இருந்தால் மட்டுமே கூடுதலாக இருக்கும்.

### 6. உரிமையாளரின் தனித்திறமை

உரிமையாளரின் தனித் திறமையும், ஆற்றலும், அவரின் தனிப்பட்ட புகழுமே தொழிலின் இலாபத்திற்குக் காரணமாக இருந்திருக்குமாயின், புதிதாக அத் தொழிலை வாங்குபவர் வாணிக நற்பெயரை அதிகமாக மதிப்பிட முடியாது. நிறுவனத்தின் உரிமை மாறியிருப்பினும் பழைய வாடிக்கையாளர்கள் தொடர்ந்து வரலாம். ஆயினும், புதிய உரிமையாளர் அவர்கட்கு மன நிறை வைத் தராவிடில், அவர்கள் வாடிக்கையை நிறுத்திக் கொள்வர்.

### 7. கச்சாப்பொருள் கிடைத்தல்

கச்சாப் பொருள் கிடைப்பது பெரும்பாடாக உள்ள இற்றைக் காலத்தில், அதனைத் தொடர்ந்து பெறக்கூடிய நிலையி லுள்ள நிறுவனத்தின் வாணிக நற்பெயர் அதிகமாக இருக்கும். எடுத்துக்காட்டாக, இறக்குமதி மீது தடைகள் பல உள்ள இந் நாள்களில் அதிக அளவில் இறக்குமதி செய்யும் உரிமத்தைப் (licence) பெற்றுள்ள நிறுவனத்தின் வாணிக நற்பெயரின்

மதிப்பு அதிகமாக இருப்பது இயல்பு. அவ்வாறே, தன் தொழிலுக்குத் தேவையான கச்சாப் பொருள்களை உற்பத்தி செய்வோரிடம் ஏற்படுத்திக் கொண்ட சாதகமான ஒப்பந்தங்களும் இவ்வாறே நிறுவனத்தின் மதிப்பைக் கூட்டும் தன்மையன.

## 8. ஒரோவழி ஒப்பந்தங்கள் (Exceptional Contracts)

தனது தொழிலுக்கு வேண்டிய பொருள்களையோ அல்லது பணியையோ பெறுவதற்கான சாதகமான ஒப்பந்தங்களைப் பெற்றிருக்கும் கம்பெனியின் வாணிக நற்பெயர் அதிகமாக இருக்கும். ஆனால், அத்தகைய ஒப்பந்தங்கள் மீண்டும் புதுப்பிக்கப்படாதெனில், வாணிக நற்பெயரை அதிகமாக மதிப்பிட முடியாது. அத்தகைய ஒப்பந்தத்தின் காரணமாகக் கடந்த சில ஆண்டுகளில் இலாபம் ஈட்டப்பட்டிருப்பின், தொழிலிலிருந்து கிடைத்த சராசரி இலாபத்தைக் கணக்கிடும்பொழுது, அந்த இலாபத்தைக் கணக்கிலெடுத்துக் கொள்ளக்கூடாது.

## 9. புனைபொருள் உரிமைகளும், வாணிகக் குறிகளும் (Patents and Trade Marks)

பெரும்பான்மையான தொழிற்சாலைகளில் புனைபொருளுரிமையைப் (Patents) பெற்றிருப்பர். மிகவும் சிறந்த புனைபொருளுரிமையைப் பயன்படுத்தும் தொழில் நிறுவனத்தின் வாணிக நற்பெயர் மதிப்பு மிக்கது. அவ்வாறே, தனது பொருளுக்குத் தனியொரு வாணிகக் குறியின்மூலம் சிறந்த பெயரை ஏற்படுத்தியிருக்கும் தொழில் நிறுவனத்தின் நற்பெயரும் கூடுதலாக இருக்கும்.

அவ்வாறே, அதிகமாக விற்பனையாகும் சிறந்த நூல்களின் பதிப்புரிமை (Copy right) பெற்றிருக்கும் பதிப்பகங்களின் வாணிக நற்பெயரும் கூடுதலாக இருக்கும். காரணம் அந் நூல்களை வேறு யாரும் பதிப்பித்து விற்க முடியாது. அந் நூல் விற்பனையைப் பொருத்தமட்டில் அவை முற்றுரிமை பெற்றுள்ளன.

### பல்வகைக் காரணங்கள்

மேற்சொன்ன காரணிகள் ஒரு நிறுவனத்தில் வாணிக நற்பெயரின் மதிப்பை நிர்ணயிப்பதுடன் கீழ்க்கண்ட சூழ்நிலைகளாலும் அது பாதிக்கப்படுகிறது.

**1. பணச்சந்தை நிலை:** பணம் எளிதாகக் கிடைக்கக் கூடியதாக இருப்பின், ஒரு நிறுவனத்தை வாங்கப் பலர் முன்வரக்

கூடும். அதன் காரணமாக வாணிக நற்பெயரின் மதிப்புக் கூடும். பணம் பெறுவது எளிதாக இல்லா நிலையில், இதன் மதிப்புக் குறைந்திருக்கும்.

**2. நாட்டின் அமைதி நிலை:** நாட்டில் அமைதி நிலவுமாயின், பொருளாதார நடவடிக்கைகள் வளர்ந்தோங்கும். பொருளாதார வளர்ச்சியின் காரணமாக வாணிகம் சிறக்கும். இதனால் வாணிக நற்பெயரின் மதிப்புக் கூடும்.

**3. அரசின் போக்கு:** ஒரு குறிப்பிட்ட துறையில் பொருளாதார முன்னேற்றத்திற்கு அல்லது தொழில் வளர்ச்சிக்கு அரசு ஆர்வம் காட்டிச் செயல் மேற்கொள்ளுமாயின், அத் துறையிலுள்ள தொழில்களில் முதலீடு செய்யப் பலர் முன்வருவர். எடுத்துக்காட்டாக, உர உற்பத்தியிலும், வேளாண்மைப் பண்டங்களிலும், ஏற்றுமதியாகும் பொருள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழில்களிலும் அரசு ஆக்கம் காட்டுகிறது. இவைகளின் உற்பத்திப் பெருக பல்வகைச் சலுகைகளையும், நிதி உதவிகளையும் அளிக்கிறது. எனவே, இத் துறைகளில் தொழில் தொடங்கப் பலர் ஆர்வம் காட்டுகின்றனர். வாணிக நற்பெயருக்காகக் கூடுதல் தொகை தரவும் தயக்கம் காட்டமாட்டார்கள். அவ்வாறே சில குறிப்பிட்ட துறைகளை அரசு ஆதரிக்கவில்லையெனில், அத் துறையில் ஈடுபட்டுள்ள தொழில்களின் வாணிக நற்பெயர் குறைந்திருக்கும்.

**வாணிக நற்பெயரை மதிப்பிடுதல்** (Valuation of Goodwill)

**மதிப்பிடும் முறைகள்:** வாணிக நற்பெயரை மதிப்பிடுவதில் பொதுவாக இரண்டு முறைகள் பின்பற்றப்படுகின்றன.

1. சாதாரண இலாப முறை. Simple profit meth

2. மிகை இலாப முறை (Super Profits Method).

(Simple Profits method)

**1. சாதாரண இலாப முறை:** இம் முறையின்படி கடந்த நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளில் நிறுவனம் ஈட்டியுள்ள இலாபத்தின் சராசரியை முதலில் கணக்கிடவேண்டும். பின்னர் இவ்வாறு கிடைத்த சராசரி இலாபத்தை இரண்டு அல்லது மூன்று மடங்காகப் பெருக்கவேண்டும். எடுத்துக்காட்டாக, ஒரு நிறுவனத்தின் வாணிக நற்பெயரின் மதிப்பு அதன் மூன்றாண்டு இலாபச் சராசரியில் இரண்டாண்டுக் கொள்முதல் என்றும்,

அந் நிறுவனம் ஈட்டிய இலாபம் கீழ்வருமாறு அமைந்தது என்றும் கொள்வோம்.

| | | ரூ. |
|---|---|---|
| முதலாண்டு | .. | 24,000 |
| இரண்டாமாண்டு | .. | 20,000 |
| மூன்றுமாண்டு | .. | 25,000 |

இப்பொழுது நிறுவனத்தின் வாணிக நற்பெயரின் மதிப்பைக் கண்டுபிடிக்க முதலில் இதன் விழுக்காட்டு (சராசரி) இலாபத்தை உணரவேண்டும். அது ரூ. 23,000 ஆகிறது. இதைப்போல் இரண்டாண்டுக் கொள்முதல் என்று கொடுக்கப்பட்டிருப்பதால், அதைப்போல் இரண்டுமடங்கு என்று பொருள். அதாவது ரூ. 46,000 ஆகிறது.

எதிர்காலத்தில் ஏற்படும் இலாபத்தைக் கண்டுபிடிக்க இயலாவிடினும், கடந்த ஆண்டுகளில் ஈட்டிய இலாபத்தின் துணை கொண்டு ஓரளவு அதனை மதிப்பிடமுடியும். கடந்த ஆண்டுகளில் இருந்த சூழ்நிலைகள் இனியும் நீடிக்குமாயின், இலாபமும் அவ்வாறே ஏற்படும் என்று நம்புவதில் தவறில்லை. எனவேதான், கடந்த கால நிலையின் அடிப்படையில் எதிர்காலத்தின் போக்கு கணிக்கப்படுகிறது.

கடந்த காலத்தின் நிலையை உணரச் சென்ற ஆண்டு ஏற்பட்ட இலாபத்தை மட்டும் கருத்திற்கொள்ளுதல் அவ்வளவு சரியாகாது. எனவே, கடந்த மூன்று அல்லது நான்கு ஆண்டுகளில் நிறுவனம் ஈட்டிய இலாபத்தின் சராசரியைக் கணக்கிடும்பொழுது, நிறுவனத்தின் வளர்ச்சியை ஓரளவு உணரமுடியும். எனவேதான், வாணிக நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடும்பொழுது சராசரி இலாபத்தைக் கருத்திற்கொள்ளுகிறோம்.

புதிதாகத் தொழில் தொடங்குவதைக் காட்டிலும் பழைய தொழிலமைப்பினை ஏற்று நடத்துவதில் தொல்லை இல்லாததுடன், கிடைக்கும் ஆதாயமும் அதிகமாகும். இலாபம் ஈட்டுவதற்குத் தேவைப்படும் காலமும், முயற்சிகளும், இடர்ப்பாடுகளும் தவிர்க்கப்படுகின்ற காரணத்தால், சராசரி இலாபத்தைப்போல் இரண்டு அல்லது மூன்று மடங்கு வாணிக நற்பெயரின் மதிப்பு என்று கொடுக்கப்படுகிறது.

கடந்த சில ஆண்டுகளின் இலாபச் சராசரியை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு வாணிக நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடும் முறை முற்றிலும் சரியாகாது. இலாபம் ஈட்டும் போக்கினையும் கருத்திற்கொண்டு இதனை மதிப்பிடவேண்டும். கீழ்க்கண்ட எடுத்துக்காட்டின்மூலம் இதனை விளக்கலாம்.

| ஆண்டு | | கம்பெனி | | | |
|---|---|---|---|---|---|
| | | அ | ஆ | இ | ஈ |
| 1970 | இலாபம் | 20,500 | 16,500 | 25,400 | 5,900 |
| 1971 | இலாபம் | 30,000 | 17,300 | 20,800 | 8,700 |
| 1972 | நட்டம் | 6,500 | 18,400 | 17,200 | 14,200 |
| 1973 | இலாபம் | 25,000 | 18,000 | 15,700 | 22,000 |
| 1974 | இலாபம் | 21,000 | 19,800 | 10,900 | 29,200 |
| | | 90,000 | 90,000 | 90,000 | 90,000 |
| சராசரி இலாபம் | | 18,000 | 18,000 | 18,000 | 18,000 |

மேலே கொடுக்கப்பட்டுள்ள நான்கு கம்பெனிகளும் ஐந்தாண்டுச் சராசரி இலாபமாக ரூ. 18,000-த்தைப் பெற்றுள்ளன. ஆண்டுச் சராசரி இலாபத்தினை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு வாணிக நற்பெயரை மதிப்பிட வேண்டுமானால், எல்லாக் கம்பெனிகளுக்கும் வாணிக நற்பெயர் ஒரே தொகையாக இருக்கும். ஆனால் இது முறையாகாது.

'அ' கம்பெனியை எடுத்துக்கொண்டால், அது ஈட்டும் இலாபம் ஆண்டுக்காண்டு பெரிதும் மாறுபடுகிறது. 1971ஆம் ஆண்டில் ரூ. 30,000 இலாபம் ஈட்டிய அக் கம்பெனி அடுத்த ஆண்டில் ரூ. 6,500 நட்டத்தைக் கண்டிருக்கிறது. இத்தகைய நிலையற்ற இலாபப் போக்கின் துணைகொண்டு எதிர்காலத்தில் இக் கம்பெனி குறிப்பிட்ட தொகையை இலாபம் ஈட்டும் என்று சொல்வதற்கில்லை.

'ஆ' கம்பெனியைப் பொருத்தவரை, இலாபம் ஒவ்வோராண்டும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. ஆனால், மிகவும்

குறைந்த வீதத்தில் இதன் வளர்ச்சியிருப்பதால், இக் கம்பெனி யின் வாணிக நற்பெயரைச் சராசரி இலாபத்தின் ஓராண்டுக் கொள்முதல் அளவில் உறுதிப்படுத்தலாம். அதாவது, அதன் வாணிக நற்பெயரை ரூ. 18,000 என மதிப்பிடல் சிறப்பாக இருக்கும்.

'இ' கம்பெனியைப் பொருத்தவரை, அது ஈட்டும் இலாபம் ஒவ்வோராண்டும் குறைந்துகொண்டே வருகிறது. இன்னும் சில ஆண்டுகள் சென்றால் அது ஈட்டும் இலாபம் அறவே மறைந்து நட்டத்தில் முடிந்தாலும் வியப்பில்லை. எனவே, இதற்கு வாணிக நற்பெயர் இல்லை என்றே சொல்லலாம்.

'ஈ' கம்பெனியைப் பொருத்தவரை, அதன் இலாபம் படிப் படியாக அதிகரித்துக்கொண்டே வருகிறது. 1970-ல் ரூ. 5,000 இலாபம் ஈட்டிய இக் கம்பெனி 1974-ல் 28,200 இலாபத்தைப் பெற்றுள்ளது. இதன் வளர்ச்சி வீதமும் ஆண்டுக்காண்டு உயர்ந்தே காணப்படுகிறது. இந் நிலை எதிர்காலத்தில் இக் கம்பெனி ஈட்டும் இலாபம் மிகவும் பெருகும் போக்கையே காட்டு கிறது. எனவே, இக் கம்பெனியின் வாணிக நற்பெயர் மிகவும் அதிகமாக மதிப்பிடப்படும் என்பதில் ஐயமில்லை.

மேற்சொன்ன விவரங்களிலிருந்து நாம் அறியும் உண்மை என்னவெனில், **இலாப விழுக்காட்டின் (சராசரியின்) அடிப் படையிலேயே வாணிக நற்பெயரை மதிப்பிடுதல் வழுவாகும். இலாபப் போக்கினையும் நாம் கருத்திற் கொள்ளவேண்டும் என்பதேயாகும்.**

சராசரி இலாபத்தை அறியுமுன்னர் வியாபாரத்தின் அல்லது தொழிலின் முழு நிலையையும் நன்கு ஆயவேண்டும். கடந்த காலத்தில் தொழிலை நடத்திவந்த முறைக்கும், இனிச் செயல்பட விருக்கும் முறைக்கும் மாற்றங்கள் இருக்குமாயின், அவற்றிற் கேற்றவாறு சரிக்கட்டிய பின்னரே எதிர்கால இலாபத்தை மதிப் பிடமுடியும்.

கடந்த காலத்தில் கூடிய இலாபத்தைப் பெறுவதற்கு அமைந்திருந்த சூழ்நிலைகள் இனி எதிர்காலத்தில் இல்லாமற் போகலாம். அல்லது ஆற்றல் மிக்க அலுவலர்களின் பணி எதிர் காலத்தில் கிடைக்காமற்போகலாம். இதன் காரணமாகக் கடந்த காலத்தில் ஈட்டிவந்த இலாபம் எதிர்காலத்திலும் கிடைக்கும் என்று கருதுவதற்கு இடமில்லை. ஏற்று நடத்திவரும் நிறுவனத்

தின் நற்பெயர் அதன் பழைய உரிமையாளரின் தனித்திறமையின் காரணமாக ஏற்பட்டிருக்குமாயின், இனியும் அதே இலாபம் கிடைக்கும் என்று கருதக்கூடாதல்லவா? எடுத்துக்காட்டாக, டாக்டர் சுந்தர் நடத்திவரும் மருத்துவமனையை டாக்டர் பல்லவன் வாங்குவதாகக் கொள்வோம். டாக்டர் சுந்தர் அவர்களின் தனிப்பட்ட மருத்துவ அறிவின் காரணமாகவும், நோய்தீர்க்கும் ஆற்றல் காரணமாகவும் அம் மருத்துவமனைக்குப் புகழ் சேர்ந் திருக்குமாயின், டாக்டர் பல்லவன் இப்பொழுது ஏற்று நடத்தி வரும் மருத்துவமனைக்கு அதே நற்பெயர் கிடைக்கும் என்று சொல்லமுடியாது. இவ்வாறு உரிமையாளரின் தனிப்பட்ட தன்மையின் காரணமாக இலாபம் அதிகமாக ஈட்டப்படும் சூழ் நிலைகளில் வாணிக நற்பெயர் அதிகமாக இருக்காது.

அதுபோன்றே கடந்த காலத்தில் கிட்டாத சில வசதிகள் எதிர்காலத்தில் கிடைக்குமாயின், முன்னிலும் அதிக இலாபம் பெறும் வாய்ப்பு இப்பொழுது இருக்கும். இதுபோன்று பல் வகைச் சூழ்நிலைகளையும் ஆய்ந்து பின்னரே எதிர்காலத்தில் பெறக் கூடிய இலாபத்தை மதிப்பிடவேண்டும். கீழ்க்கண்டவாறு சரிப் படுத்தலாம்.

1. இலாப விழுக்காட்டினை (சராசரியை) அறியக் கொடுக் கப்பட்டிருக்கும் இலாபத்திலிருந்து கடந்த காலத்தில் ஏற்பட்ட ஆனல், எதிர்காலத்தில் ஏற்படாதென நம்பும் செலவினங்களையும், நட்டத்தையும் கழித்துவிடவேண்டும். எடுத்துக்காட்டாக, தீ விபத்து, களவு போன்றவற்றின் காரணமாக ஏற்பட்ட நட்டம் ஒவ்வோராண்டும் நிகழக்கூடியவை அல்ல. அத்துடன் சொத்து களையும் சரக்கையும் காப்பீடு செய்துகொள்வதன்மூலமாக தீ விபத்தால் ஏற்படும் நட்டத்தைத் தவிர்க்கும் வகை ஏற்படுகிறது. எனவே, கொடுக்கப்பட்டிருக்கின்ற இலாபத்திலிருந்து தீ விபத்து போன்ற எதிர்பாரா நிகழ்ச்சிகளினுல் உற்ற நட்டத்தைக் கழித்து விடவேண்டும். அத்துடன் இனிக் காப்பீடு செய்வதால் ஏற்படும் காப்பீட்டு முனைமத் தொகையைக் கூட்டவேண்டும்.

2. கடந்த காலத்தில் மேலாளர், தொழில் வல்லுநர் போன்றவர்க்குக் கொடுக்கப்பட்டு வந்த ஊதியத்தில் பெரும் மாற்றம் ஏதேனும் இருப்பின், அதற்கும் சரிக்கட்டவேண்டும். முன்னர்ப் பணியிலிருந்த தொழில் வல்லுநர் அல்லது மேலாளர், இனித் தொடர்ந்து நிறுவனத்தில் பணி செய்யவில்லையெனில், அவர்கட்காகக் கொடுத்துவந்த ஊதியத் தொகைகளையும் இலா பத்துடன் கூட்டிக்கொள்ளவேண்டும். அவர்கட்கு மாருக இனிக்

கொடுக்கவிருக்கும் ஊதியத் தொகையை அல்லது ஏற்கவிருக்கும் கூடுதல் செலவினங்களை இலாபத்திலிருந்து கழிக்கவேண்டும்.

3. ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையின் காரணமாகக் கடந்த காலத்தில் இலாபம் ஏற்பட்டு இனிவரும் ஆண்டுகளில் அச்சூழ்நிலை இருக்காது எனில், அக் குறிப்பிட்ட சூழ்நிலையின் காரணமாக ஏற்பட்ட இலாபத்தைக் கழித்துவிடவேண்டும். எடுத்துக்காட்டாக குறிப்பிட்ட காலத்திற்கு மதிப்பு மிக்க உரிமம் (licence) இருந்ததென்றும், அதன் காலக்கெடு முடிவடைந்து மீண்டும் அது கிடைக்காதென்றால், அவ்வுரிமத்தின் காரணமாக ஏற்பட்ட ஆதாயம் இனியும் தொடர்ந்து கிடைக்காதல்லவா? ஆகவே, அத் தொகையைக் கொடுக்கப்பட்டிருக்கும் இலாபத்திலிருந்து கழித்துவிடவேண்டும்.

அவ்வாறே பொருள் பற்றுக் குறையால் நிலவிய மிகவும் அதிகமான விலையின் காரணமாக ஏற்பட்ட கடந்தகால ஆதாயத்தையும் கணக்கிலெடுத்துக் கொள்ளக்கூடாது.

ஆனால், சாதாரணமாக ஏற்படும் எல்லாச் செலவினங்களையும், வரவினங்களையும் அவ்வாறே ஏற்றுக் கொள்வதில் தவறில்லை. தனியாள் வாணிகமாயின், உரிமையாளரின் ஊதியத்திற்கும் தொகை ஒதுக்கவேண்டும்.

எல்லாவகையான பொறுப்புகட்கும் வழக்கமாகச் செய்யும் ஒதுக்குகளைச் செய்யவேண்டும். ஆனால், பொதுக்காப்பு, பங்காதாயச் சமன்செய்காப்பு போன்றவற்றிற்கு ஒதுக்கும் தொகைகளைக் கணக்கிலெடுத்துக் கொள்ளக்கூடாது. காரணம், அவை ஈட்டிய இலாபத்தினைப் பகிர்ந்து பின் ஒதுக்கப்படுபவையாகும்.

முன்னுரிமைப் பங்குகள் மீது வழங்கும் பங்காதாயத்தைப் பிரிக்கவேண்டும்.

## எடுத்துக்காட்டு 88

பாரி என்பவர் மாறன் நடத்திவரும் வியாபாரத்தை 1975 சனவரி 1-ல் வாங்கினார். கடந்த நான்கு ஆண்டுகளில் பாரி ஈட்டிய இலாபம் வருமாறு :

| | | ரூ. |
|---|---|---|
| 1971 | .. | 30,000 |
| 1972 | .. | 30,000 |
| 1973 | .. | 37,000 |
| 1974 | .. | 33,500 |

மீண்டும் மீண்டும் நிகழா இலாபம் 1971, 1973 ஆகிய ஆண்டுகளில் முறையே ரூ. 2,000, ரூ. 5,000 ஏற்பட்டது, மேற்படி இலாபத் தொகைகளில் அடங்கியுள்ளன. 1974ஆம் ஆண்டில் தீ விபத்தின் காரணமாக ஏற்பட்ட நட்டம் ரூ. 6,500. (காப்பீடு செய்யப்படாமையால், இந் நட்டத்தை ஈடுசெய்ய முடியவில்லை). இனிக் காப்பீடு செய்ய பாரி தீர்மானித்தார். ஆண்டுக் காப்பீட்டு முனைமத் தொகை (Insurance Premium) ரூ. 300 ஆகலாம் என்று கருதப்படுகிறது. மாறன் நடத்திவந்த வியாபாரத்தில் பாணன் ரூ. 400 திங்கள் ஊதியத்தில் மேலாளராகப் பணியாற்றி வந்தார். பாரி அதனை வாங்கிய பின்னர், பாணனை நீக்கிவிட்டு, தானே நிர்வகிக்க முடிவுசெய்தார். வேறொரு நிறுவனத்தில் அவர் ரூ. 600 திங்கள் ஊதியம் பெற்று வந்தார்.

மூன்றாண்டு விழுக்காட்டு (சராசரி) இலாபத்தின் 3 ஆண்டுக் கொள்முதல் எனும் அடிப்படையில் வாணிக நற்பெயரை மதிப்பிடுக.

**விடை :**

**விழுக்காட்டு இலாபம்**

| | | ரூ. | ரூ. |
|---|---|---|---|
| 1971ஆம் ஆண்டு இலாபம் | .. | 30,000 | |
| **கழி** : மீண்டும் நிகழா இலாபம் | .. | 2,000 | |
| | | | 28,000 |
| 1972ஆம் ஆண்டு இலாபம் | .. | | 30,000 |
| 1973ஆம் ஆண்டு இலாபம் | .. | 37,000 | |
| **கழி** : மீண்டும் நிகழா இலாபம் | .. | 5,000 | |
| | | | 32,000 |
| 1974ஆம் ஆண்டு இலாபம் | .. | 33,500 | |
| **கூட்டு** : தீ விபத்து நட்டம் | .. | 6,500 | |
| | | | 40,000 |
| மொத்த இலாபம் | .. | | 1,30,000 |

விழுக்காட்டு (சராசரி) இலாபம் .. $\frac{1,30,000}{4}$

= ரூ. 32,500

| | ரூ. | ரூ. |
|---|---|---|
| விழுக்காட்டு இலாபம் .. | | 32,500 |
| கழி : எதிர்காலத்தில் ஏற்க வேண்டிய கூடுதல் செல வினங்கள் : | | |
| காப்பீடு முனைமம் .. | 300 | |
| உரிமையாளரின் ஊதியம் .. | 7,200 | |
| | | 7,500 |
| | | 25,000 |
| கூட்டு : இனி ஏற்கவேண்டியிராத செலவினங்கள் : | | |
| மேலாளரின் ஊதியம் (12×ரூ. 400) .. | | 4,800 |
| எதிர்காலத்தில் கிடைக்கக்கூடிய நிகர விழுக்காட்டு இலாபம் | ரூ. | 29,800 |

வாணிக நற்பெயர் இதன் மூன்றாண்டுக் கொள்முதல் என்பதால், இவ்வியாபாரத்தின் வாணிக நற்பெயர்

ரூ. 29,800×3
= ரூ. 89,400

## எடுத்துக்காட்டு 89

1974 ஜூன் 31-ல் முடியும் 4 ஆண்டுகளின் இலாபம் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| ஆண்டு | இலாப-நட்டக் கணக்கின்படி இலாபம் ரூ. | வரி ரூ. | காப்பிற்கு ஒதுக்கிய தொகை ரூ. | இயக்குநர் ஊதியம் ரூ. |
|---|---|---|---|---|
| 1971 | 55,000 | 25,000 | 10,000 | 3,500 |
| 1972 | 65,000 | 30,000 | 10,000 | 4,000 |
| 1973 | 62,000 | 28,000 | 12,000 | 4,000 |
| 1974 | 68,000 | 35,000 | 12,000 | 6,000 |

வேறு சில தகவல்கள் :

1. ரூ. 4,00,000 மதிப்புடைய நிலைச் சொத்துகள் மீதான தேய்மானம் ஒதுக்கப்படவில்லை (தொடக்க விலை மீது 6 சதவீதம் தேய்மானம் ஒதுக்கப்படவேண்டும்).

2. இயக்குநர் ஊதியம் கழிப்பதற்கு முன் ஏற்பட்ட இலாபம் மேலே கொடுக்கப்பட்டிருப்பது.

3. இனி வருமானவரி இலாபத்தில் 25% வீதத்தில் கணக்கிடின் போதுமானதாகும்.

4. 1972ஆம் ஆண்டு ஏற்பட்ட எதிர்பாரா ஆதாயம் ரூ. 8,000 என மதிப்பிடப்படுகிறது.

5. நான்காண்டு விழுக்காட்டு இலாபத்தின் இரண்டாண்டுக் கொள்முதல் எனும் அடிப்படையில் வாணிக நற்பெயரை மதிப்பிடுக.

**விடை :**

**(விழுக்காட்டு) சராசரி இலாபம்**

| | | ரூ. | ரூ. |
|---|---|---|---|
| 1971ஆம் ஆண்டு இலாபம் | .. | | 55,000 |
| 1972ஆம் ஆண்டு இலாபம் | .. | 65,000 | |
| **கழி :** எதிர்பாராத இலாபம் | .. | 8,000 | |
| | | | 57,000 |
| 1973ஆம் ஆண்டு இலாபம் | .. | | 62,000 |
| 1974ஆம் ஆண்டு இலாபம் | .. | | 68,000 |
| நான்காண்டு மொத்த இலாபம் | .. | | 2,42,000 |

சராசரி இலாபம் $\frac{2,42,000}{4}$

$= 60,500$

| | | | |
|---|---|---|---|
| சராசரி இலாபம் | .. | | 60,500 |
| **கழி :** தேய்மானம் (ரூ 4,00,000 மீது 6 சதவீதம்) | .. | 24,000 | |
| இயக்குநர் ஊதியம் | .. | 6,000 | |
| | | | 30,000 |
| | | | 30,500 |

| | | ரூ. | ரூ. |
|---|---|---|---|
| | | | 30,500 |
| கழி : வருமானவரி (இலாபத்தில் 25 சதவீதம்) | .. | | 7,625 |
| எதிர்பார்க்கும் நிகர சராசரி இலாபம் | .. | ரூ. | 22,875 |

வாணிக நற்பெயர் 22,875×2
= ரூ. 45,750

குறிப்பு : எதிர்காலத்தில் ஏற்படும் என எதிர்பார்க்கும் சராசரி இலாபத்தைக் கணக்கிட இயக்குநர் ஊதியம் ரூ. 6,000 கழிக்கப்படுகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் இயக்குநருக்குக் கொடுத்த ஊதியத்தில் சராசரித் தொகையைக் கழிக்கவில்லை. காரணம், இனி நாம் கொடுக்கவேண்டிய இயக்குநர் ஊதியம் ரூ. 6,000 தான்.

இவ்வாறே சென்ற ஆண்டுகளில் வரிக்காக ஒதுக்கப்பட்ட தொகைகளைக் கருத்திற்கொள்ளத் தேவையில்லை. காரணம், இனி இலாபத்தில் 25 சதவீதம் அளவிற்கு வரி ஒதுக்கப்படின் போதுமானதாகும் என்று கணக்கில் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாறே காப்புகட்கு ஒதுக்கிய தொகை பற்றியும் கணக்கிடத் தேவையில்லை. காரணம், இது இலாபத்திலிருந்து மாற்றப் படுகின்றது.

### எடையேறிய விழுக்காடு (சராசரி)

சராசரி இலாபம் கணக்கிடுவதில் மேலும் ஒரு கருத்தினை அறிந்து கொள்ளுதல் நலம். கடந்த சில ஆண்டுகளாக ஏற்படும் இலாபம் குறிப்பிடத்தக்க முறையில் படிப்படியாக அதிகமாகிக் கொண்டே அல்லது குறைந்துகொண்டே செல்லுமாயின், சாதாரண முறையில் அவற்றின் சராசரியைக் கணக்கிடுவது சரியன்று. இத்தகைய சூழ்நிலையில் சென்ற ஆண்டு காட்டும் இலாபத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். முதலாண்டு இலாபத்திற்கு மிகக் குறைந்த முக்கியத்துவம் கொடுத்தால்போதும். காரணம், முதலாண்டு இலாபத்தைவிட, சென்ற ஆண்டு இலாபத்திற்கும், அதற்கு முன்ஆண்டு இலாபத்திற்கும் தொடர்பு அதிகமிருக்கும். எனவே, சென்ற ஆண்டு இலாபத்திற்குக் கூடுதல் முக்கியத்துவமும் அதற்கு முன்ஆண்டு இலாபத்திற்கு அதைவிடக்

குறைந்த முக்கியத்துவமும், அதற்குமுன் ஆண்டு இலாபத்திற்கு அதைவிடக் குறைந்த முக்கியத்துவமும் கொடுக்கவேண்டுமென்பது புலனுகும். இவ்வாறு கொடுக்கும் முக்கியத்துவத்திற்கு ஏற்றவாறு எடையேற்றிப் பின்னர் சராசரியைக் கண்டுபிடித்தல் சாலச் சிறந்ததாகும். சென்ற ஆண்டிற்கு அதிக எடை தரவேண்டும். கடந்த ஒவ்வோராண்டிற்கும் எடையைக் குறைத்துக்கொண்டே செல்லவேண்டும். ஒவ்வோராண்டு இலாபத்தையும் அவ்வாண் டிற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் எடையால் பெருக்கி, அப்பெருக் குத் தொகைகளின் மொத்தத்தை எடையின் மொத்தத்தால் வகுக்க வேண்டும்.

**எடுத்துக்காட்டு 90**

கடந்த 5 ஆண்டுகளில் ஒரு நிறுவனம் ஈட்டிய இலாபம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது :

| ஆண்டு | | இலாபம் |
|---|---|---|
| | | ரூ. |
| 1971 | .. | 26,000 |
| 1972 | .. | 30,000 |
| 1973 | .. | 28,000 |
| 1974 | .. | 40,000 |
| 1975 | .. | 60,000 |

முதலாண்டான 1971-ற்கு ஒரு எடையும், 72-ற்கு 2-ம், 73-ற்கு 3-ம், 74-ற்கு 4-ம், 75-ற்கு 5-ம் எடை கொடுக்க வேண்டுமென்றுகொண்டு எடையேறிய சராசரி இலாபத்தைக் கணக்கிடுக.

**விடை :**

| ஆண்டு | இலாபம் | எடை | பெருக்குத்தொகை |
|---|---|---|---|
| 1971 | 26,000 | 1 | 26,000 |
| 1972 | 30,000 | 2 | 60,000 |
| 1973 | 28,000 | 3 | 84,000 |
| 1974 | 40,000 | 4 | 1,60,000 |
| 1975 | 60,000 | 5 | 3,00,000 |
| | | 15 | 6,30,000 |

எடையேறிய சராசரி இலாபம் $\frac{6,30,000}{15}$

= ரூ. 42,000

## எடுத்துக்காட்டு 91

செல்வம் நடத்திவரும் வியாபாரத்தைச் செந்தில் வாங்கத் திட்டமிட்டுள்ளார். கடந்த நான்கு ஆண்டு எடையேற்றிய விழுக்காட்டு இலாபத்தின் மூன்றாண்டுக் கொள்முதல் எனும் அடிப்படையில் இதன் வாணிக நற்பெயரை மதிப்பிடவேண்டும். ஒவ்வோராண்டிற்கும் கீழ்க்கண்டவாறு எடையேற்றவேண்டும்.

| | |
|---|---|
| 1966 | 1 |
| 1967 | 2 |
| 1968 | 3 |
| 1969 | 4 |

இலாபம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

| ஆண்டு | ரூ. |
|---|---|
| 1966 | 20,200 |
| 1967 | 24,800 |
| 1968 | 20,000 |
| 1969 | 30,000 |

கணக்குகளை ஆய்ந்ததில் கீழ்க்கண்டவை புலப்பட்டன :

அ. 1968 செப்டம்பர் 1-ல் பொறியில் ஒரு பெரிய பழுது ஏற்பட்டுச் சரிசெய்யப்பட்டது. இதற்கான செலவு ரூ. 6,000 வருவாய்க் கணக்கிற்கு எடுத்துச் செல்லப்பட்டது. வாணிக நற்பெயரைக் கணக்கிடும்பொழுது இத் தொகையை முதற்படுத்தவும் (Capitalised), குறைந்துசெல் இருப்பு முறையில் இதன் மீது 10 சதவீதம் தேய்மானம் நீக்கவும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஆ. 1967 திசம்பர் 31-ல் சரக்கிருப்பு ரூ. 2,400 கூடுதலாக மதிப்பிடப்பட்டது.

இ. வாணிக நற்பெயரை மதிப்பிடுவதற்காக, ஒவ்வோராண்டும் நிர்வாகச் செலவுக்கென ரூ. 4,800 ஒதுக்கப்பட வேண்டும்.

நிறுவனத்தின் வாணிக நற்பெயரைக் கணக்கிடுக.

**விடை :**

எடையேறிய விழுக்காட்டு இலாபத்தைக் கணக்கிடுமுன் கொடுக்கப்பட்ட தகவலின் அடிப்படையில் ஒவ்வோராண்டும் ஈட்டிய இலாபத்தைச் சரிசெய்யவேண்டும்.

**இலாபத்தைச் சரிக்கட்டுதல்**

| | | ரூ. | ரூ. |
|---|---|---|---|
| **1966-ற்கான இலாபம்** | | | |
| ஏதும் சரிக்கட்ட வேண்டியதில்லை. ஆயினும், நிர்வாகச் செலவிற்கென ரூ. 4,800 கழிக்கவேண்டும். | | | |
| கொடுக்கப்பட்ட இலாபம் .. | | 20,200 | |
| **கழி :** நிர்வாகச் செலவு .. | | 4,800 | |
| | | | 15,400 |
| **1967-ற்கான இலாபம்** | | | |
| கொடுக்கப்பட்ட இலாபம் .. | | 24,800 | |
| **கழி :** | | | |
| கூடுதலாக மதிப்பிடப்பட்ட இறுதிச் சரக்கிருப்பு | 2,400 | | |
| நிர்வாகச் செலவு | 4,800 | | |
| | | 7,200 | |
| | | | 17,600 |

**1968ஆம் ஆண்டிற்கான இலாபம்**

சென்ற ஆண்டின் இறுதிச் சரக்கிருப்புக் கூடுதலாக மதிப்பிடப்பட்டதால், இவ்வாண்டின் தொடக்கச் சரக்கிருப்பும் ரூ. 2,400 கூடுதலாக வாணிகக் கணக்கில் பற்று வைக்கப்பட்டிருக்கும். இதன் காரணமாக இவ்வாண்டு இலாபம் ரூ. 2,400 குறைக்கப்பட்டிருக்கும். இதனைச் சரிக்கட்டக் கொடுத்துள்ள இலாபத்தில் இதனைக் கூட்டவேண்டும்.

பொறிவகை பழுது பார்த்த செலவு ரூ. 6,000 இலாப-நட்டக் கணக்கிற்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது. இச் செலவினை ஒரு முதலீட்டுச் செலவாகக் கருதவேண்டும் என்று கணக்கில் கொடுக்கப்பட்டிருப்பதால், இதனை இலாப-நட்டக் கணக்கிலிருந்து அகற்றி, பொறிக் கணக்கில் சேர்க்கவேண்டும். இச் செலவு நீக்கப்படுவதால், இவ்வாண்டு இலாபம் கூடுகிறது. எனவே, கொடுக்கப்பட்ட இலாபத்துடன், பழுது பார்க்கும் செலவினைக் கூட்டவேண்டும். பழுது பார்க்கும் செலவு ரூ. 6,000 பொறிக் கணக்கில் சேர்க்கப்பட்டிருப்பதால், அதன்மீது 10 சத வீதம் தேய்மானம் நீக்கவேண்டும். இச் செலவு செப்டம்பர் 1-ல் ஏற்கப்பட்டிருப்பதால், இவ்வாண்டைப் பொருத்தவரை நான்கு திங்கட்கான தேய்மானமே ஒதுக்கவேண்டும்.

$$6,000 \times \frac{10}{100} \times \frac{4}{12}$$

$$= \text{ரூ. } 200$$

இத் தேய்மானத் தொகையைக் கொடுக்கப்பட்ட இலாபத்திலிருந்து நீக்கவேண்டும். இப்பொழுது கீழ்க்கண்டவாறு சரிக்கட்டிய இலாபத்தை உணரலாம்.

| | ரூ. | ரூ. |
|---|---|---|
| கொடுக்கப்பட்ட இலாபம் | | 20,000 |
| **கூட்டு :** தொடக்கச் சரக்கிருப்பின் கூடுதலாக மதிப்பிடப்பட்டது | 2,400 | |
| முதற்படுத்தப்படும் பழுதுபார்க்கும் செலவு | 6,000 | |
| | | 8,400 |
| | | 28,400 |
| **கழி :** | | |
| தேய்மானம் | 200 | |
| நிர்வாகச் செலவு | 4,800 | |
| | | 5,000 |
| **1968ஆம் ஆண்டில் சரிக்கட்டிய இலாபம்** | ரூ. | 23,400 |

**1969ஆம் ஆண்டிற்கான இலாபம்**

சென்ற ஆண்டில் பொறிக்கணக்கில் சேர்க்கப்பட்ட பழுது பார்க்கும் செலவு ரூ. 6,000 மீது குறைந்துசெல் இருப்பு முறையில் இவ்வாண்டுக்குரிய தேய்மானம் நீக்கவேண்டும்.

சென்ற ஆண்டு நீக்கப்பட்ட தேய்மானம் ரூ. 200 போக, இவ்வாண்டுத் தொடக்கத்தில் அதன் மதிப்பு ரூ. 5,800 ஆகும். இத் தொகை மீது ஓராண்டுத் தேய்மானம் :

$$5,800 \times \frac{10}{100}$$

$$= \text{ரூ. } 580$$

| | | ரூ. | ரூ. |
|---|---|---|---|
| கொடுக்கப்பட்ட இலாபம் | | | 30,000 |
| கழி : | | | |
| | தேய்மானம் | 580 | |
| | நிர்வாகச் செலவு | 4,800 | |
| | | | 5,380 |
| 1969ஆம் ஆண்டின் சரிக்கட்டிய இலாபம் | | ரூ. | 24,620 |

இப்பொழுது, ஒவ்வோராண்டிலும் சரிக்கட்டப்பட்ட இலாபத்தின் எடையேற்றிச் சராசரி ஆண்டு இலாபத்தைக் கணக்கிடலாம்.

| ஆண்டு | இலாபம் | எடை | பெருக்குத்தொகை |
|---|---|---|---|
| | ரூ. | | ரூ. |
| 1966 | 15,400 | 1 | 15,400 |
| 1967 | 17,600 | 2 | 35,200 |
| 1968 | 23,400 | 3 | 70,200 |
| 1969 | 24,620 | 4 | 98,480 |
| | | 10 | 2,19,280 |

விழுக்காட்டு (சராசரி) இலாபம் $\frac{2,19,280}{10}$

= ரூ. 21,928

வாணிக நற்பெயர் இச் சராசரி இலாபத்தைப்போல் மூன்றுண்டுக் கொள்முதல் எனக் கொடுக்கப்பட்டிருப்பதால், இந் நிறுவனத்தின் வாணிக நற்பெயர்

21,928 × 3

= ரூ. 65,784

## 2. மிகை இலாப முறை (Super Profits Method)

எதிர்கால இலாப ஈட்டின் மதிப்பையே வாணிக நற்பெயர் குறிக்கிறது என்று கூறியிருக்கிறோம். சாதாரணமாகக் கிடைக்கக் கூடிய இலாபத்தைவிடக் கூடுதல் இலாபம் கிடைக்குமாயின், அவ்வாறு கூடுதலாகக் கிடைக்கும் இலாபம்தான் வாணிக நற் பெயர் என்று வாணிக நற்பெயருக்கான ஓர் இலக்கணத்தைக் கண்டிருக்கிறோம். இவ்வடிப்படையில் மதிப்பிடும் முறைதான் இம் மிகை இலாப முறையாகும்.

ஒரு தொழிலில் பெறக்கூடிய இலாபம் அதிலிருந்து கிடைக்கக் கூடிய சாதாரண இலாப வீதத்தையும் அதில் முதலீடு செய் துள்ள தொகையையும் பொருத்திருக்கிறது. எனவே, இம் முறையில் வாணிக நற்பெயரை மதிப்பிட கீழ்க்கண்ட தகவல்கள் தேவைப்படும்.

அ. குறிப்பிட்ட தொழிலில் ஈடுபட்டுள்ள சாதாரண நிறுவனத்தின் இயல்பான வருவாய் வீதம் (Rate of normal profit)

ஆ. அந் நிறுவனத்தில் பயன்படுத்தியுள்ள முதல்-தொகை யின் உண்மை மதிப்பு.

இ. இந் நிறுவனத்தில் எதிர்காலத்தில் ஈட்டும் இலாப மதிப்பு

**வருவாய் இயல்பு விகிதம்**

ஒரு குறிப்பிட்ட தொழிலில் பணம் போடுவோர் எதிர் பார்க்கும் வருவாய் வீதத்தையே இது குறிக்கிறது. எனவே, முதலீடு செய்வோர் எதிர்பார்க்கும் வீதம்தான் வருவாயின் இயல்பு வீதமாகும். சாதாரணமாக முதலீடு செய்பவர் (முதலீடு செய்வதில் மிகுந்த ஆர்வமோ அதிகம் தயக்கமோ காட்டாதவர்) பெற விரும்பும் வீதத்தை இது குறிக்கிறது என்றாலும், ஒவ்வொரு வகை முதலீட்டுக்கும் அல்லது தொழிலுக்கும் இவ் வீதம் மாறு படும். அரசினர் கடன் பத்திரங்களில் முதலீடு செய்யும் ஒருவர் 5 சதவீதம் வருவாய் கிட்டின் போதும் என்று எண்ணலாம். அவரே ஒரு கம்பெனியின் சாதாரணப் பங்குகளில் முதலீடு செய்ய வேண்டின் 9 அல்லது 10 சதவீதம் ஆதாயம் பெற விரும்புவார்.

**இயல்பு விகிதத்தைக் கணக்கிடல்**

எடுத்துக்காட்டாக, ரூ. 100 மதிப்புள்ள பங்கொன்று பங்கு மாற்றுச் சந்தையில் ரூ. 120 என விலை குறிக்கப்படுவதாகக் கொள்வோம். கம்பெனி அப் பங்குமீது 24 சதவீதம் பங்கா தாயம் வழங்குவதாகவும் கொண்டு, இப்பொழுது இதன் வரு வாய் வீதத்தைக் கீழ்க்கண்டவாறு கணக்கிடலாம்.

இப் பங்கை ஒருவர் வாங்க வேண்டுமெனில், அவர் முதலீடு செய்யவேண்டிய தொகை ரூ. 120 ஆகும். எனவே,

ரூ. 120-க்குக் கிடைக்கும் இலாபம் = ரூ. 24

ரூ. 100-க்குக் கிடைக்கும் இலாபம் $100 \times \frac{24}{120}$

= ரூ. 20

இயல்பு வருவாய் வீதம் 20 சதவீதம் என அறிகிறோம்.

**எடுத்துக்காட்டு 92**

ஒரு கம்பெனி 16 சதவீதம் பங்காதாயம் வழங்குகிறது. பங்கொன்றின் மதிப்பு ரூ. 100. இதில் ரூ. 75 வரை செலுத்தப் பட்டிருக்கிறது. பங்கு மாற்றுச் சந்தையில் இதன் மதிப்பு ரூ. 90 ஆகும். இதன் இயல்பு வருவாய் வீதத்தைக் கணக்கிடுக.

**விடை :**

ரூ. 100-க்குக் கம்பெனி தரும் பங்காதாயம் ரூ. 16

ரூ. 75-க்குக் கிடைக்கும் பங்காதாயம் $75 \times \frac{16}{100}$

$=$ ரூ. 12

இப்பொழுது ஒரு பங்குதாரர் இக் கம்பெனியில் ரூ. 90 கொடுத்து ஒரு பங்கை வாங்கின், அவருக்குக் கிடைக்கும் பங்காதாயம் ரூ. 12 ஆகும். அதாவது, ரூ. 90 முதலீட்டிற்கு அவர் எதிர் பார்க்கும் வருவாய் ரூ. 12 ஆகிறது.

இப்பொழுது இதன் வீதத்தைக் கணக்கிடலாம் :

ரூ. 90 முதலீடு செய்தால் கிடைக்கும் வருவாய் $=$ ரூ. 12

ரூ. 100 முதலீடு செய்தால் ,, $100 \times \frac{12}{90}$

$= 13\frac{1}{3}$

இயல்பு வருவாய் வீதத்தைத் தீர்மானிக்கும் காரணிகள் :

1. முதலீடு செய்வதில் எதிர்பார்க்கும் இடர்ப்பாடு. தொழிலின் தன்மைக்கேற்றவாறு இது கூடும் அல்லது குறையும்.

2. கால அளவையொட்டியும் வருவாய் வீதம் மாறலாம். நீண்ட காலத்திற்கு முதலீடு செய்யவிரும்பின், அதிகமாக வருவாய் வீதத்தை எதிர்பார்ப்பர்.

3. வங்கி வீதம் : வங்கியின் வட்டி வீதத்தில் ஏற்படும் மாற்றமும் முதலீடு செய்வோர் எதிர்பார்க்கும் வருவாய் வீதத்தை மாற்றக் கூடியது. வங்கியின் வட்டி அதிகரிக்கு மாயின், வருவாய் வீதம் அதிகரிக்கும்.

4. அரசியல், பொருளாதார சூழ்நிலை: நிலையற்ற அரசியல் சூழ்நிலையும், பொருளாதார சிக்கலும் முதலீடு செய்வோரின் நம்பிக்கையைத் தகர்க்கும். எனவே, அந் நிலைகளில் அதிகமான வருவாய் வீதத்தை எதிர்பார்ப்பது இயல்பு.

**பயன்படுத்தியுள்ள முதல்** (Capital employed)

ஒரு தொழிலில் பயன்படுத்தப்பட்டுள்ள முதல் தொகையை அறியவேண்டும். வாணிக நற்பெயரை மதிப்பிடுவதில் இதனை உணர்தல் மிகவும் முக்கியமானதாகும். காரணம், குறிப்பிட்ட இலாபத்தை ஈட்டுவதற்கு எவ்வளவு தொகை தொழிலில் முதலீடு செய்யப்பட்டது என்பதைப் பொருத்தே வாணிக நற்பெயர் அமையும். தேய்மானம் நீக்கப்பட்ட நிலைச் சொத்துகளையும், நிகர நடைமுறை முதலையும் கூட்டவேண்டும். நிகர நடைமுறை முதல் என்பது நடப்புச் சொத்துகளிலிருந்து நடப்புப் பொறுப்பு களைக் கழித்துவரும் தொகையாகும். அவ்வாண்டில் ஈட்டிய இலாபமும், தொழிலில் பயன்படுத்தப்பட்டிருக்கும் அல்லவா? எனவே, பயன்படுத்தப்பட்ட இலாபத்தையும், மேற்சொன்னவாறு கண்டுபிடித்த தொகையிலிருந்து கழித்துவிட வேண்டும். ஆண்டு முழுவதும் ஒரே சீராக இலாபம் ஈட்டப்படுகிறது என்ற அடிப் படையில் ஓராண்டு முழுவதும் ஈட்டிய இலாபத்தின் பாதித் தொகையைத் தொழிலிலேயே பயன்படுத்தப்பட்டதாகக் கருது வது வழக்கம்.

மேலே விவரித்ததைக் கீழ்க்கண்டவாறு சுருக்கிக் கூறலாம்.

| | |
|---|---|
| சொத்துகள் (வாணிக நற்பெயர், தொடக்கச் செலவு போன்றவை நீங்கலாக) சந்தை மதிப்பில் | .. |
| **கழி :** பிறருக்குத் தரவேண்டிய பொறுப்பு கள் : | |
| கடனீந்தோர் செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு, கடனீட்டுப் பத்திரம், வரி ஒதுக்கு முதலியவை | .. |
| | .. |
| **கழி :** முன்னுரிமைப் பங்குமுதல் | .. |
| | .. |
| **கழி :** நடப்பாண்டில் ஈட்டிய இலாபத்தில் பாதித் தொகை | .. |

## எடுத்துக்காட்டு 93

ஒரு கம்பெனியின் 1974 மார்ச், 31-ற்குரிய இருப்பு நிலைக் குறிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

### இருப்புநிலைக் குறிப்பு

| | ரூ. | | | ரூ. |
|---|---|---|---|---|
| பங்குமுதல் : | | வாணிக நற்பெயர் | | 60,000 |
| ஒன்று ரூ. 50 மதிப்புள்ள 7 சதவீதம் 1,000 முன்னுரிமைப் பங்குகள் | 50,000 | கட்டடம் | | 1,40,000 |
| ஒன்று ரூ. 50 மதிப்புள்ள 3,000 நேர்மைப் பங்குகள் | 1,50,000 | பொறிவகை | | 1,00,000 |
| பொதுக்காப்பு | 30,000 | முதலீடுகள் | | 30,000 |
| இலாப-நட்டக் கணக்கு | 30,000 | சரக்கிருப்பு | | 42,000 |
| 6 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் | 1,00,000 | கடனாளிகள் | 50,000 | |
| கடனீந்தோர் | 60,000 | கழி : ஐயக்கடன் காப்பு | 2,000 | 48,000 |
| | 4,20,000 | | | 4,20,000 |

கட்டடத்தின் மதிப்பு ரூ. 1,50,000 என்றும், பொறிவகையின் மதிப்பு ரூ. 75,000 என்றும் தெரியவருகிறது. ரூ. 5,000-ற்கான பொறுப்பு ஒன்று கணக்கில் விடப்பட்டுள்ளது என்றும் தெரியவருகிறது. நடப்பாண்டில் கம்பெனி ஈட்டிய இலாபம் ரூ. 40,000.

பயன்படுத்தப்பட்டுள்ள முதல் தொகையைக் கண்டுபிடிக்கவும்.

**விடை :**

| | | ரூ. |
|---|---|---|
| சொத்துகள் : | | |
| கட்டடம் | | 1,50,000 |
| பொறிவகை | | 75,000 |
| சரக்கிருப்பு | | 42,000 |
| கடனாளிகள் | | 48,000 |
| | | 3,15,000 |
| | ரூ. | |
| கழி : கடனீட்டுப் பத்திரங்கள் | 1,00,000 | |
| கடனீந்தோர் | 60,000 | |
| புதிய பொறுப்பு | 5,000 | 1,65,000 |
| நிகர சொத்தின் மதிப்பு | | 1,50,000 |
| கழி : முன்னுரிமைப் பங்குமுதல் | | 50,000 |
| பயன்படுத்திய முதல் தொகை | | 1,00,000 |

| | |
|---|---|
| பயன்படுத்திய முதல் தொகை | 1,00,000 |
| கழி : நடப்பாண்டு இலாபத்தில் பாதித் தொகை | 20,000 |
| பயன்படுத்திய சராசரி முதல் தொகை | 80,000 |

மேற்சொன்ன எடுத்துக்காட்டில், முதலீட்டினைக் கணக்கெடுத்துக் கொள்ளவில்லை. காரணம், முதலீடு என்பது வாணிகத்திற்கு அப்பாற்பட்ட சொத்தாகும். அதாவது, தொழிலினை நடத்தத் தேவையில்லாத ஒன்றாகும் அது. மிகுதியாக ரொக்கம் இருக்கும்பொழுது, அதைப் பயன்படுத்தி வருவாய் ஈட்டும் நோக்குடன்தான், பிற கம்பெனிகளின் பங்குகளிலோ, கடனீட்டுப் பத்திரங்களிலோ அல்லது அரசினர் பத்திரங்களிலோ முதலீடு செய்யப்படுகிறது. தொழிலில் பயன்படுத்திய தொகையை இது

அதிகரிக்கிறது எனினும், தொழிலில் கிடைக்கக்கூடிய இலாப விகித அளவில் அதன் வருவாய் இருப்பதில்லை. எனவே, சரியான இலாபத்தைக் கணக்கிட, தொழிலில் ஈடுபடுத்தியுள்ள பிற தொகைகளிலிருந்து முதலீட்டுத் தொகையைக் கழித்து விடவேண்டும். அவ்வாறே முதலீட்டினின்றும் பெற்ற வருமானத்தைச் சராசரி இலாபத்தை அறியும்பொழுது, கணக்கிலெடுத்துக் கொள்ளக்கூடாது.

## இயல்பு இலாபம் (Normal Profit)

இலாப இயல்பு வீதமும், சராசரியாகப் பயன்படுத்தப்பட்ட முதல் தொகையும் கொடுக்கப்பட்டிருப்பின், இயல்பு இலாபத்தை எளிதாகக் கணக்கிடலாம். எடுத்துக்காட்டாக, பயன்படுத்தப்பட்ட சராசரி முதல் தொகை ரூ. 80,000 என்றும், இலாப இயல்பு வீதம் 20 சதவீதம் என்றும் கொண்டால், இயல்பு இலாபத்தைக் கீழ்க்கண்டவாறு உணரலாம்.

$$80{,}000 \times \frac{20}{100}$$

$$= \text{ரூ. } 16{,}000$$

## மிகை இலாபம் (Super Profit)

சராசரி இலாபத்திலிருந்து இயல்பு இலாபத்தைக் கழித்தால் கிடைக்கும் தொகை மிகை இலாபமாகும். சென்ற எடுத்துக்காட்டில் நான்காண்டு சராசரி இலாபம் ரூ. 35,000 என்று கொள்வோம். மிகை இலாபத்தைக் கீழ்க்கண்டவாறு உணரலாம்.

| | | |
|---|---|---|
| கம்பெனி ஈட்டிய சராசரி இலாபம் | | 35,000 |
| **கழி** : இயல்பு இலாபம் | | 16,000 |
| மிகை இலாபம் | ரூ. | 19,000 |

இவ்வாறு கண்டுபிடிக்கப்படும் மிகை இலாபத்தின் அடிப்படையில் வாணிக நற்பெயரை மதிப்பிடுவது வழக்கம்.

## மிகை இலாபத்தை வாங்கும் முறை

மிகை இலாபத்தைக் கொடுக்கப்பட்ட ஆண்டுகளால் பெருக்கின், வாணிக நற்பெயரின் மதிப்பு கிடைக்கும். மூன்றுண்டுக் கொள்முதலில் வாணிக நற்பெயரை மதிப்பிடுதல் என்று கொண்டால், மிகை இலாபத்தை மூன்றுல் பெருக்கவேண்டும் என்று பொருள். இரண்டாண்டுக் கொள்முதலில் வாணிக நற்பெயரை

மதிப்பிட வேண்டுமென்றால், இரண்டால் பெருக்கவேண்டும் என்று பொருள்.

**எடுத்துக்காட்டு 94**

கீழ்க்கண்ட தகவல்களிலிருந்து வாணிக நற்பெயரின் மதிப்பைக் கண்டுபிடி :

1. தொழிலில் பயன்படுத்திய சராசரி முதல் ரூ. 2,00,000
2. கம்பெனி ரூ. 40 மதிப்புள்ள முழுதும் செலுத்தப்பெற்ற தனது பங்கின் மீது 20 சதவீதம் பங்காதாயம் வழங்குகிறது. பங்குமாற்றுச் சந்தையில் பங்கின் மதிப்பு ரூ. 50 என்று குறிக்கப்படுகிறது
3. கடந்த நான்கு ஆண்டுகளில் கம்பெனி ஈட்டிய இலாபம் வருமாறு :

| | | ரூ. |
|---|---|---|
| முதலாண்டு | .. | 30,000 |
| இரண்டாம் ஆண்டு | .. | 38,000 |
| மூன்றாம் ஆண்டு | .. | 48,000 |
| நான்காம் ஆண்டு | .. | 54,000 |

மிகை இலாபத்தின் மூன்றாண்டுக் கொள்முதல் அடிப்படையில் வாணிக நற்பெயரின் மதிப்பைக் கண்டுபிடிக்கவும்.

**விடை :**

முதலில் சராசரி இலாபத்தை அறிவோம் :

| | | ரூ. |
|---|---|---|
| முதலாண்டு இலாபம் | .. | 30,000 |
| இரண்டாம் ஆண்டு இலாபம் | .. | 38,000 |
| மூன்றாம் ஆண்டு இலாபம் | .. | 48,000 |
| நான்காம் ஆண்டு இலாபம் | .. | 54,000 |
| மொத்த இலாபம் | .. | 1,70,000 |

சாராசரி இலாபம் $= \frac{1,70,000}{4}$

= ரூ. 42,500

**அ. இலாப இயல்பு விகிதம் :**

கம்பெனி வழங்கும் இலாப ஈவு= 20 சதவீதம்

எனவே, ரூ. 40 மதிப்புள்ள பங்கொன்றுக்குக் கிடைக்கும் பங்காதாயம்

$$40 \times \frac{20}{100} = \text{ரூ. } 8$$

ஆனல், பங்கின் சந்தை விலை ரூ. 50 என கொடுக்கப் பட்டிருப்பதால்,

ரூ. 50 முதலீடு செய்வதில் கிடைக்கக் கூடிய வருவாய் = ரூ. 8 ஆகும்.

ரூ. 100-க்கு கிடைக்கக் கூடிய வருவாய்

$$100 \times \frac{8}{50} = \text{ரூ. } 16.$$

இலாப இயல்பு விகிதம் 16 சதவீதம் என்பதை உணரலாம்.

ஆ. தொழிலில் பயன்படுத்திய சராசரி முதல் ரூ. 2,00,000

இதில் கிடைக்கக்கூடிய இயல்பு இலாபம்

$$2,00,000 \times \frac{16}{100}$$

ரூ. 32,000

| | | | |
|---|---|---|---|
| கம்பெனியின் சராசரி இலாபம் | .. | ரூ. | 42,500 |
| **கழி :** இயல்பு இலாபம் | .. | ரூ. | 32,000 |
| மிகை இலாபம் | .. | ரூ. | 10,500 |

வாணிக நற்பெயர் மிகை இலாபத்தைப்போல் மூன்று மடங்கு. எனவே,

$$10,500 \times 3$$

$$= \text{ரூ. } 31,500$$

## ஆண்டுத் தொகை முறை (Annuity Method)

மிகை இலாப முறையில் வாணிக நற்பெயரைக் கணக்கிடுவதின் அடிப்படை நோக்கமானது அதனைப் பின்வரும் நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளில் கூடுதல் இலாபமாகப் பெற்று சரிக்கட்டிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையே ஆகும். எடுத்துக்காட்டாக, மிகுதி இலாபம் ரூ. 20,000 என்றும், இது 3 ஆண்டுக் கொள்முதலில் மதிப்பிட வேண்டுமென்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந் நிறுவனத்தின் வாணிக நற்பெயரின் மதிப்பு ரூ. 60,000 ஆகிறது. இந் நிறுவனத்தை வாங்குபவர் தற்பொழுது ரூ. 60,000 கொடுத்துவிட்டு, ஆண்டொன்றுக்குக் கூடுதல் இலாபமாக ரூ. 20,000 வீதம் 3 ஆண்டுகளில் பெற்றுச் சரிக்கட்டிக் கொள்வார். ஆனல், இவ்வாறு பெறும் தொகையை வாணிக நற்பெயராக, நிறுவனத்தை வாங்கும்பொழுதே கொடுப்பதில், வட்டி இழப்பு ஏற்படுகிறது. இவ் வட்டியையும் கணக்கிலெடுத்துக் கொள்வதுதான் ஆண்டுத் தொகை முறையாகும். தற்பொழுது செலுத்தவேண்டிய தொகை வட்டியையும் உள்ளடக்கியது என இருக்கவேண்டும். அதாவது, குறிப்பிட்ட வட்டி விகிதத்தில் ஒவ்வோராண்டும் கிடைக்கக்கூடிய மிகுதிஇலாபத்தைக் கணக்கிட்டு, இறுதியில் தற்பொழுது மொத்தம் செலுத்த வேண்டிய தொகை கிடைக்கவேண்டும். எடுத்துக்காட்டாக, வட்டி வீதம் 10 சதவீதமாக இருக்கும்பொழுது ஆண்டொன்றிற்கு ஒரு ரூபாய் 3 ஆண்டுகள் செலுத்தவேண்டியிருப்பின், மொத்தம் தற்பொழுது செலுத்தவேண்டிய தொகை ரூ. 2.4868 என்று ஆண்டுத் தொகை வாய்பாடு கூறுகின்றது. மிகுதி இலாபம் ரூ. 20,000 என்றும் ஆண்டுத் தொகை அடிப்படையில் 10 சதவீதம் வட்டியில் 3 ஆண்டுக் கொள்முதலில் கணக்கிட வேண்டுமாயின், கீழ்க்கண்டவாறு செய்யலாம்.

ரூ. 1 வீதம் 3 ஆண்டுக்குச் செலுத்துவதற்கு மாருசத்
தற்பொழுது செலுத்தவேண்டிய தொகை = 2.4868.

மொத்தம் ரூ. 20,000-ற்குச் செலுத்தவேண்டிய
தொகை $20,000 \times 2.4868$

= ரூ. 49,736.

இதுவே மிகுதித் தொகையை ஆண்டுத் தொகையின் அடிப்படையில் கணக்கிடும்பொழுது கிடைக்கும் வாணிக நற்பெயரின் மதிப்பாகும்.

## எடுத்துக்காட்டு 95

வரையறு பொறுப்புடைய ஒரு கம்பெனியின் 1973 திசம்பர் 31-ந்குரிய இருப்புநிலைக் குறிப்பு கீழ்க் கொடுக்கப்பட்டுள்ளது :

### இருப்புநிலைக் குறிப்புகள்

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | | ரூ. |
|---|---|---|---|---|
| பங்குமுதல் : ஒன்று ரூ. 100 மதிப்புள்ள 3,500 நேர்மைப் பங்குகள் | 3,50,000 | வாணிக நற்பெயர் | | 40,000 |
| பொதுக்காப்பு | 50,000 | நிலமும் கட்டடமும் | | 2,00,000 |
| தொழிலர் நட்டஈட்டு நிதி | 35,000 | பொறிவகை | | 2,70,000 |
| தொழிலர் இலாபப் பங்கேற்பு நிதி | 50,000 | சரக்கிருப்பு : கச்சாப்பொருள் | 50,000 | |
| 5 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் | 2,00,000 | வேலை முற்றாப் பொருள் | 25,000 | |
| கடனீந்தோர் | 30,000 | முடிவுப் பொருள் | 40,000 | 1,15,000 |
| வருமான வரிஒதுக்கு | 40,000 | முதலீடுகள் : (பொறிவகை புதுப்பித்தலுக்கு வகை செய்ய) | | 70,000 |
| | | வங்கி | | 50,000 |
| | | தொடக்கச் செலவுகள் | | 10,000 |
| | 7,55,000 | | | 7,55,000 |

மேலும் சில விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

அ. கட்டடத்தின் இப்பொழுதைய மதிப்பு ரூ. 2,50,000 (கச்சாப் பொருளின் சந்தை மதிப்பு ரூ. 65,000; முடிவுப் பொருளின் சந்தை மதிப்பு ரூ. 50,000).

முதலீடுகளின் சந்தை மதிப்பு ரூ. 60,000.

ஆ. வருமான வரி வீதம் 40 சதவீதம் எனக் கொள்க.

இ. இவ்வகைத் தொழிலில் எதிர்பார்க்கக்கூடிய இயல்பு வருவாய் 10 சதவீதம்.

ஈ. 10 சதவீதம் வட்டியில் ஐந்து ஆண்டுகட்கு ஒரு ரூபாயின் தற்பொழுதைய ஆண்டுத் தொகை ரூ. 3.78 எனக் கொண்டு மிகை இலாபத்தின் ஆண்டுத் தொகை அடிப்படையில் வாணிக நற்பெயரின் மதிப்பைக் கண்டுபிடி.

**1. நடப்பாண்டில் கம்பெனி ஈட்டிய இலாபம்**

வருமான வரி 40 சதவீதம் அளவில் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ரூ. 40 சதவீதம் ஒதுக்கப்படின், ஈட்டிய இலாபம் ரூ. 100

ரூ. 40,000 ஒதுக்கப்பட்டிருப்பதால், கம்பெனி ஈட்டிய

$$\text{இலாபம்} = 40,000 \times \frac{100}{40}$$

$$= \text{ரூ. } 1,00,000$$

**2. தொழிலில் பயன்படுத்தியுள்ள சராசரி முதல் தொகை**

| | | | ரூ. |
|---|---|---|---|
| நிலமும் கட்டடமும் (தற்பொழுதைய மதிப்பு) | | .. | 2,50,000 |
| பொறிவகை | | .. | 2,70,000 |
| சரக்கிருப்பு : | ரூ. | | |
| கச்சாப்பொருள் | 65,000 (சந்தைமதிப்பு) | | |
| வேலை முற்றுப் பொருள் | 25,000 | | |
| முடிவுப் பொருள் | 50,000 (சந்தை மதிப்பு) | .. | 1,40,000 |
| முதலீடுகள் (சந்தை மதிப்பு) | | .. | 60,000 |
| வங்கியும் ரொக்கமும் | | .. | 50,000 |

| | | | ரூ. |
|---|---|---|---|
| மொத்த சொத்துகள் | | .. | 7,70,000 |
| **கழி :** பொறுப்புகள் : | | | |
| தொழிலர் இலாபம் பங்கேற்பு நிதி | 50,000 | | |
| கடனீட்டுப் பத்திரங்கள் | 2,00,000 | | |
| கடனீந்தோர் | 30,000 | | |
| வருமான வரி ஒதுக்கு | 40,000 | | |
| | | .. | 3,20,000 |
| | | | 4,50,000 |
| **கழி :** | | | |
| நடப்பாண்டில் ஈட்டிய இலாபத்தில் ½ பங்கு | | .. | 50,000 |
| பயன்படுத்தப்பட்ட சராசரி முதல் | | ..ரூ. | 4,00,000 |

**குறிப்பு :**

1. முதலீடுகள் பொறிவகையைப் புதுப்பித்தலுக்காக இருப்பதால், இதனை வாணிகத்திற்குப் புறம்பான சொத்தாக (non–trading asset) கருதக்கூடாது.

2. தொழிலர் இலாபப் பங்கேற்பு நிதி ஒரு பொறுப்பாகும். எனவே, கழிக்கப்படுகிறது.

3. தொழிலர் நட்ட ஈட்டு நிதி பகிர்ந்தளிக்கப்படாத ஆதாயமாகும். எனவே, இது கழிக்கப்படவில்லை. இதற்கான பொறுப்பிருப்பின், அத் தொகை மட்டும் சொத்துகளினின்றும் கழிக்கவேண்டும்.

**3. இயல்பு விகிதத்தின்படி இயல்பு இலாபம்**

இலாப இயல்பு விகிதம் = 10 சதவீதம்

இயல்பு இலாபம் $= 4,00,000 \times \frac{10}{100}$

= ரூ. 40,000

**4. மிகை இலாபம்**

| | | |
|---|---|---|
| வரி நீங்கியபின் இலாபம் (1,00,000—40,000) | ரூ. = | 60,000 |
| **கழி :** இயல்பு இலாபம் | ரூ. = | 40,000 |
| மிகை இலாபம் | = ரூ. | 20,000 |

**5. ஆண்டுத் தொகை அடிப்படையில் வாணிக நற்பெயர்**

= மிகை இலாபம் × ஆண்டுத்தொகை

= 20,000 × 3.78

= ரூ. 75,600

**மிகை இலாபத்தை முதற்படுத்துகை** (Capitalisation of Super Profits)

குறிப்பிட்ட மிகை இலாபத்தை ஈட்டத் தேவையான முதல் தொகையைக் கணக்கிடும் முறையே இது. இதற்கான விதி :

$$\frac{\text{எதிர்பார்க்கும் மிகை இலாபம்}}{\text{இயல்பு இலாப விகிதம்}} \times 100$$

எடுத்துக்காட்டாக, ஒரு நிறுவனத்தில் மிகை இலாபம் ரூ. 20,000 எனவும், இயல்பு இலாப விகிதம் 10 சதவீதம் எனவும் கொண்டால், முதல் தொகை

$$= \frac{20,000}{10} \times \text{ரூ. } 100 \quad = \text{ரூ. } 2,00,000$$

இதுவே, நிறுவனத்தின் வாணிக நற்பெயர் என மதிப்பிடப்படுகிறது. அதாவது, இம் மிகை இலாபத்தை அடைவதற்கு ரூ. 2,00,000 முதலீடு செய்து, அதில் 10 சதவீதம் வருமானம் கிட்டுமானதாயிருந்தால், இது முடியும். எனவே, இவ்வாறு முதற்படுத்தும் தொகையே வாணிக நற்பெயர் என்று சொல்லப்படுகிறது.

இவ்வாறு மதிப்பிடப்படும் வாணிக நற்பெயர் மிகவும் அதிகமாக இருக்கும். இம் முறையின் வாணிக நற்பெயரைக்

கொடுக்கவேண்டியிருப்பின், தொழிலை வாங்கியவர் எவ்வித கூடுதல் பயனையும் பெறமுடியாது.

**எடுத்துக்காட்டு 96**

கீழே சில விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன :

அ. பயன்படுத்திய முதல் ரூ. 2,00,000

ஆ. இலாப இயல்பு விகிதம் 10 சதவீதம்

இ. 10 சதவீதம் 5 ஆண்டுகட்கு ஆண்டுத் தொகை ரூ. 1-ன் இன்றைய மதிப்பு 3.78.

ஈ. கடந்த 5 ஆண்டுகளில் கம்பெனி ஈட்டிய நிகர இலாபம் :

| | | ரூ. |
|---|---|---|
| முதலாண்டு | .. | 19,000 |
| இரண்டாம் ஆண்டு | .. | 22,000 |
| மூன்றும் ஆண்டு | .. | 26,000 |
| நான்காம் ஆண்டு | .. | 31,000 |
| ஐந்தாம் ஆண்டு | .. | 37,000 |

உ. மேற்சொன்ன இலாபங்கள் ஒவ்வோராண்டும் முதலீட்டினின்றும் பெற்ற வட்டி ரூ. 2,500-ஐ உள்ளடக்கியிருக்கிறது. நிர்வாகச் செலவிற்காக ஆண்டொன்றிற்கு இனிக் கூடுதலாக ரூ. 3,500 ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1. சராசரி மிகை இலாபத்தின் 5 ஆண்டுக் கொள்முதல் அடிப்படையில்;

2. ஆண்டுத் தொகை முறையில்;

3. மிகை இலாபத்தை முதற்படுத்துகை முறையில் (Capitalisation of Super Profits);

வாணிக நற்பெயரின் மதிப்பைக் கண்டுபிடி :

**விடை :**

கடந்த 5 ஆண்டுகட்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இலாபத்தினை நோக்கின், சீரான வளர்ச்சித் தென்படுகிறது. எனவே,

சாதாரண ஆண்டுச் சராசரி இலாபத்தைக் கண்டுபிடிப்பதைவிட எடையேற்றிய சராசரி இலாபத்தை அறிதலே சிறந்ததாகும்.

கீழ்க்கண்டவாறு இது கண்டுபிடிக்கப்படுகிறது :

| ஆண்டு | இலாபம் | எடை | பெருக்குத்தொகை |
|---|---|---|---|
| முதலாண்டு | 19,000 | 1 | 19,000 |
| இரண்டாம் ஆண்டு | 22,000 | 2 | 44,000 |
| மூன்றும் ஆண்டு | 26,000 | 3 | 78,000 |
| நான்காம் ஆண்டு | 31,000 | 4 | 1,24,000 |
| ஐந்தாம் ஆண்டு | 37,000 | 5 | 1,85,000 |
| | | 15 | 4,50,000 |

எடையேறிய சராசரி இலாபம் $= \dfrac{4,50,000}{15}$

= ரூ. 30,000

| | | ரூ. |
|---|---|---|
| சராசரி இலாபம் | | 30,000 |
| **கழி :** முதலீட்டினின்றும் பெற்ற வருவாய் | 2,500 | |
| கூடுதல் நிர்வாகச் செலவு | 3,500 | |
| | | 6,000 |
| | ரூ. | 24,000 |

**இயல்பு இலாபம்**

பயன்படுத்திய முதலில் 10 சதவீதம் ரூ.

எனவே, $2,00,000 \times \dfrac{10}{100} =$ 20,000

**மிகை இலாபம்**

| | |
|---|---|
| எதிர்பார்க்கும் சராசரி இலாபம் | 24,000 |
| **கழி :** இயல்பு இலாபம் | 20,000 |
| மிகை இலாபம் | 4,000 |

1. கொள்முதல் முறையில் வாணிக நற்பெயர்

$$4,000 \times 5 = \text{ரூ. } 20,000$$

2. ஆண்டுத் தொகை முறையில் வாணிக நற்பெயர்

$$4,000 \times 3.78 = \text{ரூ. } 15,120$$

3. முதற்படுத்துகை முறையில் வாணிக நற்பெயர்

$$4,000 \times \frac{100}{10} = \text{ரூ. } 40,000$$

Valuation of Share.

**பங்குகளை மதிப்பிடல்**

பங்குகளை மதிப்பிடுவது ஒரு பெரும்பாடு ஆகும். பல்வேறு பட்ட கருத்துகள் நிலவுவதால், இப் பிரச்சினை குழப்பம் மிக்கதாக இருக்கிறது. பங்குகளை மதிப்பிட வேண்டிய அடிப்படைக் கருத்துகள் எளிதானவையாக இருந்தாலுங்கூட, அவற்றைப் பின்பற்றுவதில் சிக்கல்கள் எழுகின்றன.

1. தனிக் கம்பெனியின் பங்குகள் பங்கு மாற்றுச் சந்தையில் எப்போழ்தும் ஈடுபடுத்தப்படுவதில்லை. எனவே, அவற்றிற்குச் சந்தைவிலை இருப்பதில்லை. அதேபோன்று எல்லாப் பொதுக் கம்பெனிகளின் பங்குகளுமே பங்கு மாற்றுச் சந்தையில் மதிப்புக் குறிப்பிடப்படுவதில்லை. அது மட்டுமன்று; பங்குமாற்றுச் சந்தையில் வாங்கி விற்கப்படும் பங்குகளின் மதிப்புக்கும், அவற்றின் உண்மை மதிப்புக்கும் வேறுபாடு இருக்கலாம். பங்குகட்கு உண்டான தேவை, அளிப்பு போன்ற சூழ்நிலைகளும் வங்கி வீதமும், அரசு பின்பற்றும் வரிவீதக் கோட்பாடுகளும், பொருளாதாரச் செழிப்பும், சிக்கல்களும், அரசியல் சூழ்நிலைகளும் பங்குகளின் பங்கு மாற்றுச் சந்தை விலையைப் பெரிதும் பாதிக்கின்றன. இச் சூழ்நிலைகள் அனைத்தும் கம்பெனியின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவை. எனவே, கம்பெனியின் நிதி நிலையையொட்டியும், நிகர சொத்துகளின் மதிப்பினைப் பொருத்தும் இலாபம் ஈட்டும் திறமையை அடிப்படையாகக் கொண்டும் மதிப்பிடப்படும் பங்கின் மதிப்பிற்கும் மேலே விளக்கப்பட்ட புறச் சூழ்நிலைகள் காரணமாக நிலவும் பங்குகளின் விலைக்கும் வேறுபாடு காணப்படுகிறது.

பின்கண்ட சூழ்நிலைகளில் பங்குகளின் மதிப்பை உணர வேண்டியிருக்கலாம் :

1. பங்குமாற்றுச் சந்தையில் குறிப்பிடப்படாப் பங்குகளை ஒரு பங்குதாரர் மற்றவர்க்கு விற்கும்பொழுது, அப் பங்குகளின் மதிப்பை உணர்தல் இன்றியமையாதது.

2. கம்பெனிகள் ஒன்றிணையும்பொழுதோ, ஒரு கம்பெனி இன்னொரு கம்பெனியை வாங்குகின்றபொழுதோ, பங்குதாரர்களின் உரிமைகளைச் சரிக்கட்ட, பங்கு மதிப்புத் தேவைப்படலாம்.

3. கம்பெனிச் சட்டத்தின் 494-வது பிரிவின்கீழ்க் கம்பெனியொன்றைத் திருத்தியமைக்கும்பொழுது (reconstruction), ஏற்க மறுக்கும் பங்குதாரர்களின் உரிமைகளை உறுதிப்படுத்த, பங்கின் மதிப்பை அறியவேண்டும்.

4. கம்பெனிச் சட்டம் 399-வது பிரிவின்கீழ், ஒரு கம்பெனி வேறொரு கம்பெனியை வாங்கும்பொழுது பங்கு மதிப்பை உணர வேண்டியிருக்கும்.

5. ஒரு கம்பெனி வெளியிட்டுள்ள ஒருவகைப் பங்குகளை வேறுவகைப் பங்குகளாக மாற்றும்பொழுது பங்கு மதிப்பை உணர வேண்டியிருக்கிறது.

6. பங்குதாரர் ஒருவர் இறந்ததும் இறப்பு வரிக் காரணத்திற்காக அவரின் பங்குகளை மதிப்பிடவேண்டியிருக்கலாம்.

சில சூழ்நிலைகளில் கம்பெனியின் செயல்முறை விதிகள் பங்குகள் மதிப்பீடு பற்றிக் கூறியிருக்கலாம்.

**மதிப்பிடும் முறைகள்**

பொதுவாகப் பங்குகளை மதிப்பிடுவதில் இரு முறைகள் பின்பற்றப்படுகின்றன.

1. நிகர சொத்து மதிப்புமுறை அல்லது உள் மதிப்பு முறை (Net Assets Method or Intrinsic Value Method)

2. வருவாய் முறை (Yield Method)

## 1. நிகர சொத்து மதிப்பு முறை

கம்பெனி கலைக்கப்படுமாயின் அதன் பங்கின் மதிப்பு என்னவாக இருக்கும் என்பதை அறிவது போன்றது இம் முறை.

எனவே, இருப்புநிலைக் குறிப்பில் காணப்படும் அதே மதிப்புகளில் சொத்துகளையும் பொறுப்புகளையும் கணக்கிலெடுத்துக் கொள்ளாமல், அவற்றின் சந்தை மதிப்பை முதலில் உணரவேண்டும். இவ்வாறு அறியும் சொத்துகளின் மொத்த மதிப்பிலிருந்து, கடனீட்டுப்பத்திரதாரர், கடனீந்தோர், பிற பொறுப்புகட்காகச் செலுத்தவேண்டிய தொகைகள் அனைத்தையும் கழிக்கவேண்டும். அத்துடன், முன்னுரிமைப் பங்குமுதல் தொகையையும் இதிலிருந்து கழித்துவிடவேண்டும். இப்பொழுது மீதி இருக்கும் தொகை, நேர்மைப் பங்குநருக்கு உரியது. இத் தொகையை நேர்மைப் பங்குகளின் எண்ணிக்கையால் வகுத்தால் பங்கின் மதிப்பை உணரமுடியும்.

கீழ்க்கண்டவாறு இதனைச் சுருக்கிக் கூறலாம் :

| | |
|---|---|
| பல்வகைச் சொத்துகள் (தற்பொழுதைய மதிப்பில்) | .. |
| **கழி** : பொறுப்புகள் | .. |
| | .. |
| **கழி** : முன்னுரிமைப் பங்கு முதல் | .. |
| | .. |
| நேர்மைப் பங்குநருக்குக் கிடைக்கக்கூடிய தொகை | .. |

$$\text{பங்கின் மதிப்பு} = \frac{\text{நேர்மைப் பங்குநருக்குக் கிடைக்கும் தொகை}}{\text{பங்குகளின் எண்ணிக்கை}}$$

## எடுத்துக்காட்டு 97

ஒரு கம்பெனியின் 1974 ஜூன் 30-ற்கான இருப்புநிலைக் குறிப்பு கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

### இருப்புநிலைக் குறிப்பு

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : ஒன்று ரூ. 100 மதிப்புடைய 6 சத வீதம் 1,000 | | நிலைச் சொத்துகள் | 3,50,000 |
| | | நடப்புச் சொத்துகள் | 1,70,000 |

## இருப்புநிலைக் குறிப்பு—(தொடர்ச்சி)

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| முன்னுரிமைப் பங்குகள் | 1,00,000 | தொடக்கச் செலவுகள் | 10,000 |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 1,500 நேர்மைப் பங்குகள் | 1,50,000 | பங்கு வெளியீட்டுச் செலவு | 2,500 |
| பொதுக்காப்பு | 20,000 | | |
| கடனீட்டுப் பத்திர மீட்பு நிதி | 30,000 | | |
| 5 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் | 2,00,000 | | |
| கடனீந்தோர் | 22,000 | | |
| வங்கி மேல்வரைப் பற்று | 10,500 | | |
| | 5,32,500 | | 5,32,500 |

நிலைச் சொத்துகளில் அடங்கியுள்ள கட்டடத்தின் மதிப்பில் 20,000 கூடியுள்ளது. நடப்புச் சொத்துகளில் அடங்கியுள்ள ரூ. 20,000-ற்கான முதலீட்டின் சந்தை விலை ரூ. 15,000 ஆகும். கடனாளிகள் மீதான ஐயக்கடன் காப்பிற்கு ரூ. 1,000 ஒதுக்க வேண்டியுள்ளது. கணக்கில் சேர்க்கப்பெறாப் பொறுப்பு ஒன்றிற்காக ரூ. 3,000 கொடுக்க வேண்டியுள்ளது.

கடனீட்டுப் பத்திரங்கள் மீது அரையாண்டு வட்டி செலுத்த வேண்டியுள்ளது, முன்னுரிமைப் பங்குகள் மீது பங்காதாயம் இரண்டாண்டுகட்குக் கொடுக்கவேண்டியுள்ளது.

நிகர சொத்து மதிப்பின் அடிப்படையில் கம்பெனியின் பங்கு மதிப்பைக் கண்டுபிடி.

**(1) நிகர சொத்துகள்**

| | ரூ. | ரூ. |
|---|---|---|
| **சொத்துகள்** | | |
| ஏட்டில் உள்ளபடி நிலைச் சொத்துகள் .. | 3,50,000 | |
| **கூட்டு :** கட்டடத்தின் மதிப்புயர்வு .. | 20,000 | |
| | | 3,70,000 |

| | | ரூ. | ரூ. |
|---|---|---|---|
| நடப்புச் சொத்துகள் .. | | 1,70,000 | |
| கழி : முதலீடுகளின் மதிப்பிழப்பு | 5,000 | | |
| ஐயக்கடன் காப்பு | 1,000 | | |
| | | 6,000 | 1,64,000 |
| மொத்த சொத்துகள் | | | 5,34,000 |
| கழி : பொறுப்புகள் : | | | |
| 5 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் | | 2,00,000 | |
| கடனீந்தோர் | | 22,000 | |
| வங்கி மேல்வரைப் பற்று | | 10,500 | |
| கடனீட்டுப் பத்திர வட்டி | | 5,000 | |
| கணக்கில் சேர்க்கப்பெறாப் பொறுப்பு | | 3,000 | 2,40,500 |
| நிகர சொத்துகளின் மதிப்பு | | | ரூ. 2,93,500 |

## (2) பங்கு மதிப்பைக் கணக்கிடுதல்

| | ரூ. | ரூ. |
|---|---|---|
| நிகர சொத்துகளின் மதிப்பு | | 2,93,500 |
| கழி : முன்னுரிமைப் பங்குமுதல் .. | 1,00,000 | |
| இரண்டாண்டுப் பங்காதாய நிலுவை .. | 12,000 | 1,12,000 |
| 1,500 நேர்மைப் பங்குகளின் உள் மதிப்பு | | ரூ. 1,81,500 |

$$\text{ஒரு பங்கின் மதிப்பு} = \frac{1,81,500}{1,500} = \text{ரூ. } 121$$

சொத்துகளை மதிப்பிடும்பொழுது, வாணிக நற்பெயரையும் கணக்கிலெடுத்துக் கொள்ளவேண்டும். கணக்கில் வாணிக நற்

பெயர் கொடுக்கப்படவில்லையாயின் அதனை மதிப்பிட்டுச் சொத்துகளில் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

## 2. வருவாய் முறை yield method.

இம் முறையில் சொத்துகளையும் பொறுப்புகளையும் மதிப்பிட வேண்டியத் தேவையில்லை. கம்பெனி ஈட்டும் இலாபத்தைக் கணக்கிலெடுத்துக் கொண்டால் போதும். கடந்த காலத்தில் கம்பெனி ஈட்டிவந்த இலாபத் தொகைகளின் துணைகொண்டு, எதிர்காலத்தில் அது ஈட்ட இருக்கும் இலாபத்தைக் கணிக்கிறோம். இவ்வாறு எதிர்பார்க்கும் இலாபத்திலிருந்து, காப்புகட்கு எடுத்துச் செல்லப்படும் தொகைகளையும், வரிக்காக ஒதுக்க வேண்டிய தொகையையும், முன்னுரிமைப் பங்குகட்கு வழங்க வேண்டிய பங்காதாயத்தினையும் கழித்துவிட வேண்டும்.

இப்பொழுது மீதியுள்ள இலாபமானது நேர்மைப் பங்குநர்கட்கு உரியது. கீழ்க்கண்ட முறையில் இப்பொழுது பங்கின் மதிப்பை உணரலாம்.

எதிர்பார்க்கும் இலாபத்தை இலாப இயல்பு விகிதத்தால் முதலாக்கி, அதனைப் பங்குகளின் எண்ணிக்கையால் வகுத்தால், பங்கின் மதிப்பை உணரலாம்.

### எடுத்துக்காட்டு 98

ரூ. 100 மதிப்புள்ள 1,000 நேர்மைப் பங்குகளாக ஒரு கம்பெனியின் பங்குமுதல் இருக்கிறது. அது ஒவ்வோராண்டும் ரூ. 25,000 இலாபம் ஈட்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வகைத் தொழிலில் ஈடுபட்டுள்ள கம்பெனியில் சாதாரணமாக 10 சதவீதம் வருவாய்க் கிடைக்கிறது என்று கொண்டு, அக் கம்பெனியின் பங்கு மதிப்பைக் கணக்கிடுக.

**விடை :**

முதலில் எதிர்பார்க்கும் இலாபத்தை இலாப இயல்பு விகிதத்தால் முதலாக்கவேண்டும்.

எனவே, $25,000 \times \frac{100}{10} =$ ரூ. 2,50,000

இத் தொகையைப் பங்குகளின் எண்ணிக்கையால் வகுக்க வேண்டும்.

$$\frac{2,50,000}{1,000} = \text{ரூ. } 250$$

இதையே வேறு வழியிலும் அறியலாம்.

$$\frac{\text{அ. எதிர் பார்க்கும் இலாபம்}}{\text{செலுத்தப்பட்ட நேர்மைப் பங்குமுதல்}} \times 100$$

இதிலிருந்து எதிர்பார்க்கும் இலாப விகிதத்தை முதலில் உணருகிறோம்.

ஆ. இவ்வாறு உணரும் இலாப விகிதத்தைக் கொண்டு, பங்கின் மதிப்பைக் கீழ்க் கண்டவாறு பின்னர் அறியவேண்டும்.

$$\frac{\text{மேற்சொன்னவாறு கண்டுபிடிக்கும் இலாப விகிதம்}}{\text{இலாப இயல்பு விகிதம்}} \times \text{ஒவ்வொரு பங்கின் மீதும் செலுத்தப்பட்ட தொகை}$$

மேற்கொடுக்கப்பட்ட எடுத்துக்காட்டை இம் முறையில் செய்வதாயின்,

$$\frac{25,000}{1,00,000} \times 100 = \text{ரூ. } 25$$

$$\frac{25}{10} \times 100 = \text{ரூ. } 250$$

### எடுத்துக்காட்டு 99

வரையறு பொறுப்புடைய ஒரு கம்பெனியின் 1966 திசம்பர் 31-ற்கான இருப்புநிலைக் குறிப்பு கீழ்க்கண்ட நிலையை உணர்த்தியது.

**இருப்புநிலைக் குறிப்பு**

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| வெளியீட்டு முதல் : | | நிலைச் | |
| ரூ. 10 மதிப்புடைய | | சொத்துகள் | 5,00,000 |
| பங்குகள் | 4,00,000 | நடப்புச் | |
| காப்புகள் | 90,000 | சொத்துகள் | 2,00,000 |

**இருப்புநிலைக் குறிப்பு—(தொடர்ச்சி)**

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| இலாப-நட்டக் கணக்கு | 20,000 | வாணிக நற்பெயர் | 40,000 |
| 5 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் | 1,00,000 | | |
| நடப்புப் பொறுப்புகள் | 1,30,000 | | |
| | 7,40,000 | | 7,40,000 |

1966 திசம்பர் 31-ல் நிலைச் சொத்துகள் ரூ. 5,50,000 என்றும், வாணிக நற்பெயர் ரூ. 50,000 என்றும் மதிப்பிடப் பட்டன. கடந்த 3 ஆண்டுகட்கான நிகர இலாபம் வருமாறு :

| ஆண்டு | | ரூ. |
|---|---|---|
| 1964 | .. | 51,600 |
| 1965 | .. | 52,000 |
| 1966 | .. | 51,650 |

இதில் 20 சதவீதம் காப்புக் கணக்கிற்கு எடுத்துச் செல்லப் படுகிறது. கம்பெனி ஈடுபட்டிருக்கும் தொழிலில் இது போது மானது என்று கருதப்படுகிறது. இத்தகைய தொழிலில் கிடைக் கக் கூடிய இயல்பு வருவாய் 10 சதவீதம்.

அ. சொத்துகள் முறையிலும்,

ஆ. வருவாய் முறையிலும்

கம்பெனிப் பங்குகளின் மதிப்பைக் கணக்கிடுக.

**விடை :**

**அ. சொத்துகள் முறையில் பங்கு மதிப்பீடு**

| | | ரூ. | ரூ. |
|---|---|---|---|
| நிலைச் சொத்துகள் | .. | 5,50,000 | |
| வாணிக நற்பெயர் | .. | 50,000 | |
| நடப்புச் சொத்துகள் | .. | 2,00,000 | |
| | | | 8,00,000 |

| | | ரூ. | ரூ. |
|---|---|---|---|
| கழி : நடப்புப் பொறுப்புகள் | .. | 1,30,000 | |
| 5 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் | .. | 1,00,000 | |
| | | | 2,30,000 |
| நிகர சொத்துகளின் மதிப்பு | .. | | 5,70,000 |

$$\text{பங்கொன்றின் மதிப்பு} = \frac{5,70,000}{40,000}$$

= ரூ. 14.25

ஆ. வருவாய் முறைப்படி பங்கு மதிப்பீடு

| ஆண்டு | | இலாபம் |
|---|---|---|
| | | ரூ. |
| 1964 | .. | 51,600 |
| 1965 | .. | 52,000 |
| 1966 | .. | 51,650 |
| மொத்த இலாபம் | .. | 1,55,250 |

$$\text{ஆண்டுச் சராசரி இலாபம்} = \frac{1,55,250}{3}$$

= ரூ. 51,750

| | | |
|---|---|---|
| கழி : காப்புக்கு எடுத்துச் செல்லப்படுவது 20 சதவீதம் | .. | ரூ. 10,350 |
| நேர்மைப் பங்குநர்கட்குக் கிடைக்கும் இலாபம் | .. | ரூ. 41,400 |

எதிர்பார்க்கும் இலாப விகிதம் $= \frac{41,400}{4,00,000} \times 100$

$= 10.35$

இலாப இயல்பு விகிதம் $= 10$ சதவீதம்

பங்கொன்றின் மதிப்பு =

$$\frac{\text{எதிர்பார்க்கும் இலாப விகிதம்}}{\text{இயல்பு இலாப விகிதம்}} \times \text{செலுத்தப் பெற்ற பங்கின் மதிப்பு}$$

$= \frac{10.35}{10} \times 10 =$ ரூ. 10.35

(கிடைக்கக்கூடிய இலாபத்தை முதலாக்கியும் இதனைக் கண்டு பிடிக்கலாம்)

அதாவது, $41,400 \times \frac{100}{10}$

முதலாக்கிய இலாபம் ரூ. 4,14,000

பங்கொன்றின் மதிப்பு $= \frac{4,14,000}{40,000}$ (பங்குகளின் எண்ணிக்கை)

$=$ ரூ. 10.35

### எடுத்துக்காட்டு 100

ஒரு கம்பெனியின் பங்குமுதல் ரூ. 40 மதிப்புடைய 2,000 6 சதவீதம் முன்னுரிமைப் பங்குகளாகவும், ரூ. 10 மதிப்புடைய 20,000 நேர்மைப் பங்குகளாகவும் பிரிக்கப்பட்டிருக்கிறது. முன்னுரிமைப் பங்கொன்றுக்கு ரூ. 40 வீதமும், நேர்மைப் பங்கொன்றுக்கு ரூ. 8 வீதமும் செலுத்தப்பட்டிருக்கிறது.

நேர்மைப் பங்குநர்கட்கு 12 சதவீதம் பங்காதாயம் வழங்கியபின் எஞ்சியுள்ள இலாபத்திலிருந்து மீண்டும் 5 சதவீதம் பங்காதாயம் பெறும் உரிமையும் இம் முன்னுரிமைப் பங்குநர் கட்குண்டு. இவ்வாறு வழங்கிய பின்னுள்ள மீதி இலாபம் முழுவதும் நேர்மைப் பங்குநர்கட்குச் சேரவேண்டும்.

ஒவ்வோராண்டும் இலாபத்தில் 20 சதவீதத்தைப் பொதுக் காப்பிற்கு எடுத்துச் செல்வது வழக்கம்.

கம்பெனியின் ஆண்டுச் சராசரி இலாபம் (வரி நீங்கிய பின்) ரூ. 47,500. இதில் மீண்டும் மீண்டும் நிகழா இலாபம் சராசரியாக ரூ. 2,500 அடங்கியிருக்கிறது. முன்னுரிமைப் பங்குகள் மீது 6 சதவீதமும், நேர்மைப் பங்குகள் மீது 12 சதவீதமும் இயல்பு வருவாய் என்று தெரியவருகிறது.

கம்பெனிப் பங்குகளின் மதிப்பைக் கண்டுபிடி.

**விடை :**

| | | ரூ. |
|---|---|---|
| ஆண்டுச் சராசரி இலாபம் | .. | 47,500 |
| **கழி :** ஓரோவழி ஏற்படும் இலாபம் | .. | 2,500 |
| | | 45,000 |
| **கழி :** பொதுக்காப்புக்கு எடுத்துச் செல்லப்படுவது 20 சதவீதம் | .. | 9,000 |
| பகிர்தகு இலாபம் | .. ரூ. | 36,000 |

**முன்னுரிமைப் பங்குநர்கட்குக் கிடைக்கும் இலாபம்**

| | | ரூ. | ரூ. |
|---|---|---|---|
| ரூ. 80,000 மீது 6 சதவீதம் | .. | 4,800 | |
| எஞ்சிய இலாபத்தில் ஏற்கும் பங்கு—ரூ. 80,000 மீது 5 சதவீதம் | .. | 4,000 | |
| | | | 8,800 |

**நேர்மைப் பங்குநர்கட்குக் கிடைக்கும் இலாபம்**

| | | | |
|---|---|---|---|
| ரூ. 1,60,000 மீது 12 சதவீதம் | .. | 19,200 | |
| மிகுதி இலாபம் (36,000—28,000) | .. | 8,000 | |
| | | | 27,200 |
| | | | 36,000 |

**முன்னுரிமைப் பங்கின் மதிப்பு**

எதிர்பார்க்கும் பங்காதாயம் $= \frac{8,800}{80,000} \times 100$

$= 11\%$

இலாப இயல்பு விகிதம் $6\%$

முன்னுரிமைப் பங்கின் மதிப்பு $= \frac{11}{6} \times 40$

$=$ ரூ. 73.33

**நேர்மைப் பங்கின் மதிப்பு**

எதிர்பார்க்கும் பங்காதாயம் $= \frac{27,200}{1,60,000} \times 100$

$= 17\%$

இலாப இயல்பு விகிதம் $12\%$

நேர்மைப் பங்கின் மதிப்பு $= \frac{17}{12} \times 8$

நேர்மைப் பங்கின் மதிப்பு $=$ ரூ. 11.33

**ஈட்டுத் திறன் முறை** Earning capacity meth

ஒரு சில பங்குகளை வாங்க விரும்புபவர் அவற்றின் மீது அவர் பெறக்கூடிய பங்காதாயத்தினைக் கருத்திற்கொண்டு வாங்க முடிவு செய்வார். இதுபோன்ற நிலைகளில் வருவாய் அடிப்படையில் பங்கின் மதிப்பை உணர்தல் சரியே. ஆனால், ஒரு கம்பெனியைத் தனது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வரும் நோக்குடன் அதிக பங்குகளை வாங்க விரும்பும் பங்குநர், பங்குகள் மீது அக் கம்பெனி வழங்கிவரும் பங்கதாதாயத்தை அவ்வளவாகப் பொருட் படுத்துவது இல்லை. கம்பெனி ஈட்டும் இலாபத்தையே அவர் நோக்குவார். ஈட்டும் இலாபம் முழுவதையும் பங்குநர்களுக்குப் பங்காதாயமாக வழங்காமல், பல்வகைக் காப்புகட்குச் சில கம்பெனிகள் எடுத்துச் செல்கின்றன. இதனால், அதிக பங்காதாயத்தை இக் கம்பெனிகள் வழங்குவதில்லை. பங்காதாய விகிதம் குறைவாக இருக்கின்ற காரணத்தாலேயே கம்பெனியின் நிலை சரியில்லையென்று தீர்ப்புக்கூற முடியாது. ஓரளவு

விகிதத்தில் பங்காதாயத்தை வழங்கி, மிகுதி இலாபத்தைச் சேர்த்து வைக்கும் கம்பெனிகள் சிறந்த நிதிக் கொள்கைகளைப் பின்பற்றுபவையாகும். சில ஆண்டுகட்குப் பின்னர்ச் சேர்த்து வைத்திருக்கும் இவ்விதஇலாபத்தை மேலூதியப் பங்குகளாக அவை வெளியிடக்கூடும். எனவே, அதிக எண்ணிக்கையில் பங்குகளை வாங்க எண்ணுபவர் கம்பெனி வழங்கும் பங்காதாயத் திற்கு முக்கியத்துவம் அளிக்காது, கம்பெனியின் இலாபம் ஈட்டும் தன்மைக்குச் சிறப்பிடம் தருகின்றனர். அத்தகையோர், இலாபம் ஈட்டுந் திறன் அடிப்படையில் பங்குகளை மதிப்பிடுவர்.

இம் முறையில் பங்குகளை மதிப்பிட, கம்பெனி பயன்படுத்தி யுள்ள முதல் தொகையையும், அது ஈட்டிய இலாபத்தையும் முதலில் சரியாக உணரவேண்டும்.

## 1. பயன்படுத்திய முதல்

பயன்படுத்திய முதல் என்னும் சொல் இம் முறையில் வேறுபொருளை உணர்த்துகிறது. தொழிலில் உள்ள எல்லாச் சொத்துகளின் சந்தை மதிப்பையும் இச் சொல் குறிக்கும். (மிகை இலாப முறையில் வாணிக நற்பெயரை மதிப்பிடுவதில், 'பயன்படுத்திய முதல்' என்னும் சொல் நிலைச் சொத்துகளையும், நடப்புச் சொத்துகளையும் கூட்டி, அதனின்றும் நடப்புப் பொறுப்புகளைக் கழித்து வந்த தொகையைக் குறிக்கும் என்றும் வாணிகத்திற்குப் புறம்பான சொத்துகளை — முதலீடுகளை — இது உள்ளடக்காது என்றும் கூறியிருப்பதை இவண் நினைவு கூர்க). இங்கு வாணிக நற்பெயராயினும், முதலீடுகளாயினும் சொத்துகள் அனைத்தையுமே கணக்கிலெடுத்துக் கொள்ளவேண்டும். அத்துடன் பொறுப்பு எதையும் இத் தொகையிலிருந்து கழிக்கக் கூடாது.

## 2. ஈட்டிய இலாபம்

இம் முறையில் 'ஈட்டிய இலாபம்' எனும் சொல் வருமான வரி கழித்தபின் உள்ள, ஆனல், கடனீட்டுப் பத்திர வட்டி, முன்னுரிமைப் பங்குப் பங்காதாயம், காப்புகட்குத் தொகை ஒதுக்குதல் போன்றவற்றிற்கு முன்உள்ள இலாபத்தினைக் குறிக்கும்.

இவ்விரு தொகைகளையும் கண்டுபிடித்த பிறகு கீழ்க்கண்டவாறு பங்கினை மதிப்பிடவேண்டும்.

அ. இலாப ஈட்டு விகிதத்தை முதலில் கணக்கிடவேண்டும். இதற்கான விதி :

$$\frac{\text{ஈட்டிய இலாபம்}}{\text{பயன்படுத்திய முதல்}} \times 100$$

ஆ. கீழ்க்கண்ட விதியைப் பயன்படுத்திப் பங்குகளின் மதிப்பை உணரலாம் :

$$\frac{\text{(மேலே கண்டுபிடித்த) இலாப விகிதம்}}{\text{இலாப இயல்பு விகிதம்}} \times \text{பங்கொன்றின் செலுத்தப்பெற்ற மதிப்பு}$$

**எடுத்துக்காட்டு 101**

1. கம்பெனியின் பங்கு முதல், ஒன்று ரூ. 10 வீதம் 20,000 நேர்மைப் பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. பங்கொன்று ரூ. 8 வீதம் செலுத்தப்பட்டுள்ளது.

2. தொழிலில் பயன்படுத்திய முதல் ரூ. 5,00,000.

3. வரிக்குப்பின் அது ஈட்டிய இலாபம் ரூ. 1,20,000 (ரூ. 5,000 கடனீட்டுப் பத்திர வட்டி, இலாப-நட்டக் கணக்கில் பற்று வைக்கப்பட்டிருக்கின்றது).

4. இலாப இயல்பு விகிதம் 15 சதவீதம்.

5. ஈட்டுந் திறன் அடிப்படையில் கம்பெனியின் பங்கு மதிப்பைக் கண்டுபிடி.

**விடை :**

| | | ரூ. | ரூ. |
|---|---|---|---|
| ஈட்டிய இலாபம் | .. | 1,20,000 | |
| **கூட்டு** : கடனீட்டுப் பத்திர வட்டி | .. | 5,000 | |
| | | | 1,25,000 |
| ஈட்டிய இலாபம் | .. | 1,25,000 | |

இலாபம் ஈட்டும் விகிதம் $\frac{1,25,000}{5,00,000} \times 100$

$= 25$

பங்கொன்றின் மதிப்பு $\frac{25}{15} \times 8$

= ரூ. 13.33

## எடுத்துக்காட்டு 102

ஒரு கம்பெனியின் 1973 ஜூன், 30-ற்கான இருப்புநிலைக் குறிப்புக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### இருப்புநிலைக் குறிப்பு

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : | | வாணிக நற்பெயர் | 1,00,000 |
| ஒன்று ரூ. 100 மதிப்புள்ள 1,000-7 சதவீதம் முன்னுரிமைப் பங்குகள் | 1,00,000 | கட்டடம் | 1,80,000 |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 3,000 நேர்மைப் பங்குகள் | 3,00,000 | பொறிவகை | 2,70,000 |
| பொதுக்காப்பு | 85,000 | 4 சதவீதம் அரசினர் கடன் பத்திரங்கள் (முகமதிப்பு ரூ. 35,000) | 30,000 |
| பங்காதாயச் சமன்செய் காப்பு | 75,000 | சரக்கிருப்பு | 1,20,000 |
| இலாப-நட்டக் கணக்கு | 15,000 | கடனாளிகள் | 95,000 |
| 6 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் | 1,00,000 | | |
| கடனீந்தோர் | 80,000 | | |
| வங்கி மேல்வரைப் பற்று | 40,000 | | |
| | 7,95,000 | | 7,95,000 |

1. கட்டடம் ரூ. 2,50,000 என்றும், முதலீடுகள் ரூ. 25,000 எனவும், சரக்கிருப்பு ரூ. 1,40,000 எனவும் மதிப்பிடப்படுகிறது.

2. இவ்வகைத் தொழிலில் ஈடுபட்டுள்ள கம்பெனிகள் 10 சதவீதம் வருவாய் ஈட்டுகின்றன.

3. 1973 ஜூன், 30-ல் முடியும் ஆண்டில் இலாபத்திலிருந்து ரூ. 15,000 பொதுக்காப்பிற்கும் ரூ. 10,000 பங்

காதாயச் சமன்செய் காப்புக்கும் எடுத்துச் செல்லப்பட்டபின், வரிக்குப்பின் இருந்த இலாபம் ரூ. 1,69,000.

4. 50% வீதத்தில் வருமான வரி செலுத்தப் படுகின்றது.

மேல் கொடுக்கப்பட்டிருக்கும் விவரங்களிலிருந்து ஈட்டுந் திறனடிப்படையில் பங்கின் மதிப்பைக் கண்டுபிடி.

**விடை :**

இலாப வீதத்தை உணர, பயன்படுத்தப்பட்ட முதல் தொகையைக் கண்டுபிடிக்கவேண்டும்.

**பயன்படுத்தப்பட்ட முதல்**

| | | ரூ. |
|---|---|---|
| வாணிக நற்பெயர் | .. | 1,00,000 |
| கட்டடம் | .. | 2,50,000 |
| பொறிவகை | .. | 2,70,000 |
| அரசினர் கடன் பத்திரங்கள் | .. | 25,000 |
| சரக்கிருப்பு | .. | 1,40,000 |
| கடனாளிகள் | .. | 95,000 |
| | | 8,80,000 |

**ஈட்டிய இலாபம்**

| | | | |
|---|---|---|---|
| காப்புகட்கு ஒதுக்கிய பின்னுள்ள இலாபம் | | .. | 1,69,000 |
| **கூட்டு :** | | | |
| பொதுக்காப்பு | 15,000 | | |
| பங்காதாயச் சமன்செய் காப்பு | 10,000 | .. | 25,000 |
| | | | |
| நிகர இலாபம் | | .. | 1,94,000 |
| **கழி :** வருமான வரி (50 சதவீதம்) | | .. | 97,000 |
| | | | 97,000 |

| | | | |
|---|---|---|---|
| கூட்டு : கடனீட்டுப் பத்திர வட்டி | 6,000 | | |
| முன்னுரிமைப் பங்காதாயம் | 7,000 | .. | 13,000 |
| | | | 1,10,000 |

$$\text{இலாப ஈட்டும் விகிதம்} = \frac{\text{ஈட்டிய இலாபம்}}{\text{பயன்படுத்திய முதல்}} \times 100$$

$$= \frac{1,10,000}{8,80,000} \times 100 = 12.5\ \%$$

$$\text{பங்கு மதிப்பு} = \frac{\text{இலாப ஈட்டும் வீதம்}}{\text{இலாப இயல்பு விகிதம்}} \times \text{செலுத்தப்பெற்றபங்கு}$$

$$= \frac{12.5}{10} \times 100 = \text{ரூ. } 125$$

## எடுத்துக்காட்டு 103

ஒரு தனிக் கம்பெனியின் 1967 திசம்பர், 31-ற்கான இருப்புநிலைக் குறிப்பின் சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

### இருப்புநிலைக் குறிப்பு

| | ரூ. | | | ரூ. |
|---|---|---|---|---|
| வெளியீட்டு முதல் : | | வாணிக நற்பெயர் | | 17,500 |
| ஒன்று ரூ. 1 வீதம் 6,000-7 சதவீதம் முன்னுரிமைப் பங்குகள் | 6,000 | குத்தகைச் சொத்து | 16,000 | |
| ஒன்று ரூ. 1 வீதம் 10,000 நேர்மைப் பங்குகள் | 10,000 | கழி : தேய்மானம் | 7,000 | 9,000 |
| கடனீட்டுப் பத்திர மீட்பு நிதி | 1,000 | | | |

## இருப்புநிலைக் குறிப்பு—(தொடர்ச்சி)

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| இலாப-நட்டக் கணக்கு 1–1–1967-ல் இருப்பு 13,850; நடப்பாண்டின் இருப்பு 8,175 | 22,025 | பொறிவகை 9,500; கழி : தேய்மானம் 2,250 | 7,250 |
| 1971 திசம்பர் 31-ல் மீட்க வேண்டிய 6 சத வீதம் கடனீட்டுப் பத்திரங்கள் | 2,000 | முதலீடு (அடக்க விலையில்—கடனீட்டுப் பத்திர மீட்பு நிதிக்காக) | 1,000 |
| நடப்புப் பொறுப்புகள் : | | சரக்கிருப்பு (அடக்கவிலையில்) | 5,250 |
| கடனீந்தோர் | 4,975 | கடனாளிகள் | 4,050 |
| | | வங்கியிருப்பு | 1,950 |
| | 46,000 | | 46,000 |

எல்லா முன்னுரிமைப் பங்குகளையும் 6,000 நேர்மைப் பங்குகளையும் வைத்துள்ள ஒரு பங்குநர் அவற்றை விற்றுவிட விரும்புகிறார். முன்னுரிமைப் பங்குகளை முகமதிப்பிலும், நேர்மைப் பங்குகளை மேலே கொடுக்கப்பட்ட இருப்புநிலைக் குறிப்பின் அடிப்படையில் (கீழ்க்கண்டவற்றிற்காகச் சரிக்கட்டி) மதிப்பிட்டு விற்கவேண்டும்.

1. 1958 சனவரி 1-ல் குத்தகைச் சொத்து ஒன்று வாங்கப்பட்டது. இருப்புநிலைக் குறிப்பு நாளிலிருந்து இன்னும் 6 ஆண்டுகட்குக் குத்தகை இருக்கின்றது. குத்தகைக் காலத்தில் சம ஆண்டுத் தொகைகளாக ஒவ்வோராண்டும் தொகை நீக்கப்படவேண்டும். இதுநாள்வரை ஆண்டொன்றுக்கு ரூ. 700 வீதம் நீக்கப்பட்டிருக்கிறது.

2. கடனீட்டுப் பத்திர மீட்பு நிதிக்கு ஆண்டொன்றிற்கு ரூ. 250 வீதம் ஒதுக்கப்பட்டு வந்திருக்கிறது.

3. 1965-ல் ரூ. 600 பெறுமானமுள்ள சரக்கை வாங்கி, அடக்கவிலையில் சரக்கிருப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இருப்புநிலைக் குறிப்பு நாளில் இச் சரக்கிற்கு மதிப்பு ஏதும் இல்லை.

4. செலவுக்காகக் கொடுக்கவேண்டிய ரூ. 375 இருப்பு நிலைக் குறிப்பில் விடுபட்டுவிட்டது.

5. கடனாளிகள் மீது ஐயக்கடன் காப்பிற்குக் குறிப்பிட்ட தொகை ஒதுக்கிய பின்னரும் கடனாளிகளின் தொகையில் 10 சத வீதம் அளவிற்குப் பொதுக்காப்பொன்று 1967-வது ஆண்டுக் கணக்கில் முதன்முறையாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

6. கடந்த 1965, 1966, 1967 ஆகிய ஆண்டுகளில், மேற்கண்டவற்றிற்குச் சரிக்கட்டிய பின், நேர்மைப் பங்குநர்க்குப் பங்காதாயம் வழங்கத்தக்க இலாபத்தின் சராசரியைப் போன்று இரண்டு மடங்கில் வாணிக நற்பெயரை மதிப்பிடவேண்டும். கடந்த 3 ஆண்டுகளில் கடனீட்டுப்பத்திர வட்டிக்கும், முன்னுரிமைப் பங்குப் பங்காதாயத்திற்கும் தொகைகளை ஒதுக்கும் முன்னும், பிற பகிர்வுகட்கு முன்னும் ஏற்பட்ட இலாபங்கள் முறையே ரூ. 8,040, ரூ. 9,290, ரூ. 8,965 ஆகும்.

விற்கும் பங்குநர்க்கு மொத்தம் சேரவேண்டிய தொகையைக் கணக்கிடுக.

**விடை :**

வாணிக நற்பெயரைக் கணக்கிடுமுன் ஒவ்வோராண்டு இலாபத்திலும் சரிக்கட்டவேண்டும்.

1. 1958 சனவரி 1-ல் எடுத்த குத்தகை 1967 திசம்பர் 31-ற்குப் பிறகும் 6 ஆண்டு காலத்திற்குண்டு என்று கொடுக்கப்பட்டிருப்பதால், இதன் காலம் 16 ஆண்டுகளாகும். இதன் மதிப்பு ரூ. 16,000. எனவே, நேர் வரி முறையில் (Straight Line Method) ஒவ்வோராண்டும் நீக்கவேண்டிய குத்தகைத்தொகை ரூ. 1,000 ஆகும். கடந்த 10 ஆண்டுகளில் ரூ. 10,000 நீக்கப்பட்டு, இருப்புநிலைக் குறிப்பு நாளில் அதன் மதிப்பு ரூ. 6,000 எனக் காட்டப்பட்டிருக்கவேண்டும். ஆனால், ஒவ்வோராண்டும் ரூ. 1,000-ற்குப் பதிலாக, ரூ. 700 மட்டும் நீக்கப்பட்டிருக்கிறது. கடந்த 3 ஆண்டுகளின் இலாப சராசரியை உணரவேண்டியிருப்பதால், ஒவ்வோராண்டும் கொடுக்கப்பட்ட இலாபத்திலிருந்து ரூ. 300-ஐக் கழிக்கவேண்டும்.

**1965ஆம் ஆண்டிற்கான இலாபம்**

| | | ரூ. | ரூ. |
|---|---|---|---|
| கணக்கில் கொடுக்கப்பட்ட இலாபம் | .. | | 8,040 |
| கழி : குறைவாக நீக்கப்பட்ட | | | |
| குத்தகை | .. | 300 | |
| கடனீட்டுப்பத்திர வட்டி | .. | 120 | |
| கடனீட்டுப் பத்திர மீட்பு நிதி | .. | 250 | |
| முன்னுரிமைப் பங்காதாயம் | .. | 420 | |
| | | | 1,090 |
| சரிக்கட்டப்பட்ட இலாபம் | .. | | 6,950 |

**1966ஆம் ஆண்டிற்கான இலாபம்**

| | | | |
|---|---|---|---|
| கணக்கில் கொடுக்கப்பட்ட இலாபம் | .. | | 9,290 |
| கழி : குறைவாக நீக்கப்பட்ட | | | |
| குத்தகை | .. | 300 | |
| கடனீட்டுப் பத்திர வட்டி | .. | 120 | |
| கடனீட்டுப் பத்திர மீட்பு நிதி | .. | 250 | |
| முன்னுரிமைப் பங்காதாயம் | .. | 420 | |
| | | | 1,090 |
| சரிக்கட்டப்பட்ட இலாபம் | .. | ரூ. | 8,200 |

**1967ஆம் ஆண்டிற்கான இலாபம்**

சரக்கிருப்புப் பட்டியலில் இடம்பெற்றும், மதிப்பேதுமில்லா ரூ. 600-ற்கான சரக்கை நீக்கிவிட வேண்டும். கொடுபட வேண்டிய ரூ. 375-ற்கான செலவு ஒன்று விடுபட்டு விட்டதால், அதனையும் இலாபத்திலிருந்து கழித்துவிடவேண்டும். கடனாளிகள் மீது குறிப்பிட்ட தொகை அளவில் ஐயக்கடன் காப்பிற்காக ஒதுக்கப்பட்டுவிட்டது. மீண்டும் 10 சதவீதம் தொகை ஒதுக்குதல் இலாபத்தைப் பகிர்ந்து ஒதுக்கும் காப்புப் போன்றதாகும். எனவே, இத் தொகையைக் கொடுக்கப்பட்ட இலாபத்துடன் கூட்ட வேண்டும்.

10 சதவீதம் காப்புக் கழித்தபின் உள்ள கடனுளிகள் ரூ. 4,050 ஆகும். இக் காப்புக் கழிப்பதற்கு முன்னுள்ள கடனுளிகள் தொகையை இப்பொழுது கணக்கிடுவோம்.

காப்பு ஏற்பட்டபின் உள்ள கடனுளிகள் தொகை ரூ. 90 எனில், காப்புக் கழிக்கப்படு முன்னுள்ள தொகை ரூ. 100 ஆகும். காப்புக் கழிக்கப்பட்ட பின்னுள்ள தொகை ரூ. 4,050 எனில்,

காப்புக் கழிப்பதற்கு முன்னுள்ள கடனுளிகள் $= 4,050 \times \frac{100}{90}$

= ரூ. 4,500

எனவே, நீக்கப்பட்ட காப்பு ரூ. 450 (ரூ. 4,500—4050). இப்போது இலாபத்தைச் சரிக்கட்டலாம் :

| | | ரூ. | ரூ. |
|---|---|---|---|
| கொடுக்கப்பட்ட இலாபம் | .. | | 8,965 |
| **கழி :** குறைவாக நீக்கப்பட்ட | | | |
| குத்தகை | .. | 300 | |
| கடனீட்டுப் பத்திர வட்டி | .. | 120 | |
| கடனீட்டுப் பத்திர மீட்பு நிதி | .. | 250 | |
| முன்னுரிமைப் பங்காதாயம் | .. | 420 | |
| நீக்கப்படவேண்டிய சரக்கிருப்பு | .. | 600 | |
| விடுபட்ட செலவினம் | .. | 375 | |
| | | —— | 2,065 |
| | | | 6,900 |
| **கூட்டு :** கடனுளிகள் மீது ஏற்படுத்தப்பட்ட பொதுக்காப்பு | .. | | 450 |
| சரிக்கட்டப்பட்ட இலாபம் | .. | | 7,350 |

**சரிக்கட்டியபின் மொத்த**
இலாபம்
(6,950 + 8,200 + 7,350) = 22,500

சராசரி இலாபம் $= \frac{22,500}{3}$

= ரூ. 7,500

வாணிக நற்பெயர்
(இதைப்போல் இருமடங்கு) = ரூ. 15,000

**பங்கு மதிப்பைக் கணக்கிடல்**

| | | | ரூ. |
|---|---|---|---|
| **சொத்துகள்** | | | |
| வாணிக நற்பெயர் | .. | | 15,000 |
| பொறிவகை | .. | | 7,250 |
| குத்தகைச் சொத்து (16,000—10,000) | .. | | 6,000 |
| முதலீடுகள் | .. | | 1,000 |
| சரக்கிருப்பு (ரூ. 5,250—ரூ. 600) | .. | | 4,650 |
| கடனாளிகள் (ரூ. 4,050 + ரூ. 450) | .. | | 4,500 |
| வங்கியிருப்பு | .. | | 1,950 |
| | | | 40,350 |
| **கழி :** பொறுப்புகள் : | | | |
| 6 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் | .. | 2,000 | |
| கடனீந்தோர் | .. | 4,975 | |
| விடுபட்ட, ஆனால் கொடுபடவேண்டிய செலவினம் | .. | 375 | |
| | | | 7,350 |
| நிகர சொத்துகள் | .. | | 33,000 |
| **கழி :** முன்னுரிமைப் பங்குகள் | .. | | 6,000 |
| நேர்மைப் பங்குநர்க்குக் கிடைக்கக்கூடிய சொத்துகளின் மதிப்பு | .. | | 27,000 |

பங்கின் மதிப்பு

$$\frac{27,000}{10,000} = \text{ரூ. } 2.70$$

**பங்குகளை விற்கும் பங்குநருக்குச் சேரவேண்டிய தொகை**

| | | |
|---|---|---|
| ஒன்று ரூ. 1 வீதம் 6,000 முன்னுரிமைப் பங்குகளின் மதிப்பு | .. | 6,000 |
| ஒன்று ரூ. 2.70 வீதம் 6,000 நேர்மைப் பங்குகளின் மதிப்பு | .. | 16,200 |
| | ரூ. | 22,200 |

## வினாக்கள்

1. 'வாணிக நற்பெயர்' — இலக்கணம் தந்து விளக்குக.
2. எந்தெந்தக் காரணங்களால் வாணிக நற்பெயர் எழுகின்றது?
3. வாணிக நற்பெயரை மதிப்பிடவேண்டிய சூழ்நிலைகள் யாவை?
4. வாணிக நற்பெயரை மதிப்பிடும் முறைகளைச் சுருங்கக் கூறுக.
5. 'விழுக்காட்டு (சராசரி) இலாபத்தினை மட்டும் கருத்திற் கொண்டு வாணிக நற்பெயரை மதிப்பிடுதல் வழுவாகும்' ஆய்க.
6. வாணிக நற்பெயரை மதிப்பிடுவதில், 'பயன்படுத்திய முதல் தொகையை' எவ்வாறு கண்டுபிடிப்பது?
7. மிகை இலாபத்தை (Super profit) முதற்படுத்தி வாணிக நற்பெயரை மதிப்பிடும் முறையை விவரி.
8. மிகை இலாபத்தின் ஆண்டுத் தொகை முறையில் வாணிக நற்பெயரை மதிப்பிடுவது எவ்வாறு?
9. பங்குகளை மதிப்பிடவேண்டிய சூழ்நிலைகள் யாவை?
10. 'நிகர சொத்து முறை'யில் பங்கினை மதிப்பிடும் முறையை விளக்குக.
11. 'வருவாய் முறை' யில் (Yield Basis) பங்குகளை எவ்வாறு மதிப்பிடுவது?

12. எக் காரணங்களை முன்னிட்டு 'ஈட்டுந் திறன் முறை' யில் பங்குகளை மதிப்பிடுகின்றனர்?

13. 'ஈட்டுந் திறன் முறை'யில் பங்குகளை எவ்வாறு மதிப்பிடுவது?

14. 'பயன்படுத்திய முதல் தொகை' என்பது வாணிக நற்பெயரை மதிப்பிடும்பொழுதும், பங்குகளை மதிப்பிடும்பொழுதும் எவ்வகையில் மாறுபடுகிறது ?

15. சிறுகுறிப்பு வரைக :

1. எடையேறிய விழுக்காடு (Weighted Average)

2. மிகை இலாபம்

3. இலாப இயல்பு வருவாய் வீதம்

4. வருவாய் முறையில் பங்குகளை மதிப்பிடுதல்

### பயிற்சி

(1) நேஷனல் மேனுபேக்சரிங் கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்புக் கீழ்க்கண்டவற்றை உணர்த்திற்று :

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : ஒன்று ரூ. 250 வீதம் 8,800 பங்குகள் முழுதும் செலுத்தப்பெற்றவை | 22,00,000 | நிலம் (வாங்கிய விலையில்) | 2,21,000 |
| காப்புநிதி | 8,24,000 | கட்டடம் (அடக்கவிலையில்) | 11,73,000 |
| தொழிலர் சேமிப்புக் கணக்கு | 2,27,000 | பொறிவகை | 20,58,000 |
| நலக்காப்பு நிதி (Provident Fund) | 54,000 | மனைத்துணைப் பொருள் | 5,000 |
| தேய்மான நிதிக்கணக்கு | 4,63,000 | சரக்கிருப்பு | 26,00,000 |
| கடனீந்தோர் | 38,86,000 | கடனாளிகள் | 3,35,000 |
| இலாப-நட்டக் கணக்கு | 36,12,000 | முதலீடுகள் | 17,00,000 |
| | | வங்கி ரொக்க இருப்புகள் | 31,49,000 |
| | | கடனீட்டுப் பத்திர பொருட்பிணைகள் | 25,000 |
| | 1,12,66,000 | | 1,12,66,000 |

தேவையான தேய்மானத் தொகைக்கு மேலாகத் தேய்மான நிதியில் ரூ. 54,00,000 உள்ளது.

பங்கின் உள் மதிப்பைக் கண்டுபிடி.

(M. U. B, Com., Special Accounts, April, 1963)

(2) 1968 திசம்பர் 31-ல் 'X' லிமிடெடின் இருப்பு நிலைக் குறிப்புக் கீழ்க்கண்டவாறு இருந்தது.

**இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| ஒன்று ரூ. 10 வீதம் 7,500 பங்குகள் | 75,000 | நிலமும் கட்டடமும் | 41,250 |
| பொதுக்காப்பு | 15,000 | பொறிவகை (அடக்கவிலை—தேய்மானம்) | 68,750 |
| வரிக்காப்பு | 22,500 | வாணிகக் குறிகள் (Trade Marks) | 7,500 |
| தொழிலர் சேமிப்புக் கணக்கு | 11,250 | சரக்கிருப்பு | 18,000 |
| இலாப-நட்டக் கணக்கு | 12,000 | கடனாளிகள் | 33,000 |
| கடனீந்தோர் | 36,750 | வங்கி | 19,500 |
| | | தொடக்கச் செலவுகள் | 4,500 |
| | 1,72,500 | | 1,72,500 |

பொறிவகை ரூ. 45,000 எனவும், நிலம், கட்டடம் முதலியவை ரூ. 90,000 எனவும் மதிப்பிடப்பட்டன. கடனாளிகளில் ரூ. 3,000 வராக் கடனாகும். கம்பெனியின் இலாபம் கடந்த ஆண்டுகளில் கீழ்க்கண்டவாறிருந்தது :

| | | |
|---|---|---|
| 1966 | ரூ. | 30,000 |
| 1967 | ரூ. | 33,750 |
| 1968 | ரூ. | 39,750 |

இலாபத்தில் 25 சதவீதம் காப்பிருப்புக்கு எடுத்துச் செல்வது கம்பெனியின் வழக்கம். வருமான வரியைக் கணக்கில் கொள்ளாது, பங்கின் மதிப்பை வருவாய் அடிப்படையிலும் நிகர சொத்துகளின் அடிப்படையிலும் கணக்கிடுக. இத்தகைய கம்பெனிகள் பங்குகளின் சந்தை மதிப்பில் 10% வீதம் வருவாய்த் தருகின்றன. வாணிக நற்பெயர் ரூ. 60,000 என மதிப்பிடப்பட்டது.

(M. U. B. Com., Spccial Accounts, April, 1970)

*(3)* தேசாய் அன் கோ பிரைவேட் லிமிட்டெடின் 1964 டிசம்பர் 31-ற்கான இருப்புநிலைக் குறிப்பு கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது :

## இருப்புநிலைக் குறிப்பு

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : | | | |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 10,000 பங்குகள் | 1,00,000 | நிலமும் கட்டடமும்—தேய்மானம் நீங்கலாக. | 70,000 |
| பொதுக்காப்பு | 50,000 | பொறிவகை—தேய்மானம் நீங்கலாக | 70,000 |
| வரிக்காப்பு | 20,000 | வாணிகக் குறிகள் (Trade Marks) | 20,000 |
| தொழிலர் சேமிப்புக் கணக்கு | 20,000 | சரக்கிருப்பு | 20,000 |
| இலாப-நட்டக் கணக்கு | 30,000 | கடனாளிகள் | 48,000 |
| கடனீந்தோர் | 40,000 | வங்கியிருப்பு | 25,000 |
| | | தொடக்கச் செலவுகள் | 7,000 |
| | 2,60,000 | | 2,60,000 |

பொறிவகை ரூ. 60,000 எனவும், நிலமும், கட்டடமும் ரூ. 1,30,000 எனவும் தனி ஒரு மதிப்பீட்டாளரால் மதிப்பிடப் படுகின்றன. கடனுளிகளில் ரூ. 5,000 வராக் கடனாகும். கம்பெனியின் இலாபங்கள் வருமாறு :

| | | |
|---|---|---|
| 1962 | ரூ. | 50,000 |
| 1963 | ரூ. | 60,000 |
| 1964 | ரூ. | 70,000 |

காப்பிற்கு 20 சதவீதம் எடுத்துச் செல்வது கம்பெனியின் வழக்கம். உள் மதிப்பு அடிப்படையில் அல்லது நிகர சொத்து களின் அடிப்படையிலும் வருவாய் அடிப்படையிலும் கம்பெனிப் பங்குகளின் மதிப்பினைக் கண்டுபிடிக்கவும். வரி பற்றி விட்டு விடுக. இதுபோன்ற கம்பெனிப் பங்குகள் பங்கு மாற்றுச் சந்தை யில், சந்தை மதிப்பில் 12 சதவீதம் அளவிற்கு வருவாய்ப் பெறு கின்றன. கம்பெனியின் வாணிக நற்பெயர் ரூ. 1,00,000 எனக் கொள்க.

(B. Com., Delhi, 1965)

(4) திவாகர் என்பவர் இந்துஸ்தான் லிமிட்டெடில் 5,000 சாதாரணப் பங்குகளை வைத்துள்ளார். இக் கம்பெனியின் முதல் ஒன்று ரூ. 1 வீதம் 30,000 நேர்மைப் பங்குகளாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. கீழ்க் கொடுக்கப்பட்ட விவரங்களிலிருந்து அவர் வைத்திருக்கும் பங்குகளின் மதிப்பைக் கண்டுபிடி.

அ. அக் கம்பெனியின் இயல்பான ஆண்டு நிகர இலாபம் ரூ. 5,000.

ஆ. இத்தகைய தொழிலை மேற்கொண்டுள்ள கம்பெனியின் இயல்பாகக் கிடைக்கக்கூடிய வருவாய் 8 சதவீதம் ஆகும்.

(I. C. W. A. July, 1965)

(5) ஒரு பங்குநர் இறந்துவிடின் அவர் வைத்துள்ள பங்கு களைப் பிற பங்குநர்கள் வாங்கிக் கொள்ளலாம் என்றும், கடந்த இருப்புநிலைக் குறிப்பின் அடிப்படையில் விலை தீர்க்கப்படவேண்டு மென்றும் ஒரு கம்பெனியின் செயல்முறை விதிகளில் கூறப்பட்டிருக் கிறது. கடந்த 5 ஆண்டுச் சராசரி இலாபத்தின் மூன்றாண்டுக் கொள்முதல் என்ற அடிப்படையில் வாணிக நற்பெயரை மதிப்பிட

வேண்டுமென்றும் மேலும் அதில் கூறப்பட்டுள்ளது. கடந்த இருப்புநிலைக் குறிப்பு கீழ்க் கொடுக்கப்பட்டுள்ளது :

## இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| ஒன்று ரூ. 10 வீதம் 20,000 நேர்மைப் பங்குகள் | 2,00,000 | வாணிக நற்பெயர் | 2,00,000 |
| பொதுக்காப்பு | 2,00,000 | முதலீடு (சந்தை மதிப்பு ரூ. 2,50,000) | 3,00,000 |
| தொழிலர் சேமிப்புநிதி (Workmen's Savings Fund) | 2,00,000 | இறுதிச் சரக்கிருப்பு | 5,00,000 |
| தொழிலர் நலக்காப்பு நிதி (Workmen's Provident Fund) | 1,00,000 | கடனாளிகள் | 4,00,000 |
| கடனீந்தோர் | 6,00,000 | வங்கியிருப்பு | 70,000 |
| இலாப-நட்டக் கணக்கு | 1,70,000 | | |
| | 14,70,000 | | 14,70,000 |

கடந்த 5 ஆண்டுகளின் இலாபம் ரூ. 15,000; ரூ. 20,000; ரூ. 25,000; ரூ. 30,000; ரூ. 35,000 ஆகும். ஒவ்வொரு பங்கிற்கும் செலுத்தவேண்டிய விலையைக் கண்டுபிடி.

(I. C. W. A. 1966)

(6) ஒரு கம்பெனியின் 30—6—69-ற்குரிய இருப்புநிலைக் குறிப்பு கீழ்க் கொடுக்கப்பட்டிருக்கிறது :

## இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| அதிகாரம் பெற்ற பங்குமுதல் : | | நிலமும் கட்டடமும் | 1,50,000 |
| ஒன்று ரூ. 100 மதிப்புள்ள 5,000-9 சதவீதம் குவிவு முன்னுரிமைப் பங்குகள் | 5,00,000 | பொறிவகை | 1,00,000 |
| ஒன்று ரூ. 10 மதிப்புடைய 50,000 நேர்மைப் பங்குகள் | 5,00,000 | மனைத்துணைப் பொருள் | 35,000 |
| | 10,00,000 | நடப்புச் சொத்துகள் : | |
| ஒன்று ரூ. 100 மதிப்புள்ள 9 சதவீதம் 3,000 குவிவு முன்னுரிமைப் பங்குகள் | 3,00,000 | சரக்கிருப்பு | 2,70,000 |
| ஒன்று ரூ. 10 மதிப்புடைய 15,000 நேர்மைப் பங்குகள் | 4,50,000 | கடனாளிகள் | 3,50,000 |
| | 7,50,000 | வங்கியிருப்பு | 1,80,000 |
| பொதுக்காப்பு | 50,000 | பல்வகைச் செலவினம் : | |
| மேம்பாட்டுத் தள்ளுபடிக் காப்பு | 75,000 | மேம்பாட்டுச் செலவுகள் (Development Expenses) | 1,00,000 |
| இலாப-நட்டக் கணக்கு | 25,000 | | |
| நடப்புப் பொறுப்புகளும் ஒதுக்குகளும் பொறுப்புகள் | 1,00,000 | | |
| வருமானவரி ஒதுக்கு | 90,000 | | |
| திட்டமிட்ட பங்காதாயம் | 95,000 | | |
| | 11,85,000 | | 11,85,000 |

30–6–69-ல் முடியும் மூன்று ஆண்டுகட்கான விற்பனை, நிகர இலாபம், நேர்மைப் பங்குகள் மீது செலுத்திய பங்காதாயம் முதலிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| ஆண்டு | விற்பனை ரூ. | நிகரஇலாபம் ரூ. | நேர்மைப் பங்குகள்மீது வழங்கிய பங்காதாயம் |
|---|---|---|---|
| 1966–67 | 20,00,000 | 2,00,000 | 10 சதவீதம் |
| 1967–68 | 28,00,000 | 2,50,000 | 12 சதவீதம் |
| 1968–69 | 30,00,000 | 2,60,000 | 15 சதவீதம் |

இதுபோன்று தொழில் செய்யும் கம்பெனிகள் தங்கள் முதலீட்டின் மீது 10 சதவீதம் இயல்பு வருவாய் பெறுகின்றன என்று கொண்டு, கம்பெனியின் நேர்மைப் பங்கின் மதிப்பைக் கணக்கிடுக.

(Institute of Company Secretaries of India, Final, 1969)

(7) ஒரு கம்பெனி கடந்த ஐந்தாண்டுகளில் ஈட்டிய நிகர இலாபம் (வரி நீங்கியபின்) கீழ்வருமாறு இருந்தது :

| | | ரூ. |
|---|---|---|
| முதலாண்டில் | .. | 40,000 |
| இரண்டாம் ஆண்டில் | .. | 42,000 |
| மூன்றும் ஆண்டில் | .. | 45,000 |
| நான்காம் ஆண்டில் | .. | 46,000 |
| ஐந்தாம் ஆண்டில் | .. | 47,000 |

இத் தொழிலில் பயன்படுத்திய முதல் தொகை ரூ. 4,00,000. இதன்மீது 10 சதவீதம் வருவாய் எதிர்பார்க்கப் படுகிறது.

அ. அடுத்த ஐந்தாண்டுகட்கும் இதே மிகை இலாபத்தைக் கம்பெனி ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மிகுதி இலாப ஆண்டுத் தொகை அடிப்படையில், கம்பெனியின் வாணிக நற் பெயரைக் கணக்கிடுக. 10 சதவீதம் வட்டியில் 5 ஆண்டுகட்கு ஆண்டுத் தொகை ரூ. ஒன்றின் தற்பொழுதைய மதிப்பு ரூ. 3.78 என்று கொள்க.

ஆ. தொழிலில் பயன்படுத்திய தொகை மீது 10 சதவீதம் வருவாயிலும் கூடுதலாகக் கிடைக்கக்கூடிய மிகை இலாபத்தினை முதற்படுத்துகை (Capitalisation) மூலம் கிடைக்கக்கூடிய வாணிக நற்பெயர் எவ்வாறு மாறுபடும்? (C. A. Inter)

(8) கீழ்க்கண்ட தகவல்களிலிருந்து வாணிக நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடுக.

1. தொழிலில் பயன்படுத்திய சராசரி முதல் ரூ. 60,00,000.

2. கடந்த 3 ஆண்டுகளில் நிறுவனம் ஈட்டிய நிகர இலாபம் ரூ. 1,07,600; ரூ. 90,700; ரூ. 1,12,500.

3. முதலின் மீது எதிர்பார்க்கும் வட்டி 12 சதவீதம்.

4. கூட்டாளிகள் தாங்கள் ஆற்றும் பணிக்காகப் பெற்றுக் கொள்ளவேண்டிய ஊதியம் ஆண்டொன்றுக்கு ரூ. 12,000.

5. நிறுவனத்தின் பல்வகைச் சொத்துகள் ரூ. 7,54,762; நடப்புப் பொறுப்புகள் ரூ. 31,329. (C. A. Inter)

(9) திரு. சந்திரனின் 1969 செப்டம்பர் 30-க்குரிய இருப்பு நிலைக் குறிப்புக் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது :

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| முதல் | 1,64,000 | நிலமும் | |
| பொதுக்காப்பு | 40,000 | கட்டடமும் | 36,000 |
| கடனீந்தோர் | 38,040 | பொறிவகை | 54,000 |
| | | முதலீடுகள் | 30,000 |
| | | சரக்கிருப்பு | 26,850 |
| | | வங்கி | 75,990 |
| | | கடனாளிகள் | 19,200 |
| | 2,42,040 | | 2,42,040 |

கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட நிகர இலாபம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது :

| | | |
|---|---|---|
| 1967 | ரூ. | 32,280 |
| 1968 | ரூ. | 36,870 |
| 1969 | ரூ. | 43,350 |

முதலீடுகளினின்றும் பெற்ற வருமானம் ஆண்டொன்றுக்கு ரூ. 1,500 மேற்சொன்ன தொகைகளில் அடங்கியுள்ளது.

இதுபோன்ற தொழிலில் பயன்படுத்தியுள்ள முதல்மீது கிடைக்கக்கூடிய வருவாய் 10 சதவீதம் ஆகும். மூன்றாண்டு மிகை இலாபச் சராசரியின் இரண்டாண்டுக் கொள்முதல் எனும் அடிப்படையில் வாணிக நற்பெயரைக் கணக்கிடுக. ஒவ்வோராண்டு இலாப முழுவதையும் திரு. சந்திரன் எடுத்துக் கொள்கிறார் என்று கொள்க.

(C. A. Inter, 1969)

# 12. முதல் சீரமைப்பும் அக மறுஅமைப்புத் திட்டமும்

## (Capital Reorganisation and Internal Reconstruction)

**பங்கு முதலே மாற்றுதல்** (Alteration of Share Capital)

கம்பெனியின் செயல்முறை விதிகள் அதிகாரம் வழங்குமாயின், ஒரு கம்பெனி தனது பங்கு முதலைக் கீழ்க்கண்ட வகைகளில் மாற்றிக் கொள்ளலாம். முதல் குறைப்பு (Capital Reduction) என்பதும், பங்குமுதலை மாற்றுதல் என்பதும் வெவ்வேருகும். முதற்கண், பங்குமுதலை மாற்றுதல்பற்றி ஆய்வோம்.

(1) பங்குகளைப் பங்குக் கோவையாக மாற்றுதல் (Conversion of Shares into Stock)

(2) பங்குமுதலை அதிகப்படுத்துதல் (Increase of Share Capital)

(3) (செலுத்தப்பெற்ற தொகையைக் குறைக்காமலேயே) பங்குமுதலைக் குறைத்தல் (Decrease of Share Capital)

(4) (அ) சிறு தொகைப் பங்குகளைப் பெருந்தொகைப் பங்குகளாகத் தொகுத்தல் (Consolidation of Shares)

(ஆ) பெருந்தொகைப் பங்குகளைச் சிறு தொகைப் பங்குகளாகப் பகுத்தல் (Sub-division of Shares)

கம்பெனிச் சட்டத்தில் பிரிவுகள் 94-லிருந்து 98 வரை முதல் மாற்றத்தைப் பற்றிக் கூறுகின்றன.

**பங்குக் கோவையாக மாற்றுதல்** (Conversion into Stock)

கம்பெனியின் செயல்முறை விதிகள் அதிகாரம் அளிக்கு மாயின், முழுதும் செலுத்தப்பெற்ற பங்குகளைப் பங்குக் கோவை யாக மாற்றிக் கொள்ளலாம். பங்குக்கோவை என்பது சம கூறுகளாகப் பிரிக்கப்படுவதில்லை. வரிசை எண்களும், அவற்றிற்குத் தரப்படுவதில்லை. பங்குக் கோவையாக மாற்றுவதற்கு முன்னர் ஒருவர் இத்துணைப் பங்குகள் வைத்திருக்கிறார் என்று கூறுகிறோம். ஆனால், மாற்றப்பட்ட பின்னர், இவ்வளவு தொகைக்குப் பங்குக் கோவை வைத்திருக்கிறார் என்றே சொல்லவேண்டும். எடுத்துக் காட்டாக, ஒன்று ரூ. 10 மதிப்புடைய 500 பங்குகளை ஒருவர் வைத்திருக்கிறாரென்றும், அப் பங்குகள் பங்குக் கோவையாக மாற்றப்பட்டுவிட்டன என்றும் கொண்டால், இப்பொழுது அவர் ரூ. 5,000-க்குப் பங்குக்கோவை வைத்திருக்கிறார் என்றுதான் கூறவேண்டும்.

பங்குக் கோவையாக மாற்றப்பட்டவுடன், இதில் எத் தொகையையும் ஒருவர் பிறருக்கு மாற்றித் தரமுடியும். முன்னர், 100 ரூபாய்ப் பங்குகளாக இருந்தபோழ்து, ஒரு பங்கிற்கும் குறைவாக வேறு ஒருவருக்கு மாற்றித்தர முடியாது. அதாவது, பங்குக் கோவையாக மாற்றப்பட்ட பின்னர் ரூ. 50 மதிப்புள்ள பங்குக் கோவையைப் பிறருக்கு மாற்றித்தர இயலும்; ரூ. 25-க்கும் அதனை மாற்றித்தர இயலும்.

பங்குகள் பங்குக் கோவையாக மாற்றப்பட்ட ஒரு திங்களுக் குள் கம்பெனிப் பதிவாளரிடத்தில் இம் மாற்றம் பற்றிய அறி விக்கையைத் தரவேண்டும். உறுப்பினர் பதிவேடும், ஒவ்வொரு உறுப்பினரும் வைத்திருந்த பங்குகளைக் காட்டுவதற்கு மாறாக ஒவ்வொருவரும் வைத்திருக்கும் பங்குக்கோவைத் தொகையைத் காட்டும்.

பங்குமுதல் பங்குக் கோவையாக மாற்றப்படும்போழ்து, நேர்மைப் பங்குமுதல் கணக்கில் பற்றும், நேர்மைப் பங்குக் கோவைக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

கம்பெனி விரும்பின் இப் பங்குக் கோவையை மீண்டும் பங்கு களாக மாற்றிக் கொள்ளலாம். இவ்வாறு மீண்டும் மாற்றும் போழ்து முதலிலிருந்த அளவிலேயே பங்குகளின் பெயரளவு மதிப்பு இருக்க வேண்டுமென்ற நியதியில்லை.

**பங்கு முதலை அதிகப்படுத்துதல்** (Increase of Share Capital)

வெளியிடாப் பங்குகளை வெளியிடுவதன்மூலம் பங்குமுதல் தொகையை அதிகரிக்கலாம். முன்னர் விளக்கியவாறே, தற்பொழுதுள்ள நேர்மைப் பங்குநர்கட்குத் தாங்கள் வைத்திருக்கும் பங்கு விகிதத்தில் முதலில் கம்பெனி இவற்றை வெளியிடவேண்டும். ஒரு சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றுவதன் மூலமாகவோ மைய அரசின் இசைவைப் பெற்றவுடன் ஒரு சாதாரணத் தீர்மானம் நிறைவேற்றுவதன் மூலமாகவோ இவ்வாறு தற்பொழுதுள்ள நேர்மைப் பங்குநர்கட்கு முதலில் இவற்றை வெளியிடவேண்டிய தேவையில்லை.

தற்பொழுதுள்ள பங்குநருக்கு இப் புதிய பங்குகள் வழங்கப்பட்ட 15 நாள்களுக்குள், அப் பங்குநர் இவற்றை ஏற்றுக்கொள்வதா, வேண்டாமா என்று தம் விருப்புரிமையைத் (Option) தெரிவிக்கவேண்டும். இக் கால வரையறைக்குள் உறுப்பினர்கள் தங்கள் விருப்புரிமையைப் (Option) பயன்படுத்தவில்லையாயின், இயக்குநர்கள் கம்பெனியின் நலனுக்கு எது உகந்தது என்று படுகிறதோ அவ் வகையில் இப் பங்குகளை விற்கலாம்.

**பங்கு முதலைக் குறைத்தல்** (Decrease of Share Capital)

இதுவரை எடுத்துக்கொள்ளாது இருக்கும் பங்கு முதலையோ (Unsubscribed Capital) எடுத்துக் கொள்வதாக யாரும் ஒப்புக் கொள்ளாத பங்கு முதலையோ நீக்கிவிடும் அதிகாரம் கம்பெனிக்குண்டு. இதற்கெனத் தீர்மானம் நிறைவேற்றவேண்டும். ஆனால், முன்னரே வெளியிடப்பட்டிருக்கும் பங்குகளின்மீது செலுத்தப்பெறாத் தொகையினை நீதிமன்றத்தின் ஒப்புதலின்றி நீக்கமுடியாது. இதிலிருந்து வெளியிடப்படாப் பங்கு முதலைக் கம்பெனி தீர்மானம் நிறைவேற்றி நீக்கிக் கொள்ளலாமே தவிர, வெளியிடப்பட்ட அழையா முதலை (Uncalled Capital) நீக்க முடியாது என்பது தெளிவாகும்.

**தொகுப்பு** (Consolidation)

சிறு தொகைப் பெயரளவு மதிப்பிலுள்ள பங்குகளைப் பெருந்தொகைப் பங்குகளாக மாற்றுவதை இச் சொல் உணர்த்தும். ரூ. 10 பெயரளவு மதிப்புடைய பங்குகளை ரூ. 100 பெயரளவு மதிப்புடைய பங்குகளாக மாற்றுவதைத் தொகுத்தல் என்கிறோம். எடுத்துக்காட்டாக, ஒரு கம்பெனியின் பங்குமுதல் ரூ. 10 மதிப்புடைய 10,000 பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது என்று

கொண்டும், இதனை ஒன்று ரூ. 100 மதிப்புடைய 1,000 பங்குகளாகக் கம்பெனி மாற்றுகிறது என்றும் கொண்டால் செய்ய வேண்டிய பதிவு :

| | | | |
|---|---|---|---|
| பங்குமுதல் கணக்கு (ரூ. 10) | ப | 1,00,000 | |
| பங்குமுதல் கணக்கு (ரூ. 100) | | | 1,00,000 |

(ஒன்று ரூ. 10 மதிப்புடைய பங்குகளை ஒன்று ரூ. 100 மதிப்புடைய பங்குகளாகத் தொகுத்தது.)

மேற்கண்ட பதிவிலிருந்து நாம் உணர்வது, பங்குகளைத் தொகுத்தலின் காரணமாகப் பங்குமுதல் தொகை மாறுவதில்லை. ரூ. 10 மதிப்புடைய பங்குகளாக இருந்தபோழ்து கம்பெனியின் பங்குமுதல் ரூ. 1,00,000 ஆக இருந்தது. இப்பொழுது பங்கின் மதிப்பு ரூ. 100 ஆக உயர்த்தப்பட்ட பின்னரும், அதன் முதல் தொகை ரூ. 1,00,000 ஆக இருக்கிறது. ஆனுல், பங்குகளின் எண்ணிக்கைதான் குறைந்து விட்டது. மிகவும் சிறுசிறு தொகைகளாகப் பங்குகள் இருக்கும்போழ்து அவற்றைத் தொகுத்தல் வழக்கம்.

**பகுத்தல் (Sub-division)**

பெருந் தொகைப் பங்குகளைச் சிறு தொகைப் பங்குகளாக மாற்றுவதற்குப் பகுத்தல் என்று பெயர். எடுத்துக்காட்டாக, ஒன்று ரூ. 100 மதிப்புடைய 1,000 பங்குகளாக ஒரு கம்பெனியின் முதல் பிரிக்கப்பட்டிருக்கிறதென்றும், அதனை ஒன்று ரூ. 10 மதிப்புடைய பங்குகளாகக் கம்பெனி பகுக்கிறது என்றும் கொண்டால், முன்னர்ச் சொன்ன பதிவு போன்றே இப்பொழுது மாற்றிச் செய்யவேண்டும். அதாவது, ரூ. 100 மதிப்புடைய பங்குமுதல் கணக்கில் பற்றும், ரூ. 10 மதிப்புடைய பங்குமுதல் கணக்கில் வரவும் வைக்கவேண்டும். பங்குகளின் மதிப்பு மிகவும் குறைந்து இருப்பின், அவைகளில் முதலீடு செய்யப் பலர் முன் வருவர். எனவே, பங்குகளைப் பகுக்கும் முறை பின்பற்றப்படுகிறது.

ஆனுல், இவ்வாறு பகுக்கும்போழ்து ஒன்றை மறக்கக் கூடாது. அதாவது, பகுதி செலுத்தப்பெற்ற பங்குகளாக இருப்பின், அவைகளை மாற்றும்போழ்து பங்கின் மதிப்பில் எவ்வளவு சதவீதம் செலுத்தப்பெற்றிருக்கிறதோ, அதே சதவீதத்திலேயே மாற்றப்பட்ட பங்குகளின் செலுத்தப்பெற்ற தொகையும் இருக்கவேண்டும். எடுத்துக்காட்டாக, ஒன்று ரூ. 100 மதிப்புள்ள பங்கு ஒன்றுக்கு ரூ. 80 வீதம் செலுத்தப் பெற்றிருப்ப

தாகவும், இத்தகைய பங்குகள் ரூ. 10 மதிப்புடைய பங்குகளாகப் பகுக்கப்படுவதாகவும் கொண்டால், பகுக்கப்பட்ட பங்கின் பெயரளவு மதிப்பு ரூ. 10 என்றும், பங்கு ஒன்று ரூ. 8 வரை செலுத்தப் பெற்றிருப்பதாகவும் வெளியிடவேண்டும்.

இவ்வாறு, பங்குகளை மாற்றியபின் இம் மாற்றம் பற்றிய அறிக்கையைப் பதிவாளரிடத்தில் 30 நாள்களுக்குள் அனுப்பிவிட வேண்டும்.

## காப்பு முதல் அல்லது காப்புப் பொறுப்பு (Reserve Capital or Reserve Liability)

கம்பெனிச் சட்டத்தில் 99ஆவது பிரிவின்படி ஒரு கம்பெனி தனது அழைக்கப்பெறாத (uncalled) பங்குத் தொகையை இனி அழைக்கக் கோருவது இல்லையென்றும், கம்பெனியைக் கலைக்கும்போழ்துதான் இந் நோக்கத்திற்காக மட்டுமே அத் தொகை மீண்டும் அழைக்கக் கோரப்படுமென்றும், சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றலாம். அதன் பின்னர், பங்குகளின்மீது அழைக்கப்பெறாதிருக்கும் தொகை 'காப்பு முதல்' எனப்படும். எடுத்துக்காட்டாக ஒன்று ரூ. 100 மதிப்புடைய 1,000 பங்குகளாக ஒரு கம்பெனியின் பங்குமுதல் பிரிக்கப்பட்டிருக்கிறதென்றும், பங்கு ஒன்றுக்கு ரூ. 80 கோரப்பட்டுச் செலுத்தப்பட்டிருக்கிறது என்றும் கொள்வோம். இப்பொழுது ஒரு பங்கின்மீது ரூ. 20 இன்னும் செலுத்தவேண்டியுள்ளது. இத் தொகையைக் கம்பெனி கலைக்கும்போழ்துதான் அந் நோக்கத்திற்காக மட்டுமே கோரப்படும் என்று கம்பெனி சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றி விடின், ரூ. 20,000 (அழைக்கப்பெறாப் பங்குத் தொகை ரூ. 20×1,000 பங்குகள்) காப்பு முதல் எனப்படும்.

மேற்சொன்ன முறைகளில் பங்கு முதலை மாற்றியமைப்பதற்கு நீதிமன்றத்தின் இசைவு தேவையில்லை. கம்பெனியின் சிறப்புத் தீர்மானமே போதுமானது.

## முதலைக் குறைத்தல் (Capital Reduction)

முதலைக் குறைத்தலும், பங்குமுதலை மாற்றி அமைக்கும் முறையேயாகும். ஆனால், இதற்கு நீதிமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுவதால், இதனைத் தனியே ஆய்கிறோம். கம்பெனிச் சட்டத்தின் 100-லிருந்து 105ஆவது பிரிவுகள் வரை முதல் குறைப்பினைப் பற்றி விளக்குகின்றன.

(1) ஒரு கம்பெனியின் செயல்முறை விதிகள் அதிகாரம் வழங்கினால் மட்டுமே அது தனது பங்குமுதலைக் குறைக்க முடியும்.

(2) பங்குமுதலைக் குறைப்பதற்குக் கம்பெனி சிறப்புத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

(3) பங்குமுதல் குறைப்புப்பற்றிக் கம்பெனி நிறைவேற்றிய சிறப்புத் தீர்மானத்திற்கு நீதிமன்றம் தனது ஒப்புதல் அளித்து உறுதிப்படுத்த வேண்டும்.

(4) முதல் என்னும் சொல் வெளியிட்ட பெயரளவுப் பங்கு முதலையோ வெளியிடப்படாதிருக்கும் பெயரளவுப் பங்கு முதலையோ குறிக்கும். வெளியிடப்பட்டிருப்பின், முழுதும் செலுத்தப் பெற்றிருப்பினும், செலுத்தப் பெறாதிருப்பினும் இச் சொல் குறிக்கும். 'பங்கு' எனும் சொல் பங்குக் கோவையையும் உள்ளடக்கும். எனவே, ஒரு கம்பெனி தனது பங்குக் கோவையையும் குறைத்துக் கொள்ளலாம்.

கீழ்க்கண்ட வகைகளில் பங்குமுதல் குறைப்பு அமையலாம்.

(அ) அழைக்கப்பெறாப் பொறுப்பினைக் குறைத்தல் அல்லது முற்றிலும் நீக்குதல்.

(ஆ) சொத்துகளின் மதிப்புக் குறைந்துவிட்ட காரணத்தால், செலுத்தப்பட்ட பங்குமுதலைக் கம்பெனி இழந்திருப்பின், அதனை நீக்குதல்.

(இ) கம்பெனியின் தேவைக்கும் அதிகமாகவுள்ள பங்கு முதலைத் (முன்னரே செலுத்தப்பட்டிருக்கும் தொகையைத்) திருப்பிச் செலுத்துதல்.

(ஈ) நீதிமன்றம் ஒப்புதலளிக்கும் வேறு எம் முறையிலும் குறைத்தல்.

**முதல் குறைப்பில் பின்பற்றவேண்டிய முறை**

செலுத்தப்பெற்ற பங்குமுதல் மீதுள்ள பொறுப்பினைக் குறைக்காத வகையில் பங்குமுதல் குறைப்பு இருக்குமாயின் அல்லது செலுத்தப்பெறாப் பங்குமுதலின் ஒரு பகுதியைப் பங்குதாரருக்குத் திருப்பித் தரவில்லையாயினும், நீதிமன்றம் கடனீந்தோரைக் கலக்காமலேயே முதல் குறைப்புத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கும். ஆனால், பொதுவாக இதனால் பாதிக்கப்படும்

கடனீந்தோரை நீதிமன்றம் கலந்து ஆயும். பங்கின் மீதுள்ள உறுப்பினர்களின் பொறுப்புக்குறைக்கப்படுவதாலும், செலுத்தப்பெற்ற பங்குமுதலின் ஒரு பகுதி திருப்பித் தரப்படுவதாலும், கடனீந்தோரின் ஈடு குறைந்துவிடுகிறது. எனவே, அவர்களின் நலனைக் காக்கும் நோக்குடன் கடனீந்தோரையும் கலந்தாய்வது வழக்கம். இதற்காக முதல் குறைப்புத் திட்டத்தினை எதிர்க்கும் உரிமையுள்ள கடனீந்தோர் பட்டியல் முதலில் தயாரிக்கப்படுகிறது. பின்னர், இக் கடனீந்தோர் பட்டியலில் சேர்க்கப்பெறாத கடனீந்தோர் யாரேனும் சேர்த்துக்கொள்ளுமாறு உரிமை கோரின் அதற்கான நாளையும் நீதிமன்றம் குறிப்பிடும்.

கடனீந்தோரின் இசைவைப் பல வேளைகளில் நீதிமன்றம் பெறவேண்டும். பின்னரே முதல் குறைப்புத் திட்டத்திற்கு நீதிமன்றம் இசைவை வழங்கும். ஆனால், கம்பெனி கடனீந்தோர் கோரும் முழுத் தொகையையும் ஏற்றுக் கொண்டாலும் அல்லது அதற்கென ஈடுகட்டினும் கடனீந்தோரின் இசைவு பெறத் தேவையில்லை. இவ்வாறு, கடனீந்தோரின் இசைவு பெற்ற பிறகு அல்லது அவர்களின் கணக்குகளைத் தீர்த்தபிறகு அல்லது முதல் குறைப்புத் திட்டத்திற்கு மறுப்புத் தெரிவிக்கும் கடனீந்தோரின் குறைகளுக்குக் கம்பெனி ஈடுகொடுத்த பிறகு, நீதிமன்றம் விரும்பும் வகையில் நிபந்தனைகளை விதித்து முதல் குறைப்பை உறுதி செய்யும்.

குறிப்பிட்ட காலம்வரை கம்பெனி தனது பெயருடன் 'குறைக்கப்பட்டது' ('And Reduced') எனும் சொற்களைச் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று நீதிமன்றம் ஆணையிடலாம். முதல் குறைப்பதற்கான காரணங்களை விளக்கிக் கம்பெனி வெளியிடவேண்டுமென்றும் நீதிமன்றம் கோரலாம்.

நீதிமன்றத்தின் ஆணையைக் கம்பெனிப் பதிவாளரிடத்தில் தாக்கல் செய்யவேண்டும். கம்பெனிப் பதிவாளர், நீதிமன்றத்தின் ஆணையைப் பதிந்ததற்கான சான்றளிக்கவேண்டும். இச் சான்றிதழ் கம்பெனிச் சட்டத்தின் முறைகளைப் பின்பற்றிப் பங்குமுதல் குறைக்கப்பட்டுவிட்டது என்பதை உணர்த்தும் இறுதி அறிக்கையாகும். இதன்மூலம் அமைப்புச் சான்றிதழ் மாற்றப்படுகிறது. இவ்வாறு பங்குமுதலை மாற்றிய பிறகு அல்லது குறைத்த பிறகு வெளியிடும் அமைப்பு முறை ஏடும், செயல்முறை விதிகளும் தக்கவாறு திருத்தப்பெற்றவையாக இருக்கவேண்டும்.

### பங்குநர்களின் உரிமையை மாற்றல்

ஒரு கம்பெனியின் பங்குமுதல் பலவகைப் பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்குமாயின், பலவகைப் பங்குகளுக்குமுரிய உரிமை

களை மாற்றுவதற்கான விதிகள் கம்பெனியின் அமைப்பு முறையேட்டிலோ செயல்முறை விதிகளிலோ இருக்கும். இவ்வாறு உரிமை மாற்றப்படும் பங்குகளில் குறைந்தது $\frac{3}{4}$ பங்கினரின் இசைவையாவது பெற்ருகவேண்டும். இவ்வாறு பாதிக்கப்படும் வகையைச் சேர்ந்த பங்குநர்களின் தனிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியோ எழுத்துமூலமாகவோ அவர்களின் இசைவைப் பெறவேண்டும்.

உரிமைகள் மாற்றப்பட்ட பங்கு வகையைச் சார்ந்த, வெளியிட்ட பங்குகளில் 10 சதவீதத்திற்கும் குறையாத பங்குகளை வைத்திருப்போர், இவ்வுரிமை மாற்றத்தை ரத்து செய்யுமாறு நீதிமன்றத்தைக் கோரலாம். உரிமை மாற்றம் பற்றிய தீர்மானத்தை நிறைவேற்றிய அல்லது அவ்வகைப் பங்குதாரர்களின் இசைவைப் பெற்ற 21 நாள்களுக்குள் இவர்கள் நீதிமன்றத்தை அணுகவேண்டும். இவ்வுரிமை மாற்றம் பற்றி நீதிமன்றம் ஆய்ந்து தனது தீர்ப்பை வழங்கும். நீதிமன்றத்தின் ஆணை கிடைத்த 15 நாள்களுக்குள் இம் மாற்றம் பற்றிய அறிக்கையைக் கம்பெனிப் பதிவாளரிடத்தில் தாக்கல் செய்யவேண்டும்.

## முதல் குறைப்புப் பற்றிய நடவடிக்கைகளைக் கணக்கேடுகளில் பதிதல்

### (1) அழைக்கப்பெருப் பங்குமுதல் மீதான பொறுப்பைக் குறைத்தல் அல்லது நீக்குதல்

முன்னர் விளக்கியவாறே பங்குமுதலில் அழைக்கப்பெருத் தொகையைக் குறைக்கும்போழ்து அல்லது நீக்கும்போழ்து, முன்னரே செலுத்தப்பெற்ற தொகை பாதிக்கப்படுவதில்லை. இம் முறையின்மூலம் பகுதி செலுத்தப்பெற்ற பங்குகள் முழுதும் செலுத்தப்பெற்றவையாக மாறுகின்றன. இனிப் பங்கின் மீது பங்குதாரர்கள் தொகை ஏதும் செலுத்தவேண்டுவதில்லை. இதனைப் பதிய :

(பகுதி செலுத்தப்பெற்ற) பங்குமுதல் கணக்கில் பற்றும்.

(முழுதும் செலுத்தப்பெற்ற) பங்குமுதல் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

### எடுத்துக்காட்டு 104

ஒரு கம்பெனியின் பங்குமுதல் ரூ. 10,00,000. இது ஒன்று ரூ. 100 வீதம் 10,000 நேர்மைப் பங்குகளாகப் (Equity shares)

பிரிக்கப்பட்டிருக்கிறது. பங்கு ஒன்றுக்கு ரூ. 80 செலுத்தப் பெற்றிருக்கிறது. கம்பெனிச் சட்டத்தின் விதிமுறைகள் அனைத்தும் பின்பற்றப்பட்ட பின்னர், தன் பங்குகள்மீது அழைக்கப் பெறும் பொறுப்பினை நீக்கவிரும்புகிறது. குறிப்பேட்டுப் பதிவைத் தருக.

விடை :

## குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே. ப. எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| | பங்குமுதல் கணக்கு (ரூ. 100) ப | | 8,00,000 | |
| | பங்குமுதல் கணக்கு (ரூ. 80) | | | 8,00,000 |
| | (ஒன்று ரூ. 100 பெயரளவு மதிப்புடைய ரூ. 80 வரை செலுத்தப்பெற்ற பங்குகளை ரூ. 80 பெயரளவு மதிப்புடைய முழுதும் செலுத்தப் பெற்ற பங்குகளாக மாற்றுதல்.) | | | |

### (2) அதிகமாகச் செலுத்தப்பெற்ற பங்குமுதலைத் திருப்பித் தருவது வாயிலாகப் பங்குமுதலைக் குறைத்தல்

வியாபாரம் குறைந்து, பல துறைகள் மூடப்படுவதாலும் அல்லது வேறு காரணங்களினாலும் தேவையான முதல் தொகைக்கு மேலாகக் கம்பெனி முதல் தொகையைப் பெற்றிருக்கலாம். இந் நிலையில் அது கூடுதலாக இருக்கும் முதலைத் தனது உறுப்பினர்களுக்குத் திருப்பிக் கொடுப்பதன்மூலமாக தனது பங்குமுதல் தொகையைக் குறைத்துக்கொள்ள முடிவு செய்யலாம். இவ்வாறு செலுத்தப்பெற்ற பங்குமுதல் தொகை திருப்பித் தருகின்ற காரணத்தினால், கடனீந்தோரின் நலம் பாதிக்கப்படுகிறது. அவர்களின் ஒப்புதலைப் பெற்று நீதிமன்றம் தனது இசைவை வழங்குமென்று கூறியிருக்கிறோம். இந் நடவடிக்கையைப் பதிய :

(பழைய பங்குமுதல் தொகையளவிற்குப்) பங்குமுதல் கணக்கில் பற்றும்,

(இப்பொழுது இருக்கவேண்டிய தொகையளவிற்குப்) பங்கு முதல் கணக்கில் வரவும்,

(திருப்பித் தரவேண்டிய தொகையளவிற்குப்) பங்குநர் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

பின்னர் இத் தொகையை உறுப்பினர்களுக்குத் தரும் போழ்து :

பங்குநர் கணக்கில் பற்றும்,

வங்கிக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

### எடுத்துக்காட்டு 105

ஒரு கம்பெனியின் பங்குமுதல் ஒன்று ரூ. 10 மதிப்புடைய 10,000 பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. முழுத் தொகையும் செலுத்தப்பெற்றிருக்கிறது. பங்கு ஒன்றுக்கு ரூ. 2 வீதம் திருப்பித் தந்து ரூ. 8 பெயரளவு மதிப்பையுடைய முழுதும் செலுத்தப் பெற்ற பங்குகளாக மாற்றக் கம்பெனி முடிவு செய்கிறது. குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

**குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பே. ப. எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| | பங்குமுதல் (ரூ. 10) ப | | 1,00,000 | |
| | பங்குமுதல் (ரூ. 8) | | | 80,000 |
| | பங்குநர்கள் | | | 20,000 |
| | (ரூ. 10 பெயரளவு மதிப்புடைய முழுதும் செலுத்தப் பெற்ற பங்குகளைப் பங்கு ஒன்றுக்கு ரூ. 2 வீதம் பங்குநர்கட்குத் திருப்பித் தர வேண்டியது.) | | | |
| | பங்குநர்கள் ப | | 20,000 | |
| | வங்கிக் கணக்கு | | | 20,000 |
| | (மிகுதித் தொகையைத் திருப்பித் தந்தது.) | | | |

### (3) செலுத்தப்பெற்ற பங்குமுதலைக் குறைத்தல்

திறமையற்ற நிர்வாகத்தின் காரணமாகவோ, சரிவர முதலீடு செய்யாக் காரணத்தினுலோ, வேறு காரணங்களினுலோ ஒரு கம்பெனியில் ஒவ்வோராண்டும் நட்டம் ஏற்பட்டு வந்தால், இலாப-நட்டக் கணக்கின் பற்றுப் பகுதி இருப்புநிலைக் குறிப்பில் சொத்துகள் பகுதியில் காண்பிக்கப்படும். பங்கு அல்லது கடனீட்டுப்பத்திரத் தள்ளுபடிக் கணக்கு, தொடக்கச் செலவுகள் போன்றவை நீக்கப்பெறுமல் இருப்புநிலைக் குறிப்பிலேயே காட்டப்பட்டுவரும். அத்தகைய கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்பில் காணப்படும் வாணிக நற்பெயருக்கு ஏட்டிலுள்ள அளவு மதிப்பு இருப்பதில்லை. கம்பெனிக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கும் நட்டத்தை மூடி மறைக்கவே அக் கணக்குப் பயன்படுகிறது. தொடர்ந்து ஏற்பட்டுவரும் நட்டத்தை வெளி உலகு உணரா வண்ணம் கம்பெனியின் இயக்குநர்கள் போதிய தேய்மானத்தை நீக்குவதுமில்லை. எனவே, இக் கம்பெனிகளின் சொத்துகளின் ஏட்டு மதிப்பு உண்மை மதிப்பினும் மிகவும் கூடுதலாக இருக்கும். சுருக்கமாகச் சொன்னுல், அக் கம்பெனியின் பங்கு முதலுக்குத் தேவையான சொத்துகள் இருப்பதில்லை. இவ்வாறு தேய்ந்து விட்ட பங்குமுதலைத் திருத்தி அமைக்கவே முதல் குறைப்புத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பங்குமுதலைக் குறைத்து, நட்டங்களை நீக்கவும், சொத்துகளை உண்மை மதிப்பில் காட்டவும் இத் திட்டத்தால் வழி ஏற்படுகிறது.

பங்குமுதலைக் குறைக்கும்போழ்து,
பங்குமுதல் கணக்கில் பற்றும்,
முதல் குறைப்புக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

இவ்வாறு குறைக்கப்படும் தொகையை முதல் குறைப்புக் கணக்கு (Capital Reduction Account) எனும் புதிய கணக்கிற்கு எடுத்துச் செல்கிறேம். பின்னர், நட்டக் கணக்குகளை நீக்கவும், சொத்துகளின் மதிப்பினைக் குறைக்கவும், இதனைப் பயன்படுத்துகிறேம். எடுத்துக்காட்டாக, ஒன்று ரூ. 100 மதிப்புடைய 2,000 பங்குகளாக ஒரு கம்பெனியின் பங்குமுதல் பிரிக்கப்பட்டிருக்கிறது என்றும், முழுதும் செலுத்தப்பெற்ற அப் பங்குகள் ஒன்று ரூ. 60 மதிப்புடைய பங்குகளாகக் குறைக்கப்படுகிறது என்றும் கொண்டால், செய்யவேண்டிய பதிவுகள் :

| | | | |
|---|---|---|---|
| பங்குமுதல் கணக்கு | ப | 80,000 | |
| முதல் குறைப்புக் கணக்கு (பங்கு ஒன்றுக்கு ரூ. 40 வீதம் குறைக்கப்பட்டது.) | | | 80,000 |

பங்குமுதல் குறைக்கப்பட்டது மூலமாகப் பங்கினுடைய தன்மையே மாறுமாயின், பழைய பங்குமுதல் கணக்கை முற்றிலும் முடித்துவிட்டுப் புதிய பங்குமுதல் கணக்கைப் புதிய தொகைக்குத் தொடங்கவேண்டும். அதாவது :

(முழுத் தொகைக்கும்) பழைய பங்குமுதல் கணக்கில் பற்றும்,

(தற்பொழுதுள்ள தொகைக்குப்) புதிய பங்குமுதல் கணக்கில் வரவும்,

(குறைக்கப்பட்ட தொகைக்கு) முதல் குறைப்புக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

**எடுத்துக்காட்டு 106**

ஒரு கம்பெனியின் பங்குமுதல் ஒன்று ரூ. 100 மதிப்புடைய 1,000— 6 சதவீதம் முன்னுரிமைப் பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. பங்குகள் முழுதும் செலுத்தப்பெற்றவை. இவற்றை ரூ. 70 மதிப்புடைய முழுதும் செலுத்தப்பெற்ற 7 சதவீதம் முன்னுரிமைப் பங்குகளாகக் கம்பெனி மாற்ற முடிவு செய்கிறது. குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

**விடை :**

**குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பே. ப. எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| | 6 சதவீதம் முன்னுரிமைப் பங்குமுதல் கணக்கு ப | | ரூ. 1,00,000 | ரூ. |
| | 7 சதவீதம் முன்னுரிமைப் பங்குமுதல் கணக்கு | | | 70,000 |
| | பங்குமுதல் குறைப்புக் கணக்கு | | | 30,000 |
| | (ரூ. 100 பெயரளவு மதிப்புடைய, முழுதும் செலுத்தப்பெற்ற 6 சதவீதம் முன்னுரிமைப் பங்குகளை ரூ. 70 பெயரளவு மதிப்புடைய முழுதும் செலுத்தப்பெற்ற 7 சதவீதம் முன்னுரிமைப் பங்குகளாக மாற்றுதல்.) | | | |

முதல் குறைப்புக் கணக்கு, நட்டக் கணக்கு, பெயரளவுச் சொத்துக் கணக்குகள் (Fictitious Assets) போன்றவற்றை நீக்கப் பயன்படுத்தப்படுகிறது என்று கூறியிருக்கிறோம். அதற்குத் தேவையான பதிவு கீழ்க்கண்டவாறு இருக்கும்.

**குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பே. ப. எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| | முதல் குறைப்புக் கணக்கு ப | | | |
| | இலாப-நட்டக் கணக்கு | | | |
| | பங்கு அல்லது கடனீட்டுப் பத்திரத் தள்ளுபடிக்கணக்கு | | | |
| | தொடக்கச் செலவுகள் | | | |
| | வாணிக நற்பெயர் | | | |
| | குறிப்பிட்ட சொத்துகள் (மதிப்புக் குறைக்கவேண்டிய சொத்துகள்.) | | | |

இவ்வாறு முதல் குறைப்புக் கணக்குப் பயன்படுத்தப்பட்ட பிறகும், அதில் இருப்புக் காணப்படுமாயின், அதனை முதல் காப்புக் கணக்கிற்கு மாற்றவேண்டும். இதற்கு,

முதல் குறைப்புக் கணக்கில் பற்றும்,
முதல் காப்புக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

சில வேளைகளில் கடனீந்தோரும், கடனீட்டுப் பத்திரதாரர்களும்கூட தங்களுக்குச் சேரவேண்டிய தொகையில் ஒரு பகுதியைக் குறைத்துக்கொள்ள உடன்படலாம். குறைக்கப்படும் தொகையை முதல் குறைப்புக் கணக்கிற்கு எடுத்துச் செல்லவேண்டும். அதாவது:

கடனீந்தோர் கணக்கில் பற்றும்,
கடனீட்டுப் பத்திரதாரர்கள் கணக்கில் பற்றும்,
முதல் குறைப்புக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

இவ்வாறு பங்குநர்கள் மட்டுமல்லாமல், பிறரும் தங்களுக்குச் சேரவேண்டிய தொகையைக் குறைத்துக்கொள்ளும்போழ்து, முதல் குறைப்புக் கணக்கு 'சீரமைப்புக் கணக்கு' (Reorganisation Account) அல்லது 'மறு அமைப்புக் கணக்கு' (Reconstruction Account) என்று கூறப்படுகிறது.

**எடுத்துக்காட்டு 107**

முசிறி கம்பெனி லிமிடெட்டின் இருப்புநிலைக் குறிப்பு 1974 மார்ச் 31-ல் கீழ்க்கண்டவாறு இருந்தது :

**இருப்புநிலைக் குறிப்பு**

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| **பங்குமுதல் :** | | வாணிக நற்பெயர் | 25,000 |
| அதிகாரம் பெற்றது : | | பொறிவகை | 75,000 |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 2,000 6 சதவீதம் முன்னுரிமைப் பங்குகள் | 2,00,000 | மனைத்துணைப் பொருள் | 5,000 |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 2,000 நேர்மைப் பங்குகள் | 2,00,000 | சரக்கிருப்பு | 50,000 |
| | 4,00,000 | கடனாளிகள் | 40,500 |
| வெளியிட்டதும், செலுத்தப்பெற்றதும்: | | தொடக்கச் செலவுகள் | 4,500 |
| ஒன்று ரூ. 100 வீதம் 6 சதவீதம் முன்னுரிமைப் பங்குகள் முழுதும் செலுத்தப் பெற்றவை | 1,00,000 | இலாப-நட்டக் கணக்கு | 40,000 |
| ஒன்று ரூ. 100 வீதம் நேர்மைப் பங்குகள் முழுதும் செலுத்தப் பெற்றவை | 1,00,000 | | |
| அமைப்பிற்குமுன் இலாபம் | 5,000 | | |
| கடனீந்தோர் | 25,000 | | |
| வங்கிக் கடன் | 10,000 | | |
| | 2,40,000 | | 2,40,000 |

கடந்த சில ஆண்டுகளாகக் கம்பெனியில் நட்டம் ஏற்பட்டு வரவே, இச் சீரழிவு நிலையைச் செம்மைப்படுத்தும் நோக்குடன் கீழ்க்கண்ட முதல் குறைப்புத் திட்டம் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அ. முன்னுரிமைப் பங்குகள் ஒவ்வொன்றும் ரூ. 80-ற்குக் குறைக்கப்பட்டது.

ஆ. நேர்மைப் பங்குகள் ஒவ்வொன்றும் ரூ. 25-ற்குக் குறைக்கப்பட்டது.

இ. முன்னர் வைத்திருந்த இரு நேர்மைப் பங்குகட்கு ஒன்று வீதம் புதிய நேர்மைப் பங்குகளை எடுத்துக்கொண்டு உடனடியாகத் தொகை செலுத்தவேண்டியது.

இத்திட்டத்தின் காரணமாகக் கிடைக்கும் தொகையைக் கொண்டு,

அ. வங்கிக் கடனை அடைக்கவேண்டியது;

ஆ. வாணிக நற்பெயரையும், பிற பெயரளவுச் சொத்துகளையும் நீக்கவேண்டியது;

இ. பொறிவகையை ரூ. 60,000-ற்குக் குறைக்கவும், சரக்கிருப்பின் மதிப்பில் 10 சதவீதம் நீக்கவும், ரூ. 500-ற்கு ஐயக் கடன் ஏற்படுத்தவும் வேண்டியது.

வேண்டிய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தந்து, இத் திட்டம் செயல்படுத்தப்பட்டவுடன் கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்க.

**விடை :**

## குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே. ப. எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| | 6 சதவீதம் முன்னுரிமைப் பங்குமுதல் கணக்கு ப | | 20,000 | |
| | நேர்மைப் பங்குமுதல் கணக்கு ப | | 75,000 | |
| | முதல் குறைப்புக் கணக்கு | | | 95,000 |
| | (....நாளில் நிறைவேற்றப் பட்ட சிறப்புத் தீர்மானத் தின்படியும், ....நாளில் ஒப்புக் கொள்ளப்பட்டு உறுதி செய்யப்பட்ட நீதி மன்றத்தின் ஆணையின்படி யும், பங்கு ஒன்றுக்கு ரூ. 20 வீதம் 1,000—6 சதவீதம் முன்னுரிமைப் பங்குகளும், பங்கு ஒன்றுக்கு ரூ. 75 வீதம் 1,000 நேர்மைப் பங்குகளும் குறைக்கப்பட்டன.) | | | |
| | கூட்டுருவாக்கத்திற்கு முந்தை இலாபம் ப | | 5,000 | |
| | முதல் குறைப்புக் கணக்கு | | | 5,000 |
| | (முதல் குறைப்புத் திட்டத் தின்படி அமைப்பிற்கு முன் ஏற்பட்ட இலாபத்தை முதல் குறைப்புக் கணக் கிற்கு மாற்ற.) | | | |
| | வங்கிக் கணக்கு ப | | 12,500 | |
| | நேர்மைப் பங்குமுதல் கணக்கு | | | 12,500 |
| | (முதல் குறைப்புத் திட்டத் தின்படி, ஒன்று ரூ. 25 மதிப் புடைய 500 புதிய பங்கு களை நேர்மைப் பங்குநர்கள் எடுத்துக்கொண்டு தொகை செலுத்தியது.) | | | |

## குறிப்பேட்டுப் பதிவுகள்—(தொடர்ச்சி)

| நாள் | விவரம் | பே. ப. எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| | வங்கிக் கடன் ப | | 10,000 | |
| | வங்கி | | | 10,000 |
| | (வங்கிக்கடனை அடைத்தது.) | | | |
| | முதல் குறைப்புக் கணக்கு ப | | 1,00,000 | |
| | வாணிக நற்பெயர் | | | 25,000 |
| | தொடக்கச் செலவுகள் | | | 4,500 |
| | இலாப-நட்டக் கணக்கு | | | 40,000 |
| | பொறிவகை | | | 15,000 |
| | சரக்கிருப்பு | | | 5,000 |
| | ஐயக்கடன் ஒதுக்கு | | | 500 |
| | முதல் காப்புக் கணக்கு | | | 10,000 |
| | (முதல் குறைப்புத் தொகையைக் கொண்டு பெயரளவுச் சொத்துகளை நீக்கவும், சிறப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டவாறு பலவகைச் சொத்துகளின் மதிப்புகளைக் குறைக்கவும், மீதித் தொகையை முதல் காப்புக் கணக்கிற்கு மாற்றவும் பயன்படுத்தியது.) | | | |

## முசிறி லிமிடெட்டின்
## 1974 மார்ச் 31-ற்குரிய இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | | ரூ. |
|---|---|---|---|---|
| **பங்கு முதல்:** | | **நிலைச் சொத்துகள் :** | | |
| அதிகாரம் பெற்றது : | | | | |
| ஒன்று ரூ. 80 மதிப்புடைய 2,000-6 சதவீதம் முன்னுரிமைப் பங்குகள் | 1,60,000 | பொறிவகை | | 60,000 |
| ஒன்று ரூ. 25 மதிப்புடைய 2,000 நேர்மைப் பங்குகள் | 50,000 | மனைத்துணைப் பொருள் | | 5,000 |
| | 2,10,000 | **நடப்புச் சொத்துகள்:** | | |
| வெளியிடப்பட்ட முதலும், ஒப்புக்கொண்ட முதலும் : | | சரக்கிருப்பு | | 45,000 |
| | | கடனாளிகள் | 40,500 | |
| | | **கழி :** ஐயக்கடன் ஒதுக்கு | 500 | 40,000 |
| ஒன்று ரூ. 80 மதிப்புடைய 1,000-6 சதவீதம் முன்னுரிமைப் பங்குகள், முழுதும் செலுத்தப் பெற்றவை | 80,000 | வங்கி | | 2,500 |
| ஒன்று ரூ. 25 மதிப்புடைய 1,500 நேர்மைப் பங்குகள் முழுதும் செலுத்தப் பெற்றவை | 37,500 | | | |
| **காப்பும் மிகுதியும்:** | | | | |
| முதல் காப்புக் கணக்கு | 10,000 | | | |
| **நடப்புப் பொறுப்புகளும், ஒதுக்குகளும்:** | | | | |
| கடனீந்தோர் | 25,000 | | | |
| | 1,52,500 | | | 1,52,500 |

**எடுத்துக்காட்டு 108**

சொத்துகள் அனைத்தின்மீதும் பொருட்பிணையுடைய (Charge) கடனீட்டுப் பத்திரதாரர்களின் சொத்தாட்சி அதிகாரி (Receiver) கடனீந்தோருக்காக 1966 திசம்பர் 31-ல் *ABC* கம்பெனி லிமிடெட்டிற்குக் கீழ்க்கண்ட அறிக்கைகளைத் தயாரித்து அளித்தார்.

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| **பெயரளவு மதிப்பு:** | | பெறுநர் (Receiver) கையிலுள்ள ரொக்கம் .. | 80,00,000 |
| ஒன்று ரூ. 50 மதிப்புடைய, 1,50,000 பங்குகள் .. | 75,00,000 | | |
| **வெளியீட்டு முதலும், ஒப்புக்கொண்ட முதலும்:** | | சொத்து, பொறிவகை முதலியவை (அடக்கவிலையில் ரூ. 80,00,000) .. | 40,00,000 |
| ஒன்று ரூ. 50 மதிப்புடைய 1,00,000 பங்குகள் .. | 50,00,000 | | 1,20,00,000 |
| அழைக்கப்பெற்ற முதலும், செலுத்தப்பெற்ற முதலும் | | **அழையா முதல்:** | |
| ஒன்று ரூ. 50 மதிப்புடைய 1,00,000 பங்குகள், பங்கு ஒன்றுக்கு ரூ. 25 வீதம் அழைக்கப்பட்டது .. | — | ஒன்று ரூ. 25 மதிப்புடைய 1,00,000 பங்குகள் .. | 25,00,000 |
| முதலாவது கடனீட்டுப் பத்திரங்கள் .. | 40,00,000 | பற்றுக் குறை (deficiency) .. | 65,00,000 |
| இரண்டாவது கடனீட்டுப் பத்திரங்கள் .. | 80,00,000 | | |
| பிணையில்லாக் கடனீந்தோர் .. | 90,00,000 | | |
| | 2,10,00,000 | | 2,10,00,000 |

முதலாவது கடனீட்டுப் பத்திரங்களான ரூ. 40,00,000-ஐயும், இரண்டாவது கடனீட்டுப் பத்திரங்களில் ரூ. 40,00,000-ஐயும் 'X' வைத்திருக்கிறார். பிணையமற்ற கடனீந்தோரில் ரூ. 20,00,000-ற்கு அவரும் ஒருவர்.

இரண்டாவது கடனீட்டுப் பத்திரங்களில் ரூ.40,00,000-ஐ 'Y' வைத்திருக்கிறார். பிணையில்லாக் கடனீந்தோரில் ரூ. 25,00,000-ற்கு அவரும் ஒருவர்.

கீழ்க்கண்ட மறு அமைப்புத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது :

(அ) 'X' என்பவர் கம்பெனிக்கு ரூ. 17,50,000 கடனைக் கொடுக்கவேண்டியது. கம்பெனியிடமிருந்து தனக்குச் சேர வேண்டிய எல்லாத் தொகைக்கும் பதிலாக ரூ. 90,00,000-ற்குக் கம்பெனியின் புதிய முதலாவது கடனீட்டுப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டியது (முன்னரே அவர் வைத்துள்ள கடனீட்டுப் பத்திரங்களை நீக்கிய பின்னர்).

(ஆ) தனக்குச் சேரவேண்டிய எல்லாத் தொகைக்கும் பதிலாக ரூ. 50,00,000 ரொக்கமாக 'Y' பெற்றுக்கொள்ள வேண்டியது.

(இ) 'X'-ஐயும், 'Y'-ஐயும் தவிர, மீதியுள்ள கடனீந்தோர் தங்கட்குச் சேரவேண்டிய தொகையில் ஒவ்வொரு ரூ. 45-ற்கும் ஒன்று ரூ. 5 மதிப்புடைய 3 பங்குகளை முழுதும் செலுத்தப் பெற்றதாகப் பெற்றுக் கொண்டு, ரூபாய்க்கு 50 காசுகள் பொறுப்புக் குறைந்ததாகக் கொள்ளவேண்டும்.

ஒவ்வொரு ரூபாயிலும் மீதியுள்ள 50 காசு பொறுப்பைத் தள்ளிப்போட வேண்டியது. இத் திட்டத்தை நீதிமன்றம் ஏற்றுக்கொண்ட நாளிலிருந்து ஓராண்டு இறுதியில் இத் தொகை செலுத்தப்பட வேண்டும்.

(ஈ) அழையா முதல் முழுதும் இப்பொழுது அழைக்கப்பட வேண்டும். பங்குகள் ஒவ்வொன்றும் ரூ. 5 மதிப்பில் பகுக்கப்பட வேண்டும். வைத்திருக்கும் பங்குகளில் 50 சதவீதத்தை நீக்கிவிட வேண்டும்.

பாதிக்கப்படும் அனைவராலும், நீதிமன்றத்தாலும் இத் திட்டம் ஒப்புக்கொள்ளப்படுகிறது என்று கொண்டு பின்கண்டவற்றைத் தயாரிக்கவும் :

*(1)* மறு அமைப்பிற்கு முன் கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்பு.

*(2)* மறு அமைப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான குறிப்பேட்டுப் பதிவுகள்.

*(3)* மறு அமைப்பிற்குப் பின் கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்பு.

(B. Com., Calicut, 1971)

**விடை :**

குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருமுன்னர், கணக்குகளில் கொடுக்கப்பட்ட விவரங்களைக் கொண்டு முதலில் வழக்கமான இருப்புநிலைக் குறிப்பைத் தயாரித்தால், கம்பெனியின் உண்மை நிலையை உணரும் வாய்ப்பு ஏற்படும். காரணம், மேலே கொடுக்கப்பட்ட அறிக்கையில் பங்குமுதல் தொகை கொடுக்கப்படவில்லை; அத்துடன் சொத்துகள் பகுதியில் அழையா முதல் கொடுக்கப்பட்டிருக்கிறது. பின்கண்டவாறு கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்பு இருக்கும் :

## இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| **பெயரளவு மதிப்பு:** | | சொத்துகள், பொறிவகை முதலியவை வாங்கிய விலையில் .. | 80,00,000 |
| ஒன்று ரூ. 50 மதிப்புடைய 1,50,000 பங்குகள் .. | 75,00,000 | ரொக்கம் .. | 80,00,000 |
| **வெளியீட்டு முதல்:** | | இலாப-நட்டக் கணக்கு (இருப்புக்காட்டும் தொகை) .. | 75,00,000 |
| ஒன்று ரூ. 50 மதிப்புடைய 1,00,000 பங்குகள் .. | 50,00,000 | | |
| அழைக்கப்பெற்ற முதலும், செலுத்தப்பெற்ற முதலும்: ஒன்று ரூ. 50 மதிப்புடைய 1,00,000 பங்குகள், பங்கு ஒன்றுக்கு ரூ. 25 வீதம் செலுத்தப்பட்டு இருக்கிறது .. | 25,00,000 | | |
| முதலாவது கடனீட்டுப் பத்திரங்கள் .. | 40,00,000 | | |
| இரண்டாவது கடனீட்டுப் பத்திரங்கள் .. | 80,00,000 | | |
| பிணையில்லாக் கடனீந்தோர் .. | 90,00,000 | | |
| | 2,35,00,000 | | 2,35,00,000 |

## *ABC* கோ லிமிடெட்டின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே. ப. எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| | முதலாவது கடனீட்டுப் பத்திரங்கள் ப | | 40,00,000 | |
| | இரண்டாவது கடனீட்டுப் பத்திரங்கள் ப | | 40,00,000 | |
| | பிணையில்லாக் கடனீந்தோர் ப | | 20,00,000 | |
| | 'X' | | | 1,00,00,000 |
| | (X-ற்குச் சேரவேண்டிய முழுத்தொகையும் அவர் கணக்கிற்குக் கொண்டு வந்தது.) | | | |
| | இரண்டாவது கடனீட்டுப் பத்திரங்கள் ப | | 40,00,000 | |
| | பிணையில்லாக் கடனீந்தோர் ப | | 25,00,000 | |
| | 'Y' | | | 65,00,000 |
| | (Y-ற்குச் சேர வேண்டிய மொத்தத் தொகையும் அவர் கணக்கில் கொண்டு வந்தது.) | | | |
| | வங்கிக் கணக்கு ப | | 17,50,000 | |
| | 'X' | | | 17,50,000 |
| | (. . . . நாளில் நிறைவேற்றப்பெற்ற சிறப்புத் தீர்மானத்தின்படியும், . . . . நாளிடப்பட்ட நீதிமன்றத்தின் ஆணையின்படியும், முதல் குறைப்புத் திட்டத்தின் கீழ் X செலுத்த வேண்டிய தொகை.) | | | |

## குறிப்பேட்டுப் பதிவுகள்—(தொடர்ச்சி)

| நாள் | விவரம் | பே. ப. எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| | X ப | | 1,17,50,000 | |
| | புதிய முதலாவது கடனீட்டுப் பத்திரங்கள் | | | 90,00,000 |
| | முதல் குறைப்புக் கணக்கு | | | 27,50,000 |
| | (முதல் குறைப்புத் திட்டத்தின்படி X தற்பொழுது கடனுகக் கொடுத்துள்ள ரொக்கத் தொகை உள்பட அவருக்குச் சேரவேண்டிய முழுத் தொகையும் ரூ. 90,00,000-ற்குப் புதிய முதலாவது கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட்டுத் தீர்த்தது.) | | | |
| | Y ப | | 65,00,000 | |
| | வங்கி | | | 50,00,000 |
| | முதல் குறைப்புக் கணக்கு | | | 15,00,000 |
| | (முதல் குறைப்புத் திட்டத்தின்படி Y-க்குச் சேரவேண்டிய முழுத் தொகைக்கும் 50,00,000 ரொக்கம் கொடுத்து அவருக்குக் கணக்கைத் தீர்த்தது.) | | | |

குறிப்பேட்டுப் பதிவுகள்—(தொடர்ச்சி)

| நாள் | விவரம் | பே. ப. எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| | பிணையில்லாக் கடனீந்தோர் ப | | 22,50,000 | |
| | நேர்மைப் பங்குமுதல் கணக்கு | | | 15,00,000 |
| | முதல் குறைப்புக் கணக்கு | | | 7,50,000 |
| | (ஏற்றுக் கொள்ளப் பட்ட திட்டத்தின்படி கடனீந்தோருக்குக் கீழ்க் கண்டவாறு வழங்கிய பங்குகள் ஒவ்வொரு ரூ. 45-ற்கும் அதன் பாதித் தொகையை ஒன்று ரூ. 5 வீதம் 3 பங்குகளாகக் கொடுக்கப்பட்டது. இதில் மீதியுள்ள ஒவ்வொரு ரூ. 22.50-ற்கும் முதல் குறைப்புக் கணக்கிற்கு எடுத்துச் செல்லப்படுகிறது.) | | | |
| | வங்கிக் கணக்கு ப | | 25,00,000 | |
| | நேர்மைப் பங்குமுதல் கணக்கு | | | 25,00,000 |
| | (ஏற்றுக் கொள்ளப் பட்ட திட்டத்தின்கீழ் ஒவ்வொரு பங்கிற்கும் ரூ. 25 வீதம் அழையா முதலை அழைத்தது.) | | | |
| | நேர்மைப் பங்குமுதல் கணக்கு (ரூ. 50) ப | | 50,00,000 | |
| | நேர்மைப் பங்குமுதல் கணக்கு (ரூ. 5) | | | 50,00,000 |
| | (ஒன்று ரூ. 50 மதிப்புடைய 1,00,000 | | | |

## குறிப்பேட்டுப் பதிவுகள்—(தொடர்ச்சி)

| நாள் | விவரம் | பே. ப. எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| | பங்குகளை ஒன்று ரூ. 5 மதிப்புடைய 10,00,000 பங்குகளாகப் பகுத்தது.) | | | |
| | நேர்மைப் பங்குமுதல் கணக்கு ப | | 25,00,000 | |
| | முதல் குறைப்புக் கணக்கு | | | 25,00,000 |
| | (நேர்மைப் பங்குமுதலில் 50 சதவீதத்தை நீக்கியது.) | | | |
| | முதல் குறைப்புக் கணக்கு ப | | 75,00,000 | |
| | இலாப-நட்டக் கணக்கு | | | 75,00,000 |
| | (இலாப-நட்டக் கணக்கின் பற்றிருப்பைக் குறைத்தது.) | | | |

**குறிப்பு :**

| | | ரூ. |
|---|---|---|
| பிணையில்லாக் கடனீந்தோருக்கு வழங்கிய பங்குமுதல் : | | |
| மொத்தமுள்ள பிணையில்லாக் கடனீந்தோர் | | 90,00,000 |
| **கழி :** | | |
| 'x'-ற்குச் சேர வேண்டியது | 20,00,000 | |
| 'y'-க்குச் சேரவேண்டியது | 25,00,000 | |
| | | 45,00,000 |
| பிற பிணையில்லாக் கடனீந்தோர் | | 45,00,000 |

ஒவ்வொரு ரூ. 45-ற்கான பொறுப்பும் அதில் 50 சத வீதம் அளவிற்கு இப்பொழுது பங்குகள் வழங்கித் தீர்க்கப்படு கிறது. ஒன்று ரூ. 5 மதிப்புடைய 3 பங்குகள் வழங்கப்படு கின்றன. எனவே, ஒவ்வொரு ரூ. 22.50-ற்கும் $\left(45 \times \frac{50}{100}\right)$ வெளியிடப்படும் பங்கின் மதிப்பு ரூ. 15.

அதாவது ஒவ்வொரு ரூ. 45-ற்கும் கிடைக்கும் முதல் குறைப்புத் திட்டத்தின் ஆதாயம் ரூ. 7.50 ஆகும்.

எனவே, ரூ. 45,00,000-ற்குக் கிடைக்கும் முதல் குறைப்பு

ஆதாயம் $= 45,00,000 \times \frac{7.50}{45}$

= ரூ. 7,50,000

ஒவ்வொரு ரூ. 45-ற்கும் வழங்கப்படுவது = 3 பங்குகள்

ரூ. 45,00,000-ற்கு வழங்கப்படும் பங்குகள் $= 45,00,000 \times \frac{3}{45}$

= 3,00,000 பங்குகள்

இப்பொழுது முதல் குறிப்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டவுடன், கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்பைத் தயார் செய்யலாம்.

**இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| **பங்கு முதல்:** | | சொத்துகள்; பொறிவகை | |
| ஒன்று ரூ. 5 மதிப்புடைய 8,00,000 பங்குகள், முழுதும் செலுத்தப்பெற்றவை .. | 40,00,000 | முதலியவை | 80,00,000 |
| முதலாவது கடனீட்டுப் பத்திரங்கள் .. | 90,00,000 | வங்கி | 72,50,000 |
| பிணையில்லாக் கடனீந்தோர் .. | 22,50,000 | | |
| | 1,52,50,000 | | 1,52,50,000 |

**எடுத்துக்காட்டு 109**

என்டர் பிரைசஸ் லிமிடெட்டின் 1966 மார்ச் 31-ற்கான இருப்புநிலைக் குறிப்பின் சுருக்கம் கீழ்க் கொடுக்கப்பட்டிருக்கிறது :

## இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புகள் | | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|---|
| **பங்கு முதல்:** | | | **நிலைச் சொத்துகள்:** | |
| அதிகாரம் பெற்றதும் வெளியிட்டதும், முழுதும் செலுத்தப் பெற்றதும்: | | | வில்லங்கமற்ற சொத்து .. | 8,50,000 |
| ஒன்று ரூ. 10 மதிப்புடைய 80,000—6 சதவீதம் குவிவு முன்னுரிமைப் பங்குகள் | 8,00,000.. | | பொறிவகை .. | 1,00,000 |
| | | | புனைபொருள் உரிமை .. | 75,000 |
| ஒன்று ரூ 10 மதிப்புடைய 1,50,000 நேர்மைப் பங்குகள் | 15,00,000.. | | வாணிக நற்பெயர் .. | 2,60,000 |
| | | 23,00,000 | வாணிக முதலீடுகள் வாங்கிய விலையில் .. | 1,10,000 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **பிணைக் கடன்:** | | | | **நடப்புச் சொத்துக்கள்:** | | | |
| 6 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் (வில்லங்க மற்ற சொத்து ஈட்டின் பேரில்) | .. | 7,50,000 | | கடனாளிகள் | .. | 9,70,000 | |
| கூடியுள்ள வட்டி | .. | 45,000 | 7,95,000 | சரக்கிருப்பு | .. | 8,50,000 | |
| **பிணையில்லாக் கடன்:** | | | | விளம்பரம் | .. | 2,00,000 | 20,20,000 |
| இயக்குநர்கள் | .. | 2,00,000 | | இலாப-நட்டக் கணக்கு | .. | | 8,70,000 |
| வங்கி மேல்வரைப் பற்று | .. | 3,90,000 | 5,90,000 | | | | |
| **நடப்புப் பொறுப்புகள்:** | | | | | | | |
| கடனீந்தோர் | .. | | 6,00,000 | | | | |
| | | | 42,85,000 | | | | 42,85,000 |

**குறிப்புகள் .**

(1) முன்னுரிமைப் பங்குகளின் பங்காதாயம் 4 ஆண்டு கட்கு நிலுவையிலுள்ளது.

(2) முதலின செலவினங்கட்காக (Capital Commitments) ஒப்புக் கொள்ளப்பட்டது ரூ. 5,00,000.

கடனீட்டுப் பத்திரதாரர்கள் தந்த மறு அமைப்புத் திட்டத் தினை நீதிமன்றமும், இதனல் பாதிக்கப்படுவோரும் ஏற்றுக் கொள்கின்றனர். இதன்படி :

(1) முன்னுரிமைப் பங்குகள் ஒவ்வொன்றும் ரூ. 7.50-ற்குக் குறைக்கப்படவேண்டும். நேர்மைப் பங்குகள் ஒவ்வொன்றும் ரூ. 2-ற்குக் குறைக்கப்படவேண்டும்.

ஒவ்வொரு வகைப் பங்குகளும் பின்னர் பங்கு ஒன்று ரூ. 10 மதிப்புடைய பங்குகளாக மாற்றப்படவேண்டும்.

(2) நிலுவையிலுள்ள முன்னுரிமைப் பங்காதாயத்தில் $\frac{3}{4}$ பங்கினை விட்டுக்கொடுக்கவேண்டியது. மீதியுள்ள $\frac{1}{4}$ பங்கிற்கு நேர்மைப் பங்குகளைப் பெயரளவு மதிப்பில் வெளியிட வேண்டியது.

(3) தங்கட்குச் சேரவேண்டிய வட்டியை ரொக்கமாகப் பெற்றுக் கொள்ளவும், தங்கட்குச் சேரவேண்டிய கடனீட்டுப் பத்திரத் தொகையில் ஒரு பகுதியாக வில்லங்கமற்ற சொத்துகளில் ஒன்றை ரூ. 2,40,000 மதிப்பில் எடுத்துக்கொள்ளவும் (ஏட்டு மதிப்பு ரூ. 2,00,000) கடனீட்டுப் பத்திரதாரர்கள் உடன் படுகின்றனர். இத்துடன் ரூ. 2,60,000 ரொக்கம் கம்பெனிக்கு ஆண்டுவட்டி 8 சதவீதம் வீதம் வழங்கவும் ஒப்புக் கொள்கின் றனர். இக் கடன் கம்பெனியின் சொத்துகளைப் பொருட்பிணை யாகக் கொண்டது.

(4) புனை பொருளுரிமை, வாணிக நற்பெயர், விளம்பரம் ஆகியவை நீக்கப்பட வேண்டும்.

சரக்கிருப்பில் ரூ. 1,30,000 நீக்கப்பட வேண்டும்.

வராக் கடனுக்காக ரூ. 1,37,000 ஒதுக்கவேண்டும்.

மீதியுள்ள வில்லங்கமற்ற சொத்தை ரூ. 7,75,000-மாக மதிப்பிடவேண்டும்.

(5) வாணிக முதலீடுகளை ரூ. 2,80,000-ற்கு விற்க வேண்டும்.

(6) தங்கட்குச் சேரவேண்டிய தொகையில் 90 சதவீதம் அளவிற்கு நேர்மைப் பங்குகளைப் பெயரளவு மதிப்பில் பெற்றுக் கொள்ளவும், 5 சதவீதம் அளவிற்கு ரொக்கம் பெற்றுக் கொள்ளவும் மீதி 5 சதவீதத்தை விட்டுக் கொடுக்கவும் இயக்குநர்கள் ஒப்புக் கொள்கின்றனர்.

(7) ஒப்பந்த விலையில் 5 சதவீதத்தைத் தண்டமாகச் (penalty) செலுத்தி முதலின செலவினங்கட்கான ஒப்பந்தத்தை நீக்கிவிட வேண்டும்.

மேற்கண்ட ஏற்பாட்டைச் செயல்படுத்தத் தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தந்து, இது முடிந்த பின்னர் என்டர் பிரைசர்ஸ் லிமிட்டெடின் இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்க. (A. I. C. W. A. July, 1967)

**விடை :**

**குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பே. ப. எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| | நேர்மைப் பங்குமுதல் க/கு (ரூ. 10) ப | | 15,00,000 | |
| | முதல் குறைப்புக் க/கு | | | 12,00,000 |
| | (புதிய) நேர்மைப் பங்கு முதல் க/கு | | | 3,00,000 |
| | (ஏற்றுக் கொள்ளப்பட்ட முதல் குறைப்புத் திட்டத்தின்படி ஒன்று ரூ. 10 மதிப்புடைய 1,50,000 நேர்மைப் பங்குகள், ஒன்று ரூ. 2 மதிப்புடைய பங்குகளாகக் குறைக்கப்பட்டபின்னர் ஒன்று ரூ. 10 மதிப்புடைய 30,000 நேர்மைப் பங்குகளாகமாற்றப்படுவது.) | | | |

## குறிப்பேட்டுப் பதிவுகள்—(தொடர்ச்சி)

| நாள் | விவரம் | பே. ப. எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| | 6 சதவீதம் முன்னுரிமைப் பங்குமுதல் க/கு (ரூ. 10) ப | | 8,00,000 | |
| | முதல் குறைப்புக் க/கு | | | 2,00,000 |
| | (புதிய) 6 சதவீதம் முன்னுரிமைப் பங்குமுதல் க/கு (ரூ. 10) | | | 6,00,000 |
| | (ஒன்று ரூ. 10 மதிப்புடைய 80,000-6 சதவீதம் முன்னுரிமைப் பங்குகளை ஒன்று ரூ. 7.50 மதிப்புடைய 6 சதவீதம் முன்னுரிமைப் பங்குகளாகக் குறைத்த பின்னர், அவை ஒன்று ரூ. 10 மதிப்புடைய 60,000-6 சதவீதம் முன்னுரிமைப் பங்குகளாக மாற்றப்படுவது.) | | | |
| | முதல் குறைப்புக் க/கு ப | | 48,000 | |
| | நேர்மைப் பங்குமுதல் க/கு | | | 48,000 |
| | (முதல் குறைப்புத் திட்டத்தின்படி நிலுவையிலுள்ள முன்னுரிமைப் பங்காதாயத்தில் $\frac{1}{4}$ பங்கிற்கு நேர்மைப் பங்குகளை வழங்க.) | | | |
| | கடனீட்டுப் பத்திர வட்டிக் க/கு ப | | 45,000 | |
| | வங்கிக் க/கு | | | 45,000 |
| | (கடனீட்டுப் பத்திரங்கள் மீது கூடியுள்ள வட்டியைச் செலுத்தியது.) | | | |

## குறிப்பேட்டுப் பதிவுகள்—(தொடர்ச்சி)

| நாள் | விவரம் | பே. ப. எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| | 6 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் ப | | 2,40,000 | |
| | வில்லங்கமற்ற சொத்துக் க/கு | | | 2,40,000 |
| | (ரூ. 2,40,000 மதிப்புள்ள வில்லங்கமற்ற சொத்தைக் கடனீட்டுப் பத்திரதாரர்கட்குக் கொடுத்து அம் மதிப்பளவிற்குப் பொறுப்பினைத் தீர்த்துக் கொண்டது) | | | |
| | வில்லங்கமற்ற சொத்துக் க/கு ப | | 40,000 | |
| | முதல் குறைப்புக் க/கு | | | 40,000 |
| | (கடனீட்டுப் பத்திரதாரர்கட்குக் கொடுத்த வில்லங்கமற்ற சொத்தின் மதிப்புயர்வை முதல் குறைப்புக் கணக்கிற்கு மாற்ற : கொடுக்கப்பட்ட சொத்தின் மதிப்பு 2,40,000; அதன் ஏட்டு மதிப்பு 2,00,000; சொத்தின் மதிப்புயர்வு ரூ. 40,000.) | | | |
| | வங்கிக் க/கு ப | | 2,60,000 | |
| | 8 சதவீதம் கடன் க/கு | | | 2,60,000 |
| | (கம்பெனிகள் சொத்துகளின் மீது பொருட்பிணை ஏற்படுத்திக் கடனீட்டுப் பத்திரதாரர்களிடம் பெற்ற 8 சதவீதம் கடன்.) | | | |

## குறிப்பேட்டுப் பதிவுகள்—(தொடர்ச்சி)

| நாள் | விவரம் | பே. ப. எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| | வில்லங்கமற்ற சொத்துக் க/கு ப | | 1,25,000 | |
| | முதல் குறைப்புக் க/கு | | | 1,25,000 |
| | (மீதியுள்ள வில்லங்கமற்ற சொத்தின் மதிப்பு உயர்வை முதல் குறைப்புக் கணக்கிற்கு எடுத்துச் செல்ல.) | | | |
| | வங்கிக் க/கு ப | | 2,80,000 | |
| | முதலீடுகள் | | | 1,10,000 |
| | முதல் குறைப்புக் க/கு | | | 1,70,000 |
| | (ரூ. 1,10,000-ற்கான முதலீடுகளை ரூ. 2,80,000-ற்கு விற்றது; இதனால் கிடைத்த ஆதாயம் முதல் குறைப்புக் கணக்கிற்கு மாற்றப்படுகிறது.) | | | |
| | பிணையில்லாக் கடன் க/கு ப | | 2,00,000 | |
| | நேர்மைப் பங்குமுதல் க/கு | | | 1,80,000 |
| | வங்கிக் க/கு | | | 10,000 |
| | முதல் குறைப்புக் க/கு | | | 10,000 |
| | (இயக்குநர்கள் தங்கட்குச் சேரவேண்டிய ரூ. 2,00,000-ல் 90 சதவீதத்தை அதாவது ரூ. 1,80,000-த்தை நேர்மைப் பங்குகளாகவும், 5 சதவீதத்தை அதாவது ரூ. 10,000-த்தை ரொக்கமாகவும் பெற்றுக்கொண்டு மீதி 5 சதவீதத்தை அதாவது ரூ. 10,000-த்தை விட்டுக் கொடுக்கின்றனர். இத்தொகை முதல் குறைப்புக் கணக்கிற்கு எடுத்துச் செல்லப்படுகிறது.) | | | |

## குறிப்பேட்டுப் பதிவுகள்—(தொடர்ச்சி)

| நாள் | விவரம் | பே. ப. எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| | முதல் குறைப்புக் க/கு ப | | 25,000 | |
| | வங்கி க/கு | | | 25,000 |
| | [ரூ. 5,00,000-ற்கு முதலீட்டுச் செலவினங்களை நீக்குவதற்காகக் கொடுத்த தண்டம் (Penalty)] ரூ. $5,00,000 \times \frac{5}{100}$ | | | |
| | முதல் குறைப்புக் க/கு ப | | 16,72,000 | |
| | இலாப-நட்டக் க/கு | | | 8,70,000 |
| | புனை பொருளுரிமை | | | 75,000 |
| | வாணிக நற்பெயர் | | | 2,60,000 |
| | விளம்பரம் | | | 2,00,000 |
| | சரக்கிருப்பு | | | 1,30,000 |
| | வராக் கடன் ஒதுக்கு | | | 1,37,000 |
| | (முதல் குறைப்புத் திட்டத்தில் கிடைத்த தொகையினைப் புலனாகாச் சொத்துகளை நீக்கவும், சரக்கிருப்பின் மதிப்பைக் குறைக்கவும் வராக் கடனுக்கு ஒதுக்கு ஏற்படுத்தவும் பயன்படுத்திக் கொண்டது.) | | | |

**விளக்கக் குறிப்பு :**

**(1) நேர்மைப் பங்கு முதல்**

ஒன்று ரூ. 10 மதிப்புடைய 1,50,000 நேர்மைப் பங்குகள் ஒன்று ரூ. 2 மதிப்புடைய அதே எண்ணிக்கையுள்ள நேர்மைப் பங்குகளாகக் குறைக்கப்பட்டிருக்கின்றன. மீண்டும் இப் பங்குகள் ரூ. 10 மதிப்புடைய பங்குகளாக மாற்றப்பட வேண்டுமென்று கணக்கில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு நேர்மைப் பங்குகளின் எண்ணிக்கையை $\frac{1}{5}$-ஆல் குறைத்துவிட்டால் போதும்.

காரணம், பங்கின் மதிப்பு குறைக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுதுள்ள நேர்மைப் பங்குமுதல் :

$$= 1,50,000 \times \text{ரூ. } 2$$
$$= \text{ரூ. } 3,00,000$$

இப்பொழுது ரூ. 2 மதிப்புடைய பங்கு ரூ. 10 மதிப்புடைய பங்காக மாற்றப்படவேண்டும்.

ரூ. 10-ற்குக் கிடைப்பது = 1 பங்கு

ரூ. 3,00,000-ற்குக் கிடைப்பது

$$= 3,00,000 \times \frac{1}{10}$$
$$= 30,000 \text{ பங்குகள்}$$

**(2) முன்னுரிமைப் பங்கு முதல்**

மேற்சொன்னவாறே இதனையும் செய்யவேண்டும்.

ரூ. 10 மதிப்புடைய 80,000 முன்னுரிமைப் பங்குகள் ஒன்று ரூ. 7.50 மதிப்புடைய 80,000 முன்னுரிமைப் பங்குகளாகக் குறைக்கப்பட்டிருக்கின்றன. அதாவது, முன்னுரிமைப் பங்கு முதல் ரூ. 8,00,000-லிருந்து ரூ. 6,00,000-ற்குக் குறைக்கப் படுகிறது. ஆனால், மீண்டும் முன்னுரிமைப் பங்கின் மதிப்பு ரூ. 7.50-லிருந்து ரூ. 10-ற்கு உயர்த்தப்பட வேண்டும். இதனால் முன்னுரிமைப் பங்குகளின் எண்ணிக்கை 80,000-லிருந்து 60,000-ற்குக் கீழ்க்கண்டவாறு குறைக்கப்படுகிறது.

ரூ. 10-ற்கு = 1 முன்னுரிமைப் பங்கு

ரூ. 6,00,000-ற்கு = $6,00,000 \times 1/10$

= 60,000 முன்னுரிமைப் பங்குகள்.

**(3) முன்னுரிமைப் பங்காதாய நிலுவை**

முன்னுரிமைப் பங்கு ரூ. 8,00,000-ற்கு 6% வீதம் பங்காதாயம் = ரூ. 48,000

$(8,00,000 \times 6/100)$

ஓராண்டிற்குத் தரவேண்டிய
முன்னுரிமைப்
பங்காதாயம் = ரூ. 48,000

4 ஆண்டு நிலுவையிலுள்ள
தால், மொத்தம் தர
வேண்டிய பங்காதாயம் = 48,000×4

= ரூ. 1,92,000

இதில் 3/4 பங்கினை முன்னுரிமைப் பங்குநர்கள் விட்டுக் கொடுக்கின்றனர். மீதியுள்ள $\frac{1}{4}$ பங்கிற்கு அவர்கட்கு முன்னுரிமைப் பங்குகளை வழங்கவேண்டும். எனவே, ஒன்று ரூ. 10 மதிப் புடைய 4,800 நேர்மைப் பங்குகளை வழங்கி இப் பொறுப்புத் தீர்க்கப்படுகிறது.

முன்னுரிமைப் பங்குநர்கள் தாம் விட்டுக் கொடுக்கும் 3/4 பங்குப் பங்காதாய நிலுவைக்குப் பதிவு எதுவும் தேவையில்லை யென்பதை மறக்கக் கூடாது.

**(4) வில்லங்கமற்ற சொத்தின் மதிப்பு**

இருப்புநிலைக் குறிப்பிலுள்ளபடி
வில்லங்கமற்ற சொத்தின்
மதிப்பு = 8,50,000

**கழி :**

கடனீட்டுப் பத்திரதாரர்கள்
எடுத்துக் கொண்டது = 2,00,000

6,50,000

தற்போது இச் சொத்தின் மதிப்பு 7,75,000 என கொடுக்கப் பட்டிருப்பதால், கம்பெனியிடம் தற்போதுள்ள வில்லங்கமற்ற சொத்தின் மதிப்பு ரூ. 1,25,000 கூடியுள்ளதாகப் பொருள். எனவே, இம் மதிப்புயர்வு ஓர் ஆதாயம்; ஆகையினால் இது முதல் குறைப்புக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

கம்பெனியின் செலுத்தப்பெற்ற பங்குமுதல் பின்கண்ட வாறிருக்கும் :

(அ) 6 சதவீதம் முன்னுரிமைப் பங்குகள் :

ஒன்று ரூ. 10 மதிப்புடைய 60,000 முன்னுரிமைப் பங்குகள்.

(ஆ) நேர்மைப் பங்குகள் :

முன்னரேயுள்ள நேர்மைப் பங்குநர்கட்கு வழங்கப் பட்டது.

= 30,000 பங்குகள்

முன்னுரிமைப் பங்குநர்கட்குப் பங்காதாயம் நிலுவையில் $\frac{1}{4}$ பங்கிற்காக வழங்கியது = 4,800 பங்குகள்

இயக்குநர்கட்குத் தங்கட்குச் சேரவேண்டிய கடன் தொகையில் 90 சதவீதம் அளவிற்கு வழங்கப்பட்டது = 18,000 பங்குகள்

மொத்தம் வெளியிடப்பட்ட நேர்மைப் பங்குகள் = 52,800 பங்குகள்

இப்பொழுது திருத்தப்பெற்ற இருப்புநிலைக் குறிப்பைத் தயார் செய்யலாம்.

## என்டர் பிரைசர்ஸ் லிமிட்டெட் (மேலும் குறைக்கப்பட்டது)

## 1966 மார்ச் 31-க்கான இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் :<br>அதிகாரம் பெற்றதும், வெளியிட்டதும் :<br>ஒன்று ரூ. 10 மதிப் புடைய 60,000 | | நிலைச் சொத்துகள் :<br>வில்லங்கமற்ற சொத்து<br>பொறிவகை | <br><br>7,75,000<br>1,00,000 |

**இருப்புநிலைக் குறிப்புகள்—(தொடர்ச்சி)**

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| 6 சதவீதம் முன்னுரிமைப் பங்குகள், முழுதும் செலுத்தப் பெற்றவை | 6,00,000 | நடப்புச் சொத்துகள் : | |
| ஒன்று ரூ. 10 மதிப்புடைய 52,800 நேர்மைப் பங்குகள் முழுதும் செலுத்தப் பெற்றவை | 5,28,000 | கடனாளிகள் 9,70,000 | |
| பிணைக்கடன் : | | **கழி :** வராக் கடன் ஒதுக்கு 1,37,000 | 8,33,000 |
| 6 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் | 5,10,000 | சரக்கிருப்பு | 7,20,000 |
| 8 சதவீதம் கடன் | 2,60,000 | வங்கி | 4,60,000 |
| பிணையில்லாக் கடன் : | | | |
| வங்கி மேல்வரைப் பற்று | 3,90,000 | | |
| நடப்புப் பொறுப்புகள் : | | | |
| கடனீந்தோர் | 6,00,000 | | |
| | 28,88,000 | | 28,88,000 |

## முதல் குறைப்புத் திட்டம் (Capital Reduction Schemes)

இதுவரை கொடுக்கப்பட்ட கணக்குகளில் முதல் குறைப்புத் திட்டம் கொடுக்கப்பட்டிருந்தது. நாம் இதைச் செயல்படுத்தும் போழ்து வேண்டிய குறிப்பேட்டுப் பதிவுகளையும் பேரேட்டுக் கணக்குகளையும் செய்தோம். சில வேளைகளில் ஒரு கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்பையும், வேண்டிய சில குறிப்புகளையும் மட்டும் கொடுத்துவிட்டு அக் கம்பெனியின் பங்குமுதலைச் சீர்திருத்தி அமைப்பதற்கான திட்டம் ஒன்றை வகுத்துக்கொடுக்க வேண்டலாம். இவ்வாறு முதல் குறைப்புத் திட்டத்தைத் தர வேண்டியிருப்பின், கீழ்க்கண்டவற்றை நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

(1) ஒரு கம்பெனி தொடர்ந்து சில ஆண்டுகளாக நட்டம் ஏற்பட்டு, அதன் காரணமாகக் குறைந்தளவு பங்காதாயத்தைக் கொடுத்து வந்தாலும், அல்லது குறிப்பிட்ட பங்காதாயத்தையும், கடனீட்டுப் பத்திர வட்டி, பிற கடனீட்டுப் பத்திரங்கள் மீதான வட்டியையும் கொடுப்பதற்குத் தேவையான இலாபம் ஈட்ட முடியாமல் போனாலும் கம்பெனியின் பங்குமுதலைத் திருத்தி யமைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக உணரவேண்டும். எனவே, கம்பெனி தற்போது ஈட்டும் இலாப நிலையை அடிப்படை யாகக் கொண்டும், இனி எதிர்காலத்தில் அது எவ்வளவு ஈட்டும் என்று மதிப்பிட்டும் அதற்கு ஏற்றவாறு முதல் குறைப்புத் திட் டத்தை வகுக்கவேண்டும். கம்பெனி குறைந்தளவில் இலாபம் பெறுகிறதா, பெறுகின்ற இலாபம் நீண்டகால கடனீட்டுப் பத்தி ரங்கள் மீது கொடுக்கவேண்டிய வட்டி, சொத்துகள் மீது நீக்க வேண்டிய தேய்மானம் போன்றவற்றிற்குப் போதுமானதாக இருக் கின்றதா, முன்னுரிமைப் பங்குநர்களுக்குக் கொடுக்கவேண்டிய குறிப்பிட்ட சதவீதத்தில் பங்காதாயம் வழங்கப்பட முடிகிறதா போன்றவற்றை நாம் முதலில் ஆயவேண்டும். முதல் குறைப்புத் திட்டத்தை நிறைவேற்றுவதன்மூலமாக எதிர்காலத்தில் போதிய இலாபம் ஈட்ட முடியுமா என்பதையும் கருத்தில் கொள்ளவேண் டும். காரணம், இவற்றையெல்லாம் நிறைவேற்றியும்கூட வேண் டியஅளவு இலாபத்தை ஈட்ட முடியவில்லையெனில், பங்குமுதலைத் திருத்தியமைக்கும் எத் திட்டத்தாலும் பயன் விளைவதில்லை. அந் நிலையில் புரையோடிய புண்ணிற்கு மருந்தால் பயன் விளை யாததுபோன்று கம்பெனியின் முதல் குறைப்புத் திட்டத்தை நிறைவேற்றுவதைவிடக் கம்பெனியைக் கலைத்து விடுவதே சாலச் சிறந்ததாகும்.

இத் திட்டத்தின் பின் போதிய அளவு இலாபம் ஏற்படுவதற் குப் போதிய வாய்ப்புகள் இருக்கின்றன என்று கொண்டால், அடுத்து நாம் ஆயவேண்டியது பங்குநர்களையும், கடனீந்தோரையும் இத்திட்டம் அதிகவளவில் பாதிக்கிறதா என்பதாகும். தயாரிக்கப் படும் இத் திட்டம் முடிந்தவரை முன்னுரிமைப் பங்குநர்களையும், கடனீந்தோரையும், கடனீட்டுப் பத்திரதாரர் போன்றோரையும் அதிகமாகப் பாதிக்காதவாறு இருக்கவேண்டும். பொதுவாக, அதிகமாக பாதிக்கப்படுவது நேர்மைப் பங்குநர்களே.

ஆனால், பெரும்பாலும் இதனை ஏற்றுக்கொள்ள அவர்கள்உடன் படலாம். காரணம், இலாபம் ஏற்பட்டால் மட்டும் பங்காதாயம் பெறும் உரிமை உடையவர்கள் அவர்கள். நட்டம் ஏற்பட்டால் அவர்கள்தாம் அதனை ஏற்றாக வேண்டும் என்பதையும் அவர்கள்

உணர்வார்கள். மிகுந்த இலாபம் ஏற்படும்போழ்து அதில் பெரும் பகுதியைப் பெறுகின்ற நேர்மைப் பங்குநர்கள் நட்டம் ஏற்படும்போழ்து அதனைத் தாங்கிக் கொள்ளவேண்டும். அடுத்து, நேர்மைப் பங்கின் சந்தை மதிப்பு அதன்மீது வழங்கப்பெறும் பங்காதாயத்தைப் பொருத்திருக்கிறதென்பதை அறிவோம். போதிய அளவு இலாபம் ஈட்டாக் காரணத்தால் அல்லது கடந்த சில ஆண்டுகளாகவே நட்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிற காரணத்தால் நேர்மைப் பங்குநர்களுக்கு அக் கம்பெனி மிகவும் குறைந்த பங்காதாயத்தை வழங்கி வந்திருக்கும் அல்லது பங்காதாயத்தையே வழங்கியிருக்காது. அந் நிலையில் அப் பங்குகளின் சந்தை மதிப்பு மிக மிகக் குறைந்த நிலையில் தான் இருக்கும். எனவே, இம் முதல் குறைப்புத் திட்டத்தால் விளையும் பாதிப்பை ஏற்க நேர்மைப் பங்குநர்கள் தயங்கமாட்டார்கள்.

மேலும், முதல் குறைப்புத் திட்டத்தின் காரணமாகக் கம்பெனியின் சீரழியும் போக்கிற்கு ஒரு முடிவு கட்டிச் சீரிய நிலையில் அது செயல்பட வழி ஏற்படுகிறது. இதனால் பின்வரும் ஆண்டுகளில் கம்பெனி மிகுந்த இலாபத்தை ஈட்டும் நிலையை எய்தும். அப்பொழுது பெருமளவில் பயனடையப் போகின்றவர்கள் நேர்மைப் பங்குநர்களே. எனவே, தற்போது இத்திட்டம் தங்களை அதிகமாகப் பாதிப்பினும், அதனை ஏற்றுக்கொள்ள முன் வருவர்.

## திருத்தியமைக்கும் முறை

பங்குமுதல் மறுஅமைப்புத் திட்டத்தை உருவாக்குவதில் கீழ்க்கண்ட முறைகளைப் பின்பற்றுதல் நலம் :

(அ) மொத்தம் எவ்வளவு நட்டத் தொகை நீக்கப்பட வேண்டுமென்பதைச் சரியாக மதிப்பிடுதல்.

(ஆ) பங்குமுதல், நீண்டகாலக் கடன்கள் போன்றவற்றை எந்தெந்த அளவிற்குக் குறைத்தல் என்பதை முடிவு செய்தல்.

(இ) முதல் குறைப்புத் திட்டத்தினால் பாதிக்கப்படுவோருக்கு ஈடு செய்தல்.

(ஈ) போதிய நடைமுறை முதலுக்கு வழி வகுத்தல்.

## அ. மொத்த நட்டத்தை மதிப்பிடுதல்

கம்பெனிக்கு இதுநாள்வரை ஏற்பட்டுள்ள மொத்த நட்டத்தை மதிப்பிடுதலே முதல் குறைப்புத் திட்டத்தை உருவாக்கு

வதில் முதலில் செய்யவேண்டிய பணியாகும். கீழ்க்கண்ட கணக்குகள் காட்டும் இருப்புகளை ஒன்று கூட்டின் இதனை உணரலாம்.

(1) இலாப-நட்டக் கணக்கு—பற்றிருப்பு.

(2) பங்கு, கடனீட்டுப் பத்திரத் தள்ளுபடி, பங்கு அல்லது கடனீட்டுப்பத்திர வெளியீட்டில் தரப்பட்ட கழிவுத் தொகை, தரகுத் தொகை.

(3) தொடக்கச் செலவுகள்.

(4) நெடுநாள் பயன்தரு நடைமுறைச் செலவினங்கள். (Deferred Revenue Expenditure).

(5) வாணிக நற்பெயர் போன்ற புலனாகாச் சொத்துகள். (Intangible Assets)

சில வேளைகளில் வாணிகக் கூறு, புனைபொருள் உரிமை (Trade Marks, Patents etc) போன்ற சொத்துகள் இருப்புநிலைக் குறிப்பில் இடம் பெற்றிருக்கும். தொடர்ந்து நட்டம் ஏற்பட்டு வரும் கம்பெனிகளில் இவற்றிற்கு உண்மையான மதிப்பு ஏதும் இருப்பதில்லை. எனவே, இக் கணக்குகளை அவற்றின் உண்மை மதிப்பளவிற்குக் கொண்டுவர வேண்டும்.

அவ்வாறே, நட்டம் மிகுதியாக ஏற்படுவதைப் பங்குதாரர்களும், பிறரும் உணராதிருக்கும் பொருட்டு இயக்குநர்கள் பொறிவகை, மனைத்துணைப் பொருள், கட்டடம் போன்ற நிலைச் சொத்துகளின் மீது போதிய தேய்மானத்தை நீக்காமலும் இருப்பர். முதல் குறைப்புத் திட்டத்தை வகுக்கின்றபோழ்து நிலைச் சொத்துகளின் மீது இன்னும் தேய்மானம் நீக்கவேண்டியுள்ளதா என்பதையும் ஆயவேண்டும்.

கணக்குகளில் இவை பற்றிய விவரங்கள் கொடுக்கப்படாமல் இருப்பின், மாணவர்கள் தாங்களே ஊகித்து இவற்றிற்கு வழிசெய்யும் வகையில் தங்கள் திட்டத்தைத் தரலாம்.

**நட்டத்தை நீக்குதல்**

மேற்சொன்ன முறையில் மதிப்பிட்ட மொத்த நட்டத்தை இப்பொழுது நீக்கவேண்டும். அம் மொத்த நட்டத்தை நீக்குவதற்குப் பங்குமுதலைக் குறைக்கவேண்டியிருக்கும். கீழ்க்கண்ட

முறையில் கீழ்க்கண்ட வகையினர் இந் நட்டத்தை ஏற்கவேண்டி யிருக்கும்.

(அ) நேர்மைப் பங்குநர்கள் (Equity shareholders)

(ஆ) முன்னுரிமைப் பங்குநர்கள் (Preference shareholders).

(இ) பிணையமற்ற கடனீந்தோர் (Unsecured creditors).

(ஈ) சொத்துகளின் மீது பொதுவான பிணையத்தைப் பெற்றுள்ள கடனீந்தோர்.

இத் திட்டத்தின் காரணமாக ஏற்படும் நட்டத்தைப் பெரும் பாலும் நேர்மைப் பங்குநர்களே ஏற்க வேண்டியிருக்கும். அவர் களும் இதனை ஏற்றுக்கொள்ளத் தயங்கமாட்டார்கள். மிகுந்த இலாபம் ஏற்படும்போழ்து அதில் பெரும் பகுதியைப் பெறுகின்ற அவர்கள் நட்டம் ஏற்படும்போழ்து அதனைத் தாங்கிக்கொள்ள வேண்டியது நியாயம்தானே? அடுத்து நேர்மைப் பங்கின் சந்தை மதிப்புஅதன் மீது வழங்கப்பெறும் பங்காதாயத்தைப் பொருத்து இருக்கிறதென்பதை அறிவோம். போதியவளவு இலாபம் ஈட்டாக் காரணத்தால் அல்லது கடந்த சில ஆண்டுகளாகவே நட்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிற காரணத்தால் அக் கம்பெனி மிகவும் குறைந்த பங்காதாயத்தை வழங்கி வந்திருக்கும்; அல்லது பங் தாயம் எதையும் வழங்கியிருக்காது. அந் நிலையில் அப் பங்குகளின் சந்தை மதிப்பு மிகமிகக் குறைந்த நிலையில் தானிருக்கும். எனவே, இம் முதல் குறைப்புத் திட்டத்தால் விளையும் நற்பயனைக் கருத் திற்கொண்டு பாதிப்பை ஏற்க அவர்கள் தயங்கமாட்டார்கள்.

ஆனால், நேர்மைப் பங்குமுதலை அறவே நீக்கிடவும் கூடாது.

மொத்தம் நீக்கவேண்டிய நட்டம் மிகப் பெருமளவில் இருக்குமாயின், நேர்மைப் பங்குநருக்கு அடுத்து இதனை ஏற்றுக் கொள்ளவேண்டியது முன்னுரிமைப் பங்குநர்களே. இவர்களும், இத் திட்டத்தைப் பொதுவாக ஏற்றுக்கொள்வர். காரணம், இதனை ஏற்றுக் கம்பெனி சீர்திருத்தப்படவில்லையெனில், அதன் அழிவை யாரும் தடுத்து நிறுத்தமுடியாது. கம்பெனி கலைக்கப் பட்டுவிட்டால், புறக்கடன்கள் அனைத்தையும் அடைப்பதற்குப் போதிய சொத்துகள் இல்லாநிலையில், தொகை எதையும் பெறும் வழியேயில்லையென்பதை அவர்கள் நன்கு உணர்வர்.

நேர்மைப் பங்குநர்கள் பெரும் பகுதி நட்டத்தையும், அடுத்து முன்னுரிமைப் பங்குநர்கள் ஒரு பகுதி நட்டத்தையும்

ஏற்றுக்கொள்ள முன்வந்த பிறகும், இன்னும் நீக்கப்படவேண்டிய நட்டம் இருப்பின், இதனைப் பிணையம் ஏதும் பெறாத கடனீந்தோர் ஏற்றாகவேண்டும். அதாவது, தங்கட்குச் சேரவேண்டிய தொகையில் ஒரு பகுதியை விட்டுக்கொடுக்க அவர்கள் ஒப்புதல் அளிக்கவேண்டும். இத் திட்டத்திற்கு அவர்கள் உடன்படவில்லையாயின், மேற்சொன்னவாறு கம்பெனிக் கலைப்பு ஒன்றேதான் வழி. சீர்குலைந்து வரும் கம்பெனியைக் கலைத்தால் பிணையம் ஏதும் பெற்றிராத கடனீந்தோர் தங்கள் கடன்களைத் திரும்பப் பெறுதல் பெரும்பாலும் இயலாததே. எனவே, அவர்களும் ஓரளவு விட்டுக்கொடுக்க உடன்படுவர்.

ஆனால், முற்றுரிமை பெற்ற கடனீந்தோரும் (Preferential Creditors) குறிப்பிட்ட சொத்துகளைப் பிணையமாகப் பெற்றுள்ள கடனீந்தோரும் கம்பெனிக் கலைப்பால் பாதிக்கப்படப் போவதில்லை. எனவே, அவர்கள் இந் நட்டத்தின் ஒரு சிறு பகுதியையும் ஏற்க முன்வரமாட்டார்கள். ஆகவே, முதல் குறைப்புத் திட்டத்தை வகுக்கும்போழ்து இவர்கள் இதனால் பாதிக்கப்படாதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும்.

**பாதிக்கப்பட்டோருக்கு ஈடு தருதல்**

நீக்கவேண்டிய மொத்த நட்டத்தின் அளவையும், பிற சூழ்நிலைகளையும் பொருத்து பலவகைத் தரப்பினர் இந் நட்டத்தை ஏற்கவேண்டியிருக்குமென்று கூறியிருக்கிறோம். இம் முழு நட்டத்தையும் நேர்மைப் பங்குநர்களே தாங்கிக்கொள்ள வேண்டியிருப்பின், அவர்கட்கு வேறு முறையில் கம்பெனி ஈடுகட்ட வேண்டியதில்லை. காரணம், இம் முதல் குறைப்புத் திட்டத்திற்குப் பின் கம்பெனி இலாபம் ஈட்டும் நிலையை அடையும். அப்பொழுது பெருமளவில் இதன் பயனை நுகரப்போவோர் நேர்மைப் பங்குநர்களே.

முன்னுரிமைப் பங்குநர்களைப் பொருத்தவரை இப்படி அமைவதில்லை. அவர்கள் இத் திட்டத்தின் காரணமாக நட்டத்தின் ஒரு பகுதியை ஏற்கவேண்டியிருப்பின், தகுந்த முறையில் அவர்கட்குக் கம்பெனி ஈடுகட்டுதலே முறையாகும். அவர்களின் பங்காதாய விகிதத்தை அதிகப்படுத்துவதன் வாயிலாக இதனைச் செய்யலாம். முன்னுரிமைப் பங்கின் பெயரளவு மதிப்புக் குறைக்கப் பட்டபோதிலும், அவர்கள் பெறுகின்ற பங்காதாயம் குறையாதவாறு இவ் விகிதத்தை உயர்த்த முடியுமானால் மிகவும் நன்று. எடுத்துக்காட்டாக, ஒன்று ரூ.100 பெயரளவு மதிப்புடைய

6 சதவீதம் முன்னுரிமைப் பங்கு ரூ. 60-ற்குக் குறைக்கப் படுவதாக வைத்துக்கொள்ளலாம். முன்னர் ஒரு பங்கின் மீது ஒருவர் பெறக்கூடிய பங்காதாயம் ரூ. 6 ஆகும். ஆனால், இப் பொழுது இப் பங்கின் மதிப்பு ரூ. 60-ற்குக் குறைக்கப்பட்டு விட்டதால் 6 சதவீதம் பங்காதாயம் வழங்குவதாயின், இப் பங்கின் மீது கிடைக்கக்கூடிய தொகையானது ரூ. 3.60 ஆகும். இதனை ஈடுகட்டும் வகையில் பங்காதாய விகிதத்தை இப்பொழுது அதிகப்படுத்தலாம். 6 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கு உயர்த்த முடியும் ஆயின், ரூ. 60 பெயரளவு மதிப்புடைய பங்கின் மீது அவர்கள் பெரும் பங்காதாயம் ரூ. 6 ஆகவே அமைகிறது. இவ்வாறு, பங்கின் மதிப்புக் குறைக்கப்பட்டாலும்கூட அவற்றின் மீது பெறுகின்ற பங்காதாயம் குறையப்போவதில்லை. ஆதலால், இத் திட்டத்திற்கு முன்னுரிமைப் பங்குநர்கள் முழு ஆதரவையும் தர முன்வரலாம். ஆனால், இந்தளவிற்குப் பின்வரும் ஆண்டுகளில் பங்காதாயத்தைத் தொடர்ந்து வழங்க முடியுமா என்பதையும் ஆழ்ந்து ஆய்ந்த பிறகே இவ் விகிதத்தைக் கூட்ட முடியும்.

இவ் வகையில் இப் பங்குதாரர்கள் ஏற்கும் நட்டத்தை ஈடுகட்ட முடியாமற்போகுமாயின், வேறொரு முறையைப் பின் பற்றுவதுமுண்டு. அதாவது, முன்னுரிமைப் பங்குமுதலை நேர்மைப் பங்குமுதலாக மாற்றுவது. இதன் காரணமாக முன்னுரிமைப் பங்குநர்கள் இப்பொழுது வாக்குரிமை பெற்று, கம்பெனியின் செயல் முறைகளைக் கட்டுப்படுத்தும் வாய்ப்பைப் பெறுகின்றனர். அடுத்து, குறிப்பிட்ட பங்காதாயத்தை மட்டுமே பெறாமல், பின்வரும் ஆண்டுகளில் மிகுந்த இலாபத்தை ஈட்டும்போழ்தும் மிகப் பெரும் பங்காதாயத்தைப் பெறுகின்ற வாய்ப்பையும் இப் பங்குநர்கள் இம் மாற்றத்தால் பெறுவர். ஆனால், முன்னுரிமைப் பங்குகளை நேர்மைப் பங்குமுதலாக மாற்றுவதற்குப் பின்னவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கலாம். காரணம், தாங்கள் மட்டுமே பயன் படுத்திவந்த இவ்வுரிமை இப்பொழுது பரவலாக்கப்பட்டு விடு கிறது. ஆனால், இத் திட்டத்தை ஏற்காவிடில் கம்பெனியின் கலைப்பு உறுதி என்ற நிலையிருப்பின், நேர்மைப் பங்குநர்கள் இத் திட்டத்திற்கு உடன்படுவர்.

கடனீந்தோரும், கடனீட்டுப் பத்திரதாரர்களும் இம் முதல் குறைப்புத் திட்டத்தினால் ஏற்படும் நட்டத்தின் ஒரு பகுதியை ஏற்கவேண்டியிருப்பின், அவர்களையும் ஈடுகட்டும் வகையில் இத் திட்டமிருப்பின் நல்லதாகும். நிதி நிலைமை சீராயிருப்பின், இவர்கள் விட்டுக் கொடுத்தது போக மீதியுள்ள தொகையை

ரொக்கம் கொடுத்து இவர்களின் பொறுப்பைக் குறைத்து விடுதல் ஒரு முறையாகும்; அல்லது மீதியுள்ள தொகைக்கு இருக்கின்ற சொத்துகளைப் பிணையாகக் கொடுத்தல் மற்றொரு வழியாகும். கடனீட்டுப் பத்திரதாரர்களைப் பொருத்தவரை தற்போழ்து அவர்கட்குக் கொடுக்கப்படும் வட்டி விகிதத்தை உயர்த்தியும் கொடுக்கலாம்.

குவிவு முன்னுரிமைப் பங்குநர்கட்குப் பங்காதாயம் பல ஆண்டுகளாகத் தரவேண்டியிருப்பின், பெரும்பாலும் இவற்றை நீக்கிவிடலாம். இதற்கு ஈடாக அவர்கட்கு வைப்புச் சான்றிதழ்களை (Deposit Certificates) வழங்கலாம். கம்பெனி நந்நிலையை அடைந்த பிறகு இச் சான்றிதழ்களைக் கொடுத்து முன்னுரிமைப் பங்குநர்கள் ரொக்கம் பெற்றுக் கொள்ளலாம்.

**நடைமுறை முதலுககு வழி வகுத்தல்**

மேற்சொன்னவாறு நட்டத்தை நீக்கிவிட்டால் மட்டும் போதாது. கம்பெனி சீர்திருத்தப்பட்டு, இனிப் புதிய பாதையில் செல்லத் தொடங்குகிறது. இது சிறந்த முறையில் தொடர்ந்து செயல்பட வேண்டுமாயின், போதிய நடைமுறை முதல் இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். இதற்கு வழிவகுக்கவில்லையாயின், நடைமுறை முதல் பற்றுக் குறையின் காரணமாக மீண்டும் பல தொல்லைகட்கு ஆளாகிச் சிக்கல் பெருகிச் சீரழிய நேரிடும். கீழ்க்கண்ட முறைகளால் நடைமுறை முதலைப் பெருக்கிக் கொள்ளலாம்.

(அ) புதிய பங்குகளைக் கம்பெனி வெளியிடுவதுமூலமாக போதிய பணம் திரட்ட முடியும். (புதிய பங்குகளை வெளியிடின், மக்கள் இவற்றை வாங்க முன் வருவார்களா என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும்).

(ஆ) பங்குமுதலைப் பகுதி செலுத்தப்பெற்ற பங்குமுதலாக மாற்றுவதுமூலமாக மீதித் தொகையைப் பெறுகின்ற வாய்ப்பு ஏற்படும். எடுத்துக்காட்டாக, ரூ. 100 மதிப்புடைய முற்றும் செலுத்தப்பெற்ற பங்குகளை ரூ. 50 மதிப்புடைய ரூ. 25 செலுத்தப்பெற்ற பங்குகளாக மாற்றின், ஒவ்வொரு பங்கின் மீதும் மீண்டும் ரூ. 25 பெறுகின்ற வாய்ப்பு கம்பெனிக்கு ஏற்படுகின்றது. இவ்வாறு நடைமுறை முதலைப் பெற்றுக் கொள்ளலாம்.

(இ) வேறு வழிகளில் குறுகியகாலக் கடன்களைப் பெறுவது மூலமாகவும் நடைமுறை முதலை அதிகப்படுத்தலாம்.

## எடுத்துக்காட்டு 110

1973 திசம்பர் 31-ற்குரிய 'அ' லிமிட்டெடின் இருப்பு நிலைக் குறிப்பு கீழ்க் கொடுக்கப்பட்டிருக்கிறது.

### இருப்புநிலைக் குறிப்பு

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : | | | |
| அதிகாரம் பெற்றதும்; | | வாணிக நற்பெயர் | 50,000 |
| வெளியிட்டதும் : | | கட்டடம் | 1,60,000 |
| ஒன்று ரூ. 10 வீதம் | | பொறிவகை | 2,40,000 |
| 30,000-8 சதவீதம் | | புனைபொருளு | |
| குவிவு முன்னுரிமைப் | | ரிமை | 30,000 |
| பங்குகள் | 3,00,000 | சரக்கிருப்பு | 38,000 |
| ஒன்று ரூ. 10 வீதம் | | கடனாளிகள் | 50,000 |
| 50,000 நேர்மைப் | | வங்கி | 2,000 |
| பங்குகள் | 5,00,000 | தொடக்கச் | |
| 5 சதவீதம் கடனீட் | | செலவு | 30,000 |
| டுப் பத்திரங்கள் | 1,00,000 | இலாப-நட்டக் | |
| கடனீந்தோர் | 50,000 | கணக்கு | 3,50,000 |
| | 9,50,000 | | 9,50,000 |

முன்னுரிமைப் பங்காதாயம் 4 ஆண்டுகட்கு நிலுவையிலுள்ளது. புலனாகாச் சொத்துகள் அனைத்தும் மதிப்பற்றவை. கட்டடம், பொறிவகை ஆகியவற்றின் மதிப்பில் 10 சதவீதம் குறைக்கப்படவேண்டும். கம்பெனி எதிர்காலத்தில் போதிய இலாபம் ஈட்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலே கொடுக்கப்பட்ட விவரங்களிலிருந்து முதல் குறைப்புத் திட்டம் தேவைதானா என்பதையும், தேவையெனின், அதற்கான திட்டம் ஒன்றை வகுத்து, உனது திட்டம் ஏற்றுக்கொள்ளப்படுமென்று கொண்டு, திருத்தப்பட்ட இருப்புநிலைக் குறிப்பையும் தயாரிக்கவும்.

**விடை :**

கீழ்க்கண்ட காரணங்கட்காகப் பங்குமுதல் திருத்தியமைக்கப் பட வேண்டியது இன்றியமையாதது.

(1) கொடுக்கப்பட்ட விவரங்களிலிருந்து நிகர சொத்துகளின் மதிப்பு ரூ. 3,00,000 என்று தெரியவருகிறது.

| | | ரூ. |
|---|---|---|
| கட்டடம் | | 1,44,000 |
| பொறிவகை | | 2,16,000 |
| சரக்கிருப்பு | | 38,000 |
| கடனாளிகள் | | 50,000 |
| வங்கி | | 2,000 |
| மொத்த சொத்துகளின் மதிப்பு | | 4,50,000 |
| **கழி :** | | |
| பொறுப்புகள் : | | |
| கடனீட்டுப் பத்திரங்கள் | 1,00,000 | |
| கடனீந்தோர் | 50,000 | 1,50,000 |
| நிகர சொத்து மதிப்பு | ரூ. | 3,00,000 |

(புலனாகாச் சொத்துகள் மதிப்பற்றவை என்று கொடுக்கப் பட்டிருக்கிறது).

எனவே, மொத்தப் பங்குமுதல் ரூ. 8,00,000-ற்கு இருக்கின்ற சொத்துகள் ரூ. 3,00,000தான் என்று தெரியவருகிறது. எனவே, பங்குமுதல் திருத்தியமைக்கப்பட வேண்டும்.

(2) தற்போது முன்னுரிமைப் பங்காதாயம் 4 ஆண்டுகட்கு நிலுவையிலுள்ளது. இவ் வழியில் கம்பெனி முன்னுரிமைப் பங்குநருக்குக் கொடுக்கவேண்டிய தொகை ரூ. 96,000 ஆகும்.

$$3,00,000 \times \frac{8}{100} \times 4$$

$$= \text{ரூ. } 96,000$$

கம்பெனி எதிர்காலத்தில் போதிய இலாபத்தை ஈட்டுமென்று மதிப்பிடினும், முன்னுரிமைப் பங்காதாய நிலுவைக்கான

பொறுப்பை முதலில் சரிக்கட்டியாகவேண்டும். இதற்கு வகை செய்ய வேண்டுமெனில், முதல் குறைப்புத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

(3) முன்னுரிமைப் பங்குநர்கட்கு ஒவ்வோராண்டும் கொடுக்கவேண்டிய பங்காதாயம் மட்டில் ரூ. 24,000 ஆகிறது. இதற்கு இலாபத்தின் பெரும்பகுதி தேவைப்படுவதால், முன்னுரிமைப் பங்குநர்களுக்குத் தரப்படும் பங்காதாய விகிதத்தை மாற்றுதல் இன்றியமையாதது.

இக் காரணங்கட்காக முதல் குறைப்புத் திட்டம் ஒன்றை வகுக்கவேண்டும். இதற்கு முதலில் நீக்கப்பட வேண்டிய மொத்த நட்டத்தை உணரவேண்டும்.

| | | ரூ. |
|---|---|---|
| நீக்கவேண்டிய மொத்த நட்டம் : | | |
| இலாப-நட்டக் கணக்கு | | 3,50,000 |
| தொடக்கச் செலவு | | 30,000 |
| வாணிக நற்பெயர் | | 50,000 |
| புனைபொருளுரிமை | | 30,000 |
| நிலைச் சொத்துகளின் மதிப்பிழப்பு : | | |
| கட்டடம் | 16,000 | |
| பொறிவகை | 24,000 | |
| | | 40,000 |
| | | 5,00,000 |

அ. நேர்மைப் பங்குமுதல் ரூ. 5,00,000 இருக்கிறது. நீக்கவேண்டிய மொத்த் நட்டத் தொகையும் ரூ. 5,00,000 ஆகும். இது முழுவதையும் நேர்மைப் பங்குநர்களே ஏற்கவேண்டியிருப்பின், இப் பங்குமுதலை அறவே நீக்க வேண்டியிருக்கிறது. தங்களின் பங்கின் மதிப்பை ஒன்றுமில்லாது ஆக்கிக் கொள்ள இவ் வகைப் பங்குநர்கள் உடன்பட மாட்டார்கள்; அது நேர்மையும் அன்று. ஆயினும், இந் நட்டத்தின் பெரும்பகுதியை இவர்களே ஏற்கச் செய்யலாம். மீதித் தொகையை முன்னுரிமைப் பங்குநர்கள் ஏற்கவேண்டும். எனவே, நேர்மைப் பங்கின் மதிப்பை ரூ. 10-லிருந்து ரூ. 2-ற்குக் குறைத்து, ரூ. 1 செலுத்தப்பட்டதாக வெளியிடலாம். அதன்மீது செலுத்தவேண்டிய பங்கு ஒன்றுக்கு ரூ. 1-ஐ உடனடியாகச் செலுத்தவேண்டின், தேவையான அளவிற்கு நடைமுறை முதலும் கிடைக்க வழி ஏற்படும். இம் முறையில் நேர்மைப் பங்குநர்கள் பங்கு ஒன்றுக்கு

ரூ. 9 நட்டத்தை ஏற்கின்றனர். ஆக, அவர்கள் ஏற்கும் மொத்த நட்டம் ரூ. 4,50,000 ஆகும் (50,000 × ரூ. 9).

ஆ. இன்னும் நீக்கப்படவேண்டிய நட்டம் ரூ. 50,000 இருக்கின்றது. இதனை முன்னுரிமைப் பங்குநர்கள்தாம் ஏற்க வேண்டும். இதற்காக முன்னுரிமைப் பங்கின் மதிப்பை ரூ. 10-லிருந்து ரூ. 8-ற்குக் குறைக்கலாம். இதன் காரணமாக ரூ. 60,000 கிடைக்கிறது (30,000 பங்குகள் × ரூ. 2).

இ. முன்னுரிமைப் பங்குநர்கள் தங்கட்குச் சேரவேண்டிய பங்காதாய நிலுவையையும் விட்டுக்கொடுக்க வேண்டும். அதே நேரத்தில் எதிர்காலத்தில் அவர்களின் பங்காதாய விகிதமும் மாற்றப்பட வேண்டும். அதாவது, தற்போதுள்ள 8 சதவீதத்தை 6 சதவீதத்திற்குக் குறைக்கலாம். அப்பொழுதுதான் இனி வரும் ஆண்டுகளில் பங்காதாயத்தை நிலுவையில் வைக்காமல், ஒவ்வோராண்டும் குறிப்பிட்ட சதவிகிதப் பங்காதாயத்தைப் பெற வழி ஏற்படும். அத்துடன் நேர்மைப் பங்குநர்கள் இத் திட்டத்தின் காரணமாக மொத்தத்தில் இழப்பது ரூ. 4,50,000 என்பதையும் முன்னுரிமைப் பங்குநர்கள் இழப்பது ரூ. 1,56,000தான் (பங்கு முதல் ரூ. 60,000 + பங்காதாய நிலுவை ரூ. 96,000) என்பதையும் கருத்தில் கொண்டு, இதனைக் குறைத்துக்கொள்வதற்கு அவர்கள் ஒப்புதல் அளிக்கவேண்டும்.

இவ்வாறு முன்னுரிமைப் பங்குநர்கள் விட்டுக் கொடுக்கின்ற பங்காதாயத்திற்கும் பங்கிழப்பிற்கும் கைமாருக, அவர்கட்கு ஓரளவு ஈடுகட்டுதல் நலமாகும். இதற்காக, நேர்மைப் பங்குகளில் சிலவற்றை அவர்கட்கு வெளியிடலாம். அதாவது, தாங்கள் வைத்திருக்கும் ஒவ்வொரு 6 பங்குகட்கும் ஒரு முழுதும் செலுத்தப்பெற்ற நேர்மைப் பங்கை இம் முதல் குறைப்புத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாக வழங்க இயலும்.

இதைக் கீழ்க்கண்டவாறு உணரலாம் :

**முதல் குறைப்பு**

| | | ரூ. |
|---|---|---|
| நேர்மைப் பங்குமுதல் : | 50,000 × 9 | 4,50,000 |
| முன்னுரிமைப் பங்குமுதல் : | 30,000 × 2 | 60,000 |
| | | 5,10,000 |
| நீக்கவேண்டிய மொத்த நட்டம் | | 5,00,000 |

முன்னுரிமைப் பங்குநர்களை ஈடுகட்டும்
வகையில் வெளியிடும் நேர்மைப் பங்குகள்
(5,000 × ரூ. 2) ரூ. 10,000

மேற்சொன்ன விளக்கங்களிலிருந்து கீழ்க்கண்ட முதல் குறைப்புத் திட்டத்தை வகுக்கலாம்.

(1) ஒன்று ரூ. 10 மதிப்புடைய 50,000 நேர்மைப் பங்குகளை அதே எண்ணிக்கையுள்ள ஒன்று ரூ. 2 மதிப்புடைய பங்குகளாகக் குறைத்துப் பங்கு ஒன்றுக்கு ரூ. 1 செலுத்தப் பெற்றதாக மாற்றவேண்டும். தற்போது நேர்மைப் பங்கு ஒன்றின் மீது செலுத்தவேண்டிய ரூ. 1-ஐ நேர்மைப் பங்குநர்கள் உடனடியாகச் செலுத்தவேண்டியது.

(2) ஒன்று ரூ. 10 மதிப்புடைய 30,000 —8 சதவீதம் முன்னுரிமைப் பங்குகளை அதே எண்ணிக்கையுள்ள ஒன்று ரூ. 8 மதிப்புடைய 6 சதவீதம் முன்னுரிமைப் பங்குகளாகக் குறைக்க வேண்டியது.

(3) முன்னுரிமைப் பங்காதாயம் 4 ஆண்டு நிலுவையை அப் பங்குதாரர்கள் விட்டுக்கொடுக்க வேண்டியது.

(4) முன்னுரிமைப் பங்குநர்கள் வைத்திருக்கும் ஒவ்வொரு 6 பங்குகட்கும் ஒரு முழுதும் செலுத்தப்பெற்ற நேர்மைப் பங்கு வீதம் வழங்க வேண்டியது.

(5) இலாப-நட்டக் கணக்கு, தொடக்கச் செலவு, வாணிக நற்பெயர் புனைபொருளுரிமை ஆகிய புலனாகாச் சொத்துகள் அனைத்தையும் நீக்கிவிட வேண்டியது.

(6) கட்டடம், பொறிவகை ஆகிய நிலைச் சொத்துகளின் மீது 10 சதவீதம் தேய்மானம் நீக்கப்பட வேண்டியது.

இப்பொழுது திருத்தப்பட்ட இருப்புநிலைக் குறிப்பைத் தயார் செய்யலாம் :

## இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : | | கட்டடம் | 1,44,000 |
| அதிகாரம் பெற்றதும்; | | பொறிவகை | 2,16,000 |
| வெளியிட்டதும் : | | சரக்கிருப்பு | 38,000 |
| ஒன்று ரூ. 8 வீதம் | | கடனாளிகள் | 50,000 |
| 30,000—6 சதவீதம் | | வங்கி | 52,000 |
| முன்னுரிமைப் பங்கு | | | |
| கள் முழுதும் | | | |
| செலுத்தப்பெற்றவை | 2,40,000 | | |
| ஒன்று ரூ. 2 வீதம் | | | |
| 55,000 நேர்மைப் | | | |
| பங்குகள், முழுதும் | | | |
| செலுத்தப்பெற்றவை | 1,10,000 | | |
| 5 சதவீதம் கடனீட் | | | |
| டுப் பத்திரங்கள் | 1,00,000 | | |
| கடனீந்தோர் | 50,000 | | |
| | 5,00,000 | | 5,00,000 |

### வினாக்கள்

1. பங்குமுதலை எவ்வெவ் வகைகளில் மாற்றலாம்?
2. முதல் குறைப்பில் பின்பற்றவேண்டிய முறை யாது?
3. பங்குமுதலைக் குறைக்கும்போழ்து செய்யவேண்டிய பதிவுகள் யாவை?
4. முதல் குறைப்புத் திட்டமொன்றை வகுக்கும்போழ்து சிந்திக்கவேண்டிய கருத்துகள் யாவை?
5. முதல் குறைப்புத் திட்டத்தின் காரணமாக ஏற்படும் நட்டத்தில் பெரும்பகுதியைச் சாதாரணப் பங்குதாரர்கள் ஏற்க இசைவு தருவார்களா? காரணம் என்ன?

6. சிறுகுறிப்பு வரைக :

அ. பங்குகளைத் தொகுத்தல்.

ஆ. பங்குகளைப் பகுத்தல்.

இ. காப்பு முதல்.

ஈ. முதல் சீரமைப்பு.

உ. அக மறு அமைப்புத் திட்டம்.

## பயிற்சி

(1) 1966 திசம்பர் 31-ல் நவ பாரத் கம்பெனி லிமிட்டெட் இருப்புநிலைக் குறிப்பு கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| அதிகாரம் பெற்ற முதல் : | | புனைபொருள் உரிமை | 8,50,000 |
| ஒன்று ரூ. 100 வீதம் 10,000 முன்னுரிமைப் பங்குகள் | 10,00,000 | குத்தகைக் கட்டடம் | 1,30,800 |
| ஒன்று ரூ. 100 வீதம் 10,000 நேர்மைப் பங்குகள் | 10,00,000 | பொறிவகை | 42,200 |
| | 20,00,000 | கடனாளிகள் | 76,500 |
| ஒப்புக் கொண்ட முதல் : | | சரக்கிருப்பு | 55,000 |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 7,500 முன்னுரிமைப் பங்குகள் முழுதும் செலுத்தப் பெற்றவை | 7,50,000 | பங்கு வெளியீட்டுத் தள்ளுபடி | 18,000 |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 5,000 நேர்மைப் பங்குகள், முழுதும் செலுத்தப் பெற்றவை | 5,00,000 | தொடக்கச் செலவுகள் | 12,000 |
| கடனீந்தோர் | 30,000 | இலாப-நட்டக் கணக்கு | 1,15,000 |
| வங்கி மேல்வரைப் பற்று | 20,000 | ரொக்கம் | 500 |
| | 13,00,000 | | 13,00,000 |

நட்டம் ஏற்பட்டு, கம்பெனி நல்ல முறையில் செயல்படவில்லை. எனவே, கீழ்க்கண்ட மறு அமைப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

(1) முன்னுரிமைப் பங்குகள் ஒன்று ரூ. 50 மதிப்பிற்கு முழுதும் செலுத்தப்பெற்ற அதே எண்ணிக்கையுள்ள பங்குகளாக குறைக்கப்பட வேண்டியது.

(2) நேர்மைப் பங்குகள் ஒன்று ரூ. 25 மதிப்புடைய அதே எண்ணிக்கையுள்ள பங்குகளாகக் குறைக்கப்படவேண்டும்.

(3) இத் திட்டத்தின் காரணமாகக் கிடைக்கும் தொகையைக் குத்தகைக் கட்டடத்தின் மதிப்பில் ரூ. 30,800-ஐக் குறைக்கவும், சரக்கிருப்பில் ரூ. 15,000-ஐக் குறைக்கவும், பொறிவகையிலும் கடனாளிகளிலும் 20 சதவீதம் குறைக்கவும், மீதித் தொகையைப் புனைபொருளுரிமைத் தொகையைக் குறைக்கவும் பயன்படுத்திக் கொள்ளவேண்டியது.

மேற்கண்ட நடவடிக்கைகட்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தந்து, மறு அமைப்புத் திட்டம் நிறைவேற்றப்பட்ட பின் கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்க.

(B. Com., Delhi)

(2) Zed லிமிட்டெடின் பங்குமுதல் கீழ்க்கண்டவாறு இருந்தது :

1. ஒன்று ரூ. 100 மதிப்புடைய 10,000 — 6 சதவீதம் முன்னுரிமைப் பங்குகள்.

2. ஒன்று ரூ. 10 மதிப்புடைய 50,000 நேர்மைப் பங்குகள்.

பங்குகள் அனைத்தும் முழுதும் செலுத்தப்பெற்றவை. 1966ஆம் ஆண்டின் இறுதி வரை அதற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தின் மொத்த தொகை ரூ. 3,50,000 ஆகும். இத்துடன் தொடக்கச் செலவுகள் ரூ. 20,000-மும் இருந்தது. ஏடுகளில் ரூ. 14,00,000-ல் காட்டப்பட்டிருந்த நிலைச் சொத்துகளின் மதிப்பு ரூ. 4,00,000 கூடுதலாக மதிப்பிடப்பட்டிருக்கின்றன என்றும் தெரிய வருகிறது.

கூடுதல் மதிப்பினையும், நட்டத்தையும், தொடக்கச் செலவு களையும் நீக்கும்பொருட்டு முதல் குறைப்புத் திட்டம் ஒன்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. நீதிமன்றத்தின் ஒப்புதலும் இதற்குக் கிடைத்தது. இத் திட்டத்தின் கீழ் 6 சதவீதம் முன்னுரிமைப் பங்குகள் ஒன்று ரூ. 60 மதிப்புடைய $7\frac{1}{2}$ சதவீதம் முன்னுரிமைப் பங்குகளாகவும், நேர்மைப் பங்குகள் ஒன்று ரூ. 2 மதிப்புடைய பங்குகளாகவும் மாற்றப்பட்டன. அத்துடன் முன்னுரிமைப் பங்குகள் மீது மூன்று ஆண்டுப் பங்காதாயம் நிலுவையில் இருந்ததும் நீக்கப்பட்டது.

இத் திட்டம் நிறைவேற்றப்பட்டவுடன் தேவையான குறிப் பேட்டுப் பதிவுகளைத் தருக.

(B. Com., Delhi 1968)

(3) ஆதித்தன் கம்பெனி 1963-ல் ஒரு கூட்டுப் பங்குக் கம்பெனி ஒன்றைத் தொடங்கியது. இக் கம்பெனியின் செயல் முறை வெற்றிகரமானதாக இல்லை. 1966 திசம்பர் 31-ல் அதன் இருப்புநிலைக் குறிப்பு கீழ்க்கண்டவாறு இருந்தது.

### இருப்புநிலைக் குறிப்பு

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : | | வாணிக நற்பெயர் | 1,00,000 |
| பெயரளவு முதல் : | | நிலமும் | |
| ஒன்று ரூ. 100 வீதம் | | கட்டடமும் | 3,00,000 |
| 30,000 பங்குகள் | 30,00,000 | பொறிவகை | 6,50,000 |
| | | மனைத்துணைப் | |
| எடுத்துக்கொள்ளப் | | பொருள் | 40,000 |
| பட்ட முதல் : | | சரக்கிருப்பு | 4,75,000 |
| ஒன்று ரூ. 100 வீதம் | | கடனாளிகள் | 2,50,000 |
| 25,000 பங்குகள் | | இலாப-நட்டக் | |
| முழுதும் செலுத்தப் | | கணக்கு | 10,60,000 |
| பெற்றவை | 25,00,000 | | |
| கடனீந்தோர் | 1,75,000 | | |
| ஆதித்தன் கம்பெனி | 2,00,000 | | |
| | 28,75,000 | | 28,75,000 |

கீழ்க்கண்ட திட்டத்தின் அடிப்படையில் கம்பெனி திருத்தியமைக்கப்படுகிறது :

(அ) ஒன்று ரூ. 100 மதிப்புடைய 25,000 பங்குகள் ஒன்று ரூ. 45 மதிப்புடைய முழுதும் செலுத்தப்பெற்ற அதே எண்ணிக்கையுள்ள பங்குகளாகக் குறைக்கப்படுகிறது.

(ஆ) ஆதித்தன் கம்பெனிக்குக் கொடுக்கவேண்டிய ரூ. 2,00,000-ற்கான கடன் குறைக்கப்படுகிறது. ஒன்று ரூ. 45 வீதம் 2,500 பங்குகளை முழுதும் செலுத்தப்பெற்றவையாகப் பெற்றுக்கொண்டு தங்கட்குச் சேரவேண்டிய தொகையைச் சரிக் கட்டிக்கொள்ள அவர்கள் உடன்படுகின்றனர்.

(இ) ஆதித்தன் கம்பெனியுடன் செய்துகொண்ட மேற் கண்ட ஏற்பாட்டின் காரணமாகவும், முதல் குறைப்பின் காரண மாகவும் கிடைத்துள்ள தொகையைக் கொண்டு வாணிக நற் பெயரையும், இலாப-நட்டக் கணக்கையும் நீக்கவேண்டும்; பொறி வகையின் மதிப்பைக் குறைக்கவேண்டும்.

கம்பெனியின் ஏடுகளில் தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தந்து, புதிய இருப்புநிலைக் குறிப்பையும் தருக.

(M. U. B. Com., Special Accounts, April 1968,
B. Com., Agra-வைத் தழுவியது)

(4) அன்லக்கி லிமிடெட் 1966 சூன் 30-ற்குரிய கீழ்க் கண்ட இருப்புநிலைக் குறிப்பைத் தருகிறது :

**இருப்புநிலைக் குறிப்புகள்**

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : | | வாணிக நற்பெயர் | 60,000 |
| (ஒன்று ரூ. 100 மதிப் | | நிலமும் | |
| புடைய முழுதும் | | கட்டடமும் | 1,50,000 |
| செலுத்தப்பெற்ற | | பொறிவகை | 3,00,000 |
| பங்குகள்) : | | புனைபொருள் | |
| நேர்மை(Equity) | 4,00,000 | உரிமை | 30,000 |

**இருப்புநிலைக் குறிப்புகள்**—(தொடர்ச்சி)

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| 7 சதவீதம் முன்னுரிமை (Preference) | 3,00,000 | சரக்கிருப்பு | 2,20,000 |
| கூட்டுருவாக்கத்திற்கு முந்தை இலாபம் | 10,000 | கடனாளிகள் | 1,50,000 |
| 6 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் | 3,00,000 | ரொக்கம் | 5,000 |
| கடனீந்தோர் | 2,00,000 | தொடக்கச் செலவுகள் | 25,000 |
| | | இலாப-நட்டக் கணக்கு | 2,70,000 |
| | 12,10,000 | | 12,10,000 |

கீழ்க்கண்ட மறு அமைப்புத் திட்டம் உரிய முறையில் ஒப்புக் கொள்ளப்படுகிறது :

அ. 7 சதவீதம் முன்னுரிமைப் பங்குகள், 9 சதவீதம் முன்னுரிமைப் பங்குகளாக மாற்றப்பட வேண்டும்; தொகை 30 சதவீதத்தால் குறைக்கப்பட வேண்டும்.

ஆ. நேர்மைப் பங்குகள் ரூ. 50 மதிப்புடைய, முழுதும் செலுத்தப்பெற்ற பங்குகளாகக் குறைக்கப்பட வேண்டும்.

இ. நிலம், கட்டடத்தின் மதிப்பு 20 சதவீதத்தால் உயர்த்தப்பட வேண்டும்.

ஈ. கடனீட்டுப் பத்திரங்கள் 20 சதவீதத்தால் குறைக்கப்பட வேண்டும்.

உ. புலனாகாச் சொத்துகள் அனைத்தும், பெயரளவுத் தொகைகளும் (புனைபொருள் உரிமை உள்பட) நீக்கப்பட வேண்டும்.

ஊ. நேர்மைப் பங்குநர்கள் ரூ. 1,00,000-ற்கான நேர்மைப் பங்குகளை எடுத்துக்கொள்ள வேண்டும். இத் தொகை புதிய பொறிவகை வாங்கப் பயன்படுத்தப்பட வேண்டும்.

இத் திட்டம் முழுதும் செயல்படுத்தப்பட்டது என்று கொண்டு, தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளையும், இருப்பு நிலைக் குறிப்பையும் தருக.

(B. Com., 1967, Delhi)

(5) A அன் கோ லிமிட்டெடின் 1968 மார்ச் 31-ற்குரிய இருப்புநிலைக் குறிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

## இருப்புநிலைக் குறிப்புகள்

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : | | நிலைச் சொத்துகள் : | |
| அதிகாரம் பெற்றது : | | வாணிக நற்பெயர் | 2,25,000 |
| ஒன்று ரூ.100 மதிப்புடைய 3,000 9 சதவீதம் குவிவு முன்னுரிமைப் பங்குகள் | 3,00,000 | வில்லங்கமற்ற சொத்துகள் | 1,75,000 |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 5,000 நேர்மைப் பங்குகள் | 5,00,000 | பொறிவகை | 1,00,000 |
| வெளியிட்டதும் செலுத்தப்பெற்றதும்; | | நடப்புச் சொத்துகள் : | |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 2,000 9 சதவீதம் குவிவு முன்னுரிமைப் பங்குகள், முழுதும் செலுத்தப்பெற்றவை | 2,00,000 | சரக்கிருப்பு | 85,000 |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 4,000 நேர்மைப் பங்குகள், முழுதும் செலுத்தப் பெற்றவை | 4,00,000 | கடனாளிகள் | 1,05,000 |
| 6 சதவீதம் அடைமானக் கடனீட்டுப்பத்திரங்கள் | 1,20,000 | இலாப-நட்டக் கணக்கு | 1,90,000 |
| வங்கி மேல்வரைப் பற்று (சரக்கிருப்பை ஈடாகக் கொண்டது) | 55,000 | | |
| நடப்புப் பொறுப்புகள் | 1,05,000 | | |
| | 8,80,000 | | 8,80,000 |

கீழ்க்கண்ட முதல் குறைப்புத் திட்டத்திற்கு நீதிமன்றம் ஒப்புதல் அளித்தது; பின்னர் இது செயல்படுத்தப்பட்டது.

1. முன்னுரிமைப் பங்குகளும், நேர்மைப் பங்குகளும் முறையே ரூ. 80-ற்கும், ரூ. 50-ற்கும் குறைக்கப்பட்டன.

2. கடனீட்டுப் பத்திரதாரர்கள் தங்கட்குச் சேரவேண்டிய தொகைக்கு 1,000 முன்னுரிமைப் பங்குகளைப் பெற்றுக் கொண்டு கணக்கைத் தீர்த்துக் கொள்கின்றனர்.

3. வாணிக நற்பெயர் கணக்கும், இலாப-நட்டக் கணக்கின் பற்றிருப்பும் நீக்கப்படவேண்டும்.

4. வில்லங்கமற்ற சொத்துகளின் மீதும், பொறிவகை மீதும் முறையே 20 சதவீதம், 10 சதவீதம் தேய்மானம் நீக்க வேண்டும். மேற்கண்ட ஏற்பாட்டினைச் செயல்படுத்தத் தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தந்து, திருத்தப்பெற்ற இருப்பு நிலைக் குறிப்பைத் தயார் செய்க.

(Institute of Company Secretaries of India, Final, April 1969)

(6) 1962 சூன் 30-ல் பீகார் இண்டஸ்ட்ரீஸ் லிமிட்டெடின் இருப்புநிலைக் குறிப்பு கீழ்க் கொடுக்கப்பட்டிருக்கிறது :

## இருப்புநிலைக் குறிப்புகள்

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| அதிகாரம் பெற்ற முதல் : | | வாணிக நற்பெயர் | 20,000 |
| ஒன்று ரூ. 10 மதிப்புடைய 50,000 முன்னுரிமைப் பங்குகள் | 5,00,000 | குத்தகைக் கட்டடம் | 1,07,000 |
| ஒன்று ரூ. 10 மதிப்புடைய 50,000 நேர்மைப் பங்குகள் | 5,00,000 | பொறிவகை | 60,000 |
| | | புனைபொருள் உரிமை | 1,73,900 |
| | | தொடக்கச் செலவுகள் | 2,000 |
| | | சரக்கிருப்பு | 34,000 |
| | | கடனாளிகள் | 56,000 |
| | 10,00,000 | ரொக்கம் | 100 |
| | | இலாப-நட்டக் கணக்கு | 1,23,000 |

## இருப்புநிலைக் குறிப்புகள்—(தொடர்ச்சி)

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| வெளியீட்டு முதல் : | | | |
| ஒன்று ரூ. 10 மதிப்புடைய 25,000 முன்னுரிமைப் பங்குகள், முழுதும் செலுத்தப் பெற்றவை | 2,50,000 | | |
| ஒன்று ரூ. 10 மதிப்புடைய 25,000 நேர்மைப் பங்குகள் முழுதும் செலுத்தப் பெற்றவை | 2,50,000 | | |
| | 5,00,000 | | |
| கடனீந்தோர் | 40,000 | | |
| வங்கி மேல்வரைப் பற்று | 36,000 | | |
| | 5,76,000 | | 5,76,000 |

கம்பெனி வெற்றிகரமாக இயங்கி வராததால், கீழ்க்கண்ட முதல் குறைப்புத் திட்டத்திற்குத் தேவையான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :

(அ) முன்னுரிமைப் பங்குகள் ஒவ்வொன்றும், அதே எண்ணிக்கையுள்ள ஒன்று ரூ. 5 மதிப்புடைய முழுதும் செலுத்தப் பெற்ற பங்குகளாகக் குறைக்கப்படவேண்டும்.

(ஆ) நேர்மைப் பங்குகள் ஒவ்வொன்றும் அதே எண்ணிக்கையுள்ள ஒன்று ரூ. 2.50 மதிப்புடைய முழுதும் செலுத்தப் பெற்ற பங்குகளாகக் குறைக்கப்படவேண்டும்.

(இ) இதனுல் கிடைக்கும் தொகையைக் கொண்டு நட்டத்தையும், கீழ்க் கண்டவாறு சொத்துகளின் மதிப்பையும் குறைக்கவேண்டும்.

தொடக்கச் செலவுகள், வாணிக நற்பெயர், இலாப-நட்டக் கணக்கு ஆகியவை முழுதும் நீக்கப்படவேண்டும்.

குத்தகைக் கட்டடத்தின் மதிப்பில் ரூ. 27,000 குறைக்கப்படவேண்டும். சரக்கிருப்பில் ரூ. 14,000 குறைக்கப்படவேண்டும்.

ரூ. 6,000-ற்குக் ஐயக் கடன் ஒதுக்கவேண்டும்.

பொறிவகை மீது 20 சதவீதம் தேய்மானம் நீக்கவேண்டும்.

மீதியுள்ள தொகை புனைபொருள் உரிமையின் மதிப்பைக் குறைப்பதற்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

கம்பெனியின் ஏடுகளில் தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தந்து, இருப்புநிலைக் குறிப்பைத் தயார் செய்க.

(I. C. W. A.-வைத் தழுவியது)

(7) பாரத் கன்ஸ்ட்ரக்ஷன் லிமிட்டெடின் 1966 திசம்பர் 31-ற்குரிய இருப்புநிலைக் குறிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

**இருப்புநிலைக் குறிப்புகள்**

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| அதிகாரம் பெற்ற பங்குமுதல் : | | வாணிக நற்பெயர் | 10,000 |
| ஒன்று ரூ. 10 மதிப்புடைய 20,000 நேர்மைப் பங்குகள் | 2,00,000 | நிலமும் கட்டடமும் | 20,500 |
| | | பொறிவகை | 50,850 |
| | | தொடக்கச் செலவுகள் | 1,500 |
| வெளியிட்ட, எடுத்துக் கொண்ட செலுத்தப்பெற்ற பங்கு முதல் : | | சரக்கிருப்பு | 10,275 |
| | | கடனாளிகள் | 15,000 |
| | | வங்கியில் ரொக்கம் | 1,500 |
| ஒன்று ரூ. 10 மதிப்புடைய 12,000 பங்குகள் 1,20,000 | | இலாப-நட்டக் கணக்கு : | |
| கழி : | | கடந்த இருப்பு நிலைக் குறிப்பின் படி இருப்பு 22,000 | |
| அழைப்பு நிலுவை : (பங்கு ஒன்றுக்கு ரூ.3 வீதம் 3,000 | | | |

## இருப்புநிலைக் குறிப்புகள்—(தொடர்ச்சி)

| | | ரூ. | | | ரூ. |
|---|---|---|---|---|---|
| | | | கழி : | | |
| பங்குகள் மீது) | | | நடப்பு | | |
| | 9,000 | | ஆண்டு | | |
| | | 1,11,000 | இலாபம் | 1,200 | |
| கடனீந்தோர் | | 15,425 | | | 20,800 |
| வரி ஒதுக்கு | | 4,000 | | | |
| | | 1,30,425 | | | 1,30,425 |

பொறிவகையை இயக்குநர்கள் மறு மதிப்பீடு செய்ததில் அது ரூ. 10,000 அதிகமாக மதிப்பிடப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்தனர். இச் சொத்தினை அதன் உண்மையான மதிப்பிற்குக் கொண்டுவரவும், இலாப-நட்டக் கணக்கின் பற்றிருப்பை நீக்கவும், தொடக்கச் செலவுகள், வாணிக நற்பெயர் ஆகியவற்றை எடுத்துவிடவும் தீர்மானித்துக் கீழ்க்கண்ட வழியினை அவர்கள் பின்பற்றுகின்றனர் :

1. அழைப்புத் தொகை நிலுவையிலுள்ள பங்குகள் அனைத்தையும் ஒறுப்பிழப்புச் (forfeiture) செய்யவேண்டியது.

2. பங்கு ஒன்றுக்கு ரூ. 3 வீதம் செலுத்தப்பெற்ற முதல் தொகையைக் குறைக்கவேண்டியது.

3. பங்கு ஒன்றுக்கு ரூ. 5 வீதம் ஒறுப்பிழப்புச் செய்யப்பட்ட பங்குகளை மீண்டும் வெளியிட வேண்டியது.

4. வரி ஒதுக்கினைத் தேவையாயின் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது.

அழைப்புத் தொகை நிலுவையிலுள்ள பங்குகள் அனைத்தும் ஒறுப்பிழப்புச் செய்யப்பட்டு, பங்கு ஒன்று ரூ. 5 வீதம் தொகை பெற்றுக்கொண்டு மீண்டும் வெளியிடப்பட்டன.

தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தந்து மேற்கண்ட திட்டம் நிறைவேற்றப்பட்டவுடன் உள்ள கம்பெனியின் இருப்பு நிலைக் குறிப்பையும் தருக.

(C. A. First)

(8) A B லிமிட்டெடின் 1970 மார்ச் 31-ற்குரிய இருப்பு நிலைக் குறிப்பு கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது :

**இருப்புநிலைக் குறிப்புகள்**

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : அதிகாரம் பெற்றதும் வெளியிட்டதும் : | | வாணிக நற்பெயர் | 1,20,000 |
| ஒன்று ரூ. 10 மதிப்புடைய 30,000 6 சதவீதம் முன்னுரிமைப் பங்குகள் | 3,00,000 | நிலமும் கட்டடமும் | 2,67,000 |
| ஒன்று ரூ. 1 மதிப்புடைய 6,00,000 நேர்மைப் பங்குகள் | 6,00,000 | பொறிவகை | 2,55,000 |
| | 9,00,000 | துணைக் கம்பெனி லிமிட்டெடில் பங்குகள் (வாங்கிய விலையில்) | 75,000 |
| 8 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் நிலம், கட்டடம் ஈட்டின்பேரில் 1,20,000 | | சரக்கிருப்பு | 2,25,000 |
| கூட்டு : கூடியுள்ள வட்டி 6,000 | 1,26,000 | கடனாளிகள் | 2,70,000 |
| வங்கி மேல்வரைப் பற்று (சரக்கிருப்பு பிணையத்தின்பேரில்) | 1,65,000 | இலாப-நட்டக் கணக்கு | 2,64,000 |
| இயக்குநர் கடன் | 75,000 | விளம்பரம் | 60,000 |
| கடனீந்தோர் | 2,70,000 | | |
| | 15,36,000 | | 15,36,000 |

**குறிப்புகள் :**

(அ) ரூ. 30,000-ற்கான நட்டஈட்டு நிகழ்வடைப் பொறுப்பு ஒன்று இருக்கிறது.

(ஆ) முன்னுரிமைப் பங்குகள் குவிவு முன்னுரிமைப் பங்குகளாகும்; இவற்றின் மீது பங்காதாயம் 3 ஆண்டுகட்கு நிலுவையிலுள்ளது.

கீழ்க்கண்ட நிபந்தனைகளை உள்ளடக்கிய முதல் குறைப்புத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது :

1. முன்னுரிமைப் பங்குகள் ஒவ்வொன்றையும் ரூ. 8-ற்குக் குறைக்கவேண்டும். நேர்மைப் பங்குகள் ஒவ்வொன்றையும் 25 காசுகட்குக் குறைக்கவேண்டும்.

பின்னர், இவை முறையே ரூ. 10-ம், ரூ. 1-ம் பெயரளவு மதிப்புடைய பங்குகளாகத் தொகுக்கப்பட (consolidated) வேண்டும். பங்காதாயம் நிலுவையில் $\frac{2}{3}$ பங்கை முன்னுரிமைப் பங்குநர்கள் விட்டுக்கொடுக்க முன் வருகின்றனர்.

அதிகாரம் பெற்ற பங்குமுதல் ஒன்று ரூ. 10 மதிப்புடைய 30,000 முன்னுரிமைப் பங்குகளாகவும், ஒன்று ரூ. 1 மதிப்புடைய 6,00,000 நேர்மைப் பங்குகளாகவும் பழையபடி இருக்க வேண்டியது.

2. துணைக் கம்பெனி லிமிட்டெடின் பங்குகள் வெளியே ரூ. 1,50,000-ற்கு விற்கப்படுகின்றன.

3. புலனாகாச் சொத்துகள் அனைத்தையும் நீக்கவேண்டியது; வராக்கடன் ரூ. 12,000-மும், வீணான சரக்கு ரூ. 30,000-மும் நீக்கப்பட வேண்டியது.

4. தங்கட்குச் சேரவேண்டிய தொகையில் ஒரு பகுதியாகக் கடனீட்டுப் பத்திரதாரர்கள் கம்பெனியின் சொத்துகளில் ஒன்றை ரூ. 60,000 மதிப்பில் (ஏட்டு மதிப்பு ரூ. 54,000) எடுத்துக்கொள்ள வேண்டியது; அத்துடன் சொத்துகள் ஈட்டின் பேரில் ரூ. 45,000 ரொக்கம் தரவேண்டியது.

வட்டி நிலுவை செலுத்தப்பட்டது.

5. மேலே கொடுக்கப்பட்டவாறு நட்ட ஈட்டுப் பொறுப்பு நிகழ்வு அடைந்தது. ஆனல், இதில் ரூ. 15,000-ஐக் கம்பெனி இதற்குக் காரணமான இயக்குநர் ஒருவரிடமிருந்து வசூலித்தது. இத் தொகை அவருடைய ரூ. 24,000-ற்கான கடன் கணக்கில் பற்று வைக்கப்பட்டது. இக் கணக்கின் மீதியிருப்பு அவர் பதவியிலிருந்து விலகியவுடன் கொடுக்கப்பட்டது.

6. மீதியுள்ள இயக்குநர்கள் தங்கட்குச் சேரவேண்டிய கடன் தொகைக்குப் பதிலாக நேர்மைப் பங்குகளை எடுத்துக் கொள்ள உடன்படுகின்றனர்.

மேற்சொன்ன விவரங்களிலிருந்து தேவையான குறிப் பேட்டுப் பதிவுகளையும், செலுத்தப்பெற்ற இருப்புநிலைக் குறிப் பையும் தருக.

(A.I.C.W.A)

(9) கடனீட்டுப் பத்திரதாரர்கள் கையில் 'C' லிமிட்டெட் உள்ளது. அழையாப் பங்குமுதலைத் தவிர மற்ற சொத்துகள் அனைத்தின்மீதும் அவருக்குப் பொருட்பிணை (Charge) உண்டு. திசம்பர் 31ஆம் நாளில் கடனீந்தோர் பற்றிய நிலையைக் கீழ்க் கண்ட அறிக்கை வெளியிடுகிறது :

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| ரூ. 3,60,000-ற்கான பங்குமுதல் : ஒன்று ரூ. 60 வீதம் ரூ. 30 செலுத்தப் பெற்ற பங்குகள் | | சொத்தாட்சி அதி அதிகாரியிடம் (Receiver) ரொக்கம் | 2,70,000 |
| முதலாவது கடனீட் டுப் பத்திரங்கள் | 3,00,000 | சொத்துகள், பொறிவகை முதலியவை, தேய்மானம் நீங்கலாக ரூ. 3,90,000 இவற்றின் மதிப்பீடு | 1,50,000 |
| இரண்டாவது கடனீட் டுப் பத்திரங்கள் | 6,00,000 | கடனீட்டுப்பத்திர தாரர்கட்குஉரிய பொருட்பிணை | 4,20,000 |
| பிணையமற்ற கடனீந்தோர் | 4,50,000 | அழையாப் பங்கு முதல் | 1,80,000 |
| | | பற்றுக்குறை (deficiency) | 7,50,000 |
| | 13,50,000 | | 13,50,000 |

ரூ. 3,00,000-ற்கான முதலாவது கடனீட்டுப் பத்திரங்களையும், ரூ. 3,00,000-ற்கான இரண்டாவது கடனீட்டுப் பத்திரங்களையும் 'A' என்பவர் வைத்துள்ளார். பிணையமற்ற கடனீந்தோரில் ரூ. 90,000 அவருக்குச் சேரவேண்டியது. இரண்டாவது கடனீட்டுப் பத்திரங்களில் ரூ. 3,00,000-த்தை 'B' என்பவர் வைத்துள்ளார். பிணையமற்ற கடனீந்தோரில் ரூ. 60,000 அவருக்குச் சேரவேண்டியது.

கீழ்க்கண்ட முதல் குறைப்புத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது:

1. தனக்குச் சேரவேண்டிய மொத்தக் கடன் தொகையில் ரூ. 2,10,000-ஐ A என்பவர் நீக்கிக் கொள்ளவும், ரொக்கமாக ரூ. 30,000 கம்பெனிக்குத் தரவும், தனக்குச் சேரவேண்டிய எல்லாத் தொகைகளுக்கும் பதிலாக ரூ. 5,10,000-ற்கான முதலாவது கடனீட்டுப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளவும் (முன்னரே அவருக்கு வெளியிடப்பெற்றவற்றை நீக்கிய பின்னர்) உடன்படுகிறார்.

2. தனக்குச் சேரவேண்டிய எல்லாத் தொகைகளுக்கும் பதிலாக B என்பவர் ரூ. 90,000 ரொக்கம் பெற்றுக்கொண்டு கணக்கைத் தீர்க்க உடன்படுகிறார்.

3. பிணையமற்ற கடனீந்தோர் (A-யையும், B-யையும் தவிர) ஒன்று ரூ. 7.50 மதிப்புடைய, முழுதும் செலுத்தப்பெற்ற 4 பங்குகளைப் பெற்றுக்கொண்டு தங்கட்குச் சேரவேண்டிய ஒவ்வொரு ரூ. 60-லும், 75 சதவீதம் அளவு பொறுப்புத் தீர்ந்ததாகக் கொள்கின்றனர். இதில் மீதியுள்ள 25 சதவீதத்தைத் தள்ளிப்போட வேண்டியது. இத் திட்டத்தை நீதிமன்றம் ஏற்றுக்கொண்ட நாளிலிருந்து 3 ஆண்டு இறுதியில் இது செலுத்தப்பட வேண்டியது.

பெயரளவு பங்குமுதல் இதன்படி உயர்த்தப்பட வேண்டியது.

4. அழையாப் பங்குமுதலை இப்பொழுது முழுதும் கோர வேண்டியது. பங்கு ஒன்றுக்கு ரூ. 52.50 வீதம் நீக்கப்பட வேண்டியது. இவ்வாறு பங்கு ஒன்றை ரூ. 7.50 வீதம் மாற்ற வேண்டியது.

மேற்கண்ட திட்டம் இதனால் பாதிக்கப்படும் அனைவராலும், நீதிமன்றத்தாலும் ஒப்புக்கொள்ளப் படுகிறதென்று கொண்டு

தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தந்து, திட்டம் செயல் படுத்தப்பட்டவுடன் கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்பைத் தயார் செய்க.

(Institute of Company Secretaries
of India, Final, April 1971)

(10) M.D. லிமிட்டெடின் 1957 திசம்பர் 31-ற்குரிய இருப்புநிலைக் குறிப்பு கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது :

## இருப்புநிலைக் குறிப்புகள்

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : அதிகாரம் பெற்றதும்; வெளியிட்டதும் : ஒன்று ரூ. 10 மதிப்புடைய 10,000 6 சதவீதம் குவிவு முன்னுரிமைப் பங்குகள், முழுதும் செலுத்தப் பெற்றவை | 1,00,000 | வாணிக நற்பெயர் | 25,000 |
| | | வில்லங்கமற்ற சொத்து, வாங்கிய விலையில் | 90,000 |
| | | பொறிவகை (தேய்மானம் நீக்கியபிறகு) | 85,000 |
| | | முதலீடுகள் (சந்தைமதிப்பு ரூ. 86,000) | 80,500 |
| ஒன்று ரூ. 10 மதிப்புடைய 20,000 நேர்மைப் பங்குகள் முழுதும் செலுத்தப் பெற்றவை | 2,00,000 | சரக்கிருப்பு | 35,000 |
| | | கடனாளிகள் | 40,000 |
| | | வங்கி | 500 |
| | | இலாப-நட்டக் கணக்கு | 1,04,000 |
| | 3,00,000 | | |
| கடனீந்தோர் | 75,000 | | |
| வங்கி மேல்வரைப் பற்று | 15,000 | | |
| பொதுக்காப்பு | 70,000 | | |
| | 4,60,000 | | 4,60,000 |

குவிவு முன்னுரிமைப் பங்குப் பங்காதாயம் இரண்டு ஆண்டுகட்கு நிலுவையிலுள்ளது.

இதற்குத் தேவையான முதல் குறைப்புத் திட்டத்தை வகுத்து, திருத்தப்பெற்ற இருப்புநிலைக் குறிப்பைத் தயாரிக்கவும்.

(C. A. Finl, 1958)

(11) 'நாட் சோ குட்' எனும் கம்பெனியின் 1970 மார்ச் 31-ற்கான இருப்புநிலைக் குறிப்பு கீழ்க் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**இருப்புநிலைக் குறிப்புகள்**

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| முதல் : | | வாணிக நற்பெயர் | 2,40,000 |
| ஒன்று ரூ. 10 வீதம் 1,00,000 பங்குகள் பங்கு ஒன்றுக்கு ரூ. 8 வீதம் செலுத்தப் பட்டது | 8,00,000 | பொறிவகை | 7,20,000 |
| | | சரக்கிருப்பு | 2,82,000 |
| | | கடனாளிகள் | 2,10,000 |
| | | ரொக்கம் | 8,000 |
| ஒன்று ரூ. 100 வீதம் 1,600—6 சதவீதம் குவிவு முன்னுரிமைப் பங்குகள் | 1,60,000 | இலாப-நட்டக் கணக்கு | 3,00,000 |
| பல்வகைப் பொறுப்புகள் | 8,00,000 | | |
| | 17,60,000 | | 17,60,000 |

முன்னுரிமைப் பங்காதாயம் 3 ஆண்டுகட்கு நிலுவையிலுள்ளது. கீழ்க்கண்ட முறையில் கம்பெனியைத் திருத்தியமைக்கச் செய்யும் வகையில் பங்குமுதல் குறைப்பதற்கான திட்டம் ஒன்றைத் தயாரிக்கவும்.

1. இலாப-நட்டக் கணக்கையும், வாணிக நற்பெயரையும் நீக்கவேண்டும்.

2. பொறிவகை மீது 10 சதவீதம் தேய்மானம் நீக்க வேண்டும்.

3. முன்னுரிமைப் பங்காதாய நிலுவையைத் தீர்க்க வேண்டும்.

4. ரூ. 50,000 அளவு ரொக்கத்திற்கு வகை செய்ய வேண்டும்.

மேற்கண்ட திட்டத்தை நிறைவேற்ற தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தந்து, இறுதியாக இருக்கக்கூடிய இருப்புநிலைக் குறிப்பைத் தயார் செய்க.

(M. U. B. Com., Special Accounts, Sept. 1970)

*(12)* கல்கத்தா கோல் கம்பெனி லிமிட்டெடின் 1960 திசம்பர் 31-ற்குரிய இருப்புநிலைக் குறிப்பு கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| அதிகாரம் பெற்ற முதல் : ஒன்று ரூ. 100 மதிப்புடைய 10,000 பங்குகள் | 10,00,000 | கடனாளிகள் 8,34,700<br>கழி : காப்பு 30,000 | 8,04,700 |
| வெளியீட்டு முதலும் செலுத்தப்பெற்ற முதலும் : ஒன்று ரூ. 100 மதிப்புடைய 7,000 பங்குகள் | 7,00,000 | ரொக்கம் | 21,300 |
| வங்கி மேல்வரைப் பற்று | 2,11,700 | மனைத்துணைப் பொருள் | 16,400 |
| பிணையமற்ற கடன் | 1,07,600 | ரயில் பார வண்டிகள் (Wagons) | 52,500 |
| கடனீந்தோர் | 5,60,900 | தொடக்கச் செலவுகள் | 67,500 |
| | | வாணிக நற்பெயர் | 1,00,000 |
| | | இலாப-நட்டக் கணக்கு :<br>1957– 5,12,600<br>1958– 3,01,000<br>1959– 2,08,300<br>10,21,900<br>கழி : 1960 இலாபம் 5,04,100 | 5,17,800 |
| | 15,80,200 | | 15,80,200 |

கம்பெனி இப்பொழுது இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாறியுள்ளது. இதனைப் பங்காதாயம் தரும் கம்பெனியாக விரைவில் மாற்ற இயக்குநர்கள் மிகவும் விருப்புடையவர்கள். இதுநாள் வரை ஏற்பட்டுள்ள நட்டத்தையும், பெயரளவு சொத்துகளையும் முழுதும் நீக்கிவிட்டால், புதிய பங்குமுதல் கிடைக்குமென்று உறுதியாக நம்புகின்றனர். மேற்கண்ட நோக்கத்தைச் சிறந்த முறையில் நிறைவேற்றும்வண்ணம் கம்பெனியைச் சீர்திருத்தியமைக்கும் திட்டம் ஒன்றைத் தருக. நீவிர் கொடுக்கும் திட்டம் இயக்குநர்களால் ஏற்கப்படுமென்று கொண்டால், அத் திட்டத்தினைச் செயல்படுத்தும் முன்னர் என்னென்ன சடங்குகளைப் பின்பற்ற வேண்டுமென்று விளக்குக.

தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

(B. Com)

(13) நாட் சோ வெல் லிமிட்டெடின் 1965 ஜுன் 30-ற்கான இருப்புநிலைக் குறிப்பு கீழ்க் கொடுக்கப்பட்டுள்ளது :

## இருப்புநிலைக் குறிப்புகள்

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : | | வாணிக நற்பெயர் | 1,00,000 |
| ஒன்று ரூ. 10 மதிப்புடைய 10,000 6 சதவீதம் குவிவு முன்னுரிமைப் பங்குகள் | 10,00,000 | பொறிவகையும் தளவாடங்களும் | 16,00,000 |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 13,000 நேர்மைப் பங்குகள் | 13,00,000 | சரக்கிருப்பு | 1,00,000 |
| 5 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் | 5,00,000 | கடனாளிகள் | 1,50,000 |
| கடனீந்தோர் | 1,40,000 | ரொக்கம் | 60,000 |
| | | பற்றுக்குறை | 9,30,000 |
| | 29,40,000 | | 29,40,000 |

கடந்த இரு ஆண்டுகட்கான முன்னுரிமைப் பங்காதாயம் நிலுவையிலுள்ளது. கம்பெனிக் கலைப்பின்பொழுது அவற்றைச் செலுத்தியாக வேண்டும். சராசரியாக இனி வரும் ஆண்டுகளில் வரிக்குப்பின் நிகர இலாபம் ரூ. 1,20,000 கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

பொறிவகையும் தளவாடங்களும் ரூ. 15,00,000 மதிப்புடையவை. (அவற்றை விற்றால் ரூ. 10,00,000 கிடைக்கும்).

சரக்கிருப்பு அதன் ஏட்டு மதிப்பளவில் இருக்கிறது.

ரூ. 30,000 ஐயக் கடன் ஆகும். (கடனாளிகளில் $33\frac{1}{3}\%$ வசூலாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.)

புதிய பங்குகளை வெளியிடாமலேயே, பங்குமுதலை மாற்றியமைக்கக்கூடிய திட்டமொன்றைத் தயார் செய்க.

உம்முடைய திட்டத்திற்கு ஏற்றவாறு இருப்புநிலைக் குறிப்பை மாற்றி வரைக.

(M. U. B. Com., April 1966)

# 13. ஒன்றிணைப்பு, ஈர்ப்பமைப்பு, புற மறுவமைப்பு

## ஒன்றிணைப்பு (Amalgamation)

கடந்த எழுபது, எண்பது ஆண்டுகளாகவே தொழில் நிறுவனங்கள் ஒன்றிணைந்து செயல்படுவது பரவலாகக் காணப்படுகின்றது. ஒரே வகையான பொருள் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்கள் ஒன்றிணைந்து செயல்படுவதில் விளையும் பயன்கள் பல. அவ்வாறே, உற்பத்தியாகும் பொருளை விற்பனை செய்யும் நிறுவனங்களும், உற்பத்தியின் ஒவ்வொரு கட்டத்திலும் தனித்தனியாக ஈடுபட்டிருக்கும் நிறுவனங்களும் ஒன்முக இணைந்து ஒரே நிர்வாகத்தின் கீழ் வந்து செயல்படுவதிலும் பல்வகைப் பயன்கள் ஏற்படுகின்றன. தொழில் நிறுவனங்களுக்கிடையே கடும் போட்டி இருக்கின்ற காரணத்தால், ஒவ்வொரு நிறுவனமும் பெருந் தொகையை விளம்பரத்திற்காகச் செலவுசெய்ய வேண்டியிருக்கிறது. சில நேரங்களில் விற்பனையைப் பெருக்கும் நோக்குடன், பொருளின் விலையை மிகவும் குறைத்து விற்கவும் தயங்குவதில்லை. இவ்வாறு, கடும் போட்டியின் காரணமாகச், செலவிடும் பெரும் தொகையை ஒன்றிணைந்து செயல்படுவதில் தவிர்க்க முடிகிறது. நிறுவனங்களின் ஒன்றிணைப்பால் போட்டி மறைந்து விலை வீழ்ச்சி எப்பொழுதும் தவிர்க்கப்படுகிறது. தாங்கள் திட்டமிட்ட விலைக்கே தங்கள் பொருள்களைத் துணிந்து விற்க முடியும். இந் நிறுவனங்கள் உறுதிப்படுத்தும் விலையைக் கொடுத்தே நுகர்வோர் பொருள்களை வாங்கியாகவேண்டும். இவ்வகையில் விலையையோ, உற்பத்தியின் அளவையோ சந்தையையோ கட்டுப்படுத்தும் நோக்குடன் தனித்தனியாக இயங்கிவந்த தொழில் நிறுவனங்கள் ஒன்று இணைகின்றன.

தொழில் நிறுவனங்கள் ஒன்றிணைவது பலவகையில் அமையலாம். பிடிப்புக் கம்பெனி முறையிலும் (Holding Company)

அல்லது கலப்பமைப்பு முறையிலும் (Merger) இது இருக்கலாம். பிடிப்புக் கம்பெனி பற்றி முன்னரே கூறியுள்ளோம். கலப்பமைப்பிலும் இருவகை உள. இப்பொழுது இருக்கின்ற இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கம்பெனிகளை ஒரு புதிய கம்பெனி எடுத்துக்கொள்ளுமாயின், அதனை ஒன்றிணைப்பு (Amalgamation) என்கிறோம். அவ்வாறின்றி, இப்பொழுது இயங்கிவரும் ஒரு கம்பெனி இன்னொரு கம்பெனியை வாங்குமாயின், அதனை ஈர்ப்பமைப்பு (Absorption) என்கிறோம்.

ஒன்றிணைப்பில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தற்பொழுது உள்ள கம்பெனிகள் கலைக்கப்படுகின்றன. ஒரு புதிய கம்பெனி தோற்றுவிக்கப்படுகிறது. இவ்வாறு, இரண்டு அல்லது மேற்பட்ட கம்பெனிகளின் கலைப்பும், புதிய கம்பெனி ஒன்றின் அமைப்பும் ஒன்றிணைப்பில் நிகழ்கின்றன. எடுத்துக்காட்டாக, தற்பொழுது இயங்கிவரும் வரையறு பொறுப்புடைய சேரன் கம்பெனியும், பாண்டியன் கம்பெனியும் கலைக்கப்பட்டு இவ்விரு கம்பெனிகளையும் எடுத்துக்கொள்ளும் நோக்குடன் சோழன் கம்பெனி புதிதாகத் தோற்றுவிக்கப்படுமாயின், இது ஒன்றிணைப்பு எனப்படுகிறது. அவ்வாறின்றித் தற்போழ்து இயங்கிவரும் சேரன் கம்பெனியைத் தற்போது இயங்கிவரும் பாண்டியன் கம்பெனி எடுத்துக்கொள்ளுமாயின் (வாங்கிக் கொள்ளுமாயின்), அதனை ஈர்ப்பமைப்பு (Absorption) என்கிறோம். ஈர்ப்பமைப்பில் **ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கம்பெனிகளைத் தற்போது இயங்கிவரும் வேறு ஒரு கம்பெனி எடுத்துக்கொள்கிறது** என்பதையும், ஒன்றிணைப்பில் தற்போது இயங்கிவரும் **இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கம்பெனிகளைப் புதிதாகத் தொடங்கப்பெறும் இன்னொரு கம்பெனி எடுத்துக்கொள்கிறது** என்பதையும் மறத்தல் கூடாது.

ஒன்றிணைப்பில் கலைக்கப்பட்ட கம்பெனிகளைப் **புதியகம்பெனி** எடுத்துக்கொள்கிறது. ஆனால், ஈர்ப்பமைப்பில் பழைய கம்பெனி அல்லது கம்பெனிகளை இன்னொரு **பழைய கம்பெனியே** எடுத்துக்கொள்கிறது.

மறு அமைப்பு முறை (Reconstruction) என்பதே முற்றிலும் வேறாகும். இதில் கம்பெனிகளை ஒன்றிணைத்தல் நோக்கமன்று. பல ஆண்டுகளாக நட்டம் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு கம்பெனி அந் நட்டத்தை நீக்கிவிட்டு, புதிய முறையில் தனது பங்குமுதலைச் சீரமைத்துக்கொள்ளும் முறையே மறு அமைப்பு முறை எனப்படுகிறது. இதிலும் இருவகை உள்ளது. புற மறு

அமைப்பு (External Reconstruction), அக மறு அமைப்பு (Internal Reconstruction) எனப்படும். தற்பொழுதுள்ள கம்பெனியைக் கலேக்காமல், பங்குமுதலேக் குறைத்துத் திருத்தி அமைப்பது அக மறுஅமைப்பு எனப்படும். இது பற்றி முன்னரே கூறியுள்ளோம். புற மறு அமைப்பு என்பது தற்போது இயங்கிவரும் ஒரு கம்பெனியை எடுத்துக்கொள்ளும் நோக்குடன் இன்னொரு கம்பெனியைத் தோற்றுவிப்பதாகும். இதில் இயங்கிவரும் ஒரு கம்பெனி கலேக்கப்பட்டுப் பெரும்பாலும் அதே பங்குநர்களால் புதிய கம்பெனி ஒன்று உருவாக்கப்படுகிறது. ஈர்ப்பமைப்புக்கும் மறு அமைப்பிற்கும் உள்ள வேறுபாடு, கலேக்கப்பட்ட கம்பெனியை எடுத்துக்கொள்ளும் கம்பெனி புதியதா அல்லது பழையதா என்பதைப் பொருத்தே இருக்கிறது. கலேக்கப்பட்ட கம்பெனியை தற்போது இயங்கிவரும் வேறு ஒரு கம்பெனி எடுத்துக்கொள்ளும் போழ்து அதனே ஈர்ப்பமைப்பு என்கிறேம். அவ்வாறின்றிக் கலேக்கப்பட்ட கம்பெனியைப் புதிய கம்பெனி எடுத்துக் கொள்ளும்போழ்து அதனே மறு அமைப்பு என்கிறேம்.

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கம்பெனிகள் கலேக்கப்பட்டு அவற்றைப் புதிய கம்பெனி எடுத்துக்கொள்ளும்போழ்து அதனே ஒன்றிணேப்பு என்கிறேம். ஆனல், ஒரே ஒரு கம்பெனி கலேக்கப்பட்டு அதனேப் புதிய கம்பெனி எடுத்துக்கொள்ளும் போழ்து, அதனே மறு அமைப்பு என்கிறேம். அடுத்து, ஒன்றிணேப்பின் நோக்கம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கம்பெனிகளிடையே நிலவும் போட்டியைத் தவிர்த்துப் பெரும் இலாபத்தினே ஈட்டுவதாகும். ஆனல், மறு அமைப்பின் நோக்கம், நட்டத்தில் நடந்து கொண்டுவரும் கம்பெனி தனது நிலேயைச் சீர்திருத்தி இலாபத்தை ஈட்டும் வழி காண்பதாகும்.

1956-வது ஆண்டைய கம்பெனிச் சட்டத்தின் 494-வது பிரிவு மேற்சொன்ன முறைகளேச் செயல்படுத்தத் துணைபுரிகின்றது. இதன்மூலம் ஒரு கம்பெனியின் கலேப்பாளர் அக் கம்பெனியின் உறுப்பினர்கட்கு வழங்குவதற்காக மாற்றப்பெறும் கம்பெனியின் (Transferee Company) பங்குகளேயோ அல்லது பிற உரிமைகளேயோ பெறுவதற்கு அனுமதிக்கப்படுகிறர். இதன்மூலம் கலேக்கப்படும் கம்பெனியின் பங்குநர்கள் புதிய கம்பெனியின் பங்குகளேயோ அல்லது கடனீட்டுப் பத்திரங்களேயோ பெற்றுக்கொண்டு கணக்கைத் தீர்த்துக்கொள்ள வழி ஏற்படுகிறது.

இவ்வகைக் கணக்குகளில் பயன்படுத்தப்படும் சில சொற்களின் பொருள்களே நன்கு உணர்தல் நலம் பயக்கும்.

**வாணிகப் பொறுப்புகள்** (Trade Liabilities)

வாங்கப்பட்ட சரக்கின் காரணமாக எழும் பொறுப்புகளை இச் சொல் உணர்த்தும். வாணிகக் கடனீந்தோர் (Trade Creditors), செலுத்தவேண்டிய உண்டியல்கள் இரண்டும் வாணிக பொறுப்புகள் எனும் தலைப்பின்கீழ் வருவன. கடனீட்டுப் பத்திரங்கள், வங்கி மேல்வரைப் பற்று, கொடுபட வேண்டிய செலவினங்கள் போன்றவையும் பொறுப்புகள்தாம். எனினும், அவற்றை வாணிகப் பொறுப்புகள் என்று சொல்வதில்லை. பொறுப்புகள் எனும் சொல் விரிந்த பொருளுடையது; வாணிகப் பொறுப்புகளையும் இது உள்ளடக்கும்.

**சேர்த்துவைக்கப்பட்ட இலாபம்** (Accumulated Profits)

ஒவ்வோராண்டும் ஏற்படும் இலாபத்தின் கணிசமான அளவைப் பங்காதாயமாக வழங்காமல், பல காப்புக் கணக்குகட்கும், பிற கணக்குகட்கும் எடுத்துச் செல்வது வழக்கம் என்று கண்டிருக்கிறோம். இவ்வாறு, பங்குநர்கட்குப் பங்காதாயமாக வழங்கப் பெறாத இலாபத்தைப் பொறுப்பாகக் கருதுதல் வழுவாகும். எனவே, எக் கணக்குகள் சேர்த்து வைக்கப்பட்ட இலாபத்தை உணர்த்துகின்றன, எக் கணக்குகள் பொறுப்புகளை உணர்த்துகின்றன என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொண்டால்தான், கணக்குகளைச் செவ்வனே செய்யமுடியும்.

பலவகையான காப்புகளைப் பற்றியும், ஒதுக்குகளைப் பற்றியும் சென்ற அத்தியாயத்தில் தெளிவாக விளக்கியிருக்கிறோம்.

**காப்பீட்டு நிதி** (Insurance Fund)

சில நிகழ்வுடையாப் பொறுப்புகளை ஏற்பதற்காக இலாபத்தைக் கொண்டு தோற்றுவிக்கப்படும் நிதியை இது உணர்த்துகிறது. பிற காப்பீட்டுக் கம்பெனிகளில் முனைமம் செலுத்துவதற்கு மாறாக, தானே ஒரு நிதியை ஏற்படுத்தி இலாபத்திலிருந்து ஒரு பகுதியை அதற்கு ஒதுக்கி, அத் தொகையை முதலீடு செய்வது வழக்கம். தேவை ஏற்படும்பொழுது, இந் நிதியைப் பயன்படுத்திக்கொள்ளலாம். இது ஓர் அகக் காப்பீடாகும் (Internal insurance). கலைக்கப்படும் கம்பெனியில் இக் கணக்கு இருக்குமாயின், இது சேர்த்து வைக்கப்பட்ட ஆதாயத்தையே உணர்த்துவதாகக் கொள்ளவேண்டும். இது ஒரு பொறுப்பன்று; பங்குநர்கட்குச் சேரவேண்டியது.

**விபத்து நிதி, தொழிலர் நட்ட ஈட்டு நிதி** (Accident Fund, Workmen's Compensation Fund)

இவையும் அகக் காப்பீடு போன்றதேதான். எதிர்காலத்தில் ஏற்பட இருக்கும் பொறுப்புகளைச் சமாளிப்பதற்காக இக் கணக்குகள் தொடங்கப்படுகின்றன. கம்பெனி கலைக்கப்படும்பொழுது, இதன் காரணமாகப் பொறுப்பு ஒன்றையும் இனி ஏற்கவேண்டி இருக்காதாதலால், அதனையும் ஆதாயமாகக் கொள்ளவேண்டும். அவ்வாறின்றிக் கம்பெனியைக் கலைக்கும்பொழுது இக் கணக்குத் தொடர்பான பொறுப்பு ஏதேனும் தீர்க்கப்பட வேண்டியிருப்பின் முதலில் அப் பொறுப்பை இக் கணக்குகளில் சரிக்கட்டவேண்டும். அவ்வாறு சரிக்கட்டிய பின்னர் அக் கணக்குகள் காட்டும் இருப்புகள், சேர்த்து வைக்கப்பட்ட இலாபத்தை உணர்த்துவதாகக் கொள்ளவேண்டும். அவை பங்குநர்கட்கு உரியவை; பொறுப்புகளாகக் கருதக்கூடாது. அக் கணக்குகள் தொடர்பான பொறுப்பைச் சரிக்கட்ட கீழ்க்கண்ட பதிவுகளைச் செய்யவேண்டும்.

(1) பொறுப்பு ஏற்கப்பட்டுள்ளதைப் பதிய, தொழிலர் நட்டஈட்டு நிதியில் அல்லது விபத்து நிதியில் பற்றும், கொடுக்கவேண்டிய பொறுப்புக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

பின்னர், அப் பொறுப்புகளை அக் கணக்குகளிலிருந்து தீர்க்கும்போது கொடுபட வேண்டிய பொறுப்புக் கணக்கில் பற்றும், வங்கிக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

கீழ்க்கண்ட அட்டவணை, பொறுப்புகளையும், சேர்த்து வைக்கப்பட்ட இலாபத்தையும், சேர்ந்துள்ள நட்டத்தையும் தெளிவாக உணர்த்துகிறது.

**இலாப-நட்டக் கணக்கு**

| பொறுப்புகள் | சேர்த்து வைக்கப்பட்ட இலாபம் | சேர்ந்துள்ள நட்டம் |
|---|---|---|
| (1) வாணிகக் கடனீந்தோர் | (1) இலாப-நட்டக் கணக்கு (வ) | (1) ஐயக்கடன் காப்பு |
| (2) செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு | (2) பொதுக்காப்பு | (2) தேய்மானக் காப்பு |
| (3) வங்கி மேல் வரைப் பற்று | (3) கழிவு நிதி | (3) தொடக்கச் செலவுகள் |

**இலாப-நட்டக் கணக்கு**—(தொடர்ச்சி)

| பொறுப்புகள் | சேர்த்துவைக்கப்பட்ட இலாபம் | சேர்ந்துள்ள நட்டம் |
|---|---|---|
| (4) கடனீட்டுப் பத்திரங்கள் | (4) கடனீட்டுப் பத்திர மீட்பு நிதி | (4) பங்குத் தள்ளுபடிக் கணக்கு |
| (5) பிற கடன்கள் | (5) முதலீடுகள் மதிப்பு ஏற்றிறக்க நிதி (Investment Fluctuation Fund) | (5) கடனீட்டுப் பத்திர தள்ளுபடிக் கணக்கு |
| (6) தொழிலர் இலாபப் பங்கேற்பு நிதி (Workmen's Profit Sharing Fund) | (6) பங்காதாயச் சமன் செய் நிதி | (6) பங்குக் கழிவு அல்லது கடனீட்டுப் பத்திரக் கழிவு |
| (7) தொழிலர் சேமிப்பு வங்கிக் கணக்கு | (7) மேம்பாட்டுத் தள்ளுபடிக் காப்பு | (7) இலாப-நட்டக் கணக்கு (ப) |
| (8) நலக்காப்பு நிதி (Provident Fund) | (8) காப்பீட்டு நிதி | |
| (9) ஓய்வூதிய நிதி (Pension Fund) | (9) தொழிலர் விபத்து நிதி | |
| (10) மூப்போய்வு நிதி (Superannuation Fund) | (10) தொழிலர் நட்டஈட்டு நிதி | |
| | (11) ஒறுப்பிழப்புச் செய்யப்பட்ட பங்குகள் கணக்கு | |
| | (12) முதல் மீட்புக் காப்புக் கணக்கு | |
| | (13) முதல் காப்பு. | |

**கொள்முதல் மறு பயன்** (Purchase Consideration)

விற்கும் கம்பெனிக்கு வாங்கும் கம்பெனி விலை கொடுக்கும். இதனையே கொள்முதல் மறுபயன் என்கிறோம். ரொக்கம் கொடுத்தோ, வாங்கும் கம்பெனி தன் பங்குகளைக் கொடுத்தோ அல்லது கடன்பத்திரங்களை வழங்கியோ இவ் விலையைத் தீர்க்கும். கொடுக்கும் விலையைக் கண்டுபிடித்தல் இக் கணக்குகளில் முக்கியமான பகுதியாகும்.

### கொள்முதல் மறுபயனை அறியும் முறைகள்

சில வேளைகளில் வாங்கும் கம்பெனி விற்கும் கம்பெனிக்குக் குறிப்பிட்ட தொகையைக் கொள்முதல் மறுபயனுகக் கொடுக்கிறது என்று நேரிடையாகக் கொடுத்து இருப்பார்கள். இந் நிலையில் தொல்லை ஏதுமில்லை. எடுத்துக்காட்டாக, பாண்டியன் கம்பெனியைச் சேரன் கம்பெனி எடுத்துக்கொள்கிறது என்றும், அதற்காக அது ரூ. 10,00,000 தருகிறது என்றும் கொண்டால், இவ்வாறு கொடுக்கப்படும் ரூ. 10,00,000 கொள்முதல் மறுபயனுகும். இதனைத் தனியாக மதிப்பிடத் தேவையில்லை.

சில வேளைகளில் இறுதியாகச் செலுத்தவேண்டிய தொகையைக் கணக்கிடவேண்டி இருக்கலாம். இது நிகர செலுத்தும் முறை (Net Payment Method) என்றும் அழைக்கப்படுகிறது. இந் நிலையில் வாங்கும் கம்பெனி கொடுக்கவேண்டிய எல்லாத் தொகைகளையும் ஒன்ருகக் கூட்டவேண்டும். இதன் மொத்தத் தொகையே கொள்முதல் மறுபயனுக அமையும். ஆனல், இவ்வாறு செலுத்துவது ஒரு பகுதி ரொக்கமாகவும், ஒரு பகுதி பங்குகளாகவும், ஒரு பகுதி கடன் பத்திரங்களாகவும் இருக்கலாம். இவ்வாறு பல வடிவங்களில் கொடுக்கப்படும் விலையை முதலில் உணரவேண்டும். பிறகு அம் மதிப்புகள் அனைத்தையும் ஒன்ருகக் கூட்டின், கொள்முதல் மறுபயன் கிடைக்கிறது. அம் முறையில் கணக்கிடப்படும் கொள்முதல் மறுபயனிலிருந்து தொகை எதையும் கழிக்கக்கூடாது என்பதை மறத்தல் ஆகாது. வாங்கும் கம்பெனி கடனீந்தோருக்காகச் செலுத்த வேண்டியிருப்பினும், பங்குநர்கட்குச் செலுத்தவேண்டியிருப்பினும், கடனீட்டுப் பத்திர தாரர்கட்குச் செலுத்தவேண்டியிருப்பினும் அல்லது கலைப்புச் செலவுகட்காகச் செலுத்தவேண்டியிருப்பினும் கவலையில்லை. அது செலுத்தும் தொகைகள் அனைத்தையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். சுருங்கக் கூறின்,

(அ) ரொக்கமாகவோ, பங்குகள் வாயிலாகவோ அல்லது கடனீட்டுப் பத்திரங்கள் வாயிலாகவோ செலுத்தவேண்டிய தொகைகள் அனைத்தையும் கூட்டுக.

(ஆ) பங்குநர்கட்காயினும், கடனீந்தோருக்காயினும், கடனீட்டுப் பத்திரதாரர்கட்காயினும், கலைப்புச் செலவிற்காயினும் செலுத்தவேண்டிய தொகைகள் அனைத்தையும் கூட்டுக.

வாங்கும் கம்பெனி ஏற்றுக்கொள்ளும் பொறுப்புகளைப் பொருட்படுத்த வேண்டியதில்லை. அப் பொறுப்புகளை மேற்

சொன்னவாறு கூட்டப்படும் தொகையுடன் கூட்டுதலோ, அதி லிருந்து கழித்தலோ கூடாது.

வாங்கும் கம்பெனி தன் பங்குகளைக் கொள்முதல் மறு பயனில் ஒரு பகுதியாக வெளியிடும்பொழுது அப் பங்கின் மதிப்பை நிர்ணயிப்பதில் உடன்பாடு ஏற்படவேண்டும். சந்தை விலை கொடுக்கப்பட்டு அவ் வீதத்தில் பங்குகள் வெளியிடப் பட்டிருக்கின்றனவா அல்லது பெயரளவு மதிப்பில் வெளியிடப் பட்டிருக்கின்றனவா என்பதை முதலில் உணரவேண்டும்.

**எடுத்துக்காட்டு 111**

சேரன் கம்பெனி பாண்டியன் கம்பெனிக்குக் கீழ்க்கண்ட வாறு கொள்முதல் மறுபயனைச் செலுத்துகிறது.

(அ) பாண்டியன் கம்பெனியிலுள்ள ஒவ்வொரு பங்குகட் கும் தன் கம்பெனியின் ரூ. 20 மதிப்புடைய 5 பங்குகள் வீதம் (அவற்றின் சந்தை மதிப்பு ஒன்று ரூ. 25. இதனடிப்படையில் பங்குகள் வெளியிடப்படுகின்றன).

(ஆ) பாண்டியன் கம்பெனியின் ஒவ்வொரு பங்கிற்கும் ரூ. 15 ரொக்கம்.

(இ) பாண்டியன் கம்பெனியின் கடனீட்டுப் பத்திரங்களை 10 சதவீதம் முனைமத்தில் தீர்த்தல் (தனது கடனீட்டுப் பத்திரங் களை வழங்குவதன்மூலம்).

பாண்டியன் கம்பெனியில் ஒன்று ரூ. 100 மதிப்புடைய 3,000 பங்குகளும், 5 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் ரூ. 1,00,000-ற்கும் இருக்கின்றன என்று கொண்டு கொள்முதல் மறுபயனைக் கண்டுபிடிக்க.

**விடை :**

**சோழன் கம்பெனி பாண்டியன் கம்பெனிக்கு ஒதுக்கும் பங்குகள்**

ஒவ்வொரு பங்கிற்கும் 5 பங்குகள் வீதம் தருவதால் மொத் தம் ஒதுக்கப்படும் பங்குகள் :

3,000 × 5

= 15,000 பங்குகள்.

பங்குகளின் விலை 15,000 × 25

= ரூ. 3,75,000

**சோழன் கம்பெனி தரும் ரொக்கம்**

ஒவ்வொரு பங்கிற்கும் ரூ. 15

எனவே, = 3,000 × 15

= ரூ. 45,000

**சோழன் கம்பெனி வெளியிடும் கடனீட்டுப் பத்திரங்களின் மதிப்பு**

10 சதவீதம் முனைமத்தில் கடனீட்டுப் பத்திரங்கள் தீர்க்கப் படுவதால் மொத்தம் செலுத்தும் தொகை

$$= 1,00,000 \times \frac{110}{100}$$

= ரூ. 1,10,000

| | ரூ. |
|---|---|
| கொள்முதல் மறுபயன் : | |
| பங்குகள் | 3,75,000 |
| ரொக்கம் | 45,000 |
| கடனீட்டுப் பத்திரங்கள் | 1,10,000 |
| கொள்முதல் மறு பயன் | 5,30,000 |

**நிகர சொத்து முறை** (Net Assets Method)

மேற்குறித்தவாறு தேவையான விளக்கங்களைக் கொடுக்காமலேயே பல வேளைகளில் கொள்முதல் மறுபயனைக் கணக்கிட வேண்டியிருக்கும். அந் நிலையில் வாங்கும் கம்பெனி விற்கும் கம்பெனியின் (கலைக்கப்படும் கம்பெனியின்) எல்லாச் சொத்துகளையும், பொறுப்புகளையும் எடுத்துக்கொள்கிறதா என்பதை நோக்கவேண்டும். அத்துடன், ஏட்டு மதிப்பிலேயே எடுத்துக் கொள்கிறதா அல்லது மறு மதிப்பீடு செய்து அம் மதிப்புகளில் எடுத்துக்கொள்கிறதா என்பதையும் பார்க்கவேண்டும். எச் சொத்துகளை வாங்கும் கம்பெனி எடுத்துக்கொள்கிறதோ, அச் சொத்துகளின் மறு மதிப்பீட்டு விலைகளைக் கூட்டவேண்டும். அத் தொகையிலிருந்து கம்பெனி எடுத்துக்கொள்ளும் பொறுப்புகளின் தொகையைக் கழித்துவிட வேண்டும். மீதி இருக்கின்ற தொகையே கொள்முதல் மறுபயனாகும். அதாவது, பின் கண்டவாறு இது கணக்கிடப்படுகிறது.

**கூட்டு :**

| | ரூ. |
|---|---|
| எடுத்துக்கொள்ளும் சொத்துகள் : (ஒப்புக்கொள்ளப் பட்ட மதிப்பில்) | |
| ........................ | .. |
| ........................ | .. |
| ........................ | .. |
| ........................ | .. |
| எடுத்துக்கொண்ட சொத்துகளின் மொத்த மதிப்பு | |

**கழி :**

| | |
|---|---|
| எடுத்துக்கொண்ட பொறுப்புகள் : | |
| ........................ | .. |
| ........................ | .. |
| ........................ | .. |
| ........................ | .. |
| | .. |
| கொள்முதல் மறுபயன் | .. |

**நினைவிற் கொள்க :**

*(1)* நிகர செலுத்து முறையைப் பின்பற்ற முடியாது என்றால் மட்டுமே இரண்டாவது முறையை, அதாவது நிகர சொத்து முறையைப் பின்பற்றவேண்டும்.

*(2)* விற்குநருக்குக் கொள்முதல் மறுபயன் செலுத்துவதில் ஏதேனும் ஒரு தொகை விடுபட்டிருப்பின், முதல் முறையைப் பின்பற்ற முடியாது என்பதைத் தெரிந்துகொள்ளலாம். எடுத்துக் காட்டாக, ஒரு கம்பெனி ஒன்று ரூ. 100 மதிப்புடைய 2,000 பங்குகளையும், ஒன்று ரூ. 100 மதிப்புடைய 1,000—5 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்களையும், மீதியை ரொக்கமாகவும் கொடுக்கிறது என்று கொள்வோம். இப்பொழுது மீதியை ரொக்கமாகக் கொடுக்கிறது என்று கொடுக்கப்பட்டிருப்பதால், அக் கம்பெனி ரொக்கமாகச் செலுத்தும் தொகையை வேறு முறையைப் பின்-

பற்றியே கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. ரொக்கம் இவ்வளவு தொகை கொடுக்கிறது என்று தெளிவாகக் கொடுக்கப்பட்டிருப்பின், மேற்சொன்ன எடுத்துக்காட்டில் முதல் முறையைப் பின்பற்றிக் கொள்முதல் மறுபயனை அறியமுடியும். ஆனால், ரொக்கம் செலுத்தும் தொகை கொடுக்கப்படவில்லையாதலால், முதல் முறையைப் பின்பற்றாது, நிகர சொத்து முறையைப் பின்பற்றியே கொள்முதல் மறுபயனை அறியமுடியும்.

*(3)* முதல் முறையில் விற்கும் கம்பெனிக்குச் செலுத்தும் தொகையை மட்டும் (பங்குகள் வடிவத்திலாயினும், கடனீட்டுப் பத்திரங்கள் வடிவத்திலாயினும், ரொக்கத்திலாயினும்) கருத்தில் கொள்ளவேண்டும். வாங்கும் கம்பெனி ஏற்றுக்கொள்ளும் பொறுப்புகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ளக் கூடாது.

## எடுத்துக்காட்டு 112

புதுவைக் கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்பு கீழ்க்கண்டவாறு இருந்தது :

### இருப்புநிலைக் குறிப்புகள்

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| **பங்குமுதல் :** | | கட்டடம் | 1,75,000 |
| **ஒன்று ரூ. 100 மதிப்புடைய 5,000 பங்கு**கள் பங்கு ஒன்றுக்கு ரூ. 80 வரை செலுத்தப்பட்டது. | 4,00,000 | பொறிவகை | 2,20,000 |
| | | முதலீடுகள் | 25,000 |
| | | சரக்கிருப்பு | 72,000 |
| | | கடனாளிகள் | 65,000 |
| | | வங்கி | 15,000 |
| பொதுக்காப்பு | 20,000 | தொடக்கச் செலவு | 8,000 |
| பங்காதாயச் சமன்செய் காப்பு | 25,000 | | |
| 5 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் | 1,00,000 | | |
| கடனீந்தோர் | 35,000 | | |
| | 5,80,000 | | 5,80,000 |

**புதுவைக் கம்பெனியைத் தமிழ்நாடு கம்பெனி எடுத்துக் கொள்கிறது**

கட்டடம் ரூ. 2,25,000 எனவும், சரக்கிருப்பு ரூ. 85,000 எனவும், முதலீடுகள் ரூ. 15,000 எனவும், கடனாளிகள் ரூ. 55,000 எனவும் மறு மதிப்பீடு செய்யப்பட்டன. கடனீந்தோரைத் தமிழ்நாடு கம்பெனி ஏற்றுக்கொள்கிறது. ரூ. 80,000-ஐ ரொக்கமாகவும், மீதித் தொகைக்கு ஒன்று ரூ. 100 பெயரளவு மதிப்புடைய தனது பங்குகளை ரூ. 90 செலுத்தப்பெற்றவையாகச் சந்தை மதிப்பில் (market value) வெளியிட்டுக் கொள்முதல் மறுபயனைத் தீர்க்கவேண்டியது என்றும் தமிழ்நாடு கம்பெனிப் பங்குகளின் சந்தை மதிப்பு ரூ. 100 என்றும் ஒப்புக்கொள்ளப் பட்டது.

கொள்முதல் மறுபயனைக் கண்டுபிடி :

**விடை :**

| | ரூ. |
|---|---|
| தமிழ்நாடு கம்பெனி எடுத்துக் கொள்ளும் சொத்துகளின் மதிப்பு: | |
| கட்டடம் | 2,25,000 |
| பொறிவகை | 2,20,000 |
| முதலீடுகள் | 15,000 |
| சரக்கிருப்பு | 85,000 |
| கடனாளிகள் | 55,000 |
| வங்கி | 15,000 |
| (தொடக்கச் செலவு உண்மையான சொத்து அல்ல; எனவே, இங்குச் சேர்க்கப்படவில்லை) | 6,15,000 |
| **கழி :** | |
| தமிழ்நாடு கம்பெனி ஏற்றுக் கொள்ளும் பொறுப்பு : | |
| கடனீந்தோர் | 35,000 |
| கொள்முதல் மறுபயன் | ரூ. 5,80,000 |

கொள்முதல் மறுபயனைத் தீர்க்கும் முறை :

| | |
|---|---|
| கொள்முதல் மறுபயன் | ரூ. 5,80,000 |
| **கழி :** | |
| ரொக்கம் | ரூ. 80,000 |
| தமிழ்நாடு கம்பெனி வெளியிடும் பங்குகளின் மொத்த மதிப்பு | ரூ. 5,00,000 |

ரூ. 90 வரை செலுத்தப்பெற்ற பங்கு ஒன்றின் சந்தை மதிப்பு ரூ. 100 என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, தமிழ்நாடு கம்பெனி 5,000 பங்குகளை வெளியிட்டால் போதும்.

$$\left(\frac{5,00,000}{100} = 5,000\right)$$

பெயரளவு மதிப்பு ரூ. 100 உடைய 5,000 பங்குகளைத் தமிழ்நாடு கம்பெனி பங்கு ஒன்றுக்கு ரூ. 90 செலுத்தப்பெற்ற தாக வெளியிடுகிறது.

**பின்னப் பங்குகள்** (Fractional Shares)

கொள்முதல் மறுபயனின் ஒரு பகுதியாகக் கம்பெனி தனது பங்குகளை வெளியிடுகிறது என்று கூறியிருக்கிறோம். ஆனால், சில வேளைகளில் குறிப்பிட்ட விகிதத்தில் வாங்கும் கம்பெனி பங்குகளைத் தருவதாக இருக்கலாம். அந் நிலையில் சில பங்குகளைப் பின்னத்தில் கொடுக்கவேண்டியிருக்கும். ஆனால், ஒரு கம்பெனி தனது பங்கைப் பிரித்துப் பின்னமாகக் கொடுக்கமுடியாது. அந் நிலையில் ஒப்புக்கொள்ளப்பட்ட மதிப்பினளவில் அப் பின்னப் பங்கின் மதிப்பைக் கணக்கிட்டு, ரொக்கமாகச் செலுத்துவது வழக்கம். பொதுவாக அப் பங்கின் சந்தை மதிப்பின் அடிப்படையில் பின்னப் பங்கின் மதிப்பு கணக்கிடப்படும்.

**எடுத்துக்காட்டு 113**

ஒரு கம்பெனி வேறொரு கம்பெனியை எடுத்துக்கொள்ளும் போழ்து ஒவ்வொரு 7 பங்குகட்கும் தனது கம்பெனியின் 3 பங்குகளை வழங்குகிறது என்று கொள்வோம். தனது பங்கின் பெயரளவு மதிப்பு ரூ. 100 என்றும், பங்கு ஒன்றுக்கு ரூ. 90 செலுத்தப்பட்டதாக அது வெளியிடுவதாகவும் கொள்வோம்

விற்கும் கம்பெனியில் 3,000 பங்குகள் இருக்கின்றன. வாங்கும் கம்பெனிப் பங்கின் சந்தை மதிப்பு ரூ. 125 என்று கொண்டு கொள்முதல் மறு பயனைக் கண்டுபிடி.

**விடை :**

ஒவ்வொரு 7 பங்கிற்கும் வாங்கும் கம்பெனி கொடுப்பது
= 3 பங்குகள்

3,000 பங்குகட்கு வாங்கும் கம்பெனி கொடுக்க வேண்டியது
$= 3,000 \times \frac{3}{7} = 1,285 \frac{5}{7}$

**வாங்கும் கம்பெனி எல்லாப் பங்குகளையும் சந்தை மதிப்பில் வெளியிடவில்லையென்பதையும், பின்னப் பங்கைக் கணக்கிட மட்டுமே சந்தை மதிப்பைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதையும் உணரவேண்டும்.** எனவே, கொள்முதல் மறு பயனைக் கீழ்க்கண்டவாறு கணக்கிடவேண்டும்.

| | |
|---|---|
| 1285 × ரூ. 90 | 1,15,650—00 |
| $\frac{5}{7}$ × ரூ. 125 | 89—29 |
| மொத்தக் கொள்முதல் மறு மறுபயன் ரூ. | 1,15,739—29 |

வாங்கும் கம்பெனி ஒன்று ரூ. 100 மதிப்புடைய 1285 பங்குகளை ரூ. 90 செலுத்தப்பெற்றதாகவும் ரூ. 89.29 ரொக்கமாகவும் கொடுத்துக் கொள்முதல் மறு பயனைத் தீர்க்கிறது.

## எடுத்துக்காட்டு 114

'A' கம்பெனி 'B' கம்பெனியை எடுத்துக்கொள்வதாகவும், 'B' கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்பு கீழ்க்கண்டவாறு இருப்பதாகவும் கொள்வோம்.

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : ஒன்று ரூ. 10 மதிப்புடைய 20,000 பங்குகள் முழுதும் செலுத்தப் பெற்றவை | 2,00,000 | பலவகைச் சொத்துகள் | 2,50,000 |
| | | தொடக்கச் செலவு | 10,000 |
| கடனீட்டுப் பத்திரங்கள் | 1,00,000 | இலாப-நட்டக் கணக்கு | 40,000 |
| | 3,00,000 | | 3,00,000 |

*'B'* கம்பெனிப் பங்கின் சந்தை மதிப்பு ரூ. 7 எனவும், *'A'* கம்பெனிப் பங்கின் சந்தை மதிப்பு ரூ. 14 எனவும் கொள்க. பங்குகளையும், சந்தை மதிப்பையும் அடிப்படையாகக் கொண்டு கொள்முதல் மறுபயனைக் கணக்கிடுக.

**விடை :**

| | |
|---|---|
| *'B'* கம்பெனியின் மொத்தப் பங்குகள் | 20,000 |
| மொத்தப் பங்குகளின் சந்தை மதிப்பு | 20,000 × ரூ. 7 |
| கொள்முதல் மறுபயன் | 1,40,000 |

கொள்முதல் மறுபயனை *'A'* கம்பெனி தனது பங்குகளை வெளியிட்டுத் தீர்க்கிறது.

| | |
|---|---|
| *'A'* கம்பெனிப் பங்கின் சந்தை மதிப்பு | ரூ. 14 |
| எனவே வெளியிட வேண்டிய பங்குகள் | $\frac{1,40,000}{14}$ |
| | = 10,000 பங்குகள் |

**கணக்குகளில் பதிதல்**

மேற்கண்ட நடவடிக்கைகளை விற்கும் கம்பெனி ஏடுகளிலும் வாங்கும் கம்பெனியின் ஏடுகளிலும் செய்யவேண்டிய பதிவுகளை இனிக் காண்போம்.

**விற்கும் கம்பெனியின் ஏடுகளில் பதிதல்**

(1) முதலில் தீர்வுக் கணக்கு (Realisation Account) என்று ஒன்றைத் தொடங்கவேண்டும். அதில் கொடுக்கப்பட்டிருக்கும் ஏட்டு மதிப்பில் சொத்துகள் அனைத்தையும் மாற்றவேண்டும். அதாவது, தீர்வுக் கணக்கில் பற்றும், சொத்துகள் கணக்கில் தனித்தனியாக வரவும் வைக்கவேண்டும்.

இப் பதிவின் மூலமாகச் சொத்துக் கணக்குகள் அனைத்தும் முடிக்கப்பெறுகின்றன. **வாங்கும் கம்பெனி ரொக்கத்தையோ, வங்கியிருப்பையோ எடுத்துக்கொள்ளவில்லையெனில், அவைகளைத் தீர்வுக் கணக்கிற்கு மாற்றக்கூடாது. ஆனால், பிற**

**சொத்துகளை வாங்கும் கம்பெனி எடுத்துக் கொண்டாலும், எடுத்துக் கொள்ளாவிட்டாலும், தீர்வுக் கணக்கிற்கு மாற்றியே யாக வேண்டும்.**

இருப்புநிலைக் குறிப்பில் காணப்படும் தொடக்கச் செலவுகள் பங்கு அல்லது கடன்பத்திரத் தள்ளுபடி, இலாப-நட்டக் கணக்கு (நட்டம்) போன்ற கணக்குகளைத் தீர்வுக் கணக்கிற்கு மாற்றக் கூடாது. இக் கணக்குகள் நட்ட வகையைச் சார்ந்தன ஆதலால், இவற்றை நேர்மைப் பங்குநர் கணக்கிற்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

(2) வாங்கும் கம்பெனி எடுத்துக்கொள்ளும் பொறுப்புகளை மட்டும் தீர்வுக் கணக்கிற்கு ஏட்டு மதிப்பில் மாற்றவேண்டும். அதாவது, எடுத்துக்கொள்ளும் ஒவ்வொரு பொறுப்புக் கணக்கில் பற்றும், தீர்வுக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

இதன்மூலம் பொறுப்புக் கணக்குகள் முடிக்கப்பெறுகின்றன. சேர்த்து வைக்கப்பட்ட இலாபங்களை (Accumulated Profits) பொறுப்புகளாகக் கருதக்கூடாது.

வாங்கும் கம்பெனி உடனடியாகத் தீர்க்கக்கூடிய பொறுப்பு களைக் கம்பெனி எடுத்துக்கொள்வதாகக் கருதக்கூடாது. எடுத்துக் காட்டாக, விற்கும் கம்பெனியின் கடனீட்டுப் பத்திரங்களை வாங்கும் கம்பெனி தீர்க்கிறது, என்று கொடுக்கப்பட்டிருப்பின், கடனீட்டுப் பத்திரங்கள் எனும் பொறுப்பை வாங்கும் கம்பெனி எடுத்துக்கொள்வதாகக் கருதக்கூடாது. எனவே, இப் பொறுப்புக் கணக்கைத் தீர்வுக் கணக்கிற்கு மாற்றக்கூடாது.

இருப்புநிலைக் குறிப்பில் பொறுப்புகள் பகுதியில் காணப் படும் நட்டஈட்டு நிதி போன்ற கணக்குப் பொறுப்பை உணர்த்து மாயின், இந் நிதிக் கணக்கையும் தீர்வுக் கணக்கிற்கு மாற்ற வேண்டும். இந் நிதிக் கணக்கின் ஒரு பகுதி மட்டுமே பொறுப் பாக இருப்பின், பொறுப்பாகவுள்ள அப் பகுதியை மட்டுமே தீர்வுக் கணக்கிற்கு மாற்றவேண்டும். எடுத்துக்காட்டாக, விபத்து நட்டஈட்டு நிதி ரூ. 15,000 என்றும், விபத்தின் காரணமாகப் பொறுப்பு ஏதுமில்லையென்றும் கொண்டால், இவ் விபத்து நிதியில் காணப்படும் ரூ. 15,000-மும் ஆதாயமாகக் கொண்டு தீர்வுக் கணக்கிற்கு எடுத்துச் செல்லாமல், பங்குநர்கள் கணக்கிற்கு மாற்ற வேண்டும். அவ்வாறின்றி ரூ. 5,000 நட்டஈடு கொடுக்கவேண்டி

யிருப்பின், ரூ. 5,000-ஐ மட்டுமே தீர்வுக் கணக்கிற்கு மாற்ற வேண்டும். கீழ்க்கண்டவாறு பதிவு இருக்கும்.

| | | |
|---|---|---|
| விபத்து நட்ட ஈட்டு நிதி ப | 15,000 | |
| தீர்வுக் கணக்கு | | 5,000 |
| நேர்மைப் பங்குநர்கள் | | 10,000 |

(3) கொள்முதல் மறுபயனைப் பதிதல் : வாங்கும் கம்பெனிக் கணக்கில் பற்றும், தீர்வுக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

(4) வாங்கும் கம்பெனி கொள்முதல் மறு பயனைத் தீர்க்கும்போழ்து, ரொக்கம், பங்குகள், கடனீட்டுப் பத்திரங்கள் போன்றவற்றை வழங்குவது வழக்கம். அந் நிலையில் வங்கிக் கணக்கிலும், வாங்கும் கம்பெனியின் பங்குகள் கணக்கிலும், வாங்கும் கம்பெனியின் கடனீட்டுப் பத்திரங்கள் கணக்கிலும் பற்றுவைக்கவேண்டும். இவற்றின் மொத்தத் தொகைக்குக் (கொள்முதல் மறு பயன் தொகைக்கு) வாங்கும் கம்பெனிக் கணக்கில் வரவு வைக்கவேண்டும்.

(5) வாங்கும் கம்பெனி எடுத்துக்கொள்ளாத சொத்தை, விற்கும் கம்பெனி (கலைக்கப்படும் கம்பெனி) இப்பொழுது விற்கும். இதில் கிடைத்த தொகைக்கு வங்கிக் கணக்கில் பற்றும், தீர்வுக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

விற்கும் கம்பெனி வாங்கும் கம்பெனி எடுத்துக்கொள்ளாத சொத்தை விற்கும்போழ்து, சொத்துக் கணக்கில் வரவு வைக்கக் கூடாது. காரணம், எல்லாச் சொத்துகளையும் தீர்வுக் கணக்கிற்கு மாற்றிச் சொத்துக் கணக்குகள் அனைத்தையும் முதலிலேயே முடித்துவிட்டோம் அல்லவா?

(6) அவ்வாறே விற்கும் கம்பெனி, பொறுப்புகள் எதை யாவது தீர்க்கவேண்டியிருப்பின் (வாங்கும் கம்பெனி எடுத்துக் கொள்ளாத பொறுப்புகளை) அப் பொறுப்புக் கணக்கில் பற்றும், வங்கிக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

இருப்புநிலைக் குறிப்பில் காணப்படும் பொறுப்புத் தொகைக் கும், தீர்க்கப்படும் பொறுப்புத் தொகைக்கும் வேறுபாடு இருப் பின், அவ் வேறுபாட்டுத் தொகையைத் தீர்வுக் கணக்கிற்கு எடுத்துச்செல்ல வேண்டும். எடுத்துக்காட்டாக, கடன்பத்திரங் கள் ரூ. 2,00,000 என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இது

5 சதவீதம் முனைமத்தில் தீர்க்கப்பட வேண்டியிருப்பின், கடனீட்டுப் பத்திரதாரர்கட்கு ரூ. 2,10,000 கொடுக்க வேண்டியிருக்கிறது. எனவே, கூடுதலாகக் கொடுக்கவேண்டிய ரூ. 10,000-ஐத் தீர்வுக் கணக்கில் பற்று வைக்கவேண்டும். கீழ்க் கண்டவாறு பதிவு அமையும்.

| | | | |
|---|---|---|---|
| கடனீட்டுப் பத்திரங்கள் கணக்கு | ப | 2,00,000 | |
| தீர்வுக் கணக்கு | ப | 10,000 | |
| கடனீட்டுப் பத்திரதாரர்கள் | | | 2,10,000 |
| (கடனீட்டுப் பத்திரங்களை 5 சதவீதம் முனைமத்தில் மீட்க, கடனீட்டுப் பத்திரதாரர்கள் கணக்கிற்கு எடுத்துச் செல்ல.) | | | |

பின்னர், கடனீட்டுப் பத்திரதாரர்கட்கு ரூ. 2,10,000-ஐத் தரவேண்டும். அப்பொழுது செய்யவேண்டிய பதிவு :

| | | | |
|---|---|---|---|
| கடனீட்டுப் பத்திரதாரர்கள் கணக்கு | ப | 2,10,000 | |
| வங்கிக் கணக்கு | | | 2,10,000 |
| (கடனீட்டுப் பத்திரதாரர்கட்குத் தொகை செலுத்தியது.) | | | |

வாங்கும் கம்பெனியின் கடனீட்டுப் பத்திரங்களை விற்கும் கம்பெனியின் கடனீட்டுப் பத்திரதாரர்கட்குக் கொடுத்து அவர்களின் பொறுப்பைத் தீர்க்கவேண்டியிருப்பின், கடனீட்டுப்பத்திரதாரர்கள் கணக்கில் பற்றும், வாங்கும் கம்பெனியின் கடனீட்டுப் பத்திரங்கள் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

(7) வாங்கும் கம்பெனி எடுத்துக்கொள்ளாப் பொறுப்பு குறைந்த தொகை கொடுத்து தீர்க்கப்படுமாயின், இதில் ஆதாயம் ஏற்படுகிறது. இவ்வாதாயத் தொகையைத் தீர்வுக் கணக்கில் வரவு வைக்கவேண்டும். எடுத்துக்காட்டாக, ரூ. 20,000-ற்கான கடனீந்தோரை வாங்கும் கம்பெனி எடுத்துக்கொள்ளவில்லையென்றும், அது 10 சதவீதம் தள்ளுபடியில் விற்கும் கம்பெனி

யால் தீர்க்கப்படுகிறது என்றும் கொண்டால், ரூ. 2,000 இதில் ஆதாயம் கிட்டியது. இதனைக் கீழ்க்கண்டவாறு பதியலாம்.

| | | | |
|---|---|---|---|
| கடனீந்தோர் கணக்கு | ப | 20,000 | |
| வங்கிக் கணக்கு | | | 18,000 |
| தீர்வுக் கணக்கு | | | 2,000 |
| (ரூ. 20,000-ற்கான கடனீந்தோரை 10 சத வீதம் தள்ளுபடியில் செலுத்தித் தீர்த்தது.) | | | |

(8) கலைப்புச் செலவுகள் (Liquidation or Realisation Expenses).

(அ) கலைப்புச் செலவுகளைப் பதிவதில் ஆழ்ந்த கவனம் செலுத்தவேண்டும். இதனை விற்கும் கம்பெனியே ஏற்கவேண்டியிருப்பின்,

தீர்வுக் கணக்கில் பற்றும்,

வங்கிக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்

(ஆ) வாங்கும் கம்பெனி இச் செலவினை ஏற்பதாகவிருப்பின், இரண்டு முறைகளைப் பின்பற்றலாம். ஒன்று, இந் நடவடிக்கைகளைப் பதியத் தேவையில்லை. இரண்டு, முதலில் கலைப்புச் செலவை விற்கும் கம்பெனி ஏற்கும்போழ்து.

வாங்கும் கம்பெனிக் கணக்கில் பற்றும்

வங்கிக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

பின்னர், இவ்வாறு செலவழித்த தொகையை வாங்கும் கம்பெனியிடமிருந்து பெறும்போழ்து,

வங்கிக் கணக்கில் பற்றும்

வாங்கும் கம்பெனிக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

(இ) சில வேளைகளில் கலைப்புச் செலவு, கொள்முதல் மறுபயனின் ஒரு பகுதியாகக் கருதப்படலாம். அந் நிலையில் இச் செலவுத் தொகையானது கொள்முதல் மறு பயனிலேயே சேர்க்கப் பட்டுவிடுகிறது. கொள்முதல் மறு பயனைத் தீர்வுக்

கணக்கில் வரவு வைக்கும்போழ்து, வரவுப் பகுதியில் இது இடம் பெற்று விடுகிறது. எனவே, பின்னர் இச் செலவினை ஏற்கும்போழ்து,

தீர்வுக் கணக்கில் பற்றும்,
வங்கிக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

*(9)* முன்னுரிமைப் பங்குமுதல் கணக்கை, முன்னுரிமைப் பங்குநர் கணக்கிற்கு மாற்றவேண்டும். இதற்கு

*(அ)* முன்னுரிமைப் பங்குமுதல் கணக்கில் பற்றும்
முன்னுரிமைப் பங்குநர் கணக்கில் வரவும்
வைக்கவேண்டும்.

*(ஆ)* முன்னுரிமைப் பங்குநர்கட்கு நிலுவையிலுள்ள பங்காதாயத்தை வழங்கவேண்டியிருப்பின், இதனை முன்னரே தீர்வுக் கணக்கிற்கு எடுத்துச் செல்லவேண்டும். இதற்கு,

தீர்வுக் கணக்கில் பற்றும்,
முன்னுரிமைப் பங்குநர் கணக்கில் வரவும்
வைக்கவேண்டும்

பின்னர், முன்னுரிமைப் பங்குநர்கட்கு முழுத் தொகையையும் (முன்னுரிமைப் பங்குமுதல் தொகை + பங்காதாய நிலுவை) செலுத்த, முன் விளக்கியவாறே முன்னுரிமைப் பங்குநர் கணக்கில் பற்றும், வங்கிக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

*(10)* இப்பொழுது தீர்வுக் கணக்கானது இலாபத்தையோ, நட்டத்தையோ உணர்த்தலாம். இதனை நேர்மைப் பங்குநர் கணக்கிற்கு மாற்றவேண்டும். இலாபம் ஏற்பட்டிருப்பின்,

தீர்வுக் கணக்கில் பற்றும்
நேர்மைப் பங்குநர் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்

நட்டம் ஏற்பட்டிருப்பின்,

நேர்மைப் பங்குநர் கணக்கில் பற்றும்,
தீர்வுக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

*(11)* இப்பொழுது நேர்மைப் பங்குமுதல் கணக்கை, நேர்மைப் பங்குநர் கணக்கிற்கு மாற்றவேண்டும். இதற்கு,

(அ) நேர்மைப் பங்குமுதல் கணக்கில் பற்றும்,
நேர்மைப் பங்குநர் கணக்கில் வரவும்
வைக்கவேண்டும்.

(ஆ) இருப்புநிலைக் குறிப்பில் பொதுக்காப்பு, கடனீட்டுப் பத்திர மீட்புநிதி, பங்காதாயச் சமன்செய் காப்பு, தொழிலர் நட்டஈட்டுக் காப்பு, இலாப-நட்டக் கணக்கு போன்ற சேர்த்து வைக்கப்பட்ட இலாபத்தை உணர்த்தக்கூடிய கணக்குகள் இருப்பின், இவற்றையெல்லாம் நேர்மைப் பங்குநர் கணக்கிற்கு மாற்ற வேண்டும். கீழ்க்கண்டவாறு பதிவு அமையும் :

| | |
|---|---|
| பொதுக்காப்புக் கணக்கு | ப |
| கடனீட்டுப் பத்திர மீட்பு நிதிக் கணக்கு | ப |
| பங்காதாயச் சமன்செய் காப்புக் கணக்கு | ப |
| தொழிலர் நட்டஈட்டு நிதி | ப |
| இலாப-நட்டக் கணக்கு | ப |
| நேர்மைப் பங்குநர் கணக்கு | |

(இ) நட்டத்தை உணர்த்தும் கணக்குகள் இருப்பின் (இலாப-நட்டக் கணக்கின் பற்றிருப்பு, தொடக்கச் செலவுகள், பங்கு அல்லது கடனீட்டுப் பத்திரத் தள்ளுபடி, ஒப்புறுதிக் கழிவு) இவற்றை நேர்மைப் பங்குநர் கணக்கிற்கு மாற்றவேண்டும். அதாவது, நேர்மைப் பங்குநர் கணக்கில் பற்றும், மேற்சொன்ன கணக்கில் தனித்தனியாக வரவும் வைக்கவேண்டும். கீழ்க்கண்ட வாறு பதிவு அமையும் :

| | |
|---|---|
| நேர்மைப் பங்குநர்கள் க/கு | ப |
| இலாப-நட்டக் கணக்கு | |
| தொடக்கச் செலவுகள் | |
| பங்கு அல்லது கடன்பத்திரத் தள்ளுபடி | |
| ஒப்புறுதிக் கழிவு | |

(12) இப்பொழுது நேர்மைப் பங்குநர்க்குச் சேரவேண்டிய தொகை தெரியும். இத் தொகையை ரொக்கமாகவும், வாங்கும் கம்பெனியின் பங்குகளாகவும் கொடுத்துத் தீர்க்கலாம். இதற்கு,

நேர்மைப் பங்குநர் கணக்கில் பற்றும்

வங்கிக் கணக்கில் அல்லது வாங்கும் கம்பெனிப் பங்குக் கணக்கில் அல்லது வாங்கும் கம்பெனியின் கடனீட்டுப் பத்திரங்கள் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

இந் நிலையில் விற்கும் கம்பெனியின் ஏடுகளிலுள்ள கணக்குகள் அனைத்தும் முடிக்கப்பெறும்.

**வாங்கும் கம்பெனியின் ஏடுகளில் பதிதல்**

*(1)* வேறொரு கம்பெனியை எடுத்துக்கொள்ளும்போழ்து முதலில் மொத்தம் செலுத்தவேண்டிய தொகையைக் குறிக்கத் தொழில் கொள்முதல் கணக்கு (Business Purchase Account) என்று ஒரு கணக்கைத் தொடங்குகிறோம். முதலில்,

தொழில் கொள்முதல் கணக்கில் பற்றும்

விற்கும் கம்பெனிக் கலைப்பாளர் கணக்கில் (Liquidator of the Vendor Company) வரவும் வைக்கவேண்டும்.

*(2)* எடுத்துக்கொண்ட பலவகைச் சொத்துகளையும் (வாணிக நற்பெயரைத் தவிர), பொறுப்புகளையும் கணக்கில் கொண்டுவர கம்பெனி மதிப்பிடும் விலையில்,

ஒவ்வொரு சொத்துக் கணக்கிலும் தனித்தனியாகப் பற்றும்

ஒவ்வொரு பொறுப்புக் கணக்கிலும் தனித்தனியாக வரவும்

தொழில் கொள்முதல் கணக்கில் (கொள்முதல் மறுபயன் அளவிற்கு) வரவும் .. வைக்கவேண்டும்.

மொத்த பற்றுத் தொகை, வரவுத் தொகையைவிடக் கூடுதலாக இருப்பின், இத் தொழிலை எடுத்துக் கொண்டதால் ஆதாயம் ஏற்பட்டதாகப் பொருள். எனவே, அவ் வேறுபாட்டுத் தொகையளவிற்கு முதல் காப்புக் கணக்கில் வரவு வைக்கவேண்டும்.

அவ்வாறின்றி, மொத்த வரவுத் தொகை பற்றுத் தொகையைவிடக் கூடுதலாக இருப்பின், நிகர சொத்துகள் மதிப்பைவிடக் கூடுதலாக விலை கொடுத்து இருக்கிறோமென்று பொருள். அவ் வேறுபாட்டுத் தொகையளவிற்கு வாணிக நற்பெயர் கணக்கில் பற்று வைக்கவேண்டும்.

வாணிக நற்பெயரோ முதல் காப்போ வரவுப் பகுதி கூடுதலாக உள்ளதா அல்லது பற்றுப் பகுதி கூடுதலாக உள்ளதா என்பதைப் பொருத்தே அமைகிறது.

(3) விற்கும் கம்பெனிக்குப் பின்னர் கொள்முதல் மறு பயனைத் தீர்க்கவேண்டும். முன்னர் விளக்கியவாறே, ரொக்கம் கொடுத்தும், பங்குகளைக் கொடுத்தும், கடனீட்டுப் பத்திரங்களைக் கொடுத்தும் இவ் விலைகளைத் தீர்க்கலாம். இதற்கு,

விற்கும் கம்பெனிக் கலைப்பாளர் கணக்கில் பற்றும்

வங்கிக் கணக்கில் வரவும்

பங்குமுதல் கணக்கில் வரவும்

கடனீட்டுப் பத்திரங்கள் கணக்கில் வரவும்

வைக்கவேண்டும்.

தனது பங்குகளை முனைமத்தில் வெளியிடுவதாயின், முனைமத் தொகையைப் **பங்கு முனைமக் கணக்கில் வரவு வைக்கவேண்டும்** என்பதை மறக்கக்கூடாது.

(4) விற்கும் கம்பெனியின் கலைப்புச் செலவைப் பொருத்த வரை, வாங்கும் கம்பெனி இதனை ஏற்கவேண்டியிருப்பின்,

வாணிக நற்பெயர் கணக்கில் பற்றும்,

வங்கிக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

வாணிக நற்பெயருக்கு மாறாக முதல் காப்பு இருப்பின், முதல் காப்புக் கணக்கில் பற்றும், வங்கிக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும். விற்கும் கம்பெனியின் கலைப்புச் செலவைத் தொழிலை வாங்கும்போழ்து ஏற்கவேண்டியிருப்பதால் இச் செலவு முதலீட்டுச் செலவாகக் கருதப்பட்டு வாணிக நற்பெயர் கணக்கில் பற்று வைக்கப்படுகிறது.

இக் கலைப்புச் செலவானது கொள்முதல் மறு பயனிலேயே சேர்க்கப்பட்டிருப்பின், வேறு பதிவு ஒன்றும் தேவையில்லை.

**எடுத்துக்காட்டு 115**

மதுரை மின் பொருள் கம்பெனியும் (வரையறு பொறுப் புடையது), திருச்சி கம்பெனியும் (வரையறு பொறுப்புடையது)

ஒன்றிணைந்து ‘தமிழ்நாடு மின் பொருள் கம்பெனி லிமிட்டெட்’ எனும் பெயரில் செயல்பட உடன்படுகின்றன. *1974* சூன் *30*-ல் முடியும் ஆண்டுக்கான இருப்புநிலைக் குறிப்புகள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

### மதுரை மின் பொருள் கம்பெனி
(வரையறு பொறுப்புடையது)

### 1974 சூன் 30-ற்கான இருப்புநிலைக் குறிப்பு

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : | | மனைத்துணைப் | |
| ஒன்று ரூ. *10* வீதம் *10,000* பங்குகள் முழுதும் செலுத்தப் பெற்றவை | *1,00,000* | பொருள் | *5,800* |
| | | சரக்கிருப்பு | *75,200* |
| | | கடனாளிகள் | *43,500* |
| கடனீந்தோர் | *40,000* | வங்கி | *18,500* |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | *10,000* | இலாப-நட்டக் கணக்கு | *7,000* |
| | *1,50,000* | | *1,50,000* |

### திருச்சி கம்பெனி (வரையறு பொறுப்புடையது)

### 1974 சூன் 30-க்கான இருப்புநிலைக் குறிப்பு

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : | | | |
| ஒன்று ரூ. *50* மதிப்புடைய *30,000* | | கட்டடம் | *60,000* |
| | | மனைத்துணைப் பொருள் | *15,700* |
| பங்குகள் முழுதும் செலுத்தப் | | சரக்கிருப்பு | *59,000* |
| பெற்றவை | *1,50,000* | கடனாளிகள் | *47,500* |
| பொதுக்காப்பு | *15,000* | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | *12,300* |
| பங்காதாயச் சமன் செய் காப்பு | *10,000* | வங்கி | *20,500* |
| இலாப-நட்டக் கணக்கு | *15,000* | | |
| கடனீந்தோர் | *25,000* | | |
| | *2,15,000* | | *2,15,000* |

மதுரை மின் பொருள் கம்பெனியின் சொத்துகளில் கடனாளிகளையும், சரக்கிருப்பையும் தவிர பிற சொத்துகளும், பொறுப்புகளும் ஏட்டு மதிப்பிலேயே எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இவற்றின் மதிப்பு முறையே ரூ. 40,700 எனவும், ரூ. 70,000 எனவும் ஒப்புக்கொள்ளப்பட்டன. திருச்சிக் கம்பெனியின் சொத்துகளும், பொறுப்புகளும் கீழ்க்கண்டவற்றைத் தவிர பிற ஏட்டு மதிப்புகளில் எடுத்துக்கொள்ளப் படுகின்றன.

| | ரூ. |
|---|---|
| கட்டடம் | 75,000 |
| சரக்கிருப்பு | 65,000 |
| கடனாளிகள் | 46,500 |

தமிழ்நாடு மின் பொருள் கம்பெனியின் முதல் ஒன்று ரூ.100 மதிப்புடைய பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. பழைய கம்பெனிகள் ஒவ்வொன்றின் நிகர சொத்து மதிப்பிற்கு முழுதும் செலுத்தப்பெற்ற பங்குகளைப் புதிய கம்பெனி வெளியிடுகிறதென்று கொண்டு,

அ. ஒவ்வொரு கம்பெனியின் கலைப்பாளரும் புதிய கம்பெனியில் எத்துணைப் பங்குகளைப் பெறுவர் என்பதைக் காட்டுக.

ஆ. தமிழ்நாடு மின் பொருள் கம்பெனி ஏடுகளில் தொடக்கப் பதிவுகளைத் தருக.

இ. தமிழ்நாடு மின் பொருள் கம்பெனியின் தொடக்க இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்க.

விடை :

(அ) இரு கம்பெனிகளின் கொள்முதல் மறுபயனையும் கீழ்க்கண்டவாறு அறியலாம்.

| சொத்துகள் | மதுரை மின்பொருள் கம்பெனி | | திருச்சி கம்பெனி | |
|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| கட்டடம் | | | | 75,000 |
| மனைத்துணைப் பொருள் .. | | 5,800 | | 15,700 |
| சரக்கிருப்பு .. | | 70,000 | | 65,000 |
| கடனாளிகள் .. | | (43,500) | | 47,500 |
| பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு .. | | | | 12,300 |
| வங்கி .. | | 18,500 | | 20,500 |
| மொத்த சொத்துகள் .. | | 1,37,800 | | 2,36,000 |
| **கழி :** பொறுப்புகள் .. | | | | |
| ஐயக் கடன் காப்பு .. | 2,800 | | 1,000 | |
| கடனீந்தோர் .. | 40,000 | | 25,000 | |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு .. | 10,000 | | | |
| | | 52,800 | | 26,000 |
| கொள்முதல் மறுபயன் .. | | 85,000 | | 2,10,000 |

தமிழ்நாடு மின் பொருள் கம்பெனிப் பங்கொன்றின் மதிப்பு ரூ. 100 ஆதலால், மதுரை மின் பொருள் கம்பெனிக் கலைப் பாளர்க்கு வெளியிடப்படும் பங்குகளின் எண்ணிக்கை

$$= \frac{85,000}{100} = 850$$

திருச்சி மின் பொருள் கம்பெனிக் கலைப்பாளர்க்கு வெளியிடப்படும் பங்குகளின் எண்ணிக்கை

$$= \frac{2,10,000}{100} = 2,100$$

மதுரை மின் பொருள் கம்பெனியில் உள்ள மொத்தப் பங்குகள் 10,000 ஆகும். புதிய கம்பெனி 850 பங்குகளை இவர்கட்கு வழங்கியாகவேண்டும். எனவே, 200 பங்குகளை வைத்திருக்கும் ஒவ்வொரு பங்குநர்க்கும் 17 புதிய பங்குகள் வழங்கப்படும்.

திருச்சிக் கம்பெனியில் உள்ள மொத்த பங்குகள் 30,000 ஆகும். புதிய கம்பெனியின் 2,100 பங்குகளை இவர்கட்கு வழங்கவேண்டும். எனவே, 30 பங்குகளை வைத்திருக்கும் ஒவ்வொரு பங்குநர்க்கும் 21 புதிய பங்குகள் வழங்கப்படும்.

## ஆ. தமிழ்நாடு மின்பொருள் கம்பெனியின் ஏடுகளில் தொடக்கப் பதிவுகள்

| | பற்று | வரவு |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| தொழில் கொள்முதல் கணக்கு ப | 2,95,000 | |
| மதுரை மின் பொருள் கம்பெனிக் கலைப்பாளர் | | 85,000 |
| திருச்சிக் கம்பெனிக் கலைப்பாளர் | | 2,10,000 |
| (..ஒப்பந்தத்தின்படி இரு கம்பெனிகளையும் எடுத்துக் கொண்டது.) | | |

## தொடக்கப் பதிவுகள்—(தொடர்ச்சி)

| | | பற்று | வரவு |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| கட்டடம் | ப | 75,000 | |
| மனைத்துணைப்பொருள் | ப | 21,500 | |
| சரக்கிருப்பு | ப | 1,35,000 | |
| கடனாளிகள் | ப | 91,000 | |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | ப | 12,300 | |
| வங்கி | ப | 39,000 | |
| ஐயக் கடன் காப்பு | | | 3,800 |
| கடனீந்தோர் | | | 65,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு | | | 10,000 |
| தொழில் கொள்முதல் கணக்கு | | | 2,95,000 |
| (மதுரை மின் பொருள் கம்பெனி, திருச்சிக் கம்பெனி ஆகியவற்றின் சொத்துகளையும் பொறுப்புகளையும் மறு மதிப்பீடு செய்து எடுத்துக் கொண்டது.) | | | |
| மதுரை மின் பொருள் கம்பெனிக் கலைப்பாளர் | ப | 85,000 | |
| திருச்சிக் கம்பெனிக் கலைப்பாளர் | ப | 2,10,000 | |
| பங்குமுதல் கணக்கு | | | 2,95,000 |
| (ஒன்று ரூ. 100 மதிப்புடைய 2,950 பங்குகளை முழுதும் செலுத்தப்பெற்றவையாக இரு கம்பெனிகட்கும் வழங்கிக் கொள்முதல் மறு பயனைத் தீர்த்தது.) | | | |

## தமிழ்நாடு மின்பொருள் கம்பெனி லிமிட்டெடின் 1974 ஜுன் 30-ற்குறிய இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புகள் | | ரூ. | சொத்துகள் | | | ரூ. |
|---|---|---|---|---|---|---|
| **பங்கு முதல்:** | | | **நிலைச் சொத்துகள்:** | | | |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 2,950 பங்குகள், முழுதும் செலுத்தப்பெற்றவை | .. | 2,95,000 | கட்டடம் | | .. | 75,000 |
| (மேற்சொன்ன பங்குகள் அனைத்தும் விற்குநருக்கு ரொக்கத்திற்கன்றி வேறு மறுபயனுக்காக வெளியிடப் பட்டவை). | | | மனைத்துணைப்பொருள் | | .. | 21,500 |
| | | | **நடப்புச் சொத்துகள்:** | | | |
| | | | சரக்கிருப்பு | | .. | 1,35,000 |
| | | | கடனாளிகள் | .. ரூ. 91,000 | | |
| | | | **கழி** : ஐயக்கடன் காப்பு | .. ரூ. 3,800 | | 87,200 |
| **நடப்புப் பொறுப்புகள்:** | | | | | | |
| கடனீந்தோர் | .. | 65,000 | வங்கி | | .. | 39,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | .. | 10,000 | பொறுதற்குரிய மாற்றுச் சீட்டு | | .. | 12,300 |
| | | 3,70,000 | | | | 3,70,000 |

**எடுத்துக்காட்டு 116**

*1974 திசம்பர் 31-ற்கான இரு கம்பெனிகளின் இருப்பு நிலைக் குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :*

**அன்பு லிமிட்டெட்**

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்கு முதல் | | | |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 1,000-6 சதவீதம் முன்னுரிமைப் பங்குகள் | 1,00,000 | வாணிக நற்பெயர் | 25,000 |
| | | நிலமும் கட்டடமும் | 1,20,000 |
| | | பொறிவகை | 1,50,000 |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 2,500 நேர்மைப் பங்குகள் | 2,50,000 | முதலீடுகள் | 20,000 |
| | | சரக்கிருப்பு | 75,000 |
| | | கடனாளிகள் | 50,000 |
| பொதுக்காப்பு | 50,000 | வங்கி | 20,000 |
| இலாப-நட்டக் கணக்கு | 20,000 | | |
| கடனீந்தோர் | 40,000 | | |
| | 4,60,000 | | 4,60,000 |

**அருள் லிமிட்டெட்**

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : | | கட்டடம் | 50,000 |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 1,000 பங்குகள் | 1,00,000 | மனைத்துணைப் பொருள் | 5,000 |
| | | மோட்டார் வண்டிகள் | 20,000 |
| இலாப-நட்டக் கணக்கு | 25,000 | சரக்கிருப்பு | 50,000 |
| கடனீந்தோர் | 45,000 | கடனாளிகள் | 30,000 |
| | | வங்கி | 15,000 |
| | 1,70,000 | | 1,70,000 |

இரு கம்பெனிகளும் கலக்கப்பட வேண்டுமென்றும், இவற்றின் சொத்துக்களைக் கீழ்க்கண்ட நிபந்தனைகளின் பேரில் எடுத்துக் கொள்ளும் நோக்கத்துடன் 'பண்பு லிமிட்டெட்' எனும் புதிய கம்பெனி தொடங்கப்பட வேண்டுமென்றும் ஒப்புக்கொள்ளப் பட்டது.

(1) பண்பு லிமிட்டெடின் அதிகாரம் பெற்ற பங்குமுதல் ரூ. 10,00,000 என்றும், அது ஒன்று ரூ. 100 மதிப்புடைய

2,500—7 சதவீதம் முன்னுரிமைப் பங்குகளாகவும் ஒன்று ரூ. 100 மதிப்புடைய 7,500 நேர்மைப் பங்குகளாகவும் பிரிக்கப்பட வேண்டியது.

(2) அன்பு லிமிட்டெடின் சொத்துகள் அனைத்தையும் (வங்கியிருப்பு நீங்கலாக) ரூ. 4,60,000-ற்குப் பண்பு லிமிட்டெட் எடுத்துக்கொள்கிறது. ரூ. 1,96,000-ற்கு ரொக்கம் கொடுத்தும் மீதித் தொகைக்கு நேர்மைப் பங்குகளை முழுதும் செலுத்தப் பெற்றவையாக வெளியிட்டும் கொள்முதல் மறுபயனைத் தீர்க்க வேண்டியது. பண்பு லிமிட்டெடின் பங்கு ஒன்றின் மதிப்பு ரூ. 110 எனக் கொள்ளவேண்டும்.

(3) வங்கியிருப்பைத் தவிர அருள் லிமிட்டெடின் பிற சொத்துகளை ஏட்டு மதிப்பிலேயே பண்பு லிமிட்டெட் ரூ. ரூ. 1,50,000-ற்கு எடுத்துக் கொள்கிறது. ரூ. 40,000-ற்கு ரொக்கம் கொடுத்தும், மீதித் தொகைக்குத் தனது சாதாரணப் பங்குகளை ஒன்று ரூ. 110 மதிப்பில் வெளியிட்டும், கொள்முதல் மறுபயனைத் தீர்க்கவேண்டியது.

(4) பண்பு லிமிட்டெட் 2,500—7 சதவீதம் முன்னுரிமைப் பங்குகளைப் பெயரளவு மதிப்பிலும், 1,600 நேர்மைப் பங்குகளை ஒன்று ரூ. 110 வீதமும் பொதுமக்களிடத்தில் வெளியிட வேண்டியது. முழுத் தொகையையும் வெளியிட்டபோழ்தே பெறவேண்டியது.

(5) அன்பு லிமிட்டெடின் கலைப்பாளர் முன்னுரிமைப் பங்குநர்கட்குப் பங்கு ஒன்றுக்கு ரூ. 100 வீதம் ரொக்கம் கொடுத்துத் தீர்க்கவேண்டியது.

(6) கலைப்புச் செலவு அன்பு லிமிட்டெடிற்கு ரூ. 7,500 ஆகுமெனவும், அருள் லிமிட்டெடிற்கு ரூ. 5,000 ஆகுமெனவும் மதிப்பிடப்பட்டது.

(7) பண்பு லிமிட்டெடின் தொடக்கச் செலவு ரூ. 12,500 ஆகும்.

திட்டம் முழுதும் செயல்படுத்தப்பட்டதென்று கொண்டு

அ. அன்பு லிமிட்டெட், அருள் லிமிட்டெட் ஆகியவற்றின் ஏடுகளில் பேரேட்டுக் கணக்குகளையும்,

ஆ. பண்பு லிமிட்டெடின் ஏடுகளில் தொடக்க இருப்பு நிலைக் குறிப்பையும் தயார் செய்க. (வாணிக நற்பெயரைத் தவிர பிற சொத்துகள் ஏட்டு மதிப்பிலேயே எடுத்துக்கொள்ளப் பட்டன.)

## அன்பு லிமிட்டெடின் ஏடுகளில்

### தீர்வுக் கணக்கு (Realisation a/c)

பற்று | வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | பல்வகைச் சொத்துகள் | | 4,40,000 | | பண்பு லிமிடெட் | | 4,60,000 |
| | வங்கி — கலைப்புச்செலவு | | 7,500 | | | | |
| | நேர்மைப் பங்குநர்கள் | | 12,500 | | | | |
| | | | 4,60,000 | | | | 4,60,000 |

### வங்கிக் கணக்கு

பற்று | வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | இருப்பு கீ/கொ | | 20,000 | | கடனீந்தோர் | | 40,000 |
| | பண்பு லிமிடெட் | | 1,96,000 | | தீர்வுக் க/கு-கலைப்புச் செலவு | | 7,500 |
| | | | | | முன்னுரிமைப் பங்குநர்கள் க/கு | | 1,00,000 |
| | | | | | நேர்மைப் பங்குநர்கள் க/கு | | 68,500 |
| | | | 2,16,000 | | | | 2,16,000 |

### கடனீந்தோர்

பற்று | வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | வங்கி | | 40,000 | | இருப்பு கீ/கொ | | 40,000 |

### முன்னுரிமைப் பங்குநர்கள்

பற்று | வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | வங்கி | | 1,00,000 | | முன்னுரிமைப் பங்குமுதல் க/கு—மாற்றம் | | 1,00,000 |

## நேர்மைப் பங்குநர்கள்

பற்று | வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | வங்கி | | 68,500 | | நேர்மைப் பங்குமுதல் க/கு—மாற்றம் | | 2,50,000 |
| | பண்பு லிமிட்டெடின் நேர்மைப் பங்குகள் | | 2,64,000 | | பொதுக்காப்பு | | 50,000 |
| | | | | | இலாப-நட்டக் க/கு | | 20,000 |
| | | | | | தீர்வுக் க/கு—இலாபம் | | 12,500 |
| | | | 3,32,500 | | | | 3,32,500 |

பற்று **பண்பு லிமிட்டெட்** வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | தீர்வுக் கணக்கு | | 4,60,000 | | வங்கி | | 1,60,000 |
| | | | | | பண்பு லிமிட்டெடின் நேர்மைப் பங்குகள் க/கு | | 2,64,000 |
| | | | 4,60,000 | | | | 4,60,000 |

## அருள் லிமிட்டெடின் ஏடுகளில்

**பற்று** **தீர்வுக் கணக்கு** **வரவு**

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | பல்வகைச் சொத்துகள் | | 1,55,000 | | பண்பு லிமிட்டெட் | | 1,50,000 |
| | வங்கி — கலைப்புச் செலவு | | 5,000 | | நேர்மைப் பங்குநர்கள் க/கு—நட்டம்மாற்றப் படுகிறது | | 10,000 |
| | | | 1,60,000 | | | | 1,60,000 |

## வங்கிக் கணக்கு

பற்று வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | இருப்பு கீ/கொ | | 15,000 | | கடனீந்தோர் | | 45,000 |
| | பண்பு லிமிட்டெட் | | 40,000 | | தீர்வுக் க/கு—கலைப்புச் செலவு | | 5,000 |
| | | | | | நேர்மைப் பங்குநர்கள் | | 5,000 |
| | | | 55,000 | | | | 55,000 |

## கடனீந்தோர் கணக்கு

பற்று வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | வங்கி | | 45,000 | | இருப்பு கீ/கொ | | 45,000 |

**பண்பு லிமிட்டெட்**

பற்று | | | | | | | வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | தீர்வுக் க/கு .. | | 1,50,000 | | வங்கி .. | | 40,000 |
| | | | | | பண்பு லிமிட்டெடின் நேர்மைப் பங்குகள் .. | | 1,10,000 |
| | | | 1,50,000 | | | | 1,50,000 |

**நேர்மைப் பங்குநர்கள்**

பற்று | | | | | | | வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | தீர்வுக் க/கு— நட்டம் .. | | 10,000 | | இருப்பு கீ/கொ .. | | 1,00,000 |
| | வங்கி .. | | 5,000 | | இலாப-நட்டக் க/கு .. | | 25,000 |
| | பண்பு லிமிட்டெடின் நேர்மைப் பங்குகள் .. | | 1,10,000 | | | | |
| | | | 1,25,000 | | | | 1,25 000 |

## பண்பு லிமிட்டெடின் ஏடுகளில்
### தொடக்கப் பதிவுகள்

| | பற்று | வரவு |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| வங்கிக் கணக்கு ப | 4,26,000 | |
| முன்னுரிமைப் பங்கு முதல் க/கு | | 2,50,000 |
| நேர்மைப் பங்கு முதல் க/கு | | 1,60,000 |
| பங்கு முனைமக் க/கு | | 16,000 |
| (ஒன்று ரூ. 100 மதிப்புடைய 7 சதவீதம் 2,500 முன்னுரிமைப் பங்குகளைப் பெயரளவு மதிப்பிலும், ஒன்று ரூ. 100 மதிப்புடைய 3,600 நேர்மைப் பங்குகளைப் பங்கொன்று ரூ. 110 வீதமும் வெளியிட்டதில் பெற்றது.) | | |
| தொடக்கச் செலவுகள் க/கு ப | 12,500 | |
| வங்கிக் கணக்கு | | 12,500 |
| (தொடக்கச் செலவுகளை ஏற்றது.) | | |
| தொழில் கொள்முதல் க/கு ப | 6,10,000 | |
| அன்பு லிமிட்டெடின் கலைப்பாளர் | | 4,60,000 |
| அருள் லிமிட்டெடின் கலைப்பாளர் | | 1,50,000 |
| (அன்பு லிமிட்டெட், அருள் லிமிட்டெட் ஆகியவற்றின் சொத்துகளை எடுத்துக் கொண்டது.) | | |

## தொடக்கப் பதிவுகள் — (தொடர்ச்சி)

| | | பற்று | வரவு |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| வாணிக நற்பெயர் | ப | 40,000 | |
| நிலமும் கட்டடமும் | ப | 1,70,000 | |
| பொறிவகை | ப | 1,50,000 | |
| மனைத்துணைப் பொருள் | ப | 5,000 | |
| மோட்டார் வண்டிகள் | ப | 20,000 | |
| முதலீடுகள் | ப | 20,000 | |
| சரக்கிருப்பு | ப | 1,25,000 | |
| கடனாளிகள் | ப | 80,000 | |
| தொழில் கொள்முதல் | | | 6,10,000 |
| (அன்பு லிமிட்டெட், அருள் லிமிட்டெட் ஆகியவற்றின் சொத்துகளை எடுத்துக் கொண்டது.) | | | |
| அன்பு லிமிட்டெடின் கலைப்பாளர் | ப | 4,60,000 | |
| அருள் லிமிட்டெடின் கலைப்பாளர் | ப | 1,50,000 | |
| வங்கிக் க/கு | | | 2,36,000 |
| நேர்மைப் பங்குமுதல் | | | 3,40,000 |
| பங்கு முனைமக் க/கு | | | 34,000 |
| (அன்பு லிமிட்டெடிற்கு ரூ. 1,96,000-ற்கு ரொக்கங்கொடுத்தும், 2,400 நேர்மைப் பங்குகளை 10 சதவீதம் முனைமத்தில் வெளியிட்டும் அருள் லிமிட்டெடிற்கு ரூ. 40,000 ரொக்கங் கொடுத்தும் 1,000 நேர்மைப் பங்குகளை 10 சதவீதம் முனைமத்தில் வெளியிட்டும் கொள்முதல் மறு பயனைத் தீர்த்தது.) | | | |

## தொடக்க இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| **பங்கு முதல்:** | | **நிலைச் சொத்துகள்:** | |
| அதிகாரம் பெற்றது : | | | |
| **முன்னுரிமைப் பங்குகள் :** | | | |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 2,500 முன்னுரிமைப் பங்குகள் .. | 2,50,000 | வாணிக நற்பெயர் .. | 40,000 |
| **நேர்மைப் பங்குகள் :** | | நிலமும், கட்டடமும் .. | 1,70,000 |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 7,500 நேர்மைப் பங்குகள் .. | 7,50,000 | பொறிவகை .. | 1,50,000 |
| | 10,00,0000 | மனைத்துணைப் பொருள் .. | 5,000 |
| **வெளியீட்டு முதலும், செலுத்தப் பெற்ற முதலும்:** | | மோட்டார் வண்டிகள் .. | 20,000 |
| **முன்னுரிமைப் பங்குகள் :** | | **முதலீடுகள்:** | |
| ஒன்று ரூ. 100 வீதம் 2,500 7 சதவீதம் முன்னுரிமைப் பங்குகள் முழுதும் செலுத்தப் பெற்றது .. | 2,50,000 | முதலீடுகள் .. | 20,000 |

**தொடக்க இருப்புநிலைக் குறிப்பு—(தொடர்ச்சி)**

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| ஒன்று ரூ. 100 வீதம் 5,000 நேர்மைப் பங்குகள் முழுதும் செலுத்தப்பெற்றது .. | 5,00,000 | **நடப்புச் சொத்துகள்:** | |
| (மேற்சொன்ன பங்குகளில் ஒன்று ரூ. 100 மதிப்புடைய 3,400 நேர்மைப் பங்குகளை முழுதும் செலுத்தப்பெற்றவையாக 10 சதவீதம் முனைமத்தில் ரொக்கத்திற்கன்றி வேறு மறுபயனுக்காக விற்குநர்க்கு வெளியிடப்பட்டிருக்கின்றன.) | | சரக்கிருப்பு .. | 1,25,000 |
| | | கடனாளிகள் .. | 80,000 |
| | | வங்கி .. | 1,77,500 |
| **காப்பும், மிகுதியும்:** | | **பல்வகைச் செலவினம்:** | |
| பங்கு முனைமக் கணக்கு .. | 50,000 | தொடக்கச் செலவுகள் .. | 12,500 |
| | 8,00,000 | | 8,00,000 |

**எடுத்துக்காட்டு 117**

மேட்டூர் கெமிகல்ஸ் லிமிட்டெடின் இருப்புநிலைக் குறிப்பு 1973 திசம்பர் 31-ல் கீழ்க்காட்டியவாறு இருந்தது :

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| **பங்கு முதல்:** | | நிலமும், கட்டடமும் .. | 1,50,000 |
| ஒன்று ரூ. 50 வீதம் 2,000 | | பொறிவகை .. | 2,20,000 |
| 6 சதவீதம் முன்னுரிமைப் பங்குகள், | | புனைபொருள் உரிமை .. | 20,000 |
| முழுதும் செலுத்தப்பெற்றவை | 1,00,000 | முதலீடுகள் .. | 15,000 |
| ஒன்று ரூ. 50 வீதம் 6,000 | | சரக்கிருப்பு .. | 88,500 |
| நேர்மைப் பங்குகள் | | கடனாளிகள் .. ரூ. 40,000 | |
| பங்கு ஒன்றுக்கு ரூ. 40 வீதம் | | **கழி** : ஐயக்கடன் | |
| செலுத்தப்பெற்றது .. | 2,40,000 | காப்பு .. ரூ. 1,200 | |
| இலாப-நட்டக் கணக்கு .. | 15,000 | | 38,800 |
| காப்பீட்டு நிதி .. | 20,000 | வங்கி .. | 18,700 |
| 5 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் | 1,00,000 | கடனீட்டுப்பத்திரத் தள்ளுபடி .. | 1,000 |
| மூப்போய்வு நிதி .. | 17,500 | | |
| தொழிலர் இலாபப் பங்கேற்பு நிதி .. | 20,000 | | |
| கடனீந்தோர் .. | 32,500 | | |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு .. | 7,000 | | |
| | 5,52,000 | | 5,52,000 |

இக் கம்பெனியைத் தமிழ்நாடு கெமிகல்ஸ் லிமிட்டெட் மேற்கண்ட நாளில் எடுத்துக்கொள்கிறது. நிலமும் கட்டடமும் ரூ. 2,00,000 எனவும், பொறிவகை ரூ. 2,00,000 எனவும், சரக்கிருப்பு ரூ. 1,19,600 எனவும் மதிப்பிட்டும் பிற சொத்துகள் ஏட்டு மதிப்பிலும் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

கொள்முதல் மறுபயன் கீழ்க்கண்டவாறு தீர்க்கப்படும் :

(அ) கலைப்புச் செலவு ரூ. 600-ஐச் செலுத்தல்.

(ஆ) வாணிகப் பொறுப்புகளை (trade liabilities) மட்டில் தமிழ்நாடு கெமிகல்ஸ் ஏற்றுக் கொள்ளுதல்.

(இ) கடனீட்டுப் பத்திரங்களை 5 சதவீதம் முனைமத்திலும், தொழிலர் பங்கேற்பு நிதியை 10 சதவீதம் முனைமத்திலும் தீர்க்க வேண்டியது.

(ஈ) இரு முன்னுரிமைப் பங்குகட்குத் தமிழ்நாடு கெமிகல்ஸ் கம்பெனியில் ஒரு நேர்மைப் பங்கு வீதமும், 3 நேர்மைப் பங்குகட்குத் தமிழ்நாடு கெமிகல்ஸ் கம்பெனியின் ஒரு நேர்மைப் பங்கு வீதமும் வெளியிட வேண்டியது.

(உ) மேட்டூர் கெமிகல்ஸ் கம்பெனியின் ஒவ்வொரு நேர்மைப் பங்குக்கும் ரூ. 20 வீதம் ரொக்கம் செலுத்த வேண்டியது.

தமிழ்நாடு கெமிகல்ஸ் லிமிட்டெடின் நேர்மைப் பங்குகளின் சந்தை மதிப்பு ரூ. 125 ஆகும். இம் மதிப்பிலேயே பங்குகள் வெளியிடப்படுகின்றன என்று கொண்டு கீழ்க்கண்டவற்றைத் தயார் செய்க.

(i) கொள்முதல் மறுபயனைக் கணக்கிடுமுறை.

(ii) விற்குநர் ஏட்டிலும், வாங்குநர் ஏட்டிலும் வேண்டிய குறிப்பேட்டுப் பதிவுகள்.

**விடை :**

செலுத்தும் வழிகள் அனைத்தும் கொடுக்கப்பட்டிருப்பதால், நிகர செலுத்து முறையில் கொள்முதல் மறுபயனை அறிய முடியும். இம்முறையில் வாங்கும் கம்பெனி செலுத்தும் தொகைகள் அனைத்தையும் கூட்டவேண்டும் என்பதையும், அதனின்றும் எத் தொகையையும் கழிக்கக்கூடாது என்பதையும், எ

நோக்கத்திற்காக பணமோ, கடன்பத்திரமோ வழங்கப்படினும் அதுபற்றி ஆயவேண்டுவதில்லையென்பதையும் மறக்கவேண்டாம்.

| விவரம் | தொகை ரூ. | செலுத்தும் முறை |
|---|---|---|
| கலைப்புச் செலவு | 600 | ரொக்கம் |
| கடனீட்டுப் பத்திரங்கள் ரூ. 1,00,000 | | |
| **கூட்டு :** முனைமம் 5 சதவீதம் ரூ. 5,000 | 1,05,000 | ரொக்கம் |
| தொழிலர் இலாபப் பங்கேற்பு நிதி ரூ. 20,000 | | |
| **கூட்டு :** முனைமம் 10 சதவீதம் ரூ. 2,000 | 22,000 | ரொக்கம் |
| முன்னுரிமைப் பங்குகட்கான பங்குகள் : $\frac{2,000}{2}$ = 1,000 நேர்மைப் பங்குகள் இதன் சந்தைவிலை ரூ. 125. ஆதலால் இதன் மதிப்பு 1,000×125 | 1,25,000 | பங்குகள் |
| நேர்மைப் பங்குகட்கான பங்குகள் : ஒவ்வொரு மூன்று பங்குகட்கும் ஒரு பங்குவீதம் = $\frac{6,000}{3}$ = 2,000 பங்குகள் இவற்றின் சந்தை மதிப்பு = 2,000×125 | 2,50,000 | பங்குகள் |
| நேர்மைப் பங்குகட்கான ரொக்கம் ஒவ்வொரு பங்கிற்கும் ரூ. 20 வீதம் 6,000×20 | 1,20,000 | ரொக்கம் |
| கொள்முதல் மறுபயன் ரூ. | 6,22,600 | |

## மேட்டூர் கெமிக்கல்ஸ் லிமிட்டெடின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | | பே. ப. எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|---|
| 1973 திச. | | | | ரூ. | ரூ. |
| 31 | தீர்வுக் கணக்கு | ப | | 5,52,200 | |
| | நிலமும் கட்டடமும் | | | | 1,50,000 |
| | பொறிவகை | | | | 2,20,000 |
| | புனைபொருள் உரிமை | | | | 20,000 |
| | முதலீடுகள் | | | | 15,000 |
| | சரக்கிருப்பு | | | | 88,500 |
| | கடனாளிகள் | | | | 40,000 |
| | வங்கி | | | | 18,700 |
| | (. . நாளிட்ட ஒப்பந்தத்தின் படி, தமிழ்நாடு கெமிகல்ஸ் லிமிட்டெட் தொழிலை எடுத்துக் கொள்ளுதலால், பல்வகைச் சொத்துகளையும் தீர்வுக் கணக்கிற்கு மாற்றுதல்.) | | | | |
| ,, | ஐயக் கடன் காப்பு | ப | | 1,200 | |
| | கடனீந்தோர் | ப | | 32,500 | |
| | செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு | ப | | 7,000 | |
| | தீர்வுக் கணக்கு | | | | 40,700 |
| | (தமிழ்நாடு கெமிகல்ஸ் எடுத்துக்கொள்ளும் வாணிகப் பொறுப்புகளைத் தீர்வுக் கணக்கிற்கு மாற்றுதல்.) | | | | |
| ,, | தமிழ்நாடு கெமிகல்ஸ் லிமிட்டெட் | ப | | 6,22,600 | |
| | தீர்வுக் கணக்கு | | | | 6,22,600 |
| | (. . நாளிட்ட ஒப்பந்தத்தின் படி வாங்கும் கம்பெனி செலுத்தவேண்டிய கொள் முதல் மறுபயன்.) | | | | |

## குறிப்பேட்டுப் பதிவுகள்—(தொடர்ச்சி)

| நாள் | விவரம் | பே. ப. எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| 1972 திச. | | | ரூ. | ரூ. |
| 31 | வங்கிக் கணக்கு ப | | 2,47,600 | |
| | தமிழ்நாடு கெமிகல்ஸ் லிமிட்டெடில் பங்குகள் கணக்கு ப | | 3,75,000 | |
| | தமிழ்நாடு கெமிகல்ஸ் லிமிட்டெட் | | | 6,22,600 |
| | (கொள்முதல் மறுபயனுக்காக ரொக்கமும் பங்குகளும் தமிழ்நாடு கெமிகல்ஸ் லிமிட்டெடிலிருந்து பெற்றது.) | | | |
| ,, | தீர்வுக் கணக்கு ப | | 600 | |
| | வங்கிக் கணக்கு | | | 600 |
| | (கலைப்புச் செலவிற்காகத் தொகை செலுத்தியது.) | | | |
| ,, | கடனீட்டுப் பத்திரங்கள் ப | | 1,00,000 | |
| | தீர்வுக் கணக்கு ப | | 5,000 | |
| | கடனீட்டுப் பத்திரதாரர்கள் கணக்கு | | | 1,05,000 |
| | (கடனீட்டுப் பத்திரதாரர்களுக்குச் சேரவேண்டிய கடனீட்டுப்பத்திர தொகையும், 5 சதவீதம் முனைமத் தொகையும் — முனைமத் தொகை தீர்வுக்கணக்கிற்குப் பற்று வைக்கப்படுகிறது.) | | | |
| ,, | கடனீட்டுப் பத்திரதாரர்கள் கணக்கு ப | | 1,05,000 | |
| | வங்கிக் க/கு | | | 1,05,000 |
| | (கடனீட்டுப் பத்திரதாரர்கட்குச் சேரவேண்டிய தொகையைச் செலுத்தியது) | | | |

## குறிப்பேட்டுப் பதிவுகள்—(தொடர்ச்சி)

| நாள் | விவரம் | பே. ப. எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| 1973 திச. | | | ரூ. | ரூ. |
| 31 | மூப்போய்வு நிதி ப | | 17,500 | |
| | தொழிலர் இலாபப் பங்கேற்பு நிதி ப | | 22,000 | |
| | வங்கிக் க/கு | | | 39,500 |
| | (தமிழ்நாடு கெமிகல்ஸ் எடுத்துக்கொள்ளாத பொறுப்புகளைத் தீர்த்தது.) | | | |
| ,, | தீர்வுக் கணக்கு ப | | 1,03,500 | |
| | நேர்மைப் பங்குதாரர்கள் க/கு | | | 1,03,500 |
| | (தீர்வுக் கணக்கு காட்டும் இலாபம் நேர்மைப் பங்கு நர்கள் கணக்கிற்கு மாற்றப் படுகிறது.) | | | |
| ,, | முன்னுரிமைப் பங்குமுதல் க/கு ப | | 1,00,000 | |
| | முன்னுரிமைப் பங்குநர்கள் க/கு | | | 1,00,000 |
| | (முன்னுரிமைப் பங்குமுதல் கணக்கை முன்னுரிமைப் பங்குநர்கள் கணக்கிற்கு மாற்றுதல்.) | | | |
| ,, | நேர்மைப் பங்குநர்கள் க/கு ப | | 1,000 | |
| | கடனீட்டுப் பத்திர தள்ளுபடிக் க/கு | | | 1,000 |
| | (கடனீட்டுப் பத்திரத் தள்ளுபடியை நேர்மைப் பங்குநர்கள் கணக்கிற்கு மாற்றுதல்.) | | | |

## குறிப்பேட்டுப் பதிவுகள்—(தொடர்ச்சி)

| நாள் | விவரம் | பே. ப. எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| 1973 திச. | | | ரூ. | ரூ. |
| 31 | தீர்வுக் கணக்கு ப | | 2,000 | |
| | தொழிலர் இலாபப் பங்கேற்பு நிதி | | | 2,000 |
| | (தொழிலர் இலாபப் பங்கேற்பு நிதிக்குக் கொடுக்க வேண்டிய கூடுதல் தொகை தீர்வுக் கணக்கிற்கு மாற்றப் படுகிறது.) | | | |
| ,, | நேர்மைப் பங்குமுதல் க/கு ப | | 2,40,000 | |
| | இலாப-நட்டக் க/கு ப | | 15,000 | |
| | காப்பீட்டு நிதி ப | | 20,000 | |
| | நேர்மைப் பங்குநர்கள் க/கு | | | 2,75,000 |
| | (நேர்மைப் பங்குமுதல், இலாப-நட்டக் கணக்கு, காப்பீட்டு நிதி ஆகியவை நேர்மைப் பங்குநர்கள் கணக்கிற்கு மாற்றப் படுதல்.) | | | |
| ,, | முன்னுரிமைப் பங்குநர்கள் க/கு ப | | 1,00,000 | |
| | தமிழ்நாடு கெமிகல்ஸ் லிமிட்டெடின் பங்குகள் க/கு | | | 1,00,000 |
| | (முன்னுரிமைப் பங்குநர்கட்குத் தமிழ்நாடு கெமிகல்ஸ் லிமிட்டெடின் ஒன்று ரூ. 100 மதிப்புடைய 800 நேர்மைப் பங்குகளை ஒன்று ரூ. 125 வீதம் வழங்கியது.) | | | |

குறிப்பேட்டுப் பதிவுகள்—(தொடர்ச்சி)

| நாள் | விவரம் | பே. ப. எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| 1973 திச. | | | ரூ. | ரூ. |
| 31 | நேர்மைப் பங்குநர்கள் க/கு ப | | 3,77,500 | |
| | வங்கிக் கணக்கு | | | 1,02,500 |
| | தமிழ்நாடு கெமிகல்ஸ் லிமிட்டெடின் பங்குகள் கணக்கு | | | 2,75,000 |
| | (நேர்மைப் பங்குநர்கட்கு ரொக்கமும் 2,200 நேர்மைப் பங்குகளையும் வழங்கியது.) | | | |

**குறிப்பு:** 1. கலைப்புச் செலவு கொள்முதல் மறுபயன் தொகையிலேயே சேர்க்கப்பட்டிருக்கிறது. இத் தொகை செலவழிக்கப்பட்டிருக்கிறதென்று கொண்டு தீர்வுக் கணக்கில் பற்று வைக்கப்படுகிறது.

2. வாணிகக் கடனுளிகளை மட்டில் வாங்கும் கம்பெனி எடுத்துக்கொள்கிறதென்று கொடுக்கப்பட்டிருப்பதால், கடனீந்தோர், செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு ஆகிய இரு கணக்குகளே தீர்வுக் கணக்கில் வரவு வைக்கப்படுகின்றன.

3. தொழிலர் இலாபப் பங்கேற்பு நிதியும், மூப்போய்வு நிதியும் பொறுப்புகளே.

4. இருக்கின்ற பொறுப்புகளினும் கூடுதலாகக் கொடுக்க வேண்டியிருக்கும் கடனீட்டுப் பத்திர. முனைமத் தொகை ரூ. 5,000-மும், தொழிலர் இலாபப் பங்கேற்பு நிதிக் கூடுதல் தொகை ரூ. 2,000-மும் நட்டமாகையால், தீர்வுக் கணக்கில் பற்று வைக்கப்படுகின்றன.

5. கடனீட்டுப் பத்திர தள்ளுபடி ஒரு முதலின (capital) நட்டமாகும். கம்பெனிக் கலைப்பின்போழ்து, இதனை நேர்மைப் பங்குநர்களே ஏற்கவேண்டும். என்வே, நேர்மைப் பங்குநர்கள் கணக்கில் பற்று வைக்கப்படுகிறது.

6. சேர்த்து வைக்கப்பட்ட ஆதாயக் கணக்குகளான இலாப-நட்டக் கணக்கு, காப்பீட்டு நிதி ஆகியவை நேர்மைப் பங்குநர்க்குச் சேரவேண்டியவை. எனவே, இவை முழுதும் நேர்மைப் பங்குநர்கள் கணக்கில் வரவு வைக்கப்படுகின்றன. இவற்றில் முன்னுரிமைப் பங்குநர்கட்கு எவ்வித உரிமையுமில்லை.

## தமிழ்நாடு கெமிகல்ஸ் லிமிட்டெடின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

| | | பற்று | வரவு |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| தொழில் கொள்முதல் க/கு | ப | 6,22,600 | |
| மேட்டூர் கெமிகல்ஸ் கலைப்பாளர் | | | 6,22,600 |
| (..நாளிட்ட ஒப்பந்தத்தின் படி, மேட்டூர் கெமிகல்ஸ் லிமிட்டெடின் தொழிலை வாங்கியது.) | | | |
| நிலமும் கட்டடமும் | ப | 2,00,000 | |
| பொறிவகை | ப | 2,00,000 | |
| புனைபொருள் உரிமை | ப | 20,000 | |
| முதலீடுகள் | ப | 15,000 | |
| சரக்கிருப்பு | ப | 1,19,600 | |
| கடனாளிகள் | ப | 40,000 | |
| வங்கி | ப | 18,700 | |
| வாணிக நற்பெயர் | ப | 50,000 | |
| ஐயக் கடன் காப்பு | | | 1,200 |
| கடனீந்தோர் | | | 32,500 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | | | 7,000 |
| தொழில் கொள்முதல் க/கு | | | 6,22,600 |
| (மேட்டூர் கெமிகல்ஸ் லிமிட்டெடின் பல்வகைச் சொத்துகளையும் பொறுப்பு களையும் எடுத்துக் கொண் டதும் அவற்றை மறு மதிப்பீட்டில் கணக்கில் கொண்டு வருதல்.) | | | |

## குறிப்பேட்டுப் பதிவுகள்—(தொடர்ச்சி)

| | | பற்று | வரவு |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| மேட்டூர் கெமிகல்ஸ் | | | |
| கலைப்பாளர் | ப | 6,22,600 | |
| வங்கி | | | 2,47,600 |
| நேர்மைப் பங்குமுதல் | | | 3,00,000 |
| பங்கு முனைமக் கணக்கு | | | 75,000 |
| (..நாளிட்ட ஒப்பந்தத்தின் படி ரொக்கமும், ஒன்று ரூ. 100 மதிப்புடைய 3,000 நேர்மைப் பங்குகளைச் சந்தை மதிப்புப் பங்கொன்றுக்கு ரூ. 125 வீதத்தில் வெளியிட்டும், கொள்முதல் மறு பயனைத் தீர்த்தது.) | | | |

### எடுத்துக்காட்டு 118

கல்கத்தா லிமிட்டெடின் 1974 மார்ச் 31-ற்குரிய இருப்பு நிலைக் குறிப்பு கீழ்க் கொடுக்கப்பட்டிருக்கிறது :

### இருப்புநிலைக் குறிப்புகள்

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| வெளியீட்டு முதலும் செலுத்தப்பட்ட முதலும் : | | பொறிவகை | 2,50,000 |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 2,500 பங்குகள் | 2,50,000 | மோட்டார் வண்டிகள் | 40,000 |
| 6 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் | 1,00,000 | சரக்கிருப்பு | 55,000 |
| கடனீந்தோர் | 45,000 | கடனாளிகள் | 40,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 10,000 | வங்கியிருப்பு | 20,000 |
| | 4,05,000 | | 4,05,000 |

கீழ்க்கண்ட நிபந்தனைகளின் பேரில் பம்பாய் லிமிட்டெட் கல்கத்தா லிமிட்டெடை எடுத்துக்கொள்ள உடன்படுகிறது :

(அ) பம்பாய் லிமிட்டெடின் பங்கு ஒன்றின் பெயரளவு மதிப்பு ரூ. 100. இதன் சந்தை மதிப்பு ரூ. 125.

(ஆ) கல்கத்தா லிமிட்டெடின் பங்கு ஒன்றின் சந்தை மதிப்பு ரூ. 110.

(இ) கொள்முதல் மறுபயனை மூன்றில் ஒரு பங்கு ரொக்கமாகவும், மீதியைச் சந்தை மதிப்பில் தனது பங்குகளை வெளியிட்டும், பம்பாய் லிமிட்டெட் தீர்க்கவேண்டியது.

(ஈ) சொத்துகள் அனைத்தையும் வாணிகப் பொறுப்புகளையும் பம்பாய் லிமிட்டெட் எடுத்துக்கொள்ளவேண்டியது.

(உ) கலைப்புச் செலவு ரூ. 500 ஆனது. இதனைக் கல்கத்தா லிமிட்டெட் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

கீழ்க்கண்டவற்றைத் தயாரிக்க :

(1) கொள்முதல் மறுபயனை அறியும் முறை.

(2) கல்கத்தா லிமிட்டெடின் ஏடுகளில் பேரேட்டுக் கணக்குகள்.

(3) பம்பாய் லிமிட்டெடின் ஏடுகளில் தொடக்கப் பதிவுகள்.

**விடை :**

**கொள்முதல் மறுபயனை அறிதல் :**

இக் கணக்கில் தொழிலை வாங்கும் கம்பெனி கொடுக்கும் ரொக்கம் பற்றி ஏதும் குறிப்பிடவில்லை. எனவே, நிகரச் செலுத்தும் முறையைப் பின்பற்றிக் கொள்முதல் மறுபயனைக் கணக்கிட வழியில்லை. சொத்துகளின் நிகர மதிப்பை அடிப்படையாகக் கொண்டு இதனைக் கணக்கிட வேண்டும்.

சொத்துகளின் இன்றைய மதிப்பும் பொறுப்புகளின் தற்பொழுதைய அளவும் கொடுக்கப்படவில்லையாயினும், இவற்றின் மதிப்பைப் பங்கின் உள்மதிப்பின் துணைகொண்டு அறியமுடியும். கீழ்க்கண்டவாறு சொத்துகளின் சந்தை மதிப்பை உணரலாம்.

கல்கத்தா லிமிட்டெடின் பங்கு ஒன்றின் சந்தை மதிப்பு ரூ. 110 என கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, தற்பொழுது

உள்ள இக் கம்பெனியின் பங்கு முதலின் மொத்த உள்மதிப்பு:

| | ரூ. |
|---|---|
| = 2,500 × ரூ. 110 = | 2,75,000 |
| **கூட்டு :** | |
| கடனீட்டுப் பத்திரங்கள் | 1,00,000 |
| கடனீந்தோர் | 45,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 10,000 |
| மொத்த சொத்துகளின் சந்தை மதிப்பு = | 4,30,000 |

இப்பொழுது கொள்முதல் மறுபயனைக் கீழ்க்கண்டவாறு கணக்கிடலாம்.

| | | ரூ. |
|---|---|---|
| எடுத்துக்கொண்ட மொத்த சொத்துகளின் சந்தை மதிப்பு | | = 4,30,000 |
| **கழி :** | | |
| வாணிகப் பொறுப்புகள்: | | |
| கடனீந்தோர் | 45,000 | |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 10,000 | = 55,000 |
| | | 3,75,000 |

கொள்முதல் மறுபயன் கீழ்க்கண்டவாறு தீர்க்கப்படுகிறது.

ரொக்கம் $= 3,75,000 \times 1/3$

= ரூ. 1,25,000

பங்குகளால் $= 3,75,000 \times 2/3$

= ரூ. 2,50,000

வெளியிடும் பங்குகள் :

ரூ. 125-ற்கு = 1 பங்கு

ரூ. 2,50,000-ற்கு $= 2,50,000 \times \frac{1}{125}$

= 2,000 பங்குகள்.

## கல்கத்தா லிமிட்டெடின் ஏடுகளில்

### தீர்வுக் கணக்கு

பற்று | வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | பொறிவகை | | 2,50,000 | | கடனீந்தோர் | | 45,000 |
| | மோட்டார் வண்டிகள் | | 40,000 | | செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு | | 10,000 |
| | சரக்கிருப்பு | | 55,000 | | பம்பாய் லிமிட்டெட் | | 3,75,000 |
| | கடனாளிகள் | | 40,000 | | | | |
| | வங்கி | | 20,000 | | | | |
| | வங்கி — கலைப்புச் செலவு | | 500 | | | | |
| | பங்குநர்கள் இலாபம் | | 24,500 | | | | |
| | | | 4,30,000 | | | | 4,30,000 |

### பம்பாய் லிமிட்டெட்

பற்று | வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | தீர்வுக் கணக்கு | | 3,75,00. | | வங்கி | | 1,25,000 |
| | | | | | பம்பாய் லிமிட்டெடின் பங்குகள் | | 2,50,000 |
| | | | 3,75,000 | | | | 3,75,000 |

## பம்பாய் லிமிட்டெடின் பங்குகள் கணக்கு

பற்று | வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | பம்பாய் லிமிட்டெட் | | 2,50,000 | | பங்குநர்கள் க/கு | | 2,50,000 |

## பங்குநர்கள் கணக்கு

பற்று | வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | பம்பாய் லிமிட்டெடின் பங்குகள் | | 2,50,000 | | பங்குமுதல்—மாற்றம் | | 2,50,000 |
| | வங்கி | | 24,500 | | தீர்வுக் க/கு—இலாபம் | | 24,500 |
| | | | 2,74,500 | | | | 2,74,500 |

### 6% கடனீட்டுப் பத்திரங்கள்

பற்று | வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | வங்கி | | 1,00,000 | | இருப்பு கீ/கொ | | 1,00,000 |

### வங்கிக் கணக்கு

பற்று | வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | பம்பாய் லிமிட்டெட் | | 1,25,000 | | தீர்வுக் க/கு— | | |
| | | | | | கலைப்புச் செலவு | | 500 |
| | | | | | கடனீட்டுப் பத்திரங்கள் | | 1,00,000 |
| | | | | | பங்குநர்கள் க/கு | | 24,500 |
| | | | 1,25,000 | | | | 1,25,000 |

## பம்பாய் லிமிட்டெடின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

| | பற்று | வரவு |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| தொழில் கொள்முதல் கணக்கு ப | 3,75,000 | |
| கல்கத்தா லிமிட்டெட் கலைப்பாளர் | | 3,75,000 |
| (..நாளிட்ட ஒப்பந்தத்தின் படி கல்கத்தா லிமிட்டெடின் தொழிலை எடுத்துக் கொள்வதற்குச் செலுத்த வேண்டிய கொள்முதல் மறுபயன்.) | | |
| பல்வகைச் சொத்துகள் கணக்கு ப | 4,30,000 | |
| கடனீந்தோர் | | 45,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு | | 10,000 |
| தொழில் கொள்முதல் கணக்கு | | 3,75,000 |
| (மறு மதிப்பீட்டு விலையில் பல்வகைச் சொத்துகளையும் வாணிக பொறுப்புகளையும் எடுத்துக்கொண்டதைக் கணக்குகளில் கொண்டு வர.) | | |
| கல்கத்தா லிமிட்டெட் கலைப்பாளர் ப | 3,75,000 | |
| வங்கி | | 1,25,000 |
| பங்குமுதல் | | 2,00,000 |
| பங்கு முனைமம் | | 50,000 |
| (கொள்முதல் மறுபயனை ரொக்கத்தாலும் ஒன்று ரூ. 100 மதிப்புடைய 2,000 பங்குகளை ஒன்று ரூ. 125 எனும் சந்தை மதிப்பிலும் வெளியிட்டுத் தீர்த்தது.) | | |

## எடுத்துக்காட்டு 119

*1973* ஜூன் *30*-ற்கான வரையறு பொறுப்புடைய பைரன் கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்பு கீழ்க் கொடுக்கப்பட்டிருக்கிறது :

### இருப்புநிலைக் குறிப்பு

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : | | | |
| ஒன்று ரூ. 50 பெயரளவு மதிப்புடைய 4,000 நேர்மைப் பங்குகள் | 2,00,000 | நிலைச் சொத்துகள் | 2,00,000 |
| மேம்பாட்டுத் தள்ளுபடிக் காப்பு | 30,000 | நடப்புச் சொத்துகள் | 1,10,000 |
| பொதுக்காப்பு | 25,000 | தொடக்கச் செலவு, கடனீட்டுப் பத்திரக் கழிவு முதலியவை | 10,000 |
| கடனீந்தோர் | 28,000 | | |
| கொடுபட வேண்டிய செலவினம் | 7,000 | | |
| ஓய்வூதிய நிதி | 30,000 | | |
| | 3,20,000 | | 3,20,000 |

மேற்கண்ட நாளில் இக் கம்பெனியை வரையறு பொறுப்புடைய புகழேந்தி கம்பெனி எடுத்துக்கொள்கிறது. நிலைச் சொத்துகளில் ரூ. 25,000 மதிப்புள்ள சொத்து ஒன்றையும், வங்கியிருப்பு ரூ. 5,020-ஐயும் தவிர, பிறவற்றைக் கம்பெனி எடுத்துக் கொள்கிறது. இச் சொத்தைப் பைரன் கம்பெனி ரூ. 18,000-ற்கு விற்றது. வாணிகப் பொறுப்பைத் தீர்க்கவும், கலைப்புச் செலவைக் கொடுக்கவும் புகழேந்திக் கம்பெனி ஒப்புக் கொண்டது. பைரன் கம்பெனியின் ஒவ்வொரு மூன்று பங்குகட்கும், தன் கம்பெனியின் ஒன்று ரூ. 100 பெயரளவு மதிப்புடைய இரு பங்குகளைக் கொடுத்துக் கொள்முதல் மறுபயனைத் தீர்க்கிறது.

கலைப்புச் செலவு ரூ. 600 ஆனது.

புகழேந்திக் கம்பெனியின் பங்குகள் பங்குமாற்றுச் சந்தையில் ரூ. 120 என விலை குறிக்கப்பட்டிருக்கிறதென்று கொண்டு, பைரன் கம்பெனியின் ஏடுகளில் வேண்டிய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

**விடை:**

**விளக்கக் குறிப்பு :**

கொள்முதல் மறு பயனைக் கீழ்க்கண்டவாறு அறியலாம் :

| | |
|---|---|
| பைரன் கம்பெனியின் ஒவ்வொரு மூன்று பங்குகட்கும் கிடைப்பது | புகழேந்திக் கம்பெனியின் இரு பங்குகள் |

எனவே, மொத்தம் கிடைக்கும் பங்குகள் $= 4,000 \times \frac{2}{3}$

$= 2,666\frac{2}{3}$ பங்குகள்

புகழேந்திக் கம்பெனியின் பங்கு ஒன்றின் மதிப்பு = ரூ. 100

2,666 பங்குகளின் மதிப்பு $= 2,666 \times 100$

$= 2,66,600$

**கூட்டு :**

| | ரூ. |
|---|---|
| | 2,66,600 |
| $\frac{2}{3}$ பங்கின் சந்தை மதிப்பு (ரொக்கமாகச் செலுத்தப்படுகிறது) $\frac{2}{3} \times 120$ | 80 |
| மொத்தக் கொள்முதல் மறுபயன் | ரூ. 2,66,680 |

புகழேந்திக் கம்பெனிப் பங்கின் சந்தை மதிப்பு ரூ. 120 எனக் கொடுக்கப்பட்டிருப்பினும், இவ் விலையில் அக் கம்பெனி வழங்கும் 2,666 பங்குகளின் மதிப்பையும் கணக்கிடக்கூடாது. காரணம், சந்தை மதிப்பில் அவை வெளியிடப்படுகின்றன என்று கொடுக்கப்படவில்லை. பங்கின் சந்தை மதிப்புக் கொடுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தாலேயே, எடுத்துக்கொள்ளும் கம்பெனி வெளியிடும் பங்குகளைச் சந்தை மதிப்பில் கணக்கிடவேண்டுமென்று கருதக்கூடாது.

ஒரு கம்பெனி தனது பங்கைப் பின்னமாக வெளியிடக் கூடாது. எனவே, புகழேந்திக் கம்பெனி தரவேண்டிய $2,666\frac{2}{3}$ பங்குகளுக்கு 2,666 பங்குகளைக் கொடுத்துவிட்டு மீதியுள்ள $\frac{2}{3}$ பங்கிற்கு அதன் மதிப்பை ரொக்கத்தில் கொடுக்கவேண்டும். இவ்வாறு பங்கின் மதிப்பளவிற்கு ரொக்கமாகச் செலுத்தும்போழ்து பங்கின் சந்தை மதிப்பை அடிப்படையாகக் கொள்ளவேண்டும்.

**சந்தையில் விற்கவேண்டிய பங்குகளைக் கணக்கிடுதல்**

பைரன் கம்பெனி கீழ்க்கண்ட பொறுப்புகளைத் தீர்க்க வேண்டியுள்ளது.

| | | | ரூ. |
|---|---|---|---|
| ஓய்வூதிய நிதி | | = | 30,000 |
| கொடுபட வேண்டிய செலவினம் | | = | 7,000 |
| | | | 37,000 |
| **கழி :** | | | |
| வங்கியிருப்பு | = | 5,020 | |
| நிலச் சொத்தினை விற்றதில் பெற்றது | = | 18,000 | |
| புகழேந்திக் கம்பெனியிடம் பெற்றது | = | 80 | |
| | | | 23,100 |
| வேண்டப்படும் ரொக்கம் | | = | ரூ. 13,900 |

இதற்குப் புகழேந்திக் கம்பெனியிடம் பெற்ற பங்குகளை விற்கவேண்டியுள்ளது. அப் பங்கின் சந்தை மதிப்பு ரூ. 120 எனக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே,

ரூ. 120 ரொக்கம் பெற
விற்கவேண்டிய பங்கு $= 1$

ரூ. 13,900 ரொக்கம் பெற
விற்கவேண்டிய பங்கு $= 13,900 \times \frac{1}{120}$

$= 115\frac{5}{6}$ பங்குகள்

அதாவது, 116 பங்குகளை விற்கவேண்டுமென்று உணரலாம்.

கொடுபட வேண்டிய செலவினம் என்பது வாணிகப் பொறுப்பில் அடங்காது. எனவே, இதனை வாங்கும் கம்பெனி எடுத்துக் கொள்ளவில்லையாதலால் பைரன் கம்பெனியே இதற்குப் பணம் செலுத்தவேண்டியுள்ளது.

வங்கியிருப்பை, வாங்கும் கம்பெனியான புகழேந்திக் கம்பெனி எடுத்துக்கொள்ளவில்லையாதலால், இதனைத் தீர்வுக் கணக்கிற்கு மாற்றவில்லை.

## பைரன் கம்பெனியின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே. ப. எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| 1973 | | | ரூ. | ரூ. |
| சூன் 30 | தீர்வுக் கணக்கு ப | | 3,04,980 | |
| | நிலைச் சொத்துகள் | | | 2,00,000 |
| | நடப்புச் சொத்துகள் | | | 1,04,980 |
| | (புகழேந்திக் கம்பெனி எடுத்துக்கொண்ட சொத்துகளைத் தீர்வுக் கணக்கிற்கு மாற்றுதல்.) | | | |
| ,, | கடனீந்தோர் ப | | 28,000 | |
| | தீர்வுக் கணக்கு | | | 28,000 |
| | (புகழேந்திக் கம்பெனி எடுத்துக்கொண்ட வாணிகப் பொறுப்பைத் தீர்வுக் கணக்கிற்கு மாற்ற.) | | | |
| ,, | புகழேந்திக் கம்பெனி ப | | 2,66,680 | |
| | தீர்வுக் கணக்கு | | | 2,66,680 |
| | (கொள்முதல் மறுபயனைப் பதிய.) | | | |
| ,, | வங்கிக் கணக்கு ப | | 18,000 | |
| | தீர்வுக் கணக்கு | | | 18,000 |
| | (நிலைச் சொத்தை விற்றதில் பெற்றது.) | | | |
| ,, | தீர்வுக் கணக்கு ப | | 7,700 | |
| | நேர்மைப் பங்குநர்கள் | | | 7,700 |
| | (தீர்வுக் கணக்கின் ஆதாயத்தைப் பங்குநர்கள் கணக்கிற்கு மாற்றுதல்.) | | | |

குறிப்பேட்டுப் பதிவுகள்—(தொடர்ச்சி)

| நாள் | விவரம் | பே. ப. எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| 1973 | | | ரூ. | ரூ. |
| ஜூன் 30 | வங்கிக் கணக்கு ப | | 80 | |
| | புகழேந்திக் கம்பெனிப் பங்குகள் கணக்கு ப | | 2,66,600 | |
| | புகழேந்திக் கம்பெனி | | | 2,66,680 |
| | (ரொக்கமும் ஒன்று, ரூ. 100 மதிப்புடைய 2,666 பங்குகளும் புகழேந்திக் கம்பெனியிடமிருந்து பெற்றது.) | | | |
| ,, | புகழேந்திக் கம்பெனி ப | | 600 | |
| | வங்கிக் கணக்கு | | | 600 |
| | (கலைப்புச் செலவு ரூ. 600-ஐ வாங்கும் கம்பெனியிடமிருந்து பெற வேண்டியது.) | | | |
| ,, | வங்கிக் கணக்கு ப | | 600 | |
| | புகழேந்திக் கம்பெனி | | | 600 |
| | (ஆன கலைப்புச் செலவு ரூ. 600-ஐப் புகழேந்திக் கம்பெனியிடமிருந்து பெற்றது.) | | | |
| ,, | நேர்மைப் பங்குநர்கள் கணக்கு ப | | 10,000 | |
| | தொடக்கச் செலவு, கடன்பத்திரக் கழிவுக் கணக்கு | | | 10,000 |
| | (நீக்கப்பெறாத் தொடக்கச் செலவு, கடனீட்டுப் பத்திரக் கழிவு முதலியவற்றை நேர்மைப் பங்குநர் கணக்கிற்கு மாற்றுதல்.) | | | |

## குறிப்பேட்டுப் பதிவுகள்—(தொடர்ச்சி)

| நாள் | விவரம் | பே. ப. எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| 1973 | | | ரூ. | ரூ. |
| ஜூன் 30 | நேர்மைப் பங்குமுதல் கணக்கு ப | | 2,00,000 | |
| | பொதுக்காப்பு ப | | 25,000 | |
| | மேம்பாட்டுத் தள்ளுபடிக் காப்பு ப | | 30,000 | |
| | நேர்மைப் பங்குநர் கணக்கு | | | 2,55,000 |
| | (நேர்மைப் பங்குமுதல், பொதுக்காப்பு, மேம்பாட்டுத் தள்ளுபடி ஆகியவற்றைப் பங்குநர்கள் கணக்கிற்கு மாற்றுதல்.) | | | |
| ,, | வங்கிக் கணக்கு ப | | 13,920 | |
| | புகழேந்திக் கம்பெனிப் பங்குகள் | | | 11,600 |
| | பங்கு விற்றதில் இலாபம் | | | 2,320 |
| | (ஒன்று ரூ. 100 மதிப்புடைய புகழேந்திக் கம்பெனியின் 116 பங்குகளை ஒன்று ரூ. 120 வீதம் சந்தை விலையில் விற்றது.) | | | |
| ,, | பங்கு விற்றதில் இலாபம் ப | | 2,320 | |
| | நேர்மைப் பங்குதாரர்கள் கணக்கு | | | 2,320 |
| | (பங்கு விற்றதில் ஏற்பட்ட இலாபத்தை நேர்மைப் பங்குநர்கள் கணக்கிற்கு மாற்றுதல்.) | | | |

குறிப்பேட்டுப் பதிவுகள்—(தொடர்ச்சி)

| நாள் | விவரம் | பே. ப. எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| 1973 சூன் 30 | ஒய்வூதிய நிதி ப | | ரூ. 30,000 | ரூ. |
| | கொடுபட வேண்டிய செலவினம் ப | | 7,000 | |
| | வங்கி | | | 37,000 |
| | (புகழேந்திக் கம்பெனி எடுத்துக்கொள்ளாத பிற பொறுப்புகளான ஒய்வூதிய நிதியையும் கொடுபட வேண்டிய செலவினத்தையும் ரொக்கம் கொடுத்துத் தீர்த்தது.) | | | |
| ,, | நேர்மைப் பங்குநர்கள் கணக்கு ப | | 2,55,020 | |
| | வங்கி | | | 20 |
| | புகழேந்திக் கம்பெனிப் பங்குகள் | | | 2,55,000 |
| | (நேர்மைப் பங்குநர்களுக்கு மீதியுள்ள ரொக்கத்தையும், 2,550 பங்குகளையும் கொடுத்தது.) | | | |

## கம்பெனிகட்கிடையே கொடுக்க வேண்டியவை (Inter Company Owings)

கம்பெனிகள் ஒன்றிணையும்போழ்து சில வேளைகளில் அக் கம்பெனிகட்கிடையே கொடுக்கல் — வாங்கல் நடவடிக்கைகளின் காரணமாகக் கணக்குகள் ஏற்பட்டிருக்கலாம். அதாவது, வாங்கும் கம்பெனி, கலைக்கப்படும் கம்பெனியின் ஏட்டில் கடனாளியாகவோ கடனீந்தோராகவோ காணப்படலாம். எடுத்துக் காட்டாக, 'அ' கம்பெனி 'ஆ' கம்பெனியிடம் கடனாகச் சரக்கு வாங்கி இருப்பதாகக் கொள்வோம். இப்பொழுது 'அ' கம்பெனி ஏட்டில் 'ஆ' கம்பெனி கடனீந்தோராகக் காணப்பெறும். 'அ' கம்பெனியை 'ஆ' கம்பெனி எடுத்துக்கொள்வதாகக் கொண்டால் இந் நடவடிக்கைக்கான சரிக்கட்டுதலைச் செய்யவேண்டும். இவ்வாறு சரக்கு வாங்குதல், விற்றல் போன்ற நடவடிக்கைகளின் காரணமாக மட்டுமின்றிக் கடன் தருதல், பெறுதல் போன்ற நடவடிக்கையாலும், ஒரு கம்பெனியின் கணக்கு அடுத்த கம்பெனியின் ஏட்டில் காணப்பெறலாம். இவற்றைப் பதிய கீழ்க்கண்ட விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

## பொதுவான கடன்களை நீக்குதல்

விற்கும் கம்பெனியின் (கலைக்கப்படும் கம்பெனியின்) ஏட்டில் இந் நடவடிக்கைகளால் மாறுதல் ஏதுமிருப்பதில்லை. வழக்கம் போலவே கணக்குகளைத் தீர்வுக் கணக்குக்கு எடுத்துச்சென்று முடித்துவிட வேண்டும். வாங்கும் கம்பெனி இக் கடன்களை எடுத்துக்கொள்கிறது என்ற அடிப்படையில் வாங்கும் கம்பெனிக்குத் தரவேண்டிய அல்லது வாங்கும் கம்பெனியிடமிருந்து பெற வேண்டிய கடன், தீர்வுக் கணக்கிற்கு மாற்றப்படுகிறது.

ஆனால், வாங்கும் கம்பெனியின் ஏட்டில் சிறு மாறுதல் தேவைப்படுகிறது. தொழிலை வாங்குவதற்கும், கொள்முதல் மறுபயனைத் தீர்ப்பதற்கும் செய்யவேண்டிய பதிவுகளை வழக்கம் போன்றே செய்யவேண்டும். அத்துடன்,

கடனீந்தோர் கணக்கில் பற்றும்,

கடனாளிகள் கணக்கில் வரவும் .. வைக்கவேண்டும்.

எடுத்துக்காட்டாக, 'அ' லிமிட்டெடை 'ஆ' லிமிட்டெட் எடுத்துக்கொள்வதாகவும், அந் நாளில் 'அ' லிமிட்டெடின் இருப்பு நிலைக் குறிப்பில் 'ஆ' லிமிட்டெட் ரூ. 10,000 கடனாளியாகக் காட்டப்பட்டிருப்பதாகவும் கொள்வோம். இதிலிருந்து நாம் தெரிந்துகொள்வது :

'அ' லிமிட்டெட் 'ஆ' லிமிட்டெடிற்குச் சரக்கு விற்றதின் காரணமாக 'ஆ' லிமிட்டெட் தரவேண்டியது ரூ. 10,000. இதே நடவடிக்கை 'ஆ' லிமிட்டெடின் ஏட்டைப் பொருத்தவரையில் கொள்முதல் நடவடிக்கையாகும். எனவே, 'ஆ' லிமிட்டெடின் இருப்புநிலைக் குறிப்பில் 'அ' லிமிட்டெட் ரூ. 10,000-ற்கான கடனீந்தோராகக் கொடுக்கப்பட்டிருக்கும். இப்பொழுது 'அ' லிமிட்டெடை எடுத்துக்கொள்ளும்போழ்து 'ஆ' லிமிட்டெட் தனது கடனாளிகள் கணக்கில் பற்று வைத்திருக்கும். இதில் தாம் தரவேண்டிய ரூ. 10,000 அதில் அடங்கியிருக்கிற காரணத்தினால், கடனாளிகள் கணக்கில் இப்பொழுது ரூ. 10,000-ஐக் குறைத்து விடவேண்டும். அவ்வாறே தனது ஏட்டில் 'அ' லிமிட்டெட் கடனீந்தோராகக் கொடுக்கப்பட்டிருக்கின்றது அல்லவா? இத்தொகையை அது இனித் தரவேண்டியதில்லையாதலால், கடனீந்தோர் கணக்கில் பற்று வைத்து அதனைக் குறைத்துவிட வேண்டும். எனவேதான் மேலே விளக்கியவாறு கீழ்க்கண்ட பதிவினைச் செய்ய வேண்டும்.

| | | ரூ. | ரூ. |
|---|---|---|---|
| கடனீந்தோர் கணக்கு | ப | 10,000 | |
| கடனாளிகள் கணக்கு | | | 10,000 |

இவ்வாறின்றி 'அ' லிமிட்டெடின் இருப்புநிலைக் குறிப்பில் 'ஆ' லிமிட்டெட் ரூ. 15,000-ற்கான கடனீந்தோராகக் காட்டப்பட்டிருப்பதாகக் கொள்வோம். அந் நிலையில் 'ஆ' லிமிட்டெடின் இருப்புநிலைக் குறிப்பில் 'அ' லிமிட்டெட் ரூ. 15,000-ற்கான கடனாளியாகக் காட்டப்பட்டிருக்கும். இப்பொழுது 'அ' லிமிட்டெட் சொத்துகளையும் பொறுப்புகளையும் எடுத்துக்கொள்கின்ற காரணத்தால், 'அ' லிமிட்டெடிடமிருந்து இத் தொகையை இனிப் பெறவேண்டியதில்லை. எனவே, கடனீந்தோர் கணக்கில் பற்றும், கடனாளிகள் கணக்கில் வரவும் வைத்து இதனைச் சரிசெய்து கொள்ளலாம். முன்போன்றேதான் இதற்கும் பதிவு அமைகிறது. தேவையான பதிவு :

| | | | |
|---|---|---|---|
| கடனீந்தோர் கணக்கு | ப | 15,000 | |
| கடனாளிகள் கணக்கு | | | 15,000 |

**ஏற்படா இலாபத்தை நீக்குதல்** (cancellation of unrealised profit)

சரக்கு விற்றல், வாங்குதல் நடவடிக்கைகளின் காரணமாகக் கம்பெனியின் சரக்கிருப்பையும் சில வேளைகளில் சரிக்கட்ட வேண்டியிருக்கும். எடுத்துக்காட்டாக, விற்கும் கம்பெனி வாங்கும்

கம்பெனியிடமிருந்து சரக்கு வாங்குவதாகவும், அக் கம்பெனியை வாங்கும் கம்பெனி எடுத்துக்கொள்ளும்போழ்து, அதன் கைவசம் சரக்கிருப்பு இருப்பதாகவும் கொள்வோம். இப்பொழுது விற்கும் கம்பெனியின் சரக்கிருப்பை வாங்கும் கம்பெனி எடுத்துக் கொள்ளும்போழ்து, அது முன்னரே விற்ற சரக்கை மீண்டும் வாங்குவதாகப் பொருளாகின்றது. முன்னர் அது அதனை விற்ற போது அதில் இலாபமும் அடங்கியிருக்கும். இப்பொழுது அச் சரக்கு மீண்டும் தன்னிடம் வரும்போழ்து அச் சரக்கில் அடங்கி யிருக்கும் இலாபத்தினைச் சரிக்கட்டவேண்டும் அல்லவா? எனவே, சரக்கிருப்பை அதன் அடக்கவிலையில் (தான் முன்னர் அதில் சேர்த் துள்ள இலாபத்தைக் கழித்த பின்னுள்ள தொகை) பற்று வைத்து விட்டால் போதும். இதன் காரணமாக வாணிக நற்பெயரின் தொகை அல்லது முதல் குறைப்பின் தொகை தானகவே சரிக்கட்டப்பட்டுவிடுகிறது.

வேறொரு முறையிலும் இதனைச் சரிக்கட்டுவதுண்டு. அதாவது, சரக்கிருப்பை விற்கும் கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்பி லுள்ள மதிப்பிலேயே பற்று வைத்துப் பின்னர் தனது இலாப-நட்டக் கணக்கில் அச் சரக்கிருப்பில் அடங்கியுள்ள இலாபத் தொகைக்குப் பற்றும், சரக்கிருப்புக் கணக்கில் வரவும் வைப்பது வழக்கம்.

அவ்வாறின்றி வாங்கும் கம்பெனி விற்கும் கம்பெனியிட மிருந்து சரக்கு வாங்கியிருப்பதாகவும், கம்பெனியை எடுத்துக் கொள்ளும் நாளில் விற்கப்படாமலும் இருப்பின், விற்கும் கம் பெனி தன்னிடமுள்ள சரக்கில் அடங்கியுள்ள இலாபத்தை நீக்க வாணிக நற்பெயர் கணக்கில் அல்லது முதல் காப்புக் கணக்கில் பற்றும், சரக்கிருப்புக் கணக்கில் வரவும் வைக்கவேண் டும். எடுத்துக்காட்டாக, 'ஆ' கம்பெனி ரூ. 30,000-ற்கு 'அ' கம்பெனியிடமிருந்து சரக்கு வாங்கியிருப்பதாகவும், 'அ' கம்பெனியை 'ஆ' கம்பெனி எடுத்துக்கொள்ளும் நாளில் அவ் வாறு வாங்கிய சரக்கில் ரூ. 24,000 விற்கப்படாமல் இருப்ப தாகவும் கொள்வோம். மேலும், 'அ' கம்பெனி அடக்கவிலையின் மீது 20 சதவீதம் இலாபம் சேர்த்து விற்பதாகவும் கொள் வோம். இப்பொழுது 'ஆ' கம்பெனி செய்யவேண்டிய சரிக் கட்டுதல் கீழ்க்கண்டவாறு இருக்கும்.

| | |
|---|---|
| விற்கப்படாதிருக்கும் சரக்கிருப்பில் அடங்கியுள்ள இலாபம் | $24,000 \times \frac{20}{120}$ |
| | = ரூ. 4,000 |

ரூ. 4,000 ஏற்படாத இலாபமாகக் (unrealised profit) கொள்வோம். பிற பதிவுகளுடன் 'ஆ' கம்பெனி கீழ்க்கண்ட பதிவையும் செய்யவேண்டும்.

| | | | | ரூ. | ரூ. |
|---|---|---|---|---|---|
| | வாணிக நற்பெயர் கணக்கு அல்லது முதல் காப்புக் கணக்கு | ப | | 4,000 | |
| | சரக்கிருப்புக் கணக்கு | | | | 4,000 |
| | ('அ' கம்பெனியிடமிருந்து வாங்கி தற்போது விற்கப் படாதிருக்கும் சரக்கில் அடங்கியுள்ள இலாபத்தை நீக்குதல்.) | | | | |

இது குறித்து இதற்கு மாறுபட்ட கருத்தும் நிலவுகிறது. தன்னிடம் சரக்கு விற்ற கம்பெனியை எடுத்துக்கொள்ளும்போழ்து முன்னர் அதனிடம் வாங்கிய சரக்கு விற்கப்படாமல் இருக்கு மாயின், அதில் அடங்கியுள்ள இலாபத்திற்குச் சரிக்கட்டத் தேவையில்லை என்றும் கூறப்படுகிறது. ஆர். எல். குப்தா அவர்கள் கீழ்க்கண்டவாறு கூறுகிறார். 'கம்பெனியை எடுத்துக்கொள்வதாலேயே கடந்த காலத்தில் ஏற்பட்ட நடவடிக்கையைச் சரிக் கட்டத் தேவையில்லை. விற்கும் கம்பெனி பங்குதாரர்கள் தாங்கள் முன்னர் இலாபம் வைத்துச் சரக்கு விற்ற கம்பெனி தங்கள் கம்பெனியை எடுத்துக் கொள்கின்ற காரணத்தினாலேயே தங்களின் இலாபத்தை அவர்கட்கு தரப்போவதில்லை. எனவே, பிற கம்பெனியிடம் சரக்கு வாங்குவதுபோலவே, இதனையும் சாதாரண கொள்முதலாகக் கொள்ளவேண்டும்'. (பக்கம் 314—Advanced Accountancy—Volume II)

**எடுத்துக்காட்டு 120**

*1974 மார்ச் 31*-ற்குரிய வரையறு பொறுப்புடைய இரு கம்பெனிகளின் இருப்புநிலைக் குறிப்புகள் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ளன :

| விவரம் | புகழேந்திக் கம்பெனி | பொன்முடிக் கம்பெனி | விவரம் | புகழேந்திக் கம்பெனி | பொன்முடிக் கம்பெனி |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | | ரூ. | ரூ. |
| **பங்கு முதல்:** | | | வாணிக நற்பெயர் .. | 50,000 | — |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய பங்குகள் முழுதும் செலுத்தப் பெற்றவை .. | 2,00,000 | 4,00,000 | கட்டடம் .. | 1,00,000 | 1,30,000 |
| பொதுக்காப்பு .. | — | 30,000 | பொறிவகை .. | 1,00,000 | 1,50,000 |
| பங்கு முனைமக் கணக்கு | — | 20,000 | மனைத்துணைப்பொருள் .. | — | 10,000 |
| தொழிலர் நட்ட ஈட்டுக் காப்பு நிதி .. | 10,000 | 20,000 | சரக்கிருப்பு .. | 50,000 | 50,000 |
| அலுவலர் நலக்காப்பு நிதி (Staff Provident Fund) .. | 15,000 | — | கடனாளிகள் .. | 40,000 | 40,500 |
| கடனீட்டுப் பத்திரங்கள் | 1,00,000 | — | வங்கி .. | 7,000 | 1,29,500 |
| கடனீந்தோர் .. | 27,000 | 33,000 | தொடக்கச் செலவுகள் .. | 5,000 | — |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு .. | — | 7,000 | | | |
| | 3,52,000 | 5,10,000 | | 3,52,000 | 5,10,000 |

கீழ்க்கண்ட நிபந்தனைகளின் பேரில் புகழேந்திக் கம்பெனியைப் பொன்முடிக் கம்பெனி எடுத்துக்கொள்கிறது :

(1) வாணிக நற்பெயரின் மதிப்பு ரூ. 31,000 என எடுத்துக் கொள்ளப்பட்டது.

வங்கியிருப்பைத் தவிர பிற சொத்துகள் அனைத்தையும் கடனீந்தோரையும் பொன்முடிக் கம்பெனி எடுத்துக்கொள்கிறது. ஏட்டு மதிப்பில் 10 சதவீதம் தள்ளி நிலைச் சொத்துகள் மதிப்பிடப்படுகின்றன.

(2) ரூ. 1,27,000-ற்கு ரொக்கம் கொடுத்தும், மீதித் தொகைக்கு ஒன்று ரூ. 100 மதிப்புடைய தனது பங்குகளை 5 சதவீதம் முனைமத்தில் வெளியிட்டும் கொள்முதல் மறுபயனைத் தீர்க்கிறது.

(3) புகழேந்திக் கம்பெனியின் சரக்கிருப்பில் ரூ. 18,000 மதிப்புடைய சரக்குப் பொன்முடிக் கம்பெனியில் வாங்கியதாகும். பொன்முடிக் கம்பெனி அடக்கவிலையுடன் 20 சதவீதம் இலாபம் சேர்த்துச் சரக்கை விற்கிறது.

(4) புகழேந்திக் கம்பெனியின் கடனீந்தோரில் ரூ. 10,000 ஆனது பொன்முடிக் கம்பெனிக்குத் தரவேண்டியதாகும்.

(5) புகழேந்திக் கம்பெனி தன் கடனீட்டுப் பத்திரங்களை 5 சதவீதம் முனைமத்தில் தீர்க்கிறது. மேற்கண்ட விவரங்களிலிருந்து,

அ. புகழேந்திக் கம்பெனியின் ஏட்டில் பேரேட்டுக் கணக்குகளைத் தயாரிக்கவும்.

ஆ. பொன்முடிக் கம்பெனியின் ஏட்டில் குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

இ. புகழேந்திக் கம்பெனியை எடுத்துக்கொண்ட பின்னர் பொன்முடிக் கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்பைத் தயார் செய்க.

**விடை :**

**கொள் முதல் மறுபயன்**

எடுத்துக் கொண்ட சொத்துகளின் மதிப்பு :

| | ரூ. |
|---|---|
| வாணிக நற்பெயர் | 31,000 |
| கட்டடம் | 90,000 |
| பொறிவகை | 90,000 |
| சரக்கிருப்பு | 50,000 |
| கடனாளிகள் | 40,000 |
| | 3,01,000 |
| **கழி :** | |
| எடுத்துக்கொண்ட பொறுப்பு | 27,000 |
| கொள்முதல் மறுபயன் | 2,74,000 |

**இதனைத் தீர்க்கும் முறை**

| | ரூ. | |
|---|---|---|
| ரொக்கம் | 1,27,000 | |
| பங்குகள் | 1,47,000 | |
| | | 2,74,000 |

ரூ. 105-ற்கு 1 பங்கு

ரூ. 1,47,000-ற்கு $1,47,000 \times \frac{1}{105}$

= 1,400 பங்குகள்

## புகழேந்திக் கம்பெனியின் ஏட்டில் முக்கியமான பேரேட்டுக் கணக்குகள்

### தீர்வுக் கணக்கு

பற்று | வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | வாணிக நற்பெயர் .. | | 50,000 | | கடனீந்தோர் .. | | 27,000 |
| | கட்டடம் .. | | 1,00,000 | | பொன்முடிக் கம்பெனி .. | | 2,74,000 |
| | பொறிவகை .. | | 1,00,000 | | பங்குநர்கள்—நட்டம் .. | | 44,000 |
| | சரக்கிருப்பு .. | | 50,000 | | | | |
| | கடனாளிகள் .. | | 40,000 | | | | |
| | கடனீட்டுப் பத்திரதாரர்கள் | | 5,000 | | | | |
| | | | 3,45,000 | | | | 3,45,000 |

## பங்குநர்கள் கணக்கு

பற்று — வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | தொடக்கச் செலவு .. | | 5,000 | | பங்குமுதல்—மாற்றம் .. | | 2,00,000 |
| | தீர்வுக் கணக்கு .. | | 44,000 | | தொழிலர் நட்டஈட்டுக் காப்பு நிதி .. | | 10,000 |
| | வங்கி .. | | 14,000 | | | | |
| | பொன்முடிக் கம்பெனிப் பங்குகள் .. | | 1,47,000 | | | | |
| | | | 2,10,000 | | | | 2,10,000 |

## பொன்முடிக் கம்பெனி

பற்று | வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | தீர்வுக் கணக்கு .. | | 2,74,000 | | வங்கி .. | | 1,27,000 |
| | | | | | பொன்முடிக் கம்பெனிப் பங்குகள் .. | | 1,47,000 |
| | | | 2,74,000 | | | | 2,74,000 |

## வங்கிக் கணக்கு

பற்று | வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | இருப்பு கீ/கொ | | 7,000 | | கடனீட்டுப்பத்திரதாரர்கள் | | 1,05,000 |
| | பொன்முடிக் கம்பெனி .. | | 1,27,000 | | அலுவலர் நலக் காப்பு .. | | 15,000 |
| | | | | | பங்குநர்கள் .. | | 14,000 |
| | | | 1,34,000 | | | | 1,34,000 |

**கடனீட்டுப் பத்திரதாரர்கள் கணக்கு**

பற்று | வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | வங்கி .. | | 1,05,000 | | கடனீட்டுப் பத்திரங்கள்— மாற்றம் .. | | 1,00,000 |
| | | | | | தீர்வுக் கணக்கு .. | | 5,000 |
| | | | 1,05,000 | | | | 1,05,000 |

**அலுவலர் நலக் காப்பு நிதி**

பற்று | வரவு

| நாள் | விவரம் | பே. ப. எ. | ரூ. | நாள் | விவரம் | பே. ப, எ. | ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | வங்கி .. | | 15.000 | | இருப்பு கீ/கொ | | 15,000 |

## பொன்முடிக் கம்பெனியின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

| | பற்று | வரவு |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| தொழில் கொள்முதல் க/கு ப | 2,74,000 | |
| புகழேந்திக் கம்பெனிக் கலைப்பாளர் | | 2,74,000 |
| (..நாளிட்ட ஒப்பந்தத்தின் படி புகழேந்திக் கம்பெனியை எடுத்துக் கொண்டதற்குச் செலுத்தவேண்டிய கொள்முதல் மறுபயன்.) | | |
| கட்டடம் ப | 90,000 | |
| பொறிவகை ப | 90,000 | |
| சரக்கிருப்பு ப | 50,000 | |
| கடனாளிகள் ப | 40,000 | |
| வாணிக நற்பெயர் ப | 31,000 | |
| கடனீந்தோர் | | 27,000 |
| தொழில் கொள்முதல் க/கு | | 2,74,000 |
| (எடுத்துக்கொண்ட புகழேந்தியின் சொத்துகளையும் கடனீந்தோரையும் கணக்கிற் கொண்டுவர.) | | |
| புகழேந்திக் கம்பெனிக் கலைப்பாளர் ப | 2,74,000 | |
| வங்கி | | 1,27,000 |
| பங்குமுதல் க/கு | | 1,40,000 |
| பங்கு முனைமக் க/கு | | 7,000 |
| (ரூ. 1,27,000 ரொக்கங் கொடுத்தும், ஒன்று ரூ. 100 மதிப்புடைய 1,400 பங்குகளை 5 சதவீதம் முனைமத்தில் வெளியிட்டும் கொள்முதல் மறுபயனைத் தீர்த்தது.) | | |

## குறிப்பேட்டுப் பதிவுகள்—(தொடர்ச்சி)

| | | பற்று | வரவு |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| வாணிக நற்பெயர்* | ப | 3,000 | |
| சரக்கிருப்பு* | | | 3,000 |
| (புகழேந்திக் கம்பெனிக்கு விற்ற சரக்கை மீண்டும் எடுத்துக்கொண்டதில் அடங்கியுள்ள இலாபத் தொகையை நீக்க.) | | | |
| கடனீந்தோர் | ப | 10,000 | |
| கடனாளிகள் | | | 10,000 |
| (புகழேந்திக் கம்பெனியின் கடனீந்தோரில் ரூ. 10,000 நமக்குத் தரவேண்டியது, அடங்கியுள்ளது. அதனை நீக்க.) | | | |

**குறிப்பு :**

*புகழேந்திக் கம்பெனியின் சரக்கிருப்பில் அடங்கியுள்ள பொன்முடிக் கம்பெனியின் சரக்கு ரூ. 18,000. இதில் சேர்த்துள்ள இலாபத்தைக் கீழ்க்கண்டவாறு உணரவேண்டும்.

ரூ. 120 விற்கும் விலையாயின் இதில்
அடங்கியுள்ள இலாபம் ரூ. 20

ரூ. 18,000 விற்கும் விலையாயின்

அடங்கியுள்ள இலாபம் $\frac{18,000 \times 20}{120}$ = ரூ. 3,000

**பொன்முடிக் கம்பெனியின் இருப்புநிலைக்குறிப்பு**

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| **பங்கு முதல் :** | | **நிலைச் சொத்துகள் :** | |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 5,400 பங்குகள் முழுதும் செலுத்தப்பெற்றவை .. | 5,40,000 | வாணிக நற்பெயர் .. | 34,000 |
| (மேற்கண்ட பங்குகளில் 1,400 பங்குகள் முழுதும் செலுத்தப்பெற்றவையாக, ரொக்கத்திற்கன்றி வேறு மறு பயனுக்காக விற்குநர்க்கு வெளியிடப்பட்டது.) | | கட்டடம் .. | 2,20,000 |
| | | பொறிவகை .. | 2,40,000 |
| | | மனைத்துணைப்பொருள் .. | 10,000 |
| **காப்பும், மிகுதியும் :** | | **நடப்புச் சொத்துகள் :** | |
| பொதுக்காப்பு .. | 30,000 | சரக்கிருப்பு .. | 97,000 |
| பங்கு முனைமக் கணக்கு .. | 27,000 | கடனாளிகள் .. | 70,500 |
| தொழிலர் நட்ட ஈட்டுக் காப்பு நிதி | 20,000 | வங்கி .. | 2,500 |
| **நடப்புப் பொறுப்புகளும், ஒதுக்குகளும்:** | | | |
| கடனீந்தோர் .. | 50,000 | | |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு .. | 7,000 | | |
| | 6,74,000 | | 6,74,000 |

**கம்பெனிகட்கிடையே பங்கு வைத்து இருத்தல்** (Inter Company Holdings)

கம்பெனிகள் பிற கம்பெனிகளின் பங்குகளில் அல்லது கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்திருக்கும்போழ்து, அக் கம்பெனிகள் ஒன்றிணையும்போழ்து புதிய பிரச்சினைகள் தோன்றும். கீழ்க்கண்ட வகைகளில் இவை அமையலாம்.

(அ) வாங்கும் கம்பெனி எடுத்துக்கொள்ளப்படும் கம்பெனியின் பங்குகளை வைத்திருக்கும்போழ்து.

(ஆ) எடுத்துக்கொள்ளப்படும் கம்பெனி, வாங்கும் கம்பெனியின் பங்குகளை வைத்திருக்கும்போழ்து.

(இ) இரு கம்பெனிகளும் அடுத்த கம்பெனியின் பங்குகளை வைத்திருக்கும்போழ்து.

இவற்றை ஒவ்வொன்றாக ஆய்வோம்.

**(1) விற்கும் கம்பெனியின் பங்குகளை வாங்கும் கம்பெனி வைத்திருக்கும் போழ்து** (When the shares of the vendor company are held by the purchasing company)

இச் சூழ்நிலையில் எடுத்துக்கொள்ளப்படும் கம்பெனியின் பங்குகளை வாங்கும் கம்பெனி வைத்திருக்கும் காரணத்தால், எடுத்துக்கொள்ளப்படும் (விற்கும்) கம்பெனியின் சொத்துகளின் ஒரு பகுதிக்கான உரிமையை முன்னரே வாங்கும் கம்பெனி கொண்டுள்ளதாகப் பொருளாகிறது. இந் நிலையில் பிற பங்குநர் கட்குரிய சொத்துகளை வாங்குவதற்கும், கடனுளிகட்குச் செலுத்துவதற்கும் பதிவுகள் செய்தால் போதும். வேறு பங்கு நர்கட்குச் சேரவேண்டிய தொகை அடிப்படையிலும், கடனீந் தோர் அடிப்படையிலும் கொள்முதல் மறுபயன் கணக்கிடப் படும். எடுத்துக்காட்டாக, 'அ' கம்பெனியை 'ஆ' கம்பெனி ரூ. 2,00,000-ற்கு எடுத்துக்கொள்வதாகவும், 'அ' கம்பெனி யின் பங்குகளில் 25 சதவீதத்தை 'ஆ' கம்பெனி முன்னரே வைத்துள்ளதாகவும் கொண்டால், கொள்முதல் மறுபயன் ரூ. 1,50,000 தான் ஆகும். காரணம், மொத்த தொகையான ரூ. 2,00,000-ல் $\frac{1}{4}$ பங்கை முன்னரே 'ஆ' கம்பெனி பெற்றுள்ளது.

**எடுத்துக்காட்டு 121**

**நெல்லை லிமிட்டெடின் இருப்புநிலைக் குறிப்பு**

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : | | நிலைச் | |
| ஒன்று ரூ. 10 வீதம் 20,000 நேர்மைப் பங்குகள் | 2,00,000 | சொத்துகள் | 2,00,000 |
| பொதுக்காப்பு | 20,000 | நடப்புச் சொத்துகள் | 50,000 |
| கடனீந்தோர் | 30,000 | | |
| | 2,50,000 | | 2,50,000 |

நெல்லை லிமிட்டெடின் 5,000 பங்குகளைச் சேலம் லிமிட்டெட் வைத்துள்ளதாகவும், இக் கம்பெனியைச் சேலம் லிமிட்டெட் எடுத்துக்கொள்வதாகவும் கொள்வோம். சொத்துகளின் மதிப்பு ரூ. 2,75,000 என்றும் கடனீந்தோர் 25,000 என்றும் மதிப்பிடப்படுவதாகவும் கொண்டால் கொள்முதல் மறுபயன் கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படும்.

| | ரூ. |
|---|---|
| மறு மதிப்பீட்டில் எடுத்துக்கொண்ட மொத்த சொத்துகளின் மதிப்பு | 2,75,000 |
| **கழி :** | |
| எடுத்துக்கொண்ட பொறுப்பு | 25,000 |
| மொத்த கொள்முதல் மறுபயன் | 2,50,000 |
| **கழி :** | |
| முன்னரே சேலம் லிமிட்டெடிற்குரியது (25 சதவீதம்) | 62,500 |
| நெல்லை லிமிட்டெடின் பிற பங்குநர்கட்குரியது = | ரூ. 1,87,500 |

தான் முன்னரே வைத்துள்ள பங்குகட்கான கொள்முதல் மறுபயனைச் சேலம் லிமிட்டெட் நெல்லை லிமிட்டெடிற்குக் கொடுக்கவேண்டியதில்லையாதலால், விற்கும் கம்பெனியான நெல்லை லிமிட்டெடும் அப் பங்குகட்கான தொகை ஏதும் தர

வேண்டியதில்லை. எனவே, வாங்கும் கம்பெனியான சேலம் லிமிட்டெட் வைத்திருக்கும் பங்குகளின் அளவிற்குப் பங்குமுதல் கணக்கைத் தீர்வுக் கணக்கிற்கு எடுத்துச்சென்று முடிக்கவேண்டும். அதாவது, நெல்லை லிமிட்டெட் (விற்கும் கம்பெனி) தனது ஏட்டில் கீழ்க்கண்டவாறு இதற்கான பதிவைச் செய்யும்.

| | | | |
|---|---|---|---|
| பங்குமுதல் கணக்கு | ப | 50,000 | |
| தீர்வுக் கணக்கு<br>(வாங்கும் கம்பெனி முன்னரே வைத்துள்ள பங்குகளை நீக்குவதற்கு.) | | | 50,000 |

அவ்வாறே நெல்லை லிமிட்டெடை எடுத்துக்கொண்ட பிறகு அக் கம்பெனியில் முதலீடு செய்துள்ள பங்குகளின் மதிப்பு ஒன்றும் இல்லாததாகி விடுகிறது. எனவே, சேலம் லிமிட்டெட் (வாங்கும் கம்பெனி) தனது முதலீட்டுக் கணக்கை வாணிக நற்பெயர் கணக்கிற்கு மாற்றி முடிக்கவேண்டும். கீழ்க்கண்டவாறு பதிவு இருக்கும் :

| | | | |
|---|---|---|---|
| வாணிக நற்பெயர் கணக்கு | ப | 50,000 | |
| நெல்லை லிமிட்டெடின் பங்குகள் கணக்கு<br>(முதலீட்டுக் கணக்கு ரூ. 50,000 வாணிக நற்பெயர் கணக்கிற்கு மாற்றி முடிக்க.) | | | 50,000 |

**எடுத்துக்காட்டு 122**

'*P*' லிமிட்டெடின் 1966 திசம்பர் 31-ற்குரிய இருப்புநிலைக் குறிப்புக் கீழ்க் காட்டியவாறு இருந்தது :

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் :<br>அதிகாரம் பெற்றதும் வெளியிட்டதும் :<br>ஒன்று ரூ. 10 மதிப்புடைய 80,000 பங்குகள் முழுதும் செலுத்தப்பெற்றவை | 8,00,000 | நிலமும் கட்டடமும்<br>பொறிவகை<br>சரக்கிருப்பு | 2,50,000<br>6,00,000<br>2,35,000 |
| 5 சதவீதம் கடனீட்டுப் | | கடனாளிகள் | 2,49,000 |

**இருப்புநிலைக் குறிப்பு**—*(தொடர்ச்சி)*

| பொறுப்புகள் | | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|---|
| பத்திரங்கள் | | 5,00,000 | வங்கியிருப்பு | 26,000 |
| **கூட்டு :** | | | | |
| ஏறியுள்ள வட்டி | 25,000 | | இலாப-நட்டக் கணக்கு | 2,50,000 |
| | | 5,25,000 | | |
| கடனீந்தோர் | | 2,85,000 | | |
| | | 16,10,000 | | 16,10,000 |

கம்பெனியின் கடனீட்டுப் பத்திரங்கள் அனைத்தையும் '*G*' லிமிட்டெட் வைத்துள்ளது. கடந்த இரண்டாண்டுகளில் மேற் சொன்ன கம்பெனியின் 20,000 பங்குகளை '*G*' லிமிட்டெட் மொத்தத்தில் ரூ. 1,45,000-ற்கு வாங்கியிருக்கின்றனர். இவ் விரு கம்பெனிகளும் ஒப்புக்கொண்ட பின்னர் கீழ்க்கண்ட நிபந்தனை களின் பேரில் '*P*' லிமிட்டெடை '*G*' லிமிட்டெட் எடுத்துக் கொள்கிறது.

(அ) திசம்பர் 31ஆம் நாளில் '*P*' லிமிட்டெடின் சொத்து களையும் பொறுப்புகளையும் ஏட்டு மதிப்பிலேயே '*G*' லிமிட்டெட் எடுத்துக்கொள்கிறது. ஆனால், பொறிவகையை ரூ. 4,50,000 என மதிப்பிடுகிறது.

(ஆ) கடனீட்டுப் பத்திரதாருக்குத் தரவேண்டிய தொகை கொள்முதல் மறு பயனில் சரிக்கட்டப்பட வேண்டியது. இந் நடவடிக்கைகள் முடிவுபெற்றவுடன் கடனீட்டுப் பத்திரங்களை நீக்கிவிட வேண்டியது.

(இ) '*P*' லிமிட்டெடின் பிற பங்குநர்கட்கு ரூ. 10 மதிப் புடைய பங்குகளைப் பெயரளவு மதிப்பில் தனது பங்கு ஒன்று ரூ. 15 மதிப்புடையது என்ற அடிப்படையிலும் *P* லிமிட்டெடின் பங்கு ஒன்று ரூ. 5 மதிப்புடையது என்ற அடிப்படையிலும் வெளியிடுகிறது.

(பின்னப் பங்குகள் ஏதுமில்லை என்றுகொள்க.)

*P* லிமிட்டெடின் பங்குநர்கள் தேவையான தீர்மானத்தை நிறைவேற்றி மேற்கண்ட திட்டத்தை ஏற்றுக்கொள்கின்றனர்.

*P* லிமிட்டெடின் ஏடுகளை முடிக்கத் தேவையான பதிவுகளைக் கொடுத்து *G* லிமிட்டெடின் ஏடுகளில் தொடக்கப் பதிவுகளையும், *P* லிமிட்டெடின் பங்குகள், கடனீட்டுப் பத்திரங்கள் முதலிய வற்றை மாற்றி முடிக்கத் தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளை யும் தருக.

(C.A. Final and B.com., Banaras)

**விடை :**

கொள்முதல் மறுபயனை மேற்கண்ட கணக்கில் 'இ'-ல் கொடுத்தவாறு அறியவேண்டும். *G* லிமிட்டெட் வைத்துள்ள பங்குகளைத் தவிர பிறர் வைத்திருக்கும் பங்குகளின் எண்ணிக்கை 60,000 ஆகிறது (மொத்தமுள்ளது 80,000 பங்குகள்—'*G*' லிமிட்டெட் வைத்துள்ளது 20,000 பங்குகள்).

*P* லிமிட்டெடின் பங்கு ஒன்றின் மதிப்பு ரூ. 5 ஆகும்.

எனவே, பிற பங்குநர்கட்குக் கொடுக்கவேண்டியது

= ரூ. 3,00,000 (60,000 × ரூ 5)

*G* லிமிட்டெட் தனது பங்குகளை வழங்கி இக் கொள்முதல் மறுபயனைத் தீர்க்கின்றது.

ரூ. 15-ற்கு வழங்கும் பங்கு = 1

ரூ. 3,00,000-ற்கு வழங்கும் பங்கு $= \frac{3,00,000}{15}$

= 20,000 பங்குகள்

*G* லிமிட்டெட் வழங்கும் பங்குகளைக் கணக்கிட மட்டுமே பங்கு ஒன்றின் மதிப்பு ரூ. 15 ஆகக் கொள்ளவேண்டுமேயன்றி இவற்றைப் பதிவதற்குப் பங்கு ஒன்றின் மதிப்பு ரூ. 10 ஆகத் தான் கொள்ளவேண்டும். காரணம், தனது பங்குகளை *G* லிமிட்டெட் பெயரளவு மதிப்பில்தான் வெளியிடுகிறது.

எனவே, பதியவேண்டிய கொள்முதல் மறுபயன்

= 20,000 × ரூ. 10

= ரூ. 2,00,000

## *P* லிமிட்டெட்டின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

| | | பற்று | வரவு |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| தீர்வுக் கணக்கு | ப | 13,60,000 | |
| நிலமும் கட்டடமும் | | | 2,50,000 |
| பொறிவகை | | | 6,00,000 |
| சரக்கிருப்பு | | | 2,35,000 |
| கடனாளிகள் | | | 2,49,000 |
| வங்கி | | | 26,000 |
| (ஒப்பந்தத்தின்படி *G* லிமிட்டெட் தொழிலை எடுத்துக் கொள்ளும்போழ்து பலவகைச் சொத்துகளைத் தீர்வுக் கணக்கிற்கு மாற்ற.) | | | |
| 5 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் | ப | 5,00,000 | |
| ஏறிய வட்டி | ப | 25,000 | |
| கடனீந்தோர் | ப | 2,85,000 | |
| தீர்வுக் கணக்கு | | | 8,10,000 |
| ( *G* லிமிட்டெட் எடுத்துக் கொண்ட பலவகை பொறுப்புகளைத் தீர்வுக் கணக்கிற்கு மாற்ற.) | | | |
| *G* லிமிட்டெட் | ப | 2,00,000 | |
| தீர்வுக் கணக்கு | | | 2,00,000 |
| (ஒப்பந்தத்தின்படி *G* லிமிட்டெட் தரவேண்டிய கொள் முதல் மறுபயன்.) | | | |
| *G* லிமிட்டெடின் பங்குகள் | ப | 2,00,000 | |
| *G* லிமிட்டெட் | | | 2,00,000 |
| (கொள்முதல் மறுபயனுக்காக *G* லிமிட்டெடிடமிருந்து பங்குகளைப் பெற்றது.) | | | |

## குறிப்பேட்டுப் பதிவுகள்—(தொடர்ச்சி)

| | பற்று | வரவு |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| பங்குமுதல் கணக்கு ப | 2,00,000 | |
| தீர்வுக் கணக்கு | | 2,00,000 |
| (G லிமிட்டெட் வைத்துள்ள பங்குகளை நீக்க.) | | |
| (புறப்) பங்குநர்கள் கணக்கு ப | 1,50,000 | |
| தீர்வுக் கணக்கு | | 1,50,000 |
| (தீர்வுக் கணக்குக் காட்டும் நட்டத்தைப் பங்குநர்கள் கணக்கிற்கு மாற்ற.) | | |
| (புறப்)பங்குநர்கள் கணக்கு ப | 2,50,000 | |
| இலாப-நட்டக் கணக்கு | | 2,50,000 |
| (இலாப-நட்டக் கணக்கின் பற்றிருப்பைப் பங்குநர் கணக்கிற்கு மாற்ற.) | | |
| பங்குமுதல் கணக்கு ப | 6,00,000 | |
| (புறப்) பங்குநர்கள் கணக்கு | | 6,00,000 |
| (G லிமிட்டெட் வைத்துள்ளது போக மீதியுள்ள பங்குகளைப் பங்குநர்கள் கணக்கிற்கு மாற்ற.) | | |
| (புறப்) பங்குநர் கணக்கு ப | 2,00,000 | |
| G லிமிட்டெடின் பங்குகள் | | 2,00,000 |
| (கொள்முதல் மறுபயனுக்காகப் பெற்ற P லிமிட்டெடின் பங்குகளைப் பிற பங்குநர்கட்கு வழங்க.) | | |

## G லிமிட்டெடின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

| | பற்று | வரவு |
|---|---|---|
| | ரூ. | ரூ, |
| தொழில் கொள்முதல் கணக்கு ப | 2,00,000 | |
| P லிமிட்டெடின் கலைப்பாளர் | | 2,00,000 |
| (....நாளிட்ட ஒப்பந்தத்தின்படி P லிமிட்டெடின் கலைப்பாளருக்குச் செலுத்த வேண்டிய கொள்முதல் மறுபயன்.) | | |
| நிலமும் கட்டடமும் ப | 2,50,000 | |
| பொறிவகை ப | 4,50,000 | |
| சரக்கிருப்பு ப | 2,35,000 | |
| கடனாளிகள் ப | 2,49,000 | |
| வங்கி ப | 26,000 | |
| கடனீந்தோர் | | 2,85,000 |
| P லிமிட்டெடின் கடனீட்டுப் பத்திரங்கள் | | 5,00,000 |
| ஏறிய வட்டி | | 25,000 |
| P லிமிட்டெடின் பங்குகள் | | 1,45,000 |
| தொழில் கொள்முதல் கணக்கு | | 2,00,000 |
| முதல் காப்புக் கணக்கு | | 55,000 |
| (P லிமிட்டெட் எடுத்துக் கொண்ட பலவகைச் சொத்துகளையும் பொறுப்புகளையும் கணக்கில் கொண்டு வரவும், முன்னரே தான் வைத்துள்ள P லிமிட்டெடின் கடனீட்டுப் பத்திரங்களையும் பங்குகளையும் நீக்குவதற்கும்.) | | |

## குறிப்பேட்டுப் பதிவுகள்—(தொடர்ச்சி)

| | பற்று | வரவு |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| *P* லிமிட்டெடின் கலைப்பாளர் ப | 2,00,000 | |
| பங்குமுதல் கணக்கு | | 2,00,000 |
| (கொள்முதல் மறுபயனைத் தீர்க்க ஒன்று ரூ. 10 வீதம் 20,000 பங்குகளை முழுதும் செலுத்தப்பெற்றவையாக வெளியிட்டது.) | | |

மேற்கண்டவாறு எடுத்துக்கொண்ட சொத்துகள், பொறுப்புகள் ஆகியவற்றையும், நீக்கவேண்டிய தன்னுடைய முதலீட்டுக் கணக்கையும் ஒரே பதிவில் செய்வதற்கு மாறாகக் கீழ்க்கண்டவாறும் செய்யலாம்.

| | வரவு | பற்று |
|---|---|---|
| | ரூ, | ரூ. |
| நிலமும் கட்டடமும் ப | 2,50,000 | |
| பொறிவகை ப | 4,50,000 | |
| சரக்கிருப்பு ப | 2,35,000 | |
| கடனாளிகள் ப | 2,45,000 | |
| ரொக்கம் ப | 26,000 | |
| கடனீந்தோர் | | 2,85,000 |
| *P* லிமிட்டெடின் கடனீட்டுப் பத்திரங்கள் | | *5,00,000 |
| ஏறியுள்ள வட்டி | | *25,000 |
| தொழில் கொள்முதல் கணக்கு | | 2,00,000 |
| முதல் காப்பு | | 2,00,000 |
| முதல் காப்பு ப | 1,45,000 | |
| *P* லிமிட்டெடின் பங்குகள் | | 1,45,000 |

G லிமிட்டெடின் ஏட்டில் முன்னரே P லிமிட்டெடின் கடனீட்டுப் பத்திரங்கள் எனும் கணக்குப் பற்றிருப்பைக் காட்டிக் கொண்டிருக்கும். பற்று அல்லது வரவிருப்பு இதில் ஏற்பட்ட இலாபம் அல்லது நட்டத்தை உணர்த்தும். எனவே, இக் கணக்குக் காட்டும் பற்று அல்லது வரவிருப்பை முதல் காப்புக் கணக்கிற்கு எடுத்துச் செல்லலாம். கணக்கில் இக் கடனீட்டுப் பத்திரங்கள் வாங்கிய விலை கொடுக்கப்படவில்லை. எடுத்துக்காட்டாக, இக் கடனீட்டுப் பத்திரங்கள் அனைத்தும் ரூ. 4,50,000-க்கு வாங்கப் பட்டிருப்பதாகக் கொண்டால், G லிமிட்டெடின் ஏட்டில் P லிமிட்டெடின் கடனீட்டுப் பத்திரங்கள் எனும் கணக்கு ரூ. 4,50,000-ஐப் பற்றிருப்பாகக் காட்டும்.

மேற்சொன்னவாறே P லிமிட்டெடின் தொழிலை எடுத்துக் கொள்ளும்போழ்து இக் கணக்கில் (வட்டியாக ரூ. 25,000-மும்) ரூ. 5,00,000-மும் வரவு வைக்கப்படுகிறது. இப்பொழுது இக் கணக்குக் காட்டும் வரவிருப்பு ரூ. 75,000 முதலீட்டு ஆதாயமாகக் கொள்ளப்படும்.

**விற்கும் கம்பெனி (எடுத்துக் கொள்ளப்படும் கம்பெனி) வாங்கும் கம்பெனியின் பங்குகளை வைத்திருக்கும்போழ்து**

இப்பொழுது வாங்கும் கம்பெனி விற்கும் கம்பெனியின் சொத்துகளை எல்லாம் எடுத்துக்கொள்ளும்போழ்து அதில் தனது பங்குகளும் அடங்கி இருக்கின்றன. காரணம், வாங்கும் கம்பெனியின் பங்குகளில் விற்கும் கம்பெனி முதலீடு செய்திருக்கிறது. இப் பங்குகள் 'முதலீடுகள்' எனும் தலைப்பில் விற்கும் கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்பில் சொத்துகள் பகுதியில் காணப்படும். ஆனால், கம்பெனிச் சட்டத்தின்படி ஒரு கம்பெனி தனது பங்குகளைத் தானே வாங்கக்கூடாது. எனவே, விற்கும் கம்பெனி வைத்துள்ள தனது பங்குகளை வாங்கும் கம்பெனி எடுத்துக் கொள்ள முடியாது. எனவே, கொள்முதல் மறுபயனைத் தீர்க்கும் பொருட்டுத் தான் வழங்கவேண்டிய பங்குகளின் எண்ணிக்கையில் விற்கும் கம்பெனியில் வைத்திருக்கும் பங்குகளின் எண்ணிக்கையைக் கழித்துவிட வேண்டும். எடுத்துக்காட்டாக, வரையறு பொறுப்புடைய 'அ' கம்பெனியின் பங்குமுதல் 10,000 பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது என்று கொள்வோம். இக் கம்பெனியை வரையறு பொறுப்புடைய 'ஆ' கம்பெனி எடுத்துக் கொள்கிறது. 'அ' கம்பெனியின் ஒவ்வொரு இரண்டு பங்கிற்கும் ஒரு பங்கு வீதம் 'ஆ' கம்பெனி கொள்முதல் மறுபயன் பொருட்டுத் தருவதாகக் கொள்வோம். 'ஆ' கம்பெனியின் பங்குகளில் 'அ' கம்பெனி 500 பங்குகளை வைத்திருக்கிறதென்றும்

கொள்வோம். இப்பொழுது கொள்முதல் மறுபயனுக்காக 'ஆ' கம்பெனி வெளியிடும் பங்குகளைக் கீழ்க்கண்டவாறு உணரலாம்.

'ஆ' கம்பெனி மொத்தம் வெளியிட வேண்டிய பங்குகள் $= \frac{10,000}{2} =$ 5,000 பங்குகள்

கழி :

| | | |
|---|---|---|
| முன்னரே 'அ' கம்பெனி வைத்துள்ள பங்குகள் | 500 | ,, |
| 'ஆ' கம்பெனி கொள்முதல் மறு பயனுக்காகத் தற்போது வெளியிட வேண்டிய பங்குகள் | 4,500 | ,, |

'ஆ' கம்பெனி கொள்முதல் மறுபயனை மேற்சொன்ன 4,500 பங்குகளின் அடிப்படையிலே மதிப்பிடும்.

விற்கும் கம்பெனியைப் பொருத்தவரை தனது ஏடுகளை முடிக்கும்பொழுது வாங்கும் கம்பெனியில் தான் வைத்துள்ள பங்குகளை மறு மதிப்பீடு செய்யும். ஏட்டு மதிப்பினும், இம் மறுமதிப்பீட்டுத் தொகை கூடுதலாகவோ, குறைவாகவோ இருப்பின், இவ் வேறுபாட்டுத் தொகையைத் தீர்வுக் கணக்கிற்கு எடுத்துச் செல்லவேண்டும். மேற்சொன்ன எடுத்துக்காட்டில் தான் வைத்திருக்கும் 500 பங்குகளின் ஏட்டு மதிப்பு ரூ. 5,200 என்றும், தற்போது இவற்றின் மதிப்பு ரூ. 5,500 என்றும் கொண்டால், ரூ. 300 ஆதாயம் ஏற்பட்டுள்ளது. இதனைத் தீர்வுக் கணக்கில் வரவு வைக்கவேண்டும். செய்யவேண்டிய பதிவு:

| | | | |
|---|---|---|---|
| 'ஆ' கம்பெனிப் பங்குகள் | ப | 300 | |
| தீர்வுக் க/கு | | | 300 |

**எடுத்துக்காட்டு 123**

**ஈர்ப்பமைப்பு (Absorption)**

வரையறு பொறுப்புடைய இரு கம்பெனிகளின் இருப்புநிலைக் குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

**1973 திசம்பர் 31-க்குரியவை அவை**

| விவரம் | சாத்தனூர் கம்பெனி | இளங்கோ கம்பெனி | விவரம் | சாத்தனூர் கம்பெனி | இளங்கோ கம்பெனி |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | | ரூ. | ரூ. |
| பங்கு முதல் : ஒன்று ரூ. 10 வீதம், முழுதும் செலுத்தப் பெற்றவை | 2,00,000 | 4,00,000 | சொத்துகள் | 2,87,000 | 6,98,000 |
| காப்புகள் | 40,000 | 80,000 | இளங்கோ கம்பெனியில் 10,000 பங்குகள் | 1,10,000 | — |
| பொறுப்புகள் | 1,60,000 | 2,20,000 | பல்வகைச் செலவினம் தொடக்கச் செலவுகள் | 3,000 | 2,000 |
| | 4,00,000 | 7,00,000 | | 4,00,000 | 7,00,000 |

சாத்தனூர் கம்பெனியை, இளங்கோ கம்பெனி எடுத்துக் கொள்கிறது. சாத்தனூர் கம்பெனியின் சொத்துகளின் மதிப்பு (முதலீடுகளைத் தவிர்த்து) ரூ. 3,14,000 ஆகும். இளங்கோ கம்பெனிப் பங்கின் மதிப்பு ரூ. 14 எனப் பங்குமாற்றுச் சந்தையில் மதிப்புக் குறிப்பிடப்படுகிறது. இளங்கோ கம்பெனி தன் பங்குகளை முழுதும் செலுத்தப்பெற்றவையாகச் சந்தை மதிப்பில் வெளியிட்டுக் கொள்முதல் மறுபயனைத் தீர்க்கிறது.

இரு கம்பெனிகளின் ஏடுகளிலும் வேண்டிய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

**விடை :**

**கொள்முதல் மறு பயனைக் கணக்கிடுதல்**

| | | ரூ. |
|---|---|---|
| எடுத்துக்கொள்ளப்படும் சொத்துகளின் தற்பொழுதைய மதிப்பு | | 3,14,000 |
| **கூட்டு :** | | |
| இளங்கோ கம்பெனிப் பங்குகளின் சந்தை மதிப்பு (10,000 × ரூ. 14) | | 1,40,000 |
| மொத்தச் சொத்துகளின் மதிப்பு | | 4,54,000 |
| **கழி :** | | |
| எடுத்துக்கொள்ளப்படும் பொறுப்புகள் | | 1,60,000 |
| நிகரச் சொத்து மதிப்பின் அடிப்படையில் கொள்முதல் மறுபயன் | | 2,94,000 |
| ரூ. 14 செலுத்த இளங்கோ கம்பெனி வெளியிடுவது | 1 பங்கு | |
| ரூ. 2,94,000 செலுத்த வெளியிடப்படும் பங்கு | $\frac{2,94,000}{14}$ | |
| | = 21,000 பங்குகள் | |
| இளங்கோ கம்பெனி மொத்தம் வெளியிட வேண்டிய பங்குகள் | | 21,000 |
| **கழி :** | | |
| சாத்தனூர் கம்பெனி முன்னரே வைத்துள்ளது | | 10,000 |
| புதிதாக வெளியிட வேண்டிய பங்குகள் | | 11,000 |

**இறுதிக் கொள்முதல் மறுபயன்**

| | |
|---|---|
| பங்குகள் சந்தை மதிப்பில் கணக்கிடப்படுவதால் 11,000 பங்குகளின் மதிப்பு | 11,000 × 14 |
| | = ரூ. 1,54,000 |

## சாத்தனூர் கம்பெனி லிமிட்டெட் ஏட்டில் குறிப்பேட்டுப் பதிவுகள்

| | பற்று | வரவு |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| தீர்வுக் கணக்கு ப | 2,87,000 | |
| சொத்துகள் | | 2,87,000 |
| (தொழிலை இளங்கோ கம்பெனி எடுத்துக் கொள்வதால், சொத்துகளைத் தீர்வுக் கணக்கிற்கு மாற்ற.) | | |
| பொறுப்புகள் ப | 1,60,000 | |
| தீர்வுக் கணக்கு | | 1,60,000 |
| (பொறுப்புகளைத் தீர்வுக் கணக்கிற்கு மாற்ற.) | | |
| இளங்கோ கம்பெனி லிமிட்டெட் ப | 1,54,000 | |
| தீர்வுக் கணக்கு | | 1,54,000 |
| (இளங்கோ கம்பெனி எடுத்துக்கொள்ளும் சொத்துகட்கும் பொறுப்புகட்கும் தரும் கொள்முதல்மறுபயன்.) | | |
| இளங்கோ கம்பெனிப் பங்குகள் ப | 30,000 | |
| தீர்வுக் கணக்கு | | 30,000 |
| (இளங்கோ கம்பெனிப் பங்குகளின் மதிப்புயர்வைக் கணக்கிற் கொண்டுவர : தற்பொழுதைய சந்தை மதிப்பு 10,000 × 14 = 1,40,000; ஏட்டு மதிப்பு = 1,10,000; கூடியுள்ள மதிப்பு 30,000) | | |
| தீர்வுக் கணக்கு ப | 57,000 | |
| பங்குநர்கள் | | 57,000 |
| (தீர்வுக் கணக்குக் காட்டும் இலாபத்தைப் பங்குநர்கள் கணக்கிற்கு மாற்ற.) | | |

## குறிப்பேட்டுப் பதிவுகள்—(தொடர்ச்சி)

| | பற்று | வரவு |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| இளங்கோ கம்பெனிப் பங்குகள் ப | 1,54,000 | |
| இளங்கோ கம்பெனி லிமிட்டெட் | | 1,54,000 |
| (ஒன்று ரூ. 10 மதிப்புடைய 11,000 பங்குகளை ஒன்று ரூ. 14 வீதம் இளங்கோ கம்பெனியிடமிருந்து கொள் முதல் மறுபயனைத் தீர்க்கும் வகையில் பெற்றது.) | | |
| பங்குமுதல் ப | 2,00,000 | |
| காப்புகள் ப | 40,000 | |
| பங்குநர்கள் | | 2,40,000 |
| (பங்குமுதலையும், காப்பு களையும் கலைப்பின்போழ்து பங்குநர்கள் கணக்கிற்கு மாற்ற.) | | |
| பங்குநர்கள் ப | 3,000 | |
| தொடக்கச் செலவுகள் | | 3,000 |
| (கலைப்பின்போழ்து, நீங்கப் பெருத தொடக்கச் செலவைப் பங்குநர்கள் கணக்கிற்கு மாற்ற.) | | |
| பங்குதாரர்கள் ப | 2,94,000 | |
| இளங்கோ கம்பெனிப் பங்குகள் | | 2,94,000 |
| (இளங்கோ கம்பெனியிட மிருந்து பெற்ற 11,000 பங்குகளையும், முன்னரே வைத்திருந்த அக் கம்பெனி யின் 10,000 பங்குகளையும் பங்குநர்கட்கு வழங்கியது.) | | |

## இளங்கோ கம்பெனி லிமிட்டெடின் ஏட்டில் குறிப்பேட்டுப் பதிவுகள்

| | பற்று | வரவு |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| தொழில் கொள்முதல் கணக்கு ப | 1,54,000 | |
| சாத்தனூர் கம்பெனி லிமிட்டெட் கலைப்பாளர் | | 1,54,000 |
| (. : நாளிட்ட ஒப்பந்தத்தின் படி, சாத்தனூர் கம்பெனியை எடுத்துக் கொண்டதற்கு அதன் கலைப்பாளர்க்குத் தரவேண்டிய கொள்முதல் மறு பயன்.) | | |
| சொத்துகள் ப | 3,14,000 | |
| பொறுப்புகள் | | 1,60,000 |
| தொழில் கொள்முதல் கணக்கு | | 1,54,000 |
| (சாத்தனூர் கம்பெனியின் சொத்துகளையும், பொறுப்புகளையும் எடுத்துக் கொண்டதைக் கணக்கிற் கொண்டு வர.) | | |
| சாத்தனூர் கம்பெனி லிமிட்டெட் கலைப்பாளர் ப | 1,54,000 | |
| பங்குமுதல் கணக்கு | | 1,10,000 |
| பங்கு முனைமக் கணக்கு | | 44,000 |
| (ஒன்று ரூ. 10 பெயரளவு மதிப்புடைய 11,000 பங்குகளை, ஒன்று ரூ. 14 வீதம் வெளியிட்டுக் கொள்முதல் மறுபயனைத் தீர்த்தது.) | | |

## இரு கம்பெனிகளும் ஒன்றில்ஒன்று முதலீடு செய்திருப்பின்

தொடர்புற்ற இரு கம்பெனிகளும் ஒன்று மற்றொன்றின் பங்குகளை வைத்திருப்பின், இரு கம்பெனிகளின் பங்குகளையும் முதலில் மதிப்பிட வேண்டும். காரணம், ஒரு கம்பெனிப் பங்கின் மதிப்பு அடுத்த பங்கின் மதிப்பைப் பாதிக்கின்றது. எடுத்துக்காட்டாக, 'அ' லிமிட்டெட் 'ஆ' லிமிட்டெடின் பங்குகளையும், 'ஆ' லிமிட்டெட் 'அ' லிமிட்டெடின் பங்குகளையும் வைத்திருப்பதாகக் கொண்டால் 'அ' லிமிட்டெடின் பங்கு மதிப்பு 'ஆ' லிமிட்டெடின் பங்குமதிப்பால் பாதிக்கப்படும். காரணம், 'ஆ' லிமிட்டெடின் பங்குகள் 'அ' லிமிட்டெடின் சொத்துகளில் ஒன்றாகும். இச் சொத்து மதிப்பு மாறுவதால் 'அ' லிமிட்டெடின் மதிப்பு மாறுகிறது. அவ்வாறே 'ஆ' லிமிட்டெடைப் பொறுத்தவரை தான் வைத்துள்ள 'அ' லிமிட்டெட் பங்குகள் முதலீடு என்ற ஒரு சொத்தாகும். எனவே, 'அ' லிமிட்டெடின் பங்கு மதிப்பால் 'ஆ' லிமிட்டெடின் பங்கு மதிப்பு மாறுகின்றது என்பதை உணரலாம். பங்குகளின் மொத்த மதிப்பைக் குறிக் கணக்கியல் சமன்பாட்டினுல் (இயற் கணிதச் சமன்பாட்டால்—Algebraical equation) உணரலாம்.

முதலில் ஒவ்வொரு கம்பெனியின் நிகரச் சொத்துகளின் மொத்தமதிப்பை இயற்கணிதச் சமன்பாட்டால் உணரவேண்டும்.

பின்னர், விற்கும் கம்பெனியின் மொத்தச் சொத்துகளிலிருந்து (மேற்சொன்ன முறையில் கணக்கிடப்பட்டது) வாங்கும் கம்பெனி தான் முன்னரே வைத்துள்ள பங்குகளின் காரணமாகத் தனக்குச் சேரவேண்டிய சொத்துகளின் மதிப்பைக் கழித்துவிட வேண்டும்.

இப்பொழுது வாங்கும் கம்பெனி தரவேண்டிய கொள்முதல் மறுபயன் தொகை கிடைக்கிறது. இதனைத் தன் கம்பெனிப் பங்கின் மதிப்பால் வகுத்தால் மொத்தம் தான் வெளியிட வேண்டிய பங்குகளின் எண்ணிக்கை கிடைக்கும்.

இப் பங்குகளின் எண்ணிக்கையிலிருந்து, முன்னரே விற்கும் கம்பெனியில் வாங்கும் கம்பெனி வைத்துள்ள பங்குகளின் எண்ணிக்கையைக் கழித்துவிட்டால், இப்பொழுது இறுதியாக வாங்கும் கம்பெனி வெளியிடவேண்டிய பங்குகளின் எண்ணிக்கையை அறியமுடியும்.

**எடுத்துக்காட்டு 124**

1969 திசம்பர் 31-க்குரிய *P* கம்பெனி லிமிட்டெட், *S* கம்பெனி லிமிட்டெட் ஆகியவற்றின் சுருக்கப்பட்ட இருப்புநிலைக் குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| பொறுப்புகள் | P லிமிட்டெட் | S லிமிட்டெட் | சொத்துகள் | P லிமிட்டெட் | S லிமிட்டெட் |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | | ரூ. | ரூ. |
| பங்கு முதல் .. | 4,00,000 | 1,50,000 | பல்வகைச் சொத்துகள் | 5,60,000 | 2,00,000 |
| இலாப-நட்டக் கணக்கு | 75,000 | — | வாணிக நற்பெயர் .. | 40,000 | 50,000 |
| கடனீந்தோர் .. | 1,25,000 | 1,25,000 | இ. ந. க/கு .. | — | 25,000 |
| | 6,00,000 | 2,75,000 | | 6,00,000 | 2,75,000 |

*S* லிமிட்டெடின் 1,000 பங்குகளை, *P* லிமிட்டெட் வைத்துள்ளது. இதன் அடக்கவிலை ரூ. 25,000.

*P* லிமிட்டெடின் 500 பங்குகளை, *S* லிமிட்டெட் வைத்துள்ளது. இதன் அடக்கவிலை ரூ. 70,000. இக் கணக்குகள் பலவகைச் சொத்துகளில் அடங்கியுள்ளன.

*P* லிமிட்டெடின் பங்குகள் ஒவ்வொன்றும் ரூ. 100 மதிப்புடையது; முழுதும் செலுத்தப்பெற்றவை. *S* லிமிட்டெடின் பங்குகள் ஒவ்வொன்றும் ரூ. 50 மதிப்புடையவை; ஒவ்வொன்றும் ரூ. 30 செலுத்தப்பெற்றது.

இவ்விரு கம்பெனிகளும் ஒன்றிணைந்து கீழ்க்கண்ட அடிப்படையில் *PS* லிமிட்டெட் எனும் புதிய கம்பெனியை அமைக்க உடன்படுகின்றன.

(1) ஒவ்வொரு கம்பெனியும் அடுத்த கம்பெனியில் வைத்திருக்கும் பங்குகளைக் கீழ்க் கொடுக்கப்பட்டிருக்கும் வாணிக நற்பெயர் மதிப்பைக் கருத்தில்கொண்டு ஏட்டு மதிப்புகளில் மதிப்பிடவேண்டும்.

(2) வாணிக நற்பெயரின் மதிப்புகள் :

| | | |
|---|---|---|
| *P* லிமிட்டெட் | ரூ. | 1,50,000 |
| *S* லிமிட்டெட் | ரூ. | 25,000 |

(3) புதிய பங்குகள் ஒவ்வொன்றின் பெயரளவு மதிப்பு ரூ. 50; ரூ. 25 செலுத்தப்பட்டதாக வரவு வைத்து வெளியிடப்படும்.

மேற்கண்ட விவரங்களிலிருந்து ஈர்ப்பிற்குப் பின்னுள்ள *PS* லிமிட்டெடின் இருப்புநிலைக் குறிப்பையும், ஒவ்வொரு கம்பெனியும் புதிய கம்பெனியில் வைத்துள்ள பங்குகள் பற்றிய அறிக்கையையும் தயார் செய்க.

(Institute of Company Secretaries
of India, Final, Oct,. 1970)

**விடை :**

**பங்குகளின் உள்மதிப்பைக் கீழ்க்கண்டவாறு அறியலாம் :**

நிகரச் சொத்துகளின் மதிப்பு

| | P லிமிடெட் | S லிமிடெட் |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| பல்வகைச் சொத்துகள் (முதலீடுகள் நீங்கலாக) | 5,35,000 | 1,30,000 |
| வாணிக நற்பெயர் | 1,50,000 | 25,000 |
| | 6,85,000 | 1,55,000 |
| கழி : | | |
| கடனீந்தோர் | 1,25,000 | 1,25,000 |
| முதலீடுகள் நீங்கலாக பிற நிகரச் சொத்துகளின் மதிப்பு | 5,60,000 | 30,000 |

ஒவ்வொரு கம்பெனி முதலீட்டின் மதிப்பும் அடுத்த கம்பெனியின் பங்குகளால் பாதிக்கப்படுகிறதென்று கூறியிருக்கிறோம். எனவே, இயற்கணிதச் சமன்பாடு மூலமாக முதலீடுகள் சேர்த்த சொத்துகளின் மதிப்பை உணரலாம்.

$p$ என்பது $P$ லிமிடெடின் நிகரச் சொத்துகளின் மொத்த ஏட்டு மதிப்பு என்றும், $s$ என்பது $S$ லிமிடெடின் நிகரச் சொத்துகளின் மொத்த ஏட்டு மதிப்பு என்றும் கொள்வோம்.

$P$ லிமிடெட் $S$ லிமிடெடின் பங்குகளில் $\frac{1}{5}$ பாகத்தை வைத்துள்ளது $\left(\frac{5,000}{1,000}\right)$

$S$ லிமிடெட் $P$ லிமிடெடின் பங்குகளில் $\frac{1}{8}$ பாகத்தை வைத்துள்ளது. எனவே,

$$p = 5,60,000 + 1/5s$$
$$s = 30,000 + 1/8p$$
$$p = 5,60,000 + 1/5 \quad (30,000 + 1/8p)$$
$$= 5,60,000 + 6,000 + 1/40p)$$
$$= 5,66,000 + 1/40p$$

இவ்விரு பகுதிகளையும் 40 ஆல் பெருக்க :

$$40p = 2,26,40,000 + p$$
$$39p = 2,26,40,000$$
$$p = \frac{2,26,40,000}{39}$$
$$= 5,80,513$$

$$s = 30,000 + 1/8\ (5,80,513)$$
$$= 30,000 + 72,564$$
$$= 1,02,564$$

P லிமிட்டெடின் பங்கு ஒன்றின் ஏட்டு மதிப்பு $\frac{5,80,513}{4,000}$

= ரூ. 145.13

S லிமிட்டெடின் பங்கு ஒன்றின் ஏட்டு மதிப்பு $\frac{1,02,564}{5,000}$

= ரூ. 20.51

ஒவ்வொரு கம்பெனிக்கும் தரவேண்டிய கொள்முதல் மறுபயன் :

| | P லிமிட்டெட் | S லிமிட்டெட் |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| நிகரச் சொத்துகளின் மொத்த மதிப்பு | 5,80,513 | 1,02,564 |
| கழி : | | |
| அடுத்த கம்பெனி வைத்துள்ள பங்குகளின் காரணமாக அதற்குரிய சொத்துகள் | 72,564 | 20,513 |
| ஒவ்வொரு கம்பெனிக்கும் தர வேண்டிய கொள்முதல் மறுபயன் | 5,07,949 | 82,051 |

**குறிப்பு :**

*P* லிமிட்டெடின் பங்குகளில் *S* லிமிட்டெட் 1/8 பாகத்தை வைத்துள்ளதால், அக் கம்பெனிச் சொத்துகளின் மொத்த மதிப்பில் 1/8 பாகத்தைக் கழித்துவிட்டால், மீதியிருக்கும் தொகை (புற) வெளிப் பங்குநர்கட்கு உரியது என்பது இப்பொழுது தெளிவாகிறது.

அவ்வாறே *S* லிமிட்டெடின் பங்குகளில் 1/5 பாகத்தை *P* லிமிட்டெட் வைத்துள்ளதால் *S* லிமிட்டெடின் மொத்தச் சொத்துகளின் மதிப்பில் 1/5 பாகத்தைக் கழித்துவிட்டால் மீதி இருப்பது வெளிப் பங்குநருக்கு உரியது என்று உணரலாம்.

**ஒவ்வொரு கம்பெனிக்கும் PS லிமிட்டெட் வழங்கும் பங்குகளின் எண்ணிக்கை :**

**அ. *P* லிமிட்டெடிற்கு வழங்கும் பங்குகள்**

புதிய கம்பெனிப் பங்கு ஒன்றின் பெயரளவு மதிப்பு ரூ. 50 என்றும், அது ரூ. 25 செலுத்தப்பட்டதாக வெளியிடுவதாகவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே,

ரூ. 25-க்குக் கிடைப்பது = 1 பங்கு
ரூ. 5,07,949-க்குக் கிடைப்பது = 20,318 பங்குகள்

**ஆ. *S* லிமிட்டெடிற்கு வழங்கும் பங்குகள்**

ரூ. 25-க்குக் கிடைப்பது = 1 பங்கு
ரூ. 82,051-க்குக் கிடைப்பது = 3,282 பங்குகள்

*P* லிமிட்டெடில் உள்ள வெளிப் பங்குநர்கள் வைத்திருக்கும் பங்குகளின் எண்ணிக்கை = 3,500
(4000–*S* லிமிட்டெட் வைத்துள்ள 500 பங்குகள்)

*S* லிமிட்டெடிலுள்ள வெளிப் பங்குநர்கள் வைத்திருக்கும் பங்குகளின் எண்ணிக்கை = 4,000
(5,000 – *P* லிமிட்டெடிலுள்ள 1,000 பங்குகள்)

***P* லிமிட்டெட்**

புதிய கம்பெனி வெளியிடும் 20,318 பங்குகளை வெளிப் பங்குநர்கள் வைத்திருக்கும் 3,500 பங்குகளுக்குப் பிரித்துக் கொடுக்கவேண்டும்.

***S* லிமிட்டெட்**

புதிய கம்பெனி வழங்கும் 3,282 பங்குகளை அதன் வெளிப் பங்குநர்கள் வைத்திருக்கும் 4,000 பங்குகட்குப் பிரித்து வழங்கவேண்டும்.

**எடுத்துக்காட்டு 125**

'அ' லிமிடெட், 'ஆ' லிமிடெட் ஆகிய இரு கம்பெனிகளின் இருப்புநிலைக் குறிப்புகள் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ளன :

| பொறுப்புகள் | 'அ' லிமிடெட் | 'ஆ' லிமிடெட் | சொத்துகள் | 'அ' லிமிடெட் | 'ஆ' லிமிடெட் |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | | ரூ. | ரூ. |
| பங்குமுதல் : ஒன்று ரூ. 100 மதிப்புடைய பங்குகள், முழுதும் செலுத்தப் பெற்றவை .. | 12,00,000 | 5,00,000 | நிலைச் சொத்துகள் .. | 10,00,000 | 3,00,000 |
| | | | நடப்புச் சொத்துகள் .. | 3,00,000 | 1,70,000 |
| | | | வங்கி .. | 70,000 | 30,000 |
| பொதுக்காப்பு .. | 1.50,000 | — | 'ஆ' லிமிடெடில் 1,000 பங்குகள் | 1,30,000 | — |
| இலாப-நட்டக் கணக்கு | 50,000 | 25,000 | | | |
| 6 சதவீதம்கடனீந்தோர் | — | 3,00,000 | 'அ' லிமிடெடில் 3,000 பங்குகள் | — | 4,00,000 |
| நடப்புப் பொறுப்புகள் | 1,00,000 | 75,000 | | | |
| | 15,00,000 | 9,00,000 | | 15,00,000 | 9,00,000 |

இவ்விரு கம்பெனிப் பங்குகளின் உள் மதிப்புகளின் அடிப்படையில் 'அ' லிமிட்டெட் 'ஆ' லிமிட்டெடை எடுத்துக்கொள்கிறது.

(அ) கொள்முதல் மறுபயனையும், அதனைத் தீர்க்கும் வகையையும் காட்டுக.

(ஆ) இவ்விரு கம்பெனிகளையும் 'இ' லிமிட்டெட் எனும் புதிய கம்பெனி எடுத்துக்கொள்வதாகக் கொண்டு ஒவ்வொரு கம்பெனிக்கும் அது தீர்க்கவேண்டிய கொள்முதல் மறுபயனைக் கண்டுபிடி.

**விடை :**

| | 'அ' ரூ. | | 'ஆ' ரூ. |
|---|---|---|---|
| நிகர சொத்துகளின் மதிப்பு : | | | |
| நிலைச் சொத்துகள் | 10,00,000 | | 3,00,000 |
| நடப்புச் சொத்துகள் | 3,00,000 | | 1,70,000 |
| வங்கி | 70,000 | | 30,000 |
| மொத்த சொத்துகளின் மதிப்பு | 13,70,000 | | 5,00,000 |
| **கழி** : பொறுப்புகள் : | | | |
| கடனீந்தோர் | | 3,00,000 | |
| நடப்புப் பொறுப்புகள் | 1,00,000 | 75,000 | |
| | | | 3,75,000 |
| முதலீடுகள் நீங்கலாக நிகர சொத்துகள் | 12,70,000 | | 1,25,000 |

'அ' லிமிட்டெடின் மொத்தல் உள்ள 5,000 பங்குகளில் 'ஆ' லிமிட்டெட் வைத்துள்ளது 1,000 பங்குகள். அதாவது $\frac{1}{5}$ பங்குமுதல்.

'அ' லிமிட்டெடின் மொத்தம் 12,000 பங்குகளில் 'ஆ' லிமிட்டெட் வைத்துள்ளது 3,000 பங்குகள், அதாவது 'அ' லிமிட்டெடின் $\frac{1}{4}$ பங்குமுதல்.

'அ' லிமிட்டெடின் மொத்த சொத்துகளை '$a$' என்றும், 'ஆ' லிமிட்டெடின் மொத்த சொத்துகளை '$b$' என்றும் கொண்டால்,

$$a = 12,70,000 + \tfrac{1}{5} b$$

$$b = 1,25,000 + \tfrac{1}{4} a$$

$$\therefore a = 12,70,000 + \tfrac{1}{5} (1,25,000 + \tfrac{1}{4} a)$$

$$= 12,70,000 + 25,000 + \tfrac{1}{20} a$$

$$= 12,95,000 + \tfrac{1}{20} a$$

இரு பகுதிகளையும் 20 ஆல் பெருக்க,

$$20\,a = 2,59,00,000 + 1\,a$$

$$\therefore 19\,a = 2,59,00,000$$

$$\therefore a = \frac{2,59,00,000}{19}$$

$$= 13,63,158$$

$$b = 1,25,000 + \tfrac{1}{4} a$$

$$= 1,25,000 + \tfrac{1}{4} (13,63,158)$$

$$= 1,25,000 + 3,40,790$$

$$= 4,65,790$$

**பங்கின் உள் மதிப்பு**

$$\text{'அ' லிமிட்டெட்} = \frac{13,63,158}{12,000}$$

$$= \text{ரூ. } 113.59$$

$$\text{'ஆ' லிமிட்டெட்} = \frac{4,65,790}{5,000}$$

$$= \text{ரூ. } 93.16$$

'ஆ' லிமிட்டெடில் மொத்தம் 1,000 பங்குகளை முன்னரே 'அ' லிமிட்டெட் பெற்றுள்ளதால், மீதியுள்ள 4,000 பங்குகளை

வெளிப் பங்குநர்கள் (outside shareholders) வைத்திருப்பதை உணரலாம். இவர்கட்குத் தரவேண்டிய தொகையே கொள்முதல் மறுபயனாகும். எனவே, 4,000 பங்குகளை பங்கின் உள் மதிப்பி னடிப்படையில் மதிப்பிடவேண்டும்.

$$4,000 \times 93.16$$
$$= \text{ரூ. } 3,72,640$$

இத் தொகைக்கு 'அ' லிமிட்டெட் தனது பங்குகளை உள் மதிப்பின் அடிப்படையில் வழங்குகிறது.

எனவே, ரூ. 113.59-ற்கு வழங்கவேண்டியபங்கு $= 1$

ரூ. 3,72,640-ற்கு ,, ,, ,, $\frac{3,72,640}{113.59}$

$$= 3280 \frac{6480}{11359} \text{ பங்குகள்}$$

பின்னத்தில் பங்கை வெளியிட முடியாததலால், பின்னப் பங்கின் மதிப்பை ரொக்கமாகக் கொடுக்கவேண்டும்.

| | |
|---|---|
| 'அ' லிமிட்டெட் வழங்கவேண்டிய பங்குகள் | = 3,280 |
| **கழி** : 'ஆ' லிமிட்டெட் முன்னரே வைத்துள்ள பங்குகள் | = 3,000 |
| புதிதாக வழங்கவேண்டிய பங்குகள் | = 280 |

கொள்முதல் மறுபயன் கீழ்க்கண்டவாறு தரப்படும் :

280 பங்குகளை ஒன்று ரூ. 113.59 வீதத்தில் வழங்குகிறது.

| | |
|---|---|
| இப் பங்குகளின் மொத்த மதிப்பு (ரூபாய் திருத்திய மதிப்பில்) | = ரூ. 31,805 |
| $\frac{6,480}{11,359}$ பங்கின் மதிப்பின் ரொக்கம் $\left(\frac{6480}{11359} \times 113.59\right)$ | = ரூ. 65 |
| மொத்தம் | = ரூ. 31,870 |

இரு கம்பெனிகளும் இணைந்து, புதிய கம்பெனி 'இ' லிமிட்டெட் இவற்றை எடுத்துக்கொண்டால், அது தரவேண்டிய கொள்முதல் மறுபயனைக் கீழ்க்கண்டவாறு கணக்கிடவேண்டும் :

| | | 'அ' லிமிட்டெட் ரூ. | 'ஆ' லிமிட்டெட் ரூ. |
|---|---|---|---|
| மேற்கண்ட முறையில் கணக்கிடப்பட்ட பங்குகளின் மொத்த உள்மதிப்பு | | 13,63,158 | 4,65,790 |
| **கழி :** 'ஆ' லிமிட்டெட் வைத்துள்ள 'அ' லிமிட்டெடின் பங்குகளில் $\frac{1}{4}$ பாகம் | | 3,40,790 | |
| **கழி:** 'அ' லிமிட்டெட் வைத்துள்ள 'ஆ' லிமிட்டெடின் பங்குகளில் $\frac{1}{5}$ பாகம் | | | 93,158 |
| ஒவ்வொரு கம்பெனிக்கும் 'இ' கம்பெனி தீர்க்கவேண்டிய கொள்முதல் மறுபயன் | ரூ. | 10,22,368 | 3,72,632 |

**புற மறுஅமைப்பு முறை** (External Reconstruction)

**எடுத்துக்காட்டு 126**

மதுரை மில்ஸ் லிமிட்டெடின் இருப்புநிலைக் குறிப்பு கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது :

**இருப்புநிலைக் குறிப்பு**

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| முதல் : ஒன்று ரூ. 100 மதிப்புடைய பங்குகள் முழுதும் செலுத்தப் பெற்றவை | 10,00,000 | விலைலங்கமற்ற கட்டடம் | 50,000 |
| | | பொறிவகை | 7,00,000 |

**இருப்புநிலைக் குறிப்பு**—(தொடர்ச்சி)

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 6 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் | 1,00,000 | சரக்கிருப்பு | 1,00,000 |
| கடனீந்தோர் | 30,600 | கடனாளிகள் | 75,000 |
| தொழிலர் நலக் காப்பு நிதி (Employees Provident Fund) | 30,000 | ரொக்கம் | 7,950 |
| | | இ. ந. க/கு | 2,27,650 |
| | 11,60,600 | | 11,60,600 |

கம்பெனி தானே கலைத்துக்கொண்டு கோவை மில்ஸ் லிமிடெட் எனும் பெயரில் திருத்தியமைத்துக்கொள்ள முடிவு செய்கிறது. இதற்கான கீழ்க்கண்ட திட்டம் பங்குநர்களின், கடனீந்தோரின் ஒப்புதலைப் பெற்றுள்ளது.

(1) சொத்துகளையும், பொறுப்புகளையும் புதிய கம்பெனி எடுத்துக்கொள்ள வேண்டியது.

(2) கடனீந்தோருக்கு ரூபாய்க்கு 75 காசுகள் வீதம் கொடுத்துப் பொறுப்பைத் தீர்க்க வேண்டியது.

(3) 200 கடனீட்டுப் பத்திரங்கள், அவற்றின் 75 சதவீதம் மதிப்பில் மீட்கப்படவேண்டும். மீதியுள்ளவற்றிற்குப் புதிய கம்பெனி தனது 6 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்களைப் பெயரளவு மதிப்பில் வெளியிட வேண்டியது.

(4) ஒன்று ரூ. 10 மதிப்புடைய 1,00,000 பங்குகளைப் பங்கு ஒன்றுக்கு ரூ. 6 செலுத்தப்பட்டதாகப் புதிய கம்பெனி பழைய கம்பெனியின் பங்குநர்கட்கு வெளியிட வேண்டியது; பங்குகள் மீது செலுத்தப்பெறுதுள்ள தொகையை அவை ஒதுக்கப்பட்ட பின் உடனடியாகப் பங்குநர்கள் செலுத்த வேண்டியது.

(5) தொழிலர் நலக் காப்பு நிதி வைத்திருக்கவேண்டியது.

(6) தேவையான அளவிற்குப் பொறிவகையின் மதிப்பைக் குறைக்கவேண்டும்.

பழைய கம்பெனியின் ஏடுகளை முடிக்கத் தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளையும், புதிய கம்பெனியின் தொடக்கப் பதிவுகளையும் தந்து, மேற்கண்ட திட்டம் செயல்படுத்தப்பட்ட பின்னுள்ள புதிய கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்பைத் தயாரிக்கவும்.

(Adapted from B.Com., Allahabad)

**விடை :**

**கொள்முதல் மறு பயன்**

| | ரூ. | வழிவகை |
|---|---|---|
| கடனீந்தோர் | 22,950 | ரொக்கம் |
| 200 கடனீட்டுப் பத்திரங்கள் | 15,000 | ரொக்கம் |
| 800 கடனீட்டுப் பத்திரங்கள் | 80,000 | கடனீட்டுப் பத்திரங்கள் |
| நேர்மைப் பங்குகள் | 6,00,000 | ஒன்று ரூ. 10 மதிப்புடைய 1,00,000 நேர்மைப் பங்குகள், பங்கு ஒன்றுக்கு ரூ. 6 செலுத்தப்பட்டது. |
| கொள்முதல் மறுபயன் | ரூ. 7,17,950 | |

## மதுரை மில்ஸ் லிமிட்டெடின் ஏட்டில் குறிப்பேட்டுப் பதிவுகள்

| | பற்று | வரவு |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| தீர்வுக் கணக்கு ப | 9,32,950 | |
| கட்டடம் | | 50,000 |
| பொறிவகை | | 7,00,000 |
| சரக்கிருப்பு | | 1,00,000 |
| கடனாளிகள் | | 75,000 |
| ரொக்கம் | | 7,950 |
| (..நாளிட்ட ஒப்பந்தத்தின் படி தொழிலை மதுரை மில்ஸ் லிமிட்டெட் எடுத்துக் கொண்டபோது பல்வகைச் சொத்துகளையும் தீர்வுக் கணக்கிற்கு மாற்ற.) | | |
| தொழிலர் நலக் காப்பு நிதி ப | 30,000 | |
| தீர்வுக் கணக்கு | | 30,000 |
| (தொழிலர் நலக்காப்பு நிதிக் கணக்கைத் தீர்வுக் கணக்கிற்கு மாற்ற.) | | |
| கோவை மில்ஸ்லிமிட்டெடின் ப | 7,17,950 | |
| தீர்வுக் கணக்கு | | 7,17,950 |
| (..நாளிட்ட ஒப்பந்தத்தின் படி புதிய கம்பெனி கொடுக்க வேண்டிய கொள்முதல் மறுபயன்.) | | |
| ரொக்கம் ப | 37,950 | |
| கோவை மில்ஸ் லிமிட்டெடின் கடன் பத்திரங்கள் ப | 80,000 | |
| கோவை மில்ஸ் லிமிட்டெடின் பங்குகள் ப | 6,00,000 | |
| கோவை மில்ஸ் லிமிட்டெட் | | 7,17,950 |
| (கொள்முதல் மறுபயனுக்காக ரொக்கத்தையும், புதிய கம்பெனியின் கடனீட்டுப் பத்திரங்களையும், பங்குகளையும் பெற்றது.) | | |

## குறிப்பேட்டுப் பதிவுகள்—(தொடர்ச்சி)

| | பற்று | வரவு |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| கடனீந்தோர் கணக்கு ப | 30,600 | |
| ரொக்கம் | | 22,950 |
| தீர்வுக் கணக்கு | | 7,650 |
| (கடனீந்தோருக்கு ரூபாய்க்கு 75 காசுகள் வீதம் கொடுத்துத் தீர்த்தது.) | | |
| கடனீட்டுப் பத்திரங்கள் ப | 5,000 | |
| தீர்வுக் கணக்கு | | 5,000 |
| (200 கடனீட்டுப் பத்திரங்களை அவற்றின் 75 சத வீதம் மதிப்பிற்கு மீட்டதால் ஏற்பட்ட ஆதாயத்தைத் தீர்வுக் கணக்கிற்கு மாற்ற.) | | |
| கடனீட்டுப் பத்திரங்கள் ப | 95,000 | |
| கடனீட்டுப் பத்திரதாரர்கள் | | 95,000 |
| (கடனீட்டுப் பத்திரங்களைக் கடனீட்டுப் பத்திரதாரர்கள் கணக்கிற்கு மாற்ற.) | | |
| கடனீட்டுப் பத்திரதாரர்கள் ப | 95,000 | |
| ரொக்கம் | | 15,000 |
| கோவை மில்ஸ் லிமிட்டெடின் கடனீட்டுப் பத்திரங்கள் | | 80,000 |
| (200 கடனீட்டுப் பத்திரங்களுக்கு அவற்றின் 75 சத வீதம் மதிப்பளவில் ரொக்கம் கொடுத்தும், மீதி 800 கடனீட்டுப் பத்திரதாரர்கட்குப் புதிய கம்பெனியின் கடனீட்டுப் பத்திரங்களைப் பெயரளவு மதிப்பில் வெளியிட்டும் தீர்த்தது.) | | |

## குறிப்பேட்டுப் பதிவுகள்—(தொடர்ச்சி)

| | பற்று | வரவு |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| பங்குநர்கள் ப | 1,72,350 | |
| தீர்வுக் கணக்கு | | 1,72,350 |
| (தீர்வுக் கணக்குக் காட்டும் நட்டத்தைப் பங்குநர்கள் கணக்கிற்கு மாற்ற.) | | |
| பங்குநர் ப | 2,27,650 | |
| இலாப-நட்டக் கணக்கு | | 2,27,650 |
| (இலாப-நட்டக் கணக்கைப் பங்குநர் கணக்கிற்கு மாற்ற.) | | |
| பங்குமுதல் கணக்கு ப | 10,00,000 | |
| பங்குநர்கள் | | 10,00,000 |
| (பங்குமுதலைப் பங்குநர்கள் கணக்கிற்கு மாற்ற.) | | |
| பங்குநர்கள் கணக்கு ப | 6,00,000 | |
| கோவை மில்ஸ் லிமிட்டெடின் பங்குகள் | | 6,00,000 |
| (புதிய கம்பெனியின் பகுதி செலுத்தப்பெற்ற பங்குகளைப் பழைய கம்பெனியின் பங்குநர்கட்கு வழங்கியது.) | | |

## கோவை மில்ஸ் லிமிட்டெடின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

| | | பற்று | வரவு |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| தொழில் கொள்முதல் கணக்கு | ப | 7,17,950 | |
| மதுரை மில்ஸ் லிமிட்டெட் கலைப்பாளர் | | | 7,17,950 |
| (..நாளிட்ட ஒப்பந்தத்தின் படி மதுரை மில்ஸ் லிமிட்டெடிற்குக் கொடுக்க வேண்டிய கொள்முதல் மறுபயன்.) | | | |
| கட்டடம் | ப | 50,000 | |
| பொறிவகை | ப | 5,15,000 | |
| சரக்கிருப்பு | ப | 1,00,000 | |
| கடனாளிகள் | ப | 75,000 | |
| ரொக்கம் | ப | 7,950 | |
| தொழிலர் நலக்காப்பு நிதி | | | 30,000 |
| தொழில் கொள்முதல் கணக்கு | | | 7,17,950 |
| (மதுரை மில்ஸின் பலவகைச் சொத்துகளையும், தொழிலர் நலக்காப்பு நிதியையும் கணக்கிற்குக் கொரண்டுவர) | | | |
| மதுரை மில்ஸ் கலைப்பாளர் | ப | 7,17,950 | |
| பங்குமுதல் | | | 6,00,000 |
| 6 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் | | | 80,000 |
| வங்கி | | | 37,950 |
| (கொள்முதல் மறுபயனைப் பகுதி செலுத்தப்பெற்ற பங்குகளையும் கடனீட்டுப் பத்திரங்களையும் வெளியிட்டும், ரொக்கம் கொடுத்தும் தீர்த்தது.) | | | |

**குறிப்பேட்டுப் பதிவுகள்—**(தொடர்ச்சி)

| | பற்று | வரவு |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| பங்கு ஒதுக்கீட்டுக் கணக்கு ப | 4,00,000 | |
| பங்குமுதல் கணக்கு | | 4,00,000 |
| (பங்கு ஒன்றுக்கு ரூ. 4 வீதம் 1,00,000 பங்குகள் மீது ஒதுக்கீட்டின்போழ்து பெற வேண்டிய தொகை.) | | |
| வங்கிக் கணக்கு ப | 4,00,000 | |
| பங்கு ஒதுக்கீட்டுக் கணக்கு | | 4,00,000 |
| (பங்கு ஒதுக்கீட்டின்போழ்து பங்குகளின் மீது பெற்ற தொகை.) | | |

**மதுரை மில்ஸ் லிமிட்டெடின் இருப்புநிலைக் குறிப்பு**

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : | | கட்டடம் | 50,000 |
| ஒன்று ரூ. 10 வீதம் 1,00,000 பங்குகள், முழுதும் செலுத்தப் பெற்றவை | 10,00,000 | பொறிவகை | 5,15,000 |
| | | சரக்கிருப்பு | 1,00,000 |
| | | கடனாளிகள் | 75,000 |
| | | வங்கி | 3,70,000 |
| தொழிலர் நலக்காப்பு நிதி | 30,000 | | |
| 6 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் | 80,000 | | |
| | 11,10,000 | | 11,10,000 |

புற மறு அமைப்பின்போழ்து நடவடிக்கைகளை வேறு முறையிலும் பதிவதுண்டு. அம் முறை கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது:

(1) புதிய கம்பெனி எடுத்துக்கொள்ளும் சொத்துகளின் மொத்த மதிப்பளவிற்கு

தீர்வுக் கணக்கில் பற்றும்,
எடுத்துக் கொள்ளப்படும்

சொத்து ஒவ்வொன்றின் கணக்கில்
தனித்தனியாக வரவும் வைக்கவேண்டும்.

(2) கம்பெனி எடுத்துக்கொள்ளும் பொறுப்புகளை மட்டில் தீர்வுக் கணக்கிற்கு எடுத்துச் செல்லவேண்டும். இதற்கு,

பொறுப்புக் கணக்கில் பற்றும்,
தீர்வுக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

(3) புதிய கம்பெனி கொடுக்கும் கொள்முதல் மறுபயனைப் பதிய

புதிய கம்பெனிக் கணக்கில் பற்றும்,
தீர்வுக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

(4) தீர்வுக் கணக்குக் காட்டும் நட்டத்தையோ அல்லது இலாபத்தையோ மறு அமைப்புக் கணக்கு (Reconstruction Account) எனும் புதிய கணக்கிற்கு மாற்றவேண்டும்.

நட்டமாயின்,

மறு அமைப்புக் கணக்கில் பற்றும்,
தீர்வுக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

(5) தீர்வுக் கணக்கு இலாபத்தைக் காட்டுமாயின்,

தீர்வுக் கணக்கில் பற்றும்,
மறு அமைப்புக் கணக்கில்
வரவும் வைக்கவேண்டும்.

புதிய கம்பெனி எடுத்துக்கொள்ளாத சொத்துகளை இப்பொழுது விற்கவேண்டும். இதில் ஏற்படும் இலாபம் அல்லது நட்டத்தை மறு அமைப்புக் கணக்கிற்கு மாற்றவேண்டும். சொத்து நட்டத்திற்கு விற்கப்படும்போழ்து,

(விற்ற தொகை அளவிற்கு) வங்கிக் கணக்கில் பற்றும்,

(ஏற்பட்ட நட்டத் தொகையளவிற்கு) மறு அமைப்புக் கணக்கில் பற்றும்,

(முழுத் தொகைக்கும்) சொத்துக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

சொத்து இலாபத்தில் விற்கப்படுமாயின்,

(விற்கப்பட்ட தொகையளவிற்கு) வங்கிக் கணக்கில் பற்றும்,

(இலாப அளவிற்கு) மறு அமைப்புக் கணக்கில் வரவும்,

(சொத்து மதிப்பளவிற்கு) சொத்துக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

பழைய கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்பில் காணப்படும் தொடக்கச் செலவுகள், பங்குக் கழிவு, இலாப-நட்டக் கணக்கு போன்ற பெயரளவு சொத்துகளையும், விற்க முடியாத சொத்துகளையும், மறு அமைப்புக் கணக்கிற்கு மாற்றவேண்டும். இதற்கு,

மறு அமைப்புக் கணக்கில் பற்றும்,

பெயரளவு சொத்துகள், இலாப-நட்டக் கணக்கு ஆகியவற்றில் வரவும் வைக்கவேண்டும்.

இப்பொழுது பொறுப்பு ஏதேனும் தீர்க்கும்போழ்து, ஆதாயம் ஏற்பட்டிருப்பின் (அதாவது ஏட்டு மதிப்பிலும் குறைந்த தொகைக்குக் கொடுத்துப் பொறுப்புத் தீர்க்கப்பட்டிருப்பின்), அதனை மறு அமைப்புக் கணக்கிற்கு எடுத்துச் செல்லவேண்டும். எடுத்துக்காட்டாக, ரூ. 20,000-ற்கான கடனீந்தோருக்குப் பழைய கம்பெனி ரூ. 18,000 கொடுத்துத் தீர்ப்பதாகக் கொண்டால் பதிவு கீழ்க்கண்டவாறிருக்கும் :

| | | | |
|---|---|---|---|
| கடனீந்தோர் | ப | 20,000 | |
| வங்கிக் கணக்கு | | | 18,000 |
| மறு அமைப்புக் கணக்கு | | | 2,000 |

இவ்வாறு பழைய கம்பெனியின் ஏட்டில் காணப்படும் காப்புகள், ஆதாயக் கணக்குகளையும் மறு அமைப்புக் கணக்கிற்கு மாற்றவேண்டும். எடுத்துக்காட்டாக,

அமைப்பிற்கு முன் இலாபக் கணக்கு இருப்பின்,

அமைப்பிற்கு முன் இலாபக் கணக்கில் பற்றும்,

மறு அமைப்புக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

இப்பொழுது மறு அமைப்புக் காட்டும் இருப்பினைப் பங்குநர் கணக்கிற்கு மாற்றவேண்டும். பங்குமுதல் கணக்கை வழக்கம் போன்றே பங்குநர்கள் கணக்கிற்கு மாற்றவேண்டும்.

வழக்கம் போன்றே, பங்குதாரர்கள் கணக்கில் பற்றும், வங்கி, புதிய கம்பெனியின் பங்குகள், புதிய கம்பெனியின் கடனீட்டுப் பத்திரங்கள் ஆகிய கணக்குகளில் வரவும் வைத்துக் கணக்கை முடிக்க வேண்டும்.

### எடுத்துக்காட்டு 127

'அ' லிமிட்டெடின் இருப்புநிலைக் குறிப்பு கீழே காட்டிய வாறு இருந்தது :

**இருப்புநிலைக் குறிப்பு**

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : | | புனைபொருளுரிமை | 2,45,000 |
| அதிகாரம் பெற்றதும் வெளியீட்டு முதலும்: | | கட்டடம் | 6,00,000 |
| ஒன்று ரூ. 10 வீதம் 50,000—6 சதவீதம் முன்னுரிமைப் பங்குகள், முழுதும் செலுத்தப் பெற்றவை | 5,00,000 | சரக்கிருப்பு | 1,60,000 |
| ஒன்று ரூ. 10 வீதம் 60,000 நேர்மைப் பங்குகள், முழுதும் செலுத்தப்பெற்றவை | 6,00,000 | கடனாளிகள் | 1,20,000 |
| 5 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் | 1,00,000 | வங்கி | 5,000 |
| கடனீந்தோர் | 80,000 | இலாப-நட்டக் கணக்கு | 1,50,000 |
| | 12,80,000 | | 12,80,000 |

கீழ்க்கண்ட மறு அமைப்புத் திட்டம் ஏற்றுக்கொள்ளப் பட்டது :

(1) 'ஆ' லிமிட்டெட் என்ற புதிய கம்பெனியை அமைத்து அது 'அ' லிமிட்டெடை எடுத்துக்கொள்ள வேண்டியது.

(2) சொத்துகளில் சரக்கிருப்பை 'ஆ' லிமிட்டெட் எடுத்துக்கொள்ளவில்லை; 'அ' லிமிட்டெட் இதனை ரூ. 1,26,000-ற்கு விற்றது.

(3) பழைய கம்பெனியின் ஒவ்வொரு மூன்று நேர்மைப் பங்குகட்கும் புதிய கம்பெனியின் ஒன்று ரூ. 5 மதிப்புடைய முழுதும் செலுத்தப்பெற்ற ஒரு பங்கு வீதம் வெளியிட வேண்டியது.

(4) பழைய கம்பெனி ஒவ்வொரு இரண்டு முன்னுரிமைப் பங்குகட்கும் ஒன்று ரூ. 5 மதிப்புடைய, முழுதும் செலுத்தப் பெற்ற மூன்று பங்குகளைப் புதிய கம்பெனி வெளியிட வேண்டியது.

(5) பொறுப்புகளில் கடனீட்டுப் பத்திரங்களை மட்டும் 'ஆ' லிமிட்டெட் எடுத்துக்கொள்ள வேண்டியது.

(6) கடனீந்தோர் தமக்குச் சேரவேண்டிய தொகைக்குப் புதிய கம்பெனியின் ஒன்று ரூ. 5 மதிப்புடைய முழுதும் செலுத்தப் பெற்ற பங்குகளைப் பெற்றுக்கொண்டு கணக்குகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டியது.

(7) முன்னுரிமைப் பங்காதாயம் நிலுவையிலுள்ளது. இதனைத் தீர்க்கப் பழைய கம்பெனியின் ஒவ்வொரு இருபது பங்குகட்கும் புதிய கம்பெனியின் ஒன்று ரூ. 5 மதிப்புடைய முழுதும் செலுத்தப்பெற்ற ஒரு பங்கு வீதம் கொடுக்கவேண்டியது.

(8) புனை பொருளுரிமையையும், இலாப-நட்டக் கணக்கையும் நீக்கவேண்டியது.

(9) 'அ' லிமிட்டெடிற்குச் செலவு ரூ. 1,000 ஆனது.

**'அ' லிமிட்டெடின் ஏடுகளில் இறுதிப் பதிவுகளைத் தருக.**

**விடை:** அடுத்த பக்கம்..

**விடை :**

## 'அ' லிமிட்டெடின் ஏடுகளில் இறுதிப் பதிவுகள்

| | பற்று | வரவு |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| தீர்வுக் கணக்கு ப | 7,25,000 | |
| கட்டடம் | | 6,00,000 |
| கடனாளிகள் | | 1,20,000 |
| வங்கி | | 5,000 |
| [..நாளிட்ட மறு அமைப்புத் திட்டத்தின்படி 'அ' லிமிட்டெடின் சொத்துகளை (சரக்கிருப்பு நீங்கலாக) 'ஆ' லிமிட்டெட் எடுத்துக் கொள்வது.] | | |
| 5 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் ப | 1,00,000 | |
| தீர்வுக் கணக்கு | | 1,00,000 |
| (5 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்களை 'ஆ' லிமிட்டெட் எடுத்துக் கொண்டது.) | | |
| 'ஆ' லிமிட்டெட் ப | 5,67,500 | |
| தீர்வுக் கணக்கு | | 5,67,500 |
| (மறு அமைப்புத் திட்டத்தின்படி 'ஆ' லிமிட்டெட் தரவேண்டிய கொள் முதல் மறுபயன்.) | | |
| மறு அமைப்புக் கணக்கு ப | 57,500 | |
| தீர்வுக் கணக்கு | | 57,500 |
| (தீர்வுக் கணக்குக் காட்டும் நட்டத்தை மறு அமைப்புக் கணக்கிற்கு மாற்ற.) | | |

## இறுதிப் பதிவுகள்—(தொடர்ச்சி)

| | பற்று | வரவு |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 'ஆ' லிமிட்டெடின் பங்குகள் ப | 5,67,500 | |
| 'ஆ' லிமிட்டெட் | | 5,67,500 |
| (கொள்முதல் மறுபயனுக்காகக் கிடைத்த 'ஆ' லிமிட்டெடின் பங்குகள்.) | | |
| கடனீந்தோர் ப | 80,000 | |
| 'ஆ' லிமிட்டெடின் பங்குகள் | | 80,000 |
| (கடனீந்தோருக்குச் சேரவேண்டிய தொகைக்கு 'ஆ' லிமிட்டெடின் பங்குகளைக் கொடுத்து, பொறுப்பைத் தீர்த்தது.) | | |
| மறு அமைப்புக் கணக்கு ப | 3,95,000 | |
| புனைபொருளுரிமை | | 2,45,000 |
| இலாப-நட்டக் கணக்கு | | 1,50,000 |
| (புனைபொருளுரிமையையும், இலாப-நட்டக் கணக்கையும் மறு அமைப்புக் கணக்கிற்கு மாற்ற.) | | |
| மறு அமைப்புக் கணக்கு ப | 12,500 | |
| முன்னுரிமைப் பங்குநர்கள் | | 12,500 |
| (பழைய கம்பெனியின் ஒவ்வொரு இருபது பங்குகட்கும் 'ஆ' லிமிட்டெடின் ஒரு பங்கு வீதம் முன்னுரிமைப் பங்குநர்கட்குச் சேரவேண்டிய பங்காதாய நிலுவையை அடைக்க, முன்னுரிமைப் பங்காதாய நிலுவையை முன்னுரிமைப் பங்குநர்கள் கணக்கிற்கு மாற்ற.) | | |

## இறுதிப் பதிவுகள்—(தொடர்ச்சி)

| | பற்று | வரவு |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| வங்கிக் கணக்கு ப | 1,26,000 | |
| மறு அமைப்புக் கணக்கு ப | 34,000 | |
| சரக்கிருப்பு | | 1,60,000 |
| ('ஆ' லிமிட்டெட் எடுத்துக் கொள்ளாச் சரக்கிருப்பை விற்றது.) | | |
| மறு அமைப்புக் கணக்கு ப | 1,000 | |
| வங்கி | | 1,000 |
| (செலவினை ஏற்றது.) | | |
| நேர்மைப் பங்குநர்கள் ப | 5,00,000 | |
| மறு அமைப்புக் கணக்கு | | 5,00,000 |
| (மறு அமைப்பு நட்டத்தை நேர்மைப் பங்குநர்கள் கணக்கிற்கு மாற்ற.) | | |
| முன்னுரிமைப் பங்குமுதல் கணக்கு ப | 5,00,000 | |
| முன்னுரிமைப் பங்குநர்கள் | | 5,00,000 |
| (சலுகைப் பங்குமுதலை முன்னுரிமைப் பங்குநர்கள் கணக்கிற்கு மாற்ற.) | | |
| நேர்மைப் பங்குமுதல் கணக்கு ப | 6,00,000 | |
| நேர்மைப் பங்குநர்கள் | | 6,00,000 |
| (நேர்மைப் பங்குமுதலை நேர்மைப் பங்குநர்கள் கணக்கிற்கு மாற்ற.) | | |

## இறுதிப் பதிவுகள்—(தொடர்ச்சி)

| | பற்று | வரவு |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| முன்னுரிமைப் பங்குநர்கள் ப | 5,12,500 | |
| வங்கி | | 1,25,000 |
| 'ஆ' லிமிட்டெடின் பங்குகள் கணக்கு | | 3,87,500 |
| (முன்னுரிமைப் பங்குநர்கட்கு ரொக்கமும், 'ஆ' லிமிட்டெடிடமிருந்து பெற்ற பங்குகளைக் கொடுத்தும் முதல் தொகையைத் தீர்த்தது.) | | |
| நேர்மைப் பங்குநர்கள் ப | 1,00,000 | |
| 'ஆ' லிமிட்டெடின் பங்குகள் | | 1,00,000 |
| ('ஆ' லிமிட்டெடிடமிருந்து பெற்ற பங்குகளைக் கொடுத்து முதல் தொகையைத் திருப்பித் தந்தது.) | | |

**எடுத்துக்காட்டு 128**

தி எவர் கிரீன் கம்பெனி லிமிட்டெட் சொத்தாட்சி அதிகாரி (Receiver) கையிலுள்ளது. 1966 மார்ச் 31-ல் கீழ்க்கண்ட நிலை அறிக்கையை அவர் தயாரித்திருந்தார் :

| எதிர்பார்க்கும் பொறுப்பு (Expected to rank) | ரூ. | எதிர்பார்க்கும் தொகை (Expected to realise) | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : | | ரொக்கம் .. | 50,000 |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 10,000 நேர்மைப் பங்குகள், பங்கு ஒன்றுக்கு ரூ. 50 வரை அழைக்கப் பெற்றிருந்தது | — | கட்டடம் (வாங்கிய விலை ரூ. 6,00,000) .. | 7,00,000 |
| | | பொறிவகை (வாங்கிய விலை ரூ. 10,00,000) .. | 5,00,000 |
| பிணைக் கடன் (கட்டடத்தின் மீது 12 சதவீதத்தில்) .. | 15,00,000 | கடனாளிகள் (ஏட்டு மதிப்பு ரூ. 4,00,000) .. | 2,00,000 |
| வாணிகக் கடனீந்தோரும் செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டும் .. | 5,00,000 | அழையாப் பங்குமுதல் .. | 5,00,000 |
| செலவினங்கட்கான கடனீந்தோர் .. | 1,50,000 | கடனீந்தோருக்கான பற்றுக்குறை .. (deficiency for creditors) | 2,00,000 |
| | 21,50,000 | | 21,50,000 |

இக்கட்டான நிலையைக் கம்பெனி சமாளித்து மறுவாழ்வு பெற்றிருக்கிறது. இதனைத் திருத்தியமைக்கப் பங்குதாரர்கள் விரும்புகின்றனர். பிணைக் கடனீந்தோரும் (Secured creditors) பிணையமற்ற கடனீந்தோரும் இதனை வரவேற்கின்றனர். ஆனால், அவர்கட்கு எதிர்காலத்தில் கம்பெனியின் பங்குமுதலில் ஓரளவு உரிமை தரவேண்டும்.

இம் மறு அமைப்பால் பாதிக்கப்படும் அனைவருக்கும் ஏற்ற வகையில் ஒரு புற மறு அமைப்புத் திட்டத்தை வகுக்கவும். அத்துடன் பழைய கம்பெனியின் ஏட்டிலும், திருத்தியமைக்கப் பெற்ற ஏட்டிலும் தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக. ஏற்றமுறையில் தேவையானவற்றை ஊகித்துக்கொள்க.

(C. A. Final, Nov., 1963)

**விடை :**

மறு அமைப்புத் திட்டத்தைத் தயாரிக்கவும், கம்பெனியின் எதிர்கால நிலையைச் சரிவர உணரும் பொருட்டும் 1966 மார்ச் 31-ற்கான அதன் இருப்புநிலைக் குறிப்பைத் தயாரிக்கவேண்டும். காரணம், மேலே கொடுக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை உண்மையான மொத்த நட்டத்தை உணர்த்தவில்லை.

**இருப்புநிலைக் குறிப்பு**

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : | | கட்டடம் | 6,00,000 |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 10,000 பங்குகள், பங்கு ஒன்றுக்கு ரூ. 50 வரை செலுத்தப் பெற்றது | 5,00,000 | பொறிவகை | 5,00,000 |
| பிணைக் கடனீந்தோர் (கட்டடத்தின் மீது 12 சதவீதத்தில்) | 15,00,000 | கடனாளிகள் | 4,00,000 |
| வாணிகக் கடனீந்தோரும், செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டும் | 5,00,000 | ரொக்கம் | 50,000 |
| செலவினங்கட்கான கடனீந்தோர் | 1,50,000 | இலாப-நட்டக் கணக்கு (இருப்புக்கட்டுந் தொகை—Balancing figure) | 11,00,000 |
| | 26,50,000 | | 26,50,000 |

இதிலிருந்து நாம் மொத்தம் நீக்கவேண்டிய நட்டத்தைக் கீழ்க்கண்டவாறு உணரலாம் :

| | ரூ. |
|---|---|
| இலாப-நட்டக் கணக்குப் பற்றிருப்பு | 11,00,000 |
| ஐயக் கடன் ஒதுக்கு | 2,00,000 |
| கலைப்புச் செலவு (ஊகிக்கப்படுகிறது) | 5,000 |
| | 13,05,000 |
| **கழி :** | |
| கட்டடத்தின் மதிப்புயர்வு | 1,00,000 |
| | 12,05,000 |

இந் நட்டத் தொகையைப் பல்வகைத் தரப்பினரும் ஏற்க வேண்டும். காரணம், பங்குத் தொகை இம் மொத்த நட்டத் தொகையை விட மிகவும் குறைவாகவுள்ளது. அடுத்துப் பிணைய மற்ற கடனீந்தோரும் நட்டத்தை ஏற்கவேண்டுமென்று சொல்லத் தேவையில்லை. ஆனல், பங்குநருக்கு அடுத்து மீதியுள்ள எல்லா நட்டத்தையும் இவர்களே ஏற்க வேண்டுவதில்லை. காரணம், கம்பெனி கலைக்கப்படுமாயின், இவர்கட்கு ஏறத்தாழ 50 சத வீதத்திற்கு மேலேயே பங்காதாயம் கிடைக்கும். எனவே, இவர்கள் தற்போது நீக்கவேண்டிய மொத்த நட்டத்தில் 40 சதவீதத்தை ஏற்கலாம். மேலும், கம்பெனியின் புனரமைப்பிற்குப் பின் இவர்களும் பங்குநர்களாவதால் பின்வரும் ஆண்டுகளில் கம்பெனி ஈட்டும் இலாபத்தின் பயனையும் இவர்கள் பெறுவார்கள். எனவே, இந் நட்டத்தை ஏற்க இவர்கள் முன்வருவார்கள்.

அத்துடன் பிணைக் கடனீந்தோரைப் பொருத்தவரையில் அவர்கட்குச் சேரவேண்டிய தொகை ரூ. 15,00,000. ஆனல், அவர்கள் வைத்துள்ள பிணையத்தின் (ஈட்டின்) மதிப்பு ரூ. 7,00,000 தான். கம்பெனி கலைக்கப்படுமாயின், அவர்கட்குச் சேரவேண்டிய முழுத் தொகையும் கிடைக்காது. எனவே, அவர்கள் கீழ்க்கண்டவாறு மீதி நட்டத்தை ஏற்கவேண்டும். தங்கள் கடன் தொகையில் ஏறத்தாழ இது 31 சதவீதம் ஆகிறது. கம்பெனி மறு அமைப்பிற்குப் பின், தாங்களும் அதில் பங்குநர்களாகப் போவதால் பின்னர் கிடைக்கும் ஆதாயத்தினைக் கருத்திற்கொண்டு இத் திட்டத்திற்கு அவர்கள் ஒப்புதல் தருவார்கள் என்று நம்பலாம்.

எனவே, மொத்த நட்டத்தைக் கீழ்க்கண்டவாறு ஏற்க வேண்டும்.

| | ரூ. |
|---|---|
| நேர்மைப் பங்குநர்கள் | 4,75,000 |
| பிணைக் கடனீந்தோர் | 4,70,000 |
| பிற கடனீந்தோர் | 2,60,000 |
| | 12,05,000 |

**புற மறுஅமைப்புத் திட்டம்** (External Reconstruction Scheme)

*(1)* எவர் கிரீன் கம்பெனி லிமிட்டெட் தானே கலைக்கப் படவேண்டும். இதன் சொத்துகளை வாங்கும் நோக்குடன் 'நியூ எவர் கிரீன் கம்பெனி லிமிட்டெட்' எனும் புதிய கம்பெனியை ரூ. 10,00,000 அதிகாரம் பெற்ற முதலுடன் அமைக்கவேண்டும். இது ஒன்று ரூ. 25 மதிப்புடைய 40,000 பங்குகளாகப் பிரிக்கப் படவேண்டும்.

*(2)* புதிய கம்பெனி பழைய கம்பெனியின் சொத்துகளை ஏட்டு மதிப்பில் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனுல், கட்டடத்தை ரூ. 7,00,000-மாக மதிப்பிடவேண்டும். ஐயக் கடனுக்காக ரூ. 2,00,000 ஒதுக்கவேண்டும்.

*(3)* பிணைக் கடனீந்தோருக்கு ஒன்று ரூ. 100 மதிப்புடைய 5,700–12 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்களையும், ஒன்று ரூ. 25 மதிப்புடைய 16,800 முழுதும் செலுத்தப்பெற்ற நேர்மைப் பங்குகளையும் வெளியிட்டு, மீதித் தொகை ரூ. 40,000-ற்கு ரொக்கம் செலுத்தி, அவர்களின் பொறுப்பைத் தீர்க்கலாம்.

*(4)* பிற கடனீந்தோரைப் பொருத்தவரை ரூ. 1,30,000 ரொக்கம் கொடுத்தும், ஒன்று ரூ. 100 மதிப்புடைய 1,300, 12 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்களையும் ஒன்று ரூ. 25 மதிப்புடைய முழுதும் செலுத்தப்பெற்ற 5,200 நேர்மைப் பங்குகளையும் வெளியிட்டும், அவர்களின் பொறுப்பைத் தீர்க்கலாம்.

*(5)* பழைய கம்பெனியின் பங்குநர்கட்கு ஒன்று ரூ. 25 மதிப்புடைய 10,000 பங்குகளைப் பங்கு ஒன்றுக்கு ரூ. 2.50 செலுத்தப்பெற்றதாக வெளியிடலாம். இவர்கள் ஒவ்வொரு

பங்கின் மீதும் செலுத்தவேண்டிய ரூ. 22.50-ஐ உடனடியாக செலுத்தவேண்டுமென்று கோரப்படலாம்.

(6) கம்பெனியின் கலைப்புச் செலவிற்காகப் பழைய கம்பெனிக்கு ரூ. 5,000 தரவேண்டும்.

மேற்கண்ட மறு அமைப்புத் திட்டம் நிறைவேற்றப்பட்டவுடன் இரு கம்பெனிகளின் ஏட்டிலும் கீழ்க்கண்டவாறு குறிப்பேட்டுப் பதிவுகள் இருக்கும்.

## பழைய கம்பெனியின் ஏட்டில் குறிப்பேட்டுப் பதிவுகள்

| | | பற்று | வரவு |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| தீர்வுக் க/கு | ப | 15,50,000 | |
| கட்டடம் | | | 6,00,000 |
| பொறிவகை | | | 5,00,000 |
| கடனாளிகள் | | | 4,00,000 |
| ரொக்கம் | | | 50,000 |
| (மறு அமைப்புத் திட்டத்தின்படி பல்வகைச் சொத்துகளையும் கம்பெனி கலைப்பின் போழ்து தீர்வுக் கணக்கிற்கு மாற்ற.) | | | |
| நியூ எவர் கிரீன் கம்பெனி லிமிட்டெட் க/கு | ப | 14,50,000 | |
| தீர்வுக் கணக்கு | | | 14,50,000 |
| (மறு அமைப்புத் திட்டத்தின்படி புதிய கம்பெனியிடமிருந்து பெறும் கொள்முதல் மறுபயன்.) | | | |
| வங்கி | ப | 1,75,000 | |
| நியூ எவர்கிரீன் கம்பெனிக் கடனீட்டுப் பத்திரங்கள் | ப | 7,00,000 | |
| நியூ எவர் கிரீன் கம்பெனிப் பங்குகள் | ப | 5,75,000 | |
| நியூ எவர் கிரீன் கம்பெனி லிமிட்டெட் | | | 14,50,000 |
| (கொள்முதல் மறுபயனைப் பெற்றது.) | | | |

## குறிப்பேட்டுப் பதிவுகள்—(தொடர்ச்சி)

| | பற்று | வரவு |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| ஈடுடைக் கடனீந்தோர் ப | 15,00,000 | |
| நியூ எவர் கிரீன் கம்பெனி லிமிட்டெடின் கடனீட்டுப் பத்திரங்கள் | | 5,70,000 |
| நியூ எவர் கிரீன் கம்பெனி லிமிட்டெடின் பங்குகள் | | 4,20,000 |
| வங்கி | | 40,000 |
| தீர்வுக் கணக்கு | | 4,70,000 |
| (மறு அமைப்புத் திட்டத்தின் படி பிணைக் கடனீந்தோருக்குப் புதிய கம்பெனியின் கடனீட்டுப் பத்திரங்களையும் பங்குகளையும் வெளியிட்டும், ரொக்கம் கொடுத்தும், அவர்களின் பொறுப்பைத் தீர்த்தது. அவர்கள் விட்டுக் கொடுக்கும் ரூ. 4,70,000 தீர்வுக் கணக்கிற்கு மாற்றப் படுகிறது.) | | |
| வாணிகக் கடனீந்தோர் ப | 5,00,000 | |
| செலவினங்கட்கான கடனீந்தோர் ப | 1,50,000 | |
| வங்கி | | 1,30,000 |
| நியூ எவர் கிரீன் கம்பெனி லிமிட்டெடின் கடனீட்டுப் பத்திரங்கள் | | 1,30,000 |
| நியூ எவர் கிரீன் கம்பெனி லிமிட்டெடின் பங்குகள் | | 1,30,000 |
| தீர்வுக் கணக்கு | | 2,60,000 |
| (பிற கடனீந்தோருக்கு ரொக்கமும், புதிய கம்பெனிக் கடனீட்டுப் பத்திரங்களையும் பங்குகளையும் | | |

## குறிப்பேட்டுப் பதிவுகள்—(தொடர்ச்சி)

| | பற்று | வரவு |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| கொடுத்தும் அவர்களின் பொறுப்பைத் தீர்த்தது; அவர்கள் விட்டுக்கொடுக்கும் ரூ. 2,60,000 தீர்வுக் கணக்கிற்கு மாற்றப்படுகிறது.) | | |
| தீர்வுக் கணக்கு ப<br>வங்கிக் கணக்கு<br>(கலைப்புச் செலவு ஏற்றது.) | 5,000 | 5,000 |
| தீர்வுக் கணக்கு ப<br>பங்குநர்கள் கணக்கு<br>(தீர்வுக் கணக்கின் ஆதாயத்தைப் பங்குநர்கள் கணக்கிற்கு மாற்ற.) | 6,25,000 | 6,25,000 |
| பங்குநர்கள் கணக்கு ப<br>இலாப-நட்டக் கணக்கு<br>(இலாப-நட்டக் கணக்கின் பற்றிருப்பைப் பங்குநர்கள் கணக்கிற்கு மாற்ற.) | 11,00,000 | 11,00,000 |
| பங்குநர்கள் கணக்கு ப<br>நியூ எவர் கிரீன் கம்பெனி லிமிட்டெடின் பங்குகள்<br>(புதிய கம்பெனியின் ஒன்று ரூ. 25 மதிப்புடைய 10,000 பங்குகளைப் பங்கு ஒன்றுக்கு ரூ. 2.50 வீதம் செலுத்தப் பெற்றதாக வெளியிட்டதை நேர்மைப் பங்குநருக்கு வழங்கியது.) | 25,000 | 25,000 |

கொள்முதல் மறுபயன் கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படுகிறது :

| விவரம் | ரூ. | தொகை ரூ. | வடிவம் |
|---|---|---|---|
| நேர்மைப் பங்குநர்கள் .. | | 25,000 | பங்குகள் (ஒன்று ரூ. 25 மதிப்புடைய 10,000 பங்குகளைப் பங்கு ஒன்றுக்கு ரூ. 2,50 வரை செலுத்தப்பெற்றது) |
| பிணைக் கடனீந்தோர் .. | 40,000 | | ரொக்கம் |
| | 5,70,000 | | கடனீட்டுப் பத்திரங்கள் (ஒன்று ரூ. 100 மதிப்புடைய 5,700 கடனீட்டுப் பத்திரங்கள்) |
| | 4,20,000 | 10,30,000 | பங்குகள் (ஒன்று ரூ. 25 மதிப்புடைய 16,800 முழுதும் செலுத்தப்பெற்ற பங்குகள்) |
| பிற கடனீந்தோர் .. | 1,30,000 | | ரொக்கம் |
| | 1,30,000 | | கடனீட்டுப் பத்திரங்கள் (ஒன்று ரூ. 100 வீதம் 1,300 கடனீட்டுப் பத்திரங்கள்) |
| | 1,30,000 | 3,90,000 | பங்குகள் (ஒன்று ரூ. 25 மதிப்புடைய 5,200 முழுதும் செலுத்தப்பெற்ற பங்குகள்) |
| கலைப்புச் செலவு .. | | 5,000 | ரொக்கம் |
| மொத்தக் கொள்முதல் மறுபயன் | | ரூ. 14,50,000 | |

## நியூ எவர் கிரீன் கம்பெனி லிமிட்டெடின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்

| | | பற்று | வரவு |
|---|---|---|---|
| தொழில் கொள்முதல் | | ரூ. | ரூ. |
| கணக்கு | ப | 14,50,000 | |
| எவர் கிரீன் கம்பெனி | | | |
| லிமிட்டெடின் கலைப்பாளர் | | | 14,50,000 |
| (மறு அமைப்புத் திட்டத் | | | |
| தின்படி பழைய கம்பெனி | | | |
| யின் தொழிலை வாங்குதல்.) | | | |
| கட்டடம் | ப | 7,00,000 | |
| பொறிவகை | ப | 5,00,000 | |
| கடனாளிகள் | ப | 4,00,000 | |
| வங்கி | ப | 50,000 | |
| ஐயக் கடன் ஒதுக்கு | | | 2,00,000 |
| தொழில் கொள்முதல் | | | |
| கணக்கு | | | 14,50,000 |
| (மறு அமைப்புத் திட்டத் | | | |
| தின்படி பழைய கம்பெனி | | | |
| யிடமிருந்து வாங்கிய | | | |
| சொத்துகளை ஏடுகளில் | | | |
| கொண்டுவர.) | | | |
| வங்கிக் கணக்கு | ப | 2,25,000 | |
| பங்குமுதல் கணக்கு | | | 2,25,000 |
| (பங்கு ஒன்றுக்கு ரூ. 22.50 | | | |
| வீதம் 10,000 பங்குகள் | | | |
| மீது செலுத்தவேண்டிய | | | |
| அழைப்புத் தொகையைப் | | | |
| பெற்றது.) | | | |
| எவர் கிரீன் கம்பெனி | | | |
| கலைப்பாளர் | ப | 14,50,000 | |
| வங்கி | | | 1,75,000 |
| 12 சதவீதம் கடனீட்டுப் | | | |
| பத்திரங்கள் | | | 7,00,000 |
| பங்குமுதல் | | | 5,75,000 |
| (ரொக்கம் கொடுத்தும், | | | |

## குறிப்பேட்டுப் பதிவுகள்—(தொடர்ச்சி)

| | பற்று | வரகு |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 7,000 வழங்கியும், ஒன்று ரூ. 25 மதிப்புடைய 22,000 பங்குகளை முழுதும் செலுத்தப்பெற்றதாகவும், பங்கொன்றுக்கு ரூ. 2.50 வரை செலுத்தப்பெற்ற் தாக 10,000 பங்குகளை வெளியிட்டுக் கொள்முதல் மறுபயனைத் தீர்த்தது.) | | |

இப்பொழுது புதிய கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்பைத் தயாரிக்கலாம். இது கீழ்க்கண்டவாறு இருக்கும்:

## இருப்புநிலைக் குறிப்பு

| | ரூ. | | | ரூ. |
|---|---|---|---|---|
| பங்குமுதல் : | | கட்டடம் | | 7,00,000 |
| அதிகாரம் பெற்றது : | | பொறிவகை | | 5,00,000 |
| ஒன்று ரூ. 25 மதிப்புடைய 40,000 பங்குகள் | 10,00,000 | கடனாளிகள் | 4,00,000 | |
| | | கழி : ஐயக்கடன் ஒதுக்கு | 2,00,000 | 2,00,000 |
| வெளியீட்டு முதலும் செலுத்தப்பெற்ற முதலும் : | | வங்கி | | 1,00,000 |
| ஒன்று ரூ. 25 மதிப்புடைய 32,000 பங்குகள், முழுதும் செலுத்தப்பெற்றவை | 8,00,000 | | | |
| பிணைக்கடன் : | | | | |
| 12 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் | 7,00,000 | | | |
| | 15,00,000 | | | 15,00,000 |

## வினாக்கள்

1. ஒன்றிணைப்பு (Amalgamation) என்றால் என்ன? அதனால் உறும் பயன்கள் யாவை?

2. ஒன்றிணைப்பிற்கும், ஈர்ப்பமைப்பிற்கும் (Absorption) உள்ள வேறுபாடுகள் யாவை?

3. 'கொள்முதல் மறுபயன்' என்றால் என்ன? அதனை எவ்வாறு கணக்கிடுவது?

4. கம்பெனிகள் ஒன்றிணையும்போழ்து செய்யவேண்டிய பதிவுகள் யாவை?

5. கம்பெனிகட்கிடையே கொடுக்கவேண்டியவை இருப்பின், எடுத்துக்கொள்ளும் கம்பெனியின் ஏட்டில் செய்யவேண்டிய பதிவுகள் யாவை?

6. ஈர்ப்பமைப்பில் ஒவ்வொரு கம்பெனியும் அடுத்த கம்பெனியின் பங்குகளை வைத்திருக்கும்பொழுது, செய்யவேண்டிய சரிக்கட்டுதல்கள் யாவை?

7. புற மறு அமைப்பு என்றால் என்ன? அது அக மறு அமைப்பினின்றும் எவ்வாறு வேறுபடுகிறது?

8. சிறுகுறிப்பு வரைக :

   அ. வாணிகப் பொறுப்புகள்

   ஆ. காப்பீட்டு நிதி

   இ. புற மறு அமைப்புத் திட்டம்

   ஈ. மறு அமைப்புக் கணக்கு (Recorganisation Account)

## பயிற்சி

### இணைப்பு (Amalgamation)

*(1)* ஒரே வகைத் தொழிலைச் செய்யும் இரு கம்பெனிகள் கீழ்க்கண்ட தங்களின் இருப்புநிலைக் குறிப்புகளின் அடிப்படையில் ஒன்றிணைய முடிவு செய்கின்றன. பழைய கம்பெனிகளின் பங்குநர்கட்குப் புதிய கம்பெனியின் பங்குகள் எவ்வளவு கிடைக்கும் என்று கணக்கிடுக. அத்துடன் புதுக் கம்பெனியின் தொடக்கப் பதிவுகளைத் தந்து, இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்க.

**A,B,C. கம்பெனி லிமிட்டெட் இருப்புநிலைக் குறிப்பு**

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : ஒன்று ரூ. 10 மதிப்புடைய 10,000 பங்குகள், முழுதும் செலுத்தப்பெற்றவை | 1,00,000 | நிலமும் கட்டடமும் | 60,000 |
| கடனீந்தோர் | 17,500 | பொறிவகை | 30,000 |
| காப்பு நிதி | 22,000 | சரக்கிருப்பு | 40,000 |
| பங்காதாயச் சமன் செய் காப்பு | 15,000 | கடனாளிகள் | 25,000 |
| இலாப-நட்டப் பகிர்வுக் கணக்கு | 3,000 | வங்கி | 2,500 |
| | 1,57,500 | | 1,57,500 |

**X Y Z லிமிட்டெட் இருப்புநிலைக் குறிப்பு**

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : ஒன்று ரூ. 10 மதிப்புடைய 12,000 பங்குகள், முழுதும் செலுத்தப்பெற்றவை | 1,20,000 | நிலமும் கட்டடமும் | 55,000 |
| கடனீந்தோர் | 40,000 | பொறிவகை | 40,000 |
| வங்கி மேல்வரைப் பற்று | 10,000 | சரக்கிருப்பு | 25,000 |
| | | கடனாளிகள் | 20,000 |
| | | இலாப-நட்டக் கணக்கு — நட்டம் | 30,000 |
| | 1,70,000 | | 1,70,000 |

*ABC* கம்பெனி லிமிட்டெடின் வாணிக நற்பெயர் ரூ. **20,000** எனவும், *XYZ* லிமிட்டெடின் வாணிக நற்பெயர் ஒன்றுமில்லை எனவும் மதிப்பிடப்பட்டது.

(M. U. B.Com., Special Accounts, April, 1963)

*(2)* புரொாக்ரசிவ் கம்பெனி லிமிட்டெடும், எக்சலென்ட் கம்பெனி லிமிட்டெடும் ஒரே வகைத் தொழிலைச் செய்துவருகின்றன. இவை **1969** சனவரி **1**-லிருந்து ஒன்றிணைந்து செயல்பட முடிவு செய்கின்றன. இவைகளின் இருப்புநிலைக் குறிப்புகள் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ளன.

## புரொாக்ரசிவ் கம்பெனி லிமிட்டெட்
## 1968 திசம்பர் 31-க்கான இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| முதல் : ஒன்று ரூ. 100 வீதம் 3,000 நேர்மைப் பங்குகள் | 3,00,000 | வாணிக நற்பெயர் | 1,00,000 |
| | | நிலமும் கட்டடமும் | 48,000 |
| கடனீந்தோர் | 16,000 | பொறிவகை (தேய்மானத் திற்குப் பின்) | 89,000 |
| காப்பு நிதி | 20,000 | சரக்கிருப்பு | 59,000 |
| இலாப-நட்டக் கணக்கு | 8,000 | கடனாளிகள் | 32,000 |
| | | வங்கியிருப்பும் ரொாக்கமும் | 16,000 |
| | 3,44,000 | | 3,44,000 |

## எக்சலெண்ட் கம்பெனி லிமிடெட்

### 1968 திசம்பர் 31-க்கான இருப்புநிலைக் குறிப்பு

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| முதல் : | | | |
| ஒன்று ரூ. 100 வீதம் 2,000 நேர்மைப் பங்குகள் | 2,00,000 | வாணிக நற்பெயர் | 60,000 |
| கடனீந்தோர் | 14,000 | பொறிவகை, அடக்க விலையில் | 1,00,000 |
| தேய்மான நிதி | 10,000 | சரக்கிருப்பு | 48,000 |
| இலாப-நட்டக் கணக்கு | 10,000 | கடனாளிகள் | 24,000 |
| | | வங்கியிருப்பும் ரொக்கமும் | 2,000 |
| | 2,34,000 | | 2,34,000 |

1968 சனவரி 1-ல் தான் எக்செலன்ட் கம்பெனி தொழில் தொடங்கியது. இது பொறிவகை மீது தேய்மான நிதியின் மூலமாகத் தேய்மானத்திற்கு ஒதுக்கியது.

இரு கம்பெனிகளும் இணைந்த கம்பெனியின் பெயர் மாடர்ன் கம்பெனி லிமிட்டெட் என்றும், அது மேற்கொடுக்கப்பட்ட இரு கம்பெனிகளின் இருப்புநிலைக் குறிப்புகளின் அடிப்படையில் சொத்துகளை எடுத்துக்கொள்ளவும் (வாணிக நற்பெயர் உள்பட) பொறுப்புகளைத் தீர்க்கவும் ஒப்புக்கொள்ளப்பட்டது. மாடர்ன் கம்பெனி லிமிட்டெடின் முதல் ரூ. 8,00,000. இது ஒன்று ரூ. 10 வீதம் 40,000 நேர்மைப் பங்குகளாகவும் ஒன்று ரூ. 10 வீதம் 40,000, 6 சதவீதம் முன்னுரிமைப் பங்குகளாகவும் பிரிக்கப்பட்டது.

மாடர்ன் கம்பெனி லிமிட்டெட் 6,000 நேர்மைப் பங்குகளைப் பெயரளவு மதிப்பில் ரொக்கத்திற்கு வெளியிட்டது. புரொக்ரசிவ், எக்சலெண்ட் கம்பெனிகளின் பங்குநர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்கள் வைத்துள்ள ஒன்று ரூ. 100 மதிப்புடைய ஒவ்வொரு பங்குக்கும் ஒன்று ரூ. 10 மதிப்புடைய 5 முன்னுரிமைப் பங்குகளையும் 5 நேர்மைப் பங்குகளையும் முழுதும் செலுத்தப்பெற்றவையாக வெளியிடவும், மீதித் தொகையை ரொக்கமாகக் கொடுக்கவும் அது உடன்பட்டது.

மேற்சொன்ன நடவடிக்கைகள் நிறைவேறியவுடன் மாடர்ன் கம்பெனி லிமிட்டெடின் இருப்புநிலைக் குறிப்பைத் தயாரிக்கவும். அத்துடன் ஒன்றிணைந்த கம்பெனியின் ஒவ்வொரு பங்குநரும் பெறும் பங்குகளின் எண்ணிக்கையையும், ரொக்கத்தையும் காட்டுக.

(M. U. B.Com., Special Accounts, September, 1969)

(3) மைசூர் கம்பெனி லிமிட்டெட், பெங்களூர் கம்பெனி லிமிட்டெட் — ஆகியவற்றின் 1967 ஜூன் 30-ற்கான இருப்புநிலைக் குறிப்புகள் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ளன.

**மைசூர் கம்பெனி லிமிட்டெட்**

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| முதல் : | | வில்லங்கமற்ற | |
| ஒன்று ரூ. 10 வீதம் 2,00,000 நேர்மைப் பங்குகள், முழுதும் செலுத்தப் பெற்றவை | 20,00,000 | கட்டடம் | 4,50,000 |
| கடனீந்தோர் | 3,62,580 | பொறிவகை | 6,53,180 |
| காப்புநிதி | 1,40,000 | கடனாளிகள் | 4,93,640 |
| இலாப-நட்டக் கணக்கு | 3,28,800 | சரக்கிருப்பு | 7,72,800 |
| | | வங்கி | 4,60,000 |
| | | ரொக்கம் | 1,760 |
| | 28,31,380 | | 28,31,380 |

**பெங்களூர் கம்பெனி லிமிட்டெட்**

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| முதல் : | | பொறிவகை | 4,44,800 |
| ஒன்று ரூ. 50 வீதம் 12,000 நேர்மைப் பங்குகள், முழுதும் செலுத்தப்பெற்றவை | 6,00,000 | கடனாளிகள் | 1,24,980 |
| கடனீந்தோர் | 2,05,400 | சரக்கிருப்பு | 1,88,460 |
| | | ரொக்கம் | 2,580 |
| | | இலாப-நட்டக் கணக்கு | 44,580 |
| | 8,05,400 | | 8,05,400 |

1967 ஜூன் 30-ல் மைசூர் கம்பெனி லிமிட்டெட் பெங்களூர் கம்பெனி லிமிட்டெடை எடுத்துக்கொள்ள ஒப்புக்கொண்டது. கீழ்க்கண்ட ஏற்பாடு அவைகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

1. எடுத்துக்கொள்வதற்கு முன்பாக மைசூர் கம்பெனி லிமிட்டெட் தனது பங்குநர்கட்கு 15 சதவீதம் பங்காதாயம் வழங்கவேண்டியது.

2. மைசூர் கம்பெனி லிமிட்டெட், பெங்களூர் கம்பெனி லிமிட்டெடின் சொத்துகளை எடுத்துக்கொள்ள வேண்டியது. இதற்கான மறுபயன் :

(அ) பெங்களூர் கம்பெனியின் பொறுப்புகளைச் செலுத்துதல்.

(ஆ) எடுத்துக்கொள்வதற்காகும் செலவினைச் செலுத்துதல்.

(இ) பெங்களூர் கம்பெனிப் பங்குநர்கட்குத் தாங்கள் வைத்திருக்கும் ஒவ்வோர் இரண்டு முழுதும் செலுத்தப்பெற்ற பங்குகட்கும், மைசூர் கம்பெனியின் ஒன்று ரூ. 10 மதிப்புடைய 7 முழுதும் செலுத்தப்பெற்ற பங்குகளை வெளியிடுவது.

எடுத்துக்கொள்ளும் செலவு ரூ. 25,120 ஆனது. பெங்களூர் கம்பெனியின் உருமாறும் சொத்துகள் இருப்புநிலைக் குறிப்பில் கொடுக்கப்பட்ட மதிப்புகளிலேயே உள்ளன. மைசூர் கம்பெனியின் ஏட்டில் இந் நடவடிக்கைகளைப் பதியத் தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தந்து, பெங்களூர் கம்பெனியை எடுத்துக்கொண்ட பின்னர் மைசூர் கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்பைத் தயாரிக்க.

(M. U. B.Com., Special Accounts, Sept., 1968)

(4) 'டிப்' லிமிட்டெட் எனும் கம்பெனியும், 'ரன்' லிமிட்டெட் எனும் கம்பெனியும் ஒரே வகைத் தொழிலைச் செய்து வருகின்றன. அவைகள் ஒன்றிணைய விரும்புகின்றன. இதற்காக 'டிப்—ரன் லிமிட்டெட்' எனும் புதிய கம்பெனி ஒன்று தொடங்கப் பெறுகிறது. 1970 திசம்பர் 31-ல் இவ்விரு கம்பெனிகளின் இருப்புநிலைக் குறிப்புகள் 356-ம் பக்கம் கொடுக்கப்பட்டுள்ளன.

## டிப் லிமிட்டெடின்

### இருப்புநிலைக் குறிப்பு

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : | | வில்லங்கமற்ற | |
| ஒன்று ரூ. 10 வீதம் | | சொத்து | 1,05,000 |
| 15,000 பங்குகள் | 1,50,000 | பொறிவகை | 25,000 |
| பொதுக்காப்பு | 20,000 | மோட்டார் | |
| இலாப-நட்டக் | | வண்டிகள் | 10,000 |
| கணக்கு | 80,000 | சரக்கிருப்பு | 60,000 |
| கடனீந்தோர் | 75,000 | கடனாளிகள் | 82,000 |
| | | ரொக்கம் | 43,000 |
| | 3,25,000 | | 3,25,000 |

## ரன் லிமிட்டெடின்

### இருப்புநிலைக் குறிப்பு

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : | | வில்லங்கமற்ற | |
| ஒன்று ரூ. 10 வீதம் | | சொத்து | 60,000 |
| 8,000 பங்குகள் | 80,000 | பொறிவகை | 15,000 |
| இலாப-நட்டக் | | சரக்கிருப்பு | 78,000 |
| கணக்கு | 20,000 | கடனாளிகள் | 21,000 |
| 5 சதவீதம் கடனீட்டுப் | | ரொக்கம் | 18,000 |
| பத்திரங்கள் | 60,000 | | |
| கடனீந்தோர் | 32,000 | | |
| | 1,92,000 | | 1,92,000 |

கீழ்க்கண்டவற்றைத் தவிர பிற சொத்துகளும், பொறுப்புகளும் ஏட்டு மதிப்பிலேயே எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(அ) 'டிப்' லிமிட்டெடின் வாணிக நற்பெயர் ரூ. 80,000 என்றும், 'ரன்' லிமிட்டெடின் வாணிக நற்பெயர் ரூ. 30,000 என்றும் மதிப்பிடப்பட்டன.

(ஆ) 'டிப்' லிமிட்டெடின் மோட்டார் வண்டிகள் ரூ. 30,000 என்று மதிப்பிடப்பட்டது.

(இ) 'ரன்' லிமிட்டெடின் கடன்பத்திரங்களை 'டிப் – ரன்' லிமிட்டெடின் 5 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்களை 4 சதவீதம் முனைமத்தில் வெளியிட்டுத் தீர்க்கவேண்டியது.

(ஈ) 'ரன்' லிமிட்டெடின் கடனுளிகளையும், ரொக்கத்தையும் வைத்திருந்து அவைகளிலிருந்து பெறும் தொகையைக் கொண்டு கடனீந்தோருக்குச் செலுத்தவேண்டியது.

1. தற்போது இருக்கும் கம்பெனிகளின் பங்குநர்களுக்கு, எந்த அடிப்படையில் 'டிப் – ரன்' லிமிட்டெடின் பங்குகளை வெளியிட வேண்டுமென்பதைக் கணக்கிட்டு 1971 சனவரி 1-ற்கான புதிய கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்பைத் தயாரிக்கவும்.

2. 'ரன்' லிமிட்டெடின் ஏடுகளை முடிக்கத் தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

3. கலைப்புச் செலவைப் பொருட்படுத்த வேண்டாம்.

(Agra M. Com., 1967)

(5) A லிமிட்டெடும், B லிமிட்டெடும் ஒன்றிணைந்து C லிமிட்டெட் எனும் புதிய ஒரு கம்பெனியை அமைக்க உடன்படுகின்றன. இவ்விரு கம்பெனிகளின் எல்லாச் சொத்துகளையும், பொறுப்புகளையும் இப் புதிய கம்பெனி எடுத்துக்கொள்ளும்.

A லிமிட்டெடைப் பொருத்தவரை சொத்துகளும், பொறுப்புகளும் ஏட்டு மதிப்பிலேயே எடுத்துக்கொள்ளப்படும். இதற்காக A லிமிட்டெடின் ஒவ்வொரு நான்கு பங்குகட்கும் C லிமிட்டெடின் ஐந்து பங்குகள் வீதம் 10 சதவீதம் முனைமத்தில் தரப்படும்.

B லிமிட்டெடைப் பொருத்தவரை

1. B லிமிட்டெடின் கடனீட்டுப் பத்திரங்கள் C லிமிட்டெடின் அதே எண்ணிக்கையுள்ள கடனீட்டுப் பத்திரங்களை 10 சதவீதம் தள்ளுபடியில் வெளியிட்டுத் தீர்க்கப்படும்.

2. B லிமிட்டெடின் 6 சதவீதம் முன்னுரிமைப் பங்குநர்கள் தாங்கள் வைத்திருக்கும் ஒவ்வொரு ஐந்து முன்னுரிமைப் பங்குகட்கும் C லிமிட்டெடின் நான்கு 7 சதவீதம் முன்னுரிமைப் பங்குகள் வீதம் வழங்கப்படுவர்.

3. சொத்துகளில் பொறிவகை 10 சதவீதம் குறைத்தும், கடனுளிகள் மீது 5 சதவீதம் தொகை ஒதுக்கிய பின்னரும் நேர்மைப் பங்குநர்கட்குச் சேரவேண்டிய மீதித் தொகைக்குப் போதியவளவு பங்குகளை வழங்கவேண்டும்.

*A* லிமிட்டெடும் *B* லிமிட்டெடும் ஒன்றிணையும் நாளில் அவைகளின் இருப்புநிலைக் குறிப்புகளின் சுருக்கம் கீழ்க்கண்டவாறிருந்தது.

**இருப்புநிலைக் குறிப்பு**

| | *A* லிமிட்டெட் | *B* லிமிட்டெட் | | *A* லிமிட்டெட் | *B* லிமிட்டெட் |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | | ரூ. | ரூ. |
| ஒன்று ரூ. 10 மதிப்புடைய சாதாரணப் பங்குகள் | 4,00,000 | 5,00,000 | பொறிவகை | 8,00,000 | 8,00,000 |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 6 சதவீதம் முன்னுரிமைப் பங்குகள் | — | 3,00,000 | சரக்கிருப்பு | 65,000 | 60,000 |
| 4 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் | — | 2,00,000 | கடனாளிகள் | 95,000 | 50,000 |
| இலாப-நட்டக் கணக்கு | 5,00,000 | | வங்கியிருப்பு | 65,000 | 40,000 |
| நிகழ்வடைக் காப்பு | 50,000 | — | இலாப-நட்டக் கணக்கு | — | 1,40,000 |
| கடனீந்தோர் | 75,000 | 90,000 | | | |
| | 10,25,000 | 10,90,000 | | 10,25,000 | 10,90,000 |

*A* லிமிட்டெட், *B* லிமிட்டெட், *C* லிமிட்டெட் ஆகியவற்றின் ஏடுகளில் தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக. (I. C. W. A. January 1964).

(6) ஒரே வகைப் பொருள் உற்பத்தியிலும், விநியோகத்திலும் X லிமிட்டெட், Y லிமிடெட் எனும் இரு தனித்தனிக் கம்பெனிகள் ஈடுபட்டிருந்தன. அக் கம்பெனிகளின் 1970 மார்ச் 31-ற்குரிய இருப்புநிலைக் குறிப்புகள் கீழ்க் கொடுக்கப் பட்டுள்ளன :

**X லிமிட்டெடின் 1970 மார்ச் 31-ற்குரிய**

**இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| முதல் : வெளியிட்டதும், முழுதும் செலுத்தப்பெற்றதும் | | புனைபொருள் உரிமை | 40,000 |
| ஒன்று ரூ. 10 வீதம் 10,000, 8 சதவீதம் குவிவு முன்னுரிமைப் பங்குகள் | 1,00,000 | நிலமும் கட்டடமும் | 1,20,000 |
| ஒன்று ரூ. 10 வீதம் 30,000 நேர்மைப் பங்குகள் | 3,00,000 | பொறிவகை | 3,10,000 |
| | | சரக்கிருப்பு | 70,000 |
| | | கடனாளிகள் | 16,000 |
| | 4,00,000 | Y லிமிட்டெடில் 2,000 பங்குகள் | 23,000 |
| பொதுக்காப்பு | 1,60,000 | வங்கியிருப்பு | 9,000 |
| இலாப-நட்டக் கணக்கு | 18,000 | | |
| கடனீந்தோர் | 10,000 | | |
| | 5,88,000 | | 5,88,000 |

## Y லிமிட்டெடின் 1970 மார்ச் 31-க்கான இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| முதல் : வெளியிட்டதும், முழுதும் செலுத்தப்பெற்றதும்: ஒன்று ரூ. 10 வீதம் 8,000 பங்குகள் | 80,000 | வாணிக நற்பெயர் | 14,000 |
| | | மோட்டார் வண்டி | 8,000 |
| | | மனைத்துணைப் பொருள் | 5,000 |
| இலாப-நட்டக் கணக்கு | 6,400 | சரக்கிருப்பு | 47,800 |
| | | கடனாளிகள் | 12,400 |
| கடனீந்தோர் | 4,200 | வங்கியிருப்பு | 3,400 |
| | 90,600 | | 90,600 |

இரு கம்பெனிகளையும் கலைத்துவிட்டு 'Z' லிமிட்டெட் எனும் புதிய கம்பெனி ஒன்றை அமைத்து, கீழ்க்கண்ட நிபந்தனைகளின் பேரில் இரு கம்பெனிகளின் சொத்துகளையும் புதிய கம்பெனி வாங்கவேண்டும் என ஒப்புக்கொள்ளப்பட்டது :

(அ) 'Z' லிமிட்டெட் ரூ. 7,00,000 அதிகாரம் பெற்ற முதலை உடையதாக இருக்கவேண்டும். அது ஒன்று ரூ. 10 வீதம் 10,000, 8 சதவீதம் குவிவு முன்னுரிமைப் பங்குகளாகவும், ஒன்று ரூ. 10 வீதம் 60,000 நேர்மைப் பங்குகளாகவும் பிரிக்கப் பட்டிருக்கவேண்டும்.

(ஆ) 'X' லிமிட்டெடின் மதிப்பு ரூ. 6,00,000 எனவும், அதில் ரூ. 1,20,000-ஐ ரொக்கமாகவும், மீதியை ஒன்று ரூ. 12 வீதம் மதிப்பிடப்பட்டு முழுதும் செலுத்தப்பெற்ற நேர்மைப் பங்குகளாகவும் கொடுக்கவேண்டியது.

(இ) 'Y' லிமிட்டெடின் மதிப்பு ரூ. 96,000 எனவும், இது ஒன்று ரூ. 12 வீதம் முழுதும் செலுத்தப்பெற்ற நேர்மைப் பங்குகளாகக் கொடுத்துத் தீர்க்கப்படவேண்டியது.

(ஈ) 'X' லிமிட்டெடின் முன்னுரிமைப் பங்குநர்கட்கு ரொக்கம் கொடுக்கவேண்டியது.

(உ) 10,000 முன்னுரிமைப் பங்குகளை, முக மதிப்பிலும், 6,000 நேர்மைப் பங்குகளை ஒன்று ரூ. 12 வீதமும் 'Z' லிமிட்டெட் வெளியிட்டது. 5 சதவீதம் கழிவுத் தொகைக்குப் பங்குகள் அனைத்தும் ஒப்புறுதிச் செய்யப்பட்டன. பொறுப்புகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டன.

(ஊ) இத் திட்டத்தை உருவாக்கி, அதை ஏற்றுக்கொள்ளச் செய்த 'A' என்பவருக்கு அவர் ஆற்றிய பணிக்காக ஒன்று ரூ. 12 வீதம் 800 நேர்மைப் பங்குகள் (முழுவதும் செலுத்தப் பெற்றவை) ஒதுக்கப்பட்டன.

இத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

1. 'X' லிமிட்டெடின் ஏடுகளில் தேவையான இறுதிக் குறிப்பேட்டு, ரொக்க ஏட்டுப் பதிவுகளைத் தருக.

2. 'Z' லிமிட்டெடின் தொடக்க இருப்புநிலைக் குறிப்பைத் தயார் செய்க.

(M. U. B. Com., Special Accounts, April, 1971)

(7) ஒரே வகைத் தொழிலைச் செய்யும் இரு கம்பெனிகள் செலவுகளைக் குறைத்துக்கொள்ளும் நோக்குடன் 1966 ஜூலை 1-லிருந்து ஒன்றிணைய முடிவு செய்தன. அந்நாளிற்குரிய அவைகளின் இருப்புநிலைக் குறிப்புகள் கீழ்க்கண்டவாறு உள்ளன.

**கெரின் & கோ லிமிட்டெட்**

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : | | வாணிக நற்பெயர் | 20,700 |
| ஒன்று ரூ. 100 வீதம் | | நிலமும் | |
| 2,000 பங்குகள், | | கட்டடமும் | 80,000 |
| பங்கொன்றுக்கு ரூ. 80 | | பொறிவகை | 55,000 |
| வீதம் செலுத்தப் | | மோட்டார் | |
| பட்டது | 1,60,000 | வண்டிகள் | 20,000 |
| காப்பு நிதி | 2,000 | சரக்கிருப்பு | 27,800 |
| இலாப-நட்டக் கணக்கு | 24,000 | கடனாளிகள் | 8,400 |
| கடனீட்டுப் | | வங்கியிருப்பும் | |
| பத்திரங்கள் | 29,000 | ரொக்க இருப்பும் | 18,100 |
| கடனீந்தோர் | 15,000 | | |
| | 2,30,000 | | 2,30,000 |

## மெர்லின் & கோ லிமிட்டெட்

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : ஒன்று ரூ. 100 வீதம் 3,000 பங்குகள், பங்கொன்றுக்கு ரூ. 40 வீதம் செலுத்தப் பட்டது | 1,20,000 | நிலமும் கட்டடமும் | 67,000 |
| | | பொறிவகை | 50,000 |
| | | சரக்கிருப்பு | 46,000 |
| | | கடனாளிகள் | 13,700 |
| கடனீட்டுப் பத்திரங்கள் | 40,000 | வங்கியிருப்பும் ரொக்கஇருப்பும் | 19,300 |
| கடனீந்தோர் | 46,000 | இலாப-நட்டக் கணக்கு | 10,000 |
| | 2,06,000 | | 2,06,000 |

ஒன்றிணைந்த கம்பெனியின் பங்குமுதல் ரூ. 4,00,000. இது ஒன்று ரூ. 100 வீதம் 4,000 பங்குகளாகப் பிரிக்கப்பட்டது.

ஒன்றிணைப்பு நிபந்தனைகள் வருமாறு :

கெரின் அன் கோவைப் பொருத்தவரை அதன் வாணிக நற்பெயரைக் கடந்த மூன்றாண்டு இலாப விழுக்காட்டைப் (சராசரியைப்) போன்று இரண்டு மடங்காக மதிப்பிடவேண்டும்.

கடந்த மூனறாண்டுகளின் இலாபம் :

ரூ. 20,400

ரூ. 21,400

ரூ. 26,000

பொறிவகை மீது ரூ. 15,000-மும், மோட்டார் வண்டிகள் மீது ரூ. 2,000-மும் தேய்மானம் நீக்கவேண்டும்.

சரக்கிருப்பு ரூ. 34,800 ஆக மதிப்பிடப்படவேண்டும்.

மெர்லின் கம்பெனியைப் பொருத்தவரை, நிலம், கட்டடம் இவற்றின் மதிப்பு ரூ. 80,000-மாகவும், பொறிவகை மதிப்பு ரூ. 45,000-மாகவும் கொள்ளவேண்டும். வாணிக நற்பெய ருக்காகத் தொகை செலுத்த வேண்டுவதில்லை. கெரின் அன் கோ விற்குச் சேரவேண்டிய தொகைக்குப் புதிய கம்பெனியின் முழுதும் செலுத்தப்பெற்ற பங்குகளைக் கொடுத்துக் கொள்முதல் மறு பயனைத் தீர்க்கவேண்டியது.

மெரிலின் அன் கோவிற்குப் புதிய கம்பெனியின் முழுதும் செலுத்தப்பெற்ற 1,200 பங்குகளைக் கொள்முதல் மறுபயனின் ஒரு பகுதியாகவும், மிகுதிக்கு ரொக்கமும் கொடுத்துத் தீர்ப்பது.

ஒன்றிணைப்புச் சடங்குகள் அனைத்தும் நிறைவுபெற்றவுடன், புதிய கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்பைத் தயாரிப்பதுடன் குறிப்பேட்டுப் பதிவுகளையும் தருக.

(M. U. B.Com., Sept. 1967)

(8) *A* லிமிட்டெடும், *B* லிமிட்டெடும் தங்கள் தொழிலை ஒன்றிணைக்க உடன்படுகின்றனர். *A* லிமிட்டெட், *B* லிமிட்டெட் ஆகியவற்றின் மொத்த முதல் தொகைக்குச் சமமான பங்கு முதலுடன் *C* லிமிட்டெட் எனும் கம்பெனியைத் தொடங்க வேண்டியது. இக் கம்பெனி தற்போது இயங்கிவரும் இவ்விரு கம்பெனிகளின் சொத்துகளையும் பொறுப்புகளையும் எடுத்துக் கொண்டு தன்னுடைய பங்குகளைப் பதிலுக்குத் தரவேண்டியது.

1968 டிசம்பர் 31-ல் (ஒன்றிணையும் நாள்) இவ்விரு கம்பெனிகளின் இருப்புநிலைக் குறிப்புகள் கீழ்க்கண்டவாறு இருந்தன :

## இருப்புநிலைக் குறிப்பு

| | A லிமிட்டெட் | B லிமிட்டெட் | | A லிமிட்டெட் | B லிமிட்டெட் |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | | ரூ. | ரூ. |
| அதிகாரம் பெற்ற முதலும், வெளியீட்டு முதலும் | 1,00,000 | 1,40,000 | நிலைச் சொத்துகள் (வாணிக நற்பெயர் நீங்கலாக) | 1,20,000 | 1,80,000 |
| காப்புகள் | 1,70,000 | 1,00,000 | சரக்கிருப்பு | 60,000 | 1,10,000 |
| கடனீந்தோர் | 40,000 | 90,000 | கடனாளிகள் | 80,000 | 1,30,000 |
| வங்கி மேல்வரைப்பற்று | — | 90,000 | வங்கி | 50,000 | — |
| | 3,10,000 | 4,20,000 | | 3,10,000 | 4,20,000 |

1968 திசம்பர் 31-ல் ஏடுகள் காட்டும் நிகர சொத்துகளின் அடிப்படையில் கொள்முதல் மறுபயனை மதிப்பிட வேண்டியது. ஆனால், A லிமிட்டெட் அதிகமான இலாபத்தை ஈட்டுவதன் காரணமாக, அதனை ஈடுசெய்யக் கீழ்க்கண்டவாறு கூடுதல் தொகை கொடுக்கவேண்டியது.

1968 திசம்பர் 31-முடிய கடந்த 3 ஆண்டுகளில் A லிமிட்டெடின் எடை ஏற்றிய சராசரி நிகர இலாபத் தொகையைக் (weighted average of the net profits) கூடுதலாகக் கொடுக்க வேண்டியது.

1966, 67, 68 ஆகிய ஆண்டுகட்கு முறையே 1, 2, 3 எனும் முறையில் எடை ஏற்றப்பட வேண்டும். நிகர இலாபம் கீழ்க்கண்டவாறிருந்தது.

| | ரூ. |
|---|---|
| 1966 திசம்பர் 31-ல் முடியும் ஆண்டு | 20,000 |
| 1967 திசம்பர் 31-ல் முடியும் ஆண்டு | 80,000 |
| 1968 திசம்பர் 31-ல் முடியும் ஆண்டு | 1,20,000 |

A லிமிட்டெட் B லிமிட்டெட் ஆகியவற்றின் நிகர சொத்து மதிப்பு விகிதத்தில் C லிமிட்டெடின் பங்குகளை அவற்றிற்கு முனைமத் தொகையில் வெளியிடவேண்டியது.

தேவையான நடைமுறை முதலை அதிகப்படுத்தத் தனது அதிகாரம் பெற்ற முதலை ரூ. 2,00,000-ஆல் C லிமிட்டெட் அதிகப்படுத்திக் கொண்டு ஒன்று ரூ. 10 மதிப்புடைய 12,000 பங்குகளைப் பங்கு ஒன்று ரூ. 15 எனும் மதிப்பில் வெளியிட்டது.

(அ) A லிமிட்டெடிற்கும், B லிமிட்டெடிற்கும் வழங்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையைக் கணக்கிடுக.

(ஆ) A லிமிட்டெட், B லிமிட்டெட் ஆகியவற்றின் ஏடுகளில் மேற்கண்ட இணைப்பைச் செயல்படுத்தத் தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

(இ) பங்குகள் வெளியிட்ட பின்னர் C லிமிட்டெடின் இருப்புநிலைக் குறிப்பைத் தயாரிக்க.

(I.C.W.A. January, 1970)

(9) 'B' லிமிட்டெட், 'C' லிமிட்டெட் ஆகிய இரு கம்பெனிகளும் போட்டியிட்டு நடத்திக்கொண்டு வந்த தொழில்களில் கடந்த சில ஆண்டுகளில் நட்டம் ஏற்பட்டு வந்தது. 1966 ஜூலை 31-ற்குரிய அவ்விரு கம்பெனிகளின் இருப்புநிலைக் குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

### 'B' லிமிட்டெடின் இருப்புநிலைக் குறிப்பு

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| வெளியீட்டு முதல் : | | புனைபொருளுரிமை | 2,500 |
| ஒன்று ரூ. 10 மதிப்புடைய 10,000 பங்குகள், முழுதும் செலுத்தப்பெற்றவை | 1,00,000 | பொறிவகை | 40,000 |
| | | மனைத்துணைப் பொருள் | 4,600 |
| கடனீந்தோர் | 18,560 | சரக்கிருப்பு | 42,460 |
| வங்கி மேல்வரைப் பற்று | 6,050 | கடனாளிகள் | 15,630 |
| | | இலாப-நட்டக் கணக்கு | 19,420 |
| | 1,24,610 | | 1,24,610 |

### 'C' லிமிட்டெடின் இருப்புநிலைக் குறிப்பு

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| வெளியீட்டு முதல் : | | வாணிக நற்பெயர் | 10,000 |
| ஒன்று ரூ. 5 மதிப்புடைய 12,000 பங்குகள் | 60,000 | புனைபொருளுரிமை | 8,000 |
| | | பொறிவகை | 21,000 |
| கடனீந்தோர் | 8,310 | மனைத்துணைப் பொருள் | 3,280 |
| இலாப-நட்டக் கணக்கு | 640 | சரக்கிருப்பு | 16,990 |
| | | கடனாளிகள் | 9,550 |
| | | ரொக்கம் | 130 |
| | 68,950 | | 68,950 |

போட்டியைத் தவிர்த்துச் சிக்கனமாகச் செயல்படவும், புதிய முதல் பெறவும் கீழ்க்கண்ட ஏற்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டுச் செயல்படுத்தப்பட்டது :

(அ) இரு கம்பெனிகளையும் கலைத்துவிட்டு, இவைகளை எடுத்துக்கொள்ளும் நோக்குடன் 'A லிமிட்டெட்' எனும் புதிய கம்பெனியைத் தோற்றுவிப்பது.

(ஆ) இரு கம்பெனிகளின் மிதப்புச் சொத்துகளை (floating assets) ஏட்டு மதிப்புகளில் ('C' லிமிட்டெடின் ரொக்கத்தைத் தவிர) 'A' லிமிட்டெட் எடுத்துக்கொள்கிறது. நிலைச் சொத்து களைக் கீழ்க்கண்ட மதிப்புகளில் எடுத்துக் கொள்கிறது.

| | 'B' லிமிட்டெட் | 'C' லிமிட்டெட் |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| வாணிக நற்பெயர் | 1,000 | 1,000 |
| புனைபொருளுரிமை | 500 | 2,000 |
| பொறிவகை | 27,000 | 11,000 |
| மனைத்துணைப்பொருள் | 3,000 | 2,300 |
| | 31,500 | 16,300 |

(இ) ஒன்று ரூ. 10 மதிப்புடைய 1,200, 9 சதவீதம் முன்னுரிமைப் பங்குகளையும் ஒன்று ரூ. 10 மதிப்புடைய நேர்மைப் பங்குகளாக ரூ. 64,490-ற்கும், முழுதும் செலுத்தப்பெற்றவை யாக 'A' லிமிட்டெட் வெளியிட்டும், மீதிக்கு ரொக்கம் கொடுத் தும், 'B' லிமிட்டெடிற்குத் தரவேண்டிய கொள்முதல் மறு பயனைத் தீர்த்தது. 'C' லிமிட்டெடின் சொத்துகட்காக ரூ. 34,300-ற்கு ஒன்று ரூ. 10 மதிப்புடைய நேர்மைப் பங்குகளை வெளியிட்டும், மீதிக்கு ரொக்கம் கொடுத்தும் 'A' லிமிட்டெ டின் கொள்முதல் மறுபயனைத் தீர்த்தது.

(ஈ) 'B' லிமிட்டெடின் கலைப்பாளர் முன்னுரிமைப் பங்குகளை ரூ. 12,000-ற்கான கடனீந்தோர் ஒருவருக்குக் கொடுத்து அவரின் கணக்கைத் தீர்த்தார். பழைய கம்பெனி

களின் பங்குநர்கட்கு நேர்மைப் பங்குகள் விகிதப்படி (Pro rata) வழங்கப்பட்டன. 'B' கம்பெனிக்கும், 'C' கம்பெனிக்கும் கலைப்புச் செலவு முறையே ரூ. 500, ரூ. 300 ஆனது. கடனீந்தோருக்குத் தரவும், கலைப்புச் செலவுகளை ஏற்கவும் போதுமான அளவிற்கு மட்டுமே ரொக்கம் ஒவ்வொரு கம்பெனியிடமுமிருந்தது.

(உ) தேவையான ரொக்கத்திற்கு வகை செய்ய 'A' லிமிட்டெட் ஒன்று ரூ. 100 மதிப்புடைய 100, $7\frac{1}{2}$ சதவீதம் கடனீட்டுப் பத்திரங்களை 5 சதவீதம் தள்ளுபடியிலும், ஒன்று ரூ. 10 மதிப்புடைய 1,800, 9 சதவீதம் முன்னுரிமைப் பங்குகளைப் பெயரளவு மதிப்பிலும் வெளியிட்டது. இவை அனைத்திற்கும் முழுத் தொகை பெறப்பட்டது.

1. இக் கம்பெனிகளை வாங்கியவுடன் 'A' லிமிட்டெடின் நிலையை உணர்த்தும் இருப்புநிலைக் குறிப்பையும்;

2. 'A' லிமிட்டெட், 'B' லிமிட்டெட்டின் கலைப்பாளர், 'C' லிமிட்டெடின் கலைப்பாளர் ரொக்கம் பெற்றதையும், செலவழித்ததையும் காட்டும் அறிக்கைகளையும்;

3. 'B' லிமிட்டெட், 'C' லிமிட்டெட் ஆகியவற்றின் ஏடுகளில் பங்குதாரர்கள் கணக்குகளையும் தயார் செய்க.

(B.com, Agra)

(10) 'B' கம்பெனி லிமிட்டெடின் சொத்துகளும், பொறுப்புகளும் கீழ்க்கண்டவாறு இருந்தன :

சொத்துகள்

| | 31–12–1963<br>ரூ. | 31–12–1964<br>ரூ. | 31–12–1965<br>ரூ. |
|---|---|---|---|
| கட்டடமும் பொறிவகையும் | 3,80,000 | 4,00,000 | 4,00,000 |
| கடனாளிகள் | 1,10,000 | 1,20,000 | 80,000 |
| சரக்கிருப்பு | 6,30,000 | 6,20,000 | 7,00,000 |
| வாணிக நற்பெயர் | 1,40,000 | 1,40,000 | 1,20,000 |
| ரொக்கம் | 30,000 | 30,000 | 30,000 |
| | 12,90,000 | 13,10,000 | 13,30,000 |

பொறுப்புகள்

| | 31—12—1963 ரூ. | 31—12—1964 ரூ. | 31—12—1965 ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் | 10,00,000 | 10,00,000 | 10,00,000 |
| கடனீந்தோர் | 30,000 | 30,000 | 30,000 |
| காப்புகள் | 2,00,000 | 2,20,000 | 2,40,000 |
| இலாப-நட்டக் கணக்கு | 60,000 | 60,000 | 60,000 |
| | 12,90,000 | 13,10,000 | 13,30,000 |

| | 31—12—1963 ரூ. | 31—12—1964 ரூ. | 31—12—1965 ரூ. |
|---|---|---|---|
| நிகர இலாபம் (தேய்மானத்திற்கும், வரிக்கும், இயக்குநர் கட்டணத்திற்கும் ஒதுக்கிய பின்னர், காப்புகட்குப் பகிரும் முன்னர்) | 2,00,000 | 1,90,000 | 2,50,000 |

இணைப்புத் திட்டம் ஒன்றின்படி, கட்டடம், பொறிவகை, சரக்கிருப்பு முதலியவற்றைத் தனியொரு வல்லுநரால் மறு மதிப்பீடு செய்யவேண்டும். வாணிக நற்பெயரின் மதிப்பு கடந்த மூன்று ஆண்டுகளில் பயன்படுத்திய சராசரி முதல் தொகையில் 9 சதவீதம் அளவிற்கும் மிகுதியாக ஈட்டிய இலாபத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட வேண்டும்.

கீழ்க்கண்டவாறு மறு மதிப்பீடு செய்யப்பட்டது :

| | 31—12—1963 ரூ. | 31—12—1964 ரூ. | 31—12—1965 ரூ. |
|---|---|---|---|
| கட்டடமும், பொறிவகையும் | 5,95,000 | 6,18,000 | 6,20,000 |
| சரக்கிருப்பு | 6,50,000 | 6,40,000 | 7,40,000 |

(அ) மேற் சொல்லப்பட்ட கட்டடம், பொறிவகை, சரக்கிருப்பு ஆகியவற்றின் மறு மதிப்பீடுகளினால் மட்டுமே இருப்பு நிலைக் குறிப்பின் தொகைகளைச் சரிசெய்து, கடந்த மூன்று ஆண்டுகளில் ஒவ்வோராண்டும் பயன்படுத்தப்பட்ட முதல் தொகையைக் கண்டுபிடிக்க.

(ஆ) பயன்படுத்திய முதல் தொகையில் 9 சதவீதம் அளவிற்கும் அதிகமாக ஈட்டிய சராசரித் தொகையின் ஏழாண்டுக் கொள்முதல் எனும் அடிப்படையில் வாணிக நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடுக. (இலாபங்களைச் சரிக்கட்டத் தேவையில்லை என்று கொள்க.)

(இ) 1965 திசம்பர் 31-ல் இணைப்பின் பொருட்டு இரு கம்பெனிகளின் மொத்த மதிப்பினைக் காட்டுக.

(Bombay, B.com.)

(11) XYZ கம்பெனி லிமிட்டெடின் 1970 திசம்பர் 31-ற்குரிய இருப்புநிலைக் குறிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

### இருப்புநிலைக் குறிப்புகள்

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| முதல் : | | நிலமும் | |
| ஒன்று ரூ. 10 வீதம் | | கட்டடமும் | 1,00,000 |
| 20,000 பங்குகள் | 2,00,000 | பொறிவகை | 1,50,000 |
| கடனீட்டுப் | | வேலை முற்றுப் | |
| பத்திரங்கள் | 1,00,000 | பொருள் | 30,000 |
| கடனீந்தோர் | 30,000 | சரக்கிருப்பு | 60,000 |
| காப்பு நிதி | 25,000 | மனைத்துணைப் | |
| பங்காதாயச் சமன் | | பொருள் | 2,500 |
| செய் நிதி | 20,000 | கடனாளிகள் | 25,000 |
| இலாப-நட்டப் | | வங்கி | 12,500 |
| பகிர்வுக் கணக்கு | 5,100 | ரொக்கம் | 100 |
| | 3,80,100 | | 3,80,100 |

மேற்சொன்ன நாளில் இக் கம்பெனியை *ABC* கம்பெனி லிமிட்டெட் எடுத்துக்கொள்கிறது. கடனீட்டுப் பத்திரங்களை 5 சதவீதம் முனைமத்தில் தீர்ப்பதும், கடனீந்தோருக்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ளுதலும் *XYZ* கம்பெனியின் பங்கொன்றிற்கு ரூ. 7 வீதம் ரொக்கம் செலுத்துதலும் *ABC* கம்பெனியின் பங்கு (ஒன்று ரூ. 5; சந்தை விலை ரூ. 8) ஒன்று வீதம் வழங்குதலும், எடுத்துக்கொள்வதற்கான கொள்முதல் மறுபயனாகும். இதற்கான கலைப்புச் செலவு ரூ. 5,000-ஐயும் வாங்கும் கம்பெனி ஏற்றுக்கொள்ள வேண்டியது.

*A B C* கம்பெனி ஏட்டில் குறிப்பேட்டுப் பதிவுகளைத் தந்து, வாங்கும் விலையைத் தீர்மானிப்பது எவவாறு என்பதையும் காட்டுக.

(M. U. B.Com. April, 1972)

*(12)* **1963** திசம்பர் **31**-ல் ஆல்பா கம்பெனி லிமிட்டெட், பீட்டா கம்பெனி லிமிட்டெட் ஆகியவற்றின் சொத்துகளும், பொறுப்புகளும் கீழ்க்கண்டவாறிருந்தன.

**ஆல்பா கம்பெனி லிமிட்டெட்**

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : | | நிலமும் | |
| அதிகாரம் பெற்றது : | | கட்டடமும் | 1,90,000 |
| ஒன்று ரூ. 10 வீதம் | | | |
| 50,000 பங்குகள் | 5,00,000 | பொறிவகையும் | |
| | | கருவிகளும் | 1,00,000 |
| செலுத்தப்பெற்ற | | | |
| முதல் : | | சரக்கிருப்பு | 80,000 |
| ஒன்று ரூ. 10 வீதம் | | | |
| 25,000 பங்குகள் | 2,50,000 | கடனாளிகள் | 50,000 |
| கடனீட்டுப் | | | |
| பத்திரங்கள் | 1,00,000 | வங்கி | 20,000 |
| கடனீந்தோர் | 30,000 | | |
| இலாப-நட்டக் | | வாணிக நற்பெயர் | 20,000 |
| கணக்கு | 80,000 | | |
| | 4,60,000 | | 4,60,000 |

## பீட்டா கம்பெனி லிமிட்டெட்

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : | | நிலமும் | |
| அதிகாரம் பெற்றது : | | கட்டடமும் | 70,000 |
| ஒன்று ரூ. 10 மதிப் | | | |
| புடைய 20,000 | | பொறிவகை | 20,000 |
| பங்குகள் | 2,00,000 | | |
| செலுத்தப்பெற்ற | | மனைத்துணைப் | |
| முதல் : | | பொருள் | 10,000 |
| ஒன்று ரூ. 10 மதிப் | | | |
| புடைய 16,000 | | சரக்கிருப்பு | 50,000 |
| பங்குகள் | 1,60,000 | | |
| கடனீந்தோர் | 20,000 | கடனாளிகள் | 40,000 |
| பொதுக்காப்பு | 10,000 | | |
| | 1,90,000 | | 1,90,000 |

கீழ்க்கண்ட சொத்துகளை ஆல்பா கம்பெனி லிமிட்டெட் கீழ்க்கண்ட மதிப்புகளில் வாங்க உடன்பட்டது :

| | |
|---|---|
| நிலமும் கட்டடமும் | ஏட்டு மதிப்பில் |
| பொறிவகை | 10 சதவீதம் கழித்து |
| மனைத்துணைப் பொருள் | ரூ. 9,000 |
| கடனாளிகள் | 5 சதவீதம் கழித்து |
| சரக்கிருப்பு | 20 சதவீதம் குறைத்து |

வாணிக நற்பெயருக்காக ரூ. 80,000 கொடுக்கவும், கொள் முதல் மறுபயனின் ஒரு பகுதியாக 20,000 பங்குகளை ஒதுக்கவும் மீதித் தொகைக்கு ரொக்கம் செலுத்தவும் அது உடன்பட்டது. ஆல்பா கம்பெனி லிமிட்டெடின் பங்குகள் பங்கு மாற்றுச் சந்தையில் ஒன்று ரூ. 12.50 வீதம் விலை குறிக்கப்பட்டிருக்கிறது.

பீட்டா கம்பெனி லிமிட்டெட் தன்னுடைய கடனீந்தோருக்குத் தொகை செலுத்திக்கொள்ள உடன்பட்டது.

இரு கம்பெனிகளின் ஏடுகளிலும் தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தந்து, இவ்வுடன்பாடு நிறைவுபெற்ற பின்னுள்ள இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்க.

(M. U. B.Com. Special Accounts, September, 1965.)

(13) 'A' கம்பெனி லிமிட்டெடின் 1964 திசம்பர் 31-ற்கான இருப்புநிலைக் குறிப்பு கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது :

## இருப்புநிலைக் குறிப்பு

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| வெளியீட்டு முதலும், செலுத்தப்பெற்ற முதலும் : | | நிலமும் கட்டடமும் | 40,000 |
| ஒன்று ரூ. 60 மதிப்புடைய 625 பங்குகள் | 37,500 | பொறிவகை | 1,24,000 |
| கடனீட்டுப் பத்திரங்களும், கூடியுள்ள வட்டியும் | 1,10,000 | கடனாளிகள் | 40,000 |
| கடனீந்தோர் | 30,000 | தொடக்கச் செலவுகள் | 5,000 |
| பொதுக்காப்பு | 21,500 | | |
| கடன் மீட்புக் கழிவு நிதி | 20,000 | கழிவுநிதி முதலீடுகள் | 20,000 |
| இலாப-நட்டக் கணக்கு | 11,000 | ரொக்கம் | 1,000 |
| | 2,30,000 | | 2,30,000 |

'A' கம்பெனி லிமிட்டெட் கலைக்கப்பட்டு, அதன் தொழிலை 1964 திசம்பர் 31-ல் 'B' கம்பெனி லிமிட்டெட் கீழ்க்கண்ட நிபந்தனைகளின் பேரில் எடுத்துக்கொண்டது.

1. நிலம், கட்டடம், பொறிவகைகள், முதலீடுகள் ஆகியவற்றை ஏட்டு மதிப்புகளிலும், கடனாளிகளை ரூ. 35,000 மதிப்பிலும், வாணிக நற்பெயரை ரூ. 31,000 மதிப்பிலும் 'B' கம்பெனி லிமிட்டெட் எடுத்துக்கொள்கிறது.

2. கடனீந்தோருக்கான பொறுப்பினை 'B' கம்பெனி லிமிட்டெட் ஏற்றுக்கொள்கிறது.

3. 'B' கம்பெனி லிமிட்டெட் தனது ஒன்று ரூ. 60 மதிப்புடைய 1,250 பங்குகளை முழுதும் செலுத்தப்பெற்றவையாக வெளியிட்டுக் கொள்முதல் மறுபயனைத் தீர்க்கிறது; அப்பங்கின் சந்தை மதிப்பு ஒன்றுக்கு ரூ. 80 ஆகும்.

4. கடனீட்டுப் பத்திரதாரர்களைப் பொருத்தவரை, வட்டியுட்பட்ட பொறுப்பு அனைத்தையும் 'B' கம்பெனி லிமிட்டெட் ரூ. 1,20,000-ற்கான கடனீட்டுப் பத்திரங்களை வழங்கித் தீர்க்க வேண்டியது.

ரொக்கம் ரூ. 1,000 'A' கம்பெனி லிமிட்டெட் ஏற்ற செலவிற்குச் சரியாக இருந்தது. 'A' கம்பெனி லிமிட்டெடின் பங்குநர்கட்கு 'B' கம்பெனி லிமிட்டெடின் பங்குகள் வழங்கப் பட்டன.

1965 திசம்பர் 31ஆம் நாளில் 'B' கம்பெனி லிமிட்டெடுடன் ஏற்பட்ட நடவடிக்கைகளும், பங்குநர்கட்கும், கடனீட்டுப் பத்திரதாரர்கட்கும் வழங்கவேண்டியதும், நிறைவு பெற்றன.

இரு கம்பெனிகளின் குறிப்பேடுகளிலும் மேற்கண்ட திட்டத்தை நிறைவேற்றத் தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக. (Bihar, G.D.A.)

(14) பாரத் லிமிட்டெடின் வாணிக நற்பெயரையும், ரொக்கத்தையும் தவிர பிற சொத்துகளை 1955 திசம்பர் 31-ல் ரேயான்ஸ் லிமிட்டெட் வாங்க உடன்பட்டது.

பாரத் லிமிட்டெடின் மேற்கண்ட நாளிற்குரிய இருப்புநிலைக் குறிப்பு கீழ்க் கொடுக்கப்பட்டுள்ளது :

**இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : | | வாணிக நற்பெயர் | 1,00,000 |
| ஒன்று ரூ. 10 வீதம் | | நிலமும் | |
| 60,000 பங்குகள் | 6,00,000 | கட்டடமும் | 2,10,000 |
| பொதுக்காப்பு | 1,70,000 | பொறிவகை | 4,30,000 |
| இலாப-நட்டக் | | சரக்கிருப்பு | 1,68,000 |
| கணக்கு | 1,10,000 | கடனாளிகள் | 36,000 |
| 6 சதவீதம் கடனீட் | | ரொக்கம் | 56,000 |
| டுப் பத்திரங்கள் | 1,00,000 | | |
| கடனீந்தோர் | 20,000 | | |
| | 10,00,000 | | 10,00,000 |

ரேயான்ஸ் லிமிட்டெட் கொடுக்கவேண்டிய கொள்முதல் மறுபயன் கீழ்வருமாறு ஒப்புக்கொள்ளப் படுகிறது :

அ. பாரத் லிமிட்டெடில் உள்ள ரூ. 10 மதிப்பிற்கான ஒவ்வொரு பங்கிற்கும் ரூ. 2.50 வீதம் ரொக்கம் செலுத்தப் பட்டது.

ஆ. ஒன்று ரூ. 10 மதிப்புடைய முழுதும் செலுத்தப் பெற்ற ரேயான்ஸ் லிமிட்டெடின் 90,000 பங்குகளைப் பங்கொன்று ரூ. 15 மதிப்பில் வெளியிட வேண்டியது..

இ. பாரத் லிமிட்டெடின் 6 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்களை 20 சதவீதம் முனைமத்தில் தீர்க்கத் தேவையாயிருக்கும் தொகையளவிற்கு ரேயான்ஸ் கம்பெனியின் 5 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்களை முழுதும் செலுத்தப்பட்டதாக வெளியிட வேண்டியது.

பாரத் லிமிட்டெடின் கடனீட்டுப் பத்திரங்களைத் தவிர பிற பொறுப்புகளை அக் கம்பெனியே தீர்த்துக்கொள்ள வேண்டியது.

கொள்முதல் மறுபயனைக் கணக்கிடுகையில் நிலம், கட்டடத்தை ரூ. 3,50,000 ஆகவும், பொறிவகையை ரூ. 8,50,000 ஆகவும், சரக்கிருப்பை ரூ. 1,42,000 ஆகவும் ரேயான்ஸ் லிமிட்டெடின் இயக்குநர்கள் மதிப்பிட்டனர். ஐயக் கடனுக்காக 5 சதவீதம் தள்ளிவிட்டு மீதியுள்ள கடனாளிகள் தொகையை அவ்வாறே எடுத்துக் கொண்டனர்.

ரேயான்ஸ் லிமிட்டெடின் ஏடுகளில் மேற்கண்ட நடவடிக்கைகளைப் பதியத் தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

(15) ஜெனரல் மர்ச்சன்ட்ஸ் லிமிட்டெடின் சொத்துகளையும் பொறுப்புகளையும் கீழ்க்கண்ட நிபந்தனைகளின் பேரில் அசோசியேட் டிரேடர்ஸ் லிமிட்டெட் எடுத்துக் கொண்டது :

(அ) ஜெனரல் மர்ச்சன்ட்ஸ் லிமிட்டெடிலுள்ள ஒவ்வொரு 4 நேர்மைப் பங்குகட்கும், அசோசியேட் டிரேடர்ஸ் லிமிட்டெடின் ஒன்று ரூ. 10 மதிப்புடைய 3 நேர்மைப் பங்குகளை 10 சதவீதம் முனைமத்தில் வெளியிடுவது.

(ஆ) ஜெனரல் மர்ச்சன்ட்ஸ் லிமிட்டெடின் ஒவ்வொரு 7 சதவீதம் முன்னுரிமைப் பங்குகட்கும், அசோசியேட் டிரேடர்ஸ் லிமிட்டெடின் ஒன்று ரூ. 100 மதிப்புடைய 6 சதவீதம் முன்னுரிமைப் பங்குகளை வெளியிடுவது.

(இ) ஜெனரல் மர்ச்சன்ட்ஸின் 3 சதவீதம் கடனீட்டுப் பத்திரதாரர்கட்கு அசோசியேட் டிரேடர்ஸ் லிமிட்டெடின் $3\frac{1}{2}$ சதவீதம் கடனீட்டுப் பத்திரங்களை வெளியிடுவது.

(ஈ) ரூ. 10,000-ஐ ரொக்கமாகச் செலுத்துவது.

அந்நாளில், ஜெனரல் மர்ச்சன்ட்ஸ் லிமிட்டெடின் இருப்பு நிலைக் குறிப்பு கீழ்க்கண்டவாறிருந்தது :

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| **பங்குமுதல்:** | | வாணிக நற்பெயர் | 1,00,000 |
| அதிகாரம் பெற்றதும் வெளியிட்டதும் : | | நிலைச் சொத்துகள் | 45,00,000 |
| ஒன்று ரூ. 10 மதிப்புடைய 3,00,000 நேர்மைப் பங்குகள் | 30,00,000 | சரக்கிருப்பு | 4,50,000 |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 10,000, 7 சதவீதம் முன்னுரிமைப் பங்குகள் | 10,00,000 | கடனாளிகள் | 2,00,000 |
| **காப்பும், மிகுதியும்:** | | வங்கியிருப்பும் ரொக்கமும் | 1,25,000 |
| தேய்மானக்காப்பு | 4,50,000 | தொடக்கச் செலவுகள் | 15,000 |
| இலாப-நட்டக் கணக்கு | 2,50,000 | கடனீட்டுப்பத்திர வெளியீட்டுத் தள்ளுபடி | 10,000 |
| 3 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் | 5,00,000 | | |
| கடனீந்தோர் | 2,00,000 | | |
| | 54,00,000 | | 54,00,000 |

ஜெனரல் மர்ச்சன்ட்ஸ் லிமிட்டெடின் கலைப்புச் செலவு ரூ. 5,000 ஆனது.

ஜெனரல் மர்ச்சன்ட்ஸ் லிமிட்டெடின் ஏடுகளை முடித்து, அசோசியேட் டிரேடர்ஸ் ஏடுகளில் இவற்றைக் கொண்டு வருவதற்குத் தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக. நிலைச் சொத்துகள் தேய்மானம் நீக்கப்பட்ட மதிப்புகளில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன என்று கொள்க.

(I. C. A. W. A. July, 1963)

(16) 1970 திசம்பர் 31-ல் பாப்புலர் லிமிட்டெடின் தொழிலை எஃபிஷியன்ட் லிமிட்டெட் எடுத்துக்கொள்ள உடன்பட்டது. அந் நாளில் பாப்புலர் லிமிட்டெடின் இருப்புநிலைக் குறிப்பு கீழ்க்கண்டவாறு இருந்தது.

### இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| **பங்குமுதல்:** | | **நிலைச் சொத்துகள்:** | |
| அதிகாரம் பெற்றது : | | வாணிக நற்பெயர் | 1,00,000 |
| ஒன்று ரூ. 10 மதிப்புடைய 60,000 நேர்மைப் பங்குகள் | 6,00,000 | நிலமும் கட்டடமும் | 3,00,000 |
| | | பொறிவகை | 3,40,000 |
| வெளியிட்டதும், எடுத்துக்கொண்டதும், செலுத்தப் பெற்றதும் : | | **நடப்புச் சொத்துகள், கடன்கள், முன் பணம்:** | |
| ஒன்று ரூ. 10 மதிப்புடைய 60,000 நேர்மைப் பங்குகள் | 6,00,000 | நடப்புச் சொத்துகள் : | |
| **காப்பும், மிகுதியும்:** | | சரக்கிருப்பு | 1,68,000 |
| பொதுக்காப்பு | 1,70,000 | | |
| இலாப-நட்டக் கணக்கு | 1,10,000 | கடனாளிகள் | 36,000 |
| பிணைக் கடன் : | | ரொக்கம் | 6,000 |
| 6 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் | 1,00,000 | வங்கியிருப்பு | 50,000 |
| **நடப்புப் பொறுப்புகளும் ஒதுக்குக்களும்:** | | | |
| நடப்புப் பொறுப்புகள் : | | | |
| கடனீந்தோர் | 20,000 | | |
| | 10,00,000 | | 10,00,000 |

எஃபிஷியன்ட் லிமிட்டெட் கொடுக்கவேண்டிய கொள்முதல் கீழ்க்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது :

(அ) பாப்புலர் லிமிட்டெடின் பங்கு ஒன்று ரூ. 2.50 வீதம் ரொக்கம் செலுத்தவேண்டியது.

(ஆ) எஃபிஷியன்ட் லிமிட்டெடின் ஒன்று ரூ. 10 மதிப்புடைய 90,000 பங்குகளைப் பங்கு ஒன்று ரூ. 15 மதிப்பில் வெளியிட வேண்டியது.

(இ) பாப்புலர் லிமிட்டெடின் 6 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்களை 20 சதவீதம் முனைமத்தில் தீர்க்கப் போதுமான அளவிற்கு எஃபிஷியன்ட் லிமிட்டெட் தன் 8 சதவீதக் கடனீட்டுப் பத்திரங்களை 96 சதவீதத்தில் வெளியிட வேண்டியது.

கொள்முதல் மறுபயனைத் தீர்க்கும் முன்பாக எஃபிஷியன்ட் லிமிட்டெடின் இயக்குநர்கள் கட்டடம் ரூ. 6,00,000 என்றும், பொறிவகை ரூ. 6,00,000 என்றும், சரக்கிருப்பு ரூ. 1,42,000 என்றும் மதிப்பிட்டனர். கடனாளிகளில் 5 சதவீதம் வராக் கடனுக்காக ஒதுக்கு ஏற்படுத்த வேண்டும். பாப்புலர் லிமிட்டெடின் கலைப்புச் செலவு ரூ. 5,000 ஆனது.

பாப்புலர் லிமிட்டெடின் ஏடுகளில் தேவையான பேரேட்டுக் கணக்குகளையும் எஃபிஷியன்ட் லிமிட்டெடின் ஏடுகளில் தேவையான தொடக்கப் பதிவுகளையும் தருக.

கொள்முதல் மறுபயனைக் கணக்கிடும் முறையைக் காட்டுக :

(B.Com., Poona, 1971)

(17) ஆனந்த் லிமிட்டெடின் இருப்புநிலைக் குறிப்பும், பிரைட் லிமிட்டெடின் இருப்புநிலைக் குறிப்பும் 379-ம் பக்கம் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

**ஆனந்த் லிமிட்டெடின் 1970 திசம்பர் 31-க்குரிய இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| அதிகாரம் பெற்ற முதல் : ஒன்று ரூ. 20 வீதம் 50,000 பங்குகள் | 10,00,000 | நிலைச் சொத்துகள் | 6,00,000 |
| | | சரக்கிருப்பு | 3,00,000 |
| வெளியீட்டு முதல் : ஒன்று ரூ. 20 வீதம் 50,000 பங்குகள் | 10,00,000 | கடனாளிகள் | 4,00,000 |
| 5 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் | 2,00,000 | வாணிக நற்பெயர் | 2,00,000 |
| கடனீந்தோர் | 6,00,000 | இலாப-நட்டக் கணக்கு | 3,00,000 |
| | 18,00,000 | | 18,00,000 |

**பிரைட் லிமிட்டெடின் 1970 திசம்பர் 31-க்கான இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| அதிகாரம் பெற்ற முதல் : ஒன்று ரூ. 20 வீதம் 1,00,000 பங்குகள் | 20,00,000 | நிலைச் சொத்துகள் | 10,00,000 |
| | | சரக்கிருப்பு | 80,000 |
| வெளியீட்டு முதல் : ஒன்று ரூ. 20 வீதம் 70,000 பங்குகள் | 14,00,000 | கடனாளிகள் | 1,20,000 |
| கடனீந்தோர் | 4,00,000 | வங்கி | 2,00,000 |
| இலாப-நட்டக் கணக்கு | 3,00,000 | வாணிக நற்பெயர் | 7,00,000 |
| | 21,00,000 | | 21,00,000 |

கீழ்க்கண்ட நிபந்தனைகளின் பேரில் பிரைட் லிமிட்டெட் ஆனந்த் லிமிட்டெடை எடுத்துக்கொள்ள உடன்பட்டது :

(அ) ஆனந்த் லிமிட்டெடின் பங்குகள் ஒன்று ரூ. 12 வீதம் மதிப்பிடப்பட்டன. (இதில் $\frac{1}{4}$ பங்கை ரொக்கமாகவும், மீதியைப் பிரைட் லிமிட்டெடின் பங்குகளாகவும் பங்குநர்கட்குச் செலுத்தவேண்டும்.)

(ஆ) பிரைட் லிமிட்டெடின் பங்குகள் ஒன்று ரூ. 25 வீதம் மதிப்பிடப்படவேண்டும்.

(இ) ஆனந்த் லிமிட்டெடின் கடனீட்டுப் பத்திரதாரர்கள் தாம் வைத்திருக்கும் கடனீட்டுப் பத்திரங்களில் 95 சதவீதத்தைப் பிரைட் லிமிட்டெடின் 7 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்களாகப் பெற்றுக்கொண்டு கணக்கைத் தீர்த்துக்கொள்ள உடன்பட்டனர்.

(ஈ) கம்பெனி எடுத்துக்கொள்வதற்கான செலவு ரூ. 12,000-ஐப் பிரைட் லிமிட்டெட் செலுத்தவேண்டியது.

இரு கம்பெனிகளின் ஏடுகளிலும் வேண்டிய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தந்து, எடுத்துக்கொண்ட பிறகு பிரைட் லிமிட்டெடின் இருப்புநிலைக் குறிப்பைத் தயார் செய்க.

(M. U. B.Com., Special Accounts, Sept., 1971)

(18) 1962 ஜூன் 30-ல் ஆதர்பாத் லிமிட்டெடின் இருப்பு நிலைக் குறிப்புக் கீழ்க்கண்டவாறு இருந்தது :

**இருப்புநிலைக் குறிப்புகள்**

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : | | | |
| ஒன்று ரூ. 10 மதிப்புடைய 15,000 நேர்மைப் பங்குகள் | 1,50,000 | வாணிக நற்பெயர் | 20,000 |
| | | பொறிவகை | 1,50,000 |
| ஒன்று ரூ. 10 மதிப்புடைய 14,000 6 சதவீதம் குவிவு முன்னுரிமைப் பங்குகள் | 1,00,000 | சரக்கிருப்பு | 80,000 |
| | | கடனாளிகள் | 1,20,000 |
| | | வங்கி | 8,900 |
| | 2,50,000 | | |

**இருப்புநிலைக் குறிப்புகள்—(தொடர்ச்சி)**

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 5 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் | 50,000 | தொடக்கச் செலவுகள் | 5,000 |
| கடனீட்டுப்பத்திரங்கள் மீது கூடியுள்ள வட்டி | 2,500 | பங்குக் கழிவும் தரகும் | 4,000 |
| வங்கி மேல்வரைப் பற்று | 20,000 | இலாப-நட்டக் கணக்கு | 40,100 |
| கடனீந்தோர் | 91,500 | | |
| தொழிலர் இலாபப் பங்கேற்புக் கணக்கு | 14,000 | | |
| நிகழ்வடைப் பொறுப்பு : முன்னுரிமைப் பங்குப் பங்காதாய நிலுவை | 12,000 | | |
| | 4,28,000 | | 4,28,000 |

போட்டியைத் தவிர்க்கும் நோக்குடன் 1962 ஜூலை 1-ல் கீழ்க்கண்ட நிபந்தனைகளின் பேரில் தஸ்தூர் கம்பெனி லிமிட்டெட் ஆதர்பாத் லிமிட்டெடை எடுத்துக்கொண்டது.

1. தஸ்தூர் கம்பெனி லிமிட்டெட்

(அ) ரொக்கத்தைத் தவிர பிற புலனாகும் சொத்துகள் அனைத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டியது.

(ஆ) கடனீட்டுப் பத்திரதாரர்கட்கு 10 சதவீதம் முனைமத்தில் பொறுப்பினைத் தீர்க்க ஒன்று ரூ. 10 மதிப்புடைய தனது 6 சதவீதம் குவிவு முன்னுரிமைப் பங்குகளை வெளியிட வேண்டியது.

(இ) ஆதர்பாத் லிமிட்டெடின் ஒவ்வொரு இரண்டு நேர்மைப் பங்குகட்கும் ஒன்று ரூ. 10 மதிப்புடைய தனது ஒரு நேர்மைப் பங்கினையும், ரூ 4 ரொக்கமாகவும் கொடுக்கவேண்டியது.

2. தஸ்தூர் கம்பெனி லிமிட்டெடின் ஒன்று ரூ. 10 மதிப்புடைய முழுதும் செலுத்தப்பெற்ற நேர்மைப் பங்குகளைக் கடனீந்தோர் தங்கட்குச் சேரவேண்டிய தொகையில் 90 சதவீதம் அளவிற்குப் பெற்றுக்கொண்டு தங்கள் கணக்கைத் தீர்த்துக்கொள்ள வேண்டியது.

3. முன்னுரிமைப் பங்குநர்கட்குத் தஸ்தூர் கம்பெனி லிமிட்டெடின் 5 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட வேண்டியது. கம்பெனிக் கலைப்பின்போழ்து முதலுக்கும், பங்காதாயத்திற்கும் இப் பங்குகள் முன்னுரிமை பெற்றுள்ளன.

ஆதர்பாத் லிமிட்டெடின் ஏடுகளை முடிக்கத் தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளையும், தஸ்தூர் கம்பெனி லிமிட்டெடின் தொடக்கப் பதிவுகளையும் தருக.

(C. A. Final, May, 1960)

(19) 1972 ஜூன் 30-ல் *Y* கம்பெனி லிமிட்டெடை *X* கம்பெனி லிமிட்டெட் எடுத்துக்கொள்கிறது. அந் நாளுக்குரிய இருப்புநிலைக் குறிப்பின் சுருக்கங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

**X கம்பெனி லிமிட்டெட்**

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : | | கட்டடம் | 30,000 |
| ஒன்று ரூ. 1 வீதம் 1,00,000 பங்குகள், முழுதும் செலுத்தப் பெற்றவை | 1,00,000 | பொறிவகை | 24,000 |
| | | முதலீடுகள் | 16,000 |
| 6 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் | 10,000 | சரக்கிருப்பு | 35,000 |
| கடனீந்தோர் | 15,000 | | |
| காப்பு | 10,000 | கடனாளிகள் | 28,000 |
| இ. ந. க/கு | 20,000 | | |
| | | வங்கி | 22,000 |
| | 1,55,000 | | 1,55,000 |

### Y கம்பெனி லிமிட்டெட்

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : | | | |
| ஒன்று ரூ. 1 மதிப்புடைய 15,000 பங்குகள், முழுதும் செலுத்தப்பெற்றவை | 15,000 | பொறிவகை | 5,000 |
| | | சரக்கிருப்பு | 12,000 |
| | | கடனாளிகள் | 10,000 |
| | | வங்கி | 1,500 |
| கடன் | 5,000 | | |
| வாணிகக் கடனீந்தோர் | 8,000 | | |
| இ. ந. க/கு | 500 | | |
| | 28,500 | | 28,500 |

கம்பெனியை எடுத்துக்கொள்ளுமுன், X கம்பெனி தான் வைத்துள்ள முதலீடுகளை ரூ. 15,000-ற்கு விற்கிறது. இதனைத் தன் பங்குநர்கட்கு மேலூதியமாக வழங்குகிறது. அதன் அதிகாரம் பெற்ற பங்குமுதல் 10,000 கூடுதல் பங்குகளால் அதிகரிக்கப்படுகிறது.

Y கம்பெனியின் கலைப்பாளரிடமிருந்து அக் கம்பெனியின் சொத்துகள், பொறுப்புகள் அனைத்தையும் (வங்கியிருப்பைத் தவிர) X கம்பெனி எடுத்துக்கொள்கிறது. ஒன்று ரூ. 1 வீதம் 10,000 பங்குகளை, முழுதும் செலுத்தப்பெற்றவையாக X கம்பெனி பங்கு ஒன்று ரூ. 1.25 என்ற அடிப்படையில் வெளியிட்டுக் கொள்முதல் மறுபயனைத் தீர்க்கிறது. கலைப்புச் செலவிற்காக Y கம்பெனி செலவழித்தது ரூ. 300 ஆகும்.

பின்னப் பங்குகளை சேர்ப்பது, Y கம்பெனியின் கலைப்பாளர் 10,000 பங்குகளில் 200-ஐ விற்றுப் பின்னர் 80 பங்குகளை வாங்கியது, எல்லா நிலைகளிலும் பங்கு ஒன்று ரூ. 1.25 வீதமும் கணக்கிடப்பட்டது. தனிப்பட்ட பங்குநர்கள் இதற்கான செலவைக் கொடுத்துவிட்டனர்.

(அ) தான் எடுத்துக்கொள்ளும் பொறிவகையின் மதிப்பில் தேவையான சரிக்கட்டுதலைச் செய்யவேண்டுமென்று கொண்டு, X கம்பெனி லிமிட்டெடின் ஏடுகளில் மேற்கண்ட நடவடிக்கைகளைப் பதியத் தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

(ஆ) Y கம்பெனியின் ஏடுகளை முடிக்கத் தேவையான பேரேட்டுக் கணக்குகளைத் தயாரிக்க. (C. A. Final)

(20) *X* கம்பெனி லிமிட்டெடை, *Y* கம்பெனி லிமிட்டெட் எடுத்துக்கொள்கிறது. இரு கம்பெனிகளின் இருப்புநிலைக் குறிப்புகளும் (சொத்துகளை மறு மதிப்பீடு செய்த பின்னர்) கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

### *X* கம்பெனி லிமிட்டெட்

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : | | | |
| அதிகாரம் பெற்றது : | | ரொக்கம் | 7,000 |
| ஒன்று ரூ. 300 வீதம் | | | |
| 9,000 பங்குகள் | 27,00,000 | பலவகைச் | |
| | | சொத்துகள் | 33,70,000 |
| செலுத்தப்பெற்ற முதல் : | | | |
| ஒன்று ரூ. 300 வீதம் | | | |
| 9,000 பங்குகள் | | | |
| பங்கு ஒன்றுக்கு ரூ. 270 | | | |
| வரை செலுத்தப் | | | |
| பெற்றவை | 24,30,000 | | |
| கடனீந்தோர் | 1,10,000 | | |
| காப்பு நிதி | 8,07,000 | | |
| இலாப-நட்டக் கணக்கு | 30,000 | | |
| | 33,77,000 | | 33,77,000 |

### *Y* கம்பெனி லிமிட்டெட்

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : | | | |
| அதிகாரம் பெற்றது : | | பலவகைச் | |
| ஒன்று ரூ. 180 வீதம் | | சொத்துகள் | 87,15,000 |
| 40,000 பங்குகள் | 72,00,000 | ரொக்கம் | 55,000 |
| செலுத்தப்பெற்ற முதல் : | | | |
| ஒன்றுக்கு ரூ. 150 | | | |
| வரை 40,000 பங்கு | | | |
| கள் மீது செலுத்தப் | | | |
| பெற்றவை | 60,00,000 | | |
| கடனீந்தோர் | 1,30,000 | | |
| காப்பு நிதி | 25,70,000 | | |
| இலாப-நட்டக் கணக்கு | 70,000 | | |
| | 87,70,000 | | 87,70,000 |

*X* கம்பெனி லிமிட்டெடின் ஒவ்வொரு 3 பங்குகட்கும், **Y** கம்பெனி லிமிட்டெடின் 5 பங்குகள் வீதம் தரவேண்டியது. அத்துடன், முன் கொடுக்கப்பட்டுள்ள இருப்புநிலைக் குறிப்பு களின்படி, பங்குகளின் உள் மதிப்பிற்கு ஏற்றவாறு இரு கம் பெனிப் பங்குநர்களின் உரிமைகளைச் சரிக்கட்டத் தேவையான அளவு மீதித் தொகைக்கு ரொக்கமும் தரவேண்டும்.

மேற்சொன்ன கலைப்புத் திட்டத்தை (Scheme of absorption) செயல்படுத்திய பின்னுள்ள இருப்புநிலைக் குறிப்பைத் தயார் செய்க.

(G. D. A. & M. U. B.Com., Sept., 1962)

*(21)* திலீப் கம்பெனி லிமிட்டெடின் இருப்புநிலைக் குறிப்புக் கீழ்க்கண்டவாறு இருந்தது :

**1968 திசம்பர் 31-ற்குறிய இருப்புநிலைக் குறிப்பு**

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| முதல் : | | கட்டடம் | 1,70,000 |
| ஒன்று ரூ. 100 வீதம் 4,000 பங்குகள் | 4,00,000 | பொறிவகை | 4,00,000 |
| பொதுக்காப்பு | 50,000 | | |
| இலாப-நட்டக் கணக்கு | 5,600 | முதலீடுகள் | 50,600 |
| 5 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் | 2,50,000 | கடனாளிகள் | 1,40,500 |
| கடனீந்தோர் | 80,500 | சரக்கிருப்பு | 80,700 |
| திட்டமிட்ட பங்காதாயம் | 24,000 | வங்கி | 16,500 |
| வரி ஒதுக்கு | 48,200 | | |
| | 8,58,300 | | 8,58,300 |

மேற்கண்ட நாளில் பின்கண்ட நிபந்தனைகளின் பேரில் மேனக் கம்பெனி லிமிட்டெட் திலீப் கம்பெனி லிமிட்டெடை எடுத்துக்கொள்கிறது :

மேனக் கம்பெனி லிமிட்டெட்,

(1) முதலீடுகளைத் தவிர எல்லாச் சொத்துகளையும் எடுத்துக்கொள்கிறது. திலீப் கம்பெனி முதலீடுகளை ரூ. 45,500-ற்கு விற்றது.

(2) வரி ஒதுக்கைத் தவிர பிற பொறுப்புகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டது.

(3) கடனீட்டுப் பத்திரங்களை 5 சதவீதம் தள்ளுபடியில் தன்னுடைய 7 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்களை வெளியிடுவதன் மூலம் தீர்க்கவேண்டியது.

(4) திலீப் கம்பெனியின் பங்குநருக்கு ஒவ்வொரு பங்கிற்கும் ஒன்று ரூ. 60 மதிப்புடைய தன்னுடைய கம்பெனியின் 2 பங்குகளைப் பங்கு ஒன்று ரூ. 65 எனும் சந்தை விலை விகிதத்தில் வெளியிடவும் ரூ. 2 வீதம் ரொக்கஞ் செலுத்தவும் வேண்டியது.

(5) எடுத்துக்கொள்ளும் செலவு ரூ. 1,500-ஐச் செலுத்த வேண்டியது.

எடுத்துக்கொள்ளும் கம்பெனி பொறிவகை மீது 5 சதவீதம் தேய்மானம் நீக்கவேண்டியது. கடனாளிகள் மீது 3 சதவீதம் ஐயக் கடன் காப்பு ஒதுக்கவேண்டியது.

திலீப் கம்பெனி லிமிட்டெட் மேனக் கம்பெனியிடமிருந்து பெற்ற பங்குகளில் $\frac{1}{4}$ பகுதியைப் பங்கு ஒன்று ரூ. 63 வீதம் சராசரியாக விற்றது.

திலீப் கம்பெனி லிமிட்டெட் ஏடுகளில் மேற்கண்ட நடவடிக்கைகளைப் பதியத் தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தந்து, மேனக் கம்பெனி லிமிட்டெடின் ஏட்டில் தொடக்கப் பதிவுகளைத் தருக.

(C. A. Final, May 1959)

(22) சிக்கனத்தை மேற்கொண்டு தொழிலை விரிவுபடுத்தும் நோக்குடன் பிரைட் லைட் லிமிட்டெடும், சன் லைட் லிமிட்டெடும் ஒன்றிணைய ஒப்பின. இதற்காகப் பிரைட் லிமிட்டெடை, சன்லைட் லிமிட்டெட் எடுத்துக்கொண்டது. இரு கம்பெனிகளின் சொத்துகளும், பொறுப்புகளும் 387-ம் பக்கம் கண்டவாறிருந்தன.

பிரைட் ஸேட் லிமிட்டெட் :

| | |
|---|---|
| ரொக்கம் ரூ. 5,000; | முதலீடு ரூ. 10,000; |
| காப்புகள் ரூ. 10,000; | கடன்பத்திரங்கள் ரூ.60,000; |
| பொறிவகை ரூ. 70,000; | கடனுளிகள் ரூ. 45,000; |
| கடனீந்தோர் ரூ. 30,000; | தொழிலர் நட்ட ஈட்டுக் காப்பு ரூ. 10,000; |
| வாணிக நற்பெயர் ரூ. 20,000; | சரக்கிருப்பு ரூ. 10,000. |

சன் ஸேட் லிமிட்டெட் :

| | |
|---|---|
| முதல் ரூ. 40,000; | முதலீடுகள் ரூ. 10,000; |
| காப்புகள் ரூ. 25,000; | கடனீட்டுப் பத்திரங்கள் ரூ. 50,000; |
| பொறிவகை ரூ. 60,000; | கடனுளிகள் ரூ. 10,000; |
| கடனீந்தோர் ரூ. 20,000; | தொழிலர் நட்ட ஈட்டு நிதி ரூ. 5,000; |
| சரக்கிருப்பு ரூ. 5,000; | ரொக்கம் ரூ. 2,000. |

பிரைட் லிமிட்டெடின் முதல் ஒன்று ரூ. 100 மதிப்புடைய பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது; இதன் மீது ரூ. 50 வரை அழைக்கப்பட்டிருந்தது.

சன் ஸேட் லிமிட்டெடின் பங்குமுதல் ஒன்று ரூ. 100 மதிப்புடைய பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது; பங்கு ஒன்றுக்கு ரூ. 40 வரை அழைக்கப்பட்டிருந்தது.

சன் ஸேட் லிமிட்டெடின் ஒன்று ரூ. 1 மதிப்புடைய புதிய பங்குகளைப் பிரைட் ஸேட் லிமிட்டெடிற்கு வெளியிட வேண்டியது. பிரைட் ஸேட் லிமிட்டெடின் பங்குகளின் உள் மதிப்பிற்குச் சமமான சன் ஸேட் லிமிட்டெட் பங்குகளின் உள்மதிப்பைக் கணக்கிட்டுத் தேவையான எண்ணிக்கையில் இவற்றை வெளியிட வேண்டும்.

சன் ஸேட் லிமிட்டெடின் கடனுளிகளில் பிரைட் ஸேட் லிமிட்டெட் தரவேண்டியது ரூ. 5,000 அடங்கியிருக்கிறது. அதன் முதலீடுகளில் பிரைட் ஸேட் லிமிட்டெடின் ரூ. 5,000 செலுத்தப் பெற்ற மதிப்புடைய பங்குகளும் அடங்கியுள்ளன. பிரைட்

லைட் லிமிட்டெடின் சரக்கிருப்பில் சன் லைட் லிமிட்டெடிடமிருந்து வாங்கிய ரூ. 2,000 மதிப்புடைய சரக்கு அடங்கியுள்ளது. சன் லைட் லிமிட்டெட் விற்பனை விலை மீது 10 சதவீதம் இலாபம் கூட்டி விற்கிறது. சன் லைட் லிமிட்டெடின் ஏடுகளில் தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தந்து இணைப்பிற்குப் பிறகு இருப்புநிலைக் குறிப்பைத் தயாரிக்கவும்.

(C. A. Final)

**புற மறு அமைப்பு (External Reconstruction)**

*(23)* மெட்ராஸ் கம்பெனி லிமிட்டெட் என்பது 1962 திசம்பர் 31-ல் கலைக்கப்பட்டது. அந் நாளில் கீழ்க்கண்ட இருப்பு நிலை காணப்பட்டது.

**இருப்புநிலைக் குறிப்பு**

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| வெளியீட்டுமுதலும் செலுத்தப்பெற்ற முதலும் | 15,00,000 | பலவகைச் சொத்துகள் | 14,00,000 |
| கடனீந்தோர் | 4,75,000 | சரக்கிருப்பு | 2,50,000 |
| | | கடனாளிகள் | 1,70,000 |
| | | ரொக்கம் | 5,000 |
| | | இலாப-நட்டக் கணக்கு (ப) | 1,50,000 |
| | 19,75,000 | | 19,75,000 |

கலைக்கப்பட்ட கம்பெனியின் சொத்துகளை எடுத்துக் கொள்ளும் நோக்குடன் தி மெட்ராஸ் கம்பெனி (1963) லிமிட்டெட் எனும் புதிய கம்பெனி தொடங்கப்பெற்றது. இது மேற்கண்டசொத்துகளை ரூ.16,00,000-ற்கு எடுத்துக்கொண்டது. ஒன்று ரூ. 1,000 மதிப்புடைய 1,000 பங்குகளை வெளியிட்டும், மீதித் தொகைக்கு 31—3—63-ல் (அந் நாளில் கம்பெனி உரிமை மாற்றப்பட்டது) ரொக்கம் செலுத்தியும் கொள்முதல் மறுபயனைத் தீர்த்தது.

கம்பெனி கலைப்பாளர் பங்குகளில் $\frac{3}{4}$ பங்கைப் பெயரளவு மதிப்பில் விற்றார்; அவருக்கு ரூ. 6,500 செலவானது.

கலைக்கப்படும் கம்பெனியின் ஏடுகளை முடிக்கக் கீழ்க்கண்ட பேரேட்டுக் கணக்குகளைத் தயாரிக்க :

(அ) தீர்வுக் கணக்கு;

(ஆ) பங்குதாரர்கள் கணக்கு;

(இ) கடனீந்தோர் கணக்கு;

(ஈ) புதிய கம்பெனிக் கணக்கு;

(உ) புதுக் கம்பெனிப் பங்குகள் கணக்கு;

(ஊ) ரொக்கக் கணக்கு.

(M. U. B.Com., Special Accounts, Sept., 1964)

(24) சதர்ன் டிரேடர்ஸ் லிமிட்டெட் இலாபகரமாகத் தொழிலை நடத்த முடியாமையால் திருத்தியமைத்துக்கொள்ளும் நோக்குடன் நேஷனல் டிரேடிங் கம்பெனி லிமிட்டெட் எனும் புதிய கம்பெனியிடம் விற்றுக்கொள்வதற்குச் சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றியது. இத் தீர்மானம் நிறைவேற்றிய 1968 சனவரி 1-ல் இக் கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்பு கீழ்க்கண்டவாறு இருந்தது.

**இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| எடுத்துக்கொண்ட முதல் : ஒன்று ரூ. 10 மதிப்புடைய 50,000 நேர்மைப் பங்குகள் முழுதும் செலுத்தப் பெற்றவை | 5,00,000 | நிலமும் கட்டடமும் | 2,25,000 |
| | | பொறிவகை | 1,20,000 |
| | | கடனாளிகள் | 50,000 |
| | | சரக்கிருப்பு | 25,000 |
| | | வங்கி | 5,000 |
| கடனீந்தோர் | 15,000 | இலாப-நட்டக் கணக்கு | 1,00,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 10,000 | | |
| | 5,25,000 | | 5,25,000 |

அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மறு அமைப்புத் திட்டம் கீழ்க்கண்டவாறு இருந்தது :

(1) பழைய கம்பெனியின் சொத்துகள் அனைத்தையும் புதிய கம்பெனி எடுத்துக்கொள்கிறது. பொறுப்புகளை எடுத்துக் கொள்ளவில்லை.

(2) புதிய கம்பெனியின் பங்குமுதல் ரூ. 10,00,000. இது ஒன்று ரூ. 10 மதிப்புடைய 1,00,000 பங்குகளாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது.

(3) பழைய கம்பெனியின் சொத்துகளையும், தொழிலையும் ரூ. 4,00,000-ற்குப் புதிய கம்பெனி வாங்கவேண்டியது. இவ் விலையை ஒன்று ரூ. 10 மதிப்புடைய 70,000 நேர்மைப் பங்கு களைப் பங்கு ஒன்றுக்கு ரூ. 5 செலுத்தப்பட்டதாக வரவு வைக்கப் பட்டு வெளியிட வேண்டியது. மீதித் தொகைக்கு ரொக்கம் செலுத்தவேண்டியது.

(4) புதிய கம்பெனியின் உறுப்பினர்கள் தங்கட்கு ஒதுக்கப் பட்ட பங்குகள் மீது தரவேண்டிய பங்கு ஒன்றுக்கு ரூ. 5-ஐ வெளியிட்டவுடன் ரூ. 2.50-ம் மீதியை ஒதுக்கலின்போழ்தும் தரவேண்டியது.

மறு அமைப்பு செலவு ரூ. 2,500 ஆனது.

இதில் மறுப்புத் தெரிவிக்கும் பங்குநர்கள் யாருமில்லை. அழைப்புத் தொகை முழுதும் செலுத்தப்பட்டது. கொள்முதல் மறுபயனுக்காக வெளியிட்ட பங்குகளைத் தவிர வேறு புதிய பங்குகளைக் கம்பெனி வெளியிடவில்லை.

சதர்ன் லிமிட்டெடின் ஏடுகளை முடிக்கத் தேவையான குறிப் பேட்டுப் பதிவுகளைத் தந்து, நேஷனல் டிரேடிங் கம்பெனியின் தொடக்க இருப்புநிலைக் குறிப்பைத் தயாரிக்கவும்.

(M. U. B.Com., Special Accounts, April, 1969)

(25) யுனைட்டெட் டிரேடிங் கம்பெனி லிமிட்டெட், கட னீந்தோரும் பங்குதாரர்களும் ஒரு மறுஅமைப்புத் திட்டத்திற் குடன்பட, அக் கம்பெனி தானே கலைத்துக்கொள்கிறது. மறு

அமைப்புத் திட்ட நாளில் அதன் இருப்புநிலைக் குறிப்பு கீழ்வருமாறு இருந்தது :

## இருப்புநிலைக் குறிப்புகள்

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| ஒன்று ரூ. 10 மதிப்புடைய 25,000 நேர்மைப் பங்குகள் | 2,50,000 | வாணிக நற்பெயர் | 40,000 |
| 5 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் | 1,00,000 | கட்டடம் | 95,000 |
| வாணிகக் கடனீந்தோர் | 40,000 | பொறிவகை | 1,05,000 |
| ஐயக்கடன் காப்பு | 7,000 | சரக்கிருப்பு | 50,000 |
| தேய்மான நிதி | 20,000 | கடனாளிகள் | 60,000 |
| | | வங்கி | 2,000 |
| | | இலாப-நட்டக் கணக்கு | 65,000 |
| | 4,17,000 | | 4,17,000 |

கீழ்க்கண்டவாறு மறு அமைப்புத் திட்டம் இருந்தது :

(அ) ரூ. 5,00,000 பங்கு முதலுடன் புதிய கம்பெனி ஒன்றை அமைக்கவேண்டியது. இது ஒன்று ரூ. 10 மதிப்புடைய 50,000 பங்குகளாகப் பிரிக்கப்பட வேண்டியது. இக் கம்பெனி மேற்சொன்ன கம்பெனியின் சரக்கிருப்பையும், கடனாளிகளையும் ஏட்டு மதிப்பிலிருந்து 20 சதவீதம் கழித்தும், கட்டடம், பொறிவகை ஆகியவற்றை முறையே ரூ. 77,000, ரூ. 1,00,000 மதிப்புகளிலும் எடுத்துக்கொள்ள வேண்டியது.

(ஆ) கடனீட்டுப் பத்திரதாரர்கட்குப் புதிய கம்பெனியின் 6 சதவீதம் அடைமானக் கடனீட்டுப் பத்திரங்களை ரூ. 1,50,000-ற்கு வழங்கவேண்டியது.

(இ) புதிய கம்பெனியிடமிருந்து ரூ. 35,000 பெற்றுக் கொண்டு வாணிகக் கடனீந்தோர் தங்கள் கணக்குகளைத் தீர்த்துக் கொள்ளவேண்டியது.

(ஈ) ஒன்று ரூ. 10 மதிப்புடைய 25,000 பங்குகளைப் பங்கு ஒன்றுக்கு ரூ. 5 செலுத்தப்பெற்றதாகப் பங்குநர்கட்கு வழங்கவேண்டியது; பங்கு ஒன்றுக்கு ரூ. 2.50 அழைப்புத் தொகை உடனடியாகக் கோரவேண்டியது.

(உ) மறு அமைப்புச் செலவிற்கு வங்கியிருப்பைப் பயன் படுத்த வேண்டியது.

பழைய கம்பெனியின் ஏடுகளை முடிக்கத் தேவையான கணக்குகளையும், புதிய கம்பெனியின் தொடக்கப் பதிவுகளையும் தந்து இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்க.

(B.Com., Agra)

***(26)*** ***1960*** சனவரி ***31***-ல் பாரத் கம்பெனி லிமிட்டெடின் இருப்புநிலைக் குறிப்பு கீழ்க் காட்டியவாறு இருந்தது :

**இருப்புநிலைக் குறிப்பு**

| | ரூ. | ரூ. | | ரூ. |
|---|---|---|---|---|
| பங்குமுதல் : | | | வில்லங்கமற்ற சொத்து | 7,40,000 |
| அதிகாரம் பெற்றதும் வெளியிட்டதும் ஒன்று ரூ. 100 வீதம் 5,000, 6 சதவீதம் முன்னுரிமைப் பங்குகள், முழுதும் செலுத்தப்பெற்றவை | | 5,00,000 | புனைபொருள் உரிமை | 2,60,000 |
| ஒன்று ரூ. 10 வீதம் 90,000 நேர்மைப் பங்குகள், முழுதும் செலுத்தப்பெற்றவை | | 9,00,000 | சரக்கிருப்பு | 2,20,000 |
| 6 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் | 1,00,000 | | கடனாளிகள் | 1,60,000 |
| கூட்டு : கூடியுள்ள வட்டி | 25,000 | | ரொக்கம் | 10,000 |
| | | 1,25,000 | இலாப-நட்டக் கணக்கு | 2,30,000 |
| கடனீந்தோர் | | 95,000 | | |
| | | 16,20,000 | | 16,20,000 |

கீழ்க்கண்ட மறு அமைப்புத் திட்டத்தைப் பங்குநர்கள் ஏற்றுக் கொண்டனர்.

1. பாரத் கம்பெனியை எடுத்துக்கொள்ள ஹிந்துஸ்தான் கம்பெனி லிமிட்டெட் எனும் புதிய கம்பெனி அமைக்கப்பட்டது.

2. பழைய கம்பெனியின் ஒவ்வொரு 3 நேர்மைப் பங்குகட்கும் புதிய கம்பெனியின் ஒன்று ரூ. 5 மதிப்புடைய முழுதும் செலுத்தப்பெற்ற 2 பங்குகள் வீதம் செலுத்தவேண்டியது.

3. பழைய கம்பெனியின் ஒவ்வொரு 5 முன்னுரிமைப் பங்குகட்கும் புதிய கம்பெனியின் ஒன்று ரூ. 50 மதிப்புடைய முழுதும் செலுத்தப்பெற்ற 6 பங்குகளை வெளியிட வேண்டியது.

4. கடனீட்டுப் பத்திரதாரர்கட்கு முழுத் தொகையையும் புதிய கம்பெனி செலுத்தவேண்டியது.

5. கடனீந்தோர் தங்கட்குச் சேரவேண்டிய தொகையில் 70 சதவீதத்திற்குப் புதிய கம்பெனியின் ஒன்று ரூ. 5 மதிப்புடைய முழுதும் செலுத்தப்பெற்ற பங்குகளாகப் பெற்றுக்கொண்டு கணக்கை நேர் செய்துகொள்ளவேண்டியது.

6. புனைபொருள் உரிமையையும், இலாப-நட்டக் கணக்கின் பற்றிருப்பையும் நீக்கவேண்டியது.

7. குவிவு முன்னுரிமைப் பங்குகளின் ரூ. 30,000-ற்கான பங்காதாயம் நிலுவையைப் பழைய கம்பெனியின் ஒவ்வொரு 20 முன்னுரிமைப் பங்குகட்கு ஒரு புதிய பங்கு வீதம் கொடுத்துத் தீர்க்க வேண்டியது.

8. இத் திட்டத்தின் காரணமாகக் கிடைக்கக்கூடிய மீதித் தொகையை வில்லங்கமற்ற சொத்தின் மதிப்பைக் குறைக்கப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது.

பாரத் கம்பெனியின் லிமிட்டெடின் இருப்புநிலைக் குறிப்பைத் தயாரிக்கவும்.

(M. U. B.Com., Special Accounts, April, 1967)

(27) 1965 டிசம்பர் 31-ல் G கம்பெனி லிமிட்டெடின் நிலை கீழ்க்கண்டவாறிருந்தது :

| | | ரூ. | ரூ. |
|---|---|---|---|
| பங்குமுதல் : (ஒன்று ரூ. 10 வீதம் 50,000 பங்குகள்) | .. | | 5,00,000 |
| கடனீந்தோர் | .. | | 2,65,000 |
| புனைபொருளுரிமை | .. | 4,30,000 | |
| கடனாளிகள் | .. | 45,000 | |
| சரக்கிருப்பு | .. | 1,00,000 | |
| தொடக்கச் செலவுகள் | .. | 18,000 | |
| இலாப-நட்டக் கணக்கு | .. | 1,20,000 | |
| வங்கி | .. | 2,000 | |
| | | 7,65,000 | 7,65,000 |

பொறுப்புகளைத் தீர்க்கப் போதியளவு நிதி திரட்டும் முயற்சியும், கம்பெனியை நந் நிலையில் வைக்கும் முயற்சியும் பயனளிக்காது போகவே, அதனைத் திருத்திப் புனரமைப்பு செய்ய முடிவு செய்யப்பட்டது. இதற்கான கீழ்க்கண்ட திட்டத்தைக் கடனீந்தோர், பங்குநர் முன் வைத்து அவர்களால் அது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

(அ) இக் கம்பெனி தானே கலைக்கப்பட வேண்டியது. பெயரளவு பங்குமுதல் ரூ. 10,00,000 மதிப்புடைய நியூ G கம்பெனி லிமிட்டெட் எனும் புதிய கம்பெனியைத் தோற்றுவித்து இக் கம்பெனியை எடுத்துக்கொள்ளச் செய்வது.

(ஆ) புனை பொருளுரிமையைத் தவிர பிற சொத்துகள் அனைத்தையும் ஏட்டு மதிப்பிலேயே எடுத்துக்கொள்ள வேண்டியது. புனை பொருளுரிமை தேவையான முறையில் சரிக்கட்டப்பட வேண்டியது.

(இ) கீழ்க்கண்ட முறையில் கடனீந்தோர்க்கான பொறுப்பைப் புதிய கம்பெனி தீர்க்கவேண்டியது :

1. முன்னுரிமைக் கடனீந்தோர் (Preferential Creditors) ரூ. 5,000 முழுத் தொகையும் செலுத்தப்படவேண்டும்.

2. பிணையம் ஏதுமற்றக் கடனீந்தோர் (ரூ. 1,34,000) ரூபாய்க்கு 50 காசுகள் வீதம் கொடுத்துப் பொறுப்பினைத் தீர்க்க வேண்டியது.

3. ரூ. 1,26,000-ற்கான பிணையற்ற கடனீந்தோருக்கு ஒன்று ரூ. 100 மதிப்புடைய 6 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்களை முழுதும் செலுத்தப்பெற்றவையாக 10 சதவீதம் மேலூதியத்தில் (Bonus of 10%) வழங்கிப் பொறுப்பினைத் தீர்க்கவேண்டியது.

(ஈ) பழைய கம்பெனியின் பங்குநர்கட்கு ஒன்று ரூ. 10 மதிப்புடைய 50,000 பங்குகளைப் பங்கு ஒன்றுக்கு ரூ. 5 செலுத்தப்பட்டதாக 10 சதவீதம் முனைமத்தில் வெளியிட வேண்டியது. விண்ணப்பத்தின்போழ்து ரூ. 2-ம், ஒதுக்கீட்டின் போழ்து மீதித் தொகையும் செலுத்தவேண்டியது.

(உ) பழைய கம்பெனியின் கலைப்புச் செலவு ரூ. 2,500 ஆனது. இதனைப் புதிய கம்பெனி கொள்முதல் மறுபயனின் ஒரு பகுதியாகச் செலுத்தவேண்டியது.

பழைய கம்பெனியின் ஏடுகளை முடிக்கத் தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளையும், புதிய கம்பெனியின் கணக்குகளைத் தொடங்கத் தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளையும் தந்து, பின்னதின் இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்க.

பங்குகள், கடனீட்டுப் பத்திரங்கள் ஆகியவற்றின் மீது முழு ரொக்கமும் பெறப்பட்டது என்று கொள்க.

(M. U. B.Com., Special Accounts, Sept., 1966)

(28) ஒரு கம்பெனியின் 1961 திசம்பர் 31-ற்கான இருப்பு நிலைக் குறிப்பு கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

## இருப்புநிலைக் குறிப்பு

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| வெளியீட்டு முதலும், எடுத்துக்கொண்ட முதலும் : | | வாணிக நற்பெயர் | 50,000 |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 2,000 நேர்மைப் பங்குகள் | 2,00,000 | பொறிவகை | 1,60,500 |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 1,000 — 6 சதவீதம் குவிவு முன்னுரிமைப் பங்குகள் | 1,00,000 | சரக்கிருப்பு | 2,52,800 |
| | | கடனாளிகள் | 1,56,700 |
| | | வங்கியில் ரொக்கம் | 10,400 |

## இருப்புநிலைக் குறிப்பு—(தொடர்ச்சி)

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பொதுக்காப்பு | 20,000 | விளம்பர இடை நிலைக் கணக்கு | 16,000 |
| இலாப-நட்டக் கணக்கு | 5,200 | | |
| 5 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் | 2,00,000 | கடனீட்டுப் பத்திர தள்ளுபடி | 15,000 |
| வங்கி மேல்வரைப் பற்று | 50,600 | | |
| கடனீந்தோர் | 85,600 | | |
| குறிப்பு : சலுகைப் பங்காதாய நிலுவை ரூ. 6,000 | | | |
| | 6,61,400 | | 6,61,400 |

ஓர் இணைப்புத் திட்டத்தின்படி பழைய கம்பெனியைக் கலைத்துவிட்டு அதன் தொழிலை வாங்கப் புதிய கம்பெனி அமைக்கப்பட வேண்டியது.

ரொக்கம் ரூ. 7,000-மும், கடனாளிகள் முழுவதையும் தவிர பிற சொத்துகள் அனைத்தையும் புதிய கம்பெனி வாங்கவேண்டியது. பொறுப்புகள் எதையும் அது எடுத்துக்கொள்ளவில்லை. ஆயினும், பழைய கம்பெனியின் பொருட்டுக் கடனாளிகளிடம் வசூலித்துக் கடனீந்தோருக்குச் செலுத்த அது ஒப்புக்கொண்டது. இத் திட்டத்தின்படி பிற முக்கியமான நிபந்தனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(அ) பழைய கம்பெனியில் வைத்திருந்த ஒவ்வொரு நான்கு முன்னுரிமைப் பங்குகட்கும், புதிய கம்பெனியில் ஒன்று ரூ. 100 மதிப்புடைய ஐந்து முன்னுரிமைப் பங்குகள் வீதம் பழைய கம்பெனியின் முன்னுரிமைப் பங்குநருக்கு வெளியிட வேண்டியது. பழைய கம்பெனியில் வைத்திருந்த ஒவ்வோர் ஐந்து நேர்மைப் பங்குகட்கும் ஒன்று ரூ. 100 மதிப்புடைய புதிய கம்பெனியின் ஆறு நேர்மைப் பங்குகளைப் பங்கு ஒன்றுக்கு ரூ. 90 வரை செலுத்தப்பெற்றதாக வரவு வைக்கப்பட்டுப் பழைய கம்பெனியின் நேர்மைப் பங்குநர்கட்கு வெளியிட வேண்டியது.

(ஆ) கடனீட்டுப் பத்திரதாரர்கட்கு 10 சதவீதம் முனை மத்தில் தீர்க்குமளவு புதிய கம்பெனியின் 4 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்களைத் தேவையான அளவிற்கு வெளியிட வேண்டியது.

(இ) கலைப்புச் செலவினைப் புதிய கம்பெனி ஏற்றுக்கொள்ள வேண்டியது. அச் செலவு ரூ. 2,000 ஆனது.

(ஈ) பழைய கம்பெனியின் பொருட்டு வசூலாகும் தொகையின் மீது 1 சதவீதம் கழிவுத் தொகை புதிய கம்பெனிக்குச் சேரவேண்டியது.

கலைப்பின்போழ்து முதல் தொகைக்கு முன்னராகப் பழைய கம்பெனியின் முன்னுரிமைப் பங்காதாய நிலுவை தீர்க்கப்பட வேண்டும். கடனாளிகளில் ரூ. 10,200 வசூலாகவில்லை. வங்கிக் கடன் முழுதும் செலுத்தப்பெற்றது. கடனீந்தோர் 3 சதவீதம் தள்ளுபடியில் செலுத்தப்பெற்றனர்.

1. பழைய கம்பெனியின் ஏடுகளை முடிக்கத் தேவையான பேரேட்டுக் கணக்குகளையும்,

2. புதிய கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்க.

(C. A. Final, May 1961)

(29) காமா கம்பெனி லிமிட்டெட் என்பது சொத்தாட்சி அதிகாரி (Receiver) கையிலுள்ளது. 1962 திசம்பர் 31-ற்குரிய இருப்புநிலைக் குறிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

**இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|---|
| அதிகாரம் பெற்ற பங்குமுதல் ஒன்று ரூ. 100 மதிப்புடைய 20,000 நேர்மைப் பங்குகள் .. | | 20,00,000 | நிலைச் சொத்துகள் (தேய்மானம் நீக்கப்பெற்ற பின்னர்) .. | 20,00,000 |
| வெளியிட்ட, எடுத்துக்கொண்ட, அழைக்கப்பெற்ற முதல் : ஒன்று ரூ. 100 மதிப்புடைய 5,000 நேர்மைப் பங்குகள் முழுதும் அழைக்கப்பெற்றவை .. | | | ஏட்டுக் கடன்கள் .. | 7,00,000 |
| | | | சரக்கிருப்பு .. | 11,00,000 |
| | | | புனைபொருள் உரிமை .. | 1,00,000 |
| .. | 5,00,000 | | தொடக்கச் செலவுகள் .. | 2,00,000 |
| கழி : அழைப்புநிலுவை .. | 1,000 | | வாணிக நற்பெயர் .. | 4,00,000 |
| | 4,99,000 | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 5,000—9 சதவீதம் முன்னுரிமைப் பங்குகள் .. | 5,00,000 | | ரொக்கம் .. | | 10,000 |
| | | 9,99,000 | இலாப-நட்டக் கணக்கு : இருப்பு கீ/கொ .. | 5,90,000 | |
| நிலச் சொத்துகள் ஈட்டின் பேரில் உள்ள வங்கிக் கடன் .. | | 15,00,000 | கழி : நடப்பு ஆண்டு இலாபம் .. | 1,00,000 | |
| 10 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் (ஏட்டுக் கடன்களையும், சரக்கிருப்பையும் ஈடாகக் கொண்டது) .. | | 9,00,000 | | | 4,90,000 |
| மேற்சொன்னதின் மீது கூடியுள்ள வட்டி .. | | 2,16,000 | | | |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு .. | | 1,00,000 | | | |
| வங்கி மேல்வரைப் பற்று (ஈடற்றது) .. | | 1,00,000 | | | |
| வாணிகக் கடனீந்தோர் .. | | 11,85,000 | | | |
| | | 50,00,000 | | | 50,00,000 |

முன்னுரிமைப் பங்காதாயம் 3 ஆண்டுகட்கு நிலுவையிலுள்ளது. கம்பெனி திருத்தியமைக்கப்படவேண்டும். இதற்கான நல்லதொரு திட்டம் வகுக்கப்பட்டால், புதிய பங்குமுதல் கிடைக்குமென்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தங்கட்குச் சேரவேண்டிய வட்டி நிலுவை முழுதும் செலுத்தப்படுமாயின், கடனீட்டுப் பத்திரதாரர்கள் எந்த ஒரு முதல் குறைப்புத் திட்டத்திற்கும் ஒப்புக்கொள்வர்.

தற்போதும் எதிர்காலத்திலும், பயன்படுத்தப்படும் முதல் தொகை மீது போதுமான வருவாய் வீதம் பெருமளவிற்குக் கம்பெனி இலாபம் ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கம்பெனிக்குத் தேவையான நடைமுறை முதல் ரூ. 4,00,000 என்று மதிப்பிடப்படுகிறது. ஏட்டுக் கடன் மீது ரூ. 50,000-ற்குக் காப்பு ஏற்படுத்தப்பட வேண்டும்.

முன்னுரிமைப் பங்குநர்கள் பங்குமுதலுக்குச் சலுகை அளிக்கப்பட்டிருக்கின்றனர்.

இத் திட்டத்தின் காரணமாகப் பாதிக்கப்படும் அனைவருக்கும் உகந்த முறையில் ஒரு வெளித் திட்டத்தை (External Scheme) வகுத்துக் கம்பெனியை எடுத்துக்கொள்ளத் தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக. அத்துடன் இதில் பின்பற்றப்படும் அடிப்படைக் கருத்துகளையும் விளக்குக.

(C. A. Final, May, 1963)

(30) *A B C* இண்டஸ்ட்ரீஸ் லிமிட்டெடிற்குப் புற அமைப்புத் திட்டம் ஒன்றை வகுத்து, இத் திட்டம் நிறைவேற்றப்பட்டவுடன் அக் கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்பைத் தருக. கம்பெனியின் இருப்புநிலைக் குறிப்பு கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது :

**1966 திசம்பர் 31-ற்கான இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | | சொத்துகள் | | |
|---|---|---|---|---|
| | ரூ. | | | ரூ. |
| பங்குமுதல் : | | | | |
| அதிகாரம் பெற்றதும், | | நிலைச் சொத்துகள் : | | |
| வெளியிட்டதும் : | | வாணிக நற்பெயர் .. | 10,000 | |
| ஒன்று ரூ. 200 மதிப்புடைய | | பொறிவகை | | |
| 500 நேர்மைப் பங்குகள் .. | 1,00,000 | வாங்கிய விலையில் .. | 1,50,000 | |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய | | | | |
| 300 முன்னுரிமைப் பங்குகள் .. | 30,000 | கட்டடம், வாங்கிய | | |
| | | விலையில் .. | 50,000 | |
| | 1,30,000 | | | 2,10,000 |
| எடுத்துக்கொண்டது : | | | | |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய | | நடப்புச் சொத்துகள் : | | |
| 500 நேர்மைப் பங்குகள், | | சரக்கிருப்பு .. | 40,000 | |
| பங்கு ஒன்றுக்கு ரூ. 150 வீதம் | | ஏட்டுக் கடன் .. | 4,000 | |
| அழைக்கப்பெற்றது, அழைப்பு | | வங்கி .. | 1,000 | |
| நிலுவை நீங்கலாக .. | 70,000 | | | 45,000 |

## 1966 திசம்பர் 31-ற்கான இருப்புநிலைக் குறிப்பு—(தொடர்ச்சி)

| பொறுப்புகள் | | சொத்துகள் | | |
|---|---|---|---|---|
| 300 முன்னுரிமைப் பங்குகள் முழுதும் அழைக்கப்பெற்றவை (அழைப்புநிலுவை நீங்கலாக) .. | 27,000 | பல்வகைச் செலவினம் : தொடக்கச் செலவுகள் | | 5,000 |
| | 97,000 | இலாப-நட்டக் கணக்கு நட்டம் கீ/கொ .. | 45,000 | |
| வங்கிக் கடன் (நிலைச் சொத்துகளின் ஈட்டின்பேரில்) .. | 80,000 | கழி : நடப்புஆண்டு இலாபம் .. | 5,000 | 40,000 |
| இயக்குநர்களிடமிருந்து பெற்ற பிணையமற்றக் கடன், 12 சத வீதத்தில் .. | 30,000 | | | |
| வாணிகக் கடனீந்தோர் .. | 93,000 | | | |
| | 3,00,000 | | | 3,00,000 |

**பிற தகவல்கள்**

1. பொறிவகை 1—1—1965-ல் வாங்கப்பட்டது. அதன் மீது தேய்மானம் இதுவரை ஒதுக்கப்படவில்லை.

2. கம்பெனி நந் நிலைக்கு வந்துகொண்டிருக்கிறது. இனி, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 40,000 ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

3. வாணிகக் கடனீந்தோருக்குத் தேவையான வட்டி கொடுத்துப் புதிய கம்பெனியில் பங்கேற்க அனுமதியும் தந்தால், காத்திருக்கத் தயாராக உள்ளனர்.

4. இயக்குநர்கள் புதிய கம்பெனியில் மீண்டும் வர விரும்புகின்றனர்.

5. ரூ. 20,000 உடனடியாகத் திருப்பித் தரப்படுமாயின், வங்கி புதிய கம்பெனிக்குத் தனது கடனைத் தொடர்ந்து வழங்கும்.

6. கம்பெனிக்கு நடைமுறை முதலாக ரூ. 80,000 வேண்டியிருக்கும்; மறு அமைப்புச் செலவு ரூ. 4,000 ஆகலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

(C. A. Final, May, 1964)

# 14. இரட்டைக் கணக்குமுறை

## (Double Accounts System)

இங்கிலாந்தில் பொதுப்பயன் நிறுவனங்கட்காக இரட்டைக் கணக்கு முறை என்பது முதலாவதாக வகுக்கப்பட்டது. மின் வழங்குதுறை, நீர், வளி (gas) வழங்கு நிறுவனங்கள் போன்றவை மக்களின் பொதுநலன் கருதி இயங்குபவை. இத்தகைய கம்பெனிகள் மிகப் பெரும் பங்குமுதலைத் திரட்டி, நிலைச் சொத்துகளில் மிகப் பெரும் அளவில் முதலீடு செய்கின்றன. எனவே, திரட்டப்படும் பெரும் தொகை எவ்வாறு நிலைச் சொத்துகளில் முதலீடு செய்யப்பட்டிருக்கிறதென்பதைத் தெளிவாகக் காட்டும் நோக்குடன் இரட்டைக் கணக்கு முறையில் இறுதிக் கணக்குகளை அவை தயாரிக்கவேண்டுமென்று கோரப்படுகின்றன.

இரட்டைக் கணக்கு முறை என்பதை இரட்டைப் பதிவு முறை என்று கருதக்கூடாது. கணக்கேடுகளை வைத்திருக்க வேண்டிய அடிப்படைக் கோட்பாடுகளை உணர்த்துவது இரட்டைப் பதிவு முறையாகும். இறுதிக் கணக்குகளைத் தயாரிப்பதற்கு முன்வரை இரட்டைக் கணக்கு முறையாயினும் (Double Accounts System), ஒற்றைக் கணக்கு முறையாயினும் (Single Account System) கணக்கேடுகளைப் பதிவதில் பின்பற்றப்படும் கோட்பாடுகள் ஒன்றேயாகும். ஆனால், இறுதிக் கணக்குகளைத் தயாரித்துத் தருவதில்தான் இவ்விரு முறைகளும் வேறுபடுகின்றன. காரணம், ஒற்றைக் கணக்கு முறையில் இருப்புநிலைக் குறிப்பு ஒரே பகுதியாக உள்ளது. அதன் நோக்கம் குறிப்பிட்ட நாளில் ஒரு தொழில், வாணிக நிறுவனத்தின் குறிப்பிட்ட நிதிநிலையைப் படம்பிடித்துக் காட்டுவதாகும். ஆனால்' இரட்டைக்கணக்கு முறையில் தயாரிக்கப் படும் இருப்புநிலைக் குறிப்பின் நோக்கம் மொத்தம் திரட்டிய முதல் தொகையையும், அம் முதல் தொகை பலவகை நிலைச் சொத்து களில் எவ்வாறு முதலீடு செய்யப் பட்டிருக்கிறதென்பதையும்

உணர்த்துவதாகும். இருப்புநிலைக் குறிப்பு இரண்டு பகுதி களாகப் பிரிக்கப்படுகின்றன. ஒரு பகுதி, மேற்சொன்ன நிலையை உணர்த்துகின்றது. அதன் அடுத்த பகுதி வழக்கமாகத் தயாரிக்கப் படும் இருப்புநிலைக் குறிப்புப்போன்று அமைகிறது. எனவேதான், இத்தகைய நிறுவனங்கள் இம் முறையில் தயாரிக்கும் இறுதிக் கணக்குகளை இரட்டைக் கணக்கின் அடிப்படையில் உள்ளன என்றும், பிற வாணிக, தொழில் நிறுவனங்கள் தயாரிக்கும் இறுதிக் கணக்குகள் ஒற்றைக் கணக்கு முறையில் இருக்கின்றன என்றும் கூறுகிறோம்.

Difference Double accounts and Single Entry.

## இரட்டைக் கணக்கு முறைக்கும் ஒற்றைக் கணக்கு முறைக்கு முள்ள வேறுபாடுகள்

(1) ஒற்றைக் கணக்கு முறையில் ஒரே இருப்புநிலைக் குறிப்பு தான் தயாரிக்கப்படுகிறது. ஆனால், இரட்டைக் கணக்கு முறையில் இருப்புநிலைக் குறிப்பு இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப் படுகிறது. முதலாவது பகுதி முதல் பெறுதல் – செலுத்தல் கணக்கு (Receipts and Expenditure on Capital Account) என்று அழைக்கப்படுகிறது. இக் கணக்கின் இடப் பக்கத்தில் முதலினச் செலவினங்கள் (Capital Expenditure) கொடுக்கப்பட்டிருக் கின்றன. அதாவது, நிலைச் சொத்துகள் வாங்கிய விவரங்கள் இதில் தரப்படுகின்றன. ஒவ்வொரு பகுதியிலும் 3 பத்திகள் உள்ளன. முதல் பத்தியில் கடந்த ஆண்டுவரை நிலைச் சொத்து களின் மீது செய்த செலவும், இரண்டாவது பத்தியில் நடப்பு ஆண்டில் செய்த செலவும், மூன்றாவது பத்தியில் முதல் இரு பத்திகளின் கூட்டுத் தொகையும் கொடுக்கப்படுகின்றன. இம் மூன்றும் பத்தி இருப்புநிலைக் குறிப்பு நாள்வரை மொத்தம் செய்த செலவை உணர்த்துகிறது.

இதன் வலப்பக்கத்தில் முதல் கணக்கின் மீது பெற்ற தொகை பற்றிய விவரங்கள் தரப்படுகின்றன. பங்குமுதல் மீது பெற்ற தொகை மட்டுமின்றிக் கடனீட்டுப் பத்திரங்களை வெளி யிடுவதன் மூலமாகத் திரட்டிய தொகையும், பிற நீண்டகாலக் கடன்களும், பங்கு முனைமத் தொகையும், முன்கூட்டிப் பெற்ற பங்கழைப்புத் தொகையும் இதில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இடப் பகுதி போன்றே வலப் பகுதியும் மூன்று பத்திகளை உடைய தாக இருக்கும். கடந்த ஆண்டுவரை ஒவ்வொரு இனத்தின் மீதும் பெற்ற தொகை முதல் பத்தியில் கொடுக்கப்பட்டிருக் கிறது. நடப்பு ஆண்டில் இவற்றின் மீது பெறப்பட்ட தொகை இரண்டாவது பத்தியில் கொடுக்கப்படுகிறது. இவ்விரு பத்தி களின் மொத்தத் தொகை மூன்றாவது பத்தியில் கொடுக்கப்படு

கிறது. எனவே, இருப்புநிலைக் குறிப்பு நாள்வரை ஒவ்வொரு வகையின் கீழும் மொத்தம் இதுவரை பெற்ற தொகையை மூன்றுவது பத்தி உணர்த்துகிறது.

இக் கணக்கின் இருப்பு, பொது இருப்புநிலைக் குறிப்பிற்கு (General Balance Sheet) எடுத்துச் செல்லப்படுகிறது. பொது இருப்பு நிலைக் குறிப்பு என்பது இருப்புநிலைக் குறிப்பின் இரண்டாவது பகுதியாகும். இதில் நடப்புச் சொத்துகளும், நடப்புப் பொறுப்புகளும் வழக்கம்போன்றே காணப்படுகின்றன. மின் வழங்கு கம்பெனிகளைப் பொருத்தவரை பொது இருப்புநிலைக் குறிப்பில் முதல் பெறுதல் – செலுத்தல் கணக்குக் காட்டும் இருப்பைக் கொண்டுவருவதற்கு மாறாக, அக் கணக்கின் பற்றுப் பகுதியின் மொத்தத் தொகையைப் பொது இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பகுதியிலும், அக் கணக்கின் வரவுப் பகுதியின் மொத்தத் தொகை பொது இருப்புநிலைக் குறிப்பின் பொறுப்புகள் பகுதியிலும் காட்டப்படுகின்றன.

(2) ஒற்றைக் கணக்கு முறையில், இலாப-நட்டக் கணக்கு அல்லது வரவு செலவுக் கணக்கு தயாரிக்கப்படுகிறது. இக்கணக்கு இரட்டைக் கணக்கு முறையில் வருவாய்க் கணக்கு (Revenue Account) என்று அழைக்கப்படுகிறது. குறிப்பிட்ட காலத்தில் ஏற்பட்ட இலாபம் அல்லது நட்டத்தை இக் கணக்கு உணர்த்துகிறது.

(3) ஒற்றைக் கணக்கு முறையில் இலாப-நட்டப் பகிர்வுக் கணக்கைத் தயாரிப்பது போன்றே இங்கும் பகிர்வுக் கணக்கு தயாரிக்கப்படுகிறது. இரட்டைக் கணக்கு முறையில் 'நிகர வருவாய்க் கணக்கு' (Net Revenue Account) என்றழைக்கப்படுகிறது.

(4) ஒற்றைக் கணக்கு முறையில் தேய்மானம் பொதுவாகக் குறிப்பிட்ட சொத்திலின்றும் கழித்துக் காட்டப்படுகிறது. அல்லது தேய்மான ஒதுக்குக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. இதனால், தேய்மானம் நீக்கப்பெற்ற மதிப்பில் சொத்துகள் காண்பிக்கப்படுகின்றன. அல்லது தொடக்க விலையில் அவை காண்பிக்கப்பட்டு, அதன்மீது நீக்கவேண்டிய தேய்மானத்திற்கான ஒதுக்குக் கணக்கு, பொறுப்புகள் பகுதியில் காட்டப்படும். ஆனால், இரட்டைக் கணக்கு முறையில் தேய்மானம் எப்பொழுதுமே சொத்துகளில் வரவு வைக்கப்படுவதில்லை. அதாவது, சொத்துகளினின்றும் தேய்மானம் கழித்துக் காட்டப்படுவதேயில்லை.

தேய்மானத் தொகை 'தேய்மானக் காப்புக்' கணக்கில் மட்டும் தான் வரவு வைக்கப்படும். எனவே, சொத்துகள் தொடக்க விலையிலேயே இருப்புநிலைக் குறிப்பில் காட்டப்பட்டுவரும்.

(5) ஒற்றைக் கணக்கு முறையில் தேய்மானம் கணக்கிடுவதில் பல்வேறு முறைகள் பின்பற்றப்படுகின்றன. எடுத்துக் காட்டாக, நேர்வரிமுறை (Straight Line Method), குறைந்து செல் இருப்பு முறை (Diminishing Balance Method), மறு மதிப்பீட்டு முறை, கழிவு நிதி முறை (Sinking Fund Method), ஆண்டுத் தொகைமுறை (Annuity Method) போன்று பல முறைகள் உள்ளன. ஆனால், இரட்டைக் கணக்கு முறையைப் பொருத்தவரை தேய்மானம் எப்பொழுதும் சொத்தின் தொடக்க விலை (original cost) மீதுதான் கணக்கிடப்படுகிறது.

(6) ஒற்றைக் கணக்கு முறையில் பங்கு முதலுக்கும், கடனுக்கும் உள்ள வேறுபாடு எப்பொழுதும் தெளிவாகக் காட்டப் படுகிறது. கடன் அல்லது கடனீட்டுப் பத்திர வட்டி ஒரு செலவினமாகக் கருதப்படுவதால், எப்பொழுதும் இலாப-நட்டக் கணக்கில் பற்று வைக்கப்படுகிறது. பங்குமுதல் மீது வழங்கப்படும் பங்காதாயம் இலாபத்தினைப் பகிர்ந்து தரப்படுவதாகக் கொள்ளப்பட்டு, இலாப-நட்டப் பகிர்வுக் கணக்கில் பற்று வைக்கப்படுகிறது. ஆனால், இரட்டைக் கணக்கு முறையில் வட்டி பெறுவதும், செலுத்துவதும் இலாப-நட்டப் பகிர்வுக் கணக்குப் போன்றிருக்கும் நிகர வருவாய்க் கணக்கில்தான் இடம் பெறுகின்றன. இரயில்வே கம்பெனிகளைப் பொருத்தவரை, தண்டவாளங்கள் அமைக்கப்பட்டுள்ள நிலத்திற்காகக் கொடுக்கப் படும் வாடகைகூட நிகர வருவாய்க் கணக்கில்தான் காட்டப் படுகிறது. இதனால், கடன், கடனீட்டுப் பத்திர வட்டி, பங்காதாயம் முதலிய அனைத்துமே இலாபப் பகிர்வாகக் கருதப் படுகின்றன என்பது தெளிவாகும்.

(7) ஒற்றைக் கணக்கு முறையில் சொத்து புதுப்பிக்கப் படும்போது, பழைய சொத்துக் கணக்கு அறவே நீக்கப்படுகிறது. ஆனால், இரட்டைக் கணக்கு முறையில் சொத்தின் தொடக்க விலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதில்லை. மொத்தம் ஆகும் செலவிலிருந்து பழைய சொத்தினை இப்பொழுது புதுப்பித்தால் ஆகும் செலவினை மதிப்பிட்டு, அத் தொகையை முன்னதிலிருந்து கழிக்கவேண்டும். இத் தொகை மட்டுமே முதலினச் செலவினமாகக் கருதப்பட்டு, புதிய சொத்துக் கணக்கில் பற்று வைக்கப்படுகிறது. இதுபற்றிப் பின்னர் விளக்குவோம்.

**எடுத்துக்காட்டு 129**

ஒரு வளி வழங்கு கம்பெனி (Gas company) ரூ. 10,00,000 செலவிட்டுத் தனது தொழில் நிலையத்தின் ஒரு பகுதியைப் புதுப்பிக்கிறது. இதனை முதன் முதலில் கட்டிமுடிக்க ரூ. 4,00,000 செலவழிந்திருந்தது. அதே அளவில் இப்பொழுது மறு அமர்த் திடவேண்டின் (replace), ரூ. 6,50,000 செலவாகுமென்று மதிப்பிடப்படுகிறது. இவ் விவரங்களிலிருந்து வருவாய்க் கணக்கிற்கு எடுத்துச் செல்லவேண்டிய தொகை எவ்வளவு, முதலினச் செலவாகக் கருதவேண்டிய தொகை எவ்வளவு என்பதைக் காட்டுக.

**விடை :**

| | ரூ. |
|---|---|
| மொத்தம் செலவழித்தது | 10,00,000 |
| **கழி** : | |
| பழைய சொத்தின் அளவிற்கு மறு அமைத்தலுக்கு ஆகும் செலவு மதிப்பீடு | 6,50,000 |
| முதலினச் செலவு (capital expenditure) | 3,50,000 |

பழைய சொத்தினை நீக்கிவிட்டு, அதற்கு மாருக வேருெரு சொத்தினை வாங்கும்போழ்து நீக்கவேண்டிய தொகை பழைய சொத்தின் தொடக்க விலையல்ல. (அது வாங்கப்பட்ட விலையல்ல.) அதை இப்பொழுது வாங்கவேண்டின், கொடுக்கவேண்டிய விலையே அகற்றப்படும் சொத்தின் விலையாகும் என்ற கொள்கையின் அடிப்படையில், இக் கணக்குகளில் முதலினச் செலவிற்கும் வருவாய்ச் செலவிற்கும் (நடைமுறை செலவிற்கும்) தொகை பிரிக்கப்படுகிறது. மேற்கண்ட எடுத்துக்காட்டில், இப்பொழுது மறு அமர்த்தப்படும் தொழில் நிலயத்தை அமைக்க முதலில் ரூ. 4,00,000 தான் செலவானது. அதனை இப்பொழுது மாற்றியமைக்க ரூ. 10,00,000 செலவாகிறது. ஆனால், மாற்றியமைக்கப்படும் இத் தொழிலின் அளவிலோ அல்லது அது பயன் தரும் முறையிலோ இப்பொழுது மாற்றம் ஏற்பட்டு இருக்கின்ற காரணத்தினால், கூடுதல் செலவாகிறது. தொழில்அளவில் ஏற்படுத்தியுள்ள மாற்றத்திற்காக அல்லது அத்தொழில் பயன்தருஅளவில் ஏற்பட்டுள்ள மாற்றத்திற்காகச் செலவழித்த தொகையே முதலீட்டுச் செலவாகும். முதலிலிருந்த அளவிற்கே அது இப்பொழுது

மாற்றியமைக்கப்படுமாயின், அதற்காகும் செலவை முதலீட்டுச் செலவாகக் கருதக்கூடாது. அப்படி பார்க்கும்போழ்து, முதலி லுள்ள அளவுக்கே இப்பொழுது மாற்றியமைக்கப்படுவதாயின் ரூ. 6,50,000 செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதே பழைய சொத்தினை மாற்றியமைக்க இப்பொழுது ஆகும் செலவு என்பதை உணரவேண்டும். எனவே, இதனினும் கூடுதலாக ஆகும் செலவு ரூ. 3,50,000 (ரூ. 10,00,000—ரூ. 6,50,000) இப்பொழுது கிடைக்கும் கூடுதல் பயனுக்காகச் செலவழித்த தொகையாகும். இதுதான் முதலினச் செலவாகும். முன்னதை (ரூ. 6,50,000-ஐ) வருவாய்க் கணக்கிற்கும், பின்னதை (ரூ. 3,50,000-ஐ) முதல் பெறுதல் – செலுத்தல் கணக்கிற்கும் எடுத்துச்செல்ல வேண்டுமென்பதைச் சொல்ல வேண்டுவதில்லை.

இவ்வாறு மாற்றியமைக்கும்போழ்து அல்லது புதிய சொத்து ஒன்றினை வாங்கும்போழ்து, பழைய சொத்தினை எறி மதிப்பிற்கு (Scrap value) விற்கலாம். அத்துடன் பழைய சொத்தின் சில பகுதிகளை அல்லது பழைய தொழில் நிறுவனத்தின் சில பொருள் களை இப்பொழுது மாற்றியமைப்பதில் பயன்படுத்திக் கொள்ள லாம். **இவற்றின் மதிப்பளவிற்கு வருவாய்க் கணக்கிற்கு** எடுத்துச் செல்லும் தொகையிலிருந்து கழித்துவிடவேண்டும்.

## குறிப்பேட்டுப் பதிவுகள்

*(1)* முதலில் வருவாய்க் கணக்கிற்கு எடுத்துச்சென்று நீக்க வேண்டிய தொகையளவிற்கு மறு அமர்த்தீடு கணக்கில் (Replacement Account) பற்றும், முதலீட்டுச் செலவளவிற்குத் (புதிய) தொழில் கணக்கில் (New Works Account) பற்றும், மொத்தம் செலவழித்தத் தொகையளவிற்கு வங்கிக் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

*(2)* புதிய அமைப்பில் பழைய பொருள்கள் ஏதேனும் பயன்படுத்தப்பட்டிருப்பின்,

புதிய தொழில் கணக்கில் பற்றும்,
மறு அமர்த்தீடு கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

*(3)* பழைய அமைப்பிலுள்ள பொருள்கள் ஏதேனும் விற்கப்பட்டிருப்பின்,

வங்கிக் கணக்கில் பற்றும்,
மறு அமர்த்தீடு கணக்கில் வரவும் வைக்கவேண்டும்.

## எடுத்துக்காட்டு 130

ஒரு மின் நிலையம் 1910-ல் ரூ. 3,00,000 செலவில் கட்டப்பட்டது. ஆனால், அதனை இப்பொழுது மீண்டும் கட்டவேண்டுமெனில் ரூ. 9,00,000 செலவாகும் என மதிப்பிடப்படுகிறது. வளர்ந்திருக்கும் அந் நகரின் தேவைக்கேற்ப பெரிய அளவில் புதிய நிலையத்தைக் கட்டவும், பழைய மின் நிலையத்தைத் தகர்க்கவும் முடிவு செய்யப்பட்டது. மொத்தம் இதற்கான செலவு ரூ. 15,00,000. பழைய நிலையத்தின் சில பொருள்களை விற்றதில் ரூ. 40,000 கிடைத்தது. ரூ. 60,000 மதிப்புள்ள பழைய பொருள்கள் புதிய மின் நிலையத்தில் பயன்படுத்தப்பட்டன. இது மேற்சொன்ன ரூ. 15,00,000-ல் அடங்கியுள்ளது. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

**விடை :**

| | | ரூ. | ரூ. |
|---|---|---|---|
| (அ) | பழைய அளவிற்கு இப்பொழுது அமைப்பதற்காகும் செலவு | — | 9,00,000 |
| | **கழி :** | | |
| | பழைய பொருள்களை விற்றது | 40,000 | |
| | பயன்படுத்தப்பட்ட பழைய பொருள்கள் | 60,000 | |
| | | | 1,00,000 |
| | வருவாய்க் கணக்கிற்கு எடுத்துச் செல்லவேண்டிய செலவுத் தொகை | | 8,00,000 |
| (ஆ) | மின் நிலையத்தைத் திருத்தியமைத்ததில் ஆன செலவு | | 15,00,000 |
| | **கழி :** பழைய அளவிலேயே மறுபடியும் அமைக்க ஆகும் செலவு | | 9,00,000 |
| | முதல் பெறுதல் — செலுத்தல் கணக்கிற்கு எடுத்துச் செல்லவேண்டிய முதலினச் செலவு (ரூ. 60,000 மதிப்புள்ள பழைய பொருள்களின் தொகை உள்பட) | | 6,00,000 |

குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே. ப. எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| | மறு அமர்த்தீடு கணக்கு ப | | 9,00,000 | |
| | புதிய தொழில் கணக்கு ப | | 5,40,000 | |
| | வங்கி | | | 14,40000 |
| | (மின் நிலையத்தை மீண்டும் அமைக்கும்போழ்து மொத்தம் செலவழித்த தொகை.) | | | |
| | புதிய தொழில் கணக்கு ப | | 60,000 | |
| | மறு அமர்த்தீடு கணக்கு | | | 60,000 |
| | (பழைய நிலயத்தின் பொருள்களைப் புதிய நிலயத்தில் பயன்படுத்தியது.) | | | |
| | வங்கிக் கணக்கு ப | | 40,000 | |
| | மறு அமர்த்தீடு கணக்கு | | | 40,000 |
| | (பழைய நிலயத்தின் பொருள்களை விற்றது.) | | | |

**எடுத்துக்காட்டு 131**

1920-ல் ஒரு புகைவண்டி நிலயம் ரூ. 4,00,000-ற்குக் கட்டப்பட்டது. 1973-ல் அந் நிலயத்தை இடித்துவிட்டு பெரியதாகக் கட்ட ரூ. 20,00,000 செலவழிக்கப்பட்டது. ரூ. 70,000 மதிப்புள்ள பழைய பொருள்கள் புதிய புகைவண்டி நிலயத்தில் பயன்படுத்தப்பட்டன. இது மேற்கூறிய ரூ. 20,00,000-ல் அடங்கியுள்ளது. பழைய நிலயத்தின் பொருள்களை விற்றதில் ரூ. 50,000 கிடைத்தது.

1920-ல் செலவழித்த தொகையில் கூலியும், பொருள்களும் 1 : 3 எனும் விகிதத்தில் அமைந்திருந்தது. இப்பொழுது கட்டும்போழ்து முன்னிருந்த கூலி 5 மடங்காகவும், பொருள்களில் விலை 300 சதவீதம் ஆகவும் உயர்ந்திருக்கின்றன.

வருவாய்க் கணக்கிற்கும் முதல் கணக்கிற்கும் எடுத்துச் செல்லவேண்டிய தொகையை விளக்கவேண்டிய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

**விடை :**

பழைய சொத்தினை நீக்கிவிட்டுப் புதியதை அமர்த்த ஆகும் செலவைக் கீழ்க்கண்டவாறு மதிப்பிடவேண்டும்.

| | கூலி | பொருள் | மொத்தம் |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| பழைய புகைவண்டி நிலையத்திற்குச் செலவழித்தது (1 : 3) | 1,00,000 | 3,00,000 | 4,00,000 |
| **கூட்டு :** | | | |
| (கூலி ஏற்றம் 5 மடங்கு) | 5,00,000 | — | — |
| பொருள் (300 சதவீதம் விலை உயர்வு) | — | 9,00,000 | — |
| தற்போது புதிய அமர்த்தீடு செய்ய ஆகும் மொத்த செலவு (கூலி + பொருள்) | | | ரூ. 14,00,000 |

**வருவாய்க் கணக்கிற்கு எடுத்துச் செல்லவேண்டிய செலவு :**

| | ரூ. | ரூ. |
|---|---|---|
| பழைய நிலையத்தை மீண்டும் அமைக்க மதிப்பிடும் செலவு | | 14,00,000 |
| **கழி :** | | |
| பயன்படுத்தப்பட்ட பழைய பொருள் | 70,000 | |
| விற்கப்பட்ட பழைய பொருள்கள் | 50,000 | |
| | | 1,20,000 |
| வருவாய்க் கணக்கிற்கு எடுத்துச்செல்லவேண்டியது | | 12,80,000 |

**முதலீட்டுச் செலவை மதிப்பிடுதல் :**

| | ரூ. |
|---|---|
| மொத்தம் செலவழித்த தொகை | 20,00,000 |
| **கழி :** பழைய நிலையத்தின் அளவிற்கு இப்பொழுது அமைக்க ஆகும் செலவு | 14,00,000 |
| முதல் பெறுதல் — செலுத்தல் கணக்கிற்கு எடுத்துச்செல்ல வேண்டியது | 6,00,000 |

(பயன்படுத்தப்பட்ட ரூ. 70,000-ற்கான பழைய பொருள்களின் தொகை உள்ளடங்க)

**குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பே. ப. எ. | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| | மறு அமர்த்தீடு கணக்கு ப | | 14,00,000 | |
| | புதிய தொழில் கணக்கு ப | | 5,30,000 | |
| | வங்கிக் கணக்கு | | | 19,30,000 |
| | (புதிய புகைவண்டி நிலையத்தை அமைக்க ஆன செலவு :<br>புதிய நிலையத்தின் மதிப்பு ரூ. 20,00,000<br>**கழி :** பயன்படுத்திய பழைய பொருள்கள் 70,000<br>19,30,000 | | | |
| | வங்கிக் கணக்கு ப | | 50,000 | |
| | மறு அமர்த்தீடு கணக்கு | | | 50,000 |
| | (பழைய பொருள்களை விற்றது.) | | | |
| | புதிய தொழில் கணக்கு ப | | 70,000 | |
| | மறு அமர்த்தீடு கணக்கு | | | 70,000 |
| | (பழைய பொருள்களைப் புதிய நிலையத்தில் பயன் படுத்தியது.) | | | |

**குறிப்பு :**

ஒற்றைக் கணக்கு முறையில், மின் நிலையத்தின் மதிப்பான ரூ. 4,00,000-ல் பழைய பொருள்களை விற்றதில் பெற்ற ரூ. 50,000-த்தையும், பழைய பொருள்களைப் பயன் படுத்திய மதிப்பு ரூ. 70,000-த்தையும் கழித்துவிடின் மீதியிருக்கும் தொகை ரூ. 2,80,000 ஆகும். இத் தொகை முழுதும் சொத்து அகற்றப் பட்டவுடன் இலாப-நட்டக் கணக்கில் பற்று வைக்கப்படும். இப்பொழுது மொத்தம் செலவழித்த தொகையான ரூ. 20,00,000-மும் புதிய சொத்துக் கணக்கில் பற்று வைக்கப் படும்.

**மின் வழங்கும் கம்பெனிகள்**

மின் வழங்கு கம்பெனி என்பது பொதுப்பயன் தொழிலில் ஈடுபட்டுள்ள ஓர் அமைப்பாகும். குறைந்த கட்டணங்களில் மின் வழங்கும் பணியானது தொழிற்சாலைகட்கும், பொதுமக்கட்கும் ஆற்றப்படும் தலையாய பணிகளில் ஒன்றாகும். எனவேதான், இவ்வின்றியமையாமைப் பணியை அரசோ நகர்மன்ற நிறு வனங்களோ நடத்தி வருகின்றன. இதுபற்றி இந்திய மின் சட்டம் 1910, மின் வழங்கு சட்டம் 1948, இந்திய மின் நெறிமுறைகள் 1956 ஆகிய சட்டங்கள் மின் வழங்குவதை ஒழுங்குபடுத்திக் கண்காணிக்கின்றன. கணக்குகளைப் பொருத்தவரை இச் சட்டங் களில் கூறியிருப்பவற்றை இங்குக் காண்போம்.

(1) மின் வழங்கு கம்பெனியின் கணக்கு ஆண்டு ஒவ்வோ ராண்டும் மார்ச் 31-ல் முடியவேண்டும்.

(2) சட்டத்தின் இணைப்புகள் (Schedules) 4-லும், 5-லும் கொடுக்கப்பட்டிருக்கும் படிவங்களில்தான் இக் கம்பெனி களின் கணக்குகளைத் தயாரித்தளிக்கவேண்டும்.

(3) தேய்மானம் கணக்கிடுவதில் இரண்டு முறைகள் பின் பற்றப்படுகின்றன.

(அ) கூட்டு வட்டி முறை (Compound Interest Method);

(ஆ) நேர் வரி முறை (Straight Line Method).

கூட்டுவட்டி முறையின்படி, நீக்கப்படும் தேய்மானமும், சொத்தின் தொடக்க விலையில் 4 சதவீதம் கூட்டு வட்டியும் சேர்ந்த தொகை தொடக்க மதிப்பில் 90 சதவீதத்திற்கும் மிகக்

கூடாது. கூட்டுவட்டி முறை (கழிவு நிதி முறை போன்றுதான்) பின்பற்றப்படுமாயின், ஒவ்வோராண்டும் தேய்மானக் காப்பின் தொடக்க இருப்பில் 4 சதவீதம் ஆண்டுவட்டி கணக்கிட்டு அதனை இலாப-நட்டக் கணக்கிலிருந்து தேய்மானக் காப்புக் கணக்கிற்கு மாற்றவேண்டும். ஏதேனும் ஓர் ஆண்டில் இம் முழுத் தொகையும் இக் கணக்கில் வரவு வைக்க முடியாமற் போகுமாயின், இந் நிலுவையைப் பின்வரும் ஆண்டுகளில் எப்பொழுது முடிகின்றதோ அப்பொழுது இலாபத்திலிருந்து ஒதுக்கவேண்டும். தேய்மான நிலுவைக்கு ஒதுக்காமல் பங்காதாயம் வழங்கக் கூடாது என்பதை உணரவேண்டும்.

நேர்வரி முறையில் சொத்தின் தொடக்க மதிப்பில் 90 சதவீதத்தை அதன் ஆண்டுக்காலத்தால் வகுக்கவேண்டும். இத் தொகையே ஒவ்வோராண்டும் நீக்கவேண்டிய தேய்மானமாகக் கொள்ளப்படும்.

எம் முறையைப் பின்பற்றினும், ஒரு சொத்து பயன்படும் மொத்த காலத்தில் தேய்மானமாக ஒதுக்கப்படும் மொத்தத் தொகையானது, சொத்தின் தொடக்க மதிப்பில் 90 சதவீதம் அளவிற்கு மிகக்கூடாது என்பதை மறக்கக்கூடாது.

வழக்கொழிந்துபோவதன் காரணமாகவோ, வேறு பிற காரணங்களினாலோ சொத்து ஒன்றினைப் பயன்படுத்த முடியாமற் போகுமாயின் தேய்மானம் நீக்கக்கூடாது. இவ்வாறு நிலைச் சொத்தானது பயன்படாதென அப்புறப்படுத்தி வைக்கப்படு மாயின் (discarded), அச் சொத்தின் இருப்பை 'அப்புறப் படுத்தப்பட்ட சொத்துகள்' (Discarded Assets) எனும் கணக் கிற்கு எடுத்துச்செல்லவேண்டும். பின்னர் இவற்றை விற்பதால் கிடைக்கும் தொகையை இக் கணக்கில் வரவு வைக்கவேண்டும். (வங்கிக் கணக்கில் பற்றும், அப்புறப்படுத்தப்பட்ட சொத்துகள் கணக்கில் வரவும் வைக்கவேண்டும்). இக் கணக்கு இருப்புக்காட்டு மாயின், அதனை நிகழ்வடைக் காப்புக் கணக்கு (Contingency Reserve) எனும் கணக்கிற்கு எடுத்துச்செல்லவேண்டும். இவ்வாறு நிலைச் சொத்து ஒன்றைத் தள்ளி வைக்கும்போழ்து ஏற்படும் இலாப-நட்டம் இறுதியில் 'நிகழ்வடைக் காப்புக்' கணக்கிற்கு எடுத்துச்செல்லப்படுகிறது.

7-வது அட்டவணையின் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள சில சொத்துகளின் ஆயுட்காலம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

| சொத்து | ஆயுட்கால ஆண்டுகள் |
|---|---|
| சொந்த நிலம் | கால வரை இல்லை. |
| குத்தகை நிலம் | குத்தகைக் கால ஒப்பந்தத்தைப் பொறுத்தது. |
| மின் உற்பத்தி நிலையங்களிலுள்ள பொறிவகை : | |
| நீர் மின் நிலையம் (Hydro-electric) | 35 |
| நீராவி மின் நிலையம் (Steam-electric) | 25 |
| குளிர் சாதன தூபிகளும், சுழல் நீர் முறையும் | 35 |
| கட்டடம் : | |
| (1) அலுவலகம் | 50 |
| (2) அனல் மின் உற்பத்தி பொறி உடையது | 30 |
| (3) மீட்டர் | 15 |

மின் வழங்கு துறையிலுள்ள முற்றுரிமை நிலை காரணமாகவும், அதன் இன்றியமையாமைத் தன்மையின் காரணமாகவும், இக் கம்பெனிகள் நுகர்வோரின் நலனைப் புறக்கணித்து இலாபம் பெறுவதைப் போக்கும் நோக்குடன், தகுநிலை வருவாய் (Reasonable Return) எனும் கொள்கையைச் சட்டம் வகுத்திருக்கிறது. மின் வழங்கு கம்பெனிகள் தங்களின் தகுநிலை இலாபத்துடன், தகுநிலை இலாபத்தில் 15 சதவீதம் அளவிற்கு மிகாமல் அவற்றின் தெளிவு இலாபம் இருக்குமாறு மின் வழங்கு கட்டணங்களை அவ்வப்பொழுது 'சரிசெய்துகொள்ள வேண்டுமென்று சட்டம் கூறுகிறது.

'தகுநிலை வருவாய்' (Reasonable Return) என்பது கீழ்க் கண்டவற்றின் கூட்டல் தொகையாகும்.

(அ) முதல் அடிப்படை (Capital Base) மீது குறிப்பிட்ட விகித வருவாய் (முதல் அடிப்படையில் மீது மைய வங்கி வட்டி + 2 சதவீதம்).

(ஆ) நிகழ்வடைப் பொறுப்புகளாக அன்றி மீதியுள்ள முதலீடுகளினின்றும் பெறும் வருமானம்.

(இ) மாநில மின்வாரியம் வழங்கும் கடன் மீது $\frac{1}{2}$ சதவீதம் தொகை.

(ஈ) மேம்பாட்டுக் காப்பு (Development Reserve) இருப்பின்மீது $\frac{1}{2}$ சதவீதம் ஆய்வுத் தொகை.

(உ) கடனீட்டுப் பத்திரங்கள் மீது $\frac{1}{2}$ சதவீதம்.

**முதல் அடிப்படை** (Capital Base)

இது கீழ்க்கண்டவற்றின் கூட்டல் தொகையாகும்.

(1) நிலைச் சொத்துகளின் அடக்கவிலை. இதிலிருந்து மின் வழங்கு கம்பெனிகளை அமைப்பதற்காக நுகர்வோர் வழங்கியுள்ள தொகையையும், நீக்கப்பட்ட தொகையையும் கழித்துவிட வேண்டும்.

(2) புலனாகாச் சொத்துகளின் அடக்கவிலை.

(3) வேலை முற்றுப் பொருள்களின் தொடக்க விலை (original cost).

(4) நிகழ்வடைக் காப்பிற்காகக் (Contingency Reserve) கட்டாயமாக முதலீடு செய்துள்ள தொகை.

(5) நடைமுறை முதல் தொகை.

மேற்சொன்னவற்றின் கூட்டுத் தொகையிலிருந்து கீழ்க்கண்டவற்றைக் கழித்துவிட வேண்டும்.

(1) நிலைச் சொத்துகளின் மீது நீக்கப்பட்ட அல்லது ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள தேய்மானம்.

(2) புலனாகாச் சொத்துகட்காகக் கம்பெனிகளின் ஏடுகளில் நீக்கப்பட்ட தொகை.

(3) மின் வாரியம் அளித்துள்ள கடன்.

(4) கடனீட்டுப் பத்திரங்கள்

(5) ரொக்கமாக வைத்திருக்கும் நுகர்வோர் காப்புத் தொகை (Security deposits of consumers).

(6) மேம்பாட்டுக் காப்பிற்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள தொகை.

(7) வரி, பங்காதாயக் கட்டுப்பாட்டுக் காப்பு (Tariff and Dividend Control Reserve) காட்டும் வரவிருப்பு.

(8) நுகர்வோருக்கு வழங்க உரிமம் பெற்றவர்கள் கணக்குகளில் எடுத்துச் செல்லப்படும் தொகை.

**தெளிவு இலாபம் (Clear Profit) :**

மொத்த வருவாயிலிருந்து மொத்த செலவினத்தையும், குறிப்பிட்ட ஒதுக்குகளையும் கழித்த பின்னுள்ள தொகையே தெளிவு இலாபமாகும். கீழ்க் கண்டவாறு தெளிவு இலாபம் கணக்கிடப்பட வேண்டும்.

**தெளிவு இலாப அறிக்கை**

| செலவினம் | ரூ. | வருமானம் | ரூ. |
|---|---|---|---|
| 1. மின் ஆக்கச் செலவும் மின் விசைக் கொள்முதலும் | | 1. மின் விசை விற்பனை (தள்ளுபடி போக) | |
| 2. வழங்கு செலவும் மின்விசை விற்பனைச் செலவும் | | 2. மின் அளவு மானி, வாடிக் கையாளர்களிடம் தரப்பட்டுள்ள பிற பொறிகள் மீது வாடகை | |
| 3. வாடகை, கட்டணம், வரி (வருமானத்தின் மீதும் இலாபத்தின் மீதும் வரி நீங்கலாக.) | | 3. விளக்குகளும், பிற கருவிகள் விற்பனையும, பழுதுபார்க்கும் செலவும் | |
| 4. கடன்மீது வட்டி (வரியும், வழங்கியுள்ள கடன் மீதான வட்டியும், கடனீட்டுப் பத்திரங்கள் மீதான வட்டியும்.) | | 4. பிற வாடகை | |
| 5. நுகர்வோர் காப்புத் தொகையின் மீது வட்டி | | | |

| | | | |
|---|---|---|---|
| 6. சட்டமுறைக் கட்டணங்கள் (Legal charges)<br>7. வராக் கடன்<br>8. தணிக்கைக் கட்டணம்<br>9. நிர்வாகச் செலவுகள்<br>10. தேய்மானம்<br>11. பிற செலவுகள் (இந்திய வருமான வரிச் சட்டம் அனுமதியளிக்கும் செலவுகளும் மின் வழங்கு தொழிலுக்குரிய பிற செலவுகளும்.)<br>12. அலுவலர் நலக் காப்பு நிதி, ஓய்வூதியம், பணிக்கொடை முதலிய வற்றிற்கு வழங்கும் தொகைகள்<br>13. நிறுவனத் தொழிலருக்கான மேலூதியம்<br>13. இலாப இருப்பு கீ/இ | | 5. மாற்றுக் கட்டணங்கள் (Transfer Fees)<br>6. முதலீடுகள், வங்கியிருப்புகள் மீதான வட்டி<br>7. வருமான வரிக்குட்பட்ட மின் வழங்கு தொழிலுக்குரிய பிற வரவுகள் | |

## பகிர்தல் கணக்கு

| பகிர்தல் (Appropriations) | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| 1. அரசு இசைவு அளிக்கும் கடன் நட்டங்கள் | | இலாப இருப்பு கீ/கொ | |
| 2. வருமான வரி | | | |
| 3. நீக்கப்பட்ட புலனாகாச் சொத்துகளும், முதல் வெளியீட்டுச் செலவுகளும் | | | |
| 4. தேய்மான நிலுவை | | | |
| 5. மேம்பாட்டுக் காப்பிற்கு எடுத்துச் செல்வது | | | |
| 6. நிகழ்வடைப் பொறுப்பிற்கு எடுத்துச் செல்வது (Contribution to Contingency Reserve) | | | |
| 7. மாநில அரசு இசைவு அளிக்கும் பிற பகிர்வுகள் | | | |
| 8. தெளிவு இலாபம் (மீதியுள்ள இருப்பு) | | | |

**பழுது பார்த்தலும், புதுப்பித்தலும்** (Repairs and Renewals)

இச் செலவினங்கள் எந்த ஆண்டு ஏற்படுகின்றனவோ, அவ் வாண்டு வருவாய்க் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும். ஆயினும், பழுது பார்த்தல் – புதுப்பித்தல் காப்புக் கணக்கு என்று ஒன்று தொடங்கப்பெற்று ஒவ்வோராண்டும் குறிப்பிட்ட ஒரு தொகை இக் கணக்கிற்கு எடுத்துச் செல்லப்படுவது வழக்கம். அவ்வாறாயின், வருவாய்க் கணக்கில் பற்றும், பழுது பார்த்தல் — புதுப்பித்தல் காப்புக் கணக்கில் வரவும் வைக்கப்படும். பழுது பார்த்தலுக்காகவோ, புதுப்பித்தலுக்காகவோ செலவு செய்யும் பொழுதெல்லாம் அச் செலவு இக் காப்புக் கணக்கில் பற்று வைக்கப்படும். இதன் சிறப்பு, ஏதேனும் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் பெரும் தொகை வருவாய்க் கணக்கில் பற்று வைக்கப்படுவதற்குப் பதிலாக, ஒவ்வோராண்டும் ஒரேயளவு தொகை பற்று வைக்கப் படுவதேயாகும்.

இரட்டைக் கணக்கு முறையில் ஆண்டிறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும்போழ்து முதலீட்டுச் செலவு, வருவாய்க் கணக்கு கட்கும், நடைமுறை வருவாய், செலவு கணக்குகட்கும் உள்ள வேறுபாட்டினை நன்கு உணர்தல் இன்றியமையாததாகும். ஓர் இனத்திற்காகச் செலவு செய்வதால் ஏற்படும் பயன் அக் கணக்கு ஆண்டிலேயே நின்று விடாமல், பின்வரும் ஆண்டுகளிலும் கிடைக் குமாயின், அதனை முதலீட்டுச் செலவு என்கிறோம். அதாவது, முதலீட்டுச் செலவின் பயன் பல்லாண்டுகட்குக் கிடைக்கிறது. அவ்வாறின்றிச் செலவுசெய்த தொகையின் பயன், அவ்வாண்டிற்கு மட்டுமே கிடைக்குமாயின், அதனை நடைமுறைச் செலவு என் கிறோம். இரட்டைக் கணக்கு முறையில் முதலீட்டு இனங்கள் (முதலினச் செலவுகளும், முதலின வருவாய்க் கணக்குகளும்) முதல் பெறுதல் – செலுத்தல் கணக்குகட்கு எடுத்துச் செல்லப் படுகின்றன. நடைமுறை இனங்கள் வருவாய்க் கணக்கிற்கோ நிகர வருவாய்க் கணக்கிற்கோ எடுத்துச் செல்லப்படுகின்றன.

அத்துடன் சொத்துகள், பொறுப்புகள் இவற்றின் தன்மை யையும் நன்கு உணரவேண்டும். வருவாய் ஈட்டும் நோக்குடன், தொழிலில் ஓரளவு நிலையாகப் பயன்படுத்தும் விருப்புடன் வாங்கப்படும் சொத்துகள் நிலைச் சொத்துகளாகும். அவ்வாறே பொறுப்பு ஏற்றுக்கொண்ட நாளிலிருந்து 5 ஆண்டு முடிவிற்குள் அதனை செலுத்தவேண்டியதில்லையெனில், அது நீண்டகாலப் பொறுப்பாகக் கொள்ளப்படும். இவ்வாறு நிலைச் சொத்துகளும், நீண்டகாலப்பொறுப்புகளும் மட்டுமே முதல் பெறுதல்–செலுத்தல்

கணக்கில் காட்டப்பெறும். தொழில் நடந்துவரும்போழ்து ரொக்கம் பெறக்கூடிய சொத்துகளும் அல்லது நாள்தோறும் மதிப்பு மாறக்கூடிய சொத்துகளும் நடப்புச் சொத்துகளாகும். அவ்வாறே, குறுகிய காலப் பொறுப்புகளை நடப்புப் பொறுப்புகள் என்கிறோம். நடப்புச் சொத்துகளும், நடப்புப் பொறுப்புகளும் பொது இருப்புநிலைக் குறிப்பில் இடம்பெறுகின்றன.

**தெளிவு இலாபத்தின் மிகுதியைப் பயன்படுத்துதல்** (Disposal of surplus clear profit)

6-வது அட்டவணையின்படி, ஒரு மின் வழங்கு கம்பெனியின் தெளிவு இலாபம், தகுநிலை வருவாயினும் அதிகமாக இருக்குமானல், அம் மிகுதித் தொகையைக் கீழ்க்கண்டவாறு பயன்படுத்தவேண்டும்.

(1) தகுநிலை வருவாயில் 5 சதவீதத்திற்கு மிகாமல், அம் மிகுதித் தொகையின் $\frac{1}{2}$ பங்கைக் கம்பெனி விரும்பியவாறு பயன்படுத்திக்கொள்ளலாம்.

(2) மீதியுள்ள மிகுதி இலாபத்தில் பாதித் தொகையை வரி, பங்காதாயக் கட்டுப்பாட்டுக் காப்பு (Tariff and Dividend Control Reserve) எனும் கணக்கிற்கு மாற்றவேண்டும்.

(3) மீதியுள்ள மிகுதித் தொகையை (அதாவது, மொத்த மிகுதித் தொகையில் 3-ல் 1 பங்கை), மின் விற்பனைக்காகவும், மின் அளவுமானியின் (மீட்டர்) வாடகைக்காகவும் நுகர்வோரிடமிருந்து வசூலித்த தொகை மீது தள்ளுபடி அளிக்கப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். இவ்வாறு அவர்கட்குத் தள்ளுபடியாக வழங்குமுன்னர் இத் தொகையை நுகர்வோர் நலக் காப்பு எனும் கணக்கிற்கு எடுத்துச் செல்லவேண்டும்.

**வரி, பங்காதாயக் கட்டுப்பாட்டுக் காப்பு** (Tariff and Dividend Control Reserve)

தகுநிலை வருவாயினும், தெளிவு இலாபம் மிகுதியாக இருப்பின், அவ்வாறு மிகுதியாகவுள்ள இலாபத்தில் [1] பங்கை இக் கணக்கிற்கு மாற்றவேண்டுமென்று கூறியிருக்கிறோம். எவ்வாண்டில் உரிய வருவாயினும், தெளிவு இலாபம் குறைவாக இருக்கிறதோ, அவ்வாண்டில் இக் கணக்கைப் பயன்படுத்திக் கொள்ளலாம். மின் வழங்கு நிலையத்தை வேறொருவர் வாங்கும்போழ்து இக் கணக்குக் காட்டும் இருப்பை வாங்குநர்க்குக் கொடுக்க

வேண்டும். இக் காப்பு அவ்வாறே வைத்திருக்கப்படவேண்டும். ஆனால், இந் நிலையத்தை மாநில மின் வாரியமோ, மாநில அரசோ வாங்குமாயின், இக் காப்புத் தொகையைக் கொடுக்க வேண்டிய விலையினின்றும் கழித்துக்கொள்ளலாம்.

**நிகழ்வடைக் காப்பு** (Contingency Reserve)

இது பற்றிய விவரங்கள் 6-வது அட்டவணையில் கொடுக்கப் பட்டுள்ளன. தற்போது இருக்கின்ற காப்புக் கணக்குகளிலிருந்து அல்லது கம்பெனியின் வருவாயிலிருந்து நிகழ்வடைக் காப்புக் கணக்கு எனும் கணக்கை ஏற்படுத்தலாம். ஒவ்வோராண்டின் வருவாயிலிருந்தும் கம்பெனி இக் கணக்கிற்கு அதன் நிலைச் சொத்துகளின் தொடக்க விலை மீது $\frac{1}{4}$ சதவீதத்திற்குக் குறையாம லும், 1 சதவீதத்திற்கு மிகாமலும் இக் கணக்கிற்குத் தொகை ஒதுக்கலாம். நிலைச் சொத்துகளின் தொடக்க விலையில் 5 சத வீதம் அளவிற்குவரும் வரையில் இவ்வாறு ஒவ்வோராண்டும் தொகை ஒதுக்கி வரலாம்.

இந் நிகழ்வடைக் காப்புத் தொகையைப் பொறுப்புரிமைப் பத்திரங்களில் (Trust Securities) முதலீடு செய்யவேண்டும். மாநில அரசின் ஒப்புதலுடன், கீழ்க்கண்ட நோக்கங்கட்காக மட்டும் அக் காப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

(அ) விபத்துகளின் காரணமாகவோ, வேலை நிறுத்தங் களின் காரணமாகவோ, நிறுவனம் தடுத்து நிறுத்தமுடியாத சூழ்நிலைகளின் காரணமாகவோ ஏற்படும் செலவுகள் அல்லது இலாப இழப்பு.

(ஆ) இயல்பாக எழக்கூடிய பராமரிப்பு அல்லது புதுப் பித்தல் செலவுகட்காக அல்லாமல் கம்பெனியின் பொறிகள் அல்லது தொழிற்சாலை ஆகியவற்றை நீக்குவதற்காகவோ, மறு அமர்த்தீடு செய்வதற்காகவோ ஆகும் செலவினங்கள்.

(இ) தொகை ஏதும் ஒதுக்கி வைத்திருக்கா நிலையில் தற் போது அமுலிலுள்ள எச் சட்டத்தின் கீழாவது கொடுக்கவேண் டிய நட்ட ஈட்டுத் தொகை.

நிலைச் சொத்து ஒன்றினை விற்கும்போழ்து ஏற்படக்கூடிய இலாபம் அல்லது நட்டத்தை இக் கணக்கிற்கு எடுத்துச்செல்ல வேண்டும். அவ்வாறே சொத்து ஏதேனும் பயனற்றதென

விலக்கிவிடப்படுமாயின், அச் சொத்தின் தேய்மானம் நீக்கப் பெற்ற மதிப்பளவை இக் கணக்கிற்கு எடுத்துச் செல்லவேண்டும்.

**மேம்பாட்டுக் காப்பு** (Development Reserve)

6-வது பிரிவின்படி, இக் காப்பினை மின் வழங்கு கம்பெனி ஏற்படுத்தவேண்டும். வருமானவரி அலுவலகம் அளிக்கும் மேம் பாட்டுத் தள்ளுபடி மீது வருமான வரியைக் கணக்கிட்டு, அத் தொகையளவிற்கு மேம்பாட்டுக் காப்புக் கணக்கிற்கு மாற்ற வேண்டும். அதாவது, மேம்பாட்டுத் தள்ளுபடியை வருமானவரி அலுவலகம் வழங்காவிடில் அத் தொகை மீது செலுத்தவேண்டி யிருக்கும் வருமான வரி அளவிற்கு இக் கணக்கில் வரவு வைக்க வேண்டும். மேம்பாட்டுக் காப்பிற்கு ஒதுக்கவேண்டிய தொகையை 5 ஆண்டுகளுக்குள் ஒதுக்கிக் கொள்ளலாம். நிறுவனத்தின் மின் வழங்கு தொழிலில் மட்டுமே இக் காப்பை முதலீடு செய்ய முடியும்.

இந் நிறுவனத்தை வேறொருவர் வாங்கும்போழ்து, மேம் பாட்டுக் காப்பினை வாங்குநர்க்குக் கொடுக்கவேண்டும். அவர் இக் காப்புக் கணக்கை அவ்வாறே வைத்திருக்கவேண்டும். இந் நிறுவனத்தை மாநில மின் வாரியமோ, மாநில அரசோ வாங்கு மாயின், அது செலுத்தவேண்டிய விலையினின்றும் இக் காப்புத் தொகையைக் கழித்துக் கொள்ளலாம்.

இம் மேம்பாட்டுக் காப்பும், மேம்பாட்டுத் தள்ளுபடிக் காப்பும் ஒன்றன்று. மேம்பாட்டுத் தள்ளுபடிக் காப்புடன் மேம் பாட்டுக் காப்பையும் ஒரு கம்பெனி வைத்திருக்கும்.

**மின் தொடர்புகள்** (Service Connections)

முதல் அடிப்படையைக் கணக்கிடும்போழ்து, மின் தொடர்பு கட்காகக் கம்பெனி முதலீடு செய்துள்ள தொகையிலிருந்து, நுகர்வோர் இதற்காக வழங்கும் தொகையைக் கழிக்கவேண்டு மென்று முன்னரே கூறியுள்ளோம். மின் தொடர்புகட்காகச் செலவிடப்படும் தொகையானது, அதனை நுகர்வோர் வழங்கி யிருந்தாலும் சரி அல்லது கம்பெனி செலவழித்திருந்தாலும் சரி அச் செலவை ஒரு நிலைச் சொத்தாக இருப்புநிலைக் குறிப்பில் காட்டவேண்டும். ஆனால், அதே நேரத்தில் பொறுப்புகள் பகுதியில் மின் தொடர்பு கம்பிகட்காக நுகர்வோர் வழங்கியது என்று காட்டவேண்டும். இதனை நடைமுறை வருவாயாகக் கொண்டு வருவாய் பகுதியில் காட்டக் கூடாது.

**பொதுக் காப்பு** (General Reserve)

67-வது பிரிவின்படி வட்டிக்கும் தேய்மானத்திற்கும் வகை செய்த பின்னர் நிலைச் சொத்துகளின் தொடக்க விலை மீது $\frac{1}{2}$ சதவீதத்திற்கு மிகாமல் அச் சொத்துகளின் தொடக்கவிலை மீது 8 சதவீதம் அளவிற்கு இக் காப்புக் கணக்கு வரும்வரை பொதுக்காப்பிற்குத் தொகை ஒதுக்கலாம். இது மின் வாரியங்கட்கு மட்டும் பொருந்தக்கூடியது. எனினும், மின் வழங்கு கம்பெனிகளும் இக் காப்பினை ஏற்படுத்தலாம்.

## 19... மார்ச் 31-ல் முடியும் ஆண்டிற்கான முதல் பெறுதல் – செலுத்தல் கணக்கு
## (Receipts and Expenditure on Capital Account)

| வரிசை எண். | செலவினம் | சென்ற ஆண்டு இறுதி வரை செய்த செலவு | நடப்பு ஆண்டில் செய்த செலவு | மொத்த செலவு | பெறுதல் | சென்ற ஆண்டு இறுதி வரை பெற்றது | நடப்பு ஆண்டில் பெற்றது | மொத்தம் பெற்றது |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. | | ரூ. | ரூ. | ரூ. |
| 1. | தொடக்கச் செலவுகள் (குறிப்பிடப்பட வேண்டும்) | | | | ................ நேர்மைப் பங்குகள் | | | |
| 2. | நிலம், அதனை வாங்குவதற்கான சட்டச் செலவுகள் உள்பட | | | | ................ முன்னுரிமைப் பங்குகள் | | | |
| 3. | கட்டடம் | | | | கடனீட்டுப் பத்திரங்கள் | | | |
| 4. | பொறிவகை | | | | அடைமானங்களும், பிணைமுறிகளும் (Mortgages & Bonds) | | | |
| 5. | மூலக் கம்பிகள் (Mains) | | | | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6. | மின் தொடர்ப்புகள் (Service connections) | | | | முன்கூட்டிப் பெற்ற பங்கழைப்பு | | | |
| 7. | மின்விசைமாற்றி அமைவுகள் (Transformers) | | | | பிற செலவினங்கள் (குறிப்பிட்டபடி வேண்டும்) | | | |
| 8. | சட்டத்தின் கீழ் சான்று அளிக்க மின் அளவைகளும், கட்டணங்களும் | | | | | | | |
| 9. | பொதுச் சரக்கு (General Stores) | | | | | | | |
| 10. | பிற இனங்கள் (குறிப்பிடப்படவேண்டும்) | | | | | | | |
| | மொத்தச் செலவினம் முதல் கணக்கின் இருப்பு எடுத்துச் செல்லப்படுகிறது | | | | | | | |

**எடுத்துக்காட்டு 132**

அட்டாமிக் எலெக்ட்ரிசிட்டி கம்பெனி லிமிட்டெடின் ஏடுகளிலிருந்து திரட்டப்பட்ட இருப்புகள் அடுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து வருவாய்க் கணக்கு, முதல் கணக்கு, இருப்புநிலைக் குறிப்பு ஆகியவற்றைத் தயாரிக்க.

1965 மார்ச் 31-ல் பங்கு ஒன்றுக்கு ரூ. 10 அழைப்புத் தொகை செலுத்தவேண்டியிருந்தது. அழைப்புத் தொகை நிலுவை ஆண்டு வட்டி 5 சதவீதத்திற்கு உட்பட்டது.

கட்டடத்தின் மீது 2 சதவீதமும், பொறிவகை மீது 7 சதவீதமும், மூலக் கம்பிகள் மீது 5 சதவீதமும், மின்விசை மாற்றியமைவு மீது 10 சதவீதமும், மின் அளவை, மின் கருவிகள் மீது 15 சதவீதமும் தேய்மானம் நீக்குக. நடப்பாண்டில் சேர்த்துக் கொள்ளப்பட்ட தொகை மீது 6 திங்கட்குத் தேய்மானம் கணக்கிடுக.

(C. A. Final, Nov. 1966)

## 1965 மார்ச் 31-க்கான இருப்பாய்வு

| 1964 மார்ச் 31-க்கான தொகை | விவரம் | | |
|---|---|---|---|
| ரூ. | | ரூ. | ரூ. |
| | அதிகாரம் பெற்ற முதல் : | | |
| | ஒன்று ரூ. 100 மதிப்புடைய 1,00,000 பங்குகள் | | |
| | எடுத்துக்கொண்ட முதல் : | | |
| 20,00,000 | 50,000 பங்குகள், பங்கு ஒன்றுக்கு ரூ. 50 வீதம் செலுத்தப்பெற்றது .. | | 25,00,000 |
| 15,00,000 | 6 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் .. | | 15,00,000 |
| 1,00,000 | தேய்மான நிதி .. | | 1,00,000 |
| — | அழைப்பு நிலுவை .. | 1,00,000 | |
| 9,30,000 | வில்லங்கமற்ற நிலம் .. | 9,30,000 | |
| 4,00,000 | கட்டடம் .. | 5,00,000 | |
| 6,00,000 | நிலையத்திலுள்ள பொறிகள் .. | 10,00,000 | |
| 5,00,000 | மூலக் கம்பிகள் .. | 8,00,000 | |
| 1,00,000 | மின்விசை மாற்றியமைவுகள், மோட்டார்கள் .. | 2,00,000 | |
| 50,000 | மின் அளவைகள் .. | 1,50,000 | |
| 30,000 | மின் கருவிகள் .. | 40,000 | |
| 1,60,000 | மின்கம்பி வடங்கள் (Cables), மூலக் கம்பிகள் (Mains) முதலியவை .. | 2,35,000 | |

## 1965 மார்ச் 31-க்கான இருப்பாய்வு—(தொடர்ச்சி)

| 1964 மார்ச் 31-க்கான தொகை | விவரம் | | |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| 25,000 | மனைத்துணைப்பொருள் .. | 25,000 | |
| | நிலக்கரியும் எரிபொருளும் .. | 1,90,000 | |
| | எரிபொருள், கழிவுகள், இயக்கப்பொறி, சரக்குகள் .. | 75,000 | |
| | நிலக்கரி, எண்ணெய், கழிவுகள், சரக்கிருப்பு .. | 10,000 | |
| | நிலையத்தில் கூலி .. | 3,00,000 | |
| | பழுது பார்த்தலும் மறு அமர்த்தீடும் .. | 50,000 | |
| | கட்டணங்களும் வரிகளும் .. | 30,000 | |
| | ஊதியம் (செயலர், மேலாளர் ஆகியோரின் ஊதியம் உள்பட) .. | 1,50,000 | |
| | இயக்குநர் கட்டணமும் ஊதியமும் .. | 1,00,000 | |
| | எழுதுபொருளும் அச்சுக் கூலியும் .. | 60,000 | |
| | சட்டச் செலவுகளும் பிற செலவுகளும் .. | 30,000 | |
| | மின் அளவுமானிகள் மூலமாக விற்பனை .. | | 8,75,000 |
| | ஒப்பந்தங்கள் மூலமாக விற்பனை .. | | 5,00,000 |
| | மின் அளவை வாடகை .. | | 30,000 |
| | கடனீந்தோர் .. | | 1,00,000 |
| | கடனாளிகள் .. | 3,00,000 | |
| | ரொக்கமும் வங்கியும் .. | 3,30,000 | |
| | .. | 56,05,000 | 56,05,000 |

## 1965 மார்ச் 31-ல் முடியும் ஆண்டுக்கான முதல் பெறுதல் – செலவினக் கணக்கு

| செலவினம் | 31–3–1964 வரை செலவழித்தது | நடப்பாண்டில் செலவழித்தது | 31–3–1965 வரை மொத்தம் செலவழித்தது | பெறுதல் | 31–3–1964 வரை பெற்றது | நடப்பாண்டில் பெற்றது | 31–3–1965 வரை மொத்தம் பெற்றது |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | | ரூ. | ரூ. | ரூ. |
| வில்லங்கமற்ற நிலம் ... | 9,30,000 | — | 9,30,000 | **பங்கு முதல்:** | | | |
| கட்டடம் ... | 4,00,000 | 1,00,000 | 5,00,000 | ஒன்று ரூ. 100 மதிப்புடைய | | | |
| நிலையத்திலுள்ள பொறிகள் ... | 6,00,000 | 4,00,000 | 10,00,000 | 50,000 பங்குகள், பங்கொன்றுக்கு ரூ. 50 வீதம் அழைக்கப் | | | |
| மூலக் கம்பிகள் ... | 5,00,000 | 3,00,000 | 8,00,000 | பெற்றது ... | 20,00,000 | 5,00,000 | 25,00,000 |
| மின்விசை மாற்றியமைவுகள், மோட்டார்கள் ... | 1,00,000 | 1,00,000 | 2,00 000 | கழி: அழைப்பு நிலுவை ... | — | — | 1,00,000 |
| மின் அளவைகள் (அளவு மானிகள்) ... | 50,000 | 1,00,000 | 1,50,000 | | | | 24,00,000 |
| மின் கருவிகள் ... | 30,000 | 10,000 | 40,000 | 6% கடனீட்டுப் பத்திரங்கள்... | 15,00,000 | — | 15,00,000 |
| மின் கம்பி வடங்கள், மூலக் கம்பிகள் முதலியவை ... | 1,60,000 | 75,000 | 2,35,000 | | | | |
| மனைத்துணைப் பொருள் ... | 25,000 | — | 25,000 | | | | |
| | 27,95,000 | 10,85,000 | 38,80,000 | | | | |
| பொது இருப்புநிலைக் குறிப்புக்கு எடுத்துச் செல்லப்படும் இருப்புத் தொகை ... | | | 20,000 | | | | 39,00,000 |
| | | | 39,00,000 | | | | 39,00,000 |

விடை :

## 1965 மார்ச் 31-ல் முடியும் ஆண்டுக்கான வருவாய்க் கணக்கு

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| நிலக்கரியும் எரிபொருளும் .. | 1,90,000 | மின் அளவுமானிகள் மூலமாக விற்பனை .. | 8,75,000 |
| எரிபொருள், கழிவுகள், இயக்குபொறி, சரக்குகள் .. | 75,000 | ஒப்பந்தங்கள் மூலமாக விற்பனை .. | 5,00,000 |
| நிலையத்தில் கூலி .. | 3,00,000 | மின் அளவைகளின் (அளவுமானிகளின்) வாடகை .. | 30,000 |
| பழுது பார்த்தலும் மறு அமர்த்திடும் | 50,000 | | |
| கட்டணங்களும் வரிகளும் .. | 30,000 | | |
| ஊதியம் (செயலர், மேலாளர் ஊதியம் உள்பட) .. | 1,50,000 | | |
| இயக்குநர் கட்டணமும் ஊதியமும் | 1,00,000 | | |
| எழுதுபொருளும் அச்சுக் கூலியும் .. | 60,000 | | |
| சட்டச் செலவுகளும் பிற செலவுகளும் | 30,000 | | |

| | | | |
|---|---|---|---|
| தேய்மானம்: | | | |
| கட்டடம் | 9,000 | | |
| பொறிவகை .. | 56,000 | | |
| மூலக்கம்பிகள் .. | 32,500 | | |
| மின்விசைமாற்றி யமைவுகள் .. | 15,000 | | |
| மின் அளவு மானிகள் .. | 15,000 | | |
| மின் கருவிகள் .. | 5,250 | | |
| | | 1,32,750 | |
| நிகர வருவாய்க் கணக்கிற்கு எடுத்துச் செல்லப்படும் இருப்பு.. | | 2,87,250 | |
| | | 14,05,000 | 14,05,000 |

## 1965 மார்ச் 31-ல் முடியும் ஆண்டுக்கான நிகர வருவாய்க் கணக்கு

| | | ரூ. | | | ரூ. |
|---|---|---|---|---|---|
| கடனீட்டுப்பத்திர வட்டி | .. | 90,000 | வருவாய்க் கணக்கிலிருந்து கொண்டு வரப்பட்ட இருப்பு | .. | 2,87,250 |
| பங்காதாயம் வழங்கத்தக்க தக்க இருப்பு | .. | 1,97,250 | | | |
| | | 2,87,250 | | | 2,87,250 |

## 1965 மார்ச் 31-ற்குரிய பொது இருப்புநிலைக் குறிப்பு

| | | ரூ. | | | ரூ. |
|---|---|---|---|---|---|
| முதல் கணக்கின் இருப்பு | .. | 20,000 | நிலக்கரி, எண்ணெய், கழிவு முதலியவற்றின் சரக்கிருப்பு | .. | 10,000 |
| பல்வகைக் கடனீந்தோர் | .. | 1,00,000 | பல்வகைக் கடனாளிகள் | .. | 3,00,000 |
| தேய்மான நிதி | .. | 2,32,750 | ரொக்கமும், வங்கியிருப்பும் | .. | 3,00,000 |
| கடனீட்டுப்பத்திர நிலுவை | .. | 90,000 | | | |
| நிகர வருவாய்க் கணக்கின் இருப்பு | .. | 1,97,250 | | | |
| | | 6,40,000 | | | 6,40,000 |

**குறிப்பு :** பங்கொன்றுக்கு அழைப்புத் தொகை ரூ. 10ஐ 1965 மார்ச் 31-ல்தான் செலுத்தப்பட வேண்டியிருந்ததால், அழைப்பு நிலுவை மீதான வட்டி எழவில்லை.

**எடுத்துக்காட்டு 133**

கல்கத்தா சுரங்கக் கம்பெனியின் ஏடுகளிலிருந்து எடுக்கப் பட்ட 1970 சூன் 30-ற்குரிய இருப்புகள் கீழே கொடுக்கப் பட்டிருக்கின்றன. அவற்றிலிருந்து கீழ்க்கண்டவற்றைத் தயா ரிக்கவும் :

(அ) ஒற்றைக் கணக்கியலின் அடிப்படையில் கம்பெனி யின் இருப்புநிலைக் குறிப்பு.

(ஆ) இரட்டைக் கணக்கியலின் அடிப்படையில் (1) கம் பெனியின் முதல் கணக்கு (2) இருப்புநிலைக் குறிப்பு.

| | ரூ. |
|---|---|
| பங்குமுதல் : | |
| அதிகாரம் பெற்றதும், வெளியிட்டதும் : | |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 5,000 | |
| 6 சதவீதம் முன்னுரிமைப் பங்குகள் | 5,00,000 |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 5,000 | |
| நேர்மைப் பங்குகள் | 5,00,000 |
| நிலம் | 1,50,000 |
| கட்டடம் | 2,00,000 |
| 5 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் | 2,00,000 |
| காப்பு நிதி | 50,000 |
| சரக்கிருப்பு | 4,05,000 |
| முதலீடுகள் (காப்பு நிதி) | 50,000 |
| கடனீந்தோர் | 20,000 |
| இலாப-நட்டக் கணக்கு | 15,000 |
| உரிமைகோராப் பங்காதாயம் | 1,000 |
| பொறிவகை | 3,50,000 |
| கடனாளிகள் | 1,50,000 |
| ரொக்கம் | 5,000 |
| வங்கி மேல்வரைப் பற்று | 24,000 |

30—6—1969-ல் நிலைச் சொத்துகள் கீழ்க்கண்ட இருப்புகளைக் காட்டின :

| | ரூ. |
|---|---|
| நிலம் | 1,50,000 |
| கட்டடம் | 2,00,000 |
| பொறிவகை | 2,50,000 |

விடை :

(அ) ஒற்றைக் கணக்கின் அடிப்படையில் :

**கல்கத்தா சுரங்கக் கம்பெனியின்**
**30—6—1970-ற்குரிய இருப்புநிலைக் குறிப்புகள்**

| பொறுப்புகள் | | | சொத்துகள் | |
|---|---|---|---|---|
| | | ரூ. | | ரூ. |
| **பங்கு முதல் :** | | | **நிலைச் சொத்துகள் :** | |
| அதிகாரம் பெற்றது : | ரூ. | | நிலம் | 1,50,000 |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 5,000—6 சதவீதம் முன்னுரிமைப்பங்குகள் | 5,00,000 | | கட்டடம் | 2,00,000 |
| | | | பொறிவகை | 3,50,000 |
| ஒன்று ரூ. 100 மதிப் புடைய 5,000 | | | முதலீடுகள் : | |
| நேர்மைப் பங்குகள் | 5,00,000 | 10,00,000 | முதலீடுகள் (காப்பு நிதி) | 50,000 |
| வெளியிட்டதும், செலுத்தப்பட்டதும் : | | | **நடப்புச் சொத்துகள், கடன், முன் பணம் :** | |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 5,000—6 சதவீதம் முன்னுரிமைப் பங்குகள், முழுதும் செலுத்தப்பெற்றவை | | 5,00,000 | அ. நடப்புச் சொத்துகள் : | |
| | | | சரக்கிருப்பு | 4,05,000 |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 5,000 நேர்மைப் பங்குகள், | | | கடனாளிகள் | 1,50,000 |
| முழுதும் செலுத்தப்பெற்றவை | | 5,00,000 | ரொக்கம் | 5,000 |

| | | | |
|---|---|---|---|
| **காப்பும், மிகுதியும் :** | | | |
| காப்பு நிதி .. | 50,000 | | |
| இலாப-நட்டக் கணக்கு .. | 15,000 | | |
| பிணைக் கடன் : | | | |
| 5 சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள் | 2,00,000 | | |
| பிணையற்ற கடன் : | | | |
| வங்கி மேல்வரைப் பற்று .. | 24,000 | | |
| **நடப்புப் பொறுப்புகளும், ஒதுக்குகளும்:** | | | |
| கடனீந்தோர் .. | 20,000 | | |
| உரிமைகோராப் பங்காதாயம் .. | 1,000 | | |
| | 13,10,000 | | 13,10,000 |

## (ஆ) இரட்டைக் கணக்கின் அடிப்படையில்

### 1970 ஜூன் 30-ல் முடியும் ஆண்டிற்கான முதல் பெறுதல் — செலுத்தல் கணக்கு

பற்று

| செலவினம் | சென்ற ஆண்டு இறுதி வரை செலவழித்தது | நடப்பாண்டில் செலவழித்தது | மொத்தச் செலவினம் |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| நிலம் ... | 1,50,000 | — | 1,50,000 |
| கட்டடம் ... | 2,00,000 | — | 2,00,000 |
| பொறிவகை ... | 2,50,000 | 1,00,000 | 3,50,000 |
| மொத்தம் ... | 6,00,000 | 1,00,000 | 7,00,000 |
| இருப்பு ... | — | — | 5,00,000 |
| | 6,00,000 | 1,00,000 | 12,00,000 |

வரவு

| பெறுதல் | சென்ற ஆண்டு இறுதிவரை பெற்றது | நடப்பு ஆண்டில் பெற்றது | மொத்தம் பெற்றது |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| **நேர்மைப் பங்குகள் :** | | | |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 5,000 நேர்மைப் பங்குகள் ... | 5,00,000 | — | 5,00,000 |
| **முன்னுரிமைப் பங்குகள் :** | | | |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 5,000—6% முன்னுரிமைப் பங்குகள் ... | 5,00,000 | — | 5,00,000 |
| கடனீட்டுப் பத்திரங்கள் ... | 2,00,000 | — | 2,00,000 |
| | 12,00,000 | — | 12,00,000 |

## கல்கத்தா சுரங்கக் கம்பெனி

## 1970 ஜூன் 30-ற்குரிய பொது இருப்புநிலைக் குறிப்பு

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| முதல் கணக்கின் இருப்பு | 5,00,000 | சரக்கிருப்பு | 4,05,000 |
| கடனீந்தோர் | 20,000 | கடனாளிகள் | 1,50,000 |
| வங்கி மேல்வரைப் பற்று | 24,000 | முதலீடுகள் | 50,000 |
| உரிமைகோராப் பங்காதாயம் | 1,000 | ரொக்கம் | 5,000 |
| நிகர வருவாய்க் கணக்கு | 15,000 | | |
| காப்பு நிதி | 50,000 | | |
| | 6,10,000 | | 6,10,000 |

## இரட்டைக் கணக்கு முறையின் பயனும் குறைபாடுகளும்

**பயன்**

(1) பொதுமக்களிடமிருந்து மொத்தம் திரட்டிய முதலைத் தெளிவாக இம் முறை உணர்த்துகிறது. இவ்வாறு திரட்டப் பட்ட முதலில் எந்தவளவு நிலைச் சொத்துகட்காகச் செலவழிக்கப் பட்டிருக்கிறதென்பதையும் விளக்கமாகத் தெளிவுபடுத்துகிறது. முற்றுரிமை அடிப்படையில் அமைக்கப்பெறும் இப் பொதுப் பயன் நிறுவனங்களைப் பொருத்தவரை இது மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும். எனவே, பொதுமக்களின் பணம் தகாத முறை யில் பயன்படுத்தப்படவில்லையென்பதை இதன் துணை கொண்டு அனைவரும் அறியும் வாய்ப்பு ஏற்படுகிறது.

(2) இரட்டை கணக்கின் முறைப்படி நிலைச் சொத்துகள் நிலையாக வைத்திருக்கப்பட வேண்டும். அவற்றின் மீது ஏற்கப் படும் பழுது பார்க்கும் செலவும், புதுப்பிப்பதற்காகும் செலவும் அல்லது மறு அமர்த்தீட்டுச் (replacement) செலவும் நடை முறை வருவாயிலிருந்து ஏற்கப்பட வேண்டும். இதன் காரண மாக நிலைச் சொத்துகளின் மதிப்பினை அதே அளவில் வைத்திருக்க

முடிகிறது. அத்துடன் அவற்றை நன்கு பராமரிக்க ஆகும் செல வினை நடைமுறை வருவாயிலிருந்து ஏற்பதால் சொத்துகளை நன் னிலையில் வைத்திருக்க தொகை ஒதுக்கிய பின்னரே பங்காதா யத்தை வழங்க முடிகிறது.

(3) முதல் பற்றிய தகவல்கள் அனைத்தையும் முதல் பெறுதல் – செலுத்தல் கணக்கினை நோக்கின் தெரிந்துகொள்ள முடிகிறது. இதன் வருவாய்ப் பகுதியில் பங்குநர்களிடமிருந்தும், கடனீட்டுப்பத்திரதாரர்களிடமிருந்தும் பிற நீண்டகாலக் கடன் கள் வாயிலாகவும் எவ்வளவு தொகை பெறப்பட்டதென்பதைத் தெரிந்து கொள்கிறோம். இக் கணக்கின் பற்றுப் பகுதியிலிருந்த பல்வகைச் சொத்துகட்காக எவ்வளவு செலவழிக்கப்பட்டதென் பதை எளிதில் புரிந்துகொள்கிறோம்.

**குறைபாடுகள்**

(1) முதல் பெறுதல்—செலுத்தல் கணக்கில் நிலைச் சொத்து கள் மீது தேய்மானம் நீக்கப்பெறாத காரணத்தால், சொத்துகள் தொடக்க மதிப்பிலேயே காட்டப்படுகின்றன. சொத்துகளின் மதிப்பு மிகவும் குறைந்திருந்தபோதிலும், அவை முற்றிலும் பயன்படுத்தப்பட்டுக் கைவிடப்பட்டிருப்பினும் அல்லது அவை மதிப்பை முழுதும் இழந்திருப்பினும், சொத்துகள் தொடக்க மதிப்பிலேயே காட்டப்பெறுவதால், அவற்றின் உண்மை மதிப்பை இருப்புநிலைக் குறிப்பு, படம்பிடித்துக் காட்டுவதில்லையென்று குறை கூறப்படுகிறது.

ஆனால், இவ்வாறு கூறுவது சரியன்று. முதல் கணக்கில் சொத்துகள் தொடக்க மதிப்பிலேயே காண்பிக்கப்பெறினும், இவற்றின் தேய்மானத்திற்காகவும், வழக்கொழிதலின் காரண மாக மதிப்புக் குன்றிவிடுவதற்கும் வகை செய்யப்படுகிறது. தேய் மானக் காப்புக் கணக்குகளும், நிதிக் கணக்குகளும் வருவாய்க் கணக்கிலிருந்து ஏற்படுத்தப்படுகின்றன. இவ்வாறு தேய்மானத் திற்காக இரட்டைக் கணக்கு முறை வழி செய்வதுடன், சில வகைக் கம்பெனிகள் (ஒளி வழங்கு கம்பெனிகள், மின் வழங்கு கம்பெனிகள்) இவற்றிற்காக ஒதுக்குவதைக் கட்டாயப்படுத்தப் படுகின்றன.

(2) தொடக்கச் செலவுகள் போன்ற பெயரளவு சொத்து களும் முதல் கணக்கில் இடம்பெறுகின்றன என்று குறை கூறப் படுகிறது. இது ஒரு குறையன்று. ஒற்றைக் கணக்கு முறையிலும்

இருப்புநிலைக் குறிப்பில் பல்வகைச் செலவினம் எனும் தலைப்பின் கீழ் இக் கணக்குகள் இடம்பெறுகின்றன.

(3) இம் முறை மிகவும் குழப்பம் வாய்ந்தது என்றும் பொதுமக்கள் இதனை எளிதாகப் புரிந்துகொள்ள முடிவதில்லை யென்றும் குறை கூறப்படுகிறது.

இக் குறைபாடு ஓரளவு உண்மையே. குறைபாடுகளையும், இக் கணக்கு முறையின் காரணமாக விளையும் பயனையும் ஆய்ந்து பார்த்தால் தெளிவாகும் பயன் ஒன்றுதான். அதாவது, முதலின வரவினங்களையும், முதலினச் செலவினங்களையும் தனியாகக் காட்டுகிறது. இவற்றை அறிய இரட்டைக் கணக்கு முறையைப் பின்பற்ற வேண்டிய தேவையில்லை. ஒற்றைக் கணக்கு முறையிலேயே இருப்புநிலைக் குறிப்புடன் சிறு குறிப்பையும் கொடுத்து விட்டால் இது பற்றிய விளக்கங்களைப் பெறலாம். இரட்டைக் கணக்கு முறையின் விளைவாகக் கூறப்படும் பயன்கள் அனைத்தையும் ஒரு சில மாற்றங்களுடன் ஒற்றைக் கணக்கு முறையிலேயே பெறலாம். எனவே, இரட்டைக் கணக்கு முறை தேவையில்லாத ஒன்றாகுமென்ற பரவலான கருத்துப் பல கணக்காயர்களிடையே நிலவுகிறது. இந்தியாவைப் பொருத்தவரை எவ்வகைக் கம்பெனிகளும் இரட்டைக் கணக்கு முறையில் கணக்கு அறிக்கைகளைத் தயாரிக்கவேண்டுமென்று எச் சட்டமும் கூறவில்லை. இந்திய பட்டையக் கணக்காயர்கள் நிறுவனம் (The Institute of Chartered Accountants of India) மின் வழங்கு கம்பெனிகளுக்கு மட்டில் இரட்டைக் கணக்கு முறையை வகுத்திருக்கிறது. ஆனால், சட்டப்படி இக் கம்பெனிகளும் இம் முறையைப் பின்பற்ற வேண்டுவதில்லை. காரணம், 1948-வது ஆண்டைய மின் வழங்கு சட்டத்தின் 6-வது, 7-வது அட்டவணையில் கண்டுள்ள முறைகளின்படி நிதிக் கணக்குகள் தயாரிக்கப்படவேண்டும்; 1956-வது கம்பெனிச் சட்டத்தின் 6-வது அட்டவணையில் கண்டுள்ளவாறு வெளியிட வேண்டிய ஆண்டுக் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டுமென்று தான் கூறுகின்றனவேயொழிய, இரட்டைக் கணக்கு அடிப்படையில் இவை தயாரிக்கப்பட வேண்டுமென்று கூறவில்லை. அத்துடன் 1956-வது ஆண்டைய இந்திய மின் வழங்கு விதிகளில் 26-வது விதியின்படி ஒவ்வொரு மின் வழங்கு கம்பெனியும் மாநில அரசிடமோ, மாநில மின் வாரியத்திடமோ சில புள்ளி விவர அறிக்கைகளைத் தயாரித்தளிக்க வேண்டுமென்று கூறுகிறது. பல வகைப் புள்ளிவிவர அறிக்கைகட்கும் பல்வகையான படிவங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் சில இரட்டைக் கணக்கு முறையில் தயாரிக்கப்பட வேண்டிய வகையில் அமைந்திருக்கின்றன; அவ்வளவே.

இவ்வாறு தயாரிக்கவேண்டிய படிவங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :

| படிவ எண் | விவரம் |
| --- | --- |
| I | பங்குமுதல், கடன் முதல் பற்றிய அறிக்கை (Statement of Share and Loan Capital). |
| II | முதலினச் செலவின அறிக்கை (Statement of Capital Expenditure). |
| III | விலக்கப்பட்ட நிலைச் சொத்துகளின் குறைக்கப் பட்ட அடக்க விலையை உணர்த்தும் அறிக்கை (Statement showing the written down cost of Fixed Assets retired). |
| IV | செயல் முறை வருவாய் அறிக்கை (Statement of operative Revenues). |
| V | செயல் முறை செலவின அறிக்கை (Statement of Operating Expenses). |
| VI | தேய்மான ஒதுக்கு அறிக்கை (Statement of provision for depreciation). |
| VII | நிகழ்வடைக் காப்பு அறிக்கை (Statement of Contingency Reserves). |
| VIII | வரி, பங்காதாயக் கட்டுப்பாட்டுக் காப்பு அறிக்கை (Statement of Tariffs and Dividends control reserve), |
| IX | நுகர்வோர் தள்ளுபடிக் காப்பு அறிக்கை (Statement of Consumers" Rebate Reserve). |

X மாநில அரசு இசைவு அளிக்கும் சிறப்புப் பகிர்வுக் கணக்குகள் அறிக்கை

(Statement of Special Appropriations permitted by the State).

XI நிகர வருவாய் — பகிர்வுக் கணக்கு அறிக்கை

(Statement of Net Revenue and Apropriation Account),

XII பொது இருப்புநிலைக் குறிப்பு

(General Balance Sheet).

**குறிப்பு :-**

1-வது, 2-வது அறிக்கைகள் இரட்டைக் கணக்கின் அடிப்படையில் தயாரிக்கப்படும் முதல் பெறுதல்—செலுத்தல் கணக்குப் போன்று இருக்கின்றன. 3-வது, 4-வது அறிக்கைகள் வருவாய்க் கணக்கிற்கு ஒப்பாவன. 10-வது கணக்கு நிகர வருவாய்க் கணக்கிற்கு ஒப்பாகும்.

எண். 1:

**19...... மார்ச் 31-ல் முடியும் ஆண்டிற்கான பங்கு முதல், கடன் முதல் அறிக்கை**
(Statement of Share and Loan Capital)

| முதல் பற்றிய விவரம் | ஆண்டுத் தொடக்க இருப்பு | நடப்பு ஆண்டில் பெற்றது | நடப்பு ஆண்டில் மீட்டது | ஆண்டு இறுதி இருப்பு | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | |
| அ. **பங்கு முதல் :** | | | | | |
| **அதிகாரம் பெற்ற முதல் :** | | | | | |
| ஒன்று ரூ.....வீதம்....சாதாரணப் பங்குகள் | | | | | |
| ஒன்று ரூ.....வீதம்....சதவீதம் முன்னுரிமைப் பங்குகள் | | | | | |
| **வெளியீட்டு முதல் :** | | | | | |
| ஒன்று ரூ.....வீதம்....நேர்மைப் பங்குகள் | | | | | |
| ஒன்று ரூ.....வீதம் ....சதவீதம் முன்னுரிமைப் பங்குகள் | | | | | |
| **எடுத்துக்கொண்ட முதல் :** | | | | | |
| ஒன்று ரூ.....வீதம்....நேர்மைப் பங்குகள் | | | | | |
| ஒன்று ரூ....வீதம்....சதவீதம் முன்னுரிமைப் பங்குகள் | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **அழைக்கப்பெற்ற முதல் :** | | | | | |
| ஒன்று ரூ.....வீதம்....நேர்மைப் பங்குகள் | | | | | |
| ஒன்று ரூ.....வீதம்....சதவீதம் முன்னுரிமைப் பங்குகள் | | | | | |
| கழி : அழைப்பு நிலுவை | | | | | |
| செலுத்தப்பெற்ற முதல் : | | | | | |
| **ஆ. முதல் காப்பு :** | | | | | |
| பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கு (Share forfeited A/c) | | | | | |
| பங்கு முனைமக் கணக்கு | | | | | |
| பிற (குறிப்பிடப்படவேண்டும்) | | | | | |
| மொத்த முதல் காப்பு : | | | | | |
| **இ. கடன் முதல் :** | | | | | |
| மாநில மின்வாரியக் கடனீட்டுப் பத்திரங்கள் : | | | | | |
| (ஒன்று ரூ.....வீதம்....சதவீதம் கடனீட்டுப் பத்திரங்கள்) | | | | | |
| பிற பிணைக் கடன்கள் | | | | | |
| பிணையற்ற கடன்களும், முன்பணமும் | | | | | |
| மொத்த கடன் முதல் : | | | | | |

பங்கு முதல், கடன் முதல் அறிக்கை—(தொடர்ச்சி)

| முதல் பற்றிய விவரம் | ஆண்டுத் தொடக்க இருப்பு | நடப்பு ஆண்டில் பெற்றது | நடப்பு ஆண்டில் மீட்டது | ஆண்டு இறுதி இருப்பு | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | |
| ஈ. **பிற முதல் :** | | | | | |
| மின் தொடர்புகட்காகவும், தெரு விளக்குகட்காகவும், நுகர்வோரிடமிருந்து (நகராட்சி நிறுவனங்கள் உள்பட) பெற்ற தொகை | | | | | |
| பிற இனங்கள் (குறிப்பிடப்பட வேண்டும்) | | | | | |
| பிற முதல் மொத்தம் | | | | | |
| மொத்தம் திரட்டிய முதல் : (அ + ஆ + இ + ஈ) | | | | | |

எண். II :

## 19...... திசம்பர் 31-ல் முடியும் ஆண்டிற்கான முதலினச் செலவின அறிக்கை
(Statement of Capital Expenditure)

| விவரம் | ஆண்டுத் தொடக்க இருப்பு | நடப்பாண்டில் சேர்த்தது | நடப்பாண்டில் விலக்கப்பட்டவை அறிக்கை 3-வது பத்தியின்படி | ஆண்டிறுதி இருப்பு | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | |
| அ. **புலனாகாச் சொத்துகள்** (Intangible Assets] | | | | | |
| 1. தொடக்கச் செலவுகள் .. | | | | | |
| 2. உரிமச் செலவு (Cost of Licence) .. | | | | | |
| 3. பிற செலவுகள் : *DC*-லிருந்து, *AC*-க்கு மாற்ற ஆகும் செலவுகள் முதலியவை .. | | | | | |
| மொத்த புலனாகாச் சொத்துகள் | | | | | |

19...... திசம்பர் 31-ல் முடியும் ஆண்டிற்கான முதலினச் செலவின அறிக்கை—(தொடர்ச்சி)

| விவரம் | ஆண்டுத் தொடக்க இருப்பு | நடப்பாண்டில் சேர்த்தது | நடப்பாண்டில் விலக்கப்பட்டவை அறிக்கை 3-வது பத்தியின்படி | ஆண்டு இறுதி இருப்பு | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | |
| ஆ. **நீர் அமுக்கு மின் விசை ஆலை (Hydraulic Power Plant)** | | | | | |
| 1. நிலமும் உரிமைகளும் .. | | | | | |
| 2. கட்டடங்களும், பொதுப் பொறியியல் பணிகளும், மின் ஆக்கம் நிலையப் பொறிகளையும் உள்ளடக்கியது. .. | | | | | |
| 3. நீர் மின் நிலையத்தின் பகுதியாகவுள்ள நீர் அமுக்க நிலையங்கள் | | | | | |
| 1. அணைகள், கால்வாய்கள் முதலியவை .. | | | | | |
| 2. சிமிட்டிக் குழாய்கள், இரும்புக் குழாய்கள், நீர் அமுக்குக் கட்டுப்பாட்டு வால்வுகள், பிற நீர் அமுக்குப் பொறிகள் .. | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. நீர் ஆழிகள் (Water Wheels) மின் ஆக்கப் பொறிகள், துணைக் கருவிகள் முதலியவை, ஆலை அடித்தளம் உள்பட .. | | | | | |
| 5. கம்பி வடங்கள் .. | | | | | |
| 6. மின் விசை நிலையக் கருவிகள் .. | | | | | |
| 7. பிற பொதுப் பொறியியல் பொறிகள் | | | | | |
| மொத்த நீர் அமுக்க மின்விசை ஆலை | | | | | |
| இ. **நீராவி மின் விசை ஆலை** (Steam Power Plant) | | | | | |
| 1. நிலமும் உரிமைகளும் .. | | | | | |
| 2. கட்டடங்களும், பொதுப் பொறியியல் பொறிகளும், மின் ஆக்க ஆலையும், கருவிகளும், ஆலை அடித்தளமும் உள்பட .. | | | | | |
| 3. கொதிகலன் தொழிற்சாலை (Boiler Plant) பொறிகள் உள்பட .. | | | | | |

19...... திசம்பர் 31-ல் முடியும் ஆண்டிற்கான முதலினச் செலவின அறிக்கை—(தொடர்ச்சி)

| விவரம் | ஆண்டுத் தொடக்க இருப்பு | நடப்பாண்டில் சேர்த்தது | நடப்பாண்டில் விலக்கப்பட்டவை அறிக்கை 3-வது பத்தியின்படி | ஆண்டிறுதி இருப்பு | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|
| | ரூ | ரூ. | ரூ. | ரூ. | |
| 4. பொறிகள், விசைஆழி (Turbines) உற்பத்திப் பொறிகள், துணைக் கருவிகள் முதலியவை .. | | | | | |
| 5. நீர் குளிர்ப்படுத்தும் முறை, குளிர்ப்படுத்தும் தூபிகளும், சுழல் நீர் முறைகளும் .. | | | | | |
| 6. கம்பி வடங்கள் .. | | | | | |
| 7. பல்வகை விசை இயந்திரங்களும் கருவிகளும் .. | | | | | |
| 8. பிற பொதுப் பொறியியல் பொறிகள் (குறிப்பிடப்படவேண்டும்) | | | | | |
| மொத்த நீராவி மின் விசை நிலையம் | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ச. அக எரிப்பு விசை ஆலை (Internal Combustion Power Plant) | | | | | |
| 1. நிலமும் உரிமைகளும் .. | | | | | |
| 2. கட்டடம், பொதுப் பொறியியல் பொறிகள், மின் ஆக்க ஆலையும், கருவிகளும் உள்பட .. | | | | | |
| 3. எஞ்சின்கள், மின் ஆக்கப் பொறிகள், துணைக் கருவிகள் முதலியவை, ஆலை அடித்தளம் உள்பட .. | | | | | |
| 4. நீர் குளிர்ப்படுத்தும் முறை, குளிர்ப் படுத்தும் தூபிகளும் சுழல் நீர் முறையும் உள்பட .. | | | | | |
| 5. மின் கம்பி வடங்கள் .. | | | | | |
| 6. பல்வகை மின் விசை இயந்திரங்களும் கருவிகளும் .. | | | | | |
| 7. பிற பொதுப் பொறியியல் பொறிகள் (குறிப்பிடப்படவேண்டும்) .. | | | | | |

19...... திசம்பர் 31-ல் முடியும் ஆண்டிற்கான முதலினச் செலவின அறிக்கை—(தொடர்ச்சி)

| விவரம் | ஆண்டு தொடக்க இருப்பு | நடப்பாண்டில் சேர்த்தது | நடப்பாண்டில் விலக்கப்பட்டவை அறிக்கை 3-வது பத்தியின் படி | ஆண்டிறுதி இருப்பு | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | |
| **விசை ஊடிணைப்பு ஆலை (உயர்ந்தளவு) அல்லது குறைந்தளவு மின் வலி** (Transmission Plant - High or Extra High Voltage) | | | | | |
| 1. நிலமும் உரிமைகளும் .. | | | | | |
| 2. கட்டடங்கள், பொதுப்பணிப் பொறியியல் ஆலைகள், விசை ஊடிணைப்பு ஆலைகளும் கருவிகளும் உள்பட .. | | | | | |
| 3. துணை நிலைய மின்விசை மாற்றியமைவுகள் (Sub Station Transformers) துணை மின் நிலையக் கருவிகள், பிற நிலையக் கருவிகள், ஆலை அடித்தளம் உள்பட .. | | | | | |
| 4. மின் கம்பி வடங்கள் .. | | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. தூபிகள், கொம்புகள் (Towers, Poles etc.) முதலியவை | | | | |
| மேநிலை மின் ஊடு கடத்திகள் | | | | |
| (i) இரும்புக் கம்பங்கள் அல்லது சிமிட்டிக் கம்பங்கள் துணையுடன் செல்லும் கம்பிகள் 13.2 கிலோ வாட் மின்வலி மேல் செயல்படுபவை .. | | | | |
| (ii) இரும்புக் கம்பங்கள் அல்லது சிமிட்டிக் கம்பங்கள் துணையுடன் செல்லும் பிற கம்பிகள் .. | | | | |
| (iii) அமுக்குக் கம்பங்கள் துணையுடன் இயங்கும் பிற கம்பிகள் .. | | | | |
| 6. (i) அடிநிலக் கம்பி வடங்களும், இணைப் பெட்டிகளும் (underground cables and joint boxes), தொடர்பறு பெட்டிகளும் (disconnecting boxes) உள்பட .. | | | | |
| (ii) மின் கம்பி வட குழாய் முறை மொத்த ஊடிணைப்பு ஆலை .. | | | | |

19...... திசம்பர் 31-ல் முடியும் ஆண்டிற்கான முதலினச் செலவின அறிக்கை—(தொடர்ச்சி)

| விவரம் | ஆண்டுத் தொடக்க இருப்பு | நடப்பாண்டில் சேர்த்தது | நடப்பாண்டில் விலக்கப்பட்டவை அறிக்கை 3-வது பத்தியின்படி | ஆண்டிறுதி இருப்பு | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | |
| ஊ. **வழங்கும் ஆலை (வினியோக ஆலை) (உயர் மின் வலி)** (Distribution Plant - High Voltage) | | | | | |
| 1. நிலமும் உரிமைகளும் .. | | | | | |
| 2. கட்டடம், அமைப்புகள், வழங்கும் ஆலையும் கருவிகளும் உடைய பொதுப் பணிப் பொறியியல் ஆலை உள்பட .. | | | | | |
| 3. துணை நிலைய மின் விசை மாற்றியமைவுகள், மின்விசை மாற்றியமைவு வெளிப்புறத் துணை நிலையக் கருவிகள், பிற நிலைய ஆய் கருவிகள், ஆலை அடித்தளம் உள்பட .. | | | | | |
| 4. கம்பி வடத் தொடர்புகள் .. | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5. தூபிகள், கம்பங்கள், மேநிலை மின் கடத்திகள், பிற வழிமுறைகள் | | | | | |
| (i) இரும்பு அல்லது சிமிட்டிக் கம்பங்கள் மேல் செல்லும் 13.2 கிலோ வாட்டுக்கும் மேலான மின் வலியில் இயங்கும் கம்பிகள் | | | | | |
| (ii) இரும்பு அல்லது சிமிட்டிக் கம்பங்கள் மேல் செல்லும் பிற கம்பிகள் .. | | | | | |
| (iii) மரக் கம்பங்கள் மேலும் செல்லும் கம்பிகள் .. | | | | | |
| 6. (i) அடிநிலக் கம்பி வடங்களும், இணைப் பெட்டிகளும், தொடர்பு அறு பெட்டிகளும் உள்பட .. | | | | | |
| (ii) மின் கம்பி வட குழாய் முறை | | | | | |
| 7. மின் கம்பிகள் .. | | | | | |
| 8. மின் அளவுமானிப் பொறிகள் (Meter equipment) .. | | | | | |
| மொத்தம் வழங்கு ஆலை — உயர் மின் வலி | | | | | |

19...... திசம்பர் 31-ல் முடியும் ஆண்டிற்கான முதலினச் செலவின அறிக்கை—(தொடர்ச்சி)

| விவரம் | ஆண்டுத் தொடக்க இருப்பு | நடப்பாண்டில் சேர்த்தது | நடப்பாண்டில் விலக்கப்பட்டவை அறிக்கை 3-வது பத்தியின்படி | ஆண்டிறுதி இருப்பு | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | |
| எ. **வழங்கும் ஆலை – நடுத்தர குறை மின் வலி** (Distribution Plant – Medium or Low Voltage) | | | | | |
| 1. நிலமும் உரிமைகளும் .. | | | | | |
| 2. கட்டடம், அமைப்புகள் .. | | | | | |
| 3. துணை நிலைய மின் மாற்றியமைவுகள், மின் விசை மாற்றியமைவு வெளிப்புற கட்டமைப்புகள், துணை நிலையக் கருவிகள், பிற நிலை ஆய்கருவிகள், ஆலை அடித்தளம் உள்பட .. | | | | | |
| 4. கம்பி வடத் தொடர்புகள் .. | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5. தூபி, கம்பங்கள், மேநிலை மின் கடத்திகள், பிற வழிமுறைகள் | | | | | |
| (i) இரும்பு அல்லது சிமிட்டிக் கம்பங்கள் மேல் செல்லும் கம்பிகள் | | | | | |
| (ii) மரக் கம்பங்கள் மேல் செல்லும் கம்பிகள் .. | | | | | |
| 6. (i) அடிநிலக் கம்பி வடங்களும், இணைப் பெட்டிகளும், தொடர்பறு பெட்டிகளும் உள்பட .. | | | | | |
| (ii) மின் கம்பி வட குழாய் முறை | | | | | |
| 7. மின் கம்பிகள் .. | | | | | |
| 8. மின் அளவுமானிப் பொறிகள் .. | | | | | |
| மொத்தம் வழங்கு ஆலை — நடுத்தர குறை மின் வலி .. | | | | | |
| ஏ. பொது விளக்குகள் (Public Lighting) | | | | | |
| 1. தெரு, அடையாள விளக்கு முறைகள் (Street and Signal Lighting System) | | | | | |

19...... திசம்பர் 31-ல் முடியும் ஆண்டிற்கான முதலினச் செலவின அறிக்கை—(தொடர்ச்சி)

| விவரம் | ஆண்டுத் தொடக்க இருப்பு | நடப்பாண்டில் சேர்த்தது | நடப்பாண்டில் விலக்கப்பட்டவை அறிக்கை 3-வது பத்தியின்படி | ஆண்டிறுதி இருப்பு | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | |
| ஐ. **பொதுத் துணைப் பொருட் சாதனங்கள்** (General Equipments) (பிற துணைத் தலைப்புகளின் கீழ் ஒதுக்கப் பெறாதவை) | | | | | |
| 1. நிலமும் உரிமைகளும் .. | | | | | |
| 2. கட்டடங்களும் அமைப்புகளும் .. | | | | | |
| 3. அலுவலக மனைத்துணைப் பொருள், துணைப் பொருள் சாதனங்கள் .. | | | | | |
| 4. போக்குவரத்து, துணைப் பொருள் சாதனங்கள் .. | | | | | |
| 5. ஆய்வுக் கூடம், மின் அளவுமானி, அளவுக் கருவிகள் .. | | | | | |
| 6. ஆலைப் பொறிகள், துணைப் பொருள் சாதனங்கள் .. | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. விடு கருவிகள், தொழில் துணைப் பொருள் சாதனங்கள் .. | | | | | |
| 8. செய்தித் தொடர்பு கருவிகள் .. | | | | | |
| 9. பொறிவகைத் துணைப்பொருள் சாதனங்கள் .. | | | | | |
| மொத்த பொருள் துணைப் பொருள் சாதனங்கள் .. | | | | | |
| பயன்படுத்தப்படும் மொத்த முதலீட்டுச் சாதனங்கள் .. | | | | | |

**குறிப்பு :**

1. ஊ 7-லும், எ. 7-லும் உள்ள முதலீட்டுச் செலவினங்கள் மின் வழங்குக் கட்டணங்கட்காக நுகர்வோர் செலுத்தியுள்ள தொகைகளையும் உள்ளடக்கும்.

2. சில இடங்கட்கான முதலீட்டுச் செலவினங்களைத் தனித்தனியாகக் கொடுக்க முடியவில்லை என்றாலும் உயர், நடுத்தர, குறை மின் வலி ஒரே கம்பங்களின் மேல் செல்லினும், கம்பிகளில் எடுத்துச் செல்லப்படினும், அவற்றிற்கான மொத்தத் தொகைகளைக் கொடுத்தால் போதும்.

3. 4-வது பத்தியில் நடப்பு ஆண்டில் விலக்கப்பட்டதென்று கொடுக்கப்பட்டிருப்பது:

(i) புலனாகாச் சொத்துகளைப் பொருத்தவரை நடப்பு ஆண்டில் நீக்கப்பட்ட தொகையைக் குறிக்கும்;

(ii) புலனாகும் சொத்துகளைப் பொருத்தவரை 1948 மின் வழங்கு சட்டத்தின் 6-வது அட்டவணையின் கீழ்த் தனிக் கணக்கிற்கு மாற்றப்பெற்ற சொத்துகளின் தொடக்க விலையைக் குறிக்கும்.

எண் III

வழக்கொழிவு, போதாமை, மிகுந்திருத்தல் — காரணமாக விலக்கப்பட்ட நிலைச் சொத்துகளின் குறைக்கப்பட்ட மதிப்பினை உணர்த்தும் அறிக்கை

| சொத்துக்கள் பற்றிய விவரங்கள் | ஆண்டுத் தொடக்கத்தில் சொத்துக்களின் குறைக்கப்பட்ட மதிப்பு (written down cost of the assets) | கடப்பாண்டில் விலக்கப் பட்ட சொத்துக்களின் குறைக்கப்பட்ட மதிப்பு (அறிக்கை II-4வது பத்தி கழி அறிக்கை V-8வது பத்தியின்படி) | கடப்பாண்டில் விற்கப் பட்ட சொத்துகளின் குறைக்கப்பட்ட மதிப்பு | கடப்பாண்டில் கிடைத்த தொகை (Amount realised) | குறைக்கப்பட்ட மதிப்பினும் மிகுதியாக உள்ள விற்பனைத் தொகையை "நிகழ்வடையாக் காப்புக் கணக்கிற்கு" மாற்றுதல், அறிக்கை VII-4வது பத்தியின்படி | கடப்பாண்டில் நீக்கப்பட்ட ஆண்டுத் தொகை அறிக்கை VII, பத்தி 7-ன்படி | கடப்பாண்டிறுதியில் உள்ள மதிப்புக்குறைக்கப் பட்ட சொத்துகளின் இருப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |

எண் IV :

## 19...... மார்ச் 31-ல் முடியும் ஆண்டிற்கான செயற்பாட்டு வருவாய் அறிக்கை
(Statement of Operating Revenues)

| வருவாய் விவரம் | சென்ற ஆண்டுக் கணக்கிற்குரிய தொகை | நடப்பாண்டுக் கணக்குத் தொகை | குறிப்புகள் |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | |
| **அ. ரொக்கமாகவும், கடனுகவும் மின் விற்பனை வருவாய் :** | | | |
| 1. குடியிருக்கும் வீடுகட்கானது: | | | |
| அ. விளக்குகளும் மின் விசிறிகளும் .. | | | |
| ஆ. வெப்பப்படுத்தல், சிறு மின்விசை .. | | | |
| 2. வியாபாரத்திற்கானது : | | | |
| அ. விளக்குகளும் மின் விசிறிகளும் .. | | | |
| ஆ. வெப்பப்படுத்தல், சிறு மின்விசை .. | | | |
| 3. தொழிற்சாலைகட்குரியது : | | | |
| அ. குறை, நடுத்தர மின் வலி .. | | | |
| ஆ. உயர் மின் வலி .. | | | |

19..... மார்ச் 31-ல் முடியும் ஆண்டிற்கான செயற்பாட்டு வருவாய் அறிக்கை—(தொடர்ச்சி)

| வருவாய் விவரம் | சென்ற ஆண்டுக் கணக்கிற்குரிய தொகை | நடப்பாண்டுக் கணக்குத் தொகை | குறிப்புகள் |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | |
| 4. பொது விளக்குகள். | | | |
| 5. பொது நீர் நிலையங்களும், வடிகால் இறைப்புக் குழாய்களும் (Public Water Works and Sewage Pumping Stations) .. | | | |
| 6. நீர்ப்பாசனம் .. | | | |
| 7. மேற்பரப்பு உழுவை (Traction) .. | | | |
| 8. விநியோக உரிமம் பெற்றோர்க்கு வழங்கும் மொத்த விற்பனை .. | | | |
| மின் விற்பனையின் வருவாய் .. | | | |
| ௫. **நுகர்வோரிடமிருந்து பல்வகை வருவாய் :** | | | |
| 1. வாடகை : | | | |
| அ. மின் அளவு மானிகள் .. | | | |

| | | | |
|---|---|---|---|
| ஆ. மின் மோட்டார்கள், மின் கருவிகள், மின் ஆய் கருவிகள் முதலியவை நுகர்வோருக்கு வாடகைக்கு விடப்பட்டது .. | | | |
| 2. மின் தொடர்பு கட்டணங்கள் .. | | | |
| 3. பொது விளக்குப் பேணுகை (பராமரிப்பு) நுகர்வோரிடமிருந்து பல்வகை வருவாயின் மொத்தம் .. | | | |
| இ. பிற வருவாய்கள் : | | | |
| 1. சரக்கு விற்பனை | | | |
| 2. விளக்குகள், பிற ஆய் பொறிகள் பழுது பார்த்தல் .. | | | |
| 3. மின் தீர்வை வசூலிக்கப் பெற்றதில் கழிவு .. | | | |
| 4. பிற பல்வகை இனங்கள் (குறிப்பிடப்பட வேண்டும்) பிற வருவாயின் மொத்தம் .. | | | |
| செயற்பாட்டு வருவாயின் மொத்தம் .. | | | |
| கழி : | | | |
| 5-வது அறிக்கையின்படி உள்ள மொத்த செயற்பாட்டுச் செலவுகள் நிகர பகுதி அல்லது பற்றுக்குறை, நிகர வருவாய்ப் பகிர்வுக் கணக்கிற்கு (11-வது அறிக்கை) எடுத்துச் செல்லப்படுகிறது. | | | |

எண் V

## 19...... மார்ச் 31-ல் முடியும் ஆண்டிற்கான செயற்பாட்டுச் செலவின அறிக்கை
(Statement of Operating Expenses)

| செலவு விவரம் | சென்ற ஆண்டுக் கணக்குக் குரிய தொகை | நடப்பாண்டுக் கணக்குத் தொகை | குறிப்புகள் |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | |
| அ. **நீர் அழுக்க மின்விசை ஆக்கம்** (Hydraulic Power Generation) | | | |
| (அ) செயற்பாடு (Operation): | | | |
| 1. மின் விசைக்கான நீர் | | | |
| 2. உராய்வுத் தடுப்புப் பொருள்களும் (Lubricants) பயன்படுத்தும் பிற சரக்குகளும் .. | | | |
| 3. நிலைய பல்வகைச் செலவுகள் .. | | | |
| 4. பொறிஞர்களின், கண்காணிப்பாளர்களின், அலுவலர்களின் மேற்பார்வையாளர்களின், பிற அலுவலர்களின் ஊதியம், படிகள், பணிக்கொடை முதலியவற்றின் உரிய விகிதம் .. | | | |
| 5. தொழிலர் கூலியும், பணிக் கொடையும் .. | | | |
| 6. நலக் காப்பு நிதிக்கு அல்லது அலுவலர் ஓய்வூதியத்திற்கு வழங்கியது .. | | | |
| மொத்த செயற்பாடு .. | | | |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) பேணுகை (பராமரிப்பு) (Maintenance) | | | |
| 1. மேற்பார்வை அலுவலர்களின் ஊதியம் .. | | | |
| 2. கட்டடங்களும், மின் ஆக்கியும், கருவிகளும் உள்ள பொதுப்பணிப் பொறியியல் ஆலை .. | | | |
| 3. நீர் மின் நிலைய முறையில் அடங்கியுள்ள நீர் அமுக்குப் பணிகள் | | | |
| (i) அணைக்கட்டுகள், வடிகால்கள், கால்வாய்கள், வரணைகள் முதலியவை .. | | | |
| (ii) சிமிட்டிக் குழாய்கள், இரும்புக் குழாய்கள், குளங்கள், மதகுகள், நீர் அமுக்குக் கட்டுப்பாட்டுத் தேக்குகள், பிற நீர் அமுக்குப் பணிகள் .. | | | |
| 4. நீர் சக்கரங்கள், மின் ஆக்கிகள், துணைப் பொருள் சாதனங்கள், ஆலை அடித்தளங்கள் உள்பட .. | | | |
| 5. கம்பிவடத் தொடர்புகள் .. | | | |
| 6. பல்வகை மின்விசைப் பொறியியற் சாதனங்கள் .. | | | |
| 7. பிற பொதுப் பொறியியற் பணிகள் (குறிப்பிடப்பட வேண்டும்) .. | | | |
| 8. நலக் காப்பு நிதிக்கு அல்லது அலுவலர் ஓய்வூதியத்திற்கு வழங்கியது .. | | | |
| மொத்தப் பேணுகைச் செலவு .. | | | |

**19...... மார்ச் 31-ல் முடியும் ஆண்டிற்கான செயற்பாட்டுச் செலவின அறிக்கை**—(தொடர்ச்சி)

| செலவு விவரம் | சென்ற ஆண்டுக் கணக்கிற் குரிய தொகை | நடப்பாண்டுக் கணக்குத் தொகை | குறிப்புகள் |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | |
| (இ) தேய்மானம் : | | | |
| நீர் அமுக்கு மின் விசை ஆக்கி மீதும், பிற இயந்திரச் சாதனங்கள் மீதும் தேய்மானம் (அறிக்கை 6-ன்படி) .. | | | |
| மொத்த நீர் அமுக்கு மின்விசைச் செலவுகள் .. | | | |
| ஆ. **நீராவி மின்விசையாக்கம்** (Steam Power Generation) | | | |
| (அ) செயற்பாடு | | | |
| 1. எரிபொருள் (நீராவி, எரிசாம்பல் விற்பனை நீங்கலாக) | | | |
| 2. உராய்வுத் தடுப்புப் பொருள்களும் (lubricants) பிற பயன்படு சரக்குகளும் .. | | | |
| 3. நீர் (தனியாக வாங்கப்பட்டிருப்பின்) .. | | | |
| 4. பல்வகைச் செலவினங்கள் .. | | | |

| | | |
|---|---|---|
| 5. பொறிஞர்களின், கண்காணிப்பாளர்களின், அலுவலர்களின், மேற்பார்வையாளர்களின், பிற அலுவலர்களின் ஊதியம், படிகள், பணிக்கொடை முதலியவற்றின் விகிதம் .. | | |
| 6. தொழிலர் கூலியும் பணிக்கொடையும் .. | | |
| 7. நலக் காப்பு நிதிக்கு அல்லது அலுவலர் ஓய்வூதியத்திற்கு வழங்கியது .. | | |
| மொத்தச் செயற்பாட்டுச் செலவு .. | | |
| (ஆ) பேணுகை (பராமரிப்பு) | | |
| 1. மேற்பார்வை அலுவலர்களின் ஊதியம் ... | | |
| 2. கட்டடங்களும், மின் ஆக்கியும், கருவிகளும் உள்ள பொதுப் பணிப் பொறியியல் ஆலை .. | | |
| 3. கொதிகலன் ஆலை அடித்தளம் உள்பட்ட இயந்திரச் சாதனங்கள் .. | | |
| 4. இயந்திரங்கள், விசையாழி, மின் ஆக்கிகள், துணைப் பொருட் சாதனங்கள், ஆலை அடித்தளம் உள்பட .. | | |
| 5. நீர் குளிர்ப்படுத்தும் முறை, குளிர் சாதனத் தூபிகள், சுழல் நீர் முறை உள்பட .. | | |
| 6. கம்பி வடத் தொடர்புகள் ... | | |

## 19...... மார்ச் 31-ல் முடியும் ஆண்டிற்கான செயற்பாட்டுச் செலவின அறிக்கை—(தொடர்ச்சி)

| செலவு விவரம் | சென்ற ஆண்டுக் கணக்கிற்குரிய தொகை | நடப்பாண்டுக் கணக்குத் தொகை | குறிப்புகள் |
| --- | --- | --- | --- |
| | ரூ. | ரூ. | |
| 7. பல்வகை விசை ஆலையும், இயந்திரச் சாதனங்களும் .. | | | |
| 8. பிற பொதுப் பொறியியற் பணிகள் (குறிப்பிடப்பட வேண்டும்) .. | | | |
| 9. நலக் காப்பு நிதிக்கு அல்லது அலுவலர் ஓய்வூதியத்திற்கு வழங்கியது .. | | | |
| மொத்தப் பேணுகைச் செலவு .. | | | |
| (இ) தேய்மானம் | | | |
| நீராவி மின்விசையாக்கி, இயந்திரச் சாதனங்கள்மீது தேய்மானம் (6ஆவது அறிக்கையின்படி) .. | | | |
| மொத்த நீராவி மின்விசையாக்கிச் செலவுகள் .. | | | |

**இ. அக எரிப்பு மின்விசையாக்கம்** (Internal Combustion Power Generation)

| | | | |
|---|---|---|---|
| (அ) செயற்பாடு | | | |
| 1. எரிபொருள் .. | | | |
| 2. உராய்வுத் தடுப்புப் பொருள்கள், பிற பயன்படு சரக்குகள் .. | | | |
| 3. நீர் (தனியாக வாங்கியிருப்பின்) .. | | | |
| 4. பல்வகைச் செலவினங்கள் .. | | | |
| 5. பொறிஞர்களின், கண்காணிப்பாளர்களின், அலுவலர்களின், மேற்பார்வையாளர்களின், பிற அலுவலர்களின் ஊதியம், படிகள், பணிக்கொடை முதலியவற்றின் உரிய விகிதம் .. | | | |
| 6. தொழிலர் கூலியும் பணிக்கொடையும் .. | | | |
| 7. நலக் காப்பு நிதிக்கு அல்லது அலுவலர் ஓய்வூதியத்திற்கு வழங்கியது .. | | | |
| மொத்தச் செயற்பாட்டுச் செலவு .. | | | |

19...... மார்ச் 31-ல் முடியும் ஆண்டிற்கான செயற்பாட்டுச் செலவின அறிக்கை—(தொடர்ச்சி)

| செலவு விவரம் | சென்ற ஆண்டுக் கணக்கிற்குரிய தொகை | நடப்பாண்டுக் கணக்குத் தொகை | குறிப்புகள் |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | |
| ஆ. பேணுகை (Maintenance) | | | |
| 1. மேற்பார்வை அலுவலரின் ஊதியம் .. | | | |
| 2. கட்டடங்களும், மின்னுக்கியும், கருவிகளும் உள்ள பொதுப்பணி பொறியியல் ஆலை .. | | | |
| 3. இயந்திரங்கள், மின் ஆக்கிகள், துணைப் பொருள் சாதனங்கள், அடித்தளங்கள் உள்பட .. | | | |
| 4. நீர் குளிர்ப்படுத்தும் முறை, குளிர்ச் சாதனத் தூபிகள், சுழல் நீர் முறைகள் உள்பட .. | | | |
| 5. கம்பிவடத் தொடர்புகள் .. | | | |
| 6. பல்வகை மின்விசை இயந்திரங்களும் சாதனங்களும் | | | |
| 7. பிற பொதுப் பொறியியற் பணிகள் (குறிப்பிடப்பட வேண்டும்) .. | | | |
| 8. நலக்காப்பு நிதிக்கு அல்லது அலுவலர் ஓய்வூதியத்திற்கு ஒதுக்கியது .. | | | |
| மொத்தப் பேணுகைச் செலவு .. | | | |

(இ) தேய்மானம்

உள் எரி மின்விசையாக்கி, இயந்திரச் சாதனங்களின்மீது தேய்மானம் (அறிக்கை 6-ன்படி) ..

மொத்த உள் எரி மின்விசையாக்கிச் செலவுகள் ..

ஈ. **விசை வாங்கியது** (Power Purchased)

மொத்த உற்பத்திச் செலவுகள் (அ + ஆ + இ + ஈ)

உ. **ஊடிணைப்பு (உயர் அல்லது அதிக உயர் மின் வலி)** (Transmission-High or Extra Voltage)

(அ) செயற்பாடும் பேணுகையும்

1. பொறிஞர்களின், கண்காணிப்பாளர்களின், அலுவலர்களின், மேற்பார்வையாளர்களின், பிற அலுவலர்களின் ஊதியம், படிகள், பணிக்கொடைகள் முதலியவற்றின் உரிய விகிதம் ..
2. துணை நிலையத் தொழிலர் கூலியும் பணிக்கொடையும் ..
3. மின் கம்பி ஊழியர்கள், கூலியும், பணிக்கொடையும் ..
4. கட்டடங்களும், அமைப்புகளும், மின் வழங்கு ஆலையும், இயந்திரங்களும் உடைய பொதுப் பொறியியற் பணிகள் ..

## 19...... மார்ச் 31-ல் முடியும் ஆண்டிற்கான செயற்பாட்டுச் செலவின அறிக்கை—(தொடர்ச்சி)

| செலவு விவரம் | சென்ற ஆண்டுக் கணக்கிற் குரிய தொகை | நடப்பாண்டுக் கணக்குத் தொகை | குறிப்புகள் |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | |
| 5. துணை நிலைய மின்விசை மாற்றியமைவுகள், திறந்த வெளி மின்விசை மாற்றியமைவுக் கட்டமைப்புகள், துணை நிலையச் சாதனங்கள், பிற நிலையாய்வுப் பொறிகள், ஆலை அடித்தளங்கள் உட்பட .. | | | |
| 6. கம்பிவடத் தொடர்புகள் .. | | | |
| 7. தூபிகள், கம்பங்கள், மேநிலைக் கடத்திகள், பிற வழி முறைகள் | | | |
| (i) 13.2 கிலோ வாட்டிற்கும் மேலான மின் வலியில் இயங்கும் இரும்பு அல்லது சிமிட்டிக் கம்பங்கள் மேல் செல்லும் கம்பிகள் .. | | | |
| (ii) இரும்பு அல்லது சிமிட்டிக் கம்பங்கள் மேல் செல்லும் பிற கம்பிகள் .. | | | |
| (iii) மரக் கம்பங்கள் மேல் செல்லும் கம்பிகள் .. | | | |
| 8. (i) அடிநிலக் கம்பங்களும், இணைப்பெட்டிகளும், தொடர்பறு பெட்டிகளும் உடைய பிற வழிமுறைகள் .. | | | |
| (ii) மின் கம்பிவடக் குழாய் முறை .. | | | |

| | | | |
|---|---|---|---|
| 9. நலக் காப்பு நிதி அல்லது அலுவலர் ஓய்வூதியத்திற்கு வழங்கியது .. | | | |
| (ஆ) ஊடிணைப்பு இயந்திரங்கள், கருவிகள் மீது தேய்மானம் (அறிக்கை 6-ன் படி) .. | | | |
| மொத்த ஊடிணைப்புச் செலவுகள் .. | | | |
| ஊ. **மின் வழங்கல் – வினியோகம் (உயர் மின் வலி)** (Distribut on – High Voltage) | | | |
| (அ) செயற்பாடும் பேணுகையும் | | | |
| 1. பொறிஞர்களின், கண்காணிப்பாளர்களின், அலுவலர்களின், மேற்பார்வையாளர்களின், பிற அலுவலர்களின் ஊதியம், படிகள், பணிக்கொடைகள் – முதலியவற்றின் உரிய விகிதம் .. | | | |
| 2. துணை நிலையத் தொழிலரின் கூலியும் பணிக்கொடையும் | | | |
| 3. மூலக் கம்பித் தொழிலரின் கூலியும் பணிக்கொடையும் | | | |
| 4. கட்டடங்களும், அமைப்புகளும், மின் வழங்கு ஆலையும், இயந்திரச் சாதனங்களும் உடைய பொதுப் பொறியியற் பணிகள் .. | | | |

19...... மார்ச் 31-ல் முடியும் ஆண்டிற்கான செயற்பாட்டுச் செலவின அறிக்கை—(தொடர்ச்சி)

| செலவு விவரம் | சென்ற ஆண்டுக் கணக்கிற் குரிய தொகை | நடப்பாண்டுக் கணக்குத் தொகை | குறிப்புகள் |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | |
| 5. துணை நிலைய மாற்றியமைவுகள், திறந்த வெளியிலுள்ள மின்விசை மாற்றியமைவுக் கட்டமைப்புகள், பிற நிலையாய்வுக் கருவிகள், ஆலை அடித்தளங்கள் உள்பட | | | |
| 6. கம்பிவடத் தொடர்புகள் .. | | | |
| 7. தூபிகள், கம்பங்கள், மேநிலை மின் கடத்திகள், பிற வழிமுறைகள் | | | |
| (i) 13.2 கிலோ வாட்டிற்கும் மேலான மின் வலியில் இயங்கும் இரும்பு அல்லது சிமிட்டிக் கம்பங்கள் மேல் செல்லும் கம்பிகள் .. | | | |
| (ii) இரும்பு அல்லது சிமிட்டிக் கம்பங்கள் மேல் செல்லும் பிற கம்பிகள் .. | | | |
| (iii) மரக் கம்பங்கள் மேல் செல்லும் கம்பிகள் .. | | | |

| | | | |
|---|---|---|---|
| 8. (i) அடிநிலக் கம்பிவடங்கள், இணைப்பெட்டிகள், தொடர்பறு பெட்டிகளும் உடைய பிற வழி முறைகள் .. | | | |
| (ii) மின் கம்பிவடக் குழாய் முறை .. | | | |
| 9. மின் செல்லும் கம்பிகள் .. | | | |
| 10. மின் அளக்கும் பொருட் சாதனங்கள் .. | | | |
| 11. நலக் காப்பு நிதிக்கு அல்லது அலுவலர் ஓய்வூதியத்திற்கு வழங்கியது .. | | | |
| (ஆ) மின் வழங்கு இயந்திரங்கள், துணைக் கருவிகள் மீது தேய்மானம் (அறிக்கை 6-ன்படி) .. | | | |
| மொத்த (உயர் மின் வலி) வழங்கு செலவுகள் .. | | | |
| எ. **மின் வழங்கல் – வினியோகம் (நடுத்தர, குறை மின்வலி** (Distribution – Medium or Low Voltage) | | | |
| (அ) செயற்பாடும் பேணுகையும் | | | |
| 1. பொறிஞர்களின், கண்காணிப்பாளர்களின், அலுவலர்களின், மேற்பார்வையாளர்களின், பிற அலுவலர்களின் ஊதியம், படிகள், பணிக்கொடை முதலியவற்றின் உரிய விகிதம் .. | | | |

19...... மார்ச் 31-ல் முடியும் ஆண்டிற்கான செயற்பாட்டுச் செலவின அறிக்கை—(தொடர்ச்சி)

| செலவு விவரம் | சென்ற ஆண்டுக் கணக்கிற் குரிய தொகை | நடப்பாண்டுக் கணக்குத் தொகை | குறிப்புகள் |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | |
| 2. தொழிலர் கூலியும் பணிக்கொடையும் | | | |
| 3. கட்டடங்களும், அமைப்புகளும், ஊடிணைப்பு இயந்திரங்களும், கருவிகளும் உடைய பொதுப் பொறியியற் பணிகள் .. | | | |
| 4. துணை நிலைய மின் மாற்றியமைவுகள், திறந்த வெளியிலுள்ள மின்விசை மாற்றியமைவுக் கட்டமைப்புகள், துணை நிலையக் கருவிகள், பிற நிலையாய்வுக் கருவிகள், ஆலை அடித்தளங்கள் உள்பட .. | | | |
| 5. கம்பிவடத் தொடர்புகள் .. | | | |
| 6. தூபிகள், கம்பங்கள், மேநிலை மின் கடத்திகள், பிற வழிமுறைகள் | | | |
| (i) இரும்புக் கம்பங்கள் அல்லது சிமிட்டிக் கம்பங்கள் மேல் செல்லும் கம்பிகள் .. | | | |
| (ii) மரக் கம்பங்கள் மீது செல்லும் கம்பிகள் .. | | | |

| | | | |
|---|---|---|---|
| 7. (i) அடிநிலக் கம்பிவடம், இணைப்பெட்டிகள், தொடர்பறு பெட்டிகள் உள்ள வழிமுறைகள் | | | |
| (ii) மின் கம்பிவடக் குழாய் முறை .. | | | |
| 8. மின் செல்லும் கம்பிகள் .. | | | |
| 9. மின் அளக்கும் இயந்திரங்கள் .. | | | |
| 10. நலக் காப்பு நிதிக்கு அல்லது அலுவலர் ஓய்வூதியத்திற்கு வழங்கியது .. | | | |
| (ஆ) மின் வழங்கு இயந்திரங்கள், துணைக் கருவிகள் மீது தேய்மானம் (அறிக்கை 6-ன்படி) .. | | | |
| மொத்த (நடுத்தர, குறை மின் வலி) வழங்கு செலவுகள் | | | |
| ஏ. **பொது விளக்குகள் (Public Lighting)** | | | |
| (அ) செயற்பாடும், பேணுகையும் | | | |
| 1. செயற்பாடும், பேணுகையும் .. | | | |
| 2. விளக்குகளைப் புதுப்பித்தல் | | | |
| (ஆ) பொது விளக்கு முறை மீதும், இயந்திரங்கள் மீதும் தேய்மானம் (அறிக்கை 6-ன்படி) .. | | | |
| மொத்தப் பொது விளக்குச் செலவுகள் .. | | | |

19...... மார்ச் 31-ல் முடியும் ஆண்டிற்கான செயற்பாட்டுச் செலவின அறிக்கை—(தொடர்ச்சி)

| செலவு விவரம் | சென்ற ஆண்டுக் கணக்கிற் குரிய தொகை | நடப்பாண்டுக் கணக்குத் தொகை | குறிப்புகள் |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | |
| ஐ. **நுகர்வோருக்கு மின் வழங்கல், மின் அளவுமானி பார்த்தல், கட்டணச் சீட்டு (பில்) தயாரித்தல், தண்டல், கணக்கு எழுதுதல், மின் விற்பனைப் பெருக்கல் முதலியவை** (Consumers' Servicing, Meter Reading, Billing, Collecting, Accounting, Sales Promoting etc.,) | | | |
| 1. பொறிஞர்களின், செயலர்களின், கணக்காயர்களின், பிற அலுவலர்களின் ஊதியம், படிகள், பணிக் கொடைகள் முதலியவற்றின் உரிய விகிதம் .. | | | |
| 2. மின் அளவுமானி பார்த்தலும் மேற்பார்வையும் .. | | | |
| 3. கட்டணச் சீட்டுத் தயாரித்தல், வசூலித்தல், கணக்கு எழுதுதல் .. | | | |
| 4. கண்காட்சிகள், விளம்பரங்கள் .. | | | |
| 5. விற்பனை, ஒப்பந்தப் பணிகள் .. | | | |
| 6. பல்வகைச் செலவுகள் .. | | | |

| | | | |
|---|---|---|---|
| 7. நலக் காப்பு நிதிக்கு அல்லது அலுவலக ஓய்வு விகிதத்திற்கு வழங்கியது .. | | | |
| 8. பொதுச் சொத்துகள், கருவிகள் மீது தேய்மானம் (பிற துணைத் தலைப்புகள் ஒதுக்கப்பெறுதவை) (அறிக்கை 6-ன் படி) .. | | | |
| ஒ. **பொது அலுவலகச் செலவுகள்** (General Establishment Charges) | | | |
| 1. பொது அலுவலர்களின், செயல் அலுவலர்களின் ஊதியம், பணிகள், பணிக்கொடை முதலியவற்றின் உரிய விகிதம் .. | | | |
| 2. பொது அலுவலக அலுவலர்களின் ஊதியம், கூலி, பணிக்கொடை முதலியவை .. | | | |
| 3. மேற்பார்வைக்காக ஊராட்சி அலுவலகத்திற்கு வழங்கியது (ஊராட்சி உரிமம் பெற்றேர்க்கு மட்டும் பொருந்தக் கூடியது) .. | | | |
| 4. அலுவலர்களின், பிற ஊழியர்களின் பயணச் செலவுகளும், பிற செலவுகளும் .. | | | |
| 5. வாடகையும் வழியுரிமையும் (Wayleaves) .. | | | |
| 6. கட்டணங்களும் வரிகளும் .. | | | |
| 7. பொது அலுவலகச் செலவுகளும், காட்சி அறைப் பேணுகைச் செலவுகளும் .. | | | |

19...... மார்ச் 31-ல் முடியும் ஆண்டிற்கான செயற்பாட்டுச் செலவின அறிக்கை—(தொடர்ச்சி)

| செலவு விவரம் | சென்ற ஆண்டுக் கணக்கிற்குரிய தொகை | நடப்பாண்டுக் கணக்குத் தொகை | குறிப்புகள் |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | |
| 8. அலுவலகக் கட்டடங்கள், ஊழியர் குடியிருப்புகள், மனைத்துணைப் பொருள், அலுவலகப் பொறிகள் முதலியவற்றிற்கான பழுது பார்க்கும் செலவும், பேணுகைச் செலவும் .. | | | |
| 9. பிற துணைத் தலைப்புகட்கு எடுத்துச்செல்லப்பெறாத அலுவலகப் பொதுக் கட்டடங்கள், மனைத்துணைப் பொறிகள் மீதான தேய்மானம் (அறிக்கை 6-ன்படி) | | | |
| 10. தணிக்கைப் பணிகள் : | | | |
| (அ) கம்பெனி தணிக்கையாளர் .. | | | |
| (ஆ) சட்டத்தின் கீழ் அமர்த்தப்படும் தணிக்கையாளர் .. | | | |
| 11. சட்டச் செலவுகள் .. | | | |
| 12. ஈட்டுறுதிச் செலவுகள் .. | | | |

| | | | |
|---|---|---|---|
| 13. காப்பு நல நிதிக்கு அல்லது அலுவலர் ஓய்வூதியத்திற்கு வழங்கியது ... | | | |
| மொத்த பொது அலுவலகச் செலவுகள் ... | | | |
| **ஓ. பிற செலவுகள்** | | | |
| (அ) கீழ்க்கண்டவை மீது செலுத்திய, கூடியுள்ள வட்டி | | | |
| (i) மாநில மின் வாரியம் வழங்கிய கடன்கள், முன்பணம் | | | |
| (ii) தேய்மான நிதி ... | | | |
| (iii) நுகர்வோரின் காப்புத் தொகை ... | | | |
| (ஆ) நீக்கிய வராக் கடன் ... | | | |
| (இ) பிற செலவினங்கள் (குறிப்பிடப்படவேண்டும்) ... | | | |
| மொத்த பிற செலவினங்கள் ... | | | |
| **ஔ. நிர்வாகச் செலவுகள்** | | | |
| 1. இயக்குநர் கட்டணம், செலவுகள், கடன்பத்திர பொறியாளர், கட்டணங்கள் ஏதேனும் இருப்பின் ... | | | |
| 2. செயல் முகவரின் சாதாரண ஊதியம் ... | | | |
| 3. செயல் முகவரின் அலுவலகப் படிகள் ... | | | |
| மொத்த நிலைச் செலவுகள் அறிக்கை 4-ற்கு மாற்றப் பெறும் மொத்த செயற்பாட்டுச் செலவு ... | | | |

எண் VII

## 19...... மார்ச் 31-ல் முடியும் ஆண்டுக்கான நிகழ்வடைக் காப்பு அறிக்கை
(Statement of Contingencies Reserve)

| விவரம் | ஆண்டுத் தொடக்கத்தில் இருப்பு | நடப்பாண்டில் சேர்த்துக் கொள்ளப்பட்டவை | | | நடப்பாண்டில் நீக்கப்பட்டவை | | | நடப்பாண்டின் இறுதியில் உள்ள இருப்பு | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | நடப்பாண்டில் பகிர்வுகள் | 1948, மின் வழங்கு சட்டம், 6வது இணைப்பில் 9வது பத்தியின்படி சேர்த்தது, அறிக்கை III 6வது பத்தியின்படி | மொத்தம் | 1948, மின் வழங்கு சட்டம், 6வது இணைப்பு VIIவது பத்தியில் 3வது துணைப்பத்தியின் கீழ்த் தவணைத் தொகை அறிக்கை III 7வது பத்தியின்படி | 1948, மின் வழங்கு சட்டம் 6வது இணைப்பு 5வது பத்தியின் கீழ்ச் செலவுகள்/நட்ட ஈடுகள் | மொத்தம் | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | |

குறிப்பு: *1948 மின் வழங்கு சட்டம், ஆறுவது இணைப்பு, IV (2)வது பத்தியின் விதிப்படி, நிகழ்வடையாக் காப்பிலிருந்து ரூ......... முதலீடு செய்யப்பட்டிருககிறது.*

எண் VIII

## 19...... மார்ச் 31-ல் முடியும் ஆண்டுக்கான
## வரி, பங்காதாயக் கட்டுப்பாட்டுக் காப்புக் கணக்கறிக்கை
(Statement of Tariffs and Dividends Control Reserve Account)

| விவரங்கள் | ஆண்டுத் தொடக்கத்தில் இருப்பு | நடப்பாண்டில் பகிரப்பட்டது (Appropriated) | நடப்பாண்டில் எடுத்துக் கொண்டது காரணத்தைக் குறிப்புப் பத்தியில் கொடுக்க வேண்டும் | ஆண்டிறுதியில் இருப்பு | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | |

எண் IX

**19...... மார்ச் 31-ல் முடியும் ஆண்டுக்கான நுகர்வோர் தள்ளுபடிக் காப்புக் கணக்கறிக்கை**
(Statement of Consumers' Rebate Reserve Account)

| விவரம் | ஆண்டுத் தொடக்கத்தில் இருப்பு | 1948 மின் வழங்கு சட்டம், ஆறுவது இணைப்பின் II (1) வது பத்தியின் கீழ் நுகர்வோர்க்கு நடப்பாண்டில் வழங்கியது | நடப்பாண்டில் பகிர்ந்தது (Appropriated) | ஆண்டிறுதியில் உள்ள இருப்பு | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | |

எண் X

## மாநில அரசு ஒப்புதலளித்துள்ள சிறப்புப் பகிர்வுகளின் அறிக்கை
(Statement of Special Appropriations permitted by State Government)

| விவரங்கள், பகிர்வுக்கு ஒப்புதல் வழங்கிய, மாநில அரசின் இசைவைக் காட்டும் எண் | ஆண்டுத் தொடக்கத்தில் இருப்பு | நடப்பாண்டில் பகிர்ந்ததின் (ஒதுக்கியதின்) காரணமாகச் சேர்த்தது | நடப்பாண்டில் மறு பகிர்வின் காரணமாக மாற்றப்பட்டது, குறிப்புப் பத்தியில் விளக்கம் தரப்பட வேண்டும். | ஆண்டிறுதியில் இருப்பு | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | |

எண் XI

## 19...... மார்ச் 31-ல் முடியும் ஆண்டிற்கான நிகர வருவாய்—பகிர்வுக் கணக்கு அறிக்கை
(Statement of Net Revenue and Appropriation Account)

| கடந்த ஆண்டுக்குரிய தொகை | விவரம் | தொகை | கடந்த ஆண்டுக்குரிய தொகை | விவரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| ரூ. | | ரூ. | ரூ. | | ரூ. |
| | 1. கடந்த ஆண்டு நட்டம் கீழ்க் கொண்டுவரப்பட்டது. | | | 1. சென்ற ஆண்டுக் கணக்கிலிலிருந்து இலாப இருப்புக் கீழ்க்கொண்டுவரப்படுவது. | |
| | 2. அறிக்கை IV-ன்படி நிகர பற்றுக்குறை. | | | 2. நிகர பகுதி, அறிக்கை IV-ன் படி | |
| | 3. பகிர்வுகள் (ஊராட்சி நிறுவனங்கட்கு மட்டும்). | | | 3. கடனீட்டுப் பத்திரங்கள்மீதும் முதலீடுகளின் மீதும் வட்டி. | |
| | அ. கடன் முதல் மீது வட்டி | | | 4. பிற வரவுகள், எ. கா. வாடகை, மாற்றுக் கட்டணம் முதலியவை. | |
| | ஆ. கடன் முதல் மீட்புத் தவணை | | | 5. நட்ட இருப்புக் கீழ் எடுத்துச் செல்லப்படுவது. | |
| | இ. பொதுக் கட்டணங்கள் | | | | |
| | 4. வருமானம் மீதும், இலாபத்தின் மீதும் செலுத்திய வரி | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. புலனுகாச் சொத்துகளில் நீக்கப்படும் தவணைத் தொகை | | | | |
| 6. தேய்மான நிலுவைக்கான தவணைத் தொகை (அறிக்கை VI பத்தி 6) | | | | |
| 7. நிகழ்வடைக் காப்பு, ஒதுக்குவது. அறிக்கை VII பத்தி 3-ன் படி | | | | |
| 8. வரி, பங்காதாயக் கட்டுப்பாட்டுக் காப்பு, அறிக்கை VIII பத்தி 3-ன் படி | | | | |
| 9. நுகர்வோர் தள்ளுபடிக் காப்பு அறிக்கை IX பத்தி 4-ன் படி | | | | |
| 10. மாநில அரசு இசைவு அளிக்கும் பிற பகிர்வுகள், அறிக்கை X பத்தி 3-ன்படி | | | | |

19...... மார்ச் 31-ல் முடியும் ஆண்டிற்கான நிகர வருவாய்—பகிர்வுக் கணக்கு அறிக்கை—(தொடர்ச்சி)

| கடந்த ஆண்டுக் குரிய தொகை | விவரம் | தொகை | கடந்த ஆண்டுக் குரிய தொகை | விவரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | | |
| | 11. கீழ்க் கண்டவற்றின் மீது செலுத்திய வட்டிக்காகவும் கூடியுள்ள வட்டிக்காகவும், செலுத்திய, செலுத்த வேண்டிய பங்காதாயத்திற்காகவும் | | | | |
| | அ. கடனீட்டுப் பத்திர வட்டி | | | | |
| | ஆ. பிற பிணைக் கடன் மீது வட்டி | | | | |
| | இ. பிணைக் கடன், முன்பணம், வைப்புத்தொகை, வங்கி மேல்வரைப்பற்று மீது வட்டி | | | | |
| | 12. முன்னுரிமைப் பங்குமுதல் மீது பங்காதாயம் | | | | |
| | 13. நேர்மைப் பங்குமுதல் மீது பங்காதாயம் | | | | |
| | இலாப இருப்பு கீ/இ | | | | |

எண் XII

## 19...... மார்ச் 31-ற்குரிய பொது இருப்புநிலைக் குறிப்பு
(General Balance Sheet)

| சென்ற ஆண்டுக் குரிய தொகை | விவரம் | தொகை | சென்ற ஆண்டுக் குரிய தொகை | விவரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| ரூ. | | ரூ. | ரூ. | | ரூ. |
| | 1. திரட்டிய முதல்கள், அறிக்கை 1-ன்படி | | | 1. பயன்படுத்தப்படும் தொழில் சொத்துகள் மீது செல வழித்த முதல், அறிக்கை II-ன்படி | |
| | காப்பும், மிகுதியும் : | | | **கழி** : தேய்மானத்திற்குச் சேர்த்து வைக்கப்பட்ட ஒதுக்கு, அறிக்கை VI-ன்படி | |
| | 2. சட்ட முறைப்படி அல்லாத காப்பு (Non Statutory Reserve) | | | நிகர நிலைச் சொத்துகள் : | |
| | 3. நிகழ்வடைக் காப்பு நிதி, அறிக்கை VII-ன்படி | | | 2. வழக்கொழிந்த, பயன் படுத் தப்படாத அச் சொத்துக ளின் இருப்பு, அறிக்கை III நட்ட சொத்துகள் | |
| | 4. வரி, பங்காதாயக் கட்டுப் பாட்டுக் காப்பு, அறிக்கை VIII-ன்படி | | | | |

## 19...... மார்ச் 31-ற்குரிய பொது இருப்புநிலைக் குறிப்பு—(தொடர்ச்சி)

| கடந்த ஆண்டுக் குரிய தொகை | விவரம் | தொகை | கடந்த ஆண்டுக் குரிய தொகை | விவரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| ரூ. | | ரூ. | ரூ. | | ரூ. |
| | 5. நுகர்வோர் தள்ளுபடிக்காப்பு, அறிக்கை IX-ன்படி | | | 3. முடிவுறு முதலீட்டுத் தொழில். | |
| | 6. பிற பகிர்வுகள் (மாநில அரசு இசைவு அளித்தபடி), அறிக்கை X-ன் படி | | | 4. கையிலுள்ள சரக்குக் குவையும், கருவிகளும் : | |
| | | | | அ. எரிபொருள், கட்டுப்பாட்டு நிலக்கரி, எண்ணெய் முதலியவை அடக்க விலையில் | |
| | 7. நிகர வருவாய் — பகிர்வுக் கணக்கு அறிக்கையின் இருப்பு அறிக்கை XI-ன் படி | | | ஆ. பொதுச் சரக்குக் குவை அடக்க விலையில் அல்லது அதற்கும் கீழ். | |
| | நடப்புப் பொறுப்புகளும், ஒதுக்குகளும் : | | | 5. ஒப்பந்தங்களை முன்னிட்டு முன்கூட்டிச் செலுத்தியதால் கடனாளிகள். | |
| | 8. பொறிவகை நிறுவனத்திற்குத் தரவேண்டியது | | | 6. மின் வழங்கிய கடனாளிகள் | |

| | | | |
|---|---|---|---|
| 9. கடனீந்தோர் (இணைக்கப் பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ளவாறு) | | | 7. பிற கடனாளிகள் (இணைக்கப் பட்ட அட்டவணையில் கண் டுள்ளவாறு.) |
| 10. நுகர்வோர் காப்பு முன்பணம் | | | 8. பெற வேண்டிய கணக்குகள் (குறிப்பிடப்படவேண்டும்). |
| 11. செலுத்தவேண்டிய கணக்கு கள் (குறிப்பிடப்படவேண் டும்) | | | 9. சட்டத்தின்படி முதலீடு செய்யப்பட்டுள்ள பத்திரங் கள், அடக்க விலையில். |
| 12. தற்காலிகமாகப் பெற்ற கடன், வங்கி மேல்வரைப் பற்று. | | | அ. நிகழ்வடைப் பொறுப்புக் காப்பு நிதி முதலீடு (இறுதி நாளில்சந்தை மதிப்பு). |
| 13. கூடியுள்ள பிற நடப்புப் பொறுப்புகள் | | | ஆ. தேய்மானக் காப்பு நிதி முத லீடு (இறுதி நாளில் சந்தை மதிப்பு.) |
| 14. நிகழ்வடைப் பொறுப்புகளும், ஏற்றுக் கொண்டதில் நிலு வையும், ஏதேனும் இருப்பின் அவ் விருப்புநிலைக் குறிப்பில் குறிப்பிடப்படவேண்டும். | | | இ. பிற முதலீடுகள் (இறுதி நாளில் சந்தை மதிப்பு.) |
| | | | 10. தனி வைப்புகள் (முன் பணம்) |
| | | | அ. வரிக்காக |
| | | | ஆ. பிறவற்றிற்காக (குறிப்பிடப் படவேண்டும்) |

19...... மார்ச் 31-ற்குரிய பொது இருப்புநிலைக் குறிப்பு—(தொடர்ச்சி)

| கடந்த ஆண்டுக்குரிய தொகை | விவரம் | தொகை | கடந்த ஆண்டுக்குரிய தொகை | விவரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| ரூ. | | ரூ. | ரூ. | | ரூ. |
| | | | | 11. வங்கியிருப்பு : | |
| | | | | அ. தவணை வைப்புக் கணக்கில் | |
| | | | | ஆ. நடப்புக் கணக்கிலும், அழைப்புக் கணக்கிலும். | |
| | | | | 12. ரொக்கம் பற்றிருப்பு | |
| | | | | 13. நிகர வருவாய் — பகிர்வுக் கணக்கின் பற்றிருப்பு, அறிக்கை XI-ன்படி | |
| | | | | 14. பின் செலுத்தப்பட வேண்டியது. | |

## வினாக்கள்

1. இரட்டைக் கணக்கு முறை என்றால் என்ன? அது ஒற்றைக் கணக்கு முறையினும் எவ்வாறு வேறுபடுகின்றது?

2. இரட்டைக் கணக்கு முறையினால் ஏற்படும் பயன்களையும், குறைபாடுகளையும் விவரி.

3. சிறுகுறிப்பு வரைக:—

   அ. முதல் அடிப்படை (Capital Base)

   ஆ. தெளிவு இலாபம் (Clear Profit)

   இ. பங்காதாயக் கட்டுப்பாட்டுக் காப்பு

   ஈ. நிகழ்வடைக் காப்பு.

## பயிற்சி

(1) தில்லி மின் வழங்கு கம்பெனி தனது மின் நிலையத்தின் ஒரு பகுதியை ரூ. 80,00,000 செலவழித்துத் திருத்தி மாற்றியமைக்கிறது. இவ்வாறு மாற்றப்பட்ட பழைய மின் நிலையத்தைக் கட்ட தொடக்கத்தில் ரூ. 50,00,000 செலவானது. ஆனால், அதே அளவில் அதனை இப்பொழுது அமைப்பதாயின் 20 சதவீதம் அதிகமாகச் செலவாகுமென்று மதிப்பிடப்படுகிறது. பழைய பொருள்களை விற்றதில் ரூ. 6,00,000 கிடைத்தது. ரூ. 3,00,000 மதிப்புடைய பழைய பொருள்கள் திருத்தியமைப்பதில் பயன்படுத்தப்பட்டன. இது மொத்த செலவான ரூ. 80,00,000-ல் அடங்கியுள்ளது.

கம்பெனியின் ஏடுகளில் மேற்கண்ட நடவடிக்கைகளைப் பதியத் தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தந்து, முதலீட்டுச் செலவிற்கும் நடைமுறை செலவிற்கும் எடுத்துச் செல்லவேண்டிய தொகைகளைக் காரணங்களுடன் விளக்குக.

(C.A. Final)

(2) ஹிந்துஸ்தான் கேஸ் கம்பெனி தங்களது தொழிற்சாலையின் ஒரு பகுதியை மாற்றியமைத்துப் புதுப்பித்தது. இதற்காக ரூ. 50,000 செலவழித்தது. மாற்றியமைக்கப்பட்ட பழைய தொழிற்சாலையை அமைக்க முதலில் ரூ. 30,000

செலவானது. புதிய தொழிற்சாலை பழையதிலும் இரு மடங்காகும். பழைய பொருள்களை விற்றதில் ரூ. 2,000 கிடைத்தது. ரூ. 1,000 மதிப்புடைய பழைய பொருள்கள் மறு அமைப்பில் பயன்படுத்தப்பட்டன. இது மேலே சொன்ன ரூ. 50,000-ல் அடங்கியுள்ளது. முன்னர்க் கட்டியபோழ்து இருந்ததை**விடக்** கூலியும் பொருள்களும் 10 சதவீதம் உயர்ந்துள்ளன. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

(G. D. A.)

(3) நீர் வழங்கு கம்பெனி ஒன்று தனது தலைப்பெரும் குழாய்களில் (மூலக் குழாய்களில்) (main pipes) $\frac{1}{4}$ பகுதியை மறு அமர்த்தீடு செய்யவும், மீதியுள்ள நீளத்திற்குத் துணைக்குழாய்களைப் போடவும் முடிவு செய்தது. பழைய தலைப்பெரும் குழாய்களை அமைக்க முதலில் ரூ. 4,00,000 பிடித்தது. துணைக் குழாய்கட்காக ரூ. 4,50,000-மும், புதிய தலைப்பெரும் குழாய்கட்காக ரூ. 1,75,000-மும் தற்போழ்து செலவானது. தலைப்பெரும் குழாய்களைப் போடுவதற்காக ஆகும் செலவு 30 சதவீதம் கூடியுள்ளது என்று மதிப்பிடப்படுகிறது. பழைய தலைப்பெரும் குழாய்களை விற்றதில் ரூ. 15,000 கிடைத்தது.

மேற்கண்டவற்றைப் பதியத் தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தந்து முதலீட்டுச் செலவாகக் கருதவேண்டிய தொகையையும், நீக்கவேண்டிய தொகையையும் காட்டுக.

(B. Com. Andhra, 1971)

(4) நவக்கிராம் எலெக்ட்ரிக் கார்ப்பரேஷன் லிமிட்டெடின் 1954 திசம்பர் 31-ல் முடியும் ஆண்டிற்கான கீழ்க்கண்ட விவரங்கள் தரப்படுகின்றன :

| | ரூ. |
|---|---|
| ஒன்று ரூ. 10 மதிப்புடைய 50,000 சாதாரணப் பங்குகள் | 5,00,000 |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய 20,000 முன்னுரிமைப் பங்குகள் | 20,00,000 |
| நிலம் வாங்கச் செலவழித்தது | 10,00,000 |
| கட்டடம் வாங்கச் செலவழித்தது | 8,05,000 |
| மூலக் கம்பிகளும், மின் தொடர்புக் குழாய்களும் வாங்கச் செலவழித்தது | 75,000 |

| | ரூ. |
|---|---|
| மின் வழங்கு நிலையங்கட்காகச் செலவழித்தது | 50,000 |
| மின் அளவுமானிகட்காகச் செலவழித்தது | 30,000 |
| மின் மாற்று அமைவுகட்காகச் செலவழித்தது | 12,000 |
| பொது விளக்குகட்காகச் செலவழித்தது | 20,000 |
| மின் கருவிகட்காகச் செலவழித்தது | 15,000 |
| தொடக்கச் செலவுகட்காகச் செலவழித்தது | 5,000 |

1955ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட செலவுகள் மேலும் ஏற்கப்பட்டன :

கட்டடம் ரூ. 20,000; மின் அளவுமானிகள் ரூ. 10,000; மின் மாற்றி அமைவுகள் ரூ. 12,000; பொது விளக்குகள் ரூ. 5,000.

1955 திசம்பர் 31-ல் முடியும் ஆண்டிற்கான முதல் கணக்கினைத் தயார் செய்க. 1955 திசம்பர் 31-ற்கான இருப்புநிலைக் குறிப்பையும் சில கற்பனைத் தொகைகளுடன் தயார் செய்க.

(Calcutta University)

(5) பெங்கால் சுரங்கக் கம்பெனி லிமிட்டெடின் ஏடுகளிலிருந்து கீழ்க்கண்ட விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து கம்பெனியின் 1971 சூன் 30-ற்கான இருப்புநிலைக் குறிப்பை ஒற்றைக் கணக்கு முறையிலும், இரட்டைக் கணக்கு அடிப்படையிலும் தயார் செய்க :

| | ரூ. |
|---|---|
| பெயரளவு முதல் | 3,00,000 |
| எடுத்துக்கொண்ட முதல் | 2,60,000 |
| 5% கடனீட்டுப் பத்திரங்கள் | 40,000 |
| வாணிகக் கடனீந்தோர் | 16,000 |
| காப்பு நிதி | 15,000 |
| வாணிகக் கடனாளிகள் | 38,000 |
| ரொக்கமும், வங்கியிருப்பும் | 35,000 |
| முதலீடுகள் (காப்பு நிதி) | 15,000 |
| சரக்கிருப்பு | 24,000 |

கடந்த சூன் 30 வரைக்கான செலவினங்கள் :

நிலம் ரூ. 12,000; சுரங்க உள் செல் குழாய்கள் ரூ. 1,35,000; பொறிவகை ரூ. 40,000; கட்டடம் ரூ. 13,000.

1971 சூன் 30-ல் முடியும் நடப்பு ஆண்டுச் செலவினங்கள்:

இறுதி மூன்று இனங்கட்கான செலவுகள் முறையே ரூ. 25,000; ரூ. 25,000; ரூ. 10,000 ஆகும். ரூ. 25,000-ற்குத் தேய்மான நிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக் கேள்வியைப் பொருத்தவரை, இருப்புக் கட்டும் தொகையான ரூ. 16,000-த்தைக் கம்பெனியின் இலாபமாகக் கொள்ளலாம்.

(B. Com, Banaras)

(6) 1937-ல் ஒரு இரயில்வே நிலையம் ரூ. 3,00,000 செலவில் கட்டப்பட்டது. இதை எடுத்துவிட்டுப் புதிய இரயில் நிலையம் ஒன்று ரூ. 16,00,000 செலவில் 1968-ல் கட்டப்பட்டது. 1937-லிலிருந்த விலைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போழ்து பொருள்கள் 250 சதவீதத்திற்கு உயர்ந்தும், கூலி 3 மடங்காக அதிகரித்தும் உள்ளன. பழைய இரயில் நிலையத்தை அமைப்ப தில் பொருள்களும், கூலியும் 2 : 3 எனும் விகிதத்தில் செலவாகி யிருந்தன. ரூ. 25,000 மதிப்புள்ள பழைய பொருள்கள் புதிய நிலையத்தை அமைப்பதில் பயன்படுத்தப்பட்டிருந்தன. இது மேற்சொன்ன ரூ. 16,00,000-ல் அடங்கியுள்ளது. அத்துடன் பழைய பொருள்களை விற்றதில் ரூ. 42,000 கிடைத்தது என்றும் தெரியவருகிறது.

மேற்கண்ட நடவடிக்கைகளைப் பதியத் தேவையான குறிப் பேட்டுப் பதிவுகளைத் தருக.

(B. Com, Mysore 1972)

(7) 1971 திசம்பர் 31-ற்கான ஒரு மின் வழங்கு கம்பெனி யின் இருப்பாய்வு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

| | ரூ. | ரூ. |
|---|---|---|
| நேர்மைப் பங்குகள் | | 4,50,000 |
| கடனீட்டுப் பத்திரங்கள் | | 2,00,000 |
| நிலம், 1970 திசம்பர் 31 வரை | 1,50,000 | |
| 1971-ல் வாங்கிய நிலம் | 5,000 | |

| | ரூ. | ரூ. |
|---|---|---|
| பொறிவகை 1970 திசம்பர் 31 வரை | 6,00,000 | |
| 1971-ல் வாங்கிய பொறிவகை | 5,000 | |
| மூலக் கம்பிகள் அமைப்புச் செலவுடன் (Mains including cost of laying) | 2,00,000 | |
| 1971-ல் அமைத்த மூலக் கம்பிகள் | 51,000 | |
| கடனீந்தோர் | | 1,00,000 |
| தேய்மானக் காப்பு | | 2,50,000 |
| மின் வழங்கப்பெற்ற கடனாளிகள் | 40,000 | |
| சரக்கிருப்பு (Stores on hand) | 5,500 | |
| ரொக்கம் | 5,000 | |
| மின் உற்பத்திச் செலவு | 30,000 | |
| மின் வழங்கு செலவு | 5,000 | |
| வாடகை, கட்டணம், வரி | 5,000 | |
| நிர்வாகம் | 12,000 | |
| தேய்மானம் | 20,000 | |
| மின் விற்பனை | | 1,30,000 |
| மின் அளவை (மின் அளவு மானி) (மீட்டர்) வாடகை | | 5,000 |
| கடனீட்டுப் பத்திர வட்டி | 10,000 | |
| இடைக்காலப் பங்காதாயம் | 20,000 | |
| நிகர வருவாய்க் கணக்கிருப்பு 1970 திசம்பர் 31-ல் | | 28,500 |
| | 11,63,500 | 11,63,500 |

மேற் கொடுக்கப்பட்டிருக்கும் இருப்பாய்விலிருந்து வருவாய்க் கணக்கையும், நிகர வருவாய்க் கணக்கையும் பொது இருப்புநிலைக் குறிப்பையும் தயாரிக்க.

(B. Com, Allahabad)

(8) 1970 திசம்பர் 31-ல் முடியும் ஆண்டிற்கான தன்பாத் சுரங்கக் கம்பெனியின் இருப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து முதல் கணக்கையும், பொது இருப்புநிலைக் குறிப்பையும் இரட்டைக் கணக்கின் அடிப்படையில் தயார் செய்க.

| | ரூ. |
|---|---|
| பெயரளவு முதல் | 2,50,000 |
| ஒன்று ரூ. 1 வீதம் 1,10,000 நேர்மைப் பங்குகள் முழுதும் செலுத்தப் பெற்றவை | 1,10,000 |
| அலுவலகக் கட்டடம் | 3,000 |
| தொழிலர் இல்லம் | 9,000 |
| தேய்மான நிதி | 20,000 |
| ஒன்று ரூ. 1 வீதம் 60,000 முன்னுரிமைப் பங்குகள் முழுதும் செலுத்தப் பெற்றவை | 60,000 |
| 5% கடனீட்டுப் பத்திரங்கள் | 30,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 6,000 |
| கடனீந்தோர் | 9,000 |
| வாங்கிய நிலம் | 8,500 |
| சுரங்கச் செல் குழாய் அமைத்தல் | 1,11,000 |
| பொறிவகை | 35,000 |
| திறந்த பார இரயில் பெட்டி (Wagons) | 13,500 |
| காப்பு நிதி | 15,000 |
| நிகர வருவாய்க் கணக்கு (வரவிருப்பு) | 25,000 |
| சரக்கிருப்பு | 12,000 |
| முதலீடு | 17,000 |
| கடனாளிகள் | 35,000 |
| வங்கியிருப்பு | 30,000 |
| குறை உற்பத்திக் கணக்கு | 1,000 |

மேற்சொன்ன கணக்குகளில் நடப்பு ஆண்டில் வெளியிட்ட 10,000 முன்னுரிமைப் பங்குகள் அடங்கியிருக்கின்றன. கீழ்க்

கண்ட செலவினங்களும், நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப் பட்டன.

| | ரூ. |
|---|---|
| சுரங்கச் செல் குழாய் | 60,000 |
| பொறிவகை | 5,000 |
| திறந்த பார இரயில் பெட்டி | 30,000 |
| தொழிலர் இல்லங்கள் | 1,000 |

[B.Com. (Hons), Delhi, National Union of Teachers]

(9) கீழ்க்கண்ட 1971 திசம்பர் 31-ற்கான இருப்புகளிலிருந்து முதல் கணக்கையும், பொது இருப்புநிலைக் குறிப்பையும் இரட்டைக் கணக்கு முறை அடிப்படையில் தயார் செய்க.

| | ரூ. |
|---|---|
| பெயரளவு முதல் | 6,00,000 |
| எடுத்துக்கொண்ட முதல் | 5,20,000 |
| 5% கடனீட்டுப் பத்திரங்கள் | 70,000 |
| வாணிகக் கடனீந்தோர் | 32,000 |
| காப்பு நிதி | 30,000 |
| கடனாளிகள் | 76,000 |
| ரொக்கம் | 70,000 |
| முதலீடுகள் | 30,000 |
| சரக்கிருப்பு | 48,000 |
| பங்கு முனைமம் | 10,000 |

செலவினங்கள் :

| | 1970 திசம்பர் 31 வரை | 31–12–1971-ல் முடியும் நடப்பு ஆண்டில் |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| நிலம் | 24,000 | — |
| சுரங்கச் செல் குழாய் | 2,70,000 | 50,000 |
| பொறிவகை | 80,000 | 50,000 |
| கட்டடம் | 26,000 | 20,000 |

நடப்பு ஆண்டில் ரூ. 50,000 அளவிற்குத் தேய்மான நிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டது. 1971 திசம்பர் 31-ல் வருவாய்க் கணக்கின் இருப்பு ரூ. 32,000 ஆகும்.

(B.Com, Sagar)

(10) அர்பன் எலெக்ட்ரிக் சப்ளை கம்பெனி லிமிட்டெடின் ஏடுகளிலிருந்து திசம்பர் 31-ல் எடுக்கப்பட்ட கணக்கு இருப்புகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து வருவாய்க் கணக்கு, நிகர வருவாய்ப் பகிர்வுக் கணக்கு, இருப்புநிலைக் குறிப்பு ஆகியவற்றை மின் வழங்குச் சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட படிவங்களில் தயாரிக்கவும்.

| | ரூ. |
|---|---|
| மின் சக்தி வாங்கியது | 2,83,397 |
| விநியோகச் செலவுகள் | 46,658 |
| வரிகள் | 15 |
| பொது அலுவலகச் செலவுகள் | 30,407 |
| நிர்வாகச் செலவுகள் | 17,730 |
| மின் விற்பனை | 4,19,434 |
| மின் அளவுமானி வாடகை, மின் தொடர்புக் கட்டணங்கள் (Meter Rent, Reconnection Fees etc.) | 27,546 |
| தேய்மானம் | 18,758 |
| வருமான வரி | 18,244 |
| பழுது பார்க்கும் செலவும், கட்டட பராமரிப்பும் | 526 |
| நிகழ்வடைக் காப்பிற்கு வழங்கியது | 3,143 |
| செலுத்திய வட்டி | 6,089 |
| பொறிவகை | 5,59,968 |
| பொது விளக்குகள் | 81,665 |
| பொது துணைப் பொருட் சாதனங்கள் (General Equipment) | 15,367 |
| செலுத்தப்பெற்ற பங்குமுதல் | 3,55,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 896 |

| | ரூ. |
|---|---|
| கடனீந்தோர் (நுகர்வோர்) | 2,636 |
| கடனீந்தோர் (பிறர்) | 119 |
| நுகர்வோர் காப்புத் தொகை | 1,87,566 |
| தேய்மானக் காப்பு இருப்பு | 1,28,785 |
| நிகழ்வடைக் காப்பு, சனவரி 1-ல் இருப்பு | 6,902 |
| மின்வழங்கு பணிக்கான முன்பணம் | 7,957 |
| செலுத்தப்பெறுக் கூலி | 18 |
| வருமானவரிக் காப்பு | 18,244 |
| செலுத்தவேண்டிய வட்டி | 11,905 |
| கையிலுள்ள சரக்குகள் | 48,852 |
| கடனாளிகள் (மின் வழங்கிய வகையில்) | 39,219 |
| அலுவலர்கட்குக் கொடுத்த முன்பணம் | 10,045 |
| வங்கியிருப்பு | 7,334 |
| ரொக்கம் | 1,492 |

(C.A. Final)

(11) குண்டூர் பவர் அண்டு லைட் லிமிட்டெடின் 1955 திசம்பர் 31-ற்குரிய இருப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| | பற்று | வரவு |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| நிலம், 1954 திசம்பர் 31-ல் | 60,000 | |
| நிலம், 1955-ல் செலவழித்தது | 2,000 | |
| பொறிவகை, 1954 திசம்பர் 31 வரை | 2,40,000 | |
| பொறிவகை, 1955-ல் செலவழித்தது | 2,000 | |
| மூலக் கம்பிகள், அமைப்புச் செலவு உட்பட | 80,000 | |
| மூலக் கம்பிகள், 1955-ல் செலவழித்தது | 20,400 | |

### 1955 திசம்பர் 31-ற்குரிய இருப்புகள்—(தொடர்ச்சி)

| | பற்று | வரவு |
|---|---|---|
| நேர்மைப் பங்குகள் | | 2,19,600 |
| கடனீட்டுப் பத்திரங்கள் | | 80,000 |
| கடனீந்தோர் | | 400 |
| தேய்மானக் கணக்கு | | 1,00,000 |
| கடனாளிகள் (மின் வழங்கியது) | 16,000 | |
| பிற கடனாளிகள் | 200 | |
| ரொக்கம் | 2,000 | |
| மின் ஆக்கச் செலவு | 14,000 | |
| மின் வழங்கு செலவு | 2,000 | |
| வாடகை, வரி, கட்டணங்கள் | 2,000 | |
| நிர்வாகம் | 4,800 | |
| தேய்மானம் | 8,000 | |
| மின் விற்பனை | | 52,000 |
| மின் அளவுமானி வாடகை | | 2,000 |
| கடனீட்டுப்பத்திர வட்டி | 4,000 | |
| இடைக்காலப் பங்காதாயம் | 8,000 | |
| 1954 திசம்பர் 31-ல் நிகர வருவாய்க் கணக்கிருப்பு | | 11,400 |
| | 4,65,400 | 4,65,400 |

மேற்கண்ட இருப்பாய்விலிருந்து முதல் கணக்கையும், பொது இருப்புநிலைக் குறிப்பையும், வருவாய்க் கணக்கையும், நிகர வருவாய்க் கணக்கையும் தயாரிக்க.

(C. A. Final, Nov. 1956)

(12) பிஜிலி எலெக்ட்ரிசிட்டி (Bijlee Electricity Co. Ltd.) கம்பெனி லிமிடெடின் 1961 திசம்பர் 31-ற்கான இருப்பாய்வு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

முதல் கணக்கிற்குரிய இனங்களைப் பொருத்தவரை, நடப்பாண்டில் ஏற்கப்பட்டதென்று குறிப்பிடப்பட்டிருந்தாலொழிய

அவற்றைச் சென்ற ஆண்டு இறுதி வரை ஏற்றதாகக் கொள்ள வேண்டும்.

## 1961 திசம்பர் 31-ற்கான இருப்பாய்வு

| | பற்று | வரவு |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| பங்குமுதல் : | | |
| ஒன்று ரூ. 100 மதிப்புடைய நேர்மைப் பங்குகள் | | 6,00,000 |
| நடப்பாண்டில் வெளியிட்ட ஒன்று ரூ.100 மதிப்புடைய நேர்மைப் பங்குகள் | | 1,00,000 |
| தொடக்கச் செலவுகள் | 10,000 | |
| கட்டடம் | 87,500 | |
| கட்டடம், நடப்பாண்டில் சேர்த்தவை (additions) | 60,000 | |
| பொறிவகை | 1,50,000 | |
| நடப்பாண்டில் சேர்த்தவை | 50,000 | |
| மூலக் கம்பிகள் (Mains) | 1,82,000 | |
| நடப்பாண்டில் விரிவுபடுத்திய மூலக் கம்பிகள் | 55,000 | |
| மின்விசை மாற்றியமைவுகள் | 25,000 | |
| மின் அளவு மானிகள் | 9,000 | |
| நடப்பாண்டில் வாங்கிய மின் அளவு மானிகள் | 3,000 | |
| பொது மின் பண்டங்கள் | 1,000 | |
| மின்விளக்குகட்காக மின்விசை விற்பனை | | 80,000 |
| விசைக்காக மின்விசை விற்பனை | | 40,000 |
| அளவுமானி வாடகை | | 2,500 |
| மறு தொடர்பு, தொடர்பறு கட்டணங்கள் (Reconnection and Disconnection Fees) | | 500 |
| எரிபொருள் பயன்படுத்தியது | 15,000 | |
| எண்ணெய், கழிவு, பொறிஅறைப் பண்டங்கள் | 2,000 | |
| பொறிஞர்கள், மேற்பார்வையாளர்கள், அலுவலர்கள் ஆகியோரின் ஊதியம் | 6,000 | |

## 1961 திசம்பர் 31-ற்கான இருப்பாய்வு—(தொடர்ச்சி)

| | பற்று | வரவு |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| விசை ஆலை ஊதியமும், கூலியும் (Power House Salaries and wages) | 3,000 | |
| தெரு விளக்குக் கூலியும், விநியோகச் செலவும் | 1,500 | |
| பழுதுபார்க்கும் செலவும், பேணுகைச் செலவும் | 2,000 | |
| செலுத்தவேண்டிய வாடகை | 600 | |
| இயக்குநர் கட்டணங்கள் | 600 | |
| நிர்வாகச் செலவுகள் | 4,800 | |
| தணிக்கையர் கட்டணம் | 500 | |
| பங்காதாயம் செலுத்தியது | 24,000 | |
| வருவாய்க் கணக்கு — இருப்பு கீ/கொ | | 10,000 |
| தேய்மான நிதி | | 40,000 |
| வருமான வரி செலுத்தியது | 20,000 | |
| பண்டங்களின் சரக்கிருப்பு | 40,000 | |
| கடனாளிகள் | 18,500 | |
| கடனீந்தோர் | | 7,500 |
| முதலீடுகள் அடக்கவிலையில், காப்புநிதி, தேய்மான நிதி முதலீடுகள் உட்பட | 59,500 | |
| முதலீடுகள் மீது கூடியுள்ள வட்டி | 3,000 | |
| வங்கியில் வைத்துள்ள தவணை வைப்புகள் | 50,000 | |
| கையில் ரொக்கமும், வங்கியில் ரொக்கமும் | 4,000 | |
| முதலீடுகள் மீதும், தவணை வைப்புகள் மீதும் வட்டி (தேய்மான நிதி முதலீடு மீதான வட்டி ரூ. 2,000 உட்பட) | | 7,000 |
| | 8,87,500 | 8,87,500 |

கட்டடத்தின் மீது ரூ. 2,000-மும், பொறிவகை மீது ரூ. 10,000-மும், மூலக் கம்பிகள் ரூ. 12,000-மும் தேய்மானம் ஒதுக்கிய பின்னர் கணக்கிடப்படும் மிகுதித் தொகையிலிருந்து ரூ. 5,000 காப்பு நிதிக்கு எடுத்துச் செல்லவேண்டும்.

மேற்கண்ட இருப்பாய்விலிருந்தும் கொடுக்கப்பட்ட பிற தகவல்களிலிருந்தும் கம்பெனியின் முதல் கணக்கு, வருவாய்க் கணக்கு, நிகர வருவாய்க் கணக்கு, பொது இருப்புநிலைக் குறிப்பு ஆகியவற்றைத் தயாரிக்கவும். (Bombay University)

# 15. மேலாண்மைக் கணக்கியலும், பொறிமயக் கணக்கியலும்

## மேலாண்மைக் கணக்கியல் அல்லது நிர்வாகக் கணக்கியல்

## (Management Accounting)

தொழிலின் நடவடிக்கைகளை அவ்வப்போழ்து உரிய கணக் கேடுகளில் பதிந்துவந்து குறிப்பிட்ட காலத்தின் இறுதியில், பொதுவாக ஆண்டிறுதியில், தொழிலின் விளைவை உணர்த்தும் இலாப-நட்டக் கணக்கையும், நிதிநிலையைக் காட்டும் இருப்பு நிலைக் குறிப்பையும் தயாரிப்பது வழக்கமென்று கண்டு இருக்கிறோம். இது நிதிக் கணக்கியல் (Financial Accounting) எனப்படும். குறிப்பிட்ட காலத்தில் தொழில் நிர்வாகம் ஈட்டிய இலாபத்தை அல்லது அதற்கு ஏற்பட்ட இழப்பை விளக்குவதும், தொழில் நடவடிக்கைகளின் பயனாக ஈட்டிய பல்வகை வருமானங்களையும், அவற்றை ஈட்டுவதற்காக ஏற்றுக்கொண்ட செலவினங்களையும் கூறுவதும், ஆண்டிறுதி நாளில் தொழில் நிர்வாகத்தின் நிலையைப் படம்பிடித்துக் காட்டுவதும் நிதிக் கணக்கியலின் முக்கியமான நோக்கங்களாகுமென்று கண்டிருக்கிறோம். நிர்வாகத்தைப் பொருத்தவரை, நிகழ்ந்த நடவடிக்கைகளை எழுதி அவற்றைத் தொகுத்து உரைப்பதில் பயன் அதிகம் ஏற்படுவதில்லை. இலாப-நட்டக் கணக்கு, தேவையான இலாபத்தைக் காட்டி இருப்புநிலைக் குறிப்பு நல்ல நிதிநிலையை உணர்த்துமாயின், நிர்வாகத்தில் தொடர்புடைய அத்துணைப்பேரும் மகிழ்வர் என்பதிலும், அவற் றிற்கு மாறாக இலாப-நட்டக் கணக்கு நட்டத்தைக் காட்டி, இருப்புநிலைக் குறிப்பு மோசமான நிதிநிலையை உணர்த்தின், பங்குநர்களும், பிறரும் துயருறுவர் என்பதிலும் ஐயமில்லை. தொழில் நிறுவனம் இலாபம் ஈட்டும்போழ்து, கணக்காயர் போற்றப்படுவதுமில்லை; நட்டம் ஏற்படும்போழ்து அவர் தூற்றப்

படுவதுமில்லை. ஏற்பட்ட இலாப-நட்டத்தைச் சரியாக உணர்த்தி விட்டு, நடவடிக்கைகள் அனைத்தும் உரியமுறையில் பதியப்பட்டு விட்டனவென்று தணிக்கையர் சான்றிதழ் ஒன்று அளித்துவிட்டால், அத்துடன் கணக்காயரின் பணி முடிவுபெறுகிறது. கணக்குகள் சரிவர எழுதப்பட்டுள்ளனவா என்பதைத் தெரிவிப்பதே கணக்கியலின் நோக்கமாகும் என்ற எண்ணம் சென்ற நூற்றாண்டு வரை இருந்து வந்திருக்கிறது. ஆனால், பலவகை நடவடிக்கைகள் பல்கிப் பெருகிவரும் இற்றை நாள்களில் கணக்கியலின் நோக்கங்களாக இவை மட்டுமிருந்தால் போதாது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில் பல்வகைத் தொழில்களின் வியத்தகு வளர்ச்சியின் காரணமாக, கணக்கெழுதும் முறையிலும் பெரும் மாற்றம் தேவை என்பது உணரப்பட்டது. கணக்கியலின் நோக்கங்களிலும் பெரும் மாறுதல் ஏற்பட்டது.

ஆலை முறையில் உற்பத்தியைத் தொடங்கிய பிறகு பல்வகைக் கச்சாப் பொருள்கள் மிகப் பெருமளவில் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்பட்டன. மிகப் பெருமளவில் தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். உற்பத்தியாகும் பொருளுக்கு நேரடித் தொடர்பற்ற பல்வகைச் செலவினங்கள் ஏற்கவேண்டியிருந்தன. அத்துடன் உற்பத்தி முறையும் பல நிலைகளைக் கடக்க வேண்டியிருந்தது. அதன் காரணமாகப் பல்வகைப் பொருள்களின் — பணிகளின் உற்பத்திச் செலவினை உணர்வதில் சிக்கல் ஏற்பட்டது. செலவினைக் கட்டுப்படுத்தி வீணாவதைச் செவ்விதே தவிர்க்கும்வண்ணம் நிதிக் கணக்குகளை வைத்திருக்க வேண்டிய தேவை எற்பட்டது. இவ்வாறு அடக்கவிலைக் கணக்கியலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இந் நிலையில் அடக்கவிலையைச் சரியாக உணரக்கூடிய வகையில் பதிவேடுகளை வைத்திருந்து நிர்வாகத்தினருக்கு அடக்கவிலை பற்றிய விவரங்களைக் கொடுக்கவேண்டிய பணியும், நிர்வாகம் தனது பொருள்களுக்கு விலை நிர்ணயிப்பதில் துணையாயிருக்கும் பணியும் கணக்காயருக்கு ஏற்பட்டது.

உற்பத்தி செய்த பண்டங்களின் அடக்கவிலையை அறிந்தால் மட்டுமே பயன் அதிகமாக விளைவதில்லையென்பது பின்னர்த் தெளிவாயிற்று. ஏறத்தாழ இந் நூற்றாண்டின் முதல் 30 ஆண்டுகள் வரைகூட நிதி நடவடிக்கைகள் பற்றிய விவரங்களையும் உற்பத்தி செய்த பொருள்களின் அடக்கவிலைப் பற்றிய விவரங்களையும் கொடுத்தலே கணக்காயர்களின் பணியாகக் கருதப்பட்டு வந்தது. ஆனால், பின்னர் இவை மட்டும் போதாது என்றும், தொழில்செய்முறையைக் கட்டுப்படுத்துவதற்கும், பின்வரும்

ஆண்டுகளில் நிகழக்கூடிய நடவடிக்கைகளை ஆய்ந்து வருமுன்னர் உரைப்பதற்கும் உற்ற துணையாகக் கணக்கியல் அமையவேண்டு மென்ற கருத்து நிலவத் தொடங்கிற்று. இவ்வாறு, இந் நூற்றுண்டில் கணக்கியலின் கோட்பாட்டில் புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டது.

வரவுசெலவுத் திட்ட அடிப்படையில் தரமான அடக்கவிலைக் கணக்கியல் கொள்கைகள் (Standard Costing) புகுத்தப்பட்டன. வரவுசெலவுத் திட்டம் தயாரிப்பதுடன், அவ்வப்போழ்து திட்டத் திற்கும், செய்முறைக்கும் மாறுதல் ஏற்படுகின்றதா, அம் மாறு தலுக்குக் காரணம் என்னஎன்பவற்றை ஆய்ந்து நிர்வாகத்திற்கு அறிவிக்க வேண்டியுள்ளது. இவ்வாறு உற்பத்தியான பொருளின் அடக்கவிலையை **அறிவதுடன்,** அடக்கவிலையைக் **கட்டுப்படுத்தவும்** இற்றைய நிர்வாகம் விரும்புகிறது. இதற்கு, அவ்வப்போது தேவையான புள்ளி விவரங்களையும், திட்டங்களையும், திட்டமிடப் பட்ட இலக்குகளிலிருந்து செயல்முறை எவ்வாறு மாறுபட்டிருக் கிறதென்பதையும், குறிப்பிட்ட காலத்திற்குள் பல்வகை நடவடிக் கைகளைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளையும் வகுத்துக் கொடுத்தல் இன்றியமையாதது என்ற உணர்வு பிறந்தது. இதன் விளைவே நிர்வாகக் கணக்கியலாகும் (Management Accounting). ஆண்டிறுதியில் இறுதிக் கணக்குகளைத் தயாரித்து அவற்றை ஆய் வதை விட, அவ்வப்போது தொழிலின் நடைமுறைகளை ஆய்த லும், அவற்றைக் கட்டுப்படுத்தலும் சிறந்த நிர்வாகத்திற்கு வழி வகுக்கும் என்பதில் ஐயமேதுமில்லை.

**நிர்வாகக் கணக்கியல் — இலக்கணம்**

ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டுத் திட்டமிடுதலும், செயல்மேற்கொள்ள ஊக்குவித்தலும், பல்வகை நடவடிக்கைகளை ஒன்றுபடுத்தி இவைகளைப் கட்டுப்படுத்தலும் நிர்வாகம் என்னும் சொல் உணர்த்தும் என்பதை நாம் அறிவோம். கிடைக்கக்கூடிய பொருள்களையும், மனித சக்தியையும் பயன் படுத்துவதில் சிறந்த திறமையைப் பெறுதல் நிர்வாகத்தின் முக் கியமான நோக்கமாகும். மேல் நிலை நிர்வாகம் திட்டங்களை வகுத்தலிலும், இலக்குகளை நிர்ணயிப்பதிலும், தொழிலின் பல் வகை நடவடிக்கைகளை ஒன்றுபடுத்திக் கட்டுப்படுத்துவதிலும் ஈடுபடுகிறது. நிர்வாகத்தின் பிற நிலைகள், மேற்கண்டவற்றை நிறைவேற்றும் பணியை ஏற்றுக் கொள்ளுகின்றன. மனதிற் பட்ட முடிவுகளை எடுத்துப் பெரும் தொழிற்சாலைகளை நிர்வகிக்க முடியாது. அனைத்துச் செயல்முறைகளைப் பற்றியும் ஆய்ந்து சிந்தித்து முடிவுகள் எடுக்கவேண்டும். ஒவ்வொன்றையும் திட்

மிட்டுச் செயல்மேற்கொள்வதே அறிவியல் வழி நிர்வாகத்தின் (Scientific management) அடிப்படைக் கொள்கையாகும். இந் நோக்கங்களை நிறைவேற்றத் துணை செய்வதே நிர்வாகக் கணக்கியலாகும்.

காலம், அளவு, பணம் — இவற்றின் கண்கொண்டு நிகழும் நடவடிக்கைகளைப் பதிந்து வருதல் கணக்கியலாகும். குறிப்பிட்ட காலத்திற்குரிய இறுதி நிதி அறிக்கைகளைத் தயாரிப்பது நிதிக் கணக்கியலின் பாற்படும். உற்பத்தியின் உண்மையான செலவினை உணர்த்தலும், குறைந்த செலவில் நிறைந்த உற்பத்தியைச் செய்யும் பொருட்டுத் திறமையின்மையையும், வீண் செலவையும் தவிர்த்தலும் அடக்கவிலைக் கணக்கியலின் இன்றியமையா இலக்காகும். ஆனால், சிறப்பான வரவு செலவுத் திட்டத்தை வகுத்தலும், அவ்வப்போது அதனைக் கண்காணித்துக் கட்டுப் படுத்தலும் நிர்வாகக் கணக்கியலுக்குரியதாகும். 'உரிய கொள்கையை வகுப்பதற்கும், தொழில் நிர்வாகத்தின் அன்றாட நடைமுறைகளைச் சீரிய முறையில் செயல்படுத்துவதற்கும் நிர்வாகத்திற்குச் சிறந்த முறையில் உதவியாயிருக்கும் வகையில் கணக்கு விவரங்களைத் தயாரித்துத் தருதல் நிர்வாகக் கணக்கியல்' என்று கூறலாம்.

'திறமையை வளர்ப்பதற்கும், எதிர்காலத் திட்டத்தை உருவாக்குவதற்கும், நடவடிக்கைகளை ஒன்றிணைப்பதற்கும், பின்னர் அவற்றைச் செயல்படுத்தும் திறனை ஆய்வதற்கும் நிர்வாகத்திற்கு உதவியாயிருக்கும் வகையில் தேவையான தகவல்களைச் சேகரித்துத் தெளிவாக உணரும் முறையில் கணக்கியலையும் புள்ளியியல் முறைகளையும் பயன்படுத்துவதற்கு நிர்வாகக் கணக்கியல் என்று பெயர்' என்றும் இதற்கு இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட இலக்கணங்களிலிருந்து நாம் உணரக் கூடியவை:

அ. நிதிக் கணக்கியல் முறைகளையும், அடக்கவிலைக் கணக்கியல் முறைகளையும், தேவையான புள்ளிவிவரங்களைச் சேகரித்துத் தருவதற்குப் புள்ளியியல் முறைகளையும் நிர்வாகக் கணக்கியல் பயன்படுத்துகிறது.

ஆ. எதிர்கால நடவடிக்கைகளை முன்கூட்டியே திட்டமிடும் பணியை இது உள்ளடக்குகிறது.

இ. வருவாய் - செலவுத் திட்டத்தை முன்னரே வகுப்பதுடன், அவ்வப்போழ்து செயல்முறைகளின் நிலையையும்,

எந்தவளவிற்கு அச் செயல்முறைகள் திட்டமிடப்பட்ட வருவாய்-செலவு அறிக்கைக்கு மாறுபடுகின்றன என்பதையும் நிர்வாகக் கணக்கியல் ஆய்கிறது.

ஈ. கடந்தகாலக் கணக்கு அறிக்கைகளையும், நடவடிக்கைகளையும் கருத்திற்கொள்ளினும், எதிர்காலத் திட்டத்திற்குச் சிறப்பிடம் தருகிறது.

நிதிக் கணக்கியல் வாணிக நடவடிக்கைகளின் இறுதி நிலையை உணர்த்தக் கூடியவை. இத் தகவல் இலாப-நட்டக் கணக்கின் உருவத்திலும், இருப்புநிலைக் குறிப்பின் வடிவத்திலும் அமைகிறது. இவை ஏற்பட்ட இலாபத்தையும் அல்லது இழப்பையும், குறிப்பிட்ட நாளில் நிர்வாகத்தின் நிதிநிலையையும் படம் பிடித்துக் காட்டுகின்றனவேயன்றி, நிர்வாகம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகட்கும், வகுக்கவேண்டிய கொள்கைகட்கும் அவ்வளவாக உதவுவதில்லை. நிர்வாகத்தின் சிறந்த கருவியாக இவ் விவரங்கள் பயன்படும் வண்ணம் இக் கணக்குகள் வகைப்படுத்தப்பட்டு வேறு முறையில் தயாரிக்கப்பட வேண்டும். இப் பணியைச் செய்வதுதான் நிர்வாகக் கணக்கியலாகும்.

நிர்வாகக் கணக்கியலைப் பற்றித் தவறான கருத்துகளும் நிலவுகின்றன. நிதிக் கணக்கியலின் வேறு பெயரே நிர்வாகக் கணக்கியல் என்ற கருத்து நிலவுகிறது. அடக்கவிலைக் கணக்கியலே இது என்ற கருத்தும் நிலவுகிறது. ஆனால், இவை வழுவானவை. வழக்கமான கணக்கியலின் பணி நடைபெற்ற நிகழ்ச்சிகளைத் திரும்பி நோக்கும் பணியாகும் ('Look back'). ஆனால், நிர்வாகக் கணக்கியலோ எதிர்காலத்தை முன்னோக்கி ('Look forward') இவ்வாறு ஏற்படும் என்று வருமுன்னர் கூறுதலும் (forecast) இப்பொழுது எவ்வாறு நடைபெறுகிறதென்பதை ஒப்பிட்டுப் பார்த்தலும் ஆகும். குறிப்பிட்ட காலத்தின் இறுதியில் நிறுவனத்தின் நிதிநிலையை உணர்த்தும் இறுதிக் கணக்குகளைத் தருவது நிதிக் கணக்கியலாகும். எனவே, அதற்கு முன்னர் நிகழ்ந்த நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தமுடியாமற் போகிறது. ஆனால், நிர்வாகக் கணக்கியலோ விற்பனை, கொள்முதல், உற்பத்தி, நிதி பற்றிய புள்ளி விவரங்களை நிர்வாகத்திற்கு அவ்வப்போழ்து தருகின்ற காரணத்தால், திட்டமிட்ட இலக்குகளிலிருந்து செயல் முறைகள் மாறின், தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு திட்டமிட்டபடி செயல்முறைகள் அமைய வழி வகுக்கும். அடக்கவிலைக் கணக்கியல் நிர்வாகக் கணக்கியலின் முக்கியமான ஒரு பகுதியாயினும், அதுவே முற்றிலும் நிர்வாகக் கணக்கியலாகாது.

உற்பத்தியான பொருளின் செலவினை அடக்கவிலைக் கணக்கியல் வெளிப்படுத்துகிறது; ஆனால், செலவினைக் கட்டுப்படுத்துதல் நிர்வாகக் கணக்கியலின் முக்கியமான அடிப்படைக் கொள்கையாகும்.

## மேலாண்மைக் கணக்கியலில் குறிப்பிட்ட பணிகள்

### (1) வருமுன் உரைத்தல் (Forecasting)

பேரளவுத் தொழில், வாணிக நிறுவனங்கள் எதிர்கால நடவடிக்கைகளை முன்கூட்டி உணர்ந்து, அதற்கேற்றவாறு தம்மைத் தயார் செய்து கொள்ளுகின்றன. துல்லியமாக இதை உணரவேண்டின், நாட்டின் பொது நிலையையும், அரசியல் நிலையையும், பொருளாதார சூழ்நிலைகளையும், அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சியினையும் கருத்திற்கொள்ளவேண்டும். தற்போது நிகழ்கின்ற நடவடிக்கைகளையும் எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் நிகழ்ச்சிகளையும் ஆய்ந்து பார்த்தால்தான், எம் முறையில் தொழில் நிர்வாகம் மேம்பாடு அடையும் என்பதைக் கணிக்க முடியும். இப் பணியை மேலாண்மைக் கணக்காயர் திறம்படச் செய்வதற்குப் புள்ளிவிவர முறைகளைச் சிறந்த முறையில் பயன் படுத்த வேண்டும். எடுத்துக்காட்டாக, புள்ளிவிவரங்களின் துணை கொண்டே வரப்போகும் சில ஆண்டுகளில் விற்பனையின் நிலையை ஓரளவு நிர்ணயிக்க முடியும். இதன் அடிப்படையில் பிற நட வடிக்கைகளை மேற்கொள்ளலாம். எடுத்துக்காட்டாக, அதற்குத் தேவையான அளவிற்கு உற்பத்தி செய்யவேண்டிய நிலையை நிர்வாகத்திற்கு உணர்த்தமுடியும்.

ஒவ்வொரு வகை நடவடிக்கைகட்கும் ஏற்றவாறு வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கவேண்டும். வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் முன்னர், முதலில் எந் நோக்கத்திற்காக அது தயாரிக்கப்படுகிறது என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். பின்னர், மேற்கொள்ளவேண்டிய பணியின் அளவினை நிர்ணயித்துக்கொள்ளவேண்டும். அதற்குச் செலவழிக்க வேண்டிய தொகையினையும் சரிவர முடிவு செய்யவேண்டும். வரவுசெலவுத் திட்டத்தினை ஒரு சாதாரண மதிப்பீடாகக் கருதாமல், ஏற்றுக் கொண்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைத் தயார்படுத்திக்கொள்ள உதவும் அறிக்கையாகக் கருதுவதே சரியாகும்.

## (2) முடிவு செய்தல் (Decision Making)

எதிர்நோக்கியிருக்கும் பல்வகைப் பிரச்சினைகட்குத் தீர்வு காணும்பொறுப்பு நிர்வாகத்திற்கு அவ்வப்போழ்து ஏற்படும். ஏற்ற முடிவை நிர்வாகம் எடுப்பதற்கு மேலாண்மைக் கணக்கியல் உதவி செய்யும். பல்வகைக் கோணங்களிலிருந்து பிரச்சினைகளை ஆய்வதற்கு வேண்டிய புள்ளி விவரங்களை மேலாண்மைக் கணக்காயர் அவ்வப்போழ்து தந்து உதவவேண்டும். எந்த நடவடிக்கையை மேற்கொள்ளினும், நிர்வாகம் அதற்காகும் செலவினையும், அதனால் பெறக்கூடிய கூடுதல் ஆதாயத்தையும் நோக்கும். இவ்விரண்டு நிலைகளையும் ஒப்பிடுதல் முடிவு எடுப்பதற்குத் துணையாக இருக்கும். நாம் உணரவேண்டியது ஒன்றுண்டு. முன்னரே செய்த செலவினை இப்பொழுது நோக்கத் தேவையில்லை. ஒரு நடவடிக்கையை மேற்கொள்வதால் ஆகும் கூடுதல் செலவினையே நாம் உணரவேண்டும். அவ்வாறே திட்டமிடப்படும் இந் நடவடிக்கையால் கிடைக்கக்கூடிய கூடுதல் வருமானத்தை மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். அதுபோன்றே, மேற்கொண்டிருக்கும் ஒரு செயலை விட்டுவிட முடிவு செய்யின், அந் நடவடிக்கையை விட்டுவிடுவதால் எவ்வளவு செலவு குறைகிறது என்பதையும், அதன் காரணமாக எவ்வளவு வருவாய் இழக்கப்படுகிறதென்பதையும் ஒப்பிடவேண்டும்.

நிலையான செலவுகளையும், மாறக்கூடிய செலவுகளையும் வேறுபடுத்திக்காட்டின், செலவினங்களைக் கட்டுப்படுத்த நிர்வாகத்தினரால் முடியும். செலவுகளைக் கட்டுப்படுத்தத் தேவையான முடிவுகளை அவ்வப்போது மேற்கொள்ள இவ்வாறு இறுதி நிலை அடக்க விலை முறை பெரும் துணையாயிருக்கிறது.

## (3) கட்டுப்பாடு (Control)

1. இதில் இரண்டு முக்கியமான நிலைகள் உண்டு. ஒன்று, குறிப்பிட்ட காலத்தில் செய்து முடிக்கவேண்டிய பணியின் அளவை நிர்ணயித்தலாகும்.

2. இரண்டு, பணியை மேற்கொள்ளும்போழ்து, பொருளோ, பணியோ, காலமோ வீணுவதைத் தவிர்த்தலாகும். இவ்வாறு ஒவ்வொரு துறையும் குறிப்பிட்ட இலக்கினை நோக்கி செயல்படுதலையும், சிக்கனமாகச் செயல் மேற்கொள்ளுதலையும் இப் பணி குறிக்கும். தொழிலாளர்களைப் பொருத்தவரை, நேரடி மேற்பார்வை பயனுள்ளதெனினும், துறைக்கு ஒதுக்கப்பட்ட பணியினைக் கண்காணிப்பதற்குத் தகவல்கள்மூலம் (புள்ளி

விவரங்கள் மூலம்) இதனைச் செய்யலாம். இக் கட்டுப்பாடு தொடர்ந்திருக்கவேண்டும். ஒவ்வொருவரின் செயலும் உன்னிப்பாகக் கவனிக்கப்படுகிறது என்ற உணர்ச்சியை ஒவ்வொருவரும் பெறவேண்டும். எவ்விதக் குறைபாடும் நிர்வாகத்திற்கு அறிவிக்கப்படுமென்பதையும், ஒருவர் தான் பணியில் காட்டும் ஆற்றலுக்கு நிர்வாகம் மதிப்பு அளிக்கும் என்பதையும் ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

வகுக்கப்பட்ட திட்டத்திலிருந்து மாறுபடும் ஒவ்வொரு செயலேயும் கணக்காயர் நிர்வாகத்திற்கு அவ்வப்போது அறிவிக்கின்றூர் என்பதை மறத்தலாகாது. முன்னர் விளக்கியவாறு, திட்டமிட்டவாறே செயல் நடைபெற வரவுசெலவுக் கட்டுப்பாடு சிறந்த முறையில் பயனளிக்கிறது. வகுக்கப்பட்ட கொள்கைக்குத் தேவையான பொறுப்புகளே நிர்ணயித்து, திட்டமிடப்பட்ட குறிக்கோளேயும், செய்துமுடிக்கப்பெற்ற நிகழ்ச்சிகளேயும் அவ்வப்போழ்து ஒப்பிட்டு, வரவுசெலவுத் திட்டத்தின் நோக்கத்தைச் சிறந்தமுறையில் நிறைவேற்றவும் அல்லது வரவு செலவுத் திட்டத்தில் தேவையான மாற்றத்தை எற்படுத்தவும் உதவுவது வரவு செலவுக் கட்டுப்பாடாகும் (Budgetary control).

அ. மேற்கொள்ளப்படும் நோக்கத்தைத் தெளிவாக முதலில் உறுதி செய்துகொள்ள வேண்டும். நோக்கம் என்பது மிகுதியான இலாபமாகவும் இருக்கலாம்; சிறந்த நிதி நிலேயாகவும் இருக்கலாம். எனவே, எந் நோக்கத்திற்காக வரவுசெலவுத் திட்டம் தயாரிக்கப்படுகிறதென்பதை முதலில் உறுதி செய்து கொள்ளவேண்டும்.

ஆ. இவ்வாறு, உறுதி செய்துகொண்ட நோக்கம் நிறைவேறுவதற்குத் தேவையான வழிவகைகளேப் பின்னர் வகுத்துக் கொள்ளவேண்டும். இது பொதுவான வழிமுறைகளாக இருக்கக் கூடாது. நடவடிக்கை ஒவ்வொன்றையும், ஒவ்வொரு திங்களிலும் செய்யவேண்டிய செயல்களேயும், குறிப்பிட்ட ஆண்டில் மேற்கொள்ளவேண்டிய மொத்த நடவடிக்கைகளேயும் விவரமாக வகுத்துக்கொள்ள வேண்டும். பின்னர், இந் நடவடிக்கைகளே மேற்கொள்வதற்கான வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டும். அவ்வப்போழ்து வரவுசெலவுத் திட்டத்தையும் செயல்முறைகளேயும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். திட்டத்திற்கும், செயல்முறைக்கும் உள்ள வேறுபாடுகளேயும், அவ் வேறுபாட்டிற்குரிய காரணங்களேயும் ஆயவேண்டும். திட்டமிட்ட இலக்கினை அடையவில்லேயெனில் அக் குறைபாடுகளே நீக்குவதற்கு

வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் இன்றியமையாப் பணியாகும். வீண் செலவும், நட்டமும் ஏற்பட்டிருப்பின், அவற்றைத் தவிர்க்கும் முறைகளையும், திட்டமிட்ட இலக்கை இனி அடையவேண்டின், மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை களையும் வகுத்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறாக, வரவுசெலவுக் கட்டுப்பாடு வீண் செலவினங் களையும், நட்டத்தையும் தவிர்ப்பதுடன் திறமையை அதிகரிக்க வழி வகுக்கிறது. வரவு செலவுத் திட்டத்தின் அடிப்படையில் செயல் மேற்கொள்ளப்படுவதால் காலதாமதம் தவிர்க்கப்படுகி றது. வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிட்ட தொகைக்கு மேலாகச் சாதாரணமாகச் செலவழிக்க முடியாது. அதனினும், கூடுதலாகச் செலவழிக்க வேண்டியிருப்பின், நிர்வாகத்தின் இசை வினைப் பெற்றாகவேண்டும். கூடுதல் செலவினத்திற்கு இசைவு வழங்குமுன் பல்வகைச் சூழ்நிலைகளையும் நிர்வாகம் ஆய்ந்து பார்க்கும். இதன் காரணமாகச் சிக்கனம் சிறந்த முறை யில் பின்பற்றப்படுகிறது. வரவு செலவுத் திட்டத்தின் இலக்குகளை நிர்ணயிப்பதற்கு முன்னராகத் தொழிலின் பல்வகை நிலைகளும் சிறந்த முறையில் ஆராயப்படுகின்றன. எனவே, ஒவ்வொருவரின் விருப்பத்திற்கு ஏற்றவாறு செயல் மேற்கொள்ளப்படாமல், குறிப் பிட்ட இலக்குகளை நோக்கிச் செயல் மேற்கொள்ளப்படுகிறது. ஒவ்வொருவரும் ஆற்றவேண்டிய பணி வரையறுக்கப்படுகிறது. இதன் காரணமாக ஒருவரின் திறமையைச் சிறந்த முறையில் கண்காணிக்க முடியும். குறிப்பிட்ட பணியை ஒவ்வொருவரும் செய்கின்றனரா, அல்லவா என்பதை எளிதில் உணரலாம். அத் துடன் ஒருவர் செய்யும் அதே பணியை வேறு சிலரும் செய்யா திருக்கும் நிலை ஏற்படுகிறது.

**பல்வகை வரவு-செலவுத் திட்டங்கள்**

**அ. கொள்முதல் வரவுசெலவுத் திட்டம்** : உற்பத்தி வரவு செலவுத் திட்டத்தினைத் தயாரித்த பின்னர், திட்டமிட்டவாறே பொருள்களை உற்பத்தி செய்யத் தேவையான பல்வகைக் கச்சாப் பொருள்களையும், பண்டங்களையும் வாங்கியாகவேண்டும். ஒவ் வொரு திங்களுக்கும் எவ்வளவு கச்சாப் பொருள்களும், பண்டங் களும் தேவையென்பதைக் கணக்கிடவேண்டும். அத்துடன் பொருள் ஒன்றினை உற்பத்தி செய்ய என்னென்ன பொருள்கள் தேவையென்ற முழுப் பட்டியல் தயாரித்து (பண்டங்களின் பட் டியல்) அதன் அடிப்படையில் எதிர்பார்க்கும் உற்பத்தியின் அள விற்குத் தேவையான ஒவ்வொருவகைப் பொருளின், பண்டத்தின் அளவினை நிர்ணயிக்கவேண்டும். எப்பொழுதும் ஒவ்வொரு வகை

யிலும் கைவசம் இருக்கவேண்டிய சரக்கிருப்பையும் நிர்வாகம் தீர்மானிக்கவேண்டும். ஒவ்வொரு திங்களுக்கும் தேவையான மொத்த அளவினை மதிப்பிட்டுப் பின்னர், அவ்வாறே குறிப்பிட்ட ஆண்டிற்கு மொத்தம் தேவைப்படும் அளவுகளைத் தெரிந்து கொள்ளலாம்.

**ஆ. தொழிலர் வரவுசெலவுத் திட்டம் :** குறிப்பிட்ட அளவு உற்பத்திசெய்யப் பல்வகை தொழிலர்கள் எத்துணைப்பேர் வேண்டப்படுவர் என்பதைத் தீர்மானிக்கவேண்டும். மனித உழைப்பிற்கு மாறுகப் பொறியைப் பயன்படுத்த முடியுமா என்பதையும் நிர்வாகம் தீர்மானிக்கவேண்டும். ஒரு பொருள் உற்பத்தி செய்வதற்கு எவ்வளவு காலம் தேவைப்படுமென்பதை முதலில் கணக்கிட்டு, அதன் அடிப்படையில் திட்டமிடப்படும் உற்பத்திக்குத் தேவையான மொத்த கால அளவை உறுதிசெய்து கொள்ளலாம். பின்னர், ஓராண்டிற்குள் இதனை முடிக்க எத்துணைப்பேர் தேவைப்படுவரென்பதை எளிதாகக் கணக்கிட்டு இதனை முடித்துவிடலாம்.

**இ. மூலதன வரவுசெலவுத் திட்டம் :** இருக்கின்ற பொருள்களையும், இயந்திரங்களையும் பயன்படுத்தியே திட்டமிடப்பட்டுள்ள உற்பத்தியின் அளவினை எட்டமுடியுமா என்பதை ஆயவேண்டும். நிலைச் சொத்துகளின் மீது செலவழிக்கவேண்டிய விவரங்களை இத் திட்டம் உள்ளடக்கும்.

**ஈ. ஆலைச்செலவு வரவுசெலவுத் திட்டம் :** நேரடிக் கூலியாக எவ்வளவு கொடுக்கவேண்டியிருக்கும் என்பதைத் தொழிலர் வரவுசெலவுத் திட்டம் விளக்குகிறது. ஆனால், உறுதியாக ஏற்கவேண்டியிருக்கும் பிற செலவினங்களின் பட்டியல் தயார் செய்து இதனையும் தீர்மானிக்கவேண்டும். இதனை நிலைச் செலவுகளாகவும், மாறும் செலவுகளாகவும், பகுதி மாறும் செலவுகளாகவும் வகைப்படுத்திக் கொள்ளலாம்.

**உ. நிதி வரவுசெலவுத் திட்டம் :** மூலதன வரவுசெலவுத் திட்டமானது நிலைச் சொத்துகள் மீது குறிப்பிட்ட காலத்தில் செலவு செய்யவேண்டிய தொகையைக் காட்டுகிறது என்றோம். அவ்வாறே, குறிப்பிட்டகாலத்தில் தேவையாயிருக்கும் நடைமுறை முதலையும் தீர்மானிக்கவேண்டும். இதனைக் கணக்கிட பல்வகைச் சூழ்நிலைகளையும் கருத்தில் கொள்ளவேண்டும். ரொக்க விற்பனையையும், கடன் விற்பனையையும், வாடிக்கையாளர்களுக்கு அளிக்கப்படும் கடன்கால அளவினையும், கடனீந்தோர் கடன் பேரில்

பொருள்களை வாங்குவதற்கு அளிக்கும் கடன் காலவிவரத்தையும், ஒவ்வொரு திங்களும் ஏற்கவேண்டியிருக்கும் செலவினங்களையும், பங்காதாயம், வரி போன்ற பிற காரணங்கட்காகச் செலவழிக்க வேண்டிய தொகையின் அளவுகளையும் கருத்திற்கொண்டு இதனைத் தயாரிக்கவேண்டும்.

**ஊ. விற்பனை வரவுசெலவுத் திட்டம் :** இது ஒரு முக்கியமான திட்டமாகும். இதன் அடிப்படையிலேயே பிற வரவுசெலவுத் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றனவென்று சொன்னால் மிகையாகாது. குறிப்பிட்ட காலத்தில் எதிர்பார்க்கப்படும் விற்பனையின் அளவையொட்டியே செய்யவேண்டிய உற்பத்தியின் அளவும், வாங்கவேண்டிய கச்சாப் பொருள்கள், பண்டங்கள் ஆகியவற்றின் அளவும், வேலையில் அமர்த்தப்பட வேண்டிய தொழிலர்களின் எண்ணிக்கையும், நேர்முகச் செலவுகளும், மறைமுகச் செலவுகளும் அமைவதால், பல்வகை நிலைகளையும் ஆழ்ந்து ஆய்ந்த பின்னரே இதனைத் தயாரிக்கவேண்டும். ஒவ்வொரு திங்களும் எதிர்பார்க்கப்படும் விற்பனையின் அளவும், பகுதிவாரியாக எவ்வளவு விற்கப்படுமென்பதையும், ஒவ்வொருவகைப் பொருளிலும் எவ்வளவு விற்கப்படும் என்பதையும் நன்கு தீர்மானிக்க வேண்டும். கடந்த சில ஆண்டுகளில் விற்பனை பற்றிய புள்ளி விவரங்களிலிருந்தும் விற்பனைத் துறை அளிக்கும் பிற தகவல்களிலிருந்தும் எதிர்காலத்தின் விற்பனை பற்றிய மதிப்பீட்டினைச் செய்யலாம். விற்பனையர் (Salesmen), கிளை மேலாளர்கள், வட்டார மேலாளர்கள், விற்பனை இயக்குநர் ஆகிய அனைவரும் இதுகுறித்த புள்ளிவிவரங்களைத் திரட்டித் தருவதில் பெரும் துணையாயிருப்பர். அத்துடன், நாட்டில் பொதுவாக நிலவும் பொருளாதார சூழ்நிலைகளையும், வாணிகப் போக்கினையும் குறிப்பிட்ட அத் தொழிலைப் பாதிக்கக்கூடிய அல்லது வளர்க்கக்கூடிய சூழ்நிலைகள் ஏதேனும் ஏற்பட்டுள்ளனவா என்பதையும், தொழில் நிறுவனம் பின்பற்றிவரும் விலை நிர்ணயக் கொள்கைகளையும் ஆய்ந்து பார்க்கவேண்டும். இப்பொழுது பின்பற்றப்படும் விளம்பர முறையையும், எதிர்காலத்தில் பின்பற்றவிருக்கும் விளம்பரக் கொள்கைகளையும் நோக்கவேண்டும். இவ்வாறு வருங்காலத்தில் விற்பனை பற்றிய மதிப்பீட்டை ஓரளவு சரியாகச் செய்யமுடியும்.

**எ. உற்பத்தி வரவுசெலவுத் திட்டம் :** குறிப்பிட்ட காலத்தில் விற்பனையின் அளவை மதிப்பீடு செய்த பின்னர், அதனை உற்பத்தி செய்வதற்குத் தேவையான வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரிக்கவேண்டும். ஆலை மேலாளரின் துணையுடன் இதனைத் தயாரிக்கலாம். உற்பத்தி முறையில் மாற்றம் ஏதேனும்

செய்ய வேண்டுமா, வெளியில் ஏதேனும் வாங்கிக்கொள்ள முடியுமா என்பதையும் சிந்தித்து உற்பத்தி வரவுசெலவுத் திட்டத்தை முடிவு செய்யலாம்.

**ஏ. பொது வரவுசெலவுத் திட்டம் :** பல்வகை வரவு செலவுத் திட்டங்களையும் உள்ளடக்குவதாக இது இருக்கும். திட்டமிட்டவாறு உற்பத்தி செய்யவும், அதனை வரவு செலவுத் திட்ட காலத்தில் விற்பதற்கும் காரணமாயிருக்கின்ற அனைத்து நடவடிக்கைகள் பற்றிய விவரங்களும் இதில் அடங்கும். தொழில் நிறுவனத்தின் பொதுவான நிலையினை உணரக்கூடியதாக இத் திட்டம் இருக்கும். அத்துடன், இக் குறிப்பிட்ட காலத்தில் எதிர்பார்க்கப்படும் இலாபத்தையும், இக் கால இறுதியில் தொழில் நிறுவனத்தின் நிலையை உணரக்கூடிய இருப்பு நிலைக் குறிப்பையும் இது உள்ளடக்கும்.

உற்பத்தி முறைகள், தொழில் நுட்பம், கொள்முதல், விற்பனைப் பணிகள் முதலிய அனைத்தையும் பற்றித் தொழில் நுட்ப வினைஞர்கள் (Technicians), பொறிஞர்கள் (Engineers), ஆய்வுத்துறையினர் ஆகிய அனைவரும் ஒன்றிணைந்து திட்டமிடும் பணியைச் செய்தால்தான், திட்டம் சீரியமுறையில் அமையும். இவர்கள் கொடுக்கும் விவரங்களிலிருந்து பல்வகை வரவுசெலவுத் திட்டங்களைக் கணக்காயர்கள் செய்துமுடிப்பர்.

**கணக்கு அறிக்கைகளைத் தயாரித்தல் :** பல்வகைக் கணக்கு அறிக்கைகளும், புள்ளி விவரங்களும் கீழ்க்கண்ட தலைப்புகளில் நிர்வாகத்திற்குத் தயாரித்துத் தரப்படுகின்றன.

**ஒப்பிடுதல் :** ஓர் ஆண்டின் புள்ளி விவரங்கள் கொடுக்கப்படும்போழ்து கடந்த ஆண்டின் அல்லது கடந்த சில ஆண்டுகளின் புள்ளி விவரங்களும் ஆங்காங்கே கொடுக்கப்படுகின்றன. இதனால் தொழில் நிறுவனத்தின் போக்கினை ஒப்பிட்டு உடனடியாக உணர்ந்துகொள்ளும் வாய்ப்பு நிர்வாகத்திற்குக் கிடைக்கும். திங்கள் வாரியாக விவரங்களைத் தரும்போழ்து, கடந்த திங்களின் புள்ளிவிவரங்களை அல்லது சென்ற ஆண்டின் இதே திங்களுக்குரிய புள்ளி விவரங்களையும் கொடுப்பது வழக்கம்.

**விகித முறை :** செலவினங்களையும் அல்லது வரவினங்களையும் மொத்த செலவினத்தில் அல்லது வரவினத்தில் எத்துணைச் சத விகிதம் என்று குறிப்பிடலாம். இதன் துணைகொண்டு நிர்வாகம்

எளிதில் செலவினங்களைக் கட்டுப்படுத்த முடியும் அல்லது தேவையான செயலை மேற்கொள்ள முடியும்.

**எளிமை :** கொடுக்கப்படும் கணக்கு அறிக்கைகள் பார்த்தவுடன் உணர்ந்துகொள்ளும் வகையில் அமையவேண்டும். எடுத்துக்காட்டாக, உற்பத்தி அளவினை அல்லது விற்பனை அளவினையோ அல்லது இலாப-நட்ட விவரங்களையோ வரை கோடுகள் மூலமாகத் தரும்போழ்து அவற்றின் போக்கினை மிக எளிதாகத் தெரிந்துகொள்ள முடியும்.

**அறிக்கைகள்:** கொடுக்கப்படும் புள்ளிவிவரங்களைக் கொண்டே முழு உண்மையையும் நிர்வாகம் புரிந்துகொள்ள முடியாது. எனவே, புள்ளிவிவரங்கள் உணர்த்தக்கூடிய உண்மைகளை விளக்கும் வகையில் சுருக்கமான அறிக்கையையும் கணக்காயர்கள் தயாரித்து அளிக்கவேண்டும்.

**நிர்வாகக் கணக்கியலின் பயன்கள்:** நிர்வாகக் கணக்கியலின் பயன்கள் பலவகைப்பட்டவையாகும். சிறந்த நிர்வாகத்திற்கு வழிகோலுவது நிர்வாகக் கணக்கியலாகும். ஒவ்வொரு துறையிலும் எதிர்காலம்பற்றிய சரியான முன்னறிவிப்புத் தரப்படுவதால் ஏற்படக்கூடிய எந் நிகழ்ச்சிகளையும் தொழில் நிர்வாகத்தால் சமாளிக்க முடிகிறது. இதன் காரணமாக நட்டம் தவிர்க்கப் படுவதுடன், ஆதாயம் கிட்டிடவும் வழி ஏற்படுகிறது.

முன்னறிவிப்பின் துணைகொண்டே திட்டம் தயாரிக்கப்படுகிறது. திட்டமிட்டசெயல் மேற்கொள்வதால் கால தாமதம், வீண் உழைப்பு, தேவையற்ற செலவினங்கள் ஆகிய அனைத்தும் முற்றிலும் தவிர்க்கப்படுகின்றன. பற்றுக்குறையின் காரணமாகவோ, தேவையற்ற மிகுதியின் காரணமாகவோ தொழில் நிர்வாகம் தொல்லைக்கு ஆளாக வேண்டியதில்லை. எடுத்துக்காட்டாக, விற்பனை பற்றிய முன்னறிவிப்பின் துணைகொண்டு விற்பனைத் திட்டம் தயாரிக்கப்படுகிறது. இதன் அடிப்படையில் உற்பத்தியின் அளவு முன்கூட்டியே தீர்மானிக்கப்படுகிறது. அந்த அளவிற்குப் பொருள்களை உற்பத்தி செய்யத் தேவையாயிருக்கும் பல்வகைக் கச்சாப் பொருள்கள், பண்டங்கள் பற்றிய அளவுகளும் நிர்ணயிக்கப்படுவதால், ஆண்டு முழுதும் தங்கு தடையின்றி அவற்றைப் பெறும் வழிமுறைகளும் வகுக்கப்படுகின்றன. எனவே. கச்சாப் பொருளின்மையால் தொழில் தடைபடாது. அவ்வாறே, எதிர்காலத்தில் காணப்படும் தொழில் நிலையை முன்கூட்டியே அறிந்து திட்டமிட்டுக் கொள்வதால், தொழிலை விரிவுபடுத்து

தலும், சுருக்கிக் கொள்ளுதலும் எளிதாகின்றன. இதன் காரண மாக மந்தப் போக்குத் தென்படும் காலங்களில் தேவையான அள விற்குமேல் உற்பத்தி செய்வதால் ஏற்படும் நட்டம் தவிர்க்கப் படுகிறது. அதுபோன்றே உற்பத்தியாகும் பொருளுக்கு ஒளி மயமான எதிர்காலம் இருக்கின்றது என்று வியாபார முன் னறிவிப்புக் கூறுமாயின், அதற்கு ஏற்றவாறு தொழிலினை விரிவு படுத்தி உற்பத்தியைப் பெருக்கிக் கொள்ளலாம். இதன் காரணமாக அதிக ஆதாயம் பெறும் வாய்ப்பினைத் தொழில் நிர்வாகம் பெறுகிறது.

இற்றை நாள்களில் பெரும் தொழில் நிறுவனங்களில் நிர் வாகம் அவ்வப்போது எழும் பிரச்சினைகட்கு உடனடியாகத் தீர்வு காணவேண்டியிருக்கிறது. நிர்வாகம் எடுக்கும் முடிவுகள் ஏற்ற வையாக இருக்கவேண்டுமெனில், அதற்குத் தரப்படும் தகவல்கள் சரியானவையாக இருக்கவேண்டும். நிர்வாகத்திற்கு வேண்டிய தகவல்களை உடனுக்குடன் தரும் பணியை நிர்வாகக் கணக்கியல் சிறப்பாகச் செய்கிறது.

திட்டங்களின் அடிப்படையில் ஒவ்வொரு துறைக்கும் ஏற்ற வரவுசெலவுத் திட்டம் தயாரிக்கப்படுகிறது. இதன் காரணமாக நிர்வாகத்தின் பல்வகை நடவடிக்கைகளும் முன்கூட்டியே உறுதி செய்யப்படுகின்றன. நிர்வாகத்தின் மனப்போக்கிற்கேற்றவாறு அவ்வப்போது செயல் மேற்கொள்வதைவிட, இவ்வாறு பல்வகை வரவுசெலவுத் திட்டங்களைத் தயாரித்து அனைத்து நடவடிக்கை களும் நிறைவேற்றப்படும்போழ்து வீண் செலவு, தேவையற்ற உழைப்பு ஆகியவை முற்றிலும் தவிர்க்கப்படுகின்றன.

பல்வகை வரவுசெலவுத் திட்டங்களைத் தயாரிப்பதுடன் நில்லாது நிர்வாகக் கணக்கியல் அவ் வரவு செலவுத் திட்டங்கள் உரிய முறையில் செயல்படுத்தப்படுகின்றனவா என்பதையும் கண்காணித்து வருகிறது. இதனை வரவுசெலவுக் கட்டுப்பாடு என்கிறோம். இவ் வரவு செலவுக் கட்டுப்பாடு நிர்வாகக் கணக் கியலின் ஒரு முக்கியமான உறுப்பாகும். எடுத்துக்காட்டாக, விளம்பரத்திற்காகத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 10,000 செலவிடப்படு மென்று வரவுசெலவுத் திட்டம் குறிப்பிடுவதாகக் கொள் வோம். ஆனால், ஒவ்வொரு திங்களும் ரூ. 12,000 வீதம் விளம் பரத்திற்காகச் செலவு செய்யப்படுமாயின், ஆண்டு இறுதியில் இதற்கு ஆகும் செலவு ரூ. 1,44,000 ஆகிறது. வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரித்தும் அது கண்காணிக்கப்படாமையால், அது வீண் முயற்சியாக அமைந்துவிடுகிறது. அவ்வாறின்றி,

ஒவ்வொரு திங்களும் வரவுசெலவுத் திட்டத்தையும் செயல் முறையையும் ஒப்பிடின் திட்டத்தினின்றும் எந்தவளவிற்குச் செயல் முறை மாறுபட்டிருக்கிறதென்பதையும் உணர்ந்து கொள்ளலாம். இதன் பயனுகச் செலவினங்களைத் திட்டத்தில் கண்டுள்ளவாறே கட்டுப்படுத்திக்கொள்ளும் வழி ஏற்படுகிறது. எனவே, ஒவ்வொரு செயலையும் அவ்வப்போழ்து ஒப்பிட்டுப் பார்த்து மாறுதல்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

இவ்வாருக, நிர்வாகக் கணக்கியலின் இன்றியமையா அடிப்படைக் கொள்கைகளான வருமுன் உரைத்தல், திட்டமிடுதல், வரவுசெலவுத் திட்டக் கட்டுப்பாடு ஆகியவற்றின் காரணமாக, சிக்கனமான முறையில் செம்மையான நிர்வாகம் கிடைக்க வழி ஏற்படுகிறது. நிர்வாகத்திற்குத் தேவையான பல்வகைக் கணக்கு அறிக்கைகள் அவ்வப்போழ்து தரப்படுவதால், சிக்கல் மிக்க சூழ்நிலைகளிலும் சிறந்த தீர்ப்பினைக் காண நிர்வாகக் கணக்கியல் நிர்வாகத்திற்குப் பெரும் துணையாயிருக்கிறது.

## பொறிமயக் கணக்கியல்
## (Mechanised Accounting)

இற்றை நாள்களில் நாம் பொறிமய உலகில் வாழ்கிருேம். உடல் உழைப்பைக் குறைத்து உற்பத்தியைப் பன்மடங்காய்ப் பெருக்கும் பலவகைப் பொறிகள் நாள்தோறும் கண்டுபிடிக்கப்பட்டுப் பயன்படுத்தப்படுகின்றன. விரைவாகச் செயலாற்றலும், தொலைவினைக் குறைத்தலும், கடும் உழைப்பைத் தவிர்த்தலும் அறிவியல் கண்டுபிடிப்புகளின் நோக்கமாகும். பொறிகள் பயன்படுத்தப்படாத் துறைகளே இல்லை. போக்குவரத்துத் துறையிலும், உற்பத்தித் துறையிலும் அறிவியலின் அரும் கண்டுபிடிப்புகள் வியத்தகு மாற்றத்தை விளைவித்துள்ளன. அத்துடன் நில்லாது, அலுவலகப் பணிகளை ஆற்றலுடன் செய்யும் பொறிகளும் அதிகவளவில் பயன்படுத்தப்படுகின்றன. கம்பியில்லாத் தந்தி, நெடுந்தொலைபேசி வசதிகள், நிலவழி, நீர் வழி, வான் வழி போக்குவரத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி, எண்ணற்கரிய முறையில் உற்பத்தியை உயர்த்திடும் பல்வகைச் சாதனங்கள் தொழில் முறைகளில் ஒரு புரட்சியையே உருவாக்கியிருக்கின்றன. நினைத்தற்கரிய இம் மாற்றத்திற்கு ஏற்றவாறு கணக்கியலிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மிகவும் வளர்ந்துள்ள தொழிலகங்களின் நடவடிக்கைகளைச் சிறந்த முறையில் பல்வகைக் கணக்கேடுகளில் எழுதவும், வேண்டிய புள்ளி விவரங்களை உடனுக்குடன் உணர்த்தவும் அறிவியற் பொறிகள் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.

பரம்பரையாகக் கணக்கு எழுதும் முறைப்படி, நிகழும் நடவடிக்கை ஒவ்வொன்றும் கையால் எழுதப்பட்டு, பல்வகை ஏடுகளில் பதியப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ரொக்கம் பெற்றது என்ற நடவடிக்கை முதலில் ரொக்க ஏட்டிலும், பின்னர் அதனைக் கொடுத்த நபரின் கணக்கிலும், பின்னர் அவருக்கு அளிக்கப்படும் கணக்கு அறிக்கையிலும் இது பதியப்படுகிறது. இவ்வாறு ஒரு நடவடிக்கையே பன்முறைப் பதியப்படுவதால், நேரம் வீணாவதுடன், உழைப்பும் செலவும் அதிகரிக்கின்றன. வாணிக வளர்ச்சியும், தொழில் முன்னேற்றமும் கண்டுள்ள இந் நாள்களில் நாள்தோறும் நிகழும் நடவடிக்கைகள் பல்கிப் பெருகிவிட்டன. அத்துடன், மேலை நாடுகளில் மனித சக்திக்கும் பற்றுக்குறையுள்ளது. இப் பற்றுக்குறை மனித சக்தியுடன் வளர்ந்துவரும் நடவடிக்கைகளை உரிய முறையில் பதிய, பொறிகளின் துணையை நாடவேண்டிய தேவை ஏற்பட்டது. பெரிய தொழிலகங்களைத் திறமையுடன் நிர்வகிக்க அவ்வப்பொழுது நிர்வாகத்தினருக்குப் புள்ளி விவரங்களும், சரியான தகவல்களும் தேவைப்படுகின்றன. இதனால், கணக்கெழுதும் முறைகளிலும் பெருத்த மாறுபாடு ஏற்படுத்தப்பட்டது. இதன் விளைவே பொறிமயக் கணக்கியல் ஆகும்.

கீழ்க்கண்ட நோக்கங்கட்காகக் கணக்குப் பொறிகள் பயன்படுத்தப்படுகின்றன.

அ. தொழில் வாணிகத் துறையில் ஆங்காங்கு ஏற்படும் வீண் செலவுகளைக் கண்டுபிடித்தல்.

ஆ. ஆதாயமற்ற துறைகளை நீக்கிவிடல்.

இ. பெருமுதல் முடங்கிக் கிடத்தலைத் தவிர்த்து ஆதாயம் பெறும் வகையில் அதனைப் பயன்படுத்தல்.

ஈ. உற்பத்திச் செலவையும், விற்பனைச் செலவையும், நிர்வாகச் செலவையும் முடிந்தவரைக் குறைத்தல்.

உ. இலாபம் ஈட்டக்கூடிய நடவடிக்கைகளை ஏற்படுத்தல்.

இந் நோக்கங்களை நிறைவேற்ற கணக்குப் புள்ளிவிவரங்கள் அவ்வப்பொழுது தேவைப்படும். காலங்கடந்து கிடைக்கும் புள்ளி விவரங்களால் பயன் விளைவதில்லை. எனவே, அவை வேண்டும்பொழுதே கிடைக்கச் செய்ய பொறிகள் பயன்படுத்தப்படுகின்றன.

கணக்குப் பொறிகள் விரைவாகப் பதிவதுடன் பல வழிகளில் பயன்படக்கூடிய புள்ளிவிவரங்களை எளிதாகத் தருகின்றன. கணக்கு எழுதுவதில் பயன்படுத்தப்படும் பல்வகைப் பொறிகளைப் பற்றி விளக்கும் முன்னர், பொறிமயக் கணக்கியலினால் ஏற்படும் பயன்களையும் குறைபாடுகளையும் காண்போம்.

**பொறிமயக் கணக்கியலின் நோக்கங்களும் பயன்களும்**

**1. விளைவு :** கையால் எழுதுவதை விட பொறிகள் பயன்படுத்தப்படும்பொழுது செயல் விரைவாக முடிக்கப்பெறுகிறதென்பதை யாரும் மறுப்பதற்கில்லை. எடுத்துக்காட்டாக, ஒரு பெரிய நூற்பாலையில் திங்கள்தோறும் செலுத்தவேண்டிய ஊதியப் பட்டியலைத் தயாரிக்கப் பலர் தேவைப்படுவர். ஒவ்வொரு திங்களும் 10ஆம் நாள் கூலி தரப்படவேண்டுமெனில், அதற்குப் பின்னர் இவர்கட்கு அதிக வேலையிருக்காது. கூலிப் பட்டியல் தயாரிப்பதற்காகப் பலர் பணியில் அமர்த்தப்படுவதால் உற்பத்திச் செலவு அதிகரிக்கிறது. கூலிப் பட்டியலைத் தயாரிப்பதற்குக் கணக்குப்பொறிகளைப் பயன்படுத்தின், இவ் வீண்செலவு குறையும். குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கவேண்டியிருக்கும் பணியை விரைவில் செய்வதுடன், பலர் செய்யும் வேலையை ஒரு பொறியே செய்து விடுகிறது. இவ்வாறு விரைவில் செயல் முடிக்கப்படுவதுடன் வீண் செலவும் தவிர்க்கப்படுகிறது.

**2. பிழையின்றிப் பதிதல் :** கையினால் எழுதும்பொழுது ஏற்படும் பிழைகளைவிடப் பொறிகள் பதியும்பொழுது ஏற்படும் பிழைகள் மிகக் குறைவே. அத்துடன், ஏற்படும் பிழைகளைப் பொறிகளே அவ்வப்பொழுது உணர்த்துகின்றன.

**3. சிக்கனம் :** பொறி இல்லா நிலையில் பலர் செய்ய வேண்டிய பணியைப் பொறியைப் பயன்படுத்தும் பொழுது அதனை இயக்கும் ஒருவரே முடித்து விடுகிறார். இவ்வாறு கணக்காய்வுத் துறையின் ஊதியம் மிகவும் குறைக்கப்படுகிறது. அத்துடன் கூட்டுதல் போன்ற சாதாரணப் பணியில் ஈடுபட்டிருப்போரை வேறு பணியில் ஈடுபடுத்துவதன்மூலம் உற்பத்தித் திறன் அதிகரிக்கிறது.

**4. தெளிவாகப் பதிதல் :** கணக்குப் பொறிகள் தயாரிக்கும் அறிக்கைகளும் கணக்குகளும் மிகவும் தெளிவாக இருப்பதுடன் அனைவராலும் புரிந்துகொள்ளுமாறும் இருக்கின்றன. கையெழுத்துகளைப் புரிந்துகொள்வதில் ஏற்படும் தொல்லை சிறிதும் இங்கிருப்பதில்லை.

**5. கணக்குப் பதிவின் பல நகல்கள் :** கூடுதல் செலவு ஏதுமின்றியே நடவடிக்கைகளைப் பதியும்பொழுது அவற்றின் பல படிகளைப் (நகல்களைப்) பெற்றுக் கொள்ளலாம். எனவே, வேண்டும் பொழுதெல்லாம் பதிவு அறிக்கைகளை இயக்குநரவைக்கும், நிர் வாகத்தினருக்கும் அவ்வப்பொழுது புதிய முயற்சி ஏதுமின்றி அனுப்பிவைக்கமுடிகிறது.

**6. இடைக்காலக் கணக்குகள் :** இடைக்காலப் பங்காதா யம் வழங்க வேண்டுமாயின், அல்லது ஆண்டு இடையில் கம்பெனி யின் நிதி நிலையை அறியவேண்டியிருப்பின், இடைக்காலக் கணக்கு களைத் தயாரிக்க வேண்டிய தேவை ஏற்படும். பொறிகளைப் பயன் படுத்துகின்ற காரணத்திஞல், காலத்தைச் சிறிதும் வீணுக்காது இடைக்காலக் கணக்குகளைத் தயாரிக்க முடியும். காரணம், ஒவ் வொரு முறையும் நடவடிக்கைகளைப் பொறிகளால் பதியும் பொழுதே கணக்குகளின் இருப்புகளும் அவ்வப்பொழுதே கட்டப் படுகின்றன.

**7. கணக்குகளை இருப்புக் கட்டல் :** ஒரு திங்களின் நட வடிக்கைகள் அனைத்தும் துணை ஏடுகளிலிருந்து பேரேட்டில் எடுத்து எழுதப்படும் வரை அவற்றை இருப்புக் கட்டுவதற்காகப் பேரேட்டு எழுத்தர் (Ledger clerk) காத்திருக்க வேண்டியிருக் கிறது. இதன் காரணமாகக் கடனாளிகட்குக் கணக்கு அறிக்கை களை அனுப்புவதில் காலதாமதம் எற்படுகிறது. அது மட்டுமன்றி, திங்கள் இறுதியில் வேலையின் சுமையும் அதிகரிக்கிறது. பணியை விரைவில் முடிப்பதற்காகப் பிற பணிகளில் ஈடுபட்டிருப்போரை இதைச் செய்ய அழைக்கும்பொழுதெல்லாம், அவர்கள் செய்து வரும் வழக்கமான பணி நின்றுவிடுகிறது. கணக்குப் பொறிகள் நடவடிக்கைகளைப் பதியும்பொழுதே இருப்புகளையும் கட்டுவதால் மேலே விவரித்த தொல்லை சிறிதுமின்றி, உரிய காலத்தில் கணக்கு அறிக்கைகளை வழங்கமுடிகிறது.

**8. கூடுதல் கால ஊதியத்தைத் தவிர்த்தல்** (Avoiding overtime payment) : ஒவ்வொரு திங்கள் இறுதியிலும் மேலே விவரித்தவாறு குவிந்திடும் கூடுதல் பணியை முடிப்பதற்காகக் கணக்காயர்கள் வழக்கமான அலுவலக நேரம் முடிந்த பின்னரும் பணியாற்ற வேண்டியுள்ளது. இதன் காரணமாக அவர்கட்குக் கூடுதல் கால ஊதியம் வழங்கவேண்டியுள்ளது. ஆஞல், பொறி களைப் படுத்தும்பொழுது இந்நிலை அறவே தவிர்க்கப்படுவதால், இதஞல் ஏற்படும் செலவு முற்றிலும் தவிர்க்கப்படுகிறது.

**9. சிறந்த கட்டுப்பாட்டு முறை :** பொறிகளைப் பயன் படுத்துவதால், நடவடிக்கைகள் பதியப் பெறுவதைச் சிறந்த முறையில் கண்காணிக்கவும், சரிபார்க்கவும்முடிகிறது. ரொக்கப் பதிவுப்பொறி, அஞ்சல் தலை பதியும் பொறி, கூலிப் பதிவிற்கான காலப் பதிவுப் பொறி முதலிய பொறிகள் பயன் படுத்தப்படும் பொழுது நடவடிக்கைகளின் பதிவைச் சிறந்த முறையில் சரி பார்த்துக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படுகிறது.

**10. நிர்வாகத் திறமை :** நிர்வாகத்தினர் வேண்டும் புள்ளி விவரங்கள் உடனுக்குடன் கிடைக்கும் வழி ஏற்படுவதால், விரை வாக அவர்கள் முடிவெடுக்கும் வழி ஏற்படுகிறது. காலத்தே எடுக்கப்படும் முடிவு சிறந்த பயனளிக்கும் என்பதைக் கூற வேண்டுவதில்லை.

**11. புள்ளிவிவரங்களைத் தொகுத்தல் :** காலத்தை வீணுக் காமல் புள்ளிவிவரங்களைத் தொகுத்தல் எளிதாக அமைகிறது. துளையிடப்பட்ட அட்டைகளில் பதிவாகும் அடிப்படை விவரங் களிலிருந்து பல்வகைத் தகவல்களைக் கம்பியூட்டர்கள் (computors) போன்ற பொறிகள் தருகின்றன.

12. பொறிகளைப் பயன்படுத்துவதால், அயர்வுதரும் ஒரே வகைப் பணியைக் கணக்காயர்கள் செய்யவேண்டிய தேவை யில்லை. அதாவது, கணக்குகளைப் பதிதல், கூட்டுதல், எடுத்து எழுதுதல், இருப்புக் கட்டுதல் போன்ற உள்ளத்திற்கு விரைவில் அயர்ச்சியைத் தரக்கூடிய பணிகளைப் பொறிகளே செய்து விடுகின்றன. இதனால், கணக்காயர்கள் பொறிகள் தரும் புள்ளி விவரங்களைக் கொண்டு செய்திகளைத் தொகுத்து ஆயும் பணியைத் திறமையுடன் செய்வர்.

**குறைபாடுகள்**

1. பொறிமயக் கணக்குகளில் பயன்படுத்தப்படும் தனித் தனித் தாள்களோ அல்லது அட்டைகளோ வேண்டுமென்றே அல்லது தற்காலிகமாகவோ தொலைக்கப்படலாம். இதனால் மூலப் பத்திரங்கள் பொறி இயக்குநரிடம் சேராமல் போகும்.

ஆனால், ஒவ்வொரு அட்டைக்கும் அல்லது தாளுக்கும் வரிசை எண் கொடுப்பதின் மூலமாக இக் குறைபாட்டினைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

2. தொடக்கப் பதிவேட்டிலேயே (Original Record) பிழையிருப்பின், அப் பிழையினைக் கண்டுபிடித்தல் தொல்லையாகும்.

3. நடவடிக்கைகட்கான விளக்கக் குறிப்பு இல்லாக் காரணத்தால், நடவடிக்கையின் தன்மையைப் புரிந்து கொள்வதில் தொல்லை ஏற்படலாம். ஆனால், குறி எண்கள் (code numbers) ஆங்காங்கே கொடுக்கப்படுவதன் மூலமாக இக் குறைபாட்டினையும் நீக்கிக் கொள்ளலாம்.

4. பழைய முறையில் பயிற்சி பெற்ற கணக்காயர் தெரிந்து வைத்திருக்கும் கணக்கியற் கோட்பாடுகளைப் பொறி இயக்குநர் (Machine operator) தெரிந்து வைத்திருப்பதில்லை. இதன் காரணமாக விதிப் பிழைகள் ஏற்படும் வாய்ப்புப் பொறிமயக் கணக்கில் அதிகமுண்டு.

5. கணக்குப் பொறிகளை வாங்குவதற்குப் பெரும் பணம் செலவழிக்க வேண்டியுள்ளது. எனவே, மிகப் பெரிய தொழிலகங்களோ, நிறுவனங்களோதான் பொறிகளைப் பயன்படுத்த முடியும்.

6. கணக்குப் பொறிகளைப் பயன்படுத்துவதால் வேலை வாய்ப்புக் குறைகிறது.

### பேரேடுகளில் எடுத்து எழுதுதல்

பொறிமயக் கணக்குகளில் மூலப் பத்திரங்களிலிருந்து (original documents) நேரிடையாகப் பேரேடுகளில் எடுத்து எழுதப்படுகின்றன. துணை ஏடுகளோ, குறிப்பேடுகளோ வைத்திருக்கப்படுவதில்லை. இதன் காரணமாக நடவடிக்கைகளைப் பதிவதில் ஆழ்ந்த கண்காணிப்புத் தேவைப்படுகிறது. கீழ்க் கண்டவாறு இதனை ஓரளவு கட்டுப்படுத்த முடியும். முதலில் எல்லா மூலப்பத்திரங்களுக்கும் அவைகள் வரவர வரிசைஎண் கொடுக்கப்பட்டுக் கணக்கேடுகளில் பதியவேண்டும். மூலப் பத்திரங்களிலிருந்து பேரேடுகளில் பதியும்போது அவ் வரிசை எண்ணையும் பேரேட்டில் பதியவேண்டும். பேரேட்டுப் பக்கஎண்ணையும், மூலப்பத்திரங்களில் பதியவேண்டும். மூலப் பத்திரங்களில் பதிவதற்கு முன்னர் வகைப்படுத்தி ஒவ்வொரு வகைக்கும் குறி எண் (code number) கொடுக்கப்பட வேண்டும். வகைப்படுத்தப்பட்ட தாள்களை வரிசை எண்படி கோப்புகளில் தொகுத்துவைக்க வேண்டும்.

## பொறிமயக் கணக்கியலுக்கு ஏற்ற பணி

முதலில் குறிப்பிட்டுள்ளவாறு நிகழும் நடவடிக்கைகள் மிகவும் குறைவாக இருப்பின், கணக்குப் பொறிகளைப் பயன்படுத்துவது வீண் முயற்சியாகும். தொழிலகத்தில் செய்யவேண்டிய மொத்தப் பணியின் அளவைக் கணக்கிட்டுப் பொறிகளைப் பயன் படுத்தலாமா, வேண்டாமா என்ற முடிவு எடுக்கவேண்டும். மிகவும் அதிகமாகவும், மீண்டும் மீண்டும் வரக்கூடிய விவரங்களும், விரைவாக முடிக்கவேண்டிய பதிவுகளும் பொறிமயக் கணக்கியலுக்கு ஏற்றது. அத்துடன் நீண்ட நாள்களுக்கு பாதுகாத்து வைத்திருக்கவேண்டுமெனில், அதுவும் இதற்கு ஏற்றதன்று. உறுப்பினர் பதிவேடு பல்லாண்டுகட்குப் பாதுகாத்து வரவேண்டிய ஏடாகும். ஓராண்டிற்கு உறுப்பினர் பதிவேட்டில் பதிவாகும் நடவடிக்கைகள் மிக மிகக் குறைவே. இவ்வாறு பல பத்திகளில் பல்வகைச் செய்திகளைத் தரவேண்டியிருப்பதுடன் ஓராண்டில் செய்யவேண்டிய பதிவுகள் மிகவும் குறைவாகயிருப்பின், கணக்குப் பொறிகள் ஏற்றதல்ல. பொறிகளை இவற்றிற்குப் பயன்படுத்த முடியாது என்று பொருளல்ல. ஆனால், அடிக்கடி பதிவுகள் இல்லாக் காரணத்தினால், பொறிகள் இதற்கு ஏற்றதல்லவென்று கூறலாம். உற்பத்தி, விற்பனை, கூலி போன்ற புள்ளிவிவரங்களைப் பலவகைகளில் தொகுத்து ஆய வேண்டியிருப்பின், பொறிகளைப் பயன்படுத்தலாம். அத்துடன், உற்பத்தி பற்றிய விவரங்கள் பதிவாகும் அட்டைகளின் அடிப்படையில் பலவகையான புள்ளிவிவர அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன. ஆனால், பங்கு மாற்று நடவடிக்கையிலிருந்து தொகுத்து ஆய வேண்டியது எதுவுமில்லை.

இனிக் கணக்குப் பொறிகளில் சிலவற்றைக் காண்போம்.

**1. பேரேட்டில் எடுத்து எழுதும் பொறிகள் :** தட்டச்சுப் பொறி, கணக்குப் பொறி இவற்றின் பணிகளை ஒன்றாகச் செய்வது இப் பொறி. கூட்டல், கழித்தல்களையும் செய்கிறது. இதற்காகத் தயாரிக்கப்படும் தனித் தாள்களில் பல நகல்களையும் எடுத்துக் கொள்ளலாம்.

**2. ரொக்க ஏட்டை எழுதுதல் :** ரொக்கம் பெறுதலையும், செலுத்தலையும் பதியத் தனித்தனித் தாள்கள் பயன்படுத்தப் படுகின்றன. ஒவ்வொரு தாளிலும் உரிய கோடுகள் இடப்பட்டிருக்கும். பெறுதல் பக்கத்திற்காக இருக்கும் இரண்டு தாள்களில் ஒன்று மொத்தமாகவும், மற்றொன்று மெல்லியதாகவும் இருக்கும். மெல்லிய தாள் பல துண்டுச் சீட்டுகளாகத் துளையிடப்பட்டிருக்-

கும். ஒவ்வொரு துண்டுச்சீட்டும் அதிகார பூர்வமான ரசீதாகும். ரொக்கம் பெறும்போழ்து பெறுதல் தாள்களில் எழுதப்பெறு கின்றன. இவற்றைப் பதியும்போழ்து நகல் தாளின் துணையுடன் ரசீதுகளும் தயாரிக்கப்படுகின்றன. இவ்வாறு ரொக்கம் பெறு வதற்கான ரசீது என்று தயாரிக்காமல் ரொக்க ஏடு பதியப்படுவ தில்லை. பின்னர்த் தேவையாயிருப்பின், ரசீதுகளில் வருவாய்த் தலைகளையொட்டி, வாடிக்கையாளர்கட்கு அனுப்பப்படும். பிற ருக்கு அனுப்பத் தேவையில்லாத ரசீதுகள் (எடுத்துக்காட்டாக, ரொக்க விற்பனைக்காகத் தயாரிக்கப்படும் ரசீது), தகுந்த முறை யில் குறியிடப்பட்ட கோப்புகளில் வைக்கப்படும். வாடிக்கை யாளர்களிடமிருந்து பணம்பெறும்போழ்து, ரசீதுகள் தயாரிக்கப் படுவதுடன், வாடிக்கையாளர்களின் பேரேட்டு அட்டையைச் சொருகி, அதிலும் ஒரே தடவையில் பதிவினைச் செய்துகொள்ள வழி ஏற்படுகிறது.

**3. விற்பனைப் பேரேடு :** விற்பனைப் பேரேட்டு அட்டையில் முதலில் தொடக்க இருப்பும், அடுத்த பத்தியில் இடாப்புத் தொகை யும், அதற்கு அடுத்த பத்தியில் மொத்த இருப்பும் பதியப்படு கின்றன. ஒரே நேரத்தில் வாடிக்கையாளருக்கு அனுப்பவேண்டிய அறிக்கையிலும், பேரேட்டுக் கணக்கிலும், ஒவ்வொரு நாளுக்கு மான விற்பனை அறிக்கையிலும் இந் நடவடிக்கை பதிவாகிறது. (இடாப்புகள் அதே வரிசையில் அடுக்கப்பட்டு மொத்த இடாப்புத் தொகை கூட்டப்படும். கணக்குப் பொறி காட்டும் மொத்த விற்பனைத் தொகையையும், இதனையும் ஒப்பிட்டுச் சரிபார்த்துக் கொள்ளலாம்). இவ்வாறு இடாப்புகள் அனைத்தும் பதியப்பட்ட வுடன் வாடிக்கையாளரிடமிருந்து பெற்ற ரொக்கமும், வரவு வைக்கவேண்டிய பிற தொகைகளும் பதியப்படுகின்றன. கட்டுப் பாட்டுத் தாள்களில் (Control Sheets) இவ் விவரங்கள் அனைத் தும் (பற்று வைக்கப்படவேண்டிய தொகையும், வரவு வைக்கப்பட வேண்டிய தொகையும்) விழுகின்றன.

ஒவ்வொரு இடாப்பிற்குமான பணம் வந்துவிட்டதா என்பதை உணரும் வகையில் இடாப்பினை எடுத்து எழுதும்போது திங்கள்வாரிக் குறிப்பிற்காக (Monthwise Analysis) ஒரு கூடுதல் பத்தியிலும் இடாப்புத் தொகை எழுதப்படுகிறது. அத்துடன் அத் திங்களின் பெயரும் குறிப்பிடப்படுகிறது. இவ்விடாப்பிற்கான பணம் பெறும்பொழுது, இத் தொகை வாடிக்கையாளர் கணக்கில் வரவு வைக்கப்படும். அத்துடன் இதற்கு நேராகவுள்ள திங்கள் பெயரிலும் ஒரு குறி இடவேண்டும் (இத் தொகை நிலுவையில்

இல்லையென்பதை உணர்த்த, திங்கள் பெயரும் குறிக்கப்படுகிறது).

**4. கொள்முதல் பேரேடு :** கடன் பேரில் நமக்குச் சரக்கு அளிக்கும் ஒவ்வொரு கடனீந்தோருக்கும் தனித்தனிப் பேரேட்டு அட்டை பயன்படுத்தப்படும். விற்பனைப் பேரேட்டில் எடுத்து எழுதுவது போன்றேதான் இங்கும் பதியப்படும். எல்லாத் தொகைகளும் பதிவாகும்வண்ணம் ஒரு கட்டுப்பாட்டுத் தாளும் (Control Sheet) வைக்கப்படும். கொள்முதல் இடாப்பும் வரவு வைக்கவேண்டிய பிரிவும் முதலில் எடுத்து எழுதப்படும். பின்னர்க் கடனீந்தோருக்குச் செலுத்திய தொகைகள் பதியப்படும். கடனீந்தோர் கணக்கில் வரவு வைக்கப்பட்ட தொகைகளும், பற்று வைக்கப்பட்ட தொகைகளும், இவற்றின் தனித்தனிக் கூட்டல் தொகைகளும் கட்டுப்பாட்டுத் தாளில் கிடைக்கும்.

**5. முதன்மைப் பேரேடு** (Principal Ledger) : பல்வகைக் கணக்குகளும் சாதாரணமாக எடுத்து எழுதப்படுவது போன்றேதான் பொறிமயக் கணக்கியலிலும் எடுத்து எழுதப்படுகின்றன. ஆனால், ஒரே ஒரு வேறுபாடுதான் உண்டு. அதாவது, பற்றுவைக்க வேண்டிய பதிவுகள் அனைத்தும் முதலில் செய்யப்படும்; பின்னர், வரவு வைக்கவேண்டிய பதிவுகள் செய்யப்படும். இவற்றின் தொகைகள் அனைத்தும் கட்டுப்பாட்டுத் தாளில் விழும். எனவே, கட்டுப்பாட்டுத் தாளின் துணைகொண்டு பற்றுவைத்த மொத்தத் தொகையையும், வரவு வைத்த மொத்தத் தொகையையும் தனித்தனியாக உணரலாம்.

**6. பல்வகைப் பொறிகள் :** கூலிப்பட்டியலை (Wage Sheet) தயாரிப்பதற்குப் பொறிகள் பெருந்துணையாயிருக்கின்றன. அத்துடன் சீட்டுகளும், துண்டுச் சீட்டுகளும் தயாரிக்கப்படுவதால், இத் துண்டுச் சீட்டினை (கூலி பற்றிய விவரம் உள்ளது) ஊதிய மேலுறையில் (Wage Covers) வைக்கப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அவ்வாறே, பண்டப் பொருள்களின் பேரேட்டினையும் (Stores Ledger) கணக்குப் பொறிகள் தயாரிக்கின்றன. இவற்றிற்கான அட்டைகளில் அளவும், தொகையும் குறிக்கப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் பல துறைகளுக்கு வழங்கப்பட்ட பண்டங்களின் விவரங்களைக் காட்டும் வழங்கு குறிப்பேடு (Stores Issue Journal) போன்று கட்டுப்பாட்டுத் தாள் பயன்படுகிறது. அவ்வாறே பண்டங்கள் பெறுவதைப் பதியும்பொழுது, பெறுதல் பேரேடு

(Receipts Journal) போன்றே இக் கட்டுப்பாட்டுத் தாள் பயன் படுகிறது. அதாவது, கட்டுப்பாட்டுத் தாளில் மொத்தம் பெற்ற பண்டங்கள் பற்றிய விவரங்களும், பல துறைகட்கும் வழங்கிய பண்டங்கள் பற்றிய விவரங்களும் காணப்படும். இவற்றின் துணைகொண்டு பண்டப் பேரேட்டுக் கட்டுப்பாட்டுக் கணக்கினை (Stores Ledger Control Account) தயாரிக்கலாம்.

சில கணக்குப் பொறிகள் வழக்கமாகச் செய்யும் கூட்டல், கழித்தல் பணியுடன் பெருக்கல், வகுத்தல் போன்றவற்றையும் செய்ய வல்லவை. துளையிடும் பொறிகளால் அட்டைகளில் துளையிடுவதன்மூலம் பொறியில் செலுத்தப்படும் அடிப்படை விவரங்களைக் கொண்டு, பொறிகளே பலவகை அறிக்கைகளைத் தயாரிக்கின்றன.

பொறிகள் பலவகை விவரங்களையும் ஒரே நேரத்தில் தரத்தக்கவை என்று கூறியிருக்கிறோம். எடுத்துக்காட்டாக, கூலி பற்றிய அட்டையில் தொழிலரின் எண், அவரின் வேலைநேரம் அவர் ஈட்டிய ஊதியம், அவர் ஊதியத்தில் கழிக்கவேண்டியவை போன்ற விவரங்களை மட்டும் கொடுக்காமல், எந்தெந்த வேலைக்குக் கூலி வழங்கப்பட்டது, சாதாரணமாக ஆகும் வீண் நேரம், வழக்கத்திற்கு மாறாக ஏற்பட்ட வீண் நேரம், அதற்கான காரணம் போன்ற விவரங்களையும் தரலாம். அப்பொழுதுதான் பல்வகை அறிக்கைகளை ஒரே நேரத்தில் தயாரிக்க முடியும். எடுத்துக்காட்டாக, கொள்முதல் பற்றிப் பதியும் பொழுது கீழ்க்கண்ட விவரங்களை ஒரே நேரத்தில் அட்டையில் பதியலாம்.

நடவடிக்கையின் தன்மை (ரொக்கம், கடன் முதலியவை)

நாள்

சரக்கு

வழங்கியவர் பெயர் (Supplier)

ஆணை எண்ணும், நாளும்

இடாப்பு எண்ணும், நாளும்

வாங்கிய சரக்குப் பற்றிய விவரம்

அளவு, விலை வீதம்

பிற கட்டணங்கள் (கட்டுமானம், விற்பனை வரி முதலியவை)

மொத்தத் தொகை

கடன் தவணைக் காலம்

தொகை செலுத்திய நாள்

மேற்கண்ட தகவல்களிலிருந்து கீழ்க்கண்ட அறிக்கைகளை எளிதில் தயாரிக்க முடியும்.

அ. ஒவ்வொரு திங்களுக்குமான அறிக்கை, அல்லது ஆண்டு முழுவதற்கும் மொத்தம் செய்த கொள்முதல், ஒவ்வொரு கடனீந்தோரிடமிருந்து வாங்கிய சரக்கு, ஒவ்வொருவருக்கும் தர வேண்டிய இருப்பு, மொத்தம் ரொக்கம் கொடுத்து வாங்கிய சரக்குப் போன்ற விவரங்களையுடைய அறிக்கை.

ஆ. ரொக்கத்திற்காகவும், கடனுக்காகவும் ஒவ்வொரு வகைப் பொருள் வாங்கிய விவரம், அளவு, தொகை முதலியன பற்றிய அறிக்கை.

இ. ஒவ்வொருவரிடமும் வேண்டிய சரக்குப் பற்றிய விவரம், அவர்கள் அனுப்பிய சரக்குப் பற்றிய விவரம்.

இவ்வாறு, பெருந்தொழிலகங்களில், கணக்குப் பொறிகளைப் பயன்படுத்துவதால் விளையும் பயன்கள் பலவாகும். தொழில் நிறுவனத்தின் பலதரப்பட்ட நடவடிக்கைகளை நன்முறையில் கண்காணிக்கவும், செம்மையான நிர்வாகம் கிட்டவும் இவை வழி வகுக்கின்றன. வேண்டிய விவரங்களையும், தகவல்களையும் தக்க நேரத்தில் தருவதால், நிர்வாகம் ஏற்ற முடிவினை உடனுக்குடன் எடுக்க முடிகிறது. வீண் செலவும், வீண் உழைப்பும், காலங் கடத்தலும் அறவே அகற்றப்பட்டு, விரைவில் செயல் முடிக்கக் கணக்குப் பொறிகள் வழிகோலுகின்றன என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

## வினாக்கள்

1. 'மேலாண்மைக் கணக்கியல்' — (Management Accounting) இலக்கணம் தந்து விளக்குக.
2. மேலாண்மைக் கணக்கியலின் நோக்கங்கள் யாவை? அவற்றால் விளையும் பயன்களை ஆய்க.

# மேற்கோள் நூற் பட்டியல்


Agarwala, Dr. A. N., The Higher Science of Accountancy.

Batliboi, J. R., Advanced Accounting.

Grewal, T. S., Introduction to Accountancy.

Gupta, R. L., Advanced Accountancy. Theory, Method and Application, Volume I

Gupta, R. L., Advanced Accountancy. Theory, Method and Application, Volume II

Jai Narain Vaish, Book-keeping and Accounts — Part II

Nana Bhoy S. Davar, Practical Book-keeping and Accountancy' Volume I

Nana Bhoy S. Davar, Practical Book-keeping and Accountancy, Volume II

Rup Ram Gupta and Vidya Saran Gupta, Advanced Accounting.

Sarkar, N., Book-keeping and Accountancy.

Shukla, M. C. and Grewal, T. S., Advanced Accounts.

Tandan, B. N., A Handbook of Practical Auditing.

William Pickles, Accountancy.

# கலைச்சொற்கள்

## A

| | | |
|---|---|---|
| Absorption | — | ஈர்ப்பு, ஈர்ப்பமைப்பு, எடுத்துக் கொள்ளல் |
| Acceptance | — | ஏற்பு, செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு |
| Account | — | கணக்கு |
| Accountancy | — | கணக்கியல், கணக்குப் பதிவியல், கணக்கு வைப்பியல் |
| Accountant | — | கணக்காயர் |
| Accounting | — | கணக்கு வைப்பு |
| Accrued interest | — | கூடியுள்ள வட்டி, ஏறியுள்ள வட்டி, சேர்ந்துள்ள வட்டி |
| Acquisition of business | — | தொழிலை வாங்குதல் |
| Adjustment | — | சரிக்கட்டுதல் |
| Adjustment entries | — | சரிக்கட்டுப் பதிவுகள் |
| Administration | — | நிர்வாகம் |
| Advance | — | முன்பணம், கடன் |
| Advertisement | — | விளம்பரம் |
| Affairs | — | நிலை |
| Affairs, statement of | — | நிலை அறிக்கை |
| Agenda | — | நிகழ்ச்சி நிரல் |
| Agent | — | முகவர் |
| Agreement | — | உடன்பாடு |
| Algebraical equation | — | இயற்கணிதச் சமன்பாடு, குறிக்கணிதச் சமன்பாடு |
| Allotment | — | ஒதுக்கீடு |
| Allotee | — | ஒதுக்கீடு பெறுநர் |
| Allowance | — | படி |
| Alteration | — | திருத்தம், மாற்றம் |
| Amalgamation | — | ஒன்றிணைப்பு |
| Amount | — | தொகை |
| Annual General Meeting | — | ஆண்டுப் பொதுக்கூட்டம் |
| Annual Report | — | ஆண்டறிக்கை |

| | | |
|---|---|---|
| Annuity | — | ஆண்டுத் தொகை, ஆண்டுப் படி |
| Application, share | — | பங்கு விண்ணப்பம் |
| Appreciation | — | மதிப்பேற்றம் |
| Appropriation | — | பகிர்வு |
| Arrears | — | நிலுவை |
| Articles of Association | — | செயல்முறை விதிகள் |
| Assessment | — | கணிப்பறுதி, மதிப்பீடு, வரிக் கணிப்பு |
| Asset | — | சொத்து |
| Assets, contingent | — | நிகழ்வடைச் சொத்துகள் |
| Assets, fictitions | — | புனைவுச் சொத்துகள் |
| Assets, floating | — | மிதப்புச் சொத்துகள் |
| Assets, fixed | — | நிலைச் சொத்துகள் |
| Assets, liquid | — | எளிவரல் சொத்துகள் |
| Assets, wasting | — | தேயும் சொத்துகள் |
| Audit | — | தணிக்கை |
| Auditor | — | தணிக்கையர் |
| Auditor's report | — | தணிக்கையர் அறிக்கை |
| Authorised capital | — | அதிகாரம் பெற்ற முதல் |

## B

| | | |
|---|---|---|
| Bad and doubtful debts | — | ஐயக்கடன் |
| Bad debts | — | வராக்கடன் |
| Bad debts provision | — | வராக்கடன் ஒதுக்கு |
| Bad debts reserve | — | வராக்கடன் காப்பு |
| Balance | — | இருப்பு |
| Balancing | — | இருப்புக் கட்டல் |
| Balance, bank | — | வங்கியிருப்பு |
| Balance, cash | — | ரொக்க இருப்பு |
| Balance, closing | — | இறுதி இருப்பு |
| Balance, opening | — | தொடக்க இருப்பு |
| Balance sheet | — | இருப்புநிலைக் குறிப்பு |
| Bank | — | வங்கி |
| Bank charges | — | வங்கிக் கட்டணம் |
| Bank pass book | — | வங்கிச் செல்லேடு, வங்கிக் கணக்கு நகலேடு |
| Bill | — | மாற்றுச்சீட்டு |

| | | |
|---|---|---|
| Bill, discount of | — | மாற்றுச் சீட்டைத் தள்ளுபடி செய்தல், மாற்றுச் சீட்டை வட்டம் செய்தல் |
| Bills payable | — | செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு |
| Bills receivable | — | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு |
| Board Meeting | — | இயக்குநரவைக் கூட்டம் |
| Board of Directors | — | இயக்குநரவை |
| Board's Report | — | இயக்குநரவை அறிக்கை |
| Bonds | — | பிணை முறி, பத்திரங்கள் |
| Bonus | — | மேலூதியம் |
| Bonus shares | — | மேலூதியப் பங்குகள் |
| Book debts | — | கடனாளிகள், ஏட்டுக் கடன்கள் |
| Books of account | — | கணக்கேடுகள் |
| Book - keeping | — | கணக்குப் பதிவியல் |
| Book of original entry | — | தொடக்கப் பதிவேடு |
| Books, optional | — | தன் விருப்ப ஏடுகள் |
| Books, statutory | — | சட்டமுறை ஏடுகள் |
| Bought Book | — | கொள்முதல் ஏடு |
| Bought ledger | — | கொள்முதல் பேரேடு |
| Branch | — | கிளை |
| Branch accounts | — | கிளைக் கணக்குகள் |
| Branch, foreign | — | அயல்நாட்டுக் கிளை, வெளிநாட்டுக் கிளை |
| Branch, independent | — | தனித்தியங்கும் கிளை |
| Broker | — | தரகர் |
| Brokerage | — | தரகு |
| Brought down | — | கீழ்க் கொண்டுவரப்பட்ட |
| Budget | — | வரவு - செலவுத் திட்டம் |
| Budgetary control | — | வரவு - செலவுத் திட்டக் கட்டுப்பாடு |
| Business | — | தொழில், வாணிகம் |
| Business Purchase Account | — | தொழில் கொள்முதல் கணக்கு |
| Buyer | — | வாங்குநர் |

# C

Call — அழைப்பு
Calls in advance — முன்கூட்டிப் பெற்ற அழைப்புத் தொகை
Calls in arrear — அழைப்பு நிலுவை
Calls on shares — பங்கழைப்பு
Capital — முதல், மூலதனம்
Capital, authorised — அதிகாரம் பெற்ற முதல்
Capital, fixed — நிலைமுதல்
Capital, issued — வெளியீட்டு முதல்
Capital, paid up — செலுத்தப்பெற்ற முதல்
Capital, registered — பதிவு செய்யப்பெற்ற முதல்
Capital, subscribed — ஒப்பிய முதல், எடுத்துக் கொண்ட முதல்
Capital, uncalled — அழையா முதல்
Capital, working — நடைமுறை முதல்
Capitalisation — முதற்படுத்துகை
Capital appreciation — முதல் மதிப்பேற்றம்
Capital expenditure — முதலினச் செலவு, மூலதனச் செலவு
Capital profit — முதலின இலாபம்
Capital redemption fund — முதல் மீட்பு நிதி
Capital redemption reserve — முதல் மீட்புக் காப்பு
Capital reduction scheme — முதல் குறைப்புத் திட்டம்
Capital reserve — முதல் காப்பு
Carriage inward — உட்சுமைக் கூலி
Carriage outward — வெளிச்சுமைக் கூலி
Carried down — கீழ் இறக்கப்பட்ட
Cartage — வண்டிச் சத்தம்
Cash Book — ரொக்க ஏடு
Cash discount — ரொக்கத் தள்ளுபடி, ரொக்க வட்டம்
Cash in transit — வழியிடை ரொக்கம்
Cash on hand — கையிருப்பு ரொக்கம்
Certificate of Commencement of Business — தொழில் தொடக்கச் சான்றிதழ்
Certificate of incorporation — கூட்டுருவாக்கச் சான்றிதழ்
Certificate, share — பங்குச் சான்று

| | | |
|---|---|---|
| Charges and mortgages | — | பொருட்பிணைப் பொறுப்பு அடைமானமும் |
| Cheque | — | காசோலை |
| Cheque, dishonoured | — | பணமறுக்கப்பட்ட காசோலை மதிப்பு மறுக்கப்பட்ட காசோலை |
| Chartered Accountant | — | பட்டயக் கணக்காயர் |
| Clause | — | சரத்து |
| Clearing charges | — | (சரக்கு) அகற்றுங் கட்டண |
| Closing entries | — | இறுதிப் பதிவுகள் |
| Collasteral security | — | துணைப் பிணையம் |
| Collection | — | தண்டல், வசூல் |
| Commerce | — | வாணிகவியல், வாணிகம் |
| Commission | — | கழிவு |
| Commission, underwriting | — | ஒப்புறுதிக் கழிவு |
| Company | — | கம்பெனி, நிறுமம் |
| Company, holding | — | பிடிப்புக் கம்பெனி, பிடி நிறுமம் |
| Company, limited by guarantee | — | பொறுப்புறுதியால் வரையறுக்கப்பட்ட கம்பெனி (நிறுமம்) |
| Company, limited by shares | — | பங்குகளால் வரையறுக்கப்பட்ட கம்பெனி |
| Company, Private | — | தனிக் கம்பெனி, தனி நிறு |
| Company, Public | — | பொதுக் கம்பெனி, பொ நிறுமம் |
| Company, Statutory | — | சட்டமுறைக் கம்பெனி, சட்டமுறை நிறுமம் |
| Company, subsidiary | — | துணைக் கம்பெனி, துணை நிறுமம் |
| Company, unlimited | — | வரையறுப் பொறுப்புடை கம்பெனி |
| Company, reconstruction of | — | கம்பெனி மறுஅமைப்பு, கம்பெனிச் சீரமைப்பு |
| Composition scheme | — | கடன்தீர்வு உடன்பாட்டு ஏற்பாடு |
| Compulsory winding up | — | கட்டாயக் கலைப்பு |
| Consent | — | இசைவு |
| Consideration | — | மறுபயன் |
| Contingent assets | — | நிகழ்வடைச் சொத்துகள் |

| | | |
|---|---|---|
| Contingent liability | — | நிகழ்வடைப் பொறுப்பு |
| Contra entries | — | எதிர்ப் பதிவுகள் |
| Contract | — | ஒப்பந்தம் |
| Contributories | — | (கம்பெனிக் கலைப்பின் போழ்து) வழங்கக் கடமைப் பட்டோர் |
| Conversion | — | மாற்றம் |
| Copy right | — | பதிப்புரிமை |
| Cost | — | அடக்கவிலை, செலவு |
| Cost account | — | அடக்கவிலைக் கணக்கு |
| Credit | — | கடன், வரவு |
| Credit balance | — | வரவிருப்பு |
| Cum dividend | — | பங்காதாயம் உள்பட |
| Cum interest | — | வட்டியுள்பட |
| Cumulative preference shares | — | குவிவு முன்னுரிமைப் பங்குகள் |
| Current account | — | நடப்புக் கணக்கு |
| Current assets | — | நடப்புச் சொத்துகள் |
| Current liabilities | — | நடப்புப் பொறுப்புகள் |
| Customer | — | வாடிக்கையாளர் |
| Customs duty | — | சுங்கவரி |

## D

| | | |
|---|---|---|
| Day Book | — | நாளேடு |
| Dead rent | — | தெண்டக் குத்தகை, குறைந்தவளவுக் குத்தகை |
| Dearness Allowance | — | அக விலைப்படி |
| Debenture | — | கடன்பத்திரம் |
| Debenture, bearer | — | கொணர்பவர் கடனீட்டுப் பத்திரம் |
| Debenture, irredeemable | — | மீளாக் கடனீட்டுப் பத்திரம் |
| Debenture, mortgage | — | அடைமானக் கடனீட்டுப் பத்திரம் |
| Debenture, naked | — | வெற்றுக் கடனீட்டுப் பத்திரம் |
| Debenture, own | — | தன் கடனீட்டுப் பத்திரம், சொந்தக் கடனீட்டுப் பத்திரம் |

| | | |
|---|---|---|
| Debenture, redeemable | — | மீள்தகு கடனீட்டுப் பத்திரம் |
| Debenture, registered | — | பதிவு செய்யப்பட்ட கடனீட்டுப் பத்திரம் |
| Debenture redemption policy | — | கடனீட்டுப்பத்திர மீட்புத் திட்டாவணம் |
| Debenture redemption reserve | — | கடனீட்டுப்பத்திர மீட்புக் காப்பு |
| Debenture trustees | — | கடனீட்டுப்பத்திர பொறுப் புரிமையர் |
| Debt balance | — | பற்றிருப்பு |
| Debt | — | கடன் |
| Debtor | — | கடனாளி |
| Deferred payment system | — | பின்செலுத்து முறை |
| Deferred shares | — | பின்னுரிமைப் பங்குகள் |
| Deficiency | — | பற்றுக்குறை |
| Department | — | துறை, பிரிவு |
| Departmental accounts | — | துறைவாரிக் கணக்குகள் |
| Departmental stores | — | பல்பிரிவு பண்டசாலை |
| Deposit | — | வைப்புத்தொகை |
| Deposit, public | — | பொதுவைப்பு |
| Depreciation | — | தேய்மானம், மதிப்பிழப்பு |
| Depreciation fund | — | தேய்மான நிதி |
| Development Rebate Rrserve | , | மேம்பாட்டுத் தள்ளுபடிக் காப்பு |
| Development of property | — | சொத்தினை மேம்படுத்தல், சொத்தினை வளப்படுத்தல் |
| Diminishing balance method | — | குறைந்துசெல் இருப்பு முறை |
| Directors | — | இயக்குநர்கள் |
| Direct expense | — | நேர்முகச் செலவு, நேரடிச் செலவு |
| Discount | — | தள்ளுபடி |
| Distribution expense | — | விநியோகச் செலவு, வழங்கு செலவு |
| Dividend | — | பங்காதாயம், இலாப ஈவு |
| Dividend equalisation reserve | — | பங்காதாயச் சமன்பாட்டுக் காப்பு |
| Dividend, final | — | இறுதிப் பங்காதாயம் |
| Dividend, interim | — | இடைக்காலப் பங்காதாயம் |
| Dividend, proposed | — | திட்டமிட்ட பங்காதாயம் |

| | | |
|---|---|---|
| Dividend, scrip | — | பங்குச் சான்றுச் சீட்டுப் பங்காதாயம் |
| Dividend, unclaimed | — | உரிமைகோராப் பங்காதாயம் |
| Dividend, warrant | — | பங்கோலை |
| Divisible profit | — | பகிர்தரு பங்காதாயம் |
| Dock dues | — | துறைமுகக் கட்டணம் |
| Double account system | — | இரட்டைக் கணக்கு முறை |
| Double entry system | — | இரட்டைப் பதிவுமுறை |
| Doubtful debt | — | ஐயக்கடன் |
| Draft | — | வங்கிப் பணவிடை |
| Drawings | — | எடுப்பு |
| Due date | — | தவணை நாள், கெடு நாள், உரிய நாள் |
| Duty | — | தீர்வை, வரி |
| Duty, customs | — | சுங்கத் தீர்வை |
| Duty, export | — | ஏற்றுமதி வரி |
| Duty, import | — | இறக்குமதி வரி |

## E

| | | |
|---|---|---|
| Endorse | — | மேலெழுது, புறக் குறிப்பேடு |
| Endorsement | — | மேலெழுதுதல், மேலெழுத்து |
| Entry | — | பதிவு |
| Equity shares | — | நேர்மைப் பங்குகள், சாதாரணப் பங்குகள் |
| Estimate | — | மதிப்பீடு |
| Error | — | பிழை |
| Ex dividend | — | பங்காதாயம் நீங்கலாக |
| Ex interest | — | வட்டி நீங்கலாக |
| Exchange | — | நாணயமாற்று |
| Exchange rate | — | நாணயமாற்று விகிதம் |
| Excise duty | — | உற்பத்தித் தீர்வை |
| Expenditure | — | செலவினம் |
| Expenditure, capital | — | முதலினச் செலவினம் |
| Expenditure, deferred revenue | — | நெடுநாள் பயன்தரு செலவு |
| Expenditure, revenue | — | வருவாய்ச் செலவினம், நடைமுறைச் செலவினம் |
| Expenses | — | செலவுகள் |

| | | |
|---|---|---|
| Expenses, outstanding | — | கொடுபடவேண்டிய செலவுகள் |
| Expenses, preliminary | — | தொடக்கச் செலவுகள் |
| Expenses, prepaid | — | முன்கூட்டிச் செய்த செலவுகள் |
| Extraordinary Meeting | — | சிறப்புக் கூட்டம், அசாதாரணக் கூட்டம் |

## F

| | | |
|---|---|---|
| Financial Accounting | — | நிதிக் கணக்கியல் |
| Fire insurance | — | தீக் காப்பீடு |
| Firm | — | நிறுவனம் |
| Fixed Assets | — | நிலைச் சொத்துகள் |
| Floating Assets | — | மிதப்புச் சொத்துகள், உருமாறும் சொத்துகள் |
| Floating charge | — | இழைவுறு பற்றுப் பொறுப்பு |
| Folio | — | பக்க எண் |
| Forecasting | — | வருமுன் உரைத்தல், முன்னறிவிப்பு |
| Forfeiture | — | ஒறுப்பிழப்பு, பறிமுதல் செய்தல் |
| Forfeited shares | — | ஒறுப்பிழப்புச் செய்யப்பட்ட பங்குகள் |
| Formation expenses | — | அமைப்புச் செலவுகள் |
| Founder's shares | — | நிறுவியவர் பங்குகள் |
| Fractional shares | — | பின்னப் பங்குகள் |
| Freight | — | சத்தம், சரக்குக் கட்டணம் |
| Fund | — | நிதி |
| Fund, Capital redemption | — | முதல் மீட்பு நிதி |
| Fund, debenture redemption | — | கடனீட்டுப்பத்திர மீட்புநிதி |
| Fund, depreciation | — | தேய்மான நிதி |
| Fund, sinking | — | கழிவுநிதி |
| Furniture | — | மனைத்துணைப்பொருள் |

## G

| | | |
|---|---|---|
| Gain | — | தேட்டை, ஆதாயம் |
| Gas | — | எரிவளி |
| General Reserve | — | பொதுக்காப்பு |

| | | |
|---|---|---|
| Godown | — | கிடங்கு |
| Goods | — | சரக்கு |
| Goods in transit | — | வழியிடைச் சரக்கு |
| Goods on approval | — | ஒப்புதலுக்குப் பின் விற்பனை |
| Goods on sale or return basis | — | விற்பனை அல்லது திருப்ப அடிப்படையில் சரக்கு |
| Goodwill | — | வாணிக நற்பெயர், பொது நன்மதிப்பு |
| Goodwill, valuation of | — | வாணிக நற்பெயரை மதிப்பிடுதல் |
| Government bonds, Government securities | — | அரசு பிணை முறிகள், அரசினர் கடன்பத்திரங்கள் |
| Gratuity | — | பணிக்கொடை |
| Gross loss | — | மொத்த நட்டம் |
| Gross profit | — | மொத்த இலாபம் |
| Guarantee | — | பொறுப்புறுதி, உத்தரவாதம் |

## H

| | | |
|---|---|---|
| High Court | — | உயர்நீதி மன்றம் |
| Hidden reserve | — | ஒளித்து வைக்கப்பட்டுள்ள காப்பு |
| Hire purchase system | — | வாடகைக் கொள்முதல்முறை |
| Honorarium | — | மதிப்பூதியம் |
| Hypothecation | — | அசைச் சொத்து, அடைமானம் |

## I

| | | |
|---|---|---|
| Immovable property | — | நிலையியல் சொத்து |
| Income | — | வருமானம் |
| Income and expenditure account | — | வரவு - செலவுக் கணக்கு |
| Income earned | — | உழைத்துப் பெற்ற வருமானம் |
| Income unearned | — | உழையாமற் பெற்ற வருமானம் |
| Income tax | — | வருமான வரி |
| Inner reserve | — | அகக்காப்பு |
| Insolvency | — | நொடிப்பு நிலை |

Installed capacity — நிறுவப்பட்ட திறன்
Instalment purchase system — தவணைக் கொள்முதல் முறை
Insurance — காப்பீடு
Inter company holdings — கம்பெனிகட்கிடையே பங்கு வைத்திருத்தல்
Inter company owings — கம்பெனிகட்கிடையே கொடுக்க வேண்டியவை
Interest — வட்டி
Interest, accrued — ஏறியுள்ள வட்டி, கூடியுள்ள வட்டி, சேர்ந்துள்ள வட்டி
Interim dividend — இடைக்காலப் பங்காதாயம்
Investment — முதலீடு
Invoice — இடாப்பு
Irregular allotment — முறைகேடான (பங்கு) ஒதுக்கீடு

## J

Joint stock Company — கூட்டுப்பங்குக் கம்பெனி, கூட்டுப் பங்கு நிறுமம்
Journal — குறிப்பேடு
Journalising — குறிப்பேட்டில் பதிதல்

## L

Lease — குத்தகை
Lease hold property — குத்தகைச் சொத்து
Ledger — பேரேடு
Ledger account — பேரேட்டுக் கணக்கு
Legal expenses — சட்டச் செலவுகள்
Letter of allotment — (பங்கு) ஒதுக்கீட்டுக் கடிதம்
Liability — பொறுப்பு
Liabilities, contingent — நிகழ்வடைப் பொறுப்புகள்
Liabilities, outstanding — கொடுபடவேண்டிய பொறுப்புகள்
Licence — உரிமம்
Limited liability — வரையறு பொறுப்பு

| | | |
|---|---|---|
| Lien | — | பற்றுரிமை |
| Liquidator | — | கலைப்பாளர், கலைப்பதிகாரி |
| Loan | — | கடன் |
| Loan, mortgage | — | அடைமானக் கடன் |
| Loan, secured | — | பிணைக்கடன் |
| Loan, unsecured | — | பிணையற்ற கடன் |
| Loose tools | — | விடுகருவிகள் |
| Loss | — | நட்டம் |
| Loos, gross | — | மொத்த நட்டம் |
| Loss, net | — | நிகர நட்டம் |
| Loss prior to incorporation | — | கூட்டுருவாக்கத்திற்கு முந்தை நட்டம் |

## M

| | | |
|---|---|---|
| Management | — | மேலாண்மை, நிர்வாகம் |
| Management Accounting | — | மேலாண்மைக் கணக்கியல் |
| Manager | — | மேலாளர் |
| Managerial remuneration | — | மேலாண்மை ஊதியம் |
| Managing Agent | — | மேலாண்மை முகவர் |
| Managing Director | — | மேலாண்மை இயக்குநர் |
| Manufacturing account | — | தயாரிப்புக் கணக்கு |
| Marked Applications | — | குறியிடப்பெற்ற விண்ணப்பங்கள் |
| Mechanised accounting | — | பொறிமயக் கணக்கியல் |
| Meeting | — | கூட்டம் |
| Meeting, annual general | — | ஆண்டுப் பொதுக்கூட்டம் |
| Meeting, extraordinary | — | சிறப்புக் கூட்டம், அசாதாரணக் கூட்டம் |
| Meeting, statutory | — | சட்டமுறைக் கூட்டம் |
| Memorandum of Association | — | அமைப்பு முறையேடு |
| Merger | — | கலப்பு, கலப்பமைப்பு |
| Minimum remuneration | — | குறும ஊதியம், குறைந்த அளவு ஊதியம் |
| Minimum rent | — | குறைந்தவளவுக் குத்தகை |
| Minimum subscription | — | குறுமப் பங்கெடுப்பு |
| Minute Book | — | நிகழ்ச்சிக் குறிப்பேடு |
| Mortgage | — | அடைமானம் |

## N

Naked debenture — வெற்றுக் கடன் பத்திரம்
Negligence — கவனமின்மை
Net loss — நிகர நட்டம்
Net profit — நிகர இலாபம்
Nominal account — பெயரளவுக் கணக்கு
Nominal value — பெயரளவு மதிப்பு, இயல்பு மதிப்பு
Non-cumulative preference shares — குவியா முன்னுரிமைப் பங்குகள்

## O

Object clause — நோக்கச் சரத்து
Obsolescence — வழக்கொழிவு
Office allowance — அலுவலகப் படி
Official liquidator — கம்பெனிக் கலைப்பதிகாரி
Office expenses — அலுவலகச் செலவுகள்
Opening balance — தொடக்க இருப்பு
Opening entries — தொடக்கப் பதிவுகள்
Opening cost — நடைமுறைச் செலவு
Option — விருப்புரிமை
Ordinary resolution — சாதாரணத் தீர்மானம்
Ordinary shares — சாதாரணப் பங்குகள்
Outstanding expenses — கொடுபடவேண்டிய செலவு இனங்கள்
Outstanding liabilities — கொடுபட வேண்டிய பொறுப்புகள்
Overdraft — மேல்வரைப் பற்று
Overvaluation — மிகைமதிப்பு

## P

Packing charges — கட்டுமச் செலவுகள், கட்டுக்கூலி
Paid up capital — செலுத்தப்பெற்ற முதல்
Par — சமன், ஈடு
Participating preference shares — எஞ்சிய இலாபத்தில் பங்கேற்கும் முன்னுரிமைப் பங்குகள்

Partner — கூட்டாளி
Partnership — கூட்டு நிறுவனம், கூட்டாண்மை
Patent — புனைபொருள் உரிமை, ஆக்குப் பொருள் உரிமை
Pattern — எடுத்துக் காட்டமைவு
Payee — பெறுநர், செலுத்தப் பெறுநர்
Pension — ஓய்வூதியம்
Perquisites — வசதிகள்
Petty cash — சில்லறை ரொக்கம்
Plant and Machinery — பொறிவகை
Pledge — அடகு
Porterage — சுமை கூலி
Postage — அஞ்சற் செலவு
Posting — எடுத்தெழுதுதல்
Preference shares — முன்னுரிமைப் பங்குகள்
Preferential claim — முன்னுரிமை
Preliminary expenses — தொடக்கச் செலவுகள்
Premium — முனைமம்
Private company — தனிக் கம்பெனி
Profit and Loss Account — இலாப-நட்டக் கணக்கு
Profit and Loss appropriation account — இலாப-நட்டப் பகிர்வுக் கணக்கு
Profit prior to incorporation — கூட்டுருவாக்கத்திற்கு முந்தை இலாபம்
Proforma Invoice — ஒப்பமை இடாப்பு
Promoter — தோற்றுவிப்பாளர்
Property — சொத்து
Property, free hold — வில்லங்கமற்ற சொத்து
Property, leasehold — குத்தகைச் சொத்து
Prospectus — தகவலறிக்கை
Provision — ஒதுக்கு, ஏற்பாடு
Provision for bad debts — வராக்கடன் ஒதுக்கு
Provision for discount on Creditors — கடனீந்தோர் மீது தள்ளுபடி ஒதுக்கு
Provision for discount on debtors — கடனாளிகள் மீது தள்ளுபடி ஒதுக்கு
Provision for doubtful debts — ஐயக்கடன் ஒதுக்கு, வாராக்கடன் ஒதுக்கு

Provision for returnable goods — திரும்பிவரக்கூடிய சரக்கு ஒதுக்கு
Provident Fund — நலக்காப்பு நிதி
Proxy — பகராள்
Public Company — பொதுக் கம்பெனி
Public utility Companies — பொதுப்பயன் கம்பெனிகள், பொதுப்பயன் நிறுவனங்கள்
Purchase — கொள்முதல்
Purchase consideration — கொள்முதல் மறுபயன்
Purchase Day book — கொள்முதல் ஏடு
Purchase Returns — கொள்முதல் திருப்பம்

## Q

Qualification shares — தகுதிப் பங்குகள்
Quorum — குறைவெண், குறைந்தவளவு எண்ணிக்கை

## R

Railway freight — இரயில் கட்டணம், இரயில் சத்தம்
Rate of exchange — நாணயமாற்று விகிதம்
Rates — மாநகராட்சி வரி, கட்டணங்கள்
Raw materials — கச்சாப் பொருள்
Realisation account — தீர்வுக் கணக்கு
Rabate — தள்ளுபடி
Receipt — இரசீது
Reconciliation statement — சரிக்கட்டும் பட்டி
Reconstruction — மறு அமைப்பு
Reconstruction, external — புற மறுஅமைப்பு
Reconstruction, internal — அக மறுவமைப்பு
Recoupment — மீட்டல்
Redeemable debentures — மீள்தகு கடனீட்டுப் பத்திரங்கள்
Redeemable preference shares — மீள்தகு முன்னுரிமைப் பங்குகள்
Redemption of debentures — கடனீட்டுப்பத்திர மீட்பு

Redemption of debentures-annual drawings method — கடனீட்டுப் பத்திர மீட்பு — ஆண்டுக் குலுக்குச் சீட்டு முறை
Redemption of debentures—conversion method — கடனீட்டுப்பத்திர மீட்பு — மாற்றிக்கொள்ளும் முறை
Redemption of debentures-Insurance policy method — கடனீட்டுப்பத்திர மீட்பு — காப்பீட்டுத் திட்டாவண முறை
Redemption of debentures-market purchase method — கடனீட்டுப்பத்திர மீட்பு — வெளிச் சந்தையில் வாங்கும் முறை
Redemption price — மீட்பு விலை
Register — பதிவேடு
Registered Capital — பதிவு செய்யப்பட்ட முதல்
Register of Directors — இயக்குநர்ப் பதிவேடு
Register of members — உறுப்பினர்ப் பதிவேடு
Register of share transfers — பங்கு மாற்றப் பதிவேடு
Registered Office — பதிவலுவலகம்
Reissue — மறு வெளியீடு
Remuneration — ஊதியம்
Renewal — புதுப்பித்தல்
Rent — வாடகை
Reorganisation — சீரமைப்பு
Repairs — பழுதுபார்க்குஞ் செலவு
Replacement account — மறு அமர்த்தீட்டுக் கணக்கு
Report — அறிக்கை
Report, statutory — சட்டமுறை அறிக்கை
Reserve — காப்பு
Reserve, Capital redemption — முதல் மீட்புக் காப்பு
Reserve, debenture redemption— கடனீட்டுப்பத்திர மீட்புக் காப்பு
Reserve, deferred taxation — பின்வரும் வரிக்காப்பு
Reserve, development rebate — மேம்பாட்டுத் தள்ளுபடிக் காப்பு
Reserve, dividend equalisation — பங்காதாயச் சமன்செய் காப்பு
Reserve, Fixed assests replacement — நிலைச் சொத்துகள் மறு அமர்த்தீட்டுக் காப்பு
Reserve, Fixed assets revaluation — நிலைச் சொத்துகள் மறு மதிப்பீட்டுக் காப்பு

Reserve, general — பொதுக்காப்பு
Reserve, investment fluctuation— முதலீடுகள் மதிப்பு ஏற்றிறக்கக் காப்பு
Reserve, hidden — ஒளித்து வைக்கப்பட்டுள்ள காப்பு
Reserve, secret — மறைகாப்பு
Reserve, specific — குறிப்பிட்ட காப்பு
Reserve, taxation allowance equalisation — வரிச் சலுகைச் சமன்பாட்டு காப்பு
Reserve, taxation equalisation— வரிச் சமன்பாட்டுக் காப்பு
Reserve capital — காப்புமுதல், ஒதுக்கி வைக்கப் பட்டுள்ள முதல்
Resolution — தீர்மானம்
Resolution, ordinary — சாதாரணத் தீர்மானம்
Resolution, special — சிறப்புத் தீர்மானம்
Returns inward — உள்திருப்பம்
Returns outward — வெளித்திருப்பம்
Revaluation account — மறுமதிப்பீட்டுக் கணக்கு
Revenue — வருவாய்
Revenue expenditure — வருவாய்ச் செலவினம், நடைமுறைச் செலவினம்
Revenue profit — வருவாய் இலாபம், நடைமுறை இலாபம்
Revenue reserve — வருவாய்க் காப்பு
Rights shares — உரிமைப் பங்குகள்
Royalty — உரிமை ஊதியம், உரிமைத் தொகை
Royalties payable — செலுத்தும் உரிமை ஊதியம் (அ) உரிமைத் தொகை
Royalties receivable — பெறும் உரிமை ஊதியம் (அ) உரிமைத் தொகை

## S

Salary — ஊதியம்
Sale on approval — ஒப்புதலுக்குப் பின் விற்பனை
Sale or return — விற்பனை அல்லது திருப்பம்
Sales — விற்பனை
Sales book — விற்பனை ஏடு

க

J

R

Re

J

Re